[illegible]

[illegible]

[illegible]

[illegible] – I

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இஸ்ரவேலின் வரலாற்றில் பிரபலமான மனிதர்கள் - 1

1 சாமுவேல்
ஜான் கச்செல்மேன்

1. எல்க்கானா
   பக்தியுள்ள ஒரு தந்தை (1:1-2:21)
2. அன்னாள்
   தாய்க்குலத்தின் ஒரு நினைவுச்சின்னம் (1:1-2:21)
3. சாமுவேல்
   அர்ப்பணிப்பின் விவரிப்பு
4. ஏலி
   சாத்தானின் பிள்ளைகளைக் கொண்டிருந்த தேவமனிதர் (2:12-4:22)
5. சவுல்
   படுபாதாள முடிவுக்கான மகிழ்பொங்கும் ஆரம்பம்
6. யோனத்தான்
   விந்தையான பற்றுறுதிகள்
7. தாவீது
   தேவபக்தியுள்ள இருதயத்திற்குள் ஒரு சிறு கண்ணோட்டம்
8. கோலியாத்
   பக்தியின்மையின் கேடுபாடான தன்மை (17:1-54)
9. மீகாள்
   நேசம் கசப்பாக மாறும் பொழுது! (18:20, 27; 19:11-17)
10. தோவேக்கு
    துரோகச் செயல்களுக்கு (தக்க)வெகுமதியளிக்கப்பட்டது (21:1-22:22)
11. நாபால்
    பேலியாளின் மகன் (25:2-39)
12. அபிகாயில்
    நல்லறிவுடைய ஒரு பெண் (25:14-42)
13. பேசோரில் ஒரு போர்வீரன்
    பலனில் அளிக்கப்பட்ட ஒரு சிறு சேவை(30:21-25)
14. யாபேசின் குடிமக்கள்
    நன்றியுடைமை விவரிக்கப்படுகின்றனது (31:11-13)
15. போதனை மற்றும் பிரசங்கம் ஆகியவற்றில் உதவிகள

தாவீது
டேவிட்ரோப்பர்

1. அறிமுகம்
   (1 சாமுவேல் 16)
2. இராட்சதர்களுடன் போரிடுதல் பற்றிய நினைவில்வைக்க வேண்டிய ஏழு சத்தியங்கள் (1 சாமுவேல் 17)
3. யோனத்தான்: தேவையில் உதவிய ஒரு நண்பர்
   (1 சாமுவேல் 17-23; 2 சாமுவேல் 1)
4. மோசமான காலங்களில் உயிர்பிழைத்திருப்பது எப்படி
   (1 சாமுவேல் 18 - 23)

5. [பழிவாங்குதலுக்கு இருதயம் கதறுகின்றபோது (1 சாமுவேல் 24-26; 2 சாமுவேல் 1)]
6. [போதனை மற்றும் பிரசங்கம் ஆகியவற்றில் உதவிகள்]

எல்க்கானா

பக்தியுள்ள ஒரு தந்தை

(1:1-2:21)

"தந்தையின்" பணிப்பொறுப்பு கனத்த கட்டுப்பாடுகளினால் சுமையூட்டப்பட்டுள்ளது. குடும்பம் என்ற அலகின் மீது தந்தையின் பணிப் பொறுப்பானது பிரதானமான செல்வாக்கைக் கொண்டுள்ளது என்று சமூகவியல் ஆராய்ச்சிப் படிப்புகளினால் காண்பிக்கப்பட்டுள்ளது. பிள்ளையின் உணர்வுப்பூர்வமான, சமுதாய மற்றும் மதம் சார்ந்த நலன்கள் யாவும் பெரும்பாலும் குடும்பத்தில் தந்தையின் பணிப் பொறுப்பினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. பிள்ளையின் கண்கள் தந்தையை பயபக்தியுடனும் தன்னம்பிக்கையுடனும் நோக்குகின்றன. பிள்ளையானவன், "எனது தந்தையால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும்" என்று பெருமையடித்துக் கொள்கின்றான். இவ்விதமான குழந்தைத்தனமான கண்ணோட்டம், தந்தையின் முக்கியத்திற்கு ஒரு முழுமையான விளக்கவுரையாய் இருக்கிறது. பின்வரும் கவிதையானது தந்தையின் மீது இன்னும் வலியுறுத்தத்தைக் கூட்டுகின்றது:

எனது தந்தையாயிருக்க ஒரு மனிதரை நான் வாங்கச் சென்றால்,
பின்வரும் பண்புகள் கொண்டவரையே நான் வாங்குவேன்:
ஒரு சிறு பையனின் "ஏன்?" என்ற கேள்விகளுக்கு எப்பொழுதும்
பொறுமையாய் நின்று பதில் அளிப்பவர்,
சிறுமியிடத்திலோ அல்லது சிறுவனிடத்திலோ இரக்கத்துடன்
பேசுபவர்,
சற்றே வெளிச்சக் கீற்றையும் சந்தோஷத்தையும் தருபவர்.

வேதாகமத்தின் பொன் விதியைப் பின்பற்றுகின்ற
மற்றும் சபை ஆராதனைக்கும் வேதாகமப் பள்ளிக்கும்
ஒழுங்காகச் செல்லும் ஒரு தந்தையை
நான் தேர்ந்தெடுத்துக் கொள்ள நான் விரும்புவேன்.
எங்கள் குடும்ப மரத்தில் சேர்ந்துக் கொள்வதற்கு நான்,
மிகவும் நேர்த்தியான தந்தை ஒருவரை வாங்குவேன் -
பின்பு அவர் என்னைக் குறித்துப் பெருமை பாராட்டும்படிக்கு
நான் அவரைப் போல வாழ முயற்சி செய்வேன்!

தேவன் மனிதனை "தந்தை" என்ற ஸ்தானத்தில் வைத்து அவனுக்குத் தந்தைக்குரிய தொடர் கடமைகளைக் கொடுத்த போது, தந்தை என்பவர்

“பக்தி” உடையவராய் இருக்க வேண்டும் என்று அவர் நோக்கங் கொண்டார். யாரோ ஒருவர், “உண்மை பக்தி என்பது ஆத்துமாவில் ஒழுங்கமைவின் கொள்கையாக உள்ளது-இது எப்பொழுதும் அதை (ஆத்துமாவை)த் தாங்கி நிற்கக் கூடிய பலம் மிக்க மற்றும் வனப்பு மிக்க அச்சாகவும் ஆகாயங்களின் இசையுடன் இணைவுற்றவைகளாகவும் உள்ளது. இது தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் மெதுவாகச் சுற்றி வருமாறு காத்துக் கொள்ளுகின்ற மாபெரும் விதியைப் போன்றுள்ளது.” பயபக்தியுள்ள ஒரு நபர் தேவனுக்குரிய நபராக உள்ளார். பயபக்தியுள்ள ஒரு நபர், ஒவ்வொரு செயலிலும் தேவனை முதலிடத்தில் வைக்கின்றார்! தந்தைக்குரிய பண்புகளில் இதுவே இன்றியமையாததாக உள்ளது!

எல்க்கானா தேவபக்தியை நன்கு விவரிக்கின்றார். அவரை விவரிப்பதற்கு “தேவபக்தி” என்பதை விட தகுதியான சொற்றொடர் வேறு எதுவும் இல்லை. அவருடைய விசுவாசம் பலமுள்ளதாகவும், அவரது வாழ்வின் செயல்பாடுகள் யாவற்றையும் ஆளுகை செய்து அளப்பதாகவும் இருந்தது. எந்தப் பிள்ளையும் விரும்பக் கூடிய வகையிலான தந்தையாக அவர் இருந்தார்.

வரலாற்று ரீதியாக எல்க்கானாவைப் பற்றிப் பின்வரும் விஷயங்கள் அறியப்படுகின்றன. அவர் கானானில் குடியமர்ந்தவர்களின் ஐந்தாவது தலைமுறையில் இருந்தார். அவர் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும், எப்பிராயீமின் எல்லைப் பகுதிகளில் இராமா என்ற ஊரில் வாழ்ந்தவராகவும் இருந்தார். அவரைப் பற்றி வேத வசனம் கூறுகின்ற யாவும் 1:1-2:21ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் இரண்டு மனைவிகளைக் கொண்டிருந்தார், இது பழைய (ஏற்பாட்டு) நியாயப்பிரமாணங்களின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தது (உபா. 21:15). ஆசரிப்புக் கூடாரத்தில் பெருந்தன்மையுடன் காணிக்கை செலுத்துதலுடன் (1:24) கூடிய இந்த உண்மையானது அவர் ஒரு செல்வந்தர் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. பலதார திருமணம் என்பது மோசேயின் பிரமாணத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அது தேவனால் கட்டளையிடப்படாததாகவும், அது நடைமுறைப் படுத்தப்பட்ட இடங்களில் எல்லாம் குடும்ப உறவுகளை அழிப்பதாகவும் இருந்தது!

எல்க்கானா, தேவன் மீதுள்ள பலத்த விசுவாசத்தில் நிலைநாட்டப் பட்ட மாபெரும் பண்புகளைக் கொண்ட மனிதராயிருந்தார். இது, யெகோவாவுக்குச் செய்யப்பட்ட ஆராதனையானது அசாதாரணமாயிருந்த காலகட்டத்தில் நியாயாதிபதிகளின் காலத்தில் அவர் வாழ்ந்தபடியினால் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. பக்தியுள்ள இந்தத் தந்தை பற்றிய விரைவான இந்த வெளிப்படுத்துதலில் இருந்து, மிகவும் உணர்வில் பதியக் கூடியதான அவரது வாழ்வின் கண்ணோட்டம் ஒன்றை நாம் ஆதாயப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

அவருடைய பயபக்திக்குப் பொறுப்பு வகிக்கும் காரணிகள்

முதலாவது, எல்க்கானாவின் அன்றாட வாழ்வு முறை, அவரது பிள்ளைகளுக்கு முன்பாக தேவபக்தியைக் காட்சிப்படுத்தியது (1:3). அவர் புற இனத்தெய்வங்களை வழிபடுவதற்குப் பதிலாக யெகோவாவை ஆராதித்தார் (இ.வ. 7:4). ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார் என்பதை எல்க்கானா உணர்ந்தார், மற்றும் அவர் யெகோவாவை ஆராதிக்க நாடினார். எல்க்கானாவின் வாழ்வு, அவரது தர அளவையின்படியாக வாழும்படிக்கு அவருடைய பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுத்தது (இ.வ. யோபு. 1:15). அவர் தமது வீட்டில் ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசுகின்ற தந்தையாக இருந்தார் (1:23; உபா. 6:6-9). இப்படிப்பட்ட ஒரு தந்தை தனது வீட்டில் கொண்டிருக்கக் கூடிய செயல்விளைவைப் பற்றி நீங்கள் கற்பனை செய்து பார்க்க இயலுமா? எல்க்கானாவைப் போன்று பயபக்தியுள்ள தந்தையை ஆசீர்வாதமாகப் பெற்றுள்ள குடும்பம் மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்படும்! (ஆதி. 18:19).

மிசிசிப்பி என்ற நதியின் கரையில் ஒரு தந்தை வசித்து வந்தார். உலகம் அவரைச் செல்வந்தர் என்று அழைத்தது. ஒரு நாள் அவருடைய மூத்த மகனுக்குப் பயங்கரமான விபத்து ஒன்று நேர்ந்ததால், உணர்விழந்த நிலையில் தந்தையிடம் கொண்டு வரப்பட்டார். மருத்துவர் விரைவில் அழைக்கப்பட்டார். மகன் உயிர் பிழைப்பானா என்று தந்தை கேட்டார். "இல்லை, அவன் மரித்துக் கொண்டிருக்கின்றான், அவன் மீள முடியாது" என்பதே பதிலாக இருந்தது. அதற்குத் தந்தை, "அதை நாம் அவனிடத்தில் கூறும்படி அவனை உணர்வுக்குக் கொண்டு வர உங்களால் முடியுமா? அவன் மரித்துக் கொண்டிருப்பதை அறியாமலே மரிப்பதை நான் விரும்பவில்லை" என்று கூறினார். மருத்துவர் முயற்சி செய்தார், பையன் சற்று நேரத்திற்கு உணர்வடைந்தான். தந்தை "நீ மரித்துக் கொண்டிருப்பதாக மருத்துவர் கூறுகின்றார். அதை உன்னிடம் கூறாமல் நீ மரித்துப் போவதை என்னால் அனுமதிக்க இயலவில்லை" என்று கதறினார். பையன், "அப்பா, நீங்கள் எனக்காக ஜெபம் செய்ய மாட்டீர்களா?" என்று கேட்டான். தந்தை பேச்சற்றுப் போனார், ஆனால் கடைசியில் அவர் மென்மையாக, "என் மகனே, என்னால் ஜெபிக்க இயலாது" என்று அறிக்கையிட்டார். பையன் உணர்விழந்தவனாக விழுந்தான், விரைவில் மரித்துப் போனான். அந்தத் தந்தை பல ஆண்டுகளாகத் தமது மகனுடன் இருந்தும் கூட அவனுக்காக ஒருமுறை கூட ஜெபித்திருந்ததில்லை என்பதே இந்தத் துன்பக் கதையின் கவலைமிகுந்த பாகமாக உள்ளது!

இரண்டாவது, தேவனுக்குக் கொடுத்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று எல்க்கானா தன் பிள்ளைகளுக்கு கவனமாய்ப் போதித்து வந்தார் (1:21). நியாயாதிபதிகளின் காலம் "பொருத்தனைகளின்" காலமாயிருந்தது, மற்றும் இங்கு இன்னுமொரு உதாரணம் உள்ளது. அநேகமாக இது அன்னாளின் வேண்டுகோளுடன் தொடர்புடையதாக இருந்தது. எல்க்கானா ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தம் பற்றி அவரது குடும்பத்தினர்

நிச்சயமாக அறிந்திருந்தார்கள். அவர்கள், தங்களின் தந்தை முதலாவது தேவனிடத்தில் வாக்குறுதியளித்ததையும், பின்பு அவற்றை காத்துக் கொண்டதையும் கண்டிருப்பார்கள், அதைப் பற்றி சிறிதளவே கூற வேண்டியதாக இருந்திருக்கும். எல்க்கானா தமது செய்கையினால் ஒரு மாபெரும் பாடத்தைப் பிரசங்கித்திருந்தார். தந்தையர்களே, தேவனிடத்தில் நீங்கள் வாக்குறுதிகளைக் காத்துக் கொள்வதை உங்கள் பிள்ளைகளுக்குக் காண்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கின்றீர்களா? உங்களின் உதாரணமானது வல்லமை மிகுந்த பிரசங்கமாக உள்ளது. உண்மையான தேவபக்தி, நீங்கள் தேவனோடு ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்களில் நேர்மையுடன் இருத்தல் என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது (1 யோவா. 2:6; சங். 1:1, 2; 116:17, 18; 2 இரா. 15:1-3; மற்றும் பிர. 5:2-6 ஆகியவற்றை வாசிக்கவும்).

மூன்றாவது, ஆராதனையில் கலந்து கொண்டு பங்கேற்கும்படி எல்க்கானா தம் குடும்பத்தை உற்சாகப்படுத்தினார் (1:4, 21). இங்கு ஆராதனையில் முறையாக இருக்கும் தந்தை இருக்கின்றார்! தம் கட்டுப்பாடு மற்றும் சிலாக்கியம் ஆகியவற்றினால் தூண்டப்பட்டிருந்த அவர், செல்லுவதற்கு ஆவலுடனிருந்தார். அவர் அதைக் கைவிடாதிருந்தார் (நெகே. 10:39; எபி. 10:25). அவர் வெகுதூரம் பயணம் செல்ல வேண்டியிருந்தது, ஆனால் அந்தச் சிரமம் அவரைத் தடை செய்து விடவில்லை. அவர் தம் குடும்பம் முழுதும் தன்னுடன் செல்வதை உறுதிப்படுத்திக் கொண்டதைக் கவனியுங்கள். தடையில்லாதிருந்த வேளையில் "அனைவரும்" சென்றனர் (1:21). ஆராதனை என்பது குடும்ப வேளையாகக் கருதப்பட்டது, மற்றும் அவர் ஆராதனையில் குடும்ப ஒருமைப்பாட்டை உற்சாகப்படுத்தினார். அவர் குடும்பம் முழுவதும் செல்வதற்குத் திட்டமிடுதல் தேவைப்பட்டது; பலிகளுக்கான அவரது அளிப்புகளுக்குத் தயாரிப்புகள் தேவைப்பட்டன. தந்தை என்ற வகையில் அவர் தேவனை ஆராதிக்கக் குடும்பத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் நிச்சயப்படுத்திக் கொள்வதில் வழிநடத்தினார்! தயாராயிருப்பதில் எது அவசியம் என்பது பற்றிய எண்ணப்போக்கு கொண்ட தந்தையாக அவர் திகழ்ந்தார். அவரது ஆராதனையில் வழிபாடு, அறிக்கையிடுதல், விண்ணப்பித்தல்கள், நன்றி செலுத்துதல்கள் ஆகியவை அடங்கியிருந்தன. அவரைப் பொறுத்த மட்டில் ஆராதனை என்பது இன்றியமையாததாக இருந்தது!

ஆராதனையில் இருந்து திரும்புகையில், பயபக்தி இன்னும் அவரது இருதயத்தை ஆட்சி செய்தது என்பதற்குச் சுட்டிக்காட்டுதல் ஒன்றுள்ளது (1:19). எல்க்கானா, ஆராதித்தல்கள் குறித்து அயர்வடையாமல், ஆனால் எல்லா வாய்ப்புக்களையும் அனுகூலப்படுத்திக் கொள்வதில் ஆர்வத்துடன் இருந்தார். அவருடைய எண்ணப்போக்கானது அவரது குடும்பத்திற்கு அறிவித்த ஆச்சரியமான செய்தியை நீங்கள் காண்கின்றீர்களா? தந்தையர்கள் (தங்கள் குடும்பத்துடன்) ஆராதனையில் இருந்து இல்லம் திரும்பும் போது கொண்டுள்ள நடக்கை பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில் நன்கு செயல்பட வேண்டும்; இப்படிப்பட்டவைகள் பிள்ளைகளை ஊக்கப்படுத்தும் (லூக். 11:28).

எல்க்கானா தனது பிள்ளைகள் ஆராதனையில் பங்கேற்பதை உற்சாகப் படுத்தினார் என்பதற்குச் சுட்டிக்காட்டுதல் ஒன்றுள்ளது (1:4). காணிக்கை செலுத்தப்படும், அதன் பிறகு, ஒரு பகுதியானது ஆராதிப்பவருக்குக் கொடுக்கப்படும். பண்டிகையொன்று ஆசரிக்கப்பட்டு, திரும்பக் கை வரப் பெற்ற பகுதி உண்ணப்படும். இந்த உணவு வேளையில் லேவியர்களும், ஏழைகளும், விதவைகளும் அழைக்கப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருந்தார் (உபா.16:11). ஆராதனையில் பங்கேற்பவர்கள் தங்கள் செயல்களைத் தேவனுக்கு ஆராதனை என்ற வகையில் கண்ணோக்க வேண்டியிருந்தது. இவ்விதமாக, இந்த வேளைகளில் எல்க்கானா தனது பிள்ளைகளை அங்கிகரிக்கப்பட்ட வழிமுறைகளில் ஆராதிக்கப் பயிற்று வித்துக் கொண்டிருந்தார் (எபே. 6:4). இன்றைய நாட்களில் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தகுதியான முறையில் ஆராதிக்கப் பயிற்றுவிப்பதில் நேரம் செலவிட்டால் அது நல்லதாகும். ஆராதனை நடக்கையில் பிள்ளை கள் பெரும்பாலும் பயிற்சி பெறுவதில்லை, இதன் விளைவாக அவர்களின் ஆராதனையானது, வெறுமையும் வீணானதுமாயும் இருக்கின்றது!

அவரது பயபக்தியான பண்பிலிருந்து விளைந்த கனிகள்

எல்க்கானாவின் பயபக்தியானது, அவர் தம் குடும்பத்துடன் உரை யாடிய வகையில் மட்டுமின்றி அவர் செயல்விளக்கப்படுத்திய பண்பினங் களிலும் கவனிக்கப்படக் கூடியதாக உள்ளது.

முதலாவது, அவர் புரிந்து கொள்ளுதல் உடையவராயிருந்தார் (1:23). அவர் புரிந்து கொள்ளுதல் உடையவராயிருந்தபடியினால் சலுகைகளை அனுமதித்தார். மிகச் சரியாக, கடுமையற்ற வகையில், அசைவற்ற நிலையில் உள்ள தந்தையர்கள் தங்கள் இல்லங்களில், எல்க்கானாவைப் போன்று அன்பின் நிறைவை ஒருக்காலும் மகிழ்வுடன் அநுபவிக்க மாட்டார்கள். தந்தையின் பயபக்தியானது அவரை எல்க்கானாவின் மென்மையான புரிந்து கொள்ளுதலுக்கு வழிநடத்தியிருந்ததென்றால், இன்றைய நாட்களில் பல இல்லங்கள் மேன்மை வாய்ந்ததாக இருந்திருக்கும். தந்தை என்பவர் கடுமை யானவராக, கண்டிப்புமிக்க, இணக்கமற்ற அதிகாரத்திலிருந்து தன்னைக் காத்துக் கொண்டு, எல்லா விஷயங்களிலும் தனித்தன்மையை உணர்ந் தறிந்து கொண்டால், இல்லம் சார்ந்த இணக்கம் சாத்தியமாகின்றது.

இரண்டாவது, அவர் ஆவிக்குரிய விஷயங்கள் பற்றி ஆழமான அக்கறை கொண்டிருந்தார் (1:21). ஒவ்வொரு ஆண்டிலும் (சீலோவிற்குப்) பயணம் மேற்கொள்ளுதல் என்பது நிச்சயமாக நடைபெறும். அவர், தேவனைப் பற்றித் தமது குடும்பத்தாரிடம் ஆழமான அக்கறையை அறிவித்த ஒரு தந்தையாக உள்ளார். எல்க்கானா அக்கறை கொண்ட எல்லா விஷயங் களிலும் ஆவிக்குரிய காரியங்கள் முன்னிலை வகித்தன!

மூன்றாவது, அவர் தேவனைச் சார்ந்தவர் ஆனார் (1:23, 28). அவர் குழந்தையாயிருந்த சாமுவேலை கண்ணோக்கிய வேளையில், தேவன் தனது மகனைக் காத்து, வளரச் செய்து, அவனை ஆசீர்வாதமாக இருக்கச்

செய்யும்படி ஜெபித்தார் (1:23). அது யாவும் தேவனுடைய கரங்களில் இருந்தது என்று அவர் அறிந்திருந்தார், மற்றும் அவர் தேவனை மனப்பூர்வமாகச் சார்ந்திருந்தார் (2:11). அன்னாளின் விருப்பமும் (1:28) எல்க்கானாவின் விருப்பம் போன்றதாகவே இருந்தது என்பது உறுதி. அவர்களின் பிள்ளை உயிருடன் இருக்கும் நாளெல்லாம் அவனைக் காப்பதற்கு அவர்கள் தேவனையே சார்ந்திருந்தார்கள்.

நான்காவது, அவர் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார் (2:20). இங்கு விதைத்தல் மற்றும் அறுத்தல் என்பவற்றின் கொள்கை (கலா. 6) நடைமுறைப்படுத்தப் படுகின்றது. சங்கீதம் 1ன் நீதியுள்ள மனிதர் தமது ஒப்புக்கொடுத்தல் உள்ள விசுவாசத்தினால் அதிகமானவற்றைப் பெற்றுக் கொண்டது போலவே, எல்க்கானாவும் தமது பயபக்தியினால் ஆசீர்வாதங் களை அறுவடை செய்தார். இதே விதமான பயபக்தியை விதைக்கின்ற தந்தையர்கள் இதே விதமான ஆசீர்வாதங்களை அறுப்பார்கள்.

முடிவுரை

மனிதர்களே, நீங்கள் எந்த வகையிலான தந்தையர்களாக இருக்கின்றீர் கள்? நீங்கள் உங்கள் பிள்ளைகள் வாங்க விரும்பும் வகையிலான தந்தையர் களாயிருக்கின்றீர்களா? எல்க்கானா, தந்தைக்குரிய தனது அக்கறையை இயக்கக்கூடிய ஒரு பண்பை - பயபக்தியை - உடையவராயிருந்தார். அவர் தேவனுடன் ஒத்துழைப்பதற்கான தமது பொறுப்பு மற்றும் நீதியின் மார்க்கங்களில் தமது பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் ஆகியவற்றினால் மூழ்கடிக்கப்பட்டவராயிருந்தார்.

நீங்கள் ஒரு பயபக்தியுள்ள தந்தையாவதற்கு எல்க்கானாவின் இந்த உதாரணத்தைப் பயன்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக மதரீதியான உறுதிப்பாடுகளை அன்றாடம் காட்சிப்படுத்துங்கள். தேவனிடத்தில் செய்து கொண்ட வாக்குறுதிகள் யாவற்றையும் காத்துக் கொள்வதன் அவசியத்தை உங்களுடைய பிள்ளைகளுக்குக் காண்பிப்பதில் கவனமாயிருங்கள். தேவனுக்கு உண்மையான ஆராதனை செய்வதில் பங்கேற்கும்படி உங்கள் குடும்பத்தை உற்சாகப்படுத்துங்கள்.

எல்க்கானா, 2:21க்குப் பிறகு, காட்சியில் இருந்து மறைந்து போகின் றார். ஆனால் தமது பிந்திய ஆண்டுகளில் (மீண்டும்) காட்சியளிக்கின்றார். ஒருவேளை, சாமுவேல் இராமாவுக்குத் திரும்பவும் வந்து சேர்ந்த பொழுது, அவருடைய பெற்றோர்கள் இன்னும் உயிருடன் இருந்திருக்கலாம். அப்படியிருந்தால், அவர் (அவர்களின்) அருகிலேயே வாழ்ந்திருப்பார். சாமுவேலின் மகன்கள் எல்க்கானாவைப் பயபக்தி நிறைந்த ஒரு தாத்தாவாக அறிந்திருப்பார்கள்! என்ன ஒரு மேன்மை மிகுந்த எண்ணம்! ஒவ்வொரு தந்தையும் எல்க்கானாவைப் போலிருக்க முயற்சி செய்து, பயபக்தியுள்ள தமது தந்தைத்துவத்தினிமித்தம் அறியப்படுவார்களாக!

அன்னாள்
தாய்க்குலத்தின்
ஒரு நினைவுச் சின்னம்
(1:1-2:21)

ஸ்பார்ட்டாவின் அரசனாயிருந்த இரண்டாம் அகேஸிலாஸ் (கி.மு. 444-360), தான் மரிக்கப் போகும் வேளையில், தனக்குச் சிலை எதுவும் எழுப்பக் கூடாது என்று கட்டளையிட்டு, "மதிப்பிற்குரிய அருஞ்செயல் எதையேனும் நான் செய்திருந்தால், அதுவே எனக்கு நினைவுச் சின்னமாகும்; ஆனால் அப்படி எதையும் நான் செய்யாதிருந்தால், நீங்கள் (எனக்காகச்) செய்யும் சிலைகள், ஏதொன்றையும் குறிப்பிடாது" என்றும் கூடக் கூறினார். இப்படிப்பட்டதே நினைவுச் சின்னங்கள் பற்றிய பொருத்தமான உணர்கருத்தாக உள்ளது—கிரானைட் கற்களால் ஏற்படுத்தப்படாதவை பெரும்பாலும் மிகச் சிறந்தவைகளாய் இருக்கின்றன! ஒருவரின் வாழ்வு பற்றிய மனப் பதிவு, வார்த்தையிலும் செயலிலும் சாதிக்கப்பட்ட நற்செயல்கள் ஆகியவையே மிகச் சிறந்த நினைவுச் சின்னமாக உள்ளது.

அன்னாள் என்னும் அன்பார்ந்த பெண்ணுக்குள் நாம், "தாய்க்குலத்தின் நினைவுச் சின்னமாக" உள்ள வாழ்க்கையைக் காண்கின்றோம். இவள் பல நூற்றாண்டுகளாக வேதாகம மாணவர்களால் பாராட்டப்பட்டும், "ஜெபம் நிறைந்த தாய்'' அல்லது ''தேவனின் சிறந்த தாய்'' என்ற வகையில் பட்டங்களைப் பெற்றும் இருக்கின்றாள். நீங்கள் எந்த விதமாகப் பார்த்தாலும் இவளை பரிசுத்த வசனத்தின் தேவபக்தியுள்ள பெண்களின் வரிசையில் வைத்தாக வேண்டும்.

வேதாகமத்தில் இருந்து நாம், அன்னாளைப் பற்றிப் பின்வரும் வரலாற்று உண்மைகளைக் கற்றுக் கொள்கின்றோம். இவள் கர்ப்பந்தரிக்க இயலாதிருந்த நான்காவது மாபெரும் பெண்ணாயிருந்தாள். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த எண்ணிக்கையில் இவள் மிகவும் ஆவிக்குரியவளாக நிலை நிற்கின்றாள். சாராள் நகைத்தாள்; ரெபேக்காள் மாறுபட்ட எண்ணங் கொண்டவளாய் இருந்தாள்; இராகேல் எரிச்சலும் கோபமும் கொண்டவளாய் இருந்தாள். நாம் அறிந்த வரையிலும், அன்னாள் மாத்திரமே ஜெபத்தின் மூலமாகத் தேவனுடைய உதவியை நாடினாள். அன்னாளின் காலத்தில் ஆண் முன்னோர்களை மட்டும் பட்டியலிடுவது வழக்க

மென்பதால், இவளைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பை நாம் பெற முடிவ தில்லை. நாம் 1 சாமுவேல் புத்தகத்தின் தொடக்கப் பகுதியில் (அன்னாளைப் பற்றி) காணப்படுபவற்றை மட்டும் கொண்டுள்ளோம்.

அன்னாள், எல்க்கானாவின் முதல் மனைவியாயிருந்தாள். இவள் மலடியாக இருந்தபடியினால், இரண்டாவதாக ஒரு பெண் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இந்த ஏற்பாடானது தேவனுடைய தொடக்கத் திட்டங்களுடன் (ஆதி. 2:24; மல். 2:15; மத். 19:4) இசைவுள்ளதாக இருந்ததில்லை. எல்க்கானாவின் பலதாரத் திருமணத்தின் கவலைக்குரிய விளைவுகள் சாதாரணமானவைகளாக இருக்கின்றன. அன்னாள் மீது காண்பிக்கப்பட்ட விசேஷித்த அன்பைக் குறித்து பெனின்னாள் அகங்காரமும் வெறுப்பும் கொண்டவளாக ஆனாள். அவள், அன்னாளின் குறைபாட்டை, நிலையாக அவமானப்படுத்துவதற்கான ஒரு களமாக ஏற்படுத்திக் கொண்டாள். அன்னாள் இதைக் குறித்து கோபத்துடன் எதிர் பேசாமல் கொடுமைகளை சகித்துக் கொண்டாள். சீலோவில் ஒவ்வொரு ஆண்டிலும் வருடாந்திரப் பலி செலுத்துகையில் அன்னாளின் துக்கம் அதிகரிப்பதாயிருந்தது. முடிவில் அவளுடைய இந்த சுமை மிகவும் அதிகமாயிற்று. மன அழுத்தம், வெட்கக்கேடு, மற்றும் சுய குற்றச்சாட்டுதல் ஆகிய யாவையும் முன் நின்றன. பெருந்துக்கத்தினால் தாக்கப்பட்டவளாக, பலிவிருந்தை விட்டு வெளியேறி அவள் ஆசரிப்புக் கூடாரத்தில் அடைக் கலம் நாடினாள்.

யூதப் பாரம்பரியத்தின்படியாக, இந்தக் காலகட்டத்தில், ஆசரிப்புக் கூடாரமானது தனது மகிமையில் பெரும்பாலானவற்றை இழந்து போயிருந்தது. உடன்படிக்கைப் பெட்டியைச் சுற்றிலும் ஒரு சில திரைகள் மட்டும் தொங்க விடப்பட்டிருந்தன, மற்றும் கூடாரமானது பழுது பார்க்கப்படாத தாழ்வான ஒரு கல் மதில் சுவரால் சூழப்பட்டிருந்தது. அதன் வாசலில் பிரதான ஆசாரியரான ஏலி அமர்ந்திருந்தார். கூடாரமுற்றத் திற்குள் நுழைந்த அன்னாள் அமைதியான ஜெபத்தில் தனது ஆத்துமாவைத் தேவனிடத்தில் ஊற்றத் தொடங்கினாள். அவளைக் கவனித்த ஏலி அவள் மதுபானம் அருந்தியிருந்ததாக யூகித்தார். கடுமையான வார்த்தைகளினால் ஏலி அன்னாளைக் கடிந்து கொண்டார், ஆனால் அன்னாளோ பரிதாபமான வகையில் விளக்கம் தந்து பதில் அளித்தாள். அன்னாளின் பாரத்தைப் புரிந்து கொண்ட ஏலி, அவளுக்கு ஒரு பிள்ளை பிறப்பான் என்ற தமது ஜெப விருப்பத்தை அளித்தார். அன்னாள் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு அகன்ற பொழுது, அவள் முற்றிலும் விடுதலையான உணர்வுடன் இருந்தாள். அவள் தன் துக்கத்தின் பாரத்தைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிட்டாள். அவளுக்கு ஒரு மகன் தரப்படுவான் என்ற உறுதி அளிக்கப்பட்டிருந்தது, அவள் அம்மகனைத் தேவனுடைய ஊழியத்திற்கென்று அளிப்பதா யிருந்தாள்.

அன்னாள் எல்க்கானாவிடம் சென்று உடனடியாக இச்செய்தியை அவருடன் பகிர்ந்து கொண்டாள். அவர்கள் ஒன்றிணைந்து, பதில் தரப்பட்ட ஜெபத்தின் உறுதிப்பாட்டில் களிகூர்ந்தனர். பிள்ளை பிறந்தான், மற்றும் அவன் தேவனுடைய கடைசி நியாயாதிபதியாகவும் முதல் தீர்க்க

தரிசியாகவும் ஊழியத்திற்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்வதற் கென்று தனிச்சிறந்த வகையில் வடிவமைக்கப்பட்ட அன்பினால் மூன்று ஆண்டுகள் போஷிக்கப்பட்டான்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அன்னாள் தனது இளம் பிள்ளையை விட்டுச் செல்ல ஆயத்தப்பட்டவளாக ஆண்டுப் பண்டிகைக்குத் திரும்பி வந்தாள். அவள் ஆசரிப்புக் கூடாரத்திற்குத் திரும்புகையில், மூன்று ஆண்டு களுக்கு முன்பு அங்கு தான் நின்றிருந்த இடத்திலேயே நின்றாள். விதிவச மாயிருந்த அந்நாட்களின் நினைவு அவள் சிந்தையில் பெருக்கெடுத் திருக்கும் என்பதில் ஐயமில்லை (1:26, 27).

அவள் சாமுவேலை ஒப்புக் கொடுக்கையில், யெகோவாவை ஆராதித்தும் துதித்தும் ஒரு பாடலை அளித்தாள். அவள் தன் இளம் பிள்ளையை அவருடைய இரக்கம் நிறைந்த கவனிப்பில் அர்ப்பணித்தாள். ஒவ்வொரு ஆண்டும் பலி செலுத்த வரும் பொழுது, அன்னாள் சாமுவேலுக் குச் சின்னச் சட்டை ஒன்றைக் கொண்டு வந்து தருவாள். அந்தச் சட்டை யின் தையல் ஒவ்வொன்றும் அன்பினால் பின்னப்பட்டிருந்தது. இதுவே தாய்க்குலத்தின் பிரம்மிக்கத்தக்க நினைவுச் சின்னத்தின் சுருக்கமான வரலாறாக உள்ளது!

அன்னாளின் நினைவுச் சின்னம்

தாய்க்குலத்திற்கு என்றும் அழியாத நினைவுச் சின்னம் ஒன்றை எழுப்புவதற்கு, குணம் மற்றும் எண்ணப்போக்குகளின் குறிப்பிட்ட பண்பினங்கள் சில ஒன்றிணைந்துள்ளன.

தேவன் மீது விசுவாசம் என்ற பண்பு

சந்தேகமும் பெரும் வருத்தமும் கொண்டிருந்த வேளையில் அன்னாள் தேவனிடம் திரும்பினாள் (1:9-18; 2:1-10). அவளது விசுவாசமானது தவற விடக் கூடாதபடிக்கு அவ்வளவாய் உச்சரிக்கப்பட்டது!

முதலாவது, அவள் தனக்கு ஒரு பிள்ளையைத் தேவன் தருவார் என்பதை நம்பியதன் மூலம் விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்தினாள். காலம் கடந்த பொழுது, அவளது துக்கமானது நிச்சயமாகவே அவளது ஆவியின் பெலத்தை இற்றுப் போகச் செய்திருக்கும். வியப்பு, ஐயப்பாடு மற்றும் அவ்வப்பொழுது ஏற்படும் நம்பிக்கை ஆகியவை நிறைந்த ஆண்டு கள் அவளது கனவுகளின் துன்புறத்தும் ஒரு சுற்றினை ஏற்படுத்தியிருந்தன. இருப்பினும், அவள் அதிகமதிகமாக தேவன் மீது சார்ந்திருப்பவளானாள். கடைசியாக, பாரத்தைச் சுமக்க இயலாத நிலையில் அவள் தேவனிடத்தில் சென்றாள். அவள் ஏலியை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பொழுது, தேவனு டைய பதிலில் அவள் திருப்தியடைந்திருந்தாள் (1:17). அன்னாள், (தனது) பாரத்தை கர்த்தர் மீது வைத்து விட்டாள். அவள் தன்னால் செய்ய இயன்ற தைச் செய்து, தனது கட்டுப்பாட்டில் இல்லாதவற்றைத் தேவனுடைய கவனிப்பில் விட்டு விட்டாள்.

இரண்டாவது, அவள் சாமுவேலை ஏலியிடம் கொடுத்த பொழுது

தேவனிடத்தில் தனது விசுவாசத்தை ஒப்புக் கொடுத்தலில் செயல்விளக்கப் படுத்தினாள் (2:1-10). 1 சாமுவேல் 1:27 வசனமானது, மிக மேன்மையான நம்பிக்கையின் வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப் பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார்." அன்னாளின் பாடல் (2:1 முதல்) ஆழமான விசுவாசத்தின் தனிச்சிறந்த எடுத்துரைப்பாக உள்ளது. இது பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் காண இயலாததும், புதிய ஏற்பாட்டில் மரியாளின் பாடலுடன் (லூக். 1:46 முதல்) மட்டும் இணையாகக் கருதப்படக் கூடியதுமான ஆவியின் மென்மையையும் ஒப்புக்கொடுத் தலின் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகின்றது. அன்னாளின் பாடல், தேவன் ஒரு பரிசுத்தமான, பலம் உள்ள, ஞானமிக்க மற்றும் மிகமேன்மை யான நியாயாதிபதி என்பதைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

மூன்றாவது, அவள் சாமுவேலை (ஆசரிப்புக்) கூடாரத்தில் விட்டுச் சென்றதில் விசுவாசத்தைச் செயல்விளக்கப்படுத்தினாள் (1:28; 2:11). அவன் மூன்று வயதுச் சிறுவனாயிருந்தான்! அவள் பயம் கொண்டிருக்கவில்லை. அவனை அவள் தேவனுடைய கவனிப்பில் வைத்து விட்டிருந்தாள்.

அன்னாளின் விசுவாசமானது நம்மை எபிரெயர் 4:16 மற்றும் 1 பேதுரு 5:7 போன்ற வசனப் பகுதிகளுக்குள் உட்கண்ணோட்டத்தை ஆதாயப் படுத்த வல்லவர்களாக்குகிறது.

சோதனைகளில் பொறுமை என்ற பண்பு (1:7)

அவள் எவ்வளவு காலம் மலடியாயிருந்தாள் என்று நாம் அறியவில்லை. அவள் சங்கீதம் 142:4ஆ-வின் "எனக்கு அடைக்கலமில்லாமற் போயிற்று" என்ற வார்த்தைகளை அடிக்கடி உணர்ந்திருப்பாள் என்பதில் ஐயமில்லை. அருளிரக்கம் அவளைத் தவிர மற்ற யாவருக்கும் சாதகமாயிருந்ததாகக் காணப்பட்டது. தேவன் ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டார் என்று அவளால் சுலபமாக நம்ப முடிந்திருக்கும். பெனின்னாளின் கொடூரமான விமர்சனங்கள் மென்மையான அன்னாளைப் புரிந்து கொள்ளுதலுக்கப்பால் துன்புறுத்தின. அவள் என்ன செய்ய வேண்டியிருந்தது? அவள் இந்தச் சோதனைகளினூடே பொறுமையாகச் சகித்துக் கொண்டிருந்தாள். நிறைவாக, இந்தப் பொறுமையானது அவள் தனது விசுவாசத்தை ஆழப் படுத்திக் கொள்ளவும் நம்பிக்கையை உயர்த்திக் கொள்ளவும் அனுமதித்தது.

அவளது பிள்ளைகளுக்காக (தன்னை) ஒப்புக்கொடுத்தல் என்ற பண்பு (1:22; 2:19)

அவள் தன்னையே சாமுவேலுக்காக ஒப்புக்கொடுத்தாள். அவள் சிந்தனைமிக்க வகையிலும் நிலையாகவும் தாய்க்குரிய கடமைகளைச் செய்தாள். அவனுக்காக ஜெபித்தாள் மற்றும் அவனுடைய சிந்தனைகளை தேவனை நோக்கிச் செலுத்தினாள். அன்னாளைப் பொறுத்தமட்டில் தனது பிள்ளையை வளர்த்தல் என்பது தேவனுக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட ஊழியமாயிருந்தது. நவீன காலத் தாய்மார்கள் நன்கு நினைவில் கொள்ள வேண்டிய கருத்து ஒன்றை தல்மூத் குறிப்பிடுகின்றது:

"நன்கு போதிக்கப்பட்டவன் யார்? அவன் தனது தாயினால் போதிக்கப் பட்டவனேயாவான்!" அன்னாள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டு வந்த சின்னச் சட்டையினால் அவளது ஒப்புக்கொடுத்தலானது மிகச் சிறப்பாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அது இணைப்புகளே இல்லாமல் ஆட்டு மயிரினால் பின்னப்பட்ட உள்ளாடையாயிருந்தது. அந்தச் சட்டைக்கு மேல் ஆசாரியர்கள் தங்கள் ஏப்போத் என்ற உடையை அணிவார்கள். சாமுவேல் ஒவ்வொரு ஆண்டிலும் தனது தாய் தனக்கு அவளது ஒப்புக்கொடுத்தலின் வியப்புமிக்க அந்த அடையாளத்தைக் கொண்டு வருவதை எதிர்பார்க்க முடிந்தது.

தியாகத்தின் பண்பு (1:28)

அவள் தனது விலைமதிப்பற்ற செல்வத்தைத் தேவனுக்குக் கையளிக்க மனம் ஒப்பினாள். அவள் தன் சுயவிருப்பத்தின்படியே தேவனுக்கு அதைச் செய்தாள். தனது பொருத்தனையில் தன்னைத் தேவனுக்கென்று புதிதாக அர்ப்பணித்தலில், அவள் தேவனுடைய மகிமையை மட்டும் நாடினாள். சாமுவேல் தனக்குச் சிறந்ததைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு அவள் தனது சுய தேவைகளை மனப்பூர்வமாக, அன்புடன் தியாகம் செய்தாள்.

பெற்றோர்த்துவத்தின் பண்பு (1:28)

அவள் தன் மகனுக்கென்று – அவன் என்றென்றைக்கும் தேவனுடைய இல்லத்தில் வாழ்வான் (1:22) என்ற – ஒரே ஒரு இலக்கை மட்டும் கொண்டிருந்தாள். அவள் தனது பிள்ளையை ஒரு முற்றான வெகுமதியாக அல்ல, ஆனால் ஒரு ஒப்படைப்பாக மட்டுமே கண்டாள். அவளது நிலைப் பாடானது தீவிரமான பொறுப்புக்களைக் கொண்டிருந்தது, மற்றும் அவள் தன் கடமையை உண்மையுடன் நிறைவேற்றியதை உறுதிப்படுத்திக் கொண்டாள். அவள் ஒரு மகனை வளர்ப்பது என்பதை மட்டுமின்றி, அவனைத் தேவனுக்கு ஒரு ஊழியக்காரனாகவும் தலைவனாகவும் கொடுத்தல் என்பதையும் தன் பொறுப்பாகக் கண்டாள்! இந்த உணர்ந் தறிதலானது இன்றைய நாட்களின் ஒவ்வொரு தாய்மாரின் சிந்தனையிலும் காணப்பட வேண்டும். ஒரு பெற்றோர் என்ற வகையில் அன்னாள் வெற்றி யடைந்தாள். அன்னாளுடைய மகன் தேவனுக்கு முன்பாக வளர்ந்தான் என்பதை அவளுடைய வரலாற்றுக் குறிப்பு உறுதிப்படுத்துகின்றது (2:21).

நினைவுச் சின்னப் பாடங்கள்

அன்னாளின் தாயத்துவத்திலிருந்து நித்திய மதிப்பிற்குரிய பாடங்கள் கற்கப்படுகின்றன.

நினைவில் வையுங்கள்: ஒரு தாயின் பணிப் பொறுப்பு வலிவார்ந்ததாக உள்ளது! ஒரு தாயின் விசுவாசமானது அவளது பிள்ளைகளுக்குள் நடப் படும். அவளது விசுவாசம் பலமுள்ளதாக இருந்தால், அது முளைத்து வளரும். ஒரு தாயின் உணர்வுச் செயல்பாடுகள் அவளது பிள்ளைகளில் பிரதிபலிக்கப்படும். தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு

தேவனைப் பற்றிய உணர்வையும், ஒப்புக் கொடுத்தலில் உள்ள விசுவாசத்தையும், மற்றும் சுயநலமற்ற ஊழியத்தையும் தருகின்றீர்களா? தாய்மார்களே, சோதனை வேளைகளில் உங்கள் பிள்ளைகள் "அம்மா" வின் நினைவுகளில் பாதுகாப்பைக் காண்பார்களா? பிள்ளைகள் தாங்கள் காண்பவற்றைப் போலச் செய்கின்றனர். தாய்மார்கள் சாந்தம், பயபக்தி, மற்றும் நேர்த்தியான தன்மை ஆகிய பண்புகளைத் தங்கள் பிள்ளைகள் பின்பற்றிச் செய்யும்படி செயல்விளக்கப்படுத்துதல் என்பது மிகவும் இன்றியமையாததாகும்!

நினைவில் வையுங்கள்: தேவன் மீது ஒரு பெண் கொண்டிருக்கக் கூடிய அமைதியான விசுவாசமும், அவளிடம் என்றென்றைக்கும் இருக்கக் கூடிய சாந்த குணமும் அவளது கணவர் மற்றும் பிள்ளைகளின் வாழ்வில் இனிமையைக் கொண்டு வரும். தேவன் தங்களுக்குக் கொடுத்துள்ள பணிப்பொறுப்புக்களில் சாந்தமான வார்த்தைகளுடனும் பொறுமை மிகுந்த இரக்கத்துடனும் பணியாற்றுகின்ற தாய்மார்கள், தங்கள் "இல்லத்தை, இனிமை மிக்க இல்லமாக" ஆக்குவார்கள்!

நினைவில் வையுங்கள்: தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவனுக்குகென்று போஷிக்க வேண்டும். தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்குள் தேவனுக்கென்று என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் ஒப்புக் கொடுத்தலை மனதில் செலுத்த வேண்டும். அவர்களுக்குத் தேவனைப் பற்றியும் அவரது அதிகாரம் பற்றியும் மனதில் பதியும் போதனைகளைத் தர வேண்டும். தனது பிள்ளைகளுக்கு, தேவசித்தத்திற்கு அன்றாடம் கீழ்ப் படிதலின் மகிழ்வையும் நடக்கை மற்றும் பண்பில் பரிசுத்தத்தின் வனப்பையும் காண்பிக்கின்ற தாய் பாக்கியவதியாக இருக்கின்றாள்.

முடிவுரை

பவளப் பாறைகள் ஒருவேளை, இயற்கையின் மாபெரும் நினைவுச் சின்னங்களாக உள்ளன. அவற்றின் அழகும் விரிவும் மேற்கொள்ள இயலாதவைகளாய் உள்ளன. அவைகள், பவளங்கள் தங்கள் வாழ்நாளில் சுரக்கின்ற ஓடுகளினால் உண்டாக்கப்படுகின்றன. உண்மையில், இந்த மாபெரும் பாறைகள், அது (பவளம்) வாழ்ந்த வாழ்விற்கு நினைவுச் சின்னமாக உள்ளன. அவைகளின் இருப்பினுடைய அழிக்க இயலாத பதிவேடானது எல்லாக் காலங்களுக்கும் எதிர்ப்பாக நிலைநின்றுள்ளது. அன்னாள் போன்ற தேவபக்தியுள்ள தாயின் நினைவுச் சின்னமும் இதைப் போன்றதாகவே உள்ளது!

தாய்மார்களே, உங்கள் வாழ்வானது சந்தோஷம், மகிழ்ச்சி ஆகியவற்றின் நினைவுச் சின்னங்களாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தேவன் மீது அசைக்க இயலாத விசுவாசம், சோதனைகளை எதிர் கொள்ளுகையில் பொறுமை, பிறருக்கு ஒப்புக்கொடுத்தல், தியாகம் செய்தல், மற்றும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஒருக்காலும் தவறாத உறுதிப்பாடு ஆகியவற்றை (உங்கள் பிள்ளைகளுக்குள்) நிலைநாட்டுவதில் உங்கள் சக்திகளைச் செலவிடுங்கள். தாய்மார்களே, பெற்றோர்த்து

வத்திற்கான உங்களின் குறிக்கோளானது, "ஆகையால், அவன் கர்த்தருக் கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கென்றே ஒப்புக்கொடுக்கிறேன்" (1:28) என்று கூறிய அன்னாளுடைய குறிக்கோளாகவே இருக்கட்டும்.

சாமுவேல்

அர்ப்பணிப்பின் விவரிப்பு

கொல்லாஷியா பகுதியானது ரோமப் பேரரசினால் கைப்பற்றப்பட்ட வேளையில் நிபந்தனையற்ற சரணடைதல் அடையும்படி பேச்சு வார்த்தை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆளுநராக நியமிக்கப்பட்ட எகெரியஸ் என்பவர், கொல்லாஷியா தூதர்களிடத்தில், "கொல்லாஷியாவின் மக்கள் தங்கள் சொந்த வலிமையின் கீழ் இருக்கின்றார்களா?" என்று கேட்டார். உறுதிப்படுத்தப்பட்ட பதில் ஒன்று தரப்பட்ட பொழுது, அடுத்ததாக அவர், "நீங்கள் உங்களையும், உங்கள் கோவில்களையும், உங்கள் பாத்திரங் களையும், எல்லா சொத்துக்களையும் என் கைகளிலும், ரோமாபுரி மக்களின் வல்லமைக்குள்ளும் ஒப்புவிக்கின்றீர்களா?" என்று கேட்டார். அவர்கள், "நாங்கள் எல்லாவற்றையும் ஒப்புவிக்கின்றோம்" என்று பதில் கூறினார்கள். அவர், "நான் உங்களை ஏற்றுக் கொள்கின்றேன்" என்று கூறினார். இந்த விவரிப்பானது, பழைய ஏற்பாட்டில் தன்னை முழுவதும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருந்த ஒரு மனிதரை - சாமுவேல் என்பவரை - நமக்கு நினைவூட்டுகின்றது.

சாமுவேலின் வாழ்வானது, தூய்மை, நம்பிக்கை மற்றும் நீதி ஆகிய வற்றின் முறிவுபடாத பதிவேடாக வாசிக்கப்படுகின்றது. மிகவும் மேன்மை யான ஒரு இலக்கு அவரது பச்சிளங்குழந்தைப் பருவத்திலிருந்து கல்லறை வரையிலும் அவர் மீது ஆட்சி செலுத்திற்று. அவரது வாழ்வில் தவறுதல் களோ, காட்டு நெல் விதைகளோ அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல் களோ இல்லாதிருந்தது. பொது வாழ்விலிருந்து அவர் ஓய்வு பெற்ற பொழுது, இன்றைய மக்கள் ஊழியர்(எனப்படுபவர்)கள் மேற்கொள்ளத் துணிவதற்கு கனவிலும் கருதிப் பார்க்காத துணிவான செயல் ஒன்றை அவர் கையாண்டார் - அவர் தாம் ஏதேனும் தவறு செய்திருந்தால், அதை அறிவிக்கும்படிக்கு இஸ்ரவேல் மக்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்! (12:2, 3). மௌனமே அதற்குப் பதிலாயிருந்தது! ஒரு நிகழ்ச்சிகூட (அவருக்கெதிரானதாகக்) கொண்டு வரப்படவில்லை. சாமுவேலின் வரலாறு கரையற்றதாக இருந்தது.

சாமுவேலின் வாழ்வைத் தொகுத்துரைப்பதும், ஊழியத்தின்பால் அவரது எண்ணப்போக்கை விவரிப்பதுமான வார்த்தை, அர்ப்பணிப்பு என்பதாகும். அவர் அன்னாளின் வயிற்றில் கர்ப்பந்தரித்த நாள் முதற் கொண்டு, தமது கடைசி மூச்சை விட்ட நாள் வரைக்கும், அவர் தேவனுக் குத் தன்னை அர்ப்பணித்த மனிதராயிருந்தார். இந்த அர்ப்பணிப்பானது எல்லாக் காலங்களிலும் இருக்கும் எல்லா மனிதர்களுக்கும், வார்த்தையிலும்

செய்கையிலும் அவர்களின் அர்ப்பணிப்பு குறித்து இடிமுழக்கத்திற்கு ஒப்பான அறைகூவலை வெளியிடுகின்றது.

இளம் வயதினருக்கு: ஆவலான அர்ப்பணிப்புக்கான அறைகூவல் *(2:11, 18-21; 3:1-21)*

சாமுவேலின் தொடக்க ஆண்டுகள் இரண்டு இடங்களில் செலவிடப் பட்டன. முதலாவது, அவர் தம் பெற்றோர்களுடன் இராமாவில் இருந்தார். அநேகமாக, அவர் தமது வாழ்வின் முதல் மூன்று ஆண்டுகளில் அங்கு வாழ்ந் திருப்பார். இல்லத்தில் அவர், உதாரணங்கள், ஜெபங்கள், மற்றும் அன்பார்ந்த அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் மூலம் ஆழமான மற்றும் நிரந்தரமான மனப்பதிவுகளைப் பெற்றார். இந்தத் தொடக்க கால மனப் பதிவுகள் அவரைப் பொல்லாங்கிலிருந்து காத்து நன்மையை நோக்கி இயக்குகின்ற கொள்கைகளை அவருக்குள் நிலைநாட்டின. இந்தத் தொடக்க ஆண்டுகளில் இருந்தே, சாமுவேல் தாம் யெகோவாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததைப் புரிந்து கொண்டிருந்தார். அர்ப்பணிப்பின் கருத்து அவருக்குப் புரிந்து கொள்வதற்குச் சுலபமாயிருந்தது, ஏனெனில் அதைப் பற்றி அவரது பெற்றோர்கள் முன்மாதிரியினாலும் போதனை யினாலும் அவருக்கு விளக்கப்படுத்தினர்.

சீலோவில் இருந்த ஆசரிப்புக் கூடாரம் சாமுவேல் தனது பிள்ளைப் பிராயத்தில் தங்கியிருந்த இரண்டாவது இடமாக இருந்தது. சீலோவில் சாமுவேல் இஸ்ரவேலரின் ஆராதனைக்குரிய விஷயங்களில் அன்றாடம் தொடர்பு கொண்டிருந்தார். அங்கிருந்த பரிசுத்த நடைமுறைகள் அவரை அவரது பிற்கால வாழ்வுக்கென்று படிப்படியாக, உறுதியாக, மற்றும் மாற்ற இயலாத வகையில் உருவாக்கின.

சாமுவேலின் இளம் வயது அர்ப்பணிப்பின் பேராவலானது பின்வரும் விவரங்களினால் தெளிவாகின்றது: அவர் தமது இளம் வயதில் பொல்லாங் கான ஆதிக்கங்களுக்கு ஆட்படும் வகையில் இருந்திருப்பினும், தேவனுக்கு உண்மையுள்ளவராக நிலைத்திருந்தார். சாமுவேலின் வயதைப் பற்றிய குறிப்பானது அவர் ஏறக்குறைய பதினைந்து வயதுள்ளவராக இருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கின்றது (2:18; 3:1). இந்த வயது பெரும்பாலும் கலக்கம், மீறுதல், மன அழுத்தம் மற்றும் "கும்பலைப் பின்பற்றிச் செல்வதற்கு" ஒருவர் சுலபமாக அடித்துச் செல்லப்படுதல் என்பவற்றின் வயதாக உள்ளது. இந்த அழுத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிர்கொண்டு நின்ற சாமுவேல் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலுடன் நிலைத்திருந்தார். சாமுவேலை எதிர் கொண்டிருந்த மிக அபாயமான ஆதிக்கங்களில் ஏலியின் மகன்களும் இருந்தனர். ஓப்னி, பினெகாஸ் என்ற அவ்விருவரும் தங்கள் பொல்லாத செயல்களில் சாமுவேலைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளும் படிக்கு ஊக்கப்படுத்தியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை, ஆனால் சாமுவேல் அசைந்து கொடுக்கவில்லை. தேவனிடத்தில் அவர்கள்

கொண்டிருந்த விரோதம், மாறுபாடு மற்றும் கலகம் ஆகியவற்றை அவர் (சாமுவேல்) பகிர்ந்து கொண்டிருக்க முடியும், ஆனால் சாமுவேல் ஒருக்காலும் அலைபாய்ந்து விடவில்லை. சாமுவேலின் விடலைப் பருவ உடலானது அவ்விரண்டு முதிய பையன்களின் ஆபாச நடக்கையுடன் இணைந்து கொள்ளும்படிக்குச் சோதிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் சாமுவேல் அர்ப்பணிப்பு நிலையிலேயே தொடர்ந்து நிலைத்திருந்தார். சாமுவேல் பொல்லாங்கின் செல்வாக்கினால் எதிர்கொள்ளப்பட்ட போதிலும் ஒழுக்கத்திலும், ஆவிக்குரிய நிலையிலும் பலத்து வளர்ந்தார் (2:21; லூக். 1:80). சாமுவேலின் நடக்கையானது ஓப்னி, பினெகாஸ் ஆகியோரின் நடக்கைக்கு நேர்மாறானதாக இருந்தது. அவர்கள் அநேகமாக ஒரே வயதுடையவர்களாக இருந்தார்கள், ஆனால் அவர்கள் முற்றிலும் மாறுபட்டவர்களாய் இருந்தார்கள்! (2:12, 18; 2:25, 26; 3:13, 19, 20). இதற்கு என்ன விளக்கம் இருந்தது? சாமுவேல் தமது இளம் பிராயத்திலேயே தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தார்! சாமுவேல் தேவன் கூறுவதை ஆர்வத்துடன் கவனித்துக் கேட்கும் இளைஞராய் இருந்தார் (3:10). சாமுவேலின் வாழ்வு பற்றித் தொகுத்துரைக்கும் ஒரு வசனத்தைக் கண்ணோக்க நீங்கள் விரும்பினால், அது 3:10 என்பதாகவே உள்ளது. அவரது வாலிப வயதில் “கீழ்ப்படிதல்” என்பதே அவருடைய கவனிப்பு வார்த்தையாக இருந்தது. அவர் தேவன் மீது ஆழமிக்க பயபக்தியைப் பற்றிக் கொண்டிருந்தார். “கேட்கிறேன்” என்ற வார்த்தையானது நின்று கொண்டு உடனடியாகக் கீழ்ப்படியத் தயாராக உள்ள ஒருவரைக் குறிக்கின்றது. இளைஞர்களே, இந்த வார்த்தை உங்களைப் பற்றி விவரிப்பதாக உள்ளதா? நீங்கள் (உங்களைத்) தேவனுக்கு அர்ப்பணித்தவர்களாய் இருந்தால், நீங்கள் தேவனுடைய கட்டளைகளைக் கேட்கையில் கீழ்ப்படியத் தயங்காமல், மனப்பூர்வமாய் அதைச் செய்வீர்கள் (பிர. 12:1, 6).

சாமுவேல் எல்லாராலும் மதிக்கப்பட்ட இளைஞராயிருந்தார் (2:26; 3:21; 4:1அ). அவர் பொறுப்புக்களை ஏற்று நடத்த தயாராயிருந்த ஒரு இளம் வயதுப் பையனாயிருந்தார் (3:15). கூடாரத்தின் கதவுகளைத் திறத்தல் என்பது மிக முக்கியமான பணிப் பொறுப்பாக இருந்தது. அவரது பொறுப்பு வாய்ந்த நடக்கைகளினிமித்தமாக தேவனுடைய மனிதன் என்ற வகையில் அவரது புகழ் வளர்ந்தது. இளைஞர்களே, இந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு, உங்களைச் சுற்றியிருப்பவர்கள் உங்களை மதிக்கும்படி பொறுப் புள்ள வழிகளில் நடந்து கொள்ளுங்கள் (இ.வ. நீதி. 3:1, 4; 1 தீமோ. 4:12, 15; 5:22ஆ).

சாமுவேலின் வாழ்வு இராமாவில் தொடங்கிற்று மற்றும் அது சீலோவை நோக்கி நகர்ந்தது. அவரது பிள்ளைப் பருவம் மற்றும் இளமைப் பருவ ஆண்டுகள் சீலோவில் ஊழியத்தில் கழிந்தன. அவர் மனிதப் பருவத்திற்குக் கடந்து செல்லுகையில், அவரது நிலைப்பாடு பாதுகாப்புள்ள தாக இருந்தது (3:19 4:1). சீலோவில் தொடக்க நிலைத் தரிசனம், இஸ்ரவேலருக்கு முன்பாக அவரது வார்த்தைகளை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துதல், மற்றும் அவரது மதிப்பிற்குரிய பாவனைகள் ஆகியவை அவருக்கு மனிதப் பருவத்திற்கு அவரை எடுத்துச் சென்ற மதிப்பையும்

தைரியத்தையும் கொடுத்திருந்தன.

வயது வந்தவர்களுக்கு: பின்மாற்றமில்லாத அர்ப்பணிப்பின் அறைகூவல் (7:1-17)

தேவனுடைய தீர்க்கதரிசியாக நிலைநாட்டப்பட்ட பின்பு வெகுவிரைவிலேயே சாமுவேல் சீலோவிலிருந்து சென்று விட்டார் என்று தோன்றுகின்றது. உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டதைத் தொடர்ந்து (4:11), சீலோ பிலிஸ்தியர்களின் கைகளுக்குள் விழுந்தது (சங். 78:60 முதல்). இஸ்ரவேலர்கள் பிலிஸ்தியர்களின் அடக்குமுறையின் கீழ் துன்புற்றுக் கிடந்தனர். இராமாவில் சாமுவேலின் பிரசன்னமானது பல்வேறு வழிகளில் விளக்கியுரைக்கப்படுகின்றது. அவர் எல்க்கானாவிடத்திலிருந்து காணியாட்சிகளை இவ்விடத்தில் பெற்றுக் கொண்டதாகச் சிலர் தெரிவிக்கின்றனர். மற்றவர்கள், சீலோவின் ஆராதனையில் ஒப்னி மற்றும் பினெகாஸ் ஆகியோரின் முற்றான பிறழ்வு நடக்கையினிமித்தமாக அவர் சீலோவுக்கு சென்று விட்டார் என்று தெரிவிக்கின்றனர். ஆனால் இராமா சாமுவேலின் தலைமையிடமாயிற்று.

சாமுவேல் இராமாவிலிருந்து கொண்டு மனந்திரும்புதலை வற்புறுத்தி இஸ்ரவேலுக்குள்ளே இருபதாண்டுகளைக் கழித்தார். 7:3ன் வார்த்தைகள் சாமுவேலின் வேண்டுகோள்களைத் தொகுத்துரைக்கின்றன. இருபதாண்டுகள் பிரசங்கித்த பின்பு சாமுவேல் மிஸ்பாவில் இஸ்ரவேலர்களை ஒன்றுகூட்டி அங்கு அந்த இனம் முழுவதும் யெகோவாவிடம் திரும்ப வேண்டியதை அறிவித்தார். மிஸ்பாவில் நடந்த இந்தக் கூடுகையானது சாமுவேல் தனது வயது வந்த காலத்தில் கொண்டிருந்த பின்மாற்றமில்லாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

சாமுவேலின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதில், வயது வந்தவர்கள் பின்வரும் விஷயங்களில் அர்ப்பணிப்புடன் இருக்கும்படிக்கு அறைகூவல் விடப்படுகின்றனர்.

முழு இருதயத்துடன் மனம்மாறும்படி அழைப்பதற்கு சாமுவேல் அஞ்சாமலிருந்தார் (7:3). அவர் அக்கிரமத்தைக் கடிந்து கொண்டார் மற்றும் இஸ்ரவேலர்கள் புறதெய்வக்காரர்களின் நடைமுறைகளில் இருந்து முற்றிலும் பிரிந்து வர வேண்டும் என்று வலியுறுத்தினார். இஸ்ரவேலர்கள் தங்கள் பாவங்களின் பேரளவை உணர்ந்து, தேவன் மீது நம்பிக்கை கொள்வதின் அவசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று சாமுவேல் விரும்பினார். சாமுவேல் பாவத்தைக் கண்டனம் செய்தார், ஒருக்காலும் அதனைப் பொறுத்துக் கொண்டு போனதில்லை. அவர் முற்றான மனந்திரும்புதலைத் தீவிரமாக வேண்டினார்! இஸ்ரவேலர்கள் தேவனுடன் ஒப்புரவாக வேண்டும் என்றும் அவர்களை அவர் ஊக்கப்படுத்தினார் (7:5). அவர், நீதியை உணர்த்தி உயிரூட்ட எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருந்தார். அவர் இஸ்ரவேலர்களிடம் வேண்டுகோள் விடுத்து,

கெஞ்சிக் கேட்டு, மற்றும் வாதிட்டுக் கொண்டிருந்தார்.

அடுத்ததாக, அவர் உயர்வான மதிப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார் (7:6). சாமுவேல் தமது செல்வாக்கின் மூலமாக இஸ்ரவேலரை ஒன்றுகூடி வரும்படி செய்தார். அந்த இனமானது தேவனை நோக்கி தனது பாவங்களையும் முரட்டாட்டங்களையும் அறிக்கையிட்டது. இங்குதான் சாமுவேல் இஸ்ரவேலின் மீது "நியாயாதிபதியாக" நியமிக்கப்பட்டார்.

இவர் நடத்துவத்தை அளித்தார் (7:8). இஸ்ரவேலர்களுக்கு உதவி தேவைப்பட்ட பொழுது, அவர்கள் தங்களை வழிநடத்திச் செல்லக் கூடிய ஒருவரைக் கண்ணோக்கினார்கள். சாமுவேலின் வாழ்வு, முன்மாதிரி, மற்றும் போதனை யாவும் இணைந்து அவரை ஒரு மாபெரும் தலைவராகத் தகுதிப்படுத்தின.

சாமுவேல் ஜெபித்தார் மற்றும் ஜெபத்தைச் சார்ந்திருந்தார் (7:9). சாமுவேலின் ஜெபத்தினுடைய வல்லமையானது இஸ்ரவேல் முழுவதிலும் அறியப்பட்டிருந்தது. சாமுவேலின் ஜெபத்தில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். தேவன் சாமுவேலின் வேண்டுகோள்களைக் கேட்டு அவற்றிற்குப் பதிலளித்தார். தேவனை நோக்கி ஜெபித்தவர்களில் பிரதானமானவர்களில் ஒருவராக சாமுவேலை சங்கீதம் 99:6 குறிப்பிடுவதென்பது கவனிக்க ஆர்வத்திற்குரியதாக உள்ளது. சாமுவேல் இஸ்ரவேலுக்கான தமது வேண்டுதல்களில் பயன்படுத்திய ஜெப வல்லமையைக் குறித்து எரேமியா 15:1ல் கூறுகின்றார். இஸ்ரவேலின் விடுதலைக்காக சாமுவேல் ஜெபித்தார் என்பதையும் அவரது ஜெபம் அவர்களுக்கு யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுத் தந்தது என்றும் இஸ்ரவேலில் இருந்த யாவரும் அறிந்தார்கள் (7:8; 8:6). சாமுவேல் ஒரு தளபதியாகவோ, ஒரு யுத்த வீரராகவோ, அல்லது படை ஆலோசகராகவோ இருந்ததில்லை. அவரால் ஆயுதங்களைத் தர முடியவில்லை, ஆனால் அவரால் ஜெபிக்க முடிந்தது. அதுவே யுத்தத்தில் வெற்றியைத் தந்தது! (7:10, 11).

இஸ்ரவேலானது தேவனைச் சார்ந்திருக்க வேண்டியது பற்றித் தொடர்ந்து அவர்களுக்கு அவர் நினைவூட்டிக் கொண்டிருந்தார் (7:12). தேவனுடைய பெலத்தினாலேயே இஸ்ரவேல் நிலைத்திருந்தது என்பதை அவர் எப்பொழுதும் வலியுறுத்தினார்!

சாமுவேல் சமாதானம், இணக்கம் மற்றும் ஆசீர்வாதம் ஆகியவற்றிற்குக் காரணரானார் (7:13, 14). சாமுவேல் தமது போதனைகளினால் கோத்திரங்களுக்கு இடையில் இருந்த பொறாமை மறையும்படி செய்தார் மற்றும் பிரிந்து கிடந்த நாட்டை அவர் ஒன்றாக்கினார். இவ்விதமாக அவர் இஸ்ரவேலின் "ஒன்றுபட்ட இராஜ்யத்திற்கு" வழியை ஆயத்தம் செய்தார்.

நிறைவாக, அவர் தேவனுடைய சித்தத்தைப் போதிப்பதில் ஈடுபட்டார் (7:16). இஸ்ரவேல், தேவனுக்கென்று உண்மையாய் நிலைநிற்க வேண்டுமென்றால் அவர்கள் தேவனுடைய வசனத்தை அறிந்திருக்க வேண்டும் என்று அவர் அறிந்தார். இஸ்ரவேலுக்குள் இன்னும் விரிவாக்கப் போதனையில் பயன்படுகின்ற வகையில் அவர் தாமே "தீர்க்கதரிசிகளின் பள்ளி களை" த் தொடங்கினார் (19:3-5, 23, 24; 2 இரா. 2).

இவ்விதமாக, இளமைப் பருவத்தின் உத்வேகமும் வலிவும் குன்றிய

பொழுதிலும் கூட, சாமுவேலின் அர்ப்பணிப்பானது அவருடைய வயதான காலத்திலும் நிலைத்து நின்றது. பல பிரச்சனைகளை எதிர் கொண்டிருந்த சாமுவேல் வேகம் தணிந்து போயிருக்கலாம். இஸ்ரவேலர்களை மிஸ்பாவில் கூட்டிச் சேர்க்க அவருக்கு இருபதாண்டுக் காலத்திற்குச் சீரான போதனை தேவைப்பட்டது. ஆனால் சாமுவேல் "பின்மாற்றம் இல்லாதவராகக்" காணப்பட்டார். பயம், மன அழுத்தம் மற்றும் பாவம் ஆகியவற்றுடன் போராடிக் கொண்டிருக்கும் வயது வந்தவர்கள் சாமுவேலை உற்று நோக்குவதும் அவர் செய்தது போலவே பின்மாற்றமின்றி இருக்க வேண்டியதும் அவசியமாகும். அவருடைய தீர்மானத்தை வயது வந்தவர்கள் தங்கள் வாழ்வில் செயல்விளக்கப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

மூத்த பரிசுத்தவான்களுக்கு: நிறைவளிக்கும் அர்ப்பணித்தலுக்கான அறைகூவல் (8:1-22; 9:6, 15-10:1, 17-25; 12:1-7, 19-25)

சாமுவேலின் வாழ்வின் பிற்பகுதியில், அவரது அர்ப்பணிப்பும் பின்வாங்கிப் போகாத உறுதிப்பாடும் குறைவுபடாதிருந்தது. இந்த முடிவு ஆண்டுகளின் காலத்தில்தான், ஒருவர் தன் வாழ்வைப் பின்னோக்கிப் பார்ப்பதில் நிறைவடைதல் பற்றிய பாடம் கண்டறியப்படுகின்றது. சிலர் பூமிக்குரிய இருப்பின் ஆண்டுகளைக் கண்ணோக்கி துக்கத்துடன் திரும்பு கின்றனர், ஆனால் சாமுவேலைப் பொறுத்தமட்டில் விஷயம் அவ்வாறு இருந்ததில்லை. சாமுவேலின் வாழ்வு வீணாகச் செலவிடப்பட்டிருந்த தில்லை, மற்றும் அவர் கடந்த காலத்தை நினைவுகூருவதில் ஆறுதல் தரும் நிறைவைக் கண்டறிந்தார்.

முதலாவது, சாமுவேல் தமது வாழ்நாள் முழுவதிலும் தேவனுக்கென்று அர்ப்பணித்திருந்தபடியினால் நிறைவடைந்தார். அவருடைய வாழ்வானது எப்பொழுதுமே நன்மை தீமை ஆகியவற்றிற்கிடையில் உள்ள வித்தியா சத்தை பிறருக்கு காண்பித்திருந்தது (8:1-15). சாமுவேலுக்கு எதிராக, சாத்தியப்பட்ட வகையில் கூறக்கூடிய ஒரே குற்றச்சாட்டு அவரது மகன்களைப் பற்றியதாக மட்டுமே இருக்கின்றது, ஆனால் அதுவும் கூட ஏலியின் மகன்களைக் குறித்துக் கூறப்பட்டது போல் அவ்வளவு மோசமான குற்றச்சாட்டு அல்ல (2:29; 3:13). வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் கூட சாமுவேலைப் பற்றி தக்க வகையில்லாத பெற்றோர்த்துவம் அல்லது அவரது மகன்களின் தவறுகள் பற்றி குற்றம் சாட்ட இயலாது போயிற்று. ஏன்? அவர்களின் செயல்பாடுகளை சாமுவேல் மன்னித்து விட்டுவிடவில்லை (12:2). சிலர், சாமுவேல் தனது மகன்களை பொது ஊழியத்திற்குப் புறம்பாக பிறர் "மத்தியில்" வைத்துவிட்டாரென்று கருத்துத் தெரிவிக்கின்றனர். மூப்பர்கள் வந்த பொழுது, அவர்கள் சாமுவேலின் நேர்மை பற்றி கேள்வி எழுப்பாமல், அவரது அர்ப்பணிப்பை தாராளமாய் ஒத்துக்கொண்டனர். சிலருக்கு, முதிர்வயது என்பது பல ஆண்டுகளாகப் பற்றிப் பிடிக்கப்

பட்டிருந்த மதிப்பீடுகளைத் தணித்துக் கொள்ளும் காலமாக உள்ளது. அது தவறுக்கான விமர்சனத்தை மென்மையாக்கும் காலமாக, மற்றும் தவறுகள் மன்னிக்கப்படும் காலமாக, விசேஷமாக குடும்ப உறுப்பினர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கும் காலமாக உள்ளது. ஆனால் சாமுவேலின் விஷயத்தில் இவ்வாறு இருந்ததில்லை! அவர் உறுதியானவராகவே நிலைத்திருந்தார் (சங். 92:12-15; ஓசியா 12:6; எபி. 10:23).

இரண்டாவது, சாமுவேல் யெகோவாவிற்கான தமது பற்றுறுதி இன்னமும் பெரும் உணர்வுடன் இருந்தபடியினால் நிறைவடைந்தார் (8:6). அரசர் வேண்டும் என்ற இஸ்ரவேலின் வேண்டுகோளானது அவர்கள் தங்களின் புறதெய்வ வழிபாட்டாளர்களான அயலகத்தவர்கள் போலிருக்க உண்மையில் விரும்பியதைக் காட்டிக் கொடுத்து விட்டது. இது சாமுவேலுக்குப் "பிரியமற்றதாக" இருந்தது. இந்த வார்த்தையானது, உணர்வுகளில் புண்பட்ட, கோபமுள்ள மற்றும் எரிச்சல் கொண்ட என்று குறிப்பிடுகின்ற எபிரெய வார்த்தையிலிருந்து வருகின்றது. அந்த வேண்டுகோளை சாமுவேல் கேட்ட பொழுது, அவர் கோபமடைந்தார். அவரது உணர்வுகள் புண்பட்டன. ஆனால் அது, அவர்கள் தன் மகன்கள் மீது குற்றம் சாட்டியதற்காகவோ அல்லது அவர் மிகவும் முதியவராகி விட்டார் என்று கூறியதற்காகவோ ஏற்படவில்லை, ஆனால் இஸ்ரவேலர்கள் தேவனைப் புறக்கணித்து விட்டதாலேயே அவர் (சாமுவேல்) கோபமடைந்தார்! ஒன்று சாமுவேல் 10:17-25 வசனப் பகுதியானது சாமுவேல் உணர்ந்த ஆழமான புண்படுதலை வெளிப்படுத்துகின்றது. மிகப் பெரிய எதிர்ப்புக்கு முன்னிலையில் சாமுவேல் தேவனைக் கனப்படுத்தும்படிக்கு எழுந்து நின்றார். அவர் வயதின் காரணமாக அமைதி காத்து நின்று விடவில்லை அல்லது அவரது வயது அவர் தம் உணர்வுகளை ஊக்கம் குன்றிச் செல்ல அனுமதிக்கவில்லை. அர்ப்பணித்தல் என்பது சர்வ வல்லவருக்காக பற்றுறுதியுடன் போராடும் பொழுது இருப்பதைக் காட்டிலும் வேறு எப்பொழுதும் அதிக வனப்புடன் திகழ்வதில்லை (சங். 71:9; பிலே. 9).

மூன்றாவது, சாமுவேல் தமது வாழ்க்கை வரலாற்றினால் நிறைவடைந்திருந்தார் (9:6). அவரது பெயரானது (எல்லாருடைய மனதிலும்) மதிப்பையும் உறுதிப்பாட்டையும் உதிக்கச் செய்தது. "அவர் தேவனுடைய மனிதர்" என்று அறியப்பட்டிருந்தார். அவர் தமது வாழ்நாளின் பிந்திய காலத்தில் தமக்கு மாபெரும் மகிமையைக் கொண்டுவரும் வகையில் தமது முந்திய ஆண்டுகளில் வாழ்ந்திருந்தார். இங்கு எல்லாரும் விரும்பிப் பிரயாசப்பட வேண்டிய பாராட்டுதல் ஒன்றுள்ளது. நமது பிந்திய ஆண்டுகளில், நாம் உயர்வாக மதிக்கப்படுவோமா? (1 நாளா. 29:28; நீதி. 16:31).

நான்காவது, சாமுவேல் தாம், தயங்கியவர்களை ஊக்கப்படுத்தவும் அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்வதற்குரிய சாத்தியக் கூற்றை உணர்ந்தறிய உதவவும் நாடியிருந்ததால் நிறைவடைந்திருந்தார் (9:20, 21). ஏனெனில், ஒருவேளை, எழுபது ஆண்டுகள் அளவாக, அவர் இஸ்ரவேலை தேவனுக்கு ஊழியம் செய்ய திருப்புவதிலும் தேவனே அவர்களின் அரசர் என்று அவர்களை உணர்ந்தறியச் செய்வதிலும் தம்மையே அர்ப்பணித்திருந்தார். இப்பொழுது அவர் அந்த ஓட்டத்தைக் கைவிட்டு எதிர்த் திசை

யில் செல்ல வேண்டியதாயிற்று! இது அவரது மிகச் சிறந்த நியாயத் தீர்ப்புக்கு எதிரானதாயிருந்தது. அவர் முதிர் வயதுள்ளவரானார் மற்றும் தமது வழிகளில் அமைவு பெற்று விளங்கினார்; எது மிக மிகச் சிறந்த ஒட்ட மென்பதை எவ்வித ஐயமுமின்றி அவர் அறிந்திருந்தார், இருப்பினும் அவர் மாற வேண்டியிருந்தது! (8:22). சாமுவேல், புதிய முடியரசின் ஒப்புக் கொடுத்தல் மிகுந்த திறமை வாய்ந்த மேம்பாட்டாளராகியிருந்தார். அதன் உருவாக்கத்தில் அவர் ஒழுங்கமைப்பு மற்றும் ஆலோசனையளித்தல் ஆகிய வற்றைச் செய்தார். இந்தச் செயல்பாடுதான் சாமுவேலை உண்மை மிகுந்த கதாநாயகராக தனிப்படுத்திக் காண்பித்தது! அவர் சவுலை ஊக்கப்படுத்தி, அவரை வழிநடத்தி, அவருக்கு ஆலோசனை அளித்தார். சவுலை மாபெரும் அரசராக்கியவர் சாமுவேல்தான். நாம் விட்டுக் கொடுத்துவிடும்படி, நமது உரிமையைத் துறந்து விடும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்ற பொழுது வழக்கமாக நடைபெறுவது என்ன? நாம் மாற்றத்திற்கெதிராக உதைத்துப் போராடும்படி சோதிக்கப்படுகின்றோம், மற்றும் நாம் விட்டுக் கொடுத்து விடுவதாயிருந்தால், அதை நாம் முறுமுறுப்போடும், மனவிருப்பமின்றியும் செய்கின்றோம். இது போன்ற சூழ்நிலையை எதிர்கொள்ளும் பொழுது, சாமுவேல் தமது முதிர் வயதில் நிறைவடைந்திருந்ததையும், மாறியதையும் பின்பு தேவனுடைய மக்களுக்கு ஒவ்வொரு வகையிலும் உதவியதையும் நினைவுகூருங்கள்! (1 கொரி. 9:19-23; அப். 10:14). விசுவாசம் நிறைந்த பரிசுத்தவானுடைய எண்ணப்போக்கு இவ்விதமானதாகவே உள்ளது (பிலி. 2:3, 4).

ஐந்தாவது, சாமுவேல் தேவனுக்காகத் தமது வாழ்நாள் முழுவதையும் கழித்தது பற்றி வருத்தங்கள் எதுவும் கொண்டிராதபடியினால் நிறைவடைந்தார். 12:1-7ல் சாமுவேல் தமது வாழ்வை மறுகண்ணோட்ட மிட்டார். அங்கு கூடியிருந்த யாவராலும் அது நன்கு அறியப்பட்டிருந்தது (12:2ஆ). அவரது பணி வாழ்வானது குற்றமற்றதாகவும், தேவனை கனப்படுத்தியதாகவும் இருந்தது. அவர் மாறுபாடான ஏதொன்றையும் செய்ய மாட்டார். தனது வாழ்வை மறு கண்ணோட்டமிட்டு, எவ்வித திருத்துதலும் செய்யத் தேவையில்லை என்று காண்கிற மனிதர் எவ்வளவு பாக்கியவானாக இருக்கின்றார்! கர்த்தருக்கென்று அர்ப்பணித்தல் மற்றும் ஒப்புக்கொடுத்தல் ஆகியவற்றின் ஆசீர்வதிக்கப்பட்ட கனி இப்படிப்பட்ட தாகவே உள்ளது (2 தீமோ. 4:6, 7).

மரணத்தில்: வெகுமதியைப் பெற்ற அர்ப்பணித்தலுக்கான அறைகூவல் (25:1; 28:12-19)

சாமுவேல் தமது மரணத்தின்போது, அவரது மரணம் ஒரு பேரிழப்பு என்று (மக்களால்) கருதப்பட்டது. அவரது வாழ்வானது மாபெரும் செயல்வலிவை ஏற்படுத்தியிருந்தது. "இஸ்ரவேல் எல்லாரும் கூடிவந்து ..." துக்கங்கொண்டாடினர் (25:1; ஆதி. 15:15).

எந்தோர் என்ற இடத்திலிருந்த அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடத்தில் சவுல் சென்ற நிகழ்ச்சியானது (28:12-19) சாமுவேலின் மரணம் குறித்து பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்திற்று: அவர் தமது இளைப் பாறுதலை "மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருந்தார்" (28:15); அவரது நினைவானது பயபக்தியையும் மரியாதையையும் வெளிக் கொண்டு வந்தது (28:15ஆ); மற்றும் சாமுவேல் தமது மரணத்திற்குப் பிறகும் கூட அர்ப்பணித்தலை வலியுறுத்திக் கொண்டிருந்தார் (28:18, 19).

சாமுவேல் செய்தது போல, மரித்தவர்கள் உயிரோடிருப்பவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளுதல் என்பது சாத்தியமற்றதாகியிருந்தாலும், அவர்கள் (மரித்தவர்கள்) சாமுவேலைப் போல வாழ்ந்திருந்தால், அவர் களின் அடைவிடம் குறித்து இன்றும் நாம் உறுதிப்பாட்டை ஆதாயப் படுத்திக் கொள்ள இயலும். இவ்வாழ்வில் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலு டன் வாழ்கின்ற எவரும் இவ்வாழ்வை விட்டுப் பிரிகின்ற வேளையில் இனிமையான இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள் (வெளி. 14:13). விசுவாசமிக்கவர்களின் நினைவானது பயபக்தியையும் மதிப்பையும் வெளிக் கொண்டு வரும் (எபி. 12:1; 13:7). பிரிந்து சென்றுள்ள பரிசுத்த வான்கள் தங்களின் பூமிக்குரிய எடுத்துரைப்புகளின் மூலமாக, நாம் யெகோவா தேவனுக்கு அர்ப்பணிப்புடன் நிலைத்திருக்கும்படி புத்தி கூறுகின்றனர்.

முடிவுரை

சாமுவேலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அவரது வாழ்வு நேசிக்கத் தகுந்ததாக இருந்தது. அவர் ஒரு சிறுவனாயிருந்த பொழுதே, தன்னை ஆர்வத்துடன் தேவனுக்கு ஊழியம் செய்வதற்காக அர்ப்பணித் தார். அவர் வயது வந்தவராயிருக்கையில் சத்தியத்தை உயர்த்திப் பிடிப்பதற் காகவும் தவறை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்காகவும் மற்றும் இஸ்ரவேலை தேவனிடத்தில் திரும்பச் சேர்ப்பதற்காகவும் பின்மாற்ற மில்லாத வகையில் தம்மையே அர்ப்பணித்தார். முதிர் வயதான குடிமகன் என்ற வகையில் அவர் நரை முடியுடன் வயதில் மூப்படைந்த வேளையில் நிறைவடைந்தவராக இருந்தார். பிரிந்து சென்ற பரிசுத்தவான் என்ற வகையில் அவரது அர்ப்பணிப்பானது இளைப்பாறுதல், மதிப்பு மற்றும் ஊக்கமூட்டுதல் என்ற வெகுமதிகளை விளைவித்தது.

சாமுவேலின் அர்ப்பணிப்பானது அவரை, குற்றமற்ற வகையில் தூய்மையாகவும் தனது காலத்தில் வாழ்ந்த பிறரைக்காட்டிலும் மேலான வராகவும் இருக்கும்படிக்குப் பெலன் அளித்தது. இஸ்ரவேலுக்கு அவரது பங்களிப்பானது, இஸ்ரவேலின் ஒழுக்கச் சீர்கேட்டை ஒடுக்குகின்ற பரிசுத்த பண்பாகவும், தாவீது ராஜா மூலமாக வரவிருந்த மேசியாவுக்கு அஸ்திபாரம் இடுவதாகவும் இருந்தது. நீங்கள் உங்கள் வாழ்வின் எந்தக் கால கட்டத்தில் இருந்தாலும், சாமுவேலின் வாழ்வானது, நீங்கள் உங்களைத் தேவனுக்கு அர்ப்பணிக்கும்படி வற்புறுத்துகின்றது (12:24). யெகோவாவிற்கு அர்ப்பணித்தல் என்பது எப்பொழுதும் வெகுமதி அளிக்கப்படுகின்றது

என்பதை, அவர் (தமது) தொட்டிலில் இருந்து மூத்த பரிசுத்தவானின் கல்லறை வரையிலும் நமக்குக் காண்பிக்கின்றார் (ஏசா. 46:3, 4).

யூதர்கள் தங்கள் ஆடுகளில் பத்தில் ஒரு பகுதியை பின்வருமாறு தேர்வு செய்வது அவர்களின் வழக்கமாயிருந்தது. ஆட்டுக்குட்டிகள் அவைகளின் தாய்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஒரே ஒரு குறுகிய வழியை உடைய ஆட்டுப்பட்டிக்குள் அடைக்கப்படும். தாயாடுகள் நுழைவாயிலில் நிறுத்தப் படும். நுழைவாயிலின் அருகில் நிறுத்தப்பட்ட மனிதன் ஒருவன் ஒக்ரேயில் (எண்ணையாக இருக்கலாம்) நனைக்கப்பட்ட கோலொன்றினால் ஒவ்வொரு பத்தாவது ஆட்டையும் தொட்டு அடையாளமிட்டு "இது பரிசுத்தமாய் இருக்கட்டும்" என்று கூறுவான். இந்த உருவகத்தையே எசேக்கியேல் பயன்படுத்தினார்: "கோலின் கீழ்ப்பட்ட ஆடு மாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது" (இ.வ. லேவி. 27:32; எரே. 33:13). அவர்கள் யாவரும் "கோலின் கீழ்ப்பட்டனர்" மற்றும் சாமுவேல் "பரிசுத்தவானாக" இருந்தார் என்பதை யாவரும் அறிந்துணரக் கடவோம்.

ஏலி

சாத்தானின் பிள்ளைகளைக் கொண்டிருந்த தேவமனிதர்

(2:12-4:22)

இஸ்ரவேலில் இருந்த துக்கத்திற்குரிய கேடுபாடொன்று 2:12-4:22ல் வெளிப்படுத்தப்படுகின்றது. நாடானது நடத்துவத்துவம் இல்லாதிருந்தது; சகல துறைகளிலும் வழிகாட்டுதல் குறைவுபட்டிருந்தது; மற்றும் ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே ஒரு பிரமாணமாக இருந்து வந்தான். ஆசாரியர்கள் நடத்துவத்துவத்தை அளித்திருக்க வேண்டும், ஆனால் அவர்களும் கூட நெறி தவறிப் போயிருந்தனர் என்று இவ்வசனப் பகுதியில் நாம் காண்கின்றோம். அன்னாள் தனது இளம் மகன் சாமுவேலை ஒப்புக் கொடுத்தல் என்ற மென்மையான வரலாற்றுப் பகுதியின் மத்தியில், இருள் நிறைந்த குறிப்பொன்று தோற்றம் தருகின்றது: "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" (2:12). இதன் விளைவாக, எல்லாம் கெட்டுப் போயிற்று. பிரச்சனையின் வேரானது ஏலி மற்றும் அவர் தம் இரண்டு மகன்கள் மீது கவனம் கொண்டிருந்தது.

ஏலி சீலோவில் பிரதான ஆசாரியராக இருந்தார். அவர் ஆரோனின் மகன்களில் இளையவரான இத்தாமரின் வம்சத்தில் வந்தவராயிருந்தார். அவர் தமது ஐம்பத்தி எட்டாவது வயதில் இஸ்ரவேலின் மீது நியாயாதிபதியானார், நாற்பது ஆண்டுகள் அளவாக நியாயந்தீர்த்து வந்தார் (4:18). இவரைப் பற்றி வேதாகமத்தில் முதன் முதல் குறிப்பிடப்பட்ட வேளையில் இவருக்கு ஏறக்குறைய எழுபது வயதாகியிருக்க வேண்டும். இவர் தனது முதிர் வயதில் தனக்குப் பிறந்த இரண்டு மகன்களைக் கொண்டிருந்தார், அவர்கள் அப்படிப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அடிக்கடி செய்யப்படுவது போலவே அதிகம் சலுகையுடன் நடத்தப்பட்டார்கள். இவர் அன்னாளைக் கடிந்து கொள்வதில் துரிதமாகவும் கண்டிப்பாகவும் இருந்தார், ஆனால் தனது பிள்ளைகளைக் கடிந்து கொள்வதில் மிகவும் மெதுவானவராகவும் மென்மையானவராகவும் இருந்தார்.

எல்லா நிகழ்ச்சிகளிலும் ஏலி தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ள பக்தியான மனிதர் என்றே மதிக்கப்பட்டிருந்துள்ளார். அவர் உடன்படிக்கைப்

பெட்டியை உயர்வாக மதித்தார். அவர் தம் மகன்களைப் புறக்கணித்து கவனியாமல் விட்டுவிட்டது ஒன்றுதான் அவருடைய தவறாயிருந்தது.

இப்பொழுது நாம் பார்த்துக் கொண்டுள்ள விவரமானது தேவபக்தியுள்ள பெற்றோருக்கு, பிசாசுத்தனமான பிள்ளைகளினால் உண்டான மாபெரும் வேதனையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தேவபக்தியுள்ள பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளையொன்றின் பக்தியின் மையினால் தலை கவிழ்ந்து கல்லறை செல்லும் அளவுக்குக் கூடத் துக்கம் அனுபவிக்கின்றனர். இது ஏலியைப் பொறுத்தமட்டில் உண்மையாயிற்று என்பது நிச்சயம்.

எல்லைகள் தேவைப்படுகின்றன

அது ஏலியின் பெற்றோர்த்துவத்தில் ஒரு குறைபாடாயிருந்தது! ஏலி ஐயத்திற்கிடமின்றி அனுமதிக்கின்ற பெற்றோராயிருந்தார். அவரது மகன்கள் பற்றிய செய்தி அவரை வந்து சேர்ந்த பொழுது, அந்தச் செய்தியைப் பற்றி அவர் கவலையற்றிருந்தார். அவர் தம் பிள்ளைகளைக் கடிந்து கொண்ட போதிலும் பலமான வார்த்தைகளால் அதைச் செய்யவில்லை. நியாயாதிபதி மற்றும் ஆசாரியர் என்ற வகையில் அவரது கடமை தெளிவாயிருந்தது. அவர்கள் உடனடியாகத் தங்களின் பணியிலிருந்து நீக்கப்பட்டு, மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் (லேவி. 18:6, 20, 29; 20:10; 21:6, 7, 17, 23). ஏலி, தனது மகன்களின் பாவங்கள் கடந்த கால மூடுதல்கள் என்பதை அறிந்திருந்தார் (2:22), எனினும் அவர் வெறும் கண்டனத்துடன் திருப்திப்பட்டுக் கொண்டார். அவர் நியாயஞ் செலுத்துகின்ற தனது அதிகாரங்களில் இருந்து விலகி நின்றார். மனிதர்களிடத்தில் அவர்கள் நியாயமற்று நடந்து கொண்டது பற்றி அவர் அமைதி காத்தார், தேவனிடத்தில் மிகவும் சாந்தமுள்ளவராயிருந்தார் என்று அவர் நடக்கை பற்றி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சில பிள்ளைகள் அதிகமான கண்டிப்பினால் சீரழிக்கப்படுகின்றனர் (கொலோ. 3:21), ஆனால் அதை விட அதிகமான பிள்ளைகள் சிறிதளவேயான கண்டிப்பினால் சீரழிக்கப்படுகின்றனர். இரு விஷயங்களில் அனுமதியளித்தலுக்கு எதிராகப் பெற்றோர் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒன்று, ஒழுக்கத்தில் அனுமதியளித்தல் (3:13; 2:25). "கடிந்து கொள்ளுதல்" என்ற வார்த்தை பலவீனப்பட்ட, தாழ்ந்து போன, மற்றும் சக்தியின்மைக்குக் குறைந்து போன நிலையொன்றைக் குறிக்கின்றது. ஏலி தமது மகன்களைப் பலமான நடவடிக்கைகளின் மூலம் ஒழுங்கு படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர் அதைச் செய்யவில்லை. இரண்டாவது, பெற்றோர்த்துவ வழிநடத்துதலில் ஒரு அனுமதித்தல் (2:12, 17) என்பதாக உள்ளது. பெற்றோரின் நடத்துதல் இன்றி விஷயங்களைப் பொறுத்தமட்டில் தங்களுக்குத் தாங்களே முடிவெடுக்கும்படி விட்டுவிடப் படுகின்ற பிள்ளைகள் பொறுப்பற்றவர்களாய் வளருவார்கள்.

சில விஷயங்களில், "நாங்கள் எதில் தவறு செய்தோம்?" என்ற பெற்றோரின் கேள்விக்குப் பதில் தர இயலாது. ஆனால் ஏலியின் சூழ்நிலையில் அதற்குப் பதில் தர இயலும். அனுமதியளித்தல் என்பது அவருடைய

பிள்ளைகளையும் (4:11) அவரையும் (4:18) மற்றும் மற்றவர்களையும் (4:22) சீரழிவிற்கு வழிநடத்திற்று.

அனுமதியளிக்கின்ற பெற்றோர்த்துவமானது திகைப்பூட்டும் நேரெதிர்ச் செயல்களை விளைவிக்கும். ஏலியின் குடும்பத்தைக் கவனியுங் கள். ஆலய நடக்கையில் நம்ப இயலாத நேரெதிர்ச் செயலொன்று அங்கிருந்தது (1:14; 2:13, 14). பலியின் ஒரு பங்கு ஆசாரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று தேவன் நியமித்திருந்தார் (உபா. 12:18). ஏலியின் மகன்கள் பேராசை கொண்டவர்களாக அதிகம் விரும்புகின்ற வர்களாக இருந்தார்கள். ஆராதிப்பவர்களுக்கு உரிமையாக வேண்டிய மாம்சத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள் (லேவி. 8:31; 2 நாளா. 35:13). மக்களிடத்தில் களவு செய்ததுடன் திருப்தியடையாத அவர்கள், தேவனிடத்திலும் களவு செய்யத் தொடங்கினார்கள். தேவனுடைய பலி பீடத்தில் கொழுப்பைத் தகனிக்க வேண்டியதாயிருந்தது (லேவி. 3:5-17; 7:31, 34), ஆனால் (ஏலியின்) மகன்கள் கொழுப்பைத் தகனிக்க மறுத்து விட்டார்கள் (2:17). இவைகள் தேவதூஷணச் செயல்களாயிருந்தன, ஆனால் அவர்கள் இவற்றை நிறுத்திக் கொள்ளாதிருந்தார்கள். அவர்கள் தங்கள் இச்சையானது தங்களை விரட்டும்படிக்கு அனுமதித்து, கூடாரத் தின் வாயிலில் இருந்த பெண்களுடன் ஒழுக்கவீனமானவைகளை நடப்பித் தார்கள் (2:22). ஏலி மாறுபட்டவராயிருந்தார்! அவர் பக்தியுள்ள ஒப்புக் கொடுத்தலின் சித்தரிப்பாயிருந்தார்.

உடன்படிக்கைப் பெட்டியைக் குறித்த அவர்களின் கண்ணோட்டங் களில் நேரெதிர்த் தன்மையிருந்தது (4:3, 4; 4:13, 18அ). ஏலியின் மகன்கள் பேழையை மூட நம்பிக்கை நிறைந்த வகையில் மதித்தார்கள். மதம் என்பது அவர்களைப் பொறுத்தமட்டில் வெளிப்படையான சடங்காச்சாரமாக மட்டும் இருந்து வந்தது. உடன்படிக்கைப் பெட்டி என்பது விந்தையான தாகவும் மந்திர சக்தியுள்ளதாகவும் கருதப்பட்டது. ஏலியைப் பொறுத்த மட்டில் உடன்படிக்கைப் பெட்டியானது பரிசுத்தமானதாகவும் பயபக்திக்கு உரியதாகவும் இருந்து வந்தது. அது யுத்தகளத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதை அவர் மனவிருப்பம் இன்றியே அனுமதித்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால் அவர் வெற்றிகரமான ஒரு மறுப்பை நிலை நிறுத்துவதற்கு அடிக்கடி இணங்கிச் செல்ல வேண்டியிருந்தது. உடன் படிக்கைப் பெட்டியைப் பற்றிய இந்தக் கண்ணோட்டங்கள் ஒவ்வொன்றும் யெகோவாவைப் பற்றிய அவருடைய கருத்தைப் பிரதிபலித்தன.

இவர்கள் ஒவ்வொருவரும் சக மனிதர்களை எவ்வாறு நடத்தினார்கள் என்பதில் நேரெதிர்த் தன்மை இருந்தது. மகன்கள் சுயநலத்தினால் ஆளப்பட்டிருந்தனர். மற்றவர்களைத் தங்களின் சுயநலத்திற்காகப் பயன் படுத்திக் கொள்ளுகையில், ஆபாச நடக்கை, பேராசை மற்றும் தூய்மை யில்லாமை ஆகியவை மகன்களின் குணங்களாயிருந்தன. ஏலியோ பிறரின் மீது பரிதாபம் கொள்பவராக (1:7), மற்றும் பிறருடைய வாழ்வில் நன்மையை விரும்புகின்றவராக (2:20) மட்டுமே குறிக்கப்பட்டார்.

இவர்கள் தேவனைப் புரிந்து கொண்ட வழிமுறையில் நேரெதித்

தன்மையிருந்தது. ஏலியின் மகன்கள் ஆவிக்குரியவர்களாக இருந்ததில்லை மற்றும் அவர்கள் நடைமுறையில் தேவநம்பிக்கையற்றவர்களாயிருந் தார்கள் (2:12). அவர்கள் தேவனுடன் தொடர்பு கொண்டிருந்ததில்லை, அவரைக் குறித்து உணர்ந்ததில்லை, மற்றும் அவருக்குக் கடமைப்பட்ட உணர்வறிவு எதுவும் அவர்களிடம் இல்லை (2:12) ஏலி வித்தியாசப் பட்டவராயிருந்தார்! (3:18; 4:13).

ஏலி தமது மகன்களில் அதிகாரத்துவத்திற்கு மதிப்பளித்தல் என்ற பண்பை நிலைநாட்டத் தவறியதினால் தெளிவான நேரெதிர்த் தன்மை களின் இந்த வரிசையானது நிலவியது. அனுமதித்து விடுகின்ற பெற்றோர்த் துவத்தில் அடிக்கடி இவ்விதமாக துன்பநிலை நிலவுகின்றது.

அனுமதித்தல் என்பதில் இருந்து மிகவும் மோசமான விளைவுகள் எழுகின்றன. முதலாவது, குடும்பத்தின் செல்வாக்கு அழிக்கப்பட்டது (2:22-24). பாவம் என்பது பாவியுடன் முடிந்து விடுவதில்லை. ஒவ்வொரு மனிதரும் மற்ற ஒவ்வொருவருடனும் உறவு படுத்தப்பட்டுள்ளனர்; எல்லாரும் எல்லாரையும் தொடுகின்றோம். ஏலியின் குடும்பத்தினுடைய உயர்மதிப்பானது என்றென்றைக்குமாக மறைந்து போய் விட்டது! குடும்பத்திற்குள்ளாக கலகங்கள் வலுப் பெற்றன (2:25). ஒருமுறை ஏலி தனது மகன்களின் அபாயமான ஓட்டத்தைக் கண்டு அவர்களின் நடவடிக்கைகளை மாற்ற முயற்சி செய்தார், ஆனால் அது அவரைப் பொறுத்தமட்டில் மிகவும் தாமதமான செயல்பாடாயிருந்தது, ஏனெனில் அவருடைய மகன்கள் பொல்லாங்கில் வேரூன்றியவர்களாயிருந்து மாற மறுத்து விட்டார்கள். ஒரு கலகம் காணப்பட்டது. தேவனுக்கான குடும்ப ஒப்புக்கொடுத்தலானது விட்டுக் கொடுக்கப்பட்டது (2:29). வசனம் 2:29ன் வார்த்தைகள் ஏலியிடம் பேசப்படுவது என்பது நம்புதற்கரியதாகக் காணப்படுகின்றது. தேவன் தம்முடைய பலிகளை ஏலி "உதைத்தார்" என்று குற்றஞ் சாட்டினார். "உதைத்தல்" என்ற வார்த்தையானது நுகத்தை ஏற்க மறுத்து வண்டிலின் திருப்பியை வன்முறையாக உதறித் தள்ளுவதைக் குறிக்கின்றது. அது, ஏலி தேவனுடைய கட்டளைகளுக்குக் கட்டுப் பட்டிருக்க விரும்பாதிருந்தார் என்ற குற்றச்சாட்டாக இருந்தது! ஏலி தேவனுடனான பிணைத்தல்களைக் காட்டிலும் தனது மகன்களுடனான பிணைத்தல்களை (விரும்பித்) தேர்ந்து கொண்டிருந்தார். ஏலி, யெகோவாவை விட தனது மகன்களை அதிகமாகக் கனப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டார். இந்த விளைவு சாதாரணமானதாக உள்ளது. பெற்றோர், ஒரு தவறுக்கு சுய பொறுப்பு எதையாகிலும் ஒப்புக் கொள்வதற் குப் பதிலாக தேவனை, சபையை அல்லது பிரசங்கியாரை குற்றப்படுத்து வதென்பது சுலபமாயிருக்கக் காண்கின்றார்கள்.

இரண்டாவது, குடும்பத்தின் வம்சா வழிகள் துக்கத்தை அனுபவித் தார்கள் (2:33; 4:13-17). ஏலியும் அவரது மகன்களும் தங்களைத் தகுதி யற்றவர்கள் என்று நிரூபித்து ஆசாரியத்துவத்தை இழந்தார்கள். அவர்களின் பெயர்கள் எந்த ஒரு வம்ச வரலாற்றிலும் இடம் பெறவில்லை! உடன்படிக்கைப் பெட்டியின் இழப்புடனும் சீலோவில் ஆசரிப்புக் கூடாரத்தின் வீழ்ச்சியுடனும் அவர்கள் என்றென்றைக்குமாக அடையாளப்

படுத்தப்பட்டார்கள். குடும்பத்தின் பாவத்தினிமித்தம் குடும்பத்தின் பெலத்தை முறித்துப் போடுவதாகக் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்தார் (2:31). இந்த வாக்குத்தத்தம் யுத்த களத்தில் (4:11); சீலோவின் வீழ்ச்சியில் (சங். 78:60 முதல்); மற்றும் கடைசியாக நோப் என்ற இடத்தில் (22:18) நிறைவேறியது.

ஒருவர் தேவபக்தியுள்ள மனிதராயிருந்தும் கூட "சாத்தானுடைய பிள்ளைகளை" வளர்க்கக் கூடியவராயிருந்தது எவ்வாறு என்பதற்கான விஷயங்களை நாம் ஏலியின் தெளிவான வரலாற்றிலிருந்து கண்டறிந்துள்ளோம். உடன்படிக்கைப் பெட்டி பிடிக்கப்பட்ட நாளில் ஏலியும் அவருடைய மகன்களும் இறந்து போனார்கள். துன்பகரமான அந்த நாளில் ஏலியின் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்தது, அந்தப் பிள்ளைக்கு "மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று" என்று அர்த்தங் கொள்ளும் பெயர் வைக்கப்பட்டது (4:21). இது ஏலியின் குடும்பத்தினுடைய முடிவுக்குப் பொருத்தமான பெயராக இருந்தது. மகிமையானது அதிக சலுகை காண்பிக்கப்பட்டு வீணாக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஒப்புவிக்கப் பட்டிருந்தது!

கற்றுக் கொண்ட பாடங்கள்

முதலாவது, ஏலியின் தோல்வியானது, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்க்கையில் செய்யக் கூடாதவை எவை என்று வெளிப்படுத்துகின்றது; தேவனுடைய கட்டளைகளை இலகுவாக நினைத்து விடாதீர்கள் (2:27-29அ). உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் உள்ள தவறுகளை மன்னித்து அல்லது நியாயப்படுத்தி (2:29ஆ) அதன் மூலம் அவர்களைத் தேவனுக்கு மேலாகக் கனப்படுத்தி விடாதீர்கள். ஒரு பிள்ளையின் பாவத்திற்குப் பங்காளியாகி விடாதீர்கள் (2:29இ). உங்கள் பிள்ளைகளிடத்தில் நீங்கள் செய்கின்ற செயல்கள் பிறர் மீது மிகப் பெரிய வகையில் செயல்விளைவைக் கொண்டிருக்கும் என்பதால் பெற்றோருக்குரிய உங்கள் கடமைகளை இலகுவானதென்று ஏற்றுக் கொள்ள நினைக்காதீர்கள் (2:30-36).

இரண்டாவது, ஏலியின் பயங்கரமான தோல்வியானது எல்க்கானா மற்றும் அன்னாளின் பெற்றோர்த்துவக் கொள்கைகளைப் பயன்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்துகின்றது: பிள்ளையானவன் கர்த்தரிடமிருந்து வந்துள்ள ஒரு கொடை என்பதையும் அவன் மாபெரும் கடமையொன்றை உங்களுக்குக் கொண்டு வருகின்றான் என்பதையும் உணர்ந்தறியுங்கள். இளமையான மென்மையான இருதயங்களில் ஆவிக்குரிய மதிப்புகளை நடவேண்டிய அவசியத் தேவைகளை உணர்ந்தறியுங்கள். உங்கள் பிள்ளையை மேம்படுத்தும் இலக்கில் முயற்சிப்பதின் அவசியத்தை தேவனுக்காக விந்தை நிறைந்த செல்வாக்கு என்று உணர்ந்தறியுங்கள். உங்கள் பிள்ளை "வாழ்கின்ற நாட்களில் எல்லாம்" அவனுக்கு அறிவுறுத்த வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தறியுங்கள். பெற்றோர்கள் தாங்கள் அறிந்தவற்றை மட்டுமே போதிக்க இயலும், தாங்கள் கொண்டுள்ள எண்ணப்போக்குகளை மட்டுமே செயல்விளக்கப்படுத்த இயலும், மற்றும்

தேவன் மீது தாங்கள் சுயமாக எந்த அளவிற்கு பயபக்தி செலுத்து கிறார்களோ அந்த அளவிற்கே பிள்ளைகளுக்குள் தேவனிடத்திலான மதிப்பை ஊன்றக் கட்ட இயலும் என்பவற்றை உணர்ந்தறியுங்கள்.

முடிவுரை

பெற்றோர்த்துவம் என்பது "நொறுங்கக் கூடிய" பணியாக உள்ளது. பிள்ளைகள் தேவனுடைய வழிகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டு மென்றால், இதற்கு பூமிக்குரியதல்லாத ஞானம் தேவைப்படுகின்றது. பெற்றோர்கள் தவறு செய்வார்கள் என்பது நிச்சயமே, ஆனால் தேவனுக்குப் பயந்தவர்களாகவும் தங்களுடைய பிள்ளைகளுக்குள் தேவனுக்கான ஒப்புக் கொடுத்தலை ஊன்றக் கட்டுகிறவர்களாகவும் இருக்கின்ற பெற்றோர் மிக மிக சில தவறுகளை மட்டுமே செய்வார்கள்!

ஏலி, தனது பிள்ளைகளுடைய புலம்பல்களுடனும் கெஞ்சுதல் களுடனும் "சம்மதித்து போவது" என்பது சுலபமான வேலையல்ல என்பதை உணர்ந்தறியத் தவறி விட்டார். அவர் தமது பிள்ளைகளைத் தேவனுடைய அதிகாரத்துவம் என்ற நுகத்தின் கீழிருக்கும்படி முறித்துப் போடாதபடி யினால் உடைந்து போன இருதயத்துடன் இறந்து போனார்! (3:13).

படுத்தின!" என்றே கூறினார் (இ.வ. 15:19-21; மீகா. 2:2).

சுயநலம்தான் சவுல் அமலேக்கியர்களின் உயிரைத் தப்புவிக்கும்படி செய்தது (15:9). பேராசை வரைந்த கோடானது அவர் தமக்கென்று மிகச் சிறந்தவற்றை வைத்துக் கொள்ளச் செய்தது (15:19). ஒரு அமலேக்கியனின் பட்டயத்தினாலேயே சவுல் கில்போவா மலையில் அழிந்து போனார்! சுயநலமானது எப்பொழுதுமே நஷ்டத்திற்கே காரணமாகின்றது (மத். 16:26; ஆகாய் 1:5, 6).

தொடக்க நாட்களில் சவுல் சுயநலத்தைக் கட்டுப்படுத்தியிருந்தார். இருப்பினும், அந்தக் கட்டுப்பாடு மிக மெதுவாகக் குறைந்து கொண்டே வந்து, கடைசியில், காணாமற் போய் விட்டது. பின்பு அவர் துன்பத்தை அனுபவித்தார்! (15:19அ; நீதி. 16:18).

சவுலின் வரலாறு:
குறிப்பிடத்தக்க பாடங்கள்

கர்த்தருடைய சித்தத்திற்குக் "காத்திருத்தல்" என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? விஷயங்களை ஒருக்காலும் உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

விசுவாச விலக்கம் கொண்ட பெற்றோரின் செல்வாக்கு எவ்வளவு கவலைக்குரியதாகவும் தொலைவில் சென்றடையக் கூடியதாகவும் உள்ளது (31:2; 2 சாமு. 21:1-10). சவுலின் செயல்களினால் இவரது முழுக் குடும்பமும் துன்பம் அடைந்தது!

தேவனிடமிருந்து விசுவாச விலக்கம் அடைந்து செல்லுதலில் எப்பொழுதும் இருக்கின்ற உண்மை நிலை எவ்வளவு பயம் நிறைந்ததாக உள்ளது (17:11; 18:12; 28:16). நம் எல்லாருக்கும் பொதுவான சோதனைகள், மிகவும் கவர்ந்திழுக்கக் கூடிய சோதனைகள் உள்ளன, ஆயினும் நாம் அவற்றுக்கு இணங்கி விடக் கூடாது. உள்ளான மனிதன் தினந்தோறும் சிலுவையில் அறையப்பட வேண்டும்.

விசுவாச விலக்கம் அடைகின்ற விசுவாசியின் இருதயம் எவ்வளவு உணர்வற்றதாய்ப் போகக்கூடும் (24:17), போலி நடிப்புத்தனமான மனந்திரும்புதல் சாத்தியமாயிருக்கலாம், ஆனால் அது பொல்லாத இருதயத்தை பாவத்திற்குள் ஆழ்ந்து போகவே வழிநடத்தும்!

சுயநலத்துடன் இருப்பதற்கு எவ்வளவாக சோதிக்கப்படுகின்றோம், ஆனால் சுயநலத்துடன் இருப்பதென்பது எவ்வளவாய் அழிவுக்குரியதாக உள்ளது (1 கொரி. 10:24; 2 கொரி. 5:15அ; நீதி. 1:19; 15:27).

நாம் எல்லா "அமலேக்கியர்களையும்" நம்மை விட்டு அகற்ற வேண்டும்! நாம் இதைச் செய்யத் தவறி விட்டால், பிந்திய ஆண்டுகளில் அவர்கள் நம்மீது பாய்ந்து நம்மை அழித்து விடுவார்கள்! கொலோசெயர் 3:8-9 வசனங்கள் நம்மைப் பின்வருமாறு எச்சரிக்கின்றன:

> *... இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய*

யோனத்தான்
விந்தையான பற்றுறுதிகள்

சிசிலியில் இருந்த முதியவரான ஸ்கிப்பியோ என்பவர் எந்த நம்பிக்கையில் தமது கடற்படையை கார்த்தேஜுக்கு எதிராகக் கடந்து செலுத்த யூகித்தார் என்று யாரோ ஒருவர் கேட்டார். கேட்டவரிடம் இவர், ஆயுதம் தாங்கிய ஒழுங்கமைவு கொண்ட முன்னூறு மனிதர்களைக் காண்பித்து, கடற்கரையில் இருந்த உயர்ந்த கோபுரம் ஒன்றைச் சுட்டிக் காட்டி, "அந்தக் கோபுரத்தின் மீதேறி தலைகீழாக விழு என்று நான் கட்டளையிட்டால், அதை நிறைவேற்றாதவர்கள் இந்தக் குழுவில் இல்லை" என்று கூறினார். ஸ்கிப்பியோ விரோதிகளின் முகாமிற்குள் சென்று, இறங்கி, அதைத் தீக்கிரையாக்கினார். கார்த்தேஜியர்கள் தங்கள் கப்பல்களை ஒப்புக் கொடுக்கவும், யானைகளையும் பெரும் பணத்தையும் அளிக்கவும் முன் வந்தார்கள். அவருடைய படையணியின் தனிச்சிறந்த, கேள்வியெழுப்பாத பற்றுறுதியே அவருக்கு இந்த வெற்றியைப் பெற்றுத் தந்தது.

இந்த வரலாற்றில், யோனத்தானின் வாழ்வில் *பற்றுறுதி* என்பது மிகவும் இன்றியமையாத காரணியாக உள்ளது. இந்த மனிதர் 1 சாமுவேல் புத்தகத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க பாத்திரங்களில் ஒருவராக இருக்கின்றார். இவர் சவுலின் மூத்த மகனாக ஒரு இளவரசராக இருந்தார். யோனத்தானில் ஒருவர் – பயமற்ற படைவீரர், தனது படையணியிடமிருந்து வெட்கக் கேடற்ற கடமையைப் பெற்ற படைத்தளபதி, மனித அன்பின் மிக உயர்ந்த பண்புகளைக் காட்சிப்படுத்தக் கூடிய ஒரு நண்பர், தேவன் மேல் மாபெரும் விசுவாசம் கொண்டிருந்த ஒரு விசுவாசி என்பவை போன்ற – மாண்புமிக்க பண்புகளைக் காண்கின்றார். யோனத்தான் உண்மை பேசும் மனிதராக, தூய்மையான வாழ்வை வாழ்ந்தவராக, மற்றும் தான் கவனித்த எல்லாத் தவறுகளையும் திருத்த முயற்சி செய்தவராக இருந்தார். இவரது மிக உன்னதமான பண்பானது இவரின் தந்தையினுடைய குணத்திற்கு நேரெதிரானதாக உள்ளது.

இவருடைய பற்றுறுதி

பற்றுறுதியைக் கட்டி வைத்த தேவனுடைய கட்டளைகளை (யாத். 22:28; எண். 27:20; உபா. 7:9; நீதி. 24:21; முதலியவைகளை) யோனத்தான் நன்கு அறிந்திருந்தார். இந்த விஷயத்தில் இவர் தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றுவதில் எச்சரிக்கையாய் இருந்தார். இவரது பற்றுறுதி உச்சரிக்கப் பட்ட மூன்று பகுதிகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

தேவனுக்குப் பற்றுறுதி (14:45)

யோனத்தானைப் பற்றிய முதல் வசனக் குறிப்பில், இவர் தேவனைப் பற்றி நன்கு அறிந்தவராகவும், சர்வ வல்லவர் மீது நம்பிக்கையுள்ள விசுவாசம் கொண்டிருப்பவராகவும் பேசுவதைக் காண்கின்றோம். ஒன்று சாமுவேல் 14:6ம் வசனம், "யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்திற்குப் போவோம் வா; ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம் பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும், இரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றான்" என்று கூறுகின்றது. தேவன் மீது யோனத்தான் கொண்டிருந்த நம்பிக்கை அசைக்க முடியாததாக இருந்தது (14:12ஆ).

தேவன் மீதான இந்தப் பற்றுறுதியானது 1 சாமுவேல் புத்தகத்தில் பல வசனப் பகுதிகளில் செயல்விளக்கப்படுத்தப் படுகின்றது. காத் என்ற இடத்திலிருந்து வந்த இராட்சதனைத் தாவீது கொன்றதை யோனத் தானும் சவுலும் காண்கையில், யோனத்தான் தேவனுடைய கரத்தை அங்கு கண்டார் (19:5). சவுலின் பொறாமையினால் யோனத்தானும் தாவீதும் பிரியப் போன வேளையில், இவர் தேவன் தங்களோடிருப்பதை அறிந்தவராய் தமது கவலையில் ஆறுதலைக் கண்டறிந்தார் (20:42). அந்த இரு நண்பர்களும் கடைசி முறையாகச் சந்தித்துக் கொண்ட பொழுது, யோனத்தான் தேவன்மீது கொண்டிருந்த நம்பிக்கையே அங்கு பிரதான மாயிருந்தது (23:16). யோனத்தானின் விசுவாசம் தாவீதுக்குப் பெலன் அளித்தது.

இந்த உண்மைகள் யாவும் ஒன்றிணைந்து, யோனத்தானை கட்டுறுதி வாய்ந்த விசுவாசியாக முன்னிறுத்துகின்றது. தேவன் மீது கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக இவரால் பூமிக்குரிய போராட்டம், துக்கம் மற்றும் சோர்வு ஆகியவற்றிற்கு மேலாக எழும்பி நிற்க முடிந்தது! தேவனு டைய நோக்கம் மற்றும் திட்டம் ஆகியவற்றில் ஒரு கருவியாயிருக்க வேண்டும் என்பதே யோனத்தானின் முழு நம்பிக்கையாயிருந்தது. யோனத்தான் தம்மில் சிறிதளவே விசுவாசமும், ஆனால் தேவனிடத்தில் வியத்தகு விசுவாசமும் கொண்டவராயிருந்தார். யோனத்தான் தேவனு டைய பெலத்திற்காக வேண்டிக் கொண்டபடியினால் வெற்றியடைந்தார் (இ.வ. மாற். 11:24).

தேவனிடத்தில் யோனத்தான் கொண்டிருந்த பற்றுறுதியைக் குறித்து பின்வருவதைக் காட்டிலும் சிறந்த விளக்கம் வேறெதுவும் இருப்பதில்லை: "தேவன் துணை நிற்க அவன் (இன்று) காரியத்தை நடப்பித்தான்" (14:45ஆ).

ஒரு நண்பன் என்ற வகையில் பற்றுறுதி (18:1)

யோனத்தானும் தாவீதும், உறுதியான மற்றும் ஒப்புக்கொடுத்தல் கொண்ட நட்புறவைப் பகிர்ந்து கொண்டார்கள் (18:3, 4). நட்புறவின் இந்த உடன்படிக்கை ஒருவருக்கொருவர் மற்றவருக்கு உடைகளைக் கொடுத்துக் கொள்வதின் மூலம் முத்திரையிடப்பட்டது. இவ்விதமாக இது ஒருவருக் கொருவர் கொண்டுள்ள ஒருமைப்பாடாகச் சித்தரிக்கப்பட்டது.

யாரேனும் ஒருவர் யோனத்தானுடன் சண்டையிடுவாரேயானால் அவர் உண்மையில் தாவீதுடன் சண்டையிடுபவராகவே இருந்தார்; யாரேனும் ஒருவர் தாவீதுடன் சண்டையிடுவாரேயானால் அவர் உண்மையில் யோனத்தானுடன் சண்டையிடுபவராகவே இருந்தார். இந்த உடன் படிக்கையானது இரு நண்பர்களுக்கிடையில் சாத்தியமாகக் கூடிய மிக உயர்ந்த பிணைப்பாயிருந்தது.

யோனத்தான், தாம் ஒருக்காலும் அரசராக அமரப் போவதில்லை என்பதை அறிந்திருந்தார் (23:17), ஆனால் அவரிடத்தில் பொறாமையின் இலேசான சாயல் கூட இல்லை. தாவீதின் மீதான அவரது பற்றுறுதியானது, அவரது நண்பனுக்கு மிகச் சிறந்தவற்றையே நாடும்படி செய்தது. இவ்விதமாக யோனத்தான், உண்மையான நட்புறவு என்பது தியாகம் நிறைந்த ஒழுக்க நெறியே ஆகும் என்று நமக்கு காண்பிக்கின்றார்.

யோனத்தானின் நட்புறவானது உண்மையான நட்புறவின் பின்வரும் கூறுகளை உள்ளடக்கியிருந்தது: "பிரியம்" (19:2); "ஒப்புக் கொடுத்தல்"; நேர்மை (20:9); உறுதிப்பட்ட பாசம் (20:42; 2 சாமு. 1:26); உற்சாகப் படுத்துதல்கள் மற்றும் பெலப்படுத்துதல் (23:16).

நீங்கள் சங்கீதம் 133ஐ வாசிக்கையில் யோனத்தான் மற்றும் தாவீது ஆகியோரால் பகிர்ந்து கொள்ளப்பட்ட அழகுமிக்க நட்புறவு உங்கள் நினைவிற்கு வரும். நட்புறவின் இந்தப் பிணைப்பானது பின்வரும் வரலாற்று நிகழ்ச்சியினால் விவரிக்கப்படுகின்றது. கிரேக்க வரலாற்றில் எபாமினோன்டஸ் மற்றும் பெலோப்பிடாஸ் ஆகியோருக்கிடையில் இருந்த நட்புறவு விரித்துரைக்கப்படுகின்றது. மண்ட்டினியா என்ற இடத்தில் நடந்த போரில் இவர்கள் இருவரும் தங்களின் கேடயங்களைப் பிணைத்துக் கொண்டு போரிட்டார்கள், அப்பொழுது பெலோப்பிடாஸ் பல காயங்களினால் இரத்தம் சிந்தி கீழே விழும் வரைக்கும் அவ்விருவரும் எல்லா எதிரிகளையும் துரத்திக் கொண்டிருந்தார்கள். எபாமினோன்டஸ், இறந்து போனதாகத் தான் கருதிய தனது நண்பனின் உடலை விட்டுச் செல்வதற்கு மாறாக, தான் இறந்து போவதென்று தீர்மானித்தான். இவனும் மிக மோசமாகக் காயம்பட்டு, இருவரையும் மீட்டுச் செல்வதற்கு மீட்புக் குழுவினர் வரும் வரையிலும் தொடர்ந்து போரிட்டு உயிரோடிருந் தான், இவ்விருவருமே காக்கப்பட்டார்கள். அந்த நாள் முதல் இவர்களின் நட்புறவு பழமொழிக் கூற்றானது. இவர்கள் தெபீயன் படையில் சமமான அந்தஸ்தும் அதிகாரமும் கொண்ட பதவிகளில் படைத்தளபதிகளாக ஏற்படுத்தப்பட்டார்கள், இவ்விருவரும் உயிருடன் வாழ்ந்திருந்த காலத்தில் இவர்களுக்கிடையில் எந்தப் போட்டியும், அல்லது பொறாமையும் ஒருக்காலும் இருந்ததில்லை. (இ.வ. நீதி. 17:17அ; 18:24ஆ).

மகன் என்ற வகையில் பற்றுறுதி (2 சாமுவேல் 1:23)

பற்றுறுதியின் இந்த வட்டாரம்தான் யோனத்தானை கற்பனை செய்ய இயலாத போராட்டங்களுக்கு வழிநடத்திச் சென்றது. இஸ்ரவேலின் அடுத்த அரசராக தேவன் தாவீதை அபிஷேகம் செய்திருந்தார் என்று இவர் (யோனத்தான்) அறிந்திருந்தார். இவ்விதமாக, இவர் தேவன் மீது

கொண்டிருந்த பற்றுறுதி இவரைத் தாவீதிற்கு ஆதரவு தெரிவிக்கும்படி அழைத்தது (23:17). தாவீதுடனான இவரது நட்புறவு இவரை சவுலின் பொல்லாத திட்டங்களுக்கு ஒத்துழைப்பதற்குப் பதிலாக நம்பிக்கைக்கு உரியவராக நிலைத்திருக்கும்படி அழைத்தது (20:9, 12; 23:17). ஆனால் இவர் தம் தந்தையிடம் கொண்டிருந்த பற்றுறுதி இவரை சவுலுக்கு ஆதரவு அளிக்கும்படி வற்புறுத்தியது! இவரது இளம் இருதயமானது இந்த போராட்டங்களை நிறுத்துப் பார்த்து முடிவெடுக்க வேண்டியதாயிருந்தது. இவர் "முட்டைக் கூடுகளின் மீது நடந்து செல்ல" வேண்டியதாயிற்று. அல்லது இவர் வியக்கத்தக்க "விந்தை வேலை" செய்ய வேண்டியதாயிற்று என்று நீங்கள் கூறலாம்.

யோனத்தான் சவுலுடன் இருந்தார். இவர் தமது தந்தைக்கு ஒப்புக் கொடுத்தலுடன் இருந்தார், ஆயினும் தேவனுக்கும் தாவீதுக்குமான தமது பற்றுறுதியை இன்னமும் பராமரித்து வந்தார் (23:16, 17). சவுலின் தொடக்க ஆண்டுகளில் யோனத்தான் தமது தந்தைக்குப் பற்றுறுதியுடன் இருத்தல் என்பது இவருக்கு மிகவும் கடினமாயிருந்ததில்லை. சவுல் தேவனுடன் ஒன்றிணைந்திருந்தார் என்று யோனத்தான் அறிந்தார். ஆனால் சவுலின் கலகம் வந்தது, தேவன் அந்த முடியரசரிடமிருந்து விலகிச் சென்றார், அசுத்த ஆவிகள் அவரை ஆண்டு கொண்டிருந்தன. சவுலின் மாபெரும் மனவெடிப்புக்களின் போது யோனத்தான் தமது தந்தையுடன் இருந்தார். அவர் பொல்லாங்கை விட்டுவிடக் கூடும் என்று இவர் நினைத்திருக்கலாம். இவரது தெரிவு கடுமையான சோதனைகளைக் கொண்டு வந்தது, ஆனால் யோனத்தான் தாம் தேர்ந்து கொண்ட ஓட்டத்தில் இருந்து ஒருக்காலும் பின்மாற்றம் அடையாதிருந்தார் (20:30-33).

சவுல் கில்போவா மலையை நோக்கி அணிவகுத்துச் சென்ற பொழுது, யோனத்தான் அவருடன் இருந்தார். அந்த மலையின் மீது தந்தையும் மகனும் ஒன்றாக இறந்து போனார்கள்.

பிள்ளைகள் பெற்றோரிடம் பற்றுறுதியாய் இருக்க வேண்டும் என்பது தேவனால் தெளிவாகக் கட்டளையிடப்பட்டுள்ளது (லேவி. 20:9; யாத். 20:12; முதலியன). யோனத்தானைப் பின்பற்றி, தங்கள் பெற்றோருக்குப் பற்றுறுதியாய் நடந்து கொள்கின்ற பிள்ளைகள் யாவரும் ஆசீர்வதிக்கப் படுவார்கள். தேவனுக்கும் பெற்றோருக்கும் நாம் காண்பிக்க வேண்டிய பற்றுறுதிகளில் போராட்டங்கள் எழும் பொழுது, அல்லது அவையிரண்டும் முரண்படும் பொழுது, வேதனைகள் எவ்வளவு வந்தாலும் ஒருவர், பெற்றோருக்கு மேலாக தேவனைத் தேர்ந்து கொள்ள வேண்டும்! (மத். 10:34-39).

பற்றுறுதியின் பாடங்கள்

தேவனுக்கான பற்றுறுதி மிகவும் முக்கியமானதாக உள்ளது. தேவனுக்கான பற்றுறுதி நமது இருதயங்களில் பதிக்கப்பட்டு என்ன விலை கொடுத்தும் நமது வாழ்வு முறைகளில் பராமரிக்கப்பட வேண்டும்! ஜான் ஆட்லி என்பவரிடம் பிஷப் போன்னெர் அவர்கள், தூணில் கட்டி வைத்து

எரிக்கப்படுதலுடன் தொடர்புடைய வேதனைகள் பற்றிக் கூறிய பொழுது, அவரது கருத்தை மாற்றும் எண்ணத்துடன் ஆட்லி அவர்கள், "எனக்கு மட்டும் என் தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கையைப் போல் உயிர்கள் இருக்குமென்றால், நான் கிறிஸ்துவை இழக்கும் முன்பாக, அவற்றையெல்லாம் அக்கினியில் இழக்கத் தயாராயிருப்பேன்" என்று பதில் கூறினார். (இ.வ. சங். 18:1; 91:14; யாத். 22:28.) தேவனுக்கான பற்றுறுதியானது, (அமெரிக்க) உள்நாட்டு யுத்தத்தின் போது இருந்த பறையடிக்கும் இளம் பையன் ஒருவனால் நன்கு விவரிக்கப்படுகின்றது. குளிர்கால முகாமில் அவர்கள் சகித்துக்கொண்ட குளிர், இரக்கமின்றி கடிக்கும் காற்று, பசி மற்றும் பல சிரமங்கள் எல்லாவற்றையும் குறித்து அவன் தனது வீட்டாருக்குக் கடிதம் எழுதினான். கடிதத்தின் இறுதியில் அவன் பின்வருமாறு எழுதி முடித்தான்: "ஆனால் அம்மா, இது எங்கள் கடமையாக உள்ளது, எங்கள் கடமைக்காக நாங்கள் இறக்க (வும்) தயாராயிருக் கின்றோம்." இப்படிப்பட்ட பற்றுறுதியானது தேவனுடனான நமது உறவுமுறைகளில் மெய்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

குடும்பம் அல்லது நண்பர்களுக்கான பற்றுறுதியானது தவறை ஒருக்காலும் மன்னித்து விட்டு விடுவதில்லை. அதை எப்பொழுதும் எதிர்த்து நிற்கின்றது! யோனத்தான் சவுல் மீது அன்புகூர்ந்தார் மற்றும் அவர் மீது இவர் கேள்வி கேட்க இயலாத பற்றுறுதி கொண்டிருந்தார், ஆனால் அந்த அன்பு இவரை அமைதியாயிருக்கும்படி செய்ய அனுமதிக்கக் கூடாதிருந் தார். இவர் நியாயம், நீதி மற்றும் சத்தியம் ஆகியவற்றைப் பேச வேண்டி யிருந்தது (19:1-6; 20:30-33). நமது வாழ்வில், நமது குடும்பத்தவர்களோ அல்லது நண்பர்களோ தவறு செய்து, திருத்துதல்கள் தேவைப்படுகையில் நாம் அமைதியாய் இருத்தல் என்பது மிகவும் சுலபமானதாகும். நாம், "எதையாவது சொல்லுமளவுக்கு நான் மிகவும் நெருங்கியவனா யிருக்கிறேனே" என்று கூறுகின்றோம். இப்படிப்பட்ட எண்ணப் போக்கானது சரியானதல்ல! (நீதி. 27:6, 9, 17; கலா. 4:16).

ஒப்புக்கொடுத்தல் உள்ள ஒரு நண்பரின் மரணத்தின் போது அவர் கொண்டிருந்த பற்றுறுதி ஆழமான மற்றும் மிகப் பிரியமான வகையில் நினைவுகூரப்படும். 2 சாமுவேல் 1:19-27 வசனங்களில் யோனத்தான் பற்றிய நினைவுகள் கிளர்ந்தெழுப்பப்படுகின்றன.

> "இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று; பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள். பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள். கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன் தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப் பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே. கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிணத்தை

உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை; சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை. உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந் தார்கள்; மரணத்திலும் பிரிந்து போனதில்லை; கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுமுள்ளவர் களாயிருந்தார்கள். இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள். போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப் படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது. பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே; யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே."

யோனத்தானின் நட்புறவினுடைய நினைவுகள் தாவீதுக்கு எப்பொழுதும் இன்பம் மிக்கவையாக இருந்தன (2 சாமு. 1:26, 27அ).

பற்றுறுதியானது வரவிருக்கும் தலைமுறைகளில் கனி தருகின்றது. 20:42ன் வார்த்தைகள் 2 சாமுவேல் 9:1-13 மற்றும் 2 சாமுவேல் 21:1-7 ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்டன. யோனத்தானின் பற்றுறுதியானது ஆசீர்வாதங்களின் மரபுரிமையை விட்டுச் சென்றது. சவுலின் கலகத் திலிருந்து விளைந்த குடும்பப் பேரழிவும் தெளிவற்ற நிலையும் யோனத் தானின் பற்றுறுதியினால் குறிப்பிடத் தக்க நிலைக்கு உயர்த்தப்பட்டன.

முடிவுரை

யோனத்தான் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளின் சேனையொன்றை நபர்த்துவப் படுத்துகின்றார். ஆனால் இவரது ஒழுக்க நெறிகளில் பற்றுறுதியே முன்னணியில் உள்ளது. இவர் கில்போவாவின் கசப்பான யுத்த களத்தில் மடிந்தார், ஆனால் இவர் பெலிஸ்தரிடத்தில் அடைந்த தோல்வி யினால் அழிக்க இயலாத மாபெரும் வெற்றியொன்றை இவர் வென்றிருந்தார். பொல்லாத விருப்பங்களின் மீது, கோபம் மற்றும் பொறாமையினால் இச்சையானது அழிக்கக் கூடாததாயிருந்த வெற்றியை யோனத்தான் பெற்றிருந்தார். இவரது மிக மேன்மையான வெற்றியானது, பற்றுறுதி என்ற ஒரே வார்த்தையினால் தொகுத்துரைக்கப்படுகின்றது!

தேவனுக்கான உங்கள் பற்றுறுதியானது கட்டுப்பாட்டில் உள்ளதா? உங்கள் நண்பர்களுக்கான உங்கள் பற்றுறுதியானது ஊழியத்தில் ஈடுபட்டுள்ளதா? உங்கள் குடும்பத்திற்கான உங்கள் பற்றுறுதியானது அக்கறை கொள்வதாயுள்ளதா?

தாவீது
தேவ பக்தியுள்ள இருதயத்திற்குள் ஒரு சிறு கண்ணோட்டம்

"புகழ்" மற்றும் "செல்வம்" என்பவைகளே அழியக் கூடியவ (மனித) ர்கள் நாடுகின்ற மாபெரும் இரு விஷயங்களாய் உள்ளன. வரலாற்றின் பக்கங்களில் விரைந்தழியக் கூடிய அங்கீகாரத்தைப் பற்றிப் பிடிப்பதற் கென்று வீணான முயற்சியில் பலரது வாழ்வுகள் கவனமின்றி கழிந்து போயின.

மகா அலெக்சாண்டர், டயோஜெனஸின் பதில்களினால் ஈர்க்கப்பட்டு, அவர் கேட்பது எதுவாயிருப்பினும் தருவதாகக் கூறினார். அந்தத் தத்துவ வாதி, அழியாமையின் மிக குறைந்த பங்கை (தருமாறு) வேண்டினார். "அது எனது கொடையாக இருப்பதில்லை" என்று அலெக்சாண்டர் கூறினார். அதற்கு டயோஜெனஸ், "அப்படியென்றால், அலெக்சாண்டர் இந்த உலகினை ஒரு கணம் கூட மகிழ்வுடன் அனுபவிக்க இயலாதிருக்கையில், இதை வெற்றிக் கொள்வதற்கு இவ்வளவு துன்பங்களை மேற்கொள்வது ஏன்?" என்று கேட்டார். மகா அலெக்சாண்டர் (தாம்) நினைவுகூரப்பட வேண்டும் என்று விரும்பினார்; அவர் அழியாத புகழை மகிழ்வுடன் அனு பவிக்க விரும்பினார். அந்த விருப்பத்தை இந்நாட்களில் பலர் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

ஈசாயின் மகனான தாவீது நித்தியமான புகழை மகிழ்வுடன் அனு பவிப்பவராயிருக்கின்றார். இவரது புகழ், உலகத்தினால் வளமாய்ப் பேணப்படும் பல பண்புகளின் மீது சுலபமாய் அமைந்திருக்க முடிந்திருந்தது (16:18). இருப்பினும் ஒரு பண்பானது தாவீதுக்கு புகழ்ச்சியையும் செல்வத்தையும் உத்தரவாதப்படுத்தியது. தாவீது தேவபக்தியுள்ள இருதயத்தைக் கொண்டிருந்தபடியினால் நித்தியமான புகழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கின்றார்! 1 சாமுவேல் 13:14 வசனம், தாவீது "கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராயிருந்தார்" என்று கூறுகின்றது.

ஆடு மேய்க்கும் சிறு பையனாயிருந்த தாவீதை, தேர்ந்து கொள்ளப் பட்டவர்களின் குழுவில் கொண்டு போய் வைத்த அவரது தேவ பக்தியுள்ள இருதயத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். 13:14ன் வார்த்தைகள், தாவீது

இன்னும் ஒரு சிறு பையனாயிருக்கும் பொழுதே கூறப்பட்டன. இவர் தமது இருபத்தி மூன்று மற்றும் முப்பதாம் வயதுகளுக்கிடையில் ஆளுகை செய்தலைத் தொடங்கினார்; ஆகையால் இந்தக் கூற்றானது சவுலின் ஆட்சி ஒழிந்து போவதற்கு, பத்திலிருந்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டிருக்க வேண்டும். இந்த வார்த்தைகள் இவ்விடத்திலும் அப். 13:22 வசனத்திலும் மாத்திரம் காணப்படுகின்றன. சாமுவேலினால் பேசப்பட்ட இந்த வார்த்தைகள் சவுலின் குணத்துடன் (தாவீதின் பண்பு) கொண்டிருக்கக் கூடிய நேரெதிர் இயல்பை முன்னிறுத்துகின்றன. தாவீது பரிபூரணமற்றவராக இருந்தாலும், அதிலும் வயது வந்த ஆண்டுகளின் பிற்பகுதியில் அவர் அவ்விதமாயிருந்தாலும், இவர் அப்பொழுதும் தேவனை நாடிய ஒரு எண்ணப்போக்கைக் கொண்டிருந்தார். இந்த "இருதயம்" தான் நம் கவனத்தைக் கவருகின்றது. இது விலை மதிப்பேறிய பண்பு என்ற வைரங்களைக் கொண்டுள்ளது.

தேவபக்தியுள்ள இருதயத்தின் மதிப்பு

ஒடுக்கப்பட்டவர்களைக் குறித்துத் தாவீது அக்கறையாயிருந்தார் (23:5). சவுலின் பொறாமை, தேடப்படுபவராக வாழும்படி தாவீதைத் துரத்திற்று. அவ்வாறு "ஓடிக் கொண்டிருக்கையில்" தாவீது ஒரு படையை ஒன்றுகூட்டினார் மற்றும் தாமே சுயாதீனமாக நியாயத்தை அமுல் படுத்துபவரானார். 1 சாமுவேல் 23ல் இவர் இஸ்ரவேலின் எல்லைப்புற நகரொன்று பெலிஸ்தர்களால் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டார். தாவீதை சவுல் உக்கிரமாகத் தேடிக் கொண்டிருந்தாலும், இவர் தம் ஆர்வங்கள் அந்த மக்களுக்கு உதவியளிக்கும்படி இவரை கட்டாயப்படுத்தின.

இது ஒரு உயர்வான செயலாயிருந்தது. தாவீது மற்ற பல மனிதர்களைப் போல் இருந்திருந்தால், பழி வாங்குவதற்கான விருப்பத்தைத் தம் மனதில் தேக்கியவராக, (பெலிஸ்தரின் அந்தப்) படையெடுப்பில் மகிழ்வடைந்திருப் பார், ஏனென்றால் அப்படிப்பட்ட படையெடுப்புக்கள் சவுல் ஒரு அரசராயிருக்கத் தகுதியற்றவர் என்பதை இன்னும் அதிகமாய் வெளிப் படுத்தின. ஆனால் தாவீது, ஒடுக்கப்பட்ட தம் சகோதரர்களுக்காகக் கொண்டிருந்த அக்கறை, அவர்களுக்கு உதவும்படி அவரை வழிநடத்திற்று. தேவபக்தியுள்ள இருதயம் சுயத்தின் மீது முற்றிலுமாக ஆர்வமற்றதாகி பிறருக்கு ஊழியம் செய்வதையே நாடுகின்றது (இ.வ. பிலி. 2:3, 4; 1 கொரி. 10:24; 12:25-27). ஒடுக்கப்பட்டவர்கள் மீதான இந்த அக்கறையானது தேவனுடைய சொந்த இருதயத்தில் தோன்றியது (சங். 86:5, 13, 15, 16; யாக். 5:11).

தாவீது விரோதிகளிடம் (கூட) இரக்கம் நிறைந்தவராயிருந்தார் (24:5, 10, 19). இவர் சவுலின் உயிரைத் தமது கைகளில் பெற்றிருந்தார். இவர் ஒரு வார்த்தை கூறியிருந்தால் போதும், சவுல் கொல்லப்பட்டிருப்பார். ஆனால் தாவீது மறுத்து விட்டார், ஏனெனில் இவர் தமது மாபெரும் விரோதியிடம்

இரக்கம் காட்ட முடிவு செய்திருந்தார்!

இரக்கத்தைக் காட்டிலும் தேவனுடைய இருதயத்தில் வேறு எந்த பண்பு பெரியதாக உள்ளது? (இ.வ. தீத்து 3:3-7; எபே. 2:4, 5.) நாம் இரக்கத்தின் மீது கவனம் செலுத்தி அதற்கு நம் இருதயங்களில் இடம் கொடுக்க வேண்டும். கோபத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்த பிரபுவைப் பற்றிய கதை ஒன்றுள்ளது. கிறிஸ்துவைப் பற்றிப் படிப்பதன் மூலம் அவர் தமது கோபத்தைக் குணமாக்க விரும்பினார். துன்புறுத்தப்படுதல், அவமதிக்கப் படுதல் ஆகியவற்றின் கீழ் நமது கர்த்தரின் பொறுமையானது அந்தப் பிரபுவை அதிகம் சிந்திக்க வைத்தது. அவர் கோபம் கொள்ளும்படி சோதிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், கிறிஸ்துவைக் குறித்துத் தியானித்தார். விரைவிலேயே அவரது இருதயமானது கிறிஸ்துவின் இரக்கம் நிறைந்த இருதயம் போல் மாற்றம் அடைந்தது.

தாவீது தமக்குக் கெடுதல் செய்தவர்களிடத்தில் நியாயமாய் நடந்து கொண்டார் (25:23 முதல்). தாவீது தமது இளகிய இருதயத்தினால், அபிகாயிலினால் இணங்க வைக்கப்படக் கூடியவராயிருந்தார். இவர் ஒரு நியாயமான மனிதராயிருந்தார், இவ்விதமாக பயங்கரமான தவறு ஏற்படுவதைத் தவிர்த்தார் (இ.வ. 25:32-35).

நியாயமாயிருக்கும் தன்மை நமது மாபெரும் தேவனைப் பண்புப் படுத்துகின்றது. தண்டிப்பதற்கு ஒருக்காலும் துரிதப்படாத நமது தேவன் தம்முடைய முடிவுகளில் எப்பொழுதும் நியாயத்தை செயல்படுத்துகின்றார் (ஆதி. 6:3; 1 பேது. 3:20). இப்படிப்பட்ட நியாயமான பண்பு, தேவன் உதவி செய்யும்படி நாடியவர்களினால் அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப்பட்டது (நெகே. 9:28-31). பெரும்பான்மையானவர்கள் தேவபக்தியுள்ள இருதயத்தின் இந்தப் பண்பில் குறைவுபடுகின்றார்கள். நாம் பிறர் மீது நியாயத்தீர்ப்பு மற்றும் நீதி ஆகியவற்றைச் செலுத்துவதில் மிகவும் பொறுமையற்றவர்களாக இருக்கின்றோம்! தேவனுடைய இருதயத்தின் இந்தப் பண்பை நமது வாழ்வில் நாம் பேணிக் காக்கவேண்டியது அவசியமாக உள்ளது (கலா. 5:22; எபே. 4:1, 2).

தாவீது பொல்லாங்கின் மீது பலத்தையும் கடுங்கோபத்தையும் காண்பித்தார் (17:32 முதல்). காத் என்ற ஊரிலிருந்து வந்த இராட்சதன் தவறான இருதயம் கொண்டிருந்தபடியினால் தாவீதினால் அழிக்கப் பட்டான். தாவீது கோலியாத்தை முகமுகமாய் எதிர்த்து நின்று தேவனுக்குள் தாம் கொண்டிருந்த பெலத்தை தைரியமாய் உறுதிப்படுத்தினார் (17:45, 50அ). தேவனுடைய சித்தத்திற்கு ஒத்த இருதயம் கொண்டுள்ள யாவரும் பொல்லாங்கின் மிக இலேசான கூறையும் கூட சகித்துக் கொள்ள மாட்டார்கள் (நாகூம் 1:6). பெலம் வாய்ந்த தேவபக்தியுள்ள இருதயத்தைக் கொண்டுள்ள விசுவாசி தமக்கும் பாவத்திற்கும் நடுவில் கோடு ஒன்றை வரைந்து, அதைத் தாண்டிச் சென்றால் பொல்லாங்கின் மீதான, தேவனுடைய கடுங்கோபத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும் என்பதால் ஒருக்காலும் அதைத் தாண்டிச் செல்ல மாட்டார் (இ.வ. ரோமர் 6:1ஆ-2அ; எபே. 5:7-11; 1 தெச. 4:4).

தாவீது மன்னிப்பைச் செயல் விளக்கப்படுத்தினார் (26:21). சவுலைக்

கொல்வதற்குத் தாவீதுக்கு இரண்டாம் முறையாக ஒரு வாய்ப்புக் கிடைத்தது. முதல் வாய்ப்புக் கிடைத்திருந்தது பல ஆண்டுகள் கழிந்திருந்தது (24:2), ஆனால் சவுலின் வாக்குறுதி காக்கப்படாமல் போயிற்று. தாவீது இன்னும் தமது தலைக்கு விலை வைக்கப்பட்ட மனிதராக இருந்தார், சவுலே அதற்குப் பொறுப்பாயிருந்தார்! 26:21ல் காணப்படும் சவுலின் மன்னிப்பு வேண்டுகோள் தாவீதினால் வினையமிக்கதாக எடுத்துக் கொள்ளப்படாதிருந்தது, ஏனென்றால் சவுல் அவரைத் திரும்பி வருமாறு அழைத்ததும் கூட அவர் தம் வழியே போய் விட்டார்.

மன்னிப்பு எப்பொழுதும் கிடைப்பதாக உள்ள ஒரு இருதயமாக நம் இருதயத்தை நாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் (மத். 18:35; 6:12; கொலோ. 3:13), நமது இருதயமானது, அன்பு பெருக்கெடுத்தோடுவதும் மன்னிப்பு கிடைப்பதுமாயிருக்கின்ற தேவனுடைய இருதயத்தைப் போல் இருக்க வேண்டும் (ஓசி. 6:1, 2; யோனா 4:2).

தாவீது அதிகாரத்திற்கு மதிப்பைச் செயல்விளக்கப் படுத்தினார் (29:9, 10). சவுல் மரணத்திற்குப் பாத்திரராய் இருந்த போதிலும், அதிகாரம் தேவனிடத்திலிருந்து தோன்றியதால் (சவுலுக்குத் தரப்பட்டிருந்ததுமான) அதிகாரத்தின் தகுதி நிலைக்கு தாவீது மதிப்பளித்தார். தாவீது தமது நடக்கை யாவற்றிலும் சவுல் இஸ்ரவேலின் அரசர் என்று ஒப்புக் கொண்டார். தாவீது, தேவனுடைய பிரமாணங்களை மாற்றுவதற்கு ஒருக்காலும் முயற்சி செய்ததில்லை, மற்றும் இவரது பொது நடக்கையானது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றியது.

தேவ பக்தியுள்ள இருதயங்கள் எப்பொழுதும் தேவனுடைய பிரமாணத்தைப் பின்பற்ற விரும்புகின்றன. தேவ பக்தியுள்ள இருதயங்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு இசைந்தவைகளாக அவற்றில் ஒருக்காலும் மாற்றியமைத்தல்களை நாடாதவையாக இருக்கும், மற்றும் அவற்றைப் புறக்கணிக்காமலும் இருக்கும் (எஸ்றா 7:10).

யாரோ ஒருவர், “மனிதரின் இருதயம் என்பது தொடர்ந்து பற்றி யெரியும் அடுப்பாக உள்ளது. நீங்கள் அதை தேவனுடைய அன்பின் சிந்தனைகளைக் கொண்டு வளமூட்டினால், தேவன் மீதும் மனிதர் மீதுமான அன்பின் பிரகாசமிக்க சுடர் ஒன்று அதில் தோன்றும். ஆனால் அதை நீங்கள் சுய-அன்பின் சிந்தனைகளைக் கொண்டு வளமூட்டினால், அது கடுமையான புகையினாலும், நெடியினாலும், இருளினாலும் நிறைந்திருக்கும்” என்று கூறினார்.

தேவபக்தியுள்ள இருதயத்தின் விளைவுகள்

மேல் பட்டியலிடப்பட்ட பண்பினங்களினால் ஒரு மனிதரின் இருதயம் வடிவமைக்கப்படும் போது, பின்வரும் விளைவுகள் அவரது வாழ்வை ஆசீர்வதிக்கும்:

அவர் தேவனுடைய வல்லமையில் பற்றும் திட நம்பிக்கையும் கொண்டிருப்பார். சவுல் தமது சுய பெலத்தைக் குறித்துப் பெருமை

யடைந்தார், இதன் விளைவாகத் தோல்வியடைந்தார். தாவீது ஒவ்வொரு விஷயத்திலும் தேவன் மீது நம்பிக்கையாயிருந்தார், இவர் வெற்றி யாளரானார் (17:5-47; சங். 115:3; 135:6).

இங்கிலாந்தின் அரசராயிருந்த முதலாம் எட்வர்டு (1239-1307) என்பவர், பரிசுத்த இடங்களுக்குச் (வேதாகம நிகழ்ச்சிகள், அதிலும் சிறப்பாக இயேசுவின் வாழ்வின் நிகழ்ச்சிகள் நடந்த இடங்களுக்கு) செல்வதற்கு மாபெரும் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் அவரது நாட்டில் நடந்த யுத்தம் ஒன்று அவரைத் தடை செய்தது. அவர் தம் மகனிடத்தில், தாம் இறந்தபின் அவன் தன் தந்தையின் இருதயத்தை அங்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கண்டிப்பான கட்டளை கொடுத்தார். அந்த நோக்கத்திற்காக எட்வர்டு, அதற்காகும் செலவுகளை ஈடுகட்டு வதற்காக சுமார் இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய்கள் தனியே ஒதுக்கி வைத்து, அத்துடன் அந்தப் பயணத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று 140 வீரர்களுக்குக் கட்டளையிட்டார். இது போலவே, கிறிஸ்தவர்களின் தேவபக்தியுள்ள இருதயங்கள் தங்களின் நித்திய இல்லமான பரலோகத்தை இன்னும் அடையாதிருப்பினும், அவைகள் அங்கேதான் உள்ளன.

தாவீது மன்னிப்பு அளிக்கக் கூடியவராயிருந்தார். சாமுவேல் சவுலை எதிர்கொண்ட பொழுது, அரசர் பயம் கொள்ளவில்லை. சவுலின் அறிக்கையிடுதல் உண்மையானதாக இருக்கவில்லை. இது, தாவீது நாத்தானால் எதிர்கொள்ளப்பட்ட பொழுது நடந்ததில் இருந்து எவ்வளவாய் மாறுபட்டு இருந்தது! சங்கீதம் 51ன் வார்த்தைகள் செயல் விளக்கப்படுத்துகின்றதைக் காட்டிலும் அதிகமான துக்கம் ஒருபொழுதும் மெய்ப்படவில்லை.

“தேவனுடைய சொந்த இருதயத்தில்” பங்கேற்பவர்கள் (அல்லது) தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமாய் நடந்து கொள்பவர்கள், பாவத்தின் பரிதாபமான வீழ்ச்சியைப் பற்றி அறிந்துள்ளனர் மற்றும் தேவனு டைய மன்னிப்பு தாராளமாய்க் கிடைப்பதினிமித்தம் அவர்கள் மகிழ்வடைகின்றனர் (சங். 38:3, 18; 1 யோவா. 1:7, 9; எபி. 8:12).

தாவீது, தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலுக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஒரு வழி உடமையையும் விட்டுச் சென்றுள்ளார். இவர் இறந்து பல நூற்றாண்டுகள் கழிந்திருந்தும் இன்னமும் இவர் தம் தேவபக்தியுள்ள இருதயத்தினிமித்தம் அறியப்படுகின்றார் (அப். 13:32). தேவபக்தியுள்ள இருதயம் கொண்ட யாவரும் ஆபேலைப் போல என்றென்றும் பேசுவார்கள் (எபி. 11:4ஆ).

முடிவுரை

தாவீதினால் விவரிக்கப்பட்ட தேவபக்தியுள்ள இருதயத்தின் பண்புகள் நமது மாபெரும் தேவனுக்குள்ளாகவும் காணப்படுகின்றன: அவர் (தேவன்) ஒடுக்கப்பட்ட யாவர் மீதும் கரிசனை கொண்டுள்ளார்; அவருடைய கிருபையானது எல்லா மனிதருக்கும் நீட்டிக்கப்படுகின்றது. அவர் பொல்லாங்கைக் குறித்துக் கோபம் கொள்ளுகிறார், அதைச் சகித்துக்

கொள்ளமாட்டார்: அவர் நியாயமுள்ளவராக, நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார்; அவர் எல்லாப் பாவங்களையும் அழித்து நீக்கத் தயாராக வைத்துள்ள மன்னிப்பை நம் வரைக்கும் நீட்டிக்கின்றார்; அவர் அதிகாரம் கொண்டவராக இருக்கின்றார் மற்றும் அவர் கடைசி நாளில் நியாயம் தீர்ப்பார்.

யூதர்கள் மத்தியில் மாபெரும் போதகராயிருந்த ஒருவர், தம்மிடம் கல்விப் புலமை பெற்றவர்களிடம் ஒருவரை நேர்மையாகக் காத்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த விஷயமாக உள்ளது எது என்று ஆழ்ந்து சிந்தித்துக் கூறும்படி கேட்டுக் கொண்டார். ஒருவர் வந்து, நல்ல கண்களைப் பார்க்கிலும் மிகச் சிறந்தது வேறில்லை என்றார். இன்னொருவர், நல்ல நண்பர் என்றார். மூன்றாமவர் வந்து நல்ல அயலகத்தார் என்றார், நான்காமவர் ஞானம் என்று கருத்துத் தெரிவித்தார். கடைசியில் ஒருவர் வந்து, நல்ல இருதயமானது மற்ற எல்லாவற்றையும் விட மிகச் சிறந்ததாகும் என்றார். அதற்குப் போதகர், “உண்மைதான், நீ மற்ற எல்லாரும் கூறியவற்றையெல்லாம் இரண்டே வார்த்தைகளில் சுருக்கி உரைத்து விட்டாய். ஏனெனில் நல்ல இருதயம் கொண்டவர் நிறைவடைந்தவராக, ஒரு நல்ல நண்பராக, ஒரு நல்ல அயலகத்தாராக இருப்பார் மற்றும் அவர் தாம் செய்யத் தகுதியானது எது என்பதை சுலபமாய்க் காண்பார்” என்று கூறினார். இப்படிப்பட்டதுதான் ஈசாயின் மகனான தாவீதின் ஆலோசனையாக உள்ளது: தேவபக்தி கொண்ட(தாக) இருதயத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்!

கோலியாத் பக்தியின்மையின் கேடுபாடான தன்மை

[17:1-54]

கிரேக்கப் புராணக் கதைகளின் மாபெரும் நாயகர்களில் ஆச்சில்லெஸ் என்பவனும் ஒருவனாவான். இவன் கிரேக்க நாடு ட்ராய் நகரைத் தோல்வியடையச் செய்த ட்ரேஜன் யுத்தத்தில் பெரும் பங்கு வகித்தான். இவனை ஹோமர் என்பவர் தனது இலியட் என்ற காவியத்தில் விவரித்தார். இவன் பிறந்ததும் உடனே இவன் தாய் இவனது உடலைத் துன்பத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஸ்டைக்ஸ் நதியில் முழுக் காட்டினாள். ஆனால் இவனது குதிங்கால்களைப் பிடித்தபடி அவள் இவனை முழுக்காட்டியதால் இவனது உடலின் அந்தப் பாகத்தைத் தண்ணீர் தொடவில்லை, இதன் விளைவாக இவன் ஊறுபடக் கூடிய பாகமாய் அது இருந்தது. ட்ரேஜன் யுத்தத்தின் போது, ஆச்சில்லெஸின் விரோதியான பாரிஸ் என்பவனால் எய்யப்பட்ட விஷம் தோய்ந்த அம்பானது இவனது குதிக்காலில் பாய்ந்தது. அந்தக் காயத்தினால் ஆச்சில்லெஸ் இறந்து போனான்.

ஆச்சில்லெஸின் இந்தச் சித்தரிப்பும் வெற்றி கொள்ளப்பட முடியாதவன் என்பதாக அவன் காணப்படுதலும் தேவபக்தியின்மைக்கு - அதாவது, தேவனுக்கு, வேதாகமத்திற்கு, சபைக்கு, மற்றும் கிறிஸ்தவத் தன்மையுள்ள யாவற்றுக்கும் எதிர்த்து நிற்குதலுக்கு - தகுதியான ஒரு விவரிப்பாக உள்ளது. பக்தியின்மையின் ஏளனமும் இகழ்ச்சியும் வெற்றி கொள்ளப்பட முடியாததாகக் காணப்படுகின்றது, ஆனால் உண்மையில் அவைகள் ஒரு பரிதாபகரமான ஊறுகொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளன.

1 சாமுவேல் 17ல், பக்தியின்மையின் ஊறுகொள்ளும் தன்மைக்கான மிக உயர்ந்த விவரிப்பு ஒன்றுள்ளது. நமக்கு காத் ஊரானாகிய கோலியாத் அறிமுகப்படுத்தப் படுகின்றான். பக்தியின்மையின் ஒவ்வொரு அம்சத்தை யும் இவன் நபர்த்துவப்படுத்தினான். இவன் வீணனாக, தேவனற்றவனாக, மனிதப் பண்பற்றவனாக, மற்றும் சுயத்திற்கு ஊழியம் செய்பவனாக இருந்தான். இந்த அதிகாரத்தில், பக்தியின்மையைப் பற்றிய திகைப்பூட்டும் பாடம் ஒன்று மேல் எழும்புகின்றது.

மிக்மாஸில் பெலிஸ்தரின் தோல்வி, சவுலின் ஆட்சி முழுவதிலும் இருந்த போராட்டங்களின் வரிசை ஒன்றைத் தொடங்கி வைத்தது (14:52). 1 சாமுவேல் 17ல், இந்த யுத்தத்தின் போது மிகவும் முக்கியமான போர்களில் ஒன்று போரிடப்பட்டது. ஏலாவின் சமவெளியில் இஸ்ரவேலர்கள் பெலிஸ்தரை எதிர் கொண்டார்கள். இயற்கை அமைப்பு இந்தப் போரைத் தனிச் சிறப்பு வாய்ந்ததாக்கிற்று. அந்தப் பள்ளத்தாக்கு சுமார் ஒரு மைல் அகலம் கொண்டதாயிருந்தது. அதன் மத்தியில், மண்ணரிப்பு ஏற்பட்டிருந்த படியினால் இருபதடி அகலமும் பன்னிரெண்டடி ஆழமும் கொண்ட இடுக்கு ஒன்று ஏற்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் அந்த இடுக்கின் அடிப்பகுதியில் ஒரு சிறிய ஓடையொன்று ஓடும், அதில் தண்ணீரினால் தேய்க்கப்பட்ட உருண்டை வடிவமான கூழாங்கற்கள் நிறைந்திருக்கும். அந்தப் பள்ளத்தாக்கின் அசாதாரணமான வடிவமைப்பு இரு பக்கங்களிலும் இருக்கும் படைகள் ஒன்றையொன்று தாக்குவதைச் சாத்தியமற்றதாக்கி யிருந்தது, ஏனென்றால் தாக்கும் படையானது அந்த இடுக்கின் எதிர்க் கரையில் ஏறும் பொழுதே கொல்லப்பட்டு விடும். ஒருவர் இன்னொருவரை எதிர்த்துப் போரிடுதல் என்பது மட்டும்தான் ஒரே பதிலாயிருந்தது. அந்த இடுக்கின் இரு புறங்களிலும் இரண்டு படைகளும் நாற்பது நாட்கள் அளவாக நின்று கொண்டிருந்தன, அவை கோலியாத்தின் அறைகூவலைக் கேட்டு ஓய்ந்து போயிருந்தன. இது தினமும் இரண்டு வேளைகள் நடைபெற்று வந்தது (17:16).

படையினருக்குத் தேவையான உணவுப்பொருட்கள் ஒவ்வொரு படைவீரரின் இல்லத்திலிருந்தும் கொடுக்கப்பட்டு வந்தது, இங்குதான் இளைஞனாயிருந்த தாவீது காட்சிக்குள் பிரவேசித்தார். தாவீது அநேகமாக பதினெட்டு வயதுடையவராக, படை ஊழியத்திற்கு மிகவும் இளையவராக இருந்தார் (எண். 1:3). அவர் "இளைஞர்" என்று அழைக்கப்பட்டார் (17:58), இவ்வார்த்தை, திருமண வயதில் முழு வளர்ச்சியடைந்த வாலிபரைக் குறிக்கின்றது. அவர் ஈசாயினால், தமது மூன்று சகோதரர்களுக்கு உணவு கொண்டு போகவும், வீட்டுக்குச் செய்திகளைக் கொண்டு வரவும் அனுப்பப் பட்டிருந்தார்.

தாவீதின் இளமை நிறைந்த ஆவலானது அவரை இஸ்ரவேலின் (படை) முகாமினுள் முன்னதாகவே கொண்டு வந்து சேர்த்தது (17:20), மற்றும் அவர் அந்த அரக்கனின் அன்றைய தினத்தின் முதல் அறைகூவலைக் கேட்டார். அவர் கோலியாத்தின் அறைகூவலுக்கு பதில் இல்லாத குறைபாட்டைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். கோலியாத்துக்கு எவரொருவரும் பதில் கூறாததைக் கண்டு, யுத்தம் அறிவிக்கப்பட்ட நாற்பத்தியோராவது நாளில், காத்திலிருந்து வந்த அவ்வரக்கனுக்குப் பதில் தரத் தாவீது நடவடிக்கை மேற்கொண்டார். விதிவசமான அந்த நாளில், பக்தியின்மையின் கேடுபாடான தன்மையைக் கண்டறிந்து அழித்துப் போட்ட வகையில், தாவீது தேவனுக்கு மகத்தானதொரு வெற்றியை வென்றார்.

பக்தியின்மையின் வெறுமையான தற்புகழ்ச்சி

நாற்பது நாட்கள் அளவாக கோலியாத் வெற்றி கொள்ளப்பட முடியாதவனாகத் தோன்றினான் (17:4 முதல்). அந்த இடுக்கின் இருபுறங் களிலும் கோலியாத், வழக்கற்ற வகையில் "வல்லவனாக" இருந்தான் என்று ஒருமனதாகக் காணப்பட்டான் (17:4, 23). அந்தப் பட்டப் பெயரே போரில் வெற்றியடையப் போகிறவன் என்றுதான் நேரடிப் பொருளில் குறிப்பிட்டது. கோலியாத்தின் பிரசன்னம் மனதில் ஆழப்பதிகின்ற தாயிருந்தது, மற்றும் அதுவே இஸ்ரவேலைப் பயமுறுத்துவதாக இருந்தது என்பது மெய்யான விஷயமாயிருந்தது. அந்த அரக்கன் ஒன்பதடி உயரமிருந்தான்; இவன் இஸ்ரவேலின் சராசரி உயரம் கொண்ட மனிதனைக் காட்டிலும் அதிக உயரமாயிருந்தான். இவன் புகழ்ச்சியற்ற ஆனாக்கியரின் வம்சத்தில் உயிருடன் இருந்த ஒருவனாவான் (எண். 13:28).

கோலியாத்தின் உடல்வாகிற்கு அப்பால், இவனது ஆயுதமானது பயங்கரமான காட்சியாய் இருந்தது. இவன் பித்தளைத் தகடுகள் ஒன்றின் மீது மற்றொன்று செதில்கள் போல் அமைத்துச் செய்யப்பட்ட கவச உடை ஒன்றை அணிந்திருந்தான். அது மட்டும் தொன்னூறு கிலோவுக்கு மேல் எடை கொண்டிருந்தது. இவனது காலின் கீழ்ப்பகுதிகள் பித்தளைக் காப்புகளினால் மூடப்பட்டிருந்தன. இவன் தன் முதுகில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட எறியீட்டியொன்றைச் சுமந்து நின்றான். இவனது ஈட்டி மிகப் பெரியதாயிருந்தது, அதன் தலைப் பகுதி சுமார் பன்னிரெண்டு கிலோ எடையுள்ள இரும்பினால் செய்யப்பட்டதாயிருந்தது. இவன் பித்தளை யினால் செய்யப்பட்ட தலைக் கவசம் ஒன்றை அணிந்திருந்தான், இவனுக்கு முன்னால் பெரிய கவசம் ஒன்று சுமந்து செல்லப்பட்டது.

கோலியாத்தின் உடல் தோற்றத்துடன் கூட, இவன் தனது முரட்டு சுபாவத்தினாலும் இஸ்ரவேலைக் கதிகலங்கச் செய்து கொண்டிருந்தான் (17:10). இவனது வார்த்தையினாலேயே இஸ்ரவேல் முழுவதும் பயந்து நடுங்கினார்கள். இதில் மற்றவர்களுக்கு மேலாக நின்று கொண்டிருந்த அதன் அரசரும் உள்ளடங்கினார். கோலியாத் தனது அறைகூவலை விடுத்த ஒவ்வொரு முறையும் அதிபயங்கர உணர்வானது இஸ்ரவேலர்களின் இருதயங்களைத் தாக்கியது.

கோலியாத்தின் வெறுமையான இந்தத் தற்புகழ்ச்சியானது, இன்றைய நாட்களில் தேவனுடைய பரிசுத்தவான்களை எதிர்க்கின்ற நவீன கால தேவநம்பிக்கையற்றவர்களின் தற்புகழ்ச்சி போன்றதாகவே உள்ளது. புகழ்ச்சியற்ற வால்ட்டேர், வேதாகமத்தை அரும்பொருள் காட்சிக் கூடங் களில் மட்டுமே காணக் கூடிய நாள் வரையிலும் தான் உயிர் வாழப் போவதாக பெருமை பாராட்டினார். வால்ட்டேரின் இறப்புக்குப் பிறகு, அவரது அச்சகம் வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட்டது, மற்றும் அவைகள் அனுப்பப்படும் வரைக்கும் அவரது வீட்டிலேயா இருப்பில் வைக்கப்பட்டன! "தி டைம்" என்ற ஆங்கிலப் பத்திரிக்கையின் அக்டோபர் 20, 1980ம் நாளிட்ட இதழில் கார்ல் சாகன் என்பவர், படைப்புக்

கொள்கைவாதிகளிடத்தில் தேவனைப் பற்றிய அவர்களின் நம்பிக்கையைப் பற்றி தற்காப்பு வாதம் செய்யும்படி அறைகூவல் விடுத்தார்.[1] *அந்த அறைகூவலை எதிர்கொள்வதாக ஒருவர் ஒப்புக் கொண்ட பொழுதோ சாகன் ஒருக்காலும் பதில் கொடுக்கவில்லை!*[2] *சாகனும் அவரைப் போன்ற மற்றவர்களும் தேவன் இருக்கின்றார் என்பதற்கு எதிராகக் கூச்சலிடுகின்றார்கள், ஆனால் கோலியாத்தின் வார்த்தைகளைப் போலவே, இவைகளும் வெறுமையான தற்புகழ்ச்சிகளாகவே உள்ளன!*

நவீன நம்பிக்கையாளர்கள் கவனம் செலுத்தட்டும். பக்தியின்மை பற்றிப் பெருமை பாராட்டுவதில் பொருளொன்றும் இல்லை (இ.வ. 2 பேது. 2:12, 17-19). வேதவாக்கியங்கள் மிக அருமையான பிரச்சனைகளைக் கொண்டுள்ளதாகச் சிலர் வாதிடுகின்றார்கள், ஆனால் இந்தப் பெருமை பாராட்டுதல்கள் ஒருக்காலும் உண்மையான ஆதாரத்தினால் ஆதரிக்கப்படுவதில்லை! தேவன் இல்லையென்பதும், தேவன் உள்ளார் என்பதை சந்தேகிப்பதுமான அறைகூவல் மிகவும் வல்லமையுள்ளதாகக் காணப்பட்டாலும், கோலியாத்தைப் போலவே பக்தியின்மை என்பது வெறுமையான தற்புகழ்ச்சிகள் நிறைந்ததாகவே இருக்கிறது (17:49, 50).

பக்தியின்மையின் தெளிவான கேடுபாடு

கோலியாத் எவ்வளவுதான் அழிக்கப்பட முடியாதவனாகத் தோன்றினாலும், முடிவை நிரூபித்த ஆச்சில்லெஸ்ஸின் குதிக்கால் போன்று இவன் ஒரு பலவீனத்தைக் கொண்டிருந்தான். தாவீது கோலியாத்தை சந்திப்பது என்று சவுல் ஒப்புக் கொண்ட உடனே, அவர் (சவுல்) அந்த இளைஞருக்கு (தாவீதுக்கு) தமது ஆயுதங்களைக் கொடுக்க முயற்சி செய்தார் (17:38). அந்த ஆயுதம் என்பது உண்மையில் ஒரு "யுத்த உடையாக", படைவீரர்களால் அணியப்படுகின்ற பாதுகாப்புக் கவசமாக உள்ளது. ஆனால் தாவீது தனது "மேய்ப்பனின் உடையையே" பெரிதும் விரும்பித் தேர்ந்து கொண்டார் (17:40). அவரது கையில் பட்டயம் எதுவும் இருக்கவில்லை; அவர் ஆயுதம் எதையும் தரிக்கவில்லை; கருவி எதையும் கொண்டு செல்லவில்லை. அவர் வைத்திருந்ததெல்லாம் ஒரு எளிய கவண் மட்டுமே. தாவீது தேவன் மேல் கொண்ட விசுவாசம் என்பதே அவனுடைய மாபெரும் ஆயுதமாய் இருந்தது!

இரண்டு படையணிகளும் ஏற்கனவே தாங்கள் சாதாரணமாகத் தங்கியிருந்த இடங்களில் ஓய்ந்திருந்தன. அங்கு ஓய்ந்திருக்கையில் அவர்கள், இளைஞனான தாவீது அந்த இடுக்கின் சரிவில் இறங்கி வருவதைக் கண்டார்கள். அந்த ஓடையில் சாந்தம் மற்றும் அமைதியுடன் நின்று அவர் வழுவழுப்பான ஐந்து கற்களைப் பொறுக்கிக் கொண்டார். பிறகு, பெலிஸ்தர் திகைத்து நிற்க, தாவீது அந்த இடுக்கின் மீதேறி, பெலிஸ்தரின் பக்கம் வந்து நின்றார்! கோலியாத் கீழே அமர்ந்திருந்தான் என்பது உறுதி, மற்றும் இவன் தனது அறைகூவலுக்குத் தாவீது பதில் கொடுக்க வந்ததை உணர்ந்தறிந்த போது, எழுந்து அவரை நோக்கி நடந்து சென்று அவரை

அச்சுறுத்தி, சபித்தான். தாவீதின் பதில் பயத்தையல்ல, விசுவாசத்தை மட்டுமே காண்பித்தது. ஒரு கல் தேர்ந்து கொள்ளப்பட்டது, தேவனுடைய உதவியினால் அந்த அரக்கன் விழுந்தான், அவனது தலை கொய்யப்பட்டது!

நவீனகால மனிதரையும் காத்திலிருந்து வந்த இந்த அரக்கனையும் நூற்றாண்டுகள் பல பிரித்து வைத்திருந்த போதிலும், பக்தியின்மையின் வெறுமையை அழிக்க அதே கூறுகள் ஒன்றிணைகின்றன. கோலியாத்தின் கேடுபாடும் பக்தியின்மையும் பின்வரும் கருத்துக்களில் தெளிவாகின்றன: தேவனை மறுத்து அவரை விரோதித்தல் (17:43, 45); சுயபாதுகாப்பின் மீது நம்பிக்கை வைத்தல் (17:10, 45; எரே. 10:23); எளிய விஷயங்களில் உள்ள அபாயத்தைக் காணத் தவறுதல் (அதாவது, ஒரு கவண், 17:43; இ.வ. 1 கொரி. 1:27); பெருமை மற்றும் முரட்டாட்டம் (17:44; நீதி. 16:18).

பக்தியின்மையின் நிறைவான அடைவிடம்

பக்தியின்மையின் அறைகூவல்களினால் விசுவாசிகள் தொடர்ந்து எதிர்கொள்ளப்படுவார்கள். இது ஆசிரியர்கள், நெருங்கிய நண்பர்கள், உடன் பணி செய்பவர்கள், அல்லது குடும்ப உறுப்பினர்களிடம் இருந்தும் கூட வரலாம். விசுவாசிகள் ஏளனத்தையும் கேள்வி கேட்கப்படுதலையும் எதிர்கொள்ளுவார்கள். சாத்தான் தன் தாக்குதல்களில் ஒருக்காலும் கடுமை தணிந்திருக்க மாட்டான் (2 கொரி. 4:8, 9; 10:3-5). பக்தியின்மையை எதிர்கொள்ளுகின்ற வேளையில் மிக அதிகமான பரிசுத்தவான்கள் சவுல் மற்றும் இஸ்ரவேல் மக்களைப் போலவே கூனிக் குறுகுகின்றார்கள் (17:24). தாவீதைப் போலவே பயத்தை மறுக்கின்ற மிகக்குறைவான பரிசுத்தவான் கள் இருக்கின்றார்கள் (17:36, 48). விசுவாசிகள் உறுதியான விசுவாசத்துடன், பக்தியின்மை என்ற விரோதியை எதிர்த்தால் வெற்றி உறுதி! (17:45-51; யாக். 4:7).

பக்தியின்மையுடனான எதிர்ப்பில், நாம் நமது வாழ்வில் வெற்றி யடைய, பின்வருவனவற்றை உய்த்துணர வேண்டும்.

முதலாவது, பக்தியின்மை தனது அறைகூவல்கள் வெற்றி முழுக்கம் இடுவது போல் தோன்றச் செய்ய விரும்புகின்றது, மற்றும் அந்த அறைகூவல் கள் நமது இருதயங்களில் பயத்தைத் தூண்டும்படியாகவே வடிவமைக்கப் பட்டுள்ளன (1 தீமோ. 1:7, 8; எபே. 2:6; 3:9; 1 கொரி. 16:13; பிலி. 1:27, 28).

இரண்டாவது, நாம் தனியாக நிற்க வேண்டியிருப்பினும் நாம் தேவனுக்கென்று நிற்க வேண்டும்! தாவீது அமைதியாயிருக்கின்ற பெரும்பான்மையினருடன் சேர்ந்திருக்க மறுத்து விட்டார் (17:32). தேவன் அவருடன் இருந்த வரைக்கும், தாவீது யுத்தத்தின் பாரத்தைச் சுமக்க முற்றிலும் தயாராயிருந்தார் (17:37; இ.வ. 1 கொரி. 15:58).

மூன்றாவது, பக்தியின்மையின் இகழ்ச்சியையும் முரட்டாட்டத்தையும் வெற்றி கொள்வதற்கு ஒரே வழி, நாம் நமது நம்பிக்கையைத் தேவன் மீது வைப்பதேயாகும் (17:37, 47; இ.வ. சங். 27:1; 35:1-7; ஏசா. 65:24; 2 சாமு. 22:1 முதல்; சங். 18:29-35).

நான்காவது, உறுதியான மற்றும் சீரான விசுவாசத்துடன் பக்தியின்மை

எதிர்கொள்ளப்படுகின்றபோது, அது திரும்பி ஓடிவிடும்! (17:51; மத். 4:11). கீழ்ப்படியாமையின் மூலமாகத் தேவனுடன் சவுல் எல்லா வித இணைப்புகளையும் துண்டித்துக் கொண்டிருந்தபடியினால், அவரால் பக்தியின்மையை எதிர்கொள்ள இயலாமல் போயிற்று. கோலியாத்தைக் கொல்பவர்களுக்கு ஒரு வாக்குறுதியை அளித்தல் என்பதே சவுலினால் செய்ய முடிந்த எல்லாமுமாயிருந்தது (17:25). ஆனால் நாம், தாவீதைப் போலவே தேவன் மீது விசுவாசமும், சுத்தமான வாழ்க்கையும் கொண்டவர்களாய் பக்தியின்மையை வெற்றிகொள்ளக் கடவோம்! தனது பரலோக பிதாவிடம் விசுவாசம் கொண்டுள்ள தேவனுடைய மிகவும் பெலவீனமான பிள்ளை இந்த உலகத்தை ஜெயிக்கப் போதுமான பெலமுள்ளவராயிருக்கிறார்! (யோவா. 16:33).

முடிவுரை

கோலியாத், நமது காலத்தில் இருக்கின்ற மக்களில் பலருக்கு எவ்விதமாய் முன்னடையாளமாயிருக்கிறான் என்பது திகைப்புக்குரியதாக இருப்பதில்லையா? இவன் பக்தியில்லாதவர்களின் சுருக்கக் குறியீடாயிருக்கின்றான். அந்த யுத்தத்தில் வெற்றியடைய இவன் தவறியது என்பது, கிறிஸ்துவின் வழி மட்டுமே ஒரே வழியாக உள்ளது என்பதை அடையாளப்படுத்துகின்றது! நாம் தாவீதின் உதாரணத்தைப் பயன்படுத்தி பக்தியின்மையை வெற்றி கொள்ளக் கடவோம்.

கிரீன் மௌன்ட்டன் பாய்ஸ் என்ற இயக்கத்தின் தலைவராயிருந்த கர்னல் ஈத்தான் ஆலென் என்பவர் கெட்ட பெயரும் தேவநம்பிக்கையின்மையும் கொண்டிருந்தார். அவரது மனைவி பக்தியுள்ள பெண்ணாயிருந்து தங்கள் மகளுக்கு சுவிசேஷத்தைப் போதித்து வந்தார். அந்த மகள் சுகவீனம் அடைந்தாள், அவளது தந்தைக்கு அவள் இறக்கும் வேளையில் கூறிய பின்வரும் வார்த்தைகளைக் கேட்கும்படிக்குத் தகவல் அனுப்பப்பட்டது: "அப்பா, நான் இறக்கப் போகின்றேன். நான், நீங்கள் போதித்த கொள்கைகளையா அல்லது அம்மா போதித்த கொள்கைகளையா, எதை விசுவாசிக்கட்டும்?" அவர் தமது உணர்வுகளை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு சற்று நேரம் எடுத்துக் கொண்ட பிறகு, "உன் தாய் உனக்குப் போதித்தவற்றை நீ விசுவாசி" என்று பதில் அளித்தார். பக்தியின்மையின் கேடுபாடு தெளிவானதாக உள்ளது. சுவிசேஷத்தின் கட்டளைகளுக்கு எவரொருவரும் எவ்வாறு கீழ்ப்படிய மறுக்கக் கூடும்?

குறிப்புகள்

[1]Frederic Golden, "The Cosmic Explainer", *Time,* 20 October 1980, p. 63. [2]Thomas B. Warren, "Will Prof. Carl Sagan Face Up to an Acceptance of His 'Open Challenge' to Biblical Creationists?" *Spiritual Sword,* October, 1981, pp. 28-31.

மீகாள்

நேசம் கசப்பாக மாறும் பொழுது!

(18:20, 27; 19:11-17)

ஒன்று சாமுவேல் புத்தகம், மனித வாழ்வின் ஏறக்குறைய எல்லா அனுபவங்களையும் தொடுகின்றது. இந்த புத்தகத்தில் ஒரு "நேசம்/காதல்" நடக்கின்றது. இந்த நேசத்தின் வரலாறு இன்றைய நாட்களில் அங்காடிகளில் மிகச் சிறப்பாக விற்கும் புத்தகங்களுக்கான கதைக் கருவின் விவரங்கள் யாவும் கொண்டுள்ளது. இந்த வரலாறு இரு இளம் காதலர்களை, பல்வகைப் போராட்டங்களை, மறைவான சூழ்ச்சிகள் உணர்வின் உச்சங்கள் மற்றும் பள்ளத்தாக்குகள், அபாயம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. இது படிப்பதற்கு எழுச்சிமிக்க வரலாறாக உள்ளது. ஆனால் இந்தக் காதல் கதையானது, கடைசித் திரை விழுகையில் அந்தத் தம்பதிகள் "அதன் பிறகு என்றென்றும் நலமுடன் வாழ்ந்தார்கள்" என்று முடிவடையத் தவறுகின்றது. இப்படிப்பட்ட மகிழ்வான முடிவு சாத்திய மானதாய் இருந்திருக்க முடியும், ஆனால் "அன்பு" என்பது அதன் சரியான இடத்தில் முடிசூட்டப்படாதிருந்தது, எனவே, கசப்புத் தன்மை ஆளுகை செய்ய அனுமதிக்கப்பட்டது.

திருமண பாசப்பிணைப்பு பல திருமணங்களில் வெறுப்பினால் தூக்கியெறியப்பட்டதாக இருத்தல் என்பது கவலை தரும் உண்மை நிலையாக உள்ளது. சந்தோஷமான இல்லம் அடிக்கடி கசப்பான யுத்த களமாகின்றது. சாக்ரட்டீஸின் மனைவியான சாந்தப்பே உக்கிர கோபமிக்க உணர்வுடன் இருந்தாள். ஒரு முறை அப்பெண்மணி தனது உக்கிர கோபம் தெரிவித்த ஆலோசனைப்படி அவர் மீது எல்லா வெறுப்புகளையும் காண்பித்தாள், சாக்ரட்டீஸ் வெளியே சென்று தமது முன்வாயிற்படியில் அமர்ந்தார். அவரது அமைதியும் அக்கறையற்றதுமான நடக்கை அப்பெண் மணிக்கு இன்னும் எரிச்சல் மூட்டியது. அப்பெண்மணி தனது கோபத்தில் படிகளில் ஏறி வந்து ஒரு வாளி நிறைய இருந்த தண்ணீரை அவரது தலையில் ஊற்றினார்கள். சாக்ரட்டீஸோ சிரித்துக் கொண்டே, அதிகம் இடி இடித்தால் மழை வருமல்லவா என்று மட்டும் கூறினார்!

இந்த இரு இளம் காதலர்கள் - ஈசாயின் மகனான தாவீது மற்றும்

சவுலின் மகளான மீகாள் ஆகியோர்-நாம் யாவரும் நன்கு கவனிக்க வேண்டிய மிகவும் மகிழ்ச்சியற்ற பாடம் ஒன்றை நமக்குப் போதிக்கின்றார்கள்.

திருமணம்

இவர்கள் கோலியாத் கொல்லப்பட்ட பிறகு விரைவிலேயே சந்தித்தார்கள். தாவீது அந்த அரக்கனைக் கொன்றால் அதற்குப் பரிசாக சவுலின் மகள் மேராபைப் பெற்றுக் கொள்ளுவார் என்று வாக்களிக்கப்பட்டிருந்தார். ஆனால் சவுலின் பொறாமை, பயம் மற்றும் பல தீய எண்ணங்களின் சேர்க்கையானது அவர் தமது வாக்குறுதியை மீறும்படி வழிநடத்திற்று, மேராப் வேறொருவருக்குத் தரப்பட்டாள். சவுலின் இளைய மகள் தாவீதை உண்மையிலேயே விரும்பினாள் என்ற செய்தி சவுலுக்கு எட்டியது. சவுல் இதை, தாவீதைக் கொல்வதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் (18:20-25). தாவீது மீகாளைத் தமது மனைவியாக உரிமை கோருவதற்கு எதையும் செய்யத் தயாராயிருந்தார் (18:27). இவர் அவளை வீரத்துவமாக உரிமைகோரினார், இவ்விருவரும் "திருமணம் பரலோகத்தில் நிச்சயிக்கப்படுகிறது" என்ற இஸ்ரவேலரின் கிசுகிசுப்புக்கு ஆளாயினார்!

இவர்களின் அன்புக்கான நிரூபணம், இவர்கள் தாவீதின் மீது சவுல் தந்த துன்புறுத்துதலுக்கு எப்படி பதில்செய்கை செய்தனர் என்பதில் மெய்ப்படுகின்றது (19:11-17). சவுலின் வன்முறை மனச்சான்றின் எல்லா கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்தது, கடைசியில் அந்த அரசர் தாவீதுக்கு தண்டனை நியமித்து அவரை வெளியரங்கமாகக் கொலை செய்யத் திட்டமிட்டார். தனிப்பட்ட வகையில் தாவீதைக் கொலை செய்வதில் தோற்ற சவுல் (18:10), தாவீதின் பதுங்குதலுக்கு வலை வீசினார். மீகாள் தனது தந்தையின் தந்திரத்தைப் பற்றி அறிந்து, தனது பொம்மையொன்றைக் கிடத்தி தாவீது நோய்ப்படுக்கையில் இருப்பதாகக் கூறி அவரைத் தப்புவித்தாள். அவளது இந்தச் சூழ்ச்சியான செயல் கண்டறியப்பட்ட பின் அவள் தன்னைக் காத்துக் கொள்வதற்கு சவுலிடம் பொய்யுரைத்தாள். இந்தத் தப்பித்தல் பற்றி தாவீது எழுதிய விவரம் சங்கீதம் 59ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தாவீதின் நாடோடி வாழ்வைத் தொடங்கி வைத்தது. மீகாள் தாவீதிடமிருந்து கவரப்பட்டு இன்னொரு மனிதருக்கு மனைவியாகத் தரப்பட்டாள் (2 சாமு. 3:13-16). எட்டு முதல் பத்து ஆண்டுகள் வரை இந்தக் காதலர்கள் பிரிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்கள்.

சவுலின் மரணத்திற்குப் பிறகு, தாவீதும் மீகாளும் மீண்டும் ஒன்று கூடுதல் நடந்தது. மறுபடியும் இணைந்த இந்த நிகழ்வானது இவர்கள் மீண்டும் பிரிந்திருக்கக் காரணமாகும் கசப்பொன்று விரைவில் நடக்கவிருந்ததால் கூர்மையான கவனத்தைப் பெறுகின்றது. சவுல் கொலை செய்யப்பட்ட பிறகு, அரியணை உயிருடனிருந்த அவரது மகனுக்குத் தரப்பட்டது, ஆனால் அங்கு சவுல் மகிழ்வுடன் அனுபவித்திருந்த ஒருமைப்பாடும் இணக்கமும் இல்லாதிருந்தது (2 சாமு. 3:1). கடைசியில், போரிட்டுக் கொண்டிருந்த இரு பிரிவினரையும் ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள்

இணைத்தது (2 சாமு. 2:12 முதல்).

மீகாளை மீண்டும் தாவீதிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதே ஒப்பந்தப் பேச்சு வார்த்தையில் தாவீதின் முதல் நிபந்தனையாக இருந்தது. தாவீது, "நல்லது, உன்னோடே நான் உடன்படிக்கை பண்ணு வேன்; ஆனாலும் ஒரே காரியம் உன்னோடே கேட்டுக் கொள்ளுகிறேன்; அது என்னவெனில், நீ என் முகத்தைப் பார்க்க வரும் பொழுது, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை நீ அழைத்து வர வேண்டும், அதற்கு முன் நீ என் முகத்தைப் பார்ப்பதில்லை ..." என்று கூறினார் (2 சாமு. 3:13). இவரது "முதல் காதலின்" நினைவுகள் ஆழமாய்ப் பாதுகாக்கப்பட்டிருந்தன என்பதில் ஐயமில்லை. இந்த மறுபடியும் இணைதல் தாவீதை அவரது இராஜரிக நிலைக்கு மறுபடி கொண்டு வந்து சேர்ப்பதாகவும் இருக்கும், ஏனெனில் அவரது மனைவி (சவுல்) அரசரின் மகளாயிருந்தாள். நீண்ட நாள் எதிர்பார்க்கப்பட்டிருந்த இந்த மறு இணைப்பு, பத்து ஆண்டுகள் பிரிவுக்குப் பிறகு எபிரோனில் நடைபெற்றது. மீகாளுக்காகக் காத்திருந்த வேளையில் தாவீதின் இதயம் வேகமாய்த் துடித்ததையும் அவர் உணர்வுக் கிளர்ச்சி அடைந்ததையும் உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? இங்கு இவர் தமது முதல் காதலியுடன், அவளது தனிப்பட்ட அபாயங்களின் மத்தியிலும் தம்மை உயிருடன் காப்பாற்றிய அந்தப் பெண்ணுடன் மீண்டும் இணையவிருந்தார். கூடிய அளவுக்கு சீக்கிரமாய் தாம் அவளுடன் இருக்க அவர் நாடியிருப்பார் என்பதில் வியப்பெதுவும் இல்லை! ஆனால் விஷயங்கள் மாறியிருந்தன.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் மிகச் சிறியதாகக் காணப்பட்ட வேறுபாடுகள் இன்னும் அதிகமாய் வளர்ந்திருந்தன. அவர்களிருவரும் அதே போலிருந்தாலும், அவர்களின் மதிப்பீடுகள் அதிக உறுதியாய் அமைந்திருந்தன. அவர்கள் "காதலித்துக் கொண்டிருந்த" காலத்தில் தங்கள் திருமணத்திற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்ததாலும், முதல் சில மாதங்களே ஒன்றாய் வாழ்ந்திருந்ததாலும் இந்த வேறுபாடு (அப்பொழுது) பெரிதாய்த் தோன்றாதிருந்தது. ஆனால் இந்த வேறுபாடுகள் வளர்ந்து, கடைசியில், இஸ்ரவேலின் பண்டிகை நாள் ஒன்றில் வெடித்தது. மென்மை யான அன்பு இறந்து போனது, கசப்பு தாவி வந்தது. "திருமணம் பரலோகத் தில் நிச்சயிக்கப்படுகின்றது" என்ற இக்கூற்றிற்கான கடைசிக் குறிப்பு கவலையுடன் அடையாளப்படுத்தப்படுகின்றது (2 சாமு. 6:23).

துன்பம்

இவர்களின் அன்பு மற்றும் பாசப் பிணைப்பைச் சிதைக்கும்படி குற்றம்சாட்ட ஒரே ஒரு தவறு போதுமானதாயிருந்தது என்பதை மீகாளின் வாழ்வில் இருந்து நாம் காண்கின்றோம். சாத்தானுக்கு ஒரே ஒரு தவறு மட்டுமே தேவை என்பதை நினைவில் வையுங்கள், அவன் அந்தத் தவறை ஒரு வெடிப்பாகப் பயன்படுத்தி அதன் மூலமாக அழிவென்னும் வெள்ளத்தை அனுப்புவான் (யாக். 2:10).

மீகாள் தேவனை தகுந்த வகையில் கனப்படுத்தத் தவறினாள் என்பதே

இவளது ஒரே ஒரு தவறாயிருந்தது! பரிசுத்தம் என்பதல்ல ஆனால் மதிப்பு, உண்மையான ஆராதனையல்ல ஆனால் விக்கிரகாராதனை என்பதே இவளது விருப்பமாயிருந்தது. இவள் சவுலின் கீழ் பயிற்றுவிக்கப் பட்டிருந்தாள். அந்த யுகத்தில் மக்கள் தேவனைப் பற்றி அக்கறை கொண்டிருந்ததில்லை (1 நாளா. 13:3). பொது ஆராதனை புறக்கணிக்கப் பட்டிருந்தது, மற்றும் மத வைராக்கியம் மரித்திருந்தது. மீகாள் தேவனை அறிந்திருந்தாள், ஆனால் இவள் உண்மையிலேயே தேவனை "அறிந்திருக்க" வில்லை! இவள் தேவனை "தேராபீமுக்கு" இணையாக வைத்திருந்தாள் (19:16). இவளது பக்தியானது மூடநம்பிக்கை, சம்பிரதாயம், மற்றும் குளிரான தன்மை ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இவள் வளர்ந்த வளர்க்கையில், தாவீதின் பயபக்தியை இனியும் இவளால் சகித்துக் கொள்ள இயலவில்லை! தாவீதில் இவள் ஒரு வீரனையும் அரசரையும் மட்டுமே (காண) விரும்பினாள். இவள் யெகோவாவைப் பற்றி கவலைப்படவில்லை மற்றும் இவ்விதமாக இவள், யெகோவாவுக்கு முன்பாக தாவீது தம்மை இஸ்ரவேல் மக்கள் யாவருடனும் சமமாக வைத்துக் கொண்டதின் மூலம் காண்பித்த தாழ்மையையும் பக்தியையும் குற்றப்படுத்தினாள் (2 சாமு. 6:20).

ஒரே ஒரு தவறு அவளது நேசத்தைக் கசப்பாக மாற்றி விட்டது, மற்றும் இது இன்றைய நாட்களில் திருமணங்களிலும் அதிக கலகம் மற்றும் கசப்புக்குப் பொறுப்பு வாய்ந்ததாக உள்ளது! மகிழ்ச்சி ஆளுகை செய்ய வேண்டிய குடும்பங்கள் பலவற்றில், துணைகளில் ஒருவர் மற்றவரைக் காட்டிலும் தேவனை அதிகமாய் அன்புகூருவதால் கசப்பான சோதனைகள் நிறைந்துள்ளன. அப்படிப்பட்ட இல்லங்களில் இருவரும் பரஸ்பரம் அன்புகூருவதென்று வாக்களித்திருப்பதை அறிந்திருந்தும் அவர்களிருவரும் நித்தியத்திற்கும் பிரிந்திருத்தலை வலியுறுத்துவதால் துன்பம் கூட்டப் படுகின்றது! தேவன் மீது பலத்த விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றுடன் திருமண வாழ்வைத் தொடங்கிய பலர், கலகத்தை மட்டுமே கண்டறியத் தக்கதாக "சமாதானம்" என்ற உறுதிப்பாடுகளுக்குப் படிப்படியாக இணங்கிச் சென்று விடுகின்றார்கள்!

திருமணம் என்ற தீவிரமான அடிவைப்பைப் புரிந்து கொள்வதற்கு, இரு ஆத்துமாக்களை வாழ்வு முழுவதற்கும் ஒன்று சேர்த்து வைக்கின்ற மாற்ற இயலாத படிநிலைகளை மேற்கொள்வதற்கு முன் இந்தக் கருத்தைப் பற்றி எச்சரிக்கையாயிருங்கள்!

விளைவுகள்

இந்த வரலாறு, மதரீதியாகப் பிரிந்துள்ள இல்லத்தின் துன்பநிலை பற்றி திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றது. திருமணப் பிணைப்பு பிரிக்கப்படும் பொழுது ஏற்படும் விளைவுகள் பற்றியும் கணவர் மனைவிக்கு இடையில் பெரும் பிளப்பு ஏற்பட்டு அது அகன்று நிரந்தரமாகுதலின் விளைவுகள் பற்றியும் கவனம் செலுத்துங்கள்.

மேட்டிமையும் வெறுப்பும் கொண்ட ஆவி காணப்படும். மீகாள்

இராஜரீகமான வாழ்வை விரும்பினாள், இவள் "சாதாரண மக்களுடன்" இணைந்து எதையும் செய்ய விரும்பவில்லை. இது, நமது மதிப்பீட்டின் முடிவு நமது விசுவாசத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காண்பிக்கின்றது. விசுவாச விஷயங்களில் இருவர் கருத்து வேறுபடுகின்ற பொழுது, அவர்கள் வாழ்வின் மதிப்பீடுகளிலும் கருத்து வேறுபடுவார்கள். தாவீது பொது மக்களுடன் தாராளமாய்ப் பழகியதினால், அவரது ஒப்புக் கொடுத்தலானது மீகாளின் அரசிக்குரிய மேன்மையின் மீது (தன்) பிரதி பலிப்பை ஏற்படுத்திற்று. மீகாள் தன்னை "சவுலின் மகள்" என்பதாகக் கண்டாள்; இவளது மதிப்பீடுகள் அதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

ஒருவர் மற்றொருவர் மீது வஞ்சகப் புகழ்ச்சியுள்ள மற்றும் கடித்துக் குதறும் மொழிநடையைச் சுழற்றி வீசுகின்ற நிலை ஏற்படும். பண்டிகை நாள் என்பது தாவீதின் வாழ்வில் மிகவும் சந்தோஷமான நாளாயிருந்தது. இவர் தம் இல்லத்தை "ஆசீர்வதிக்கும்" படியாகத் திரும்பியிருந்தார் (6:20). மகிழ்பொங்கும் விருந்தொன்றைக் காணும்படி எதிர்பார்த்தவராக அவர் வந்தார், ஆனால் இவர் நேரடியாக ஒரு "பெருங்குளவியின் கூட்டிற்குள்" நடந்து சென்று விட்டார். அவரை வாழ்த்தி வரவேற்ற முதல் வார்த்தைகள் வஞ்சப் புகழ்ச்சியாகவும் ஏளனமானவைகளாகவும் இருந்தன. அவள், "அற்ப மனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப் போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்து போட்டிருந்த இஸ்ரவேலின் இராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார்" (2 சாமு. 6:20) என்று கூறிய பொழுது (கோபத்தினால்) புகைந்தவளாயிருந்தாள். "அற்ப மனுஷர்" என்பது எபிரெய மொழியில் ஒருவர் பிறர் மீதுள்ள வெறுப்பை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மிக பலத்த சொற்றொடராக உள்ளது. இவள் அவரை "தலையில் ஒன்றுமில்லாத முட்டாள்" என்று அழைத்தாள்! (இ.வ. மத். 5:22.) ஒருவேளை, இந்த எதிர்கொள்ளுதல் தாவீது சங்கீதம் 52:2, 57:4 அல்லது 120:3ஐ எழுத உட்கண்ணோட்டத்தைப் பெற உதவியிருக்கலாம். தாவீது தமது அரச உடையை மட்டும் களைந்து போட்டு சாதாரண குடிமகன் போல உடுத்திக் கொண்டதற்கு, மீகாள் அவர் "நிர்வாணமாய்" இருந்தார் என்று குற்றம் சாட்டினாள். தாவீது - மீகாள் போன்ற திருமணத் தம்பதிகளுக்கிடையில் வஞ்சகப் புகழ்ச்சி மற்றும் கடித்துக் குதறும் வார்த்தைகள் கொண்ட இந்தக் காட்சியானது துரதிர்ஷ்டவசமாகப் பொதுவானதாயுள்ளது.

புரிந்து கொள்ளுதலில் குறைபாடு, வெறுப்புணர்வு மற்றும் கடைசியாகப் பிரிந்து போகுதல் ஆகியவை இருக்கும். தாவீதைப் போல தேவனிடத்தில் அன்புகூர மீகாள் தவறியதால் இவள், ஆராதனையில் வைராக்கியம் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை. இவள் அவரை "அவமதித்தாள்" (6:16), இது இவளின் வெறுப்பின் ஆழமான உணர்வுகளைக் குறித்தது. கிறிஸ்தவர்களில் பலர், தங்கள் கணவர் அல்லது மனைவியினால் ஆவிக்குரிய தன்மையை இழக்கின்றார்கள். விசுவாசத்தில் வேறுபாடு என்பது திருமண வாழ்வில் வெற்றி கொள்ள இயலாத மாபெரும் தடையாக உள்ளது.

வழக்கமாக, தேவனோடு உடன்பாடு மற்றும் துணைவருடன் சமாதானம் அல்லது, தேவனுடன் சமாதானம் மற்றும் துணைவரை விட்டுவிலகுதல் என்பவற்றிற்கிடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டியதாகின்றது.

தாவீது-மீகாள் போன்ற திருமணங்களில் பெரும்பிளப்பு என்பது கடந்து செல்ல இயலாததாகிறது மற்றும் புண்படுதல்கள் குணப்படுத்த இயலாதவைகளாகிறது என்பதே முடிவாயுள்ளது. இதனால் தனிமைப் படுதல் விளைகின்றது.

முடிவுரை

மீகாள் "தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஒரு பெண்ணாக" இருந்திருந்தால், எழுதப்பட்ட முடிவு எப்படிப்பட்ட மாறுதலைக் கொண்டிருந்திருக்கும்! இவளும் தாவீதும் கணவன் மனைவியாக வாழ்வதை விட்டொழித்தார்கள், இவர்களின் அந்நியப்படுதல் அநேகமாக மிகவும் தீவிரமாயிருக்கும் (2 சாமு. 6:23). 2 சாமுவேல் 21:8ல் இவளுக்கு ஐந்து மகன்கள் இருந்ததாக குறிப்புள்ளது, ஆனால் இவர்கள் மேராபின் மகன்களாயிருந்திருக்கக் கூடுமே ஒழிய, மீகாளுக்குப் பிறந்தவர்களாய் இருந்திருக்க வாய்ப்பில்லை. மீகாள் தன் சகோதரியின் மகன்களை வளர்த்தாள் என்பது மெய்யாக உள்ளது.

ஒரு காலத்தில் மென்மையாக இருந்த இந்த காதலானது எவ்வளவு துன்பகரமாக முடிகின்றது! இன்றைய நாட்களிலும் பலர் இதே பாதையைப் பின்பற்றுகின்றார்கள் என்பது எவ்வளவு துன்பகரமானது!

விசுவாசத்தில் சமானமான தன்மையில்லாமல் இரண்டு பேர் ஒன்றாக வாழ முயற்சி செய்ததால்தான் இந்தக் காதல் பேரழிவில் முடிந்தது. இவர்களின் திருமணத்தைப் பின்வரும் வார்த்தைகள் விவரிக்கின்றன: மன்னியாமை, சுயத்தை மையம் கொண்ட தன்மை, மேட்டிமை, கூர்நாவு, வஞ்சப் புகழ்ச்சி, வெறுப்பு நிறைந்த தன்மை, மற்றும் சகியாத தன்மை.

தேவனுடைய பரிசுத்த புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொரு மாணவரும்/மாணவியும், இல்லமானது விசுவாசத்தில் ஒன்றிணைந் திருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதைத் தீவிரமாய்க் கண்ணோக்க வேண்டும். நமது கிறிஸ்தவ இளைஞர்களும் இளம் பெண்களும் கிறிஸ்தவர்களை மட்டுமே நேசிக்கவும், திருமணம் செய்து கொள்ளவும் வேண்டும் என்றும், இவ்விதமாக அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு தாவீது-மீகாள் அனுபவித்த கசப்பான துன்பத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும் நாம் அவர்களை வற்புறுத்தி வேண்டிக் கொள்வது அவசியமாக உள்ளது! இந்தத் துன்பமானது அவர்களின் இல்லங்களில் மீண்டும் இருக்க அவசியமில்லை என்ற உணர்வறிவை நாம் அவர்களுக்குள் பதியச் செய்ய வேண்டும்.

தோவேக்கு துரோகச் செயல்களுக்கு (துக்க) வெகுமதியளிக்கப்பட்டது

(21:1–22:22)

கடல் நீர்களின் வரைபடங்களில் தண்ணீர்களுக்கடியில் மறைவான பாறைகள் உள்ள இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பாறைகள் பயங்கரமான அச்சுறுத்தலாக இருப்பினும், ஒன்றும் அறியாதவை போல் சித்தரிப்பை முன் வைக்கின்றன. இவற்றின் அபாயங்கள் பற்றி சந்தேகம் சற்றுமின்றிச் செல்லும் கடல் மாலுமிகளை செய்தியறிக்கைகள் பல முன்னெச்சரிக்கைப் படுத்துகின்றன. இந்தப் பாறைகள், ஒன்றுமறியாதவர் போன்ற சித்தரிப்பை முன் வைக்கின்றவரும், உண்மையிலோ விஷத்தினாலும் மரணத்தினாலும் நிறைந்துள்ளவருமான "துரோகியான நபருடைய" அபாயம் போன்றுள்ளன.

1 சாமுவேலில், ஏதோமியனான தோவேக்கு இப்படிப்பட்ட சூழ்ச்சியை சுருக்கமாய் உரைப்பவனாக இருந்து, இவன் செய்தது போலச் செய்கின்ற எல்லாருக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கிறான்.

தோவேக்கு ஏதோமியன் என்று விவரிக்கப்படுகின்றான். இவன் ஒரு இஸ்ரவேலன் அல்ல, ஆனால் ஏசாவின் வம்சத்தில் வந்த புற இனத்தவனாயிருந்தான். தோவேக்கின் இனத்திற்கும் இஸ்ரவேல் இனத்திற்கும் இடையில் விரோதம் நிலவி வந்தது. கல்வி மற்றும் பழக்கவழக்கம் ஆகியவற்றினால் இவன் வரவிருந்த மேசியாவுக்கு மிகவுயர்ந்த பரிவுகளைப் பகிர்ந்து கொள்ள இயலாதவனாயிருந்தான். தோவேக்கு நோபில் மதச் சடங்கு ஒன்றைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்ததால், இவன் இஸ்ரவேலரின் விசுவாசத்திற்குள் வந்து சேர்ந்த யூதமார்க்கத்தமைந்தவனாயிருந்தான் என்பது உறுதி (21:7). இவன் சவுலின் அரண்மனையில் மேய்ப்பருக்குத் தலைவன் என்ற பட்டத்தைப் பெற்று முக்கியமான நபராயிருந்தான்.

இவனுடைய துரோகச் செயல்கள்

தோவேக்கின் துரோகமுள்ள இயல்பு 1 சாமுவேலில் வாசகருக்குத் தெளிவாகின்றது. தாவீது தமது உயிருக்குப் பயந்து ஓடிக் கொண்டிருந்தார், அவர் நோபில் இருந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குச் சென்றார். சீலோவின் அழிவிற்குப் பிறகு சவுல், ஆசரிப்புக் கூடாரத்தையும் அதன் ஆராதனை களையும் நோபிற்கு மாற்றியிருந்தார் என்பது தெளிவு. தாவீதின் வாழ்வு மிகவும் நலிந்து நிலையில் இருந்தது. தேவன் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம் பலவீனமாயிருந்தது, மற்றும் அவர் தமது சுயபலத்தின் மீது சாய்ந்திருந்தார். அவர் பிரதான ஆசாரியரிடம் பொய் கூறி கோலியாத்தின் பட்டயத்தையும் பரிசுத்த அப்பங்கள் சிலவற்றையும் பெற்றுக் கொண்டார். தோவேக்கை (அடையாளம்) கண்டுகொண்ட பிறகு அவர் நோபை விட்டு அவசரமாய்ப் புறப்பட்டுச் சென்றார்.

தோவேக்கு தனது மதச் சடங்குகளை முடித்த பிறகு நேராகச் சவுலிடம் சென்று இந்த நிகழ்ச்சி முழுவதையும் அவரிடத்தில் அறிக்கை செய்தான். தோவேக்கின் செய்தி முதலில் (சவுலிடம்) தனியாகவும் பிறகு 22:6 முதல் உள்ள வசனங்களின்படி வெளியரங்கமாயும் கூறப்பட்டதென்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். உண்மையான விஷயம் கூறப்படும்படி, ஆனால் அதே வேளையில் இன்னொரு சித்தரிப்பை முன்னிறுத்தும்படி அதைத் திரித்துக் கூறும் வகையில் தோவேக்கு தனது வார்த்தைகளை வடிவமைத்தான் (22:9, 10). இவனது வார்த்தைகள், ஒன்றுமறியாத ஆசாரியர்களை ஆக்கினைக்குட்படுத்தி, ஆசாரியர் குலம்முழுவதையும் இரக்கமின்றிக் கொன்றுபோடும்படி சவுல் கோபம் கொள்ளக் காரண மாயிற்று. பயங்கரமும் இரக்கமற்றதுமான இந்தக் கட்டளையை நிறைவேற்ற அரசரின் ஊழியக்காரர்கள் மறுத்துவிட்ட பொழுது, சவுல் தோவேக்கிடம் திரும்பி “நீ போய் ஆசாரியர்களைக் கொன்று போடு” என்று கூறினார். இவன் அதை நிறைவேற்றினான். தோவேக்கு இதைத் திட்ட மிட்டு, இதைச் செய்து முடிக்கும்படி சவுலைத் தூண்டிவிட்டான், வெறுப்பினிமித்தமாக ஒன்றுமறியாத மக்களைக் கொலை செய்தான், மற்றும் தனது ‘‘வீரத்துவமான’’ செயல் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளவும் துணிந்தான்! இதை விட அதிகமாக பெருங்குற்றம் செய்த மிருகத் தன்மை கொண்டவன் ஒருவனை நாம் வேதாகமம் முழுவதிலும் காண முடியுமா? உயிர் பிழைத்த ஒரே ஒருவர் மூலமாக இந்தச் செய்தி தாவீதுக்கு எட்டிய பொழுது, சங்கீதம் 52 எழுதப்பட்டது.

இவனுடைய துரோக குணத்தின் அடையாளங்கள்

துரோகத்தின் அடையாளங்கள் தோவேக்கின் குணத்தில் பதிந் திருந்தன. தோவேக்கு செய்தது போல நாமும் இவற்றைப் பேணிவிடக் கூடும் என்பதால் இவற்றை நாம் ஜாக்கிரதையாக உற்று நோக்குவோம்.

இவன் தனது நாவை பொறுப்பற்ற வகையில் பயன்படுத்தினான்

(22:9, 10; சங். 52:2, 4). பிரதான ஆசாரியர் தாவீதைக் கேள்வி கேட்டுச் சோதித்ததைக் கூறத் தோவேக்கு தவறி விட்டான். தோவேக்கு தன் இலக்கிற்குப் பொருத்தமான வகையில் தனது வார்த்தைகளை வடிவமைத்தான், பிரதான ஆசாரியர் மீது மிக மோசமான கருத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இவனது நோக்கமாயிருந்தது! சங்கீதம் 52:2ல், இவன் "கேடுகளைச் செய்ய எத்தனம் பண்ணுகிறான்" என்று நேரடியாகவே கூறப்பட்டுள்ளது. இவன் ஒவ்வொரு வார்த்தையையும் ஜாக்கிரதையாய்த் திட்டமிட்டு கட்டியெழுப்பினான். இவன் ஆசாரியர்களை அழிப்பதற்குத் தனது நாவைப் பயன்படுத்தினான் (22:4). பட்சிக்கிற வார்த்தைகள் பிறருடைய வாழ்வை அழித்துச் சிதைக்கின்ற வார்த்தைகளாய் உள்ளன.

துரோகம் செய்கின்ற நபரை ஜாக்கிரதையற்ற நாவு எவ்வளவாய் அடையாளப்படுத்துகின்றது! யாக்கோபு 3:6 வசனமானது, "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகின்றதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!" என்று கூறுகின்றது. பாவத்தின் சோதனையை பின்பற்றி, பிறரை அழிக்கும் விஷயங்களைக் கூறுவது எவ்வளவு சுலபமானதாக உள்ளது. தோவேக்கு புறங்கூறி, தேவனுடைய மக்களை அழித்தான். நாம் நமது நாவை அடக்கத் தவறுகின்ற பொழுது இவ்விதமான விளைவுகள் ஏற்படுகின்றன (அமெரிக்க) உள்நாட்டு யுத்தத்தில் நம்பிக்கையிழந்து நின்ற ஒரு வேளையில், லிங்கன் தனது தளபதிகளை அழைத்து ஒரு (ஆலோசனை) கூட்டம் நடத்தினார். அவர்களில் ஒருவர் மிக அதிகமாய்ப் பேசுபவராக, அமைதி காக்காதவராக இருந்தார். பேசிக் கொண்டே இருந்த அந்தத் தளபதி அடர் கறுப்பான தலைமுடியும் வெள்ளை நிறத் தாடியும் கொண்டிருந்தார். லிங்கனின் அருகில் இருந்த ஒரு தளபதி, அவர் (பேசிக் கொண்டேயிருந்தவர்) ஏன் வெள்ளைத் தாடியும், கறுப்பான தலைமுடியும் கொண்டுள்ளார் என்று கேட்டார். அதற்கு லிங்கன், "ஏனென்றால், அவர் தன் தலையைக் காட்டிலும் தன் தாடையினால் அதிக வேலை செய்கின்றார்" என்று பதில் அளித்தார். இது, பொறுப்பற்ற பேச்சுக்களில் பங்கேற்கின்ற எல்லாருக்கும் பொருந்துகின்ற உண்மையாக உள்ளது!

இவன் சுயத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தான். தோவேக்கு, "இதில் எனக்குள்ளது என்ன?" என கேட்பவனாயிருந்தான். இவன் தன்னையே இந்த அண்டத்தின் மையமாக வைத்துக் கொண்டான். சவுல் சித்தம் கலங்கி தம்மைச் சுற்றியிருந்தவர்களைக் கேள்வி கேட்டார் (22:8). அந்தச் சூழ்நிலையைத் தோவேக்கு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

இங்கு எல்லா துரோகத்திற்கும் ஆதாரமான அஸ்திபாரம் ஒன்றுள்ளது. சுயநலத்தைப் போஷித்துக் கொண்டிருக்கும் போது, நாம் தேவனுடைய கண்ணோட்டத்தை இழந்து விடுகின்றோம். சுயநலம்தான் தோவேக்கை பேராசைக்கு வழிநடத்திச் சென்றது. சவுலின் தயவைப் பெறுவதற்காக இவன் எதை வேண்டுமென்றாலும் செய்யத் தயாராயிருந்தான்! சங்கீதம் 52:7அ வசனமானது. சுயநலமே இவனை உலகப் பிரகாரமான எண்ணத்திற்கு வழிநடத்திற்று என்று வெளிப்படுத்துகின்றது (ரோமர் 1:28).

தோவேக்கைப் போலவே சுய(நல)த்தால் மட்டும் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் மக்களை இன்றைய நாட்களில் காண்பது என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! இவர்கள், தாங்கள் துரோகத்தால் வழிநடத்தப் படுகின்ற உண்மையை காண முடியாதபடி பார்வையற்றுப் போயிருக் கின்றார்கள் (1 யோவா. 2:15; பிலி. 2:4; சங். 52:7ஆ).

இவன் ஒரு கோழையாயிருந்தான். "தோவேக்கு" என்ற பெயர் கூச்சமுள்ள அல்லது பயம் நிறைந்த என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது. தோவேக்கு தனது பொல்லாத செயல் செய்யப்பட்ட பிறகு அதைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டான் என்பது உறுதி. சங்கீதம் 52:1 வசனமானது, "பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமை பாராட்டு கிறாய்? தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது" என்கிறது. எவ்வளவாய் வெறுப்பூட்டுகிற விஷயமாக உள்ளது! இவன் தனக்கே மதிப்பைத் தேடிக் கொண்டு, எல்லாரும் காணும்படி தன்னைத்தானே ஒரு மேடையில் வைத்துக் கொண்டான். மேட்டிமை மற்றும் பரிசுத்தக்கேடு என்பவை துரோகியான நபரின் தெளிவான சித்தரிப்பாக உள்ளது. "சுயம்" என்பது தன் மீதே பெருமை கொள்ளும்படி செய்கிறது, மற்றும் தோவேக்கு இதை மிக நன்றாக விவரிக்கின்றான் (ரோமர் 11:25; 12:16).

இவன் வெறுப்பினால் நிறைந்திருந்தான். இவன் பரிவிரக்கமோ அல்லது இரக்கத்தன்மையோ இல்லாதவனாயிருந்தான். தோவேக்கு பச்சிளம் பிள்ளைகளின் மீது பரிவற்றவனாக, வயது சென்றவர்களுக்கு மதிப்பளிக் காதவனாக, உயிரைக் குறித்த பயபக்தியில்லாதவனாக இருந்ததைப் புரிந்து கொள்கிற பொழுது, அவனது கொடூரத் தன்மை திகைப்புக்குரியதாக உள்ளது. இவன் ஆசாரியர்களின் ஒன்றுமறியாத் தன்மை குறித்துச் சவுலை வேண்டுமென்றே தவறாக வழிநடத்துமளவுக்கு வெறுப்பினால் நிறைந்திருந்தான்.

துரோகச் செயலானது ஒன்றுமறியாதவர்களை மதிப்பதில்லை, ஆனால் சுய(நல)த்தை மட்டும் மதிக்கிறது. துரோகம் செய்யும் நபரின் முதல் இலக்காக இருப்பது சுயலாபமேயாகும். அதில் (சுயலாபத்தில்) இடையூறு ஏற்பட்டால், வெறுப்பானது அழிப்பதற்கு ஒரு வழியைக் கண்டறியும்!

இவன் தேவன் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. இவனது ஆராதனையைப் பற்றிய எண்ணப்போக்கில் இவனது நம்பிக்கைக் குறைவு தெளிவாகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்தபோதும், இவன் தேவனை விட்டு மிகவும் தூரத்தில் இருந்தான் (சங். 52:7). இவன் (சடங்கு) முறைகளைச் செய்தான், ஆனால் ஆவியைத் தவற விட்டான். இது இன்றைய நாட்களிலும் நடக்கின்றது (1 தீமோ. 2:8ஆ).

துரோகம் செய்கின்ற நபர் தேவனைச் சார்ந்திருப்பதில்லை. வெறுப்பை யும் உணர்வற்ற நிலையையும் சேர்த்து வைக்கின்ற மனிதன், தன்னையே தேவன் சார்ந்திருப்பதாக நினைக்கின்றான். துரோகம் செய்யும் மனிதன் தனக்குச் சொந்தமான தர அளவைகளை ஏற்படுத்திக் கொண்டு, அவற்றையே பிரமாணமாக மதிக்கின்றான். துரோகம் செய்கிற மனிதன் அன்பிற்கான தேவனுடைய கட்டளைகளைச் செவிட்டுத்தனமாகவே பெற்றுக் கொள்கிறான்.

துரோகம் செய்கிற மனிதன் இரு விஷயங்களில் மகிழ்வடைவதாக சங்கீதம் 52:3ல் சித்தரிக்கப்படுகின்றான்: (1) தேவனுடைய நன்மை என்ற வகையில் தூண்டப்பட்ட ஒழுக்கமுறைமை புறக்கணிக்கப்படுகின்றது மற்றும் (2) தேவனுடைய நீதி கைவிடப்படுகையில் உடன்படிக்கையின் கட்டளை முறிக்கப்படுகிறது.

இவனது துரோகத்திற்கான தெளிவான பலன்

தோவேக்கின் வாழ்க்கை பற்றிய எடுத்துரைப்பு, எல்லாத் துரோகங்களுக்கும் (உரிய) பலன் அளிக்கப்படும் என்பதை வெளிப்படுத்துகிறது (ஓசி. 10:13அ). தோவேக்கின் துரோகம், கடைசியில் பரிதாபமான விளைவுகளைக் கொண்டு வந்தது.

இது பாவத்திற்கு இன்னும் சாய்ந்து போகும் *பலனைப் பெற்றது* (சங். 52:3). பாவத்திற்கு "அடிமைப்படுதல்" என்பது, துரோகம் செய்யும் மனிதனால் தவிர்க்க இயலாததாகி விடுகின்றது. 2 பேதுரு 2:14ம் வசனமானது, "விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டொழியாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்" என்று கூறுகிறது. (இப்படிப்பட்ட) ஒருவர் விரைவில் தம்மை அதிகமான புறங்கூறுதல், கசப்பு, வெறுப்பு முதலியவற்றில் இருக்கக் காண்கின்றார். துரோகம் செய்கிற மனிதன் தேவனைப் புறக்கணிப்பதால் (சங். 52:3), தவறிலேயே விடப்படுகின்றார் (ரோமர் 1:21-24). இது எவ்வளவு கவலைக்குரிய வெகுமதியாக உள்ளது!

இது அழிவு என்ற *பலனைப் பெறுகிறது* (சங். 52:5). தேவனுடைய நியாயத்தீர்ப்பு படிப்படியான சொற்றொடர்களால் விவரிக்கப்படுகிறது. முதலாவது, "தோல்வியுறச் செய்தலும்" பிறகு "நீக்கிப் போடப்படுதலும்" கடைசியில், "நீர்மூலமாகுதலும்" உள்ளன. இவ்விதமாக, வன்மையான, விரைவான, தீர்மானமான மாற்றம் இல்லையென்றால், பரிதாபமான முடிவு வரும் என்று தேவன் நம்மை எச்சரிக்கின்றார் (லூக். 13:3).

இது தனிமைப்படுதல் என்ற *பலனைப் பெறுகின்றது* (22:22). ஒருவரின் குணாதிசயம் வெளிப்படுத்தப்படும், ஒரு காலத்தில் வலிவார்ந்ததாக நினைக்கப்பட்ட புகழ் மறைந்து ஒழிந்து விடும். தோவேக்கு எப்படிப்பட்டவன் என்று தாவீது அறிந்தார், அவனுடன் (எதிலும்) பங்கு பெற அவர் விரும்பவில்லை. இன்றைய நாட்களில் துரோகியான மனிதன் இதே வகையான பதில்செயலைக் கண்டறிகிறான். எவரொருவரும் அவனிடம் இருக்க விரும்புவதில்லை. அவனது சுயநலமான பேராவல், கத்தி-முனை போன்ற நாவு, வலிவான வெறுப்பு ஆகியவை அருவருத்து வெறுக்கச் செய்கின்றன.

முடிவுரை

தோவேக்கிடமிருந்து ஒரு பாடத்தை நாம் கற்றுக் கொள்வது அவசிய மாகும்: சுயநலம் என்பது நமது வாழ்வில் கொண்டுவருவது பேரழிவுக்கான ஓட்டமேயாகும்! தோவேக்கில் நாம் "பார்வையற்ற பேராவலின்" பயங்கரத்தைக் கண்டறிகிறோம். இந்த உலகில் முன்னணியில் இருப்பதற் காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருப்பவர்களுக்கு சொல்லொண்ணாத அழிவு காத்துள்ளது. "பார்வையற்ற பேராவல்" என்பது, தோவாக்கு செய்ததைப் போல போர்வையணிந்த சுத்தமான சுயநலமாக மட்டுமே உள்ளது. தோவேக்கு வெற்றி பெற்றதாகத் தோன்றியது - இவன் அரசரின் அங்கீகாரம், முன்னேற்றம் முதலியவற்றைப் பெற்றுக் கொண்டான், ஆனால் அது ஒரு சிறிய காலமே இருந்தது. பிறகு இவன் நம்ப இயலாத வேதனை, பொல்லாங்கு, மற்றும் ஆழமிக்க பாவம் ஆகியவற்றின் அறுவடையைக் கண்டான் (சங். 52:5).

வாழ்கின்ற யாவருக்கும் வாழ்வானது இரண்டு தேர்ந்து கொள்ளுதல் களைக் கொண்டுள்ளது. நாம் தேவனுடன் வாழ்ந்து, (வாழ்வின்) எல்லாத் துறைகளிலும் அவரது வசனத்திற்குக் கீழ்ப்படியலாம். (அப்போது) நாம் செல்வமும் புகழும் பெறாமல் போகலாம், ஆனால் நாம் நிறைவடைந் திருப்போம். சங்கீதம் 52 பின்வரும் வசனங்களுடன் முடிவடைகின்றது:

> நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன். நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன்; உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது (சங். 52:8, 9).

அல்லது, நாம் தேவனின்றி, சுயத்தில் நம்பிக்கை கொண்டு நமது துரோகத்தின் கனிகளை அறுவடை செய்யும் வகையில் வாழலாம். உலக உருண்டையின் குறுக்கே எண்ணற்ற மனிதர்கள் தங்கள் படைகளுடன் சிலைகளை நிறுவியும், நாடுகளை வடிவமைத்தும், விரோதிகளை வென்றும் ஓடோடியுள்ளனர். இவர்கள் உண்மையில் "பலம் வாய்ந்த" மனிதர்கள் அல்லர். இவர்களின் தோல்வி எப்பொழுதும் வரும், இவர்களின் வரலாறு மறதியில் தேய்ந்து போகும். ஆனால் நீதிமானான மனிதர் என்றைக்கும் வாழ்வார்.

ஒரு எழுத்தாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "மனித குலம் கீழ்ப்பட்டிருக்கக் கூடிய எல்லாக் குற்றங்களிலும் துரோகம் என்பது மிகவும் வெறுத்து ஒதுக்கக் கூடியதாக உள்ளது, இது வஞ்சகம், கோழைத்தனம் மற்றும் பழிவாங்குதல் ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கையாக உள்ளது." மாபெரும் தவறுகள் கூட துரோகத்தை நியாயப்படுத்த இயலாது, ஏனென்றால் இது நமது சமுதாயம் நிலைநிற்க உதவுகிற நம்பிக்கை, பாதுகாப்பு ஆகியவற்றை அழிக்கின்றது. கிறிஸ்தவம் புண்படுத்துதல்களை மன்னிக்கும்படி நமக்குப் போதிக்கிறது, ஆனால் அவற்றை நட்புறவு மற்றும்

உபகாரம் என்ற போர்வையின் கீழ் கடுஞ் சீற்றத்துடன் மறைத்துக் கொண்டு இருத்தல் என்பது பொதுவான பண்புச் சீர்குலைவை எடுத்துரைப்பதாக உள்ளது, இது நீதியை அவமானத்துக்கு உள்ளாக்குகின்றது!

"நாயை நாய் உண்ணும்" நமது சமுதாயத்தில் மற்றும் "குரல் வளையை அறுக்கும்" நம் வியாபாரக் கொள்கைகளில்/தத்துவங்களில், எல்லாக் கிறிஸ்தவர்களும் ஏதோமியனான தோவேக்கை நினைத்துப் பார்த்து, மேம்பாடுகளில் முந்தியிருப்பதற்காக துரோகத்தை ஒரு வழிமுறையாகப் பயன்படுத்துவதில்லை என்று முடிவெடுப்போமாக. துரோகம் என்பது முடிவில் ஒருவர் செலுத்த வேண்டியதாயுள்ள விலைக்குத் தகுதி வாய்ந்தது அல்ல!

நாபால்

பேலியாளின் மகன்

(25:2-39)

நன்மையைக் காட்டிலும் தீமையானது தனது செயல்விளைவை உண்டாக்குவதில் மற்றும் தனது இயல்பைப் பரப்புவதில் வல்லமை மிக்கதாக உள்ளது. மாசான பொருளின் ஒரு துளியானது ஒரு பாத்திரம் முழுவதிலும் உள்ள தண்ணீரைக் கெடுத்துவிடும்; ஆனால் ஒரு துளி நல்ல தண்ணீரானது, ஒரு பாத்திரம் நிறைய உள்ள மாசற்ற தண்ணீர் மீது அவ்வளவு வல்லமை கொண்டிருப்பதில்லை. ஒரு பல் அல்லது கால்விரல் ஒன்றில் ஏற்படும் மிகுந்த வலியானது முழு மனிதனையும் பரிதாபத்திற்கு உரியவனாக்கிவிடும், ஆனால் அவனது உடலின் பிற பாகங்கள் யாவும் துன்புறும் பொழுது, நன்றாக உள்ள ஒரு பல் அல்லது கால்விரலானது உணர்ந்தறியத்தக்க வகையில் அந்தத் துயரைத் தணிப்பதில்லை.

தீமையின் ஒரு சிறிய பகுதியானது சமாதானத்தையும், இணக்கத்தையும், மகிழ்ச்சியையும் அழித்துப் போட்டுவிட முடியும். 25:2-39ல், இது நாபாலினால் விவரிக்கப்படுகின்றது. வேத வசனத்தில் இவன் என்றென்றைக்கும் "பேலியாளின் மனிதன்" என்று நினைவுகூரப் படுகின்றான். இந்தப் பட்டமானது, இவன் ஒன்றுக்கும் உதவாதவன் என்றும் சாத்தானுடன் தொடர்புடையவன் என்றும் நேரடி அர்த்தம் தருகின்றது.

நாபால் ஒரு செல்வந்தனாக இருந்தான், இது அவனுக்கிருந்த செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் திரளான மந்தைகளினால் மெய்ப்பிக்கப்பட்டது (25:2). ஆயினும் அவனது "மேன்மை" என்பது உலகம் எதைக் குறித்துப் பெருமை பாராட்டுமோ, அந்த வகையைச் சேர்ந்ததாகவே இருந்தது. இவன் காலேபின் சந்ததியைச் சேர்ந்தவனாயிருந்தான். இது "நாய்க் குணம் கொண்டவன்" என்று மொழிபெயர்க்கப்படக் கூடும், மற்றும் இது யோசுவாவின் காலத்தில் இருந்த முன்னோடியானவரைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் வேளை வந்தது. அது கொண்டாட்டங்கள், மகிழ்ச்சி, அபரிமிதமான உபசரிப்பு ஆகியவற்றின் வேளையாயிருந்தது (இ.வ. 2 சாமு. 13:23, 24). "ஆதாயங்கள்" கணக்கிடப்படும், பெற்றுக் கொண்ட பணிகளுக்கான ஊதியங்கள் கொடுக்கப்படும். உலோபியான நாபால் (இவ்விதமாக) வழக்கமாயிருந்த மகிழ்ச்சி மற்றும் உபசரிப்பைக்

கொண்டிருக்கவில்லை. தாவீது நாபாலுக்குப் பெரிய சேவை ஒன்றைச் செய்திருக்க (25:14-16), அந்த சேவைக்கு ஊதியம் தர நாபால் சீறி விழுந்தான். நாபால் காட்டிய இந்த வெறுப்பான எண்ணப்போக்கானது அவனைத் தனது பூமிக்குரிய மரணத்திற்கு வழிநடத்திற்று.

நாபால் தன்னைச் சுற்றியிருந்தவர்களின் சந்தோஷத்தைக் கெடுத்துப் போட்டான். இவனது முரட்டுத்தனமும் கொடூரமும் நிறைந்த இயல் பினால், தேவபக்தியுள்ள (இவனது மனைவி) அபிகாயில், துன்புற்றாள், மனைவி என்ற அந்தஸ்திற்குரிய அவளது மரியாதை மற்றும் அன்பு யாவும் இறந்து போனது (25:25). வேலைக்காரர்கள் நாபாலை நயப்பாங்கற்ற வனாகவும் தேவனுடைய பிரதான விரோதியைச் சார்ந்தவனாகவும் கண்டார்கள்.

நாபாலின் விதைப்பு

நாபால் சுய நிறைவு உள்ளவனாயிருந்தான் (25:11). இவன் தனக்கு வேறெவரும் தேவையில்லை என்று நினைத்தான். இவன் தனக்கு மனிதருடனும், சர்வ வல்லவருடனும் கூட சமாதானம் தேவையில்லை என்று நம்பினான் (25:6, 10). இந்த எண்ணப்போக்கானது இவன் கடுமை யானவனாகவும் கொடுமைக்காரனாகவும் இருக்கக் காரணமாயிற்று (25:3). இவன், இந்த உலகில் தேவன் இல்லாமல் வாழுகின்ற எல்லாருடைய கவலைமிக்க வாழ்வையும் நன்கு விவரிக்கின்றான். நாபால் தனது முரட்டுக்குணத்தின் காரணமாக தனக்கு உதவிமிக்க ஆலோசனை தந்த யாவரிடத்திலும் தலைக்கனத்துடனும் வெறுப்புணர்வுடனும் நடந்து கொண்டான் (25:17ஆ). இவன் நியாயமற்றவனாகவும், உலோபியாகவும் இருந்தான் (25:21). இவன் பிறரை அவமதிப்பவனாகவும் இருந்தான் (25:10-12). இவன் பண்பற்ற அவமானப்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தினான் (25:14). நாபால் தீமையான பேச்சைப் பயன்படுத்தி னான். இவனது வார்த்தைகள் கரடுமுரடாக, கொடூரமானதாக, அவமானப் படுத்துவதாக இருந்தன. 25:14ல் "சீறினார்" என்ற வார்த்தையானது, நாபால் "இரை மீது பாயும் பறவையைப் போலப் பாய்ந்தான்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. கட்டுப்பாடற்ற நாவு எப்பொழுதுமே மதியீனனை அடையாளப்படுத்துகின்றது (நீதி. 10:14; 18:6, 7). மதியீனமான பேச்சைப் பயன்படுத்திய நாபால், தாவீதின் மீது இயன்ற அளவு மாபெரும் அவமானத் தைச் சுழற்றி எறிந்தான், அவ்வாறு செய்வதில் அகம் மகிழ்ந்தவனாகக் காணப்பட்டான் (25:10, 11). நாபால் தனது வார்த்தைகளின் விளைவு களைப் பற்றிச் சிந்திக்காமலேயே பேசினான்.

நாபால், மற்றவர்கள் தீமை செய்யும்படி அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தினான். இவனது பிரசன்னம், வார்த்தைகள் மற்றும் நடையுடை பாவனைகள் ஆகியவை, தாவீதை அவரது பண்புக்கு முற்றிலும் ஒவ்வாததைச் செய்யத் தூண்டிற்று (25:13, 22). தாவீது எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு முன்பு தேவனிடம் ஆலோசனை கேட்பது வழக்கம், ஆனால் இம்முறை நாபால், தாவீது தமது சுயகட்டுப்

பாடு யாவற்றையும் இழந்து போகும்படி அவருக்கு அதிகமாக எரிச்சல் மூட்டினான். இது நியாயமற்றதாயிருந்தது, தாவீது தமது தவறை உணர்ந்தார் (25:32, 33).

நாபால் நன்றியற்றவனாகவும் இருந்தான். இவன் தனக்குத் தாவீது செய்திருந்தவை என்ன என்பதை ஒப்புக் கொள்ளவும் இல்லை (25:16, 21). நன்றியுடைமையில் உள்ள இவ்விதமான குறைபாடு எப்பொழுதுமே சாத்தானின் சந்ததியைக் குறிப்பதாக உள்ளது!

நாபால் மதுபானம் பண்ணுகிறவனாயிருந்தான். இவன் வெறிகொள்ளு மளவுக்கு அதிகமாய் மதுபானம் அருந்துகிறவனாயிருந்தான். இவன் அதைத் தன்னை மறந்த நிலையில் மகிழ்வுடன் அனுபவித்து சுயமானது தனது விருப்பங்களைக் கட்டுப்படுத்த அனுமதித்தான். இப்படிப்பட்ட பண்பானது சாத்தானைப் பின்பற்றுபவர்களுடன் தொடர்புடையதாக வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது (நீதி. 31:4-6; 20:1 முதலியன).

நாபாலின் அறுவடை

பிசாசின் குணங்களுடன் வாழ்கின்ற ஒருவன் கீழ்த்தரமான விளைவு களையே அறுவடை செய்ய இயலும். நாபாலின் பொல்லாத வழிகளின் நேரடியான விளைவுகள் என்ற வகையில் அவனது வாழ்வானது, அச்சத்திற் குரிய மூன்று விளைவுகளைக் கொண்டது.

நாபால் எவரொருவராலும் மதிக்கப்படவில்லை! இவன் செல்வத்தை மகிழ்வுடன் அனுபவித்தான், இப்படிப்பட்ட மேன்மையும் வல்லமையும் இவனுக்கு மதிப்பளித்திருக்க வேண்டும்-ஆனால் அவ்வாறு நடைபெற வில்லை! நாபாலின் செயல்களினால் ஒரு இளைஞன் வெட்கப்படுத்தப் பட்டான் (25:17). இந்த வேலைக்காரனின் முடிவு வார்த்தைகள், நாபால் தனது வேலைக்காரர்களிடத்தில் காண்பித்த மரியாதைக் குறைவைச் சுட்டிக் காட்டுகின்றன. அவர்களைப் பொறுத்தவரை, நாபால் "பேலியாளின் மகன்" என்று அறியப்பட்டிருந்தான் (இ.வ. 2 கொரி. 6:15). தேவபக்தியுள்ள அபிகாயில், தனது கணவன் மீது மதிப்பு வைத்திருக்கவில்லை (25:25). அவளது கருத்தானது வேலைக்காரர்களின் கருத்தை விடவும் தாழ்ந்ததாக இருந்தது. இப்படிப்பட்ட செல்வாக்கானது, தேவன் தம்மைப் பின்பற்று பவர்கள் வளர்த்துக் கொள்ளும்படி விரும்புகின்றவற்றிற்கு நேரெதிராக உள்ளது (மத். 5:16; 1 பேது. 2:11, 12).

வரலாற்றில் நாபால் "மாபெரும் மதியீனன்" என்ற வகையில் மிகவும் தாழ இறங்கியுள்ளான். இவன் தனது பெயருக்கு ஏற்றவாறே வாழ்ந்தி ருந்தான் (25:25), ஏனென்றால் இவனது செயல்கள் யாவற்றிலும் தவறு நிறைவேற்றப்பட்டது. இவன் அறிவிலியாக, பொல்லாதவனாக, தேவனற்ற வனாக இருந்தான். கைதிகளை அடைத்து வைக்க இரும்புக் கூண்டு ஒன்றைச் செய்யும்படி பதினோராம் லூயி என்ற பிரான்ஸ் நாட்டு மன்னனுக்கு ஆலோசனை கொடுத்த வேர்டு நகர ஆயர் போலவே நாபாலும் அறிவற்றவனாக இருந்தான். அந்தக் கூண்டிற்குள் ஒரு மனிதன் நிமிர்ந்து நிற்கவோ அல்லது கீழே கிடக்கவோ கூடாமல், எப்பொழுதும் வளைந்த

நிலையிலேயே இருக்கும்படி அது கட்டப்பட வேண்டியதாயிருந்தது. சில காலத்திற்குப் பிறகு, அந்த ஆயர் அரசனுக்குப் பிரியமற்றுப் போனார், அப்பொழுது அவர் வடிவமைத்திருந்த கூண்டிற்குள் அவரே முதன் முதலாக அடைக்கப்பட்டார்! அதில் அவர் பதினான்கு ஆண்டுகளாக அடைபட்டுக் கிடந்தார்.

நாபாலின் வாழ்வு கசப்பாக முடிவுற்றது (25:37-39). நாபால் எவ்வாறு மரித்தான் என்பது பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஏறக்குறைய நடந்தது என்ன என்பதை அறிந்து அதிகமாய்ப் பயந்ததின் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பினால் இவன் பத்து நாட்களில் இறந்து போனான் என்று சிலர் கூறுகின்றார்கள். மற்றவர்களோ, நாபால் தனது குணத்தில், தாவீதின் மீது மூர்க்க கோபம் கொண்டு, அத்துடன் அபிகாயில் செய்த செயலும் அவனது கோபத்தை அதிகரித்து, அதன் மூலம் மாரடைப்பு ஏற்பட்டு, பத்து நாட்களுக்குள் இறந்து போனான் என்கிறார்கள்.

''சாத்தானின் மகனுக்கு'' எப்பொழுதுமே நம்பிக்கையற்ற சாவு காத்துள்ளது. நிச்சயமாக இது, தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றி அதற்குக் கீழ்ப்படிவதற்கு ஒரு உந்துதலாயிருக்கின்றது (நீதி. 5:22; 11:7ஆ; 14:32; சங். 116:15; பிர. 7:1). சவ அடக்கச் சடங்குகளில் பொதுவாக, "அவர் எப்படி வாழ்ந்தாரோ அப்படியே இறந்தார்" என்ற கூற்று பயன்படுத்தப் படுகின்றது. இது நாபாலைப் பொறுத்தமட்டில் எவ்வளவு உண்மையாய் உள்ளது! இது இன்றைய நாட்களின் மனிதர்களுடைய விஷயத்திலும் உண்மையானதாகவே உள்ளது. நமது வாழ்வு கசப்பான வகையில் முடிவடைவதை நாம் விரும்பாவிட்டால், தேவன் இயக்குகின்றபடி நாம் வாழ வேண்டும்.

நாபாலிடமிருந்து இன்றைக்கான பாடங்கள்

ஒரு "நாபாலை" திருமணம் செய்துகொண்டு தேவனுக்கு உண்மை நிறைந்தவராக நிலைத்திருத்தல் என்பது சாத்தியமானதாகவே உள்ளது. நாபாலின் வீட்டில் இருந்த சூழ்நிலையானது மகிழ்வற்றதாயிருந்திருக்கக் கூடும். அபிகாயிலின் தேவபக்தி மிகுந்த பண்புகள் மற்றும் நாபாலின் பிசாசுக்குரிய குணங்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு திருமணத்தைக் கசப்பாக மட்டுமே மாற்றியிருந்திருக்கும். இவன் தாழ்ந்த ருசி கொண்டவனாக, பொருளாதாயங்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்த வனாக, தேவனை வெறுப்பவனாக, மற்றும் அருவருப்பான பழக்கங்கள் கொண்டவனாக இருந்தான். இவன் கொடுமையான நாவையும் பயங்கர மான செல்வாக்கையும் கொண்டிருந்தான். இவன் அபிகாயில் வெறுத்த எல்லாமுமாயிருந்தான்! ஆனால் அவள் இவனுடன் தங்கியிருந்தாள். தற்கால ''நாபால்களுடன்'' திருமணத்தைச் சகித்துக் கொண்டிருக்கிற தற்கால "அபிகாயில்களை" நீங்கள் பாராட்டியாக வேண்டும்.

பழி வாங்குதல் என்பது ஒருபொழுதும் சரியானதாயிருப்பதில்லை! "பழி வாங்குதல் என்பது பிசாசானவன் பாவியின் வாயில் இடக் கூடிய மிக

விலை உயர்ந்த உணவின் துணுக்காக உள்ளது" என்று ஒருவர் சரியாகவே கூறியுள்ளார். நமக்கு எதிராக இழைக்கப்பட்ட தனிப்பட்ட தவறுகளுக்கு பழிவாங்கும் நிலைமையில் நாம் ஒருக்காலும் இருக்கக் கூடாது (25:38, 39; ரோமர் 12:19).

இன்றைய நாட்களில் நாம் ஒவ்வொருவரும் வாழ்கின்ற வாழ்வானது, மற்றவர்கள் நாளைய தினம் வாசிப்பதற்கான நிலையான வரலாற்று ஏட்டைப் பதிவு செய்கிறது. உங்களைப் பற்றிய வரலாற்றுக் கூற்று உங்களை ஒரு "நாபால்" என்று பதிவு செய்து விடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

சுயநலமான வாழ்விற்கு (பலனாய் வர) காத்திருக்கும் கவலை மிக்க முடிவை நினைவில் வையுங்கள்! பேரழிவு மட்டுமே வரும் (லூக். 12:20, 21; யாக். 4:13-16).

முடிவுரை

படிப்பதற்கு இது எவ்வளவு இருளான பாடமாக உள்ளது! ஒரு தீயமனிதனின் செல்வாக்கு முழு எடுத்துரைப்பின் மீதும் மேகங்களைப் பரப்பி, "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதன்" (தாவீது) தேவனுக் கெதிரான உணர்வான பழிவாங்குதல் என்ற நடவடிக்கையை நாடக் காரணமாயிற்று. தீமையின் ஒரு சிறு துளியானது அதிகமான நன்மையைக் கெடுத்து அழித்து விடக் கூடும்!

நமது பூமிக்குரிய வாழ்வை "மதியீனராக" வாழ்வதில் உள்ள துன்ப நிலையை உணர்ந்தவர்களாய் நாம் யாவரும் இந்தப் பாடத்திலிருந்து கடந்து செல்லுவோமாக. சாத்தானின் மகனான நாபாலை நினைவில் வையுங்கள். இவனது தவறைச் செய்ய முன் வராதீர்கள்!

அபிகாயில்

நல்லறிவுடைய ஒரு பெண்

(25:14-42)

"பெண்ணின் ஒற்றைத் தலைமுடியானது மணியின் கயிறைக் காட்டிலும் அதிக(கன)மானதை இழுக்கிறது" என்ற ஜெர்மானியப் பழம்பெரும் பழமொழியானது சமூகத்தில் பெண்களின் செயல் தாக்கம் எவ்வளவு அதிகமாய் உள்ளது என்பதைப் பற்றிக் கூறுகின்றது. அன்புமிக்க அபிகாயில், இந்தப் பழமொழிக்கு பொருத்தமான விவரிப்பாக இருக்கின்றாள். இவளது பெற்றோர்கள் அல்லது இவளது வம்சவரலாறு பற்றி வேத வசனங்களில் நாம் ஏதொன்றும் அறிவதில்லை. இவள் தேவபக்தியின் ஆதிக்கத்தின் கீழாக வளர்க்கப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் இவள் யெகோவாவை அறிந்திருந்ததுடன் அழகிய பக்தியுடையவளாகவும் இருந்தாள்.

1 சாமுவேல் புத்தகத்தில் இருந்து நாம் இவளைப் பற்றிப் பின்வரும் உண்மைகளை அறிய முடிகிறது: இவளது பெயர் "மகிழ்விற்குக் காரணம்" என்று அர்த்தப்பட்டது, இது இவளது பொதுவான வெளித்தோற்றம் மற்றும் பிறர் மீதான இவளது செயல்தாக்கம் ஆகியவற்றை விளக்குவதாயிருந்தது. இவள் அச்சந்தரும் மனிதன் ஒருவனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருந்தாள். இந்தத் திருமணமானது, அநேகமாக, இவள் தந்தை தேர்ந்தெடுத்த யாரையாகிலும் இவள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கிழக்கு நாடுகளின் பழக்க வழக்கத்தினால் ஏற்பட்டதாயிருக்கலாம். இவள், "மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள்" (25:3). இப்படிப்பட்ட ஒரு சேர்க்கையானது இன்றைய நாட்களில் வெளிப்புற அழகின் மீது மட்டும் கவனம் செலுத்தி, மூளையைப் புறக்கணிக்கும் பல பெண்களால் பெரும்பாலும் கண்டு கொள்ளாமல் விடப்படுகின்றது! வேதாகமத்தில் இன்னும் மூன்று பெண்கள் (சாராள், வஸ்தி, பத்சேபாள்) மாத்திரமே "ரூபவதிகள்" என்று அழைக்கப்படுகின்றார்கள். அபிகாயிலில் நாம் உடல்ரீதியான அந்த அழகானது நற்பண்பு மற்றும் உள்ளான கிருபையினால் உயர்த்தப்படுவதைக் கண்டறிகின்றோம் (இ.வ. சங். 45:13). இவள் தாவீதின் எட்டு மனைவியர்களில் ஒருத்தியானாள்; மீகாள் (1 சாமு. 18:27), பத்சேபாள் (2 சாமு. 12:24), அகினோவாம், மாக்காள், ஆகீத், அபித்தாள் மற்றும் எக்லாள் (2 சாமு. 3:2-5) ஆகியோர் மற்ற மனைவியர்களாயிருந்தார்கள். இந்த எட்டுப் பேரில், தாவீதின் வாழ்வில் மாபெரும் நன்மைக்கு ஆதார மூலமாய் இருந்தவள் அநேகமாக அபிகாயிலாகவே இருக்கலாம்.

1 சாமுவேல் 25:3, 14-42 வசனப் பகுதிகள் வியப்புக்குரிய பெண்ணொருத்தியை அறிமுகப்படுத்துகின்றன. அபிகாயிலின் வரலாறு, தாவீதின் மீதும் இன்று அவளது வரலாற்றைப் படிக்கிற யாவர் மீதும் கரைந்து போகாத அடையாளம் ஒன்றை விட்டுச் செல்கின்றது. இந்த ஆச்சரியமான பெண்ணைப் பற்றி சிந்தித்துப் பார்த்த பிறகு, தாவீது இவள் மீது கொண்டிருந்த மதிப்பு மற்றும் பாசம் ஆகியவற்றை நீங்கள் சுலபமாய்ப் புரிந்து கொள்ள இயலும்.

இவளது வரலாறு

அபிகாயிலின் வரலாறு பின்வரும் பரிதாபகரமான உணர்வுகளினால் நிறையப் பெற்ற நிகழ்ச்சியில் காணப்படுகின்றது: நன்றியில்லாமை, முரட்டுத்தனம், பிடிவாதம், வெறுப்பு, கசப்பு, கோபம், மற்றும் மதியீனமான வார்த்தைகள். இருளான இந்த அமைவில், அபிகாயிலின் பிரசன்னமானது மங்கிப் போக முடியாத ஒரு பிரகாசமான வெளிச்சப் புள்ளியாக உள்ளது.

தாவீதின் படையினர் நாபாலின் மந்தைகளைக் காவல் செய்து பாதுகாத்தார்கள். இது ஒரு பெருந்தன்மையான சேவையாகவும் ஊதியமின்றி செய்யப்பட்டதாகவும் இருந்தது. மதியீனனாயிருந்த நாபால், தாவீதின் இந்த இரக்கச் செயலுக்கு, அறிவற்ற, மற்றும் கடுமையான வகையில் பதில் செய்தான் (25:3). தாவீதை வெளியரங்கமாகச் சிறுமைப் படுத்தியதற்கு நாபாலின் வீட்டாருடைய இரத்தத்தைக் கொண்டு மறுவிலை செலுத்த வேண்டியதாயிருந்தது (25:22). சூழ்நிலை அமைவானது இரத்தம் சிந்தும் கசப்பான ஒரு யுத்தத்திற்குப் பொருத்தப்பட்டிருந்தது.

உணர்வுகள் உத்வேகமான உச்சத்தை அடைந்திருந்த அதே வேளையில், அபிகாயில் உட்புகுந்து தாவீதைச் சமாதானப் படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டாள் (25:18 முதல்). இவள் தாவீதுக்கு தாராளமான கொடையொன்றைக் கொடுத்து, தாழ்மையாக மன்னிப்பை வேண்டினாள். இவள் தாவீதை, பழி வாங்குதலுக்கான அவரது விருப்பத்தில் இருந்து தணியும்படி வேண்டி இணங்கச் செய்தாள். இவள் தாவீதைச் சமாதானப் படுத்திய பிறகு, தன் வீட்டிற்கு நாபாலிடத்தில் திரும்பினாள், ஏனெனில் இவள் தகுதியற்ற ஒரு வாழ்க்கைத் துணைவனுக்கு உண்மை யான/பற்றுறுதி வாய்ந்த ஒரு மனைவியாகவும் பாதுகாப்பாளியாகவும் இருந்தாள். இவள் தனது உண்மைத் தன்மையை வாக்களித்திருந்த அந்த மனிதனுடன் தொடர்ந்து வாழ்ந்தாள்.

நாபாலின் மரணத்தைத் தொடர்ந்து, தாவீது அபிகாயிலை மணந்து கொள்ளும் திட்டத்தை முன் வைத்தார் (25:39). அபிகாயில், தாவீதின் மனைவியாக, தாவீதின் மகனுக்குத் தாயாக ஒரு மகிழ்ச்சி நிறைந்த பணிப் பொறுப்பினுள் நுழைந்தாள் (2 சாமு. 3:3; 1 நாளா. 3:1). அபிகாயில் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதிலும் தாவீதுடனேயே நிலைத்திருந்தாள். தாவீது அபிகாயிலின் ஞானமுள்ள அறிவுரையை நாடியதையும், அபிகாயில், தான் தகுதியுள்ள ஒரு வாழ்க்கைத் துணைவி என்பதை அவருக்கு நிரூபித்ததையும்

கற்பனை செய்வது கடினமானதாக இருப்பதில்லை (25:33அ).

இவளது குணங்கள்

அபிகாயிலின் வாழ்வு மற்றும் பண்பு ஆகியவற்றில் நாம் கண்டறிகிற குணங்கள், இன்றைய நாளின் பெண்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க முடியும்.

இவள் மதிக்கப்பட்டாள் (25:17). நாபால் தாவீதை அவமதித்ததின் நிமித்தமாக எழும்பிய நெருக்கடியைக் கையாளுவது எவ்வாறு என்று இவள் அறிந்திருப்பாள் என்று வேலைக்காரர்கள் அறிந்தார்கள். வேலைக்காரர்கள் இவளது அறிவுப் பயன்பாட்டையும் முடிவையும் மதித்தார்கள் (25:35).

இவள் கோபத்தைத் தணிக்கக் கூடியவளாயிருந்தாள் (25:33, 35). எல்லா நிகழ்தகவுகளிலும் இது, இவள் நாபாலின் முரட்டுத்தனத்திற்காக மன்னிப்புக் கேட்ட முதல் முறையாக இருந்ததில்லை. இவள் அடிக்கடி சமாதானம் செய்விக்கும் பணிப் பொறுப்பை நிகழ்த்தியிருந்தாள் என்பதில் ஐயமில்லை. இவள் தாவீதின் உக்கிரத்தை அமைதியாக்க, திறமையையும் ஞானத்தையும் பயன்படுத்தக் கூடியவளாய் இருந்தாள்.

இவள் தேவன் மீது மாபெரும் விசுவாசம் கொண்டிருந்தாள் (25:26 முதல்). இந்த எடுத்துரைப்பில் இவள் தேவனை நன்கு அறிந்திருந்த ஒரு பெண்ணாக முன்னிறுத்தப்படுகிறாள். இவள் பரிதாபமான ஒரு திருமணத்தில் (அகப்பட்டு) இருந்தாலும், இவளது தைரியமான நம்பிக்கை, இவள் பரிசுத்தமாய் நிலைத்திருக்கப் பெலன் தந்தது. தாவீதிடம் இவள் பேசுகையில், இவளது வார்த்தைகள் இவளது விசுவாசம் உயிருள்ளதாகவும் நடைமுறையில் இருந்ததாகவும் வெளிப்படுத்தின. 25:26, 27ல் இவள், இந்த வரமானது இவளிடமிருந்து வந்ததல்ல, ஆனால் இவளது ஜெபத்திற்குப் பதில் தரும் வகையில் தேவனிடமிருந்து வந்தது என்று எடுத்துரைக்கும் விளக்கம் ஒன்றைப் பயன்படுத்தினாள். ஆகாரத்தை வழங்குவதில் அவள் தேவனுடைய உதார குணத்தைக் கண்டாள்.

இவள் உறுதி வாய்ந்தவளாகவும் தீர்மானமிக்கவளாகவும் இருந்தாள் (25:18 முதல்). சூழ்நிலை அவசரமானதாயிருந்தது, இவள் தீர்மானமான வகையில் செயல்பட்டாள். என்ன செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதை அறிந்த இவள் தன்னால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செய்தாள். தாவீதை இவள் நெருங்கிய வேளையில், இவள் அந்நாட்களின் பழக்க வழக்கங்களைக் காத்துக் கொண்டாள், ஆனால் இவள் (தனது) பணிப் பொறுப்பு சரியாகச் செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள் (25:24). தாவீதின் பழிதீர்க்கும் தாகம் தவறானதாயிருந்தது என்பதை அவரிடம் கூற இவள் தயங்கவில்லை. பின்பு இவள் நாபாலிடம் பேசுகையில், அவனது பிழையின் தவறான நிலை குறித்து அவனை எதிர்த்து நின்றாள் (25:37).

இவள் தனது குடும்பத்தினரின் பாதுகாப்புக் குறித்து அக்கறை கொண்டாள் (25:31). அபிகாயிலைப் பொறுத்தமட்டில் தனது இல்லத்தின் பாதுகாப்பே இவளது முதல் முன்னுரிமையாக இருந்தது. பாதுகாப்பைக்

காப்புறுதி செய்து கொள்வதற்கு தேவையான யாவற்றையும் இவள் செய்தாள்.

இவள் தாழ்மையுடனும் பணிவுடனும் இருந்தாள் (25:41, 44). இவள் தாவீதை நெருங்குகையில் உறுதி வாய்ந்தவளாகவும், ஆயினும் தாழ்மை யானவளாகவும் இருந்தாள். எரிச்சலாயிருந்த தாவீதிடம் இவள் பேசிய உரையாடல் முழுவதிலும் தாழ்மை குணம் நிறைந்திருந்தது. இந்தக் காட்சி யில் நமக்கு 1 பேதுரு 3:1-4ன் அழகியதொரு விவரிப்பு தரப்படுகின்றது:

> ... பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, ... மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப் பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது.

இவள் தான் தொடர்பு கொண்ட ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமா யிருந்தாள் (25:32). தாவீதுடன் இவளது முதல் சந்திப்பில் இருந்து இவளது வாழ்வானது மிகப் புதிய அர்த்தமும் நோக்கமும் மேற்கொண்டதாகக் காணப்படுகிறது. அபிகாயிலைச் சந்திக்கவும் அறியவும் வாய்ப்புக் கிட்டிய யாவரும் தாவீதின் உணர்வுகளைப் புரிந்து கொண்டார்கள்.

இவள் கிருபை மிகுந்த உபசரிப்புத் தன்மை கொண்ட விருந்தளிப் பவளாயிருந்தாள் (25:4). ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் வைபவங்கள், விருந்துகளினாலும் பெருமகிழ்வினாலும் அடையாளப்படுத்தப்பட்டன. இப்படிப்பட்ட வைபவங்களுக்குத் தயார் செய்தல் என்பது கடினமாக, சோதனை மிகுந்ததாக இருந்தன. ஆனால் அபிகாயில் அந்த வேலையை ஏற்று, அதைச் சிறப்பாகச் செய்தாள்.

வியப்புக்குரிய இந்த குணங்கள், மாகோனில் இருந்த மனிதனிடமிருந்து வந்த புத்திசாலியும் ரூபவதியுமான பெண்ணை தனிச் சிறந்தவளாக்கு பவையாக உள்ளன. சொல்லப் போனால், இவள் "உள்ளாகப் பூரண மகிமையுள்ள" வளாய் இருந்தாள் (சங். 45:13).

இவளது அறைகூவல்கள்

அபிகாயில் தனது உதாரணத்தில், நவீனப் பெண்களுக்கு மூன்று திட்டவட்டமான அறைகூவல்கள் விடுவித்து, அவற்றை நவீனக் கிறிஸ்தவப் பெண்மணிகள் ஏற்கும்படி அழைக்கின்றாள்.

முதலாவது, இவள் எல்லாருக்கும் ஆசீர்வாதமாயுள்ள நிலைப்பாடும் பிரசன்னமும் உள்ள வகையிலான பெண்களாகும்படி அறைகூவல் விடுகின் றாள். அபிகாயில் என்றால் "சந்தோஷத்தின் காரணம்" என்று அர்த்தப் பட்டது, இது இவள் பிறரின் மீது கொண்டிருந்த செயல்தாக்கத்திற்குப் பொருத்தமான விளக்கமாக உள்ளது. இவள் வெளிச்சமானவள், மகிழ்வைக் கொண்டு வருபவள், ஈர்ப்புமிக்க ஆளுமைத் தன்மை உடையவள் என்பதை

இவளது பெயர் சுட்டிக்காண்பிக்கின்றது. இவள் ஒரு அறையில் நடந்து செல்லும் பொழுது அங்குள்ள யாவும் வெளிச்சமாகும்! இவள் நடந்து சென்ற இடங்களில் எல்லாம் சூரியன் பிரகாசித்தது, பறவைகள் பாடின, மற்றும் புன்சிரிப்புகள் வெடித்தன! சந்தோஷம் இவளது நிலையான துணையாயிருந்ததால், இவளது பிரசன்னம் ஒரு ஆசீர்வாதமாயிருந்தது (25:32).

கோபமும் எரிச்சலும் உள்ளவர்களைத் தணிவிப்பதில் இவளது திறமையினால் இவள் ஒரு ஆசீர்வாதமாயிருந்தாள். அமைதலான வார்த்தைகளுடனும் சாந்தமான ஆவியுடனும் இவள் தாவீதைத் தணிவித்தாள். இவள் "கலங்கிய தண்ணீர்களின் மீது எண்ணெயை ஊற்றக்" கூடியவளாயிருந்தாள் (25:33; சக. 8:19; 1 பேது. 3:11). நீதிமொழிகள், "தீங்கைப் பிணைக்கிறவர்களின் இருதயத்தில் இருக்கிறது, கபடம்; சமாதானம் பண்ணுகிற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோஷம்" என்று கூறுகிறது (12:20) மற்றும் ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் (25:11).

வாழ்வில் மாபெரும் அர்த்தத்தையும் நோக்கத்தையும் கண்டறியப் பிறருக்கு உதவுகையில் இவள் ஒரு ஆசீர்வாதமாய் இருந்தாள். தாவீது, தாம் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதை நினைவுபடுத்திக் கொள்வதற்கு இவள் உதவினாள். இவள், "உமது அடியாளின் பாதகத்தை மன்னியும், கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார்; என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே; ..." என்று கூறினாள் (25:28). அவர், தாம் தேவனுடைய அக்கறை மற்றும் அன்பிற்கு உரியவர் என்பதை நினைவுகூரவும் இவள் உதவினாள் (25:30). அநேகமாக பிற்காலங்களில் இவள், தாவீது பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் கற்றுக் கொள்ள உதவியிருப்பாள். ஆனால் இவள் தாவீதுக்கு மாத்திரமல்ல, அநேகருக்கு உதவினாள். இவள் எங்கிருந்த போதிலும், மற்றவர்கள் மாபெரும் ஊழியத்தைச் சாதிக்க உதவுவதற்கு மனதாயிருந்தாள்!

இரண்டாவது, இவள் வாழ்வைக் காத்துக் கொள்ளும் வகையிலான விசுவாசத்தைக் கொண்டிருக்கும்படிக்குப் பெண்களுக்கு அறைகூவல் விடுக்கின்றாள்! அபிகாயிலின் அழகுக்கு - விசுவாசம் என்ற - ஒரு காரணியானது பொறுப்பு வகித்திருந்தது! இவளது சாந்தகுணம் மற்றும் பெருந்தன்மை, அக்கறை மற்றும் பரிவிரக்கம், கிருபை மற்றும் வசீகரம் ஆகிய யாவும், தேவன் மீதான இவளது விசுவாசத்திலிருந்தே பாய்ந்தோடி வந்தன (25:26-31).

இன்றைய நாட்களின் பெண்கள் அபிகாயிலின் விசுவாசத்தைக் கொண்டிருக்க முயற்சி செய்வார்கள் என்றால், இவர்கள் எடுத்துரைக்க இயலாத ஆசீர்வாதங்களின் ஆதார மூலமாவார்கள். பெண்மணிகளே, அபிகாயிலைப் போலவே உங்கள் விசுவாசம் உங்கள் வாழ்வைக் கட்டிக் காப்பதாயிருக்கட்டும்!

மூன்றாவது, இவள் வாழ்வில் மிகவும் எதிர்ப்பும் சோதனையும் வருகிற வேளையில் வெற்றி கொள்ளக் கூடும்படி தேவனில் உள்ள சந்தோஷத்தைக்

கொண்டிருக்கும்படியும் பெண்களுக்கு அறைகூவல் விடுக்கின்றாள்! அபிகாயிலின் இல்ல வாழ்வும் திருமணமும் மிக மோசத்திலும் மோசமாயிருந்தன! அங்கே சந்தோஷமும் சாமாதானமும் இருந்ததில்லை, "கீழ் மகனாயிருந்த கணவன்" ஒருவனிடமிருந்து அந்தகாரம் மட்டுமே வந்தது. இவள், தேவபக்தியற்ற மற்றும் உணர்வு நிலையற்ற ஒரு கணவனின் குடி வெறியைச் சகித்துச் செல்ல வேண்டியிருந்தது. இவள் அவனது தீய வழிகள் பற்றி தொடர்ந்து விளக்கிக் கொண்டும் அவனது முரட்டுக் குணத்தின் வலிப்புக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டும் இருந்தாள். இருப்பினும், இவள் ஒரு பரிசுத்தமான பெண்ணாக நிலைத்து நின்றாள்!

சில கிறிஸ்தவப் பெண்கள் இதே விதமான அறைகூவலை எதிர் கொள்ளுகின்றார்கள். இவர்கள் இல்லத்தில் நாபாலைப் போலவே கெட்ட குணம் கொண்ட கணவன் உள்ள இல்லத்தில் அன்றாடம் இருக்கின்றார்கள். இவர்கள் வீரமிக்கவர்களாகவும் முறுமுறுக்காதவர்களாகவும் இருக்கின்றார்கள். முரட்டு சுபாவமும் பண்பற்ற தன்மையும் கொண்ட துணைவரைப் பெற்றிருப்பினும் இவர்கள் தேவனுக்கு விசுவாசமிக்கவர்களாய் நிலைத்திருக்கின்றார்கள். இந்த அறைகூவல் மிகவும் சுலபமானதல்ல - பெண்மணிகளே, இல்லத்தில் நீங்கள் ஒரு "நாபாலுடன்" போராடிக் கொண்டிருப்பதால் (கிறிஸ்தவ விசுவாசத்தை) விட்டுக் கொடுத்து விடும்படி சோதிக்கப் பட்டுக் கொண்டிருந்தால், விட்டுக் கொடுத்து விடாதீர்கள்! தேவபக்தியுள்ள அபிகாயிலை நினைத்துக் கொள்ளுங்கள்.

முடிவுரை

அபிகாயில் உடல்ரீதியாக மட்டுமின்றி, மிக முக்கியமாக தனது பண்பு மற்றும் விசுவாசத்தினாலும் அழகு மிகுந்தவளாயிருந்தாள். இவள் மாபெரும் அறைகூவல்களின் முன்னிலையிலும் அமைதி நிலையை தக்க வைத்துக் கொண்டாள்; இவள் கோபம் மூண்ட இருதயத்தைச் சாந்தப் படுத்தினாள், எரிச்சல் தரும் குடிகாரனைக் கடிந்து கொண்டாள். சொல்லப் போனால் இவள் ஒரு பலம் வாய்ந்த பெண்மணியாக விளங்கினாள்! இவளது பலம், தேவன் மீது இவள் கொண்ட விசுவாசம் என்ற ஒரே ஆதார மூலத்தில் இருந்து மட்டுமே வந்தது!

பெண்மணிகளே, இந்தச் சிந்தனைகளை உங்கள் வாழ்வில் கவனத்துடன் நடைமுறைப்படுத்துங்கள். உங்கள் செல்வாக்கைக் கண்ணோக்கி, அது பிறருக்கு சமாதானம், நோக்கம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றைக் கொண்டு வரும் வழிகளில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்து கொள்ளுங்கள். "அபிகாயில்" என்பதை பேசப்படாத உங்கள் பெயராகத் தழுவிக் கொள்ளுங்கள், மற்றும் இந்த உலகில் ''சந்தோஷத்தின்'' காரணமாகுங்கள்!

பேசோரில் ஒரு போர்வீரன் பலன் அளிக்கப்பட்ட ஒரு சிறு சேவை

[30:21-25]

இரண்டாம் உலகப் போரின் இருள்மிக்க நாட்களில், "இல்ல(க்காவல்) படையணி" என்பதைப் பற்றி ஒருவர் அடிக்கடி கேள்விப்பட்டிருக்க முடிந்தது. அந்தக் காலத்தில் இருந்த மிகச் சிறந்த தலைவர் ஒருவரால் இதன் செய்தியானது தெளிவாகவும் சுருக்கமாகவும் தொகுத்துரைக்கப் பட்டுள்ளது: "நின்றுகொண்டு காத்திருத்தலை மட்டுமே செய்த அவர்களும் சேவைதான் செய்தார்கள்." இதன் அர்த்தம் தெளிவானதாக உள்ளது. நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தாலும், அது எவ்வளவு சிறிய செயலா யிருந்தாலும், அது முழுமையான யுத்த முயற்சியில் உதவியாயிருந்தது. கடல் தாண்டி இருந்தோ அல்லது "இல்ல(க்காவல்) படையணியில்" இருந்தோ எல்லா அமெரிக்கர்களும் ஒன்றிணைந்து யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

சேவையில் இவ்விதமான ஒருமைத்தன்மை 30:21-25ல் காணப் படுகிறது. தாவீதும் அவரது படையில் இருந்த அறுநூறு பேரும் சிக்லா கிற்குத் திரும்பிய பொழுது, தாங்கள் பேணிக்காத்திருந்த ஒவ்வொன்றும் எரிந்து அழிந்திருக்கக் கண்டார்கள். அவர்களின் இல்லங்கள் புகைந்து சாம்பலாகியிருந்தன, அவர்களின் குடும்பங்கள் பிடிக்கப்பட்டுக் கிடந்தனர், மற்றும் அவர்களின் உடைமைகள் யாவையும் களவாடி எடுத்துச் செல்லப் பட்டிருந்தன. யுத்தத்தின் அழிவுத் தன்மையினால் கடினப்பட்டுக் கிடந்த அனுபவசாலிகளின் குழுவில் துக்கம் மேலிட்டிருந்தது (30:4). தாவீது தேவனிடம் ஆலோசனை கேட்ட பின்பு, அந்தக் கொள்ளைக்குப் பொறுப்பாளிகளாயிருந்த அமலேக்கியரை விரட்டிச் சென்றார். அவரது படைத்துருப்புக்கள் சக்தி இழந்த நிலையில் இருந்தன. உணர்வுப்பூர்வமான சக்தியும் இழந்த நிலையில், தேவையற்ற தளவாடப் பொருட்களுடன் பேசோர் என்ற இடத்தில் இருநூறு படைத்துருப்புக்களை விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. எஞ்சியிருந்த நானூறு பேர், படையெடுத்து வந்தவர்களைப் பிடித்து இழந்தவைகளை எல்லாவற்றையும் மீட்டார்கள். அவர்கள் பேசோருக்குத் திரும்பி வந்த வேளையில், அந்த நானூறு பேர் "தளவாடங்களிடம் இருக்கும்படிக்கு" பின்னால் விட்டுச் செல்லப்

பட்டிருந்தவர்கள், கொள்ளையிட்ட பொருட்களில் பங்கு எதுவும் பெறக் கூடாது என்று வாதிட்டார்கள். அவர்களின் கசப்பான எண்ணப்போக்கு, 30:22-24ன் வார்த்தைகளைத் தூண்டி விட்டது.

இங்கு நாம் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஊழியம் செய்தல் குறித்த மாபெரும் கொள்கையொன்றைக் காண்கின்றோம். அந்த நானூறு பேரின் வார்த்தைகளில் ஊழியம் ஒரு எதிர்மறையான கோட்பாட்டில் கண்ணோக் கப்பட்டது. சில சேவைகளை மனிதர் எவ்வாறு மதிக்கின்றார் என்பதையும் அதே சேவைகளைத் தேவன் எவ்வாறு மதிக்கின்றார் என்பதையும் பற்றிய வியப்புக்குரிய உட்கண்ணோட்டம் ஒன்றை நாம் கண்டறிகின்றோம்.

நியமம் எடுத்துரைக்கப்படுகின்றது

நானூறு பேரின் வார்த்தைகளைத் தாவீது கேட்ட பொழுது, அவர் உடனே (அவர்களின்) தவறைத் திருத்தினார். தாவீதைப் பொறுத்தமட்டில் எல்லாரும் ஒன்றாக அந்த முயற்சியில் ஈடுபட்டதாகத்தான் கருதினார். சிலர் ஒரு செயலைச் செய்யக் கூடியவர்களாயிருக்கையில் மற்றவர்கள் வேறு சில செயல்களை செய்யக் கூடியவர்களாயிருந்தார்கள். ஒரு மனிதர் உண்மை யிலேயே யுத்தத்திற்குச் சென்றிருந்தாலும், அல்லது தளவாடங்களைக் காத்துக் கொண்டிருந்தாலும், அவர் இன்றியமையாத சேவையைச் செய்ததாகத்தான் தாவீது கருதினார்!

இந்தக் நியமமானது, "மிகச் சிறியதாக" இருப்பினும் எந்த ஒரு பணிப்பொறுப்பையும் நிறைவேற்றுகின்றவர்களின் மீதான தேவனுடைய அக்கறையை வெளிப்படுத்தும் வேத வசனங்கள் பலவற்றில் காணப் படுகின்றது! சகரியா 4:10ல், தேவாலயத்தின் கட்டுமான வேலையானது எளிய ஒரு தூக்கு நூலைக் கொண்டு தொடங்கப்பட வேண்டியதாயிருந்தது. சுவரின் நிலையை தூக்குநூல் கொண்டு சரி பார்க்கும் சிறிய வேலையைச் செய்பவரைப் பற்றித் தேவன் மகிழ்வடைந்தார். மாற்கு 14:8ல் மரியாள் கிறிஸ்துவை அபிஷேகம் செய்த பொழுது, அவள் தன்னால் இயன்ற ஒரே செயலைத்தான் செய்தாள். சிலர் அந்தச் செயலை வீணானதாகக் கண்டார்கள், ஆனால் நமது கர்த்தர் அதை அவ்விதமாய்க் காணவில்லை! யோவான் 6:9ல் அந்திரேயாவுக்கு அற்பமானதாயிருந்த ஒரு சிறிய மதிய உணவானது கிறிஸ்துவினால் பலம் வாய்ந்த ஒரு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. மிகச் சிறியதாகவும் அற்பமானதாகவும் தோன்று கின்ற விஷயமானது அடிக்கடி எண்ணப்படாமலும் அவமதிக்கப்பட்டும் உள்ளது, ஆனால் அவற்றை (யும்) நமது கர்த்தர் பயன்படுத்துகிறார் (மத். 10:42; மாற்கு 9:41; முதலியன). எல்லா சேவைகளுமே தேவனுக்கு இன்றியமையாதவைகளாகவே உள்ளன!

நியமம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

தேவையற்ற தளவாடங்களைக் காத்துக் கொள்வதற்கென்று இருநூறு பேர் விட்டுச் செல்லப்பட்டிருந்தார்கள். இது அமலேக்கியர்களை

மேற்கொள்வதற்குத் தாவீதை விரைவில் செல்லக் கூடியவராக்கியது. அந்த இருநூறு பேர், வெற்றிக்குப் பங்களித்த வலிவார்ந்த பணிப்பொறுப் பொன்றைச் செய்திருந்தார்கள். வெற்றி பெற்ற பிறகு அந்த இருநூறு பேரிடம் தாவீது திரும்பி வந்து அவர்களை வாழ்த்தினார். அவரது வாழ்த்துதலில் நாம் பின்வருவனவற்றைக் கண்டறிகின்றோம்:

நாம் யாவரும் சமமான ஊழியர்கள் மற்றும் நம் ஒவ்வொருவருக்கும் சரியான வேலை உண்டு. இந்த வீரர்கள் தங்கியிருந்து தளவாடங்களைக் காத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தனர். இவர்களின் பணி முக்கியமானதாக இருந்தது. பணிகளைப் பகுத்து வகைப்படுத்தி, அவற்றை "முக்கியமானவைகள்" என்ற வகையில் வரிசைப்படுத்தும் செயலுக்குச் சாய்ந்துள்ளதால் நம்மில் பலர் இந்தப் பாடத்தைக் காணத் தவறுகின்றோம்.

இவ்வகையான நடக்கை கொரிந்து நகரில் துன்பகரமான விளைவு களைக் கொண்டிருந்தது. இந்தத் தவறை எதிர்த்து நிற்பதில் மூன்று பலத்த கருத்துக்களைப் பவுலின் நிருபம் வலியுறுத்தியது (1 கொரி. 12:12-28). முதலாவது, ஒவ்வொரு உறுப்பினரும் மாறுபட்டவர்களாயிருப்பினும் சமமானவர்களாகவே உள்ளனர் (1 கொரி. 12:15). இரண்டாவது, ஒவ்வொரு உறுப்பினரும் பிற உறுப்பினர்களுடன் கட்டப்பட்டிருக் கின்றனர் (1 கொரி. 12:26; கொலோ. 2:2). மூன்றாவது, "கனவீனமாய் உள்ளவைகளே" மிகவும் இன்றியமையாதவைகளாக உள்ளன (1 கொரி. 12:22-24).

விலங்குகளின் குழுவொன்று ஒருமுறை, பள்ளியொன்றைத் துவங்கு வதில் மூலம் தங்களின் பொது நலனை மேம்படுத்த முடிவு செய்தன. அந்தப் பள்ளியில் நீச்சல், ஓடுதல், ஏறுதல் மற்றும் பறத்தல் ஆகியவை உள்ளடங் கியிருந்தன. நன்றாக நீந்தக் கூடிய வாத்து பிற துறைகளில் குறைவு பட்டிருந்தது, எனவே அது ஏறுதல், ஓடுதல் மற்றும் பறத்தல் ஆகியவற்றை முக்கிய பாடங்களாக எடுத்துப் படித்தது, இது அதன் நீந்துதலுக்குக் கெடுதியாயிருந்தது. மிகவுயர்ந்த ஓட்டத்தைக் கொண்டிருந்த முயல், பிற வகுப்புகளில் அதிக நேரம் செலவிடும்படி வற்புறுத்தப்பட்டது, இதனால் அது தனது புகழ்மிக்க ஓட்டத்தில் அதிகமானதை இழந்து போயிற்று. ஏறுதலில் முதல் தரமாயிருந்த அணில் மூன்றாம் தரத்திற்குத் தாழ்ந்தது, ஏனென்றால், அதன் பயிற்சியாளர் அதற்கு நீந்தவும், பறக்கவும் கற்றுக் கொடுப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டிருந்தார். கழுகுக்குப் பறத்தல் என்பது இயல்பாக இருந்த போதிலும், அது மரத்தில் ஏறுதலை கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்ட பொழுது, அது மரத்தின் உயரங்களுக்குப் பறந்து செல்வதற்கு ஒழுங்குப்படுத்தப்பட்டது. இது, சபையில் அடிக்கடி நடப்பவற்றை வேதனையான வகையில் சித்தரிக் கின்றது. ஒவ்வொருவரும் தனிப்பட்ட வரங்கள்/திறன்கள் கொண்டுள்ள னர், ஆனால் சிலர் தங்கள் திறனுக்கு அப்பாற்பட்டவற்றை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர், அப்போது அந்தப் "பெரிய" பணிகளை அவர்களால் செய்ய முடியாமற் போவதால் தாங்கள் (எதற்கும்) இலாயக்கற்றவர்கள் என்று உணரும்படியாக்கப்படுகின்றனர் (இ.வ. ரோமர் 12:6). இந்தத் தத்தவமானது தவறு என்று பேசோரின் செய்தியினால் வெளியாக்கப்

படுகின்றது, ஏனெனில் எல்லாரும் மாறுபட்டவர்களாய் இருந்தாலும் எல்லாரும் சமமானவர்களாகவே இருக்கின்றோம்!

சபையின் ஊழியத்தில் பல்வகைப்பட்ட தன்மை என்பது தேவனுடைய திட்டங்களை நிறைவேற்ற இன்றியமையாததாக உள்ளது. "பேசோரில் உட்கார்ந்து கொண்டு" நீங்கள் யுத்தகளத்தில் இல்லாததால் சிடுசிடுத்துக் கொண்டிருப்பது பயனற்றதாக உள்ளது! பிறர் செய்வதை நீங்கள் செய்ய முடியாததால் கவலைப்படுதல் என்பது பயனற்றது. தேவனுடைய படையின் வீரர்கள் என்ற வகையில், நம் அக்கறை பிரசங்கி 9:10 வசனத்தினால் தொகுத்துரைக்கப்பட்டபடியானதாயிருக்க வேண்டும். தனித்தனியாக நாம் செய்யக் கூடியவற்றிற்கு நாம் தேவனிடத்தில் (கணக் கொப்புவிக்கும்) பொறுப்பைக் கொண்டுள்ளோம்! அறியப்படாத எழுத்தாளரால் எழுதப்பட்ட பின்வரும் கவிதையானது, தனிப்பட்ட கடமையின் கட்டுப்பாட்டினை விவரிக்கின்றது:

சூரியன் மறையும் நேரம்

இந்த நாளை நீங்கள் வீணாக்கினீர்களா அல்லது பயன்படுத்தினீர்களா?
அது நன்றாகவா அல்லது அற்பமாய்ச் செலவிடப்பட்டதா?
சூரிய ஒளியின் கதிர் ஒன்றை நீங்கள் விட்டுச் சென்றீர்களா? அல்லது
திருப்தியின்மையின் தழும்பு ஒன்றை நீங்கள் விட்டுச் சென்றீர்களா?

ஆழ்ந்த உறக்கத்தில் நீங்கள் உங்கள் கண்களை மூடுகையில்
நீங்கள் இன்று செய்த பணியினிமித்தம்
இன்னும் ஒரு நாளைய தினத்தை நீங்கள் ஈட்டிக் கொண்டுள்ளதாகத்
தேவன் கூறுவார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

தெளிவாய்த் தோன்றாத மற்றும் எளிய ஊழியம் தேவனுக்கு முக்கியமானதாக உள்ளது. "காணக் கூடிய இடங்களில்" ஊழியம் செய்யத் திறன் கொண்டிருக்கத் தவறியுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் முக்கியமானவர்களாய் உள்ள அமைதியான, காணப் படாத ஊழியங்களில் அதிகம் நன்கு செயல்படக் கூடும். பிரசங்கியாரும் மூப்பர்களும் முன்னணியில் இருக்கலாம், ஆனால் தேவபக்தியுள்ள தாய்மார்களும், பயபக்தியுள்ள தந்தையர்களும், அமைதியும் ஞானமும் உள்ள பரிசுத்தவான்களும், தங்கள் எளிய காணிக்கைகளை இட்ட விதவைகளும், இவர்களுக்காக (பிரசங்கியார் மற்றும் மூப்பர்களுக்காக) ஜெபத்தில் போராடப் பல மணி நேரங்களைச் செலவிட்டவர்களும் இல்லையென்றால் இவர்கள் (பிரசங்கியாரும் மூப்பர்களும்) எங்கிருப்பார்கள்? பல பேர் "பேசோரில் அமர்ந்து" அமைதியாக ஊழியம் செய்வதால்தான் சபை உயர்ந்து நிற்கின்றது! (பிர. 9:10).

நமது ஊழியம் நித்திய அங்கீகாரத்தை விளைவிக்கும். தாவீது பேசோருக்குத் திரும்பிய பொழுது, அவர் தளவாடங்களிடத்தில் இருந்தவர்களை வாழ்த்தி வணக்கம் தெரிவித்தார் (30:21). இந்த வணக்கம், இவர்களின் மீதான குறிப்பிடத்தக்க மரியாதையையும் இரக்கம் மிக்க ஆர்வத்தையும் செயல்விளக்கப்படுத்திற்று. இதைச் செய்ததில் அவர் மோசேயையும்

(எண். 31:27), யோசுவாவையும் (யோசு. 22:8) பின்பற்றினார். தாவீதின் அங்கீகரித்தல் எவ்வளவு பெரியதாக இருந்ததோ, அதைக் காட்டிலும் பெரிய அங்கீகரித்தல் ஒன்று கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்பவர்களுக்கு காத்திருக் கின்றது (மத். 10:2; 25:35, 36). கடைசி நாளில் கிறிஸ்துவின் மூலமாக இனிமையான ஒரு அங்கீகரித்தலைக் கேட்பது என்பது எவ்வளவு அற்புத மானதாயிருக்கும்! (மாற். 14:8). பேசோரில் இருந்தவர்களின் நியமங்களைப் பின்பற்றுபவர்களுக்கு இவ்விதமான அங்கீகரித்தல் முன்பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது.

நியமத்திற்கு அறைகூவல் விடப்பட்டது

நியமம் எவ்வளவு பெரியதாக உள்ளதோ அவ்வளவுக்கு, மரணத்திற் கேதுவான அறைகூவல் ஒன்று அதன் நடைமுறைப்படுத்தப் படுதலை ஒழிக்கக் காரணமாகின்றது. சகரியா 4:10ஆ - வில் "அசட்டை பண்ணுதல்" என்ற வார்த்தையில் இந்த அறைகூவல் வெளிப்படுத்தப்படுகின்றது. "அசட்டை பண்ணுதல்" என்ற வார்த்தை, இகழ்ச்சியுடன் நோக்குதல், அற்பமான விஷயமாகக் கருதுதல் அல்லது சிலவற்றுக்குச் சிறிய அளவில் முக்கியத்துவம் கொடுத்தல் என்று அர்த்தப்படுகின்றது. இது 30:22ல் நடைபெற்றது. தளவாடங்களைக் காத்துக் கொண்டிருந்தவர்கள் தாழ்ந்த மனிதர்களாக நடத்தப்பட்டார்கள். சேவையின் மாபெரும் நோக்கத்தை அமிழ்த்துவதற்கு பெருமை, சுயநலம், மற்றும் அறியாமை ஆகியவை ஒன்று கூடின. இது இன்றைய நாட்களிலும் கவலைக்குரிய வகையில் தொடருகின்றது.

சேவையின் நியமமானது பரந்த இரு துறைகளில் அறைகூவல் விடப்பட்டு அடிக்கடி தோல்வி அடையச் செய்யப்படுகிறது. முதலாவது, புரிந்து கொள்ளுதலில் உள்ள குறைபாடு, "தளவாடங்களிடத்தில் தங்கி யிருப்பவர்களை" அடிக்கடி உற்சாகம் இழக்கச் செய்கின்றது (மத். 18:6). பணிப் பொறுப்பு எவ்விதமானதாயிருந்த போதிலும், ஊழியம் செய்கின்ற யாவரும் தேவனுக்கு ஊழியம் செய்கின்றோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்! இந்தப் புரிந்து கொள்ளுதலானது நம்மை, நடத்தப் படுகிற எல்லாப் பணிகளுக்காகவும் நன்றி நிறைந்தவர்களாயிருக்கச் செய்யும்!

இரண்டாவது, "தளவாடங்களிடத்தில் தங்கியிருப்பவர்கள்" பற்றி உணர்வறிவின்றியிருத்தல் என்பது அடிக்கடி காட்சிப்படுத்தப்படுகின்றது (30:22). யுத்தத்திலிருந்து திரும்பியவர்கள், தளவாடங்களிடத்தில் தங்கியிருந்தவர்களை எவ்வாறு நடத்தினார்கள் என்பதை எச்சரிக்கையாய்க் கவனித்துப் பாருங்கள். அவர்கள் கடுகடுப்பாக, கண்டிப்பானவர்களாக, பரிசுத்தத்தைக் கெடுப்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் உயர்வு மனப்பான்மையான எண்ணப்போக்குடன் தங்கள் சகோதரர்களுக்கு எதிராக முறுமுறுத்து, அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்! இது, அவர்களை வாழ்த்தி அவர்களிடத்தில், அன்பான பரிவிரக்கத்தைக் காண்பித்த தாவீதின் பண்புக்கு நேர் மாறானதாக இருந்தது (30:21).

முடிவுரை

கிறிஸ்துவின் சபையில் ஊழியம் செய்யும்படியாக நாம் யாவரும் நியமிக்கப்பட்டுள்ளோம். இவ்விதமாக, நாம் யாவரும் நம்மால் இயன்றதை எல்லாம் செய்ய வேண்டும் (1 தீமோ. 1:12; லூக். 12:42, 43, 47, 48; மாற். 14:8).

கர்த்தருடைய சபையில் நீங்கள் செய்யும் ஊழியத்தின் வகையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். ஆராதனைக் கூடுகைகளில் பயபக்தியும் பக்தி விருத்தியும் அளிப்பதற்கு உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யுங்கள். "சிறு விஷயங்கள்" எனப்படுபவைகள் அடிக்கடி பார்வையாளர்களை ஆராதனை வேளை பற்றி வளமான ஆழ்ந்த சிந்தனை கொள்ளும்படி செய்கின்றன. உங்களுக்குள் கிறிஸ்து வாழ்கின்றார் என்பதை இழந்து போகப்பட்டிருப்பவர்களுக்குக் காண்பிக்க உங்களால் இயன்ற எல்லா வற்றையும் செய்யுங்கள். "சிறு விஷயங்கள்" எனப்படுபவைகள் அடிக்கடி நம்பிக்கையை வெற்றி கொண்டு, எதிர்காலத்தில் மனமாற்றத்திற்கு வழி வகுக்கின்றன. உங்கள் சகோதரரை/சகோதரியை உற்சாகப்படுத்துவதற்கு உங்களால் இயன்றவற்றைச் செய்யுங்கள். பெரும்பாலும் "சிறு விஷயங்கள்" எனப்படுபவைகள் துன்புற்றுக்கிடக்கும் இருதயங்களில் வைராக்கியத்தை யும் ஒப்புக் கொடுத்தலையும் மீண்டும் பற்றியெரியச் செய்கிற இரக்கத் தினாலும் அக்கறையினாலும் தூண்டி விடப்பட்டவைகளாய் உள்ளன.

பேசோரில் இருந்த வீரர்கள் ஊழியம் பற்றி நமக்கு வலிவார்ந்த பாடத்தைப் போதிக்கின்றார்கள். தகுதி வாய்ந்த ஊழியத்திற்கான பலன் வளமானதாயிருக்கும், ஏனெனில் "யாவரும் ஒரே விதமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்." உங்களால் இயன்றதைச் செய்யுங்கள், பிறர் செய்கிற "சிறு விஷயங்கள்" பற்றி உணர்வறிவுடன் இருங்கள், மற்றும் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட தங்களின் முயற்சிகளில் தொடர்ந்திருக்குமாறு அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

பேசோரின் வெற்றி கொள்ளும் எண்ணப்போக்கை விவரிக்கும் வகையில் ஆபிரகாம் லிங்கனின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை புரூஸ் பார்ட்டன் அவர்கள் கூறியுள்ளார். உள்நாட்டு யுத்தத்தில் வளர்ச்சி பற்றி முதல் தகவலைப் பெறத் தேடிய லிங்கன் தளபதி மெக்கிளைல்லன் அவர்களை நாடினார். ஜனாதிபதியும் ஒரு கேபினட் உறுப்பினரும் வந்த வேளையில் மெக்கிளைல்லன் தமது வீட்டில் இல்லை, எனவே லிங்கன் ஒரு மணி நேரமாகக் காத்திருந்தார். கடைசியில் தளபதி திரும்பி வந்தார். அவர் லிங்கனை வாழ்த்தி வரவேற்பதற்குப் பதிலாக, மாடிப்படிகளில் ஏறிச் சென்று படுக்கைக்குச் சென்றார், தனது வேலையாட்களை அனுப்பி, ஜனாதிபதியைக் காண இயலாத அளவுக்குத் தாம் களைப்படைந்து இருப்ப தாகக் கூறச் சொன்னார். லிங்கனின் துணையாளர் கோபத்தில் வெடித்தார், ஆனால் அவரது தோள்களின் மீது லிங்கன் மென்மையாகத் தமது கைகளை வைத்து, "இதை அவ்வளவு கடினமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மெக்கிளைல்லன் நமக்கு வெற்றியைக் கொண்டு வருவாரென்றால், நான் அவரது குதிரையின் (கடிவாளத்தைப்) பிடித்துச் செல்லத் தயாராக இருப்பேன்!" என்று கூறினார்.

யாபேசின் குடிமக்கள் நன்றியுடைமை விவரிக்கப்படுகின்றது

[31:11-13]

இல்லினாய்ஸ் என்ற இடத்தில் இருந்த விவசாயி ஒருவர், டென்னஸ்ஸீயின் நாஷ்வில் என்ற இடத்தில் படைவீரர் ஒருவருடைய கல்லறையில் முழந்தாளிட்டுக் கொண்டிருக்கக் காணப்பட்டார். அங்கு அவரது மகன் புதைக்கப்பட்டிருக்கின்றாரா என்று கேட்ட பொழுது, “இல்லை, அவன் எங்கள் நகரில் வாழ்ந்து கொண்டுள்ளான். அவனது கல்லறையைக் காண்பதற்காக நான் இங்கு வந்துள்ளேன்” என்று அவர் பதிலளித்தார். அதைக் கவனித்தவர், “ஒருவேளை இங்கு வர இயலாத அவரது தந்தைக்குப் பதிலாக நீங்கள் இங்கு வந்தீர்களோ?” என்று கேட்டார். அதற்கு இவர், “ஆம், நான் இங்கு வருவது குறித்து இவரது தந்தை மகிழ்வடைந்தார், ஆனால் நான் எனக்காகவே இங்கு வந்தேன். எனக்கு ஏழு பிள்ளைகள் இருக்கின்றார்கள், அவர்கள் எல்லோரும் சிறுவர்கள், எனது மனைவி சுகவீனமாய் இருக்கிறாள். நான் படையில் சேர்க்கப்பட்டிருந்தேன். பண்ணை வேலையைக் கவனிக்க ஒருவரும் இல்லை, என்னால் (எனக்குப்) பதில் வேலை செய்ய ஆள் ஒருவரைக் கூலிக்கு அமர்த்த இயலவில்லை. மாதந்தோறும் நான் பெறுகிற பதிமூன்று டாலர்கள் என் குடும்பத்திற்கு உணவு தரப் போதாது. நான் சென்றாக வேண்டும், என் குடும்பம் துன்பப்பட வேண்டும் என்று காணப்பட்டது. முகாமுக்கு நான் சென்று அறிக்கை தர வேண்டிய நாளுக்கு முந்தின நாள், எனது அண்டை வீட்டாரின் மகன் வந்து, எனக்காக அவன் யுத்தத்திற்குச் செல்லுவதாக வாக்களித்தான். அவன் தன்னை யாரும் சார்ந்திருக்கவில்லையென்றும் எனக்குப் பதிலாகத் தான் செல்லுவதே மிகவும் சிறந்தது என்றும் கூறினான். அவ்வாறே அவன் சென்றான், சிக்காமவுகா என்ற இடத்தில் அவன் காயம் பட்டான். அவன் நாஷ்வில்லில் உள்ள மருத்துவ மனையொன்றில் சேர்க்கப்பட்டு, இங்கேயே இறந்தான். நான் அவனது கல்லறையைக் கண்டு பிடித்து விட்டேன்” என்று கூறினார். இதன் பிறகு அந்த விவசாயி கல்லறையின் தலைகல்லில் “எனக்காக இறந்தார்” என்று எழுதினார்.

நன்றியுடைமை என்பது தேவனைப் பின்பற்றுகிறவர்களுக்கு மிகவும்

நெருக்கமான அடையாளமாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் ஒரு முறையல்ல ஆனால் பலமுறை, கிறிஸ்தவர்கள் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளார்கள்:

> ... இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொலோ. 3:15ஆ).
>
> எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்கிறதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெச. 5:18).
>
> நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும் (1 தீமோ. 2:1).

இந்தத் தெளிவான கட்டளைகள் இருந்தும்கூட, நன்றி நிறைந்த இருதயங்கள், கவலைக்குரிய வகையில் குறைவுபட்டுள்ளன!

நன்றி நிறைந்த நிலைப்பாடு என்பது எப்பொழுதுமே இதயத்தைக் குளிர்விப்பதாக உள்ளது. "உங்களுக்கு நன்றி" என்ற எண்ணப்போக்கு இதைக் காணும் யாவருக்கும் மகிழ்வைக் கொண்டு வருகிறது. யாபேஸ்-கிலெயாத்தில் இருந்த குடிமக்கள் இந்த எண்ணப்போக்கை விவரிக்கின்றார்கள், இவர்களின் நன்றியுணர்வு 1 சாமுவேல் புத்தகத்தை முடித்து வைக்கின்றது.

யாபேஸ் என்பது யோர்தானின் மேற்குப் பகுதியில் இருந்த ஒரு சிறிய நகரமாகும். இந்த ஒரு நகரம் மாத்திரமே பென்யமீன் கோத்திரத்திற் கெதிராக நடந்த உள்நாட்டு யுத்தத்தில் பங்கேற்காததாக இருந்தது (நியா. 20:13). அந்தக் கோத்திரம் ஏறக்குறைய ஒழிக்கப்பட்ட பின்பு, பென்யமீன் கோத்திரத்தின் (எஞ்சியிருந்த ஆண்களுக்கு மனைவியாக்கும்படிக்கு யாபேஸில் இருந்து பெண்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்) (நியா. 21:8-15). இவ்விதமாக, இவ்விருசாராருக்கும் இடையில் நீண்ட நெருங்கிய தொடர்பு நிலவியது. சவுலின் முன்னோர்களில் சிலர், இந்த நகரின் குடிமக்களாய் இருக்கச் சாத்தியமிருந்தது.

உள்நாட்டு யுத்தம் மற்றும் கலப்புத் திருமணங்களின் காலம் முடிவுற்று முன்னூறு ஆண்டுகள் சென்ற பிறகு, பென்யமீனின் தலைநகரான கிபியாவுக்கு ஒரு ஒப்பந்தம் வந்து சேர்ந்தது. அந்த ஒப்பந்தமானது, அம்மோனியனான நாகாஸிடமிருந்து நம்பிக்கையிழந்த நிலையில் உதவியை நாடியது. யாபேஸ் சரண் அடைந்தால், நாகாஸ் ஒவ்வொரு மனிதரின் வலது கண்களையும் பிடுங்கிப் போடுவதாகக் கூறினான். இந்த உருவச் சிதைவானது, வலது கண்மட்டும் காணும்படிக்கு, அவ்விதமாக கேடயமானது ஒவ்வொருவரின் இடது கண்ணை மறைக்கும் வகையில் எடுத்துச் செல்லப்பட்டதால் எல்லா ஆண்களையும் யுத்தத்திற்கு தகுதியற்றவர்களாக்கிவிடும், வலது கண் பார்வையை இழந்தால், யுத்தத்தில் ஆண்கள் "கபோதி"களாய் இருப்பார்கள். யாபேஸ் சரணடைய மறுத்து

விட்டால், நாகாஸ் அந்த நகரைச் சுற்றிலும் முற்றுகையிட்டு ஒவ்வொரு வரையும் அழித்துப் போடுவான்.

இந்த விஷயத்தைச் சவுல் கேள்விப்பட்ட போது, தேவனால் தைரியம் பெற்று, அவர் ஒரு படையை ஒன்றுகூட்டினார். (அவருக்கு) வெற்றி தரப்பட்டது, இஸ்ரவேலின் அரசர் என்ற வகையில் சவுலின் நிலைப்பாடு திடமாயிற்று.

யாபேஸின் வரலாறு இத்துடன் முடிவதில்லை. நாற்பது ஆண்டுகள் கடந்து சென்ற வேளையில், சவுலின் வெற்றிகள் அதிகரித்தன, அதே போலவே அவரது வல்லமை, நிலைப்பாடு மற்றும் மேட்டிமை ஆகியவை யும் அதிகரித்தன. அவரது முந்திய தாழ்மை தொலைந்து போனது, அவர் வெறிகொண்ட சர்வாதிகாரியாக வளர்ந்திருந்தார். கில்போவா மலையில் சவுலின் முடிவு வந்து சேர்ந்தது, மற்றும் அவரது மரணமானது, பிலிஸ்தியர் கள் தங்கள் விக்கிரகக் கோயில்களில் சந்தோஷம் கொண்டாடுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தந்தது (31:6-10). யாபேஸின் மக்கள், சவுல் மற்றும் அவரது மகன்களின் உடல்கள் அவமதிக்கப்பட்டுக் கிடப்பதை அனு மதிக்க மறுத்து விட்டனர். அவர்கள் பெத்சானை நோக்கி தைரியமாய் அணிவகுத்துச் சென்று, அந்த உடல்களை எடுத்து, அவற்றுக்கு முறைப்படி இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினார்கள் (31:11-13). அற்புதமான நன்றி யுணர்வின் இச்செயல்விளக்கம் இந்நகரத்தைத் தனிச்சிறந்ததாக்குகின்றது!

நன்றியுடைமையின் எண்ணப்போக்கு

யாபேஸ்-கீலேயாத்தின் இந்த வீரக் குடிமக்களில் இருந்து நாம், பின்வரும் பண்பியல்புகளினால் அடையாளப்படுத்தப்பட்ட நன்றி யுடைமையைக் காண்கின்றோம்.

நன்றியுடைமை என்பது நினைவுகூருதலில் இருந்து எழுகின்றது (11:11). சவுல் யாபேஸுக்கு உதவி செய்து நாற்பது ஆண்டுகள் ஆகியிருந்தது, ஆனால் அவரது செயலானது நீண்ட காலமாக வளமாய் நினைக்கப் பட்டிருந்தது. இன்றைய நாட்களில் பலர், இரக்கமான செயல்களை விரைவில் மறந்து போய் தவறுகளை மட்டும் நினைவில் வைக்கின்றார்கள்! நமது பிரயோஜனத்திற்காக நற்செயல்கள் நிகழ்த்தப்படும் பொழுது, அதற்குப் பதிலாக ஒரு எளிய “உங்களுக்கு நன்றி” என்ற வார்த்தை யை(யாவது) கூற நாம் ஒருக்காலும் தவறி விடக் கூடாது. நல்ல சகோதரர்கள் நமக்கு உதவுகையில் நாம் அவர்களுக்கு நன்றியறிதலை வெளிப்படுத்த வேண்டும்:

> உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் (2 தீமோ. 1:4, 5).

தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள் (எபி. 13:7).

நமக்கு தேவனால் அற்புதமான கொடைகள் கொடுக்கப்படும் பொழுதும் நாமும் நன்றி செலுத்த வேண்டும்:

கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது (சங். 103:17, 18).

அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள் (சங். 105:6).

நன்றியுடைமை நமது பங்கில் சொந்த முயற்சிகளைக் கொண்டுள்ளது (31:12). யாபேஸின் மக்கள், சவுலின் உடலை மீட்பதற்கு தங்கள் உயிரைப் பணயம் வைத்து சக்தியைச் செலவிட்டார்கள். அவர்கள் தங்களையே அர்ப்பணித்திருந்தார்கள். சகோதரர்கள் நன்றியுடமையைக் காட்ட முயற்சிகளை மேற்கொள்வதில்லை என்பதே நன்றியுடைமை செயல் விளக்கப்படுத்தப்படாததற்கு முதல் காரணமாக உள்ளது! நன்றியுடைமை காண்பிக்கப்பட வேண்டும்!

நன்றியுடைமை நிலையானதாயிருக்க வேண்டும், அது ஒருக்காலும் நிபந்தனைக்குரியதாக இருக்க கூடாது (31:12). சவுலின் வெளியரங்கமான புகழ்ச்சி அழிக்கப்பட்டிருந்தது; அவர் தம் வாழ்வின் இறுதிப் பகுதியில் சித்தம் கலங்கிய மனிதரென்று அறியப்பட்டிருந்தார். வெறித்தனமான சர்வாதிகார ஆளுகை அவரது அரண்மனையை வழிநடத்திற்று. அவர் அரசர் என்ற வகையில் தமது செல்வாக்கின் முந்தைய சிகரங்களில் இருந்து வீழ்ந்து போயிருந்தார். சவுல் இறந்தவராக, கைவிடப்பட்டவராக, உருச் சிதைக்கப்பட்டவராக, தேவனற்றவர்களால் இகழ்ந்து பேசப்பட்டவராக இருந்தார், ஆயினும் இந்த நகரத்தார் நன்றியுடைமையைக் காண்பித்தார்கள்! நன்றியுடைமை என்பது ஒருக்காலும் ஒரு நபரின் அந்தஸ்தைக் கொண்டு நிபந்தனை விதிப்பதாயிருக்கக் கூடாது. (அந்தஸ்து இருப்பவர்களுக்கு மட்டும் நன்றியுடைமை காண்பித்தல் என்ற நிலை இருக்கக் கூடாது.) ஒருவரிடத்தில் குறைவுகள் காணப்பட்டாலும் (அவர் நமக்குச் செய்த நன்மைக்காக) மதிப்பு காண்பிக்கப்பட வேண்டும். ஒருவர் பிறரை "விரும்ப" வில்லை என்பதால் மாத்திரமே, நன்றியுடைமையின் வெளிப் பாடுகளைக் காண்பிக்காமல் வைத்துக் கொள்வது என்பதைக் கண்ணோக்குதல் எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது.

நன்றியுடைமை என்பது முழுமையாயிருக்க வேண்டும் (31:12ஆ, 13)

யாபேசின் மக்கள் செய்யக் கூடிய எல்லாவற்றையும் செய்தார்கள். நன்றியை வெளிக்காட்டுவதில் நாம் முழுமையாய் இருக்கிறோம் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்வோமாக. ஒரு "அடையாளமான" முயற்சி போதுமானதாய் இருப்பதில்லை.

நன்றியுடைமையானது ஒரு மென்மையான பிரியத்தை வெளிப் படுத்துகின்றது (31:13). இந்தக் குடிமக்கள் சவுலின் மரணத்தினிமித்தம் துக்கத்தை வெளிப்படுத்தினார்கள். இவர்கள் அவர் மீது விசேஷித்த வகையில் பிரியமாயிருந்தார்கள், இந்த ஆழமான உணர்வுப்பூர்வமான இணைவு தெளிவானதாக உள்ளது. நன்றியுடைமை என்பது மென்மையான பிரியத்தையும் ஆழமிக்க உணர்வுப் பிணைப்புக்களையும் வெளிப் படுத்துகின்றது (இ.வ. பிலி. 4:18). கிறிஸ்தவர்கள் தங்களின் இருதயங் களுக்குள்ளாகவே இருக்கும் அன்பின் காரணமாக நன்றியுடைமையைக் காண்பிக்கும்படி எதிர்பார்க்கப் படுகின்றார்கள் (1 யோவா. 4:19-21).

நன்றியுடைமை என்பது தானாக எழுவதாயிருக்கின்றது (31:12). சிறப்பான வேண்டுகோள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை; எந்த ஒரு பலனும் கிடைக்கும் என்று காணப்படவில்லை. மக்கள் தூண்டி விடப் படாமலேயே, வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படாமலேயே செயல் பட்டார்கள். இவ்விதமானதே நன்றியுடைமையின் "உண்மையான அடையாளமாக" உள்ளது - நன்றியுடைமையைக் காண்பிக்கும்படி ஒருவர் உந்திவிடப் படும்பொழுது அல்லது வற்புறுத்தப்படும் பொழுது, எழுச்சி/ஊக்கம் முழுவதும் இழந்து போகப்படுகிறது. வற்புறுத்தப்பட்ட நன்றி யுணர்வில், அன்பு என்பது ஊக்குவிக்கும் பொருளாயிருப்பதில்லை, தேவன் இதில் ஒருக்காலும் பிரியமாய் இருப்பதில்லை!

இவர்களின் நன்றியுடைமையானது முற்றிலும் அன்பினால் தூண்டப் பட்டது, மற்றும் ஊழியம் செய்ததில் தெளிவாய் செயல்விளக்கப் படுத்தப்பட்டது.

வலிவார்ந்த ஒரு பாடம் சுட்டிக் காண்பிக்கப்பட்டது

இந்த வரலாற்று எடுத்துரைப்பிலிருந்து நன்றியுடைமையின் முக்கியமான ஒரு அம்சம் நமக்குக் காண்பிக்கப்படுகின்றது - இது அமைதி யாகவும் வெளிப்படுத்தப்படாமலும் இருந்துவிட்டால், இது பயனற்ற தாகின்றது!

1860ம் ஆண்டில், மிச்சிக்கன் ஏரியில், புயல் வீசிய இரவு வேளை யொன்றில், பக்கச் சக்கரம் கொண்ட நீராவி எஞ்சின் படகு ஒன்றை மரம் ஏற்றிச் செல்லும் சிறு கப்பல் மோதினது. அதிலிருந்த 393 பயணிகளில் 279 பேர், அந்த நீராவிப்படகு இல்லினாய்ஸின் வின்னெட்கா கரையிலிருந்து ஒரு மைல் தொலைவில் (ஏரிக்குள்) மூழ்கிய பொழுது (ஏரியில்) அமிழ்ந்து போனார்கள். வடமேற்கு பல்கலைக் கழகத்தின் மாணவராயிருந்த எட்வர்டு ஸ்பென்சர் அந்தத் துன்ப நிகழ்ச்சியின் வீரர்களில் ஒருவராயிருந்தார். என்ன நடந்தது என்பதை உணர்ந்த ஸ்பென்சர் மிச்சிக்கன் ஏரியின் குளிர்ந்த

நீருக்குள் குதித்து மூழ்கிக் கொண்டிருந்த பயணிகளை நோக்கி நீந்திச் சென்றார். அவர்களில் ஒருவரை இவர் பிடித்துக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டு, இன்னொருவரை இழுத்து வர உடனடியாகத் திரும்பிச் சென்றார். எட்வர்டு ஸ்பென்சர் தன்னந்தனியாளாக அந்த இரவில் பதினேழு பேரைக் காப்பாற்றினார். ஆனால் இவர் தனது வீரத்திற்கு மிக உயர்ந்த விலையொன்றைச் செலுத்த வேண்டியதாயிற்று. அந்த அனு பவத்தின் கடின உழைப்பானது அவருக்குச் சித்தபிரம்மை ஏற்படச் செய்து, அவர் எஞ்சியிருந்த தம் வாழ்நாள் முழுவதிலும் ஒரு சக்கர நாற்காலியிலேயே இருக்கும்படி செய்து விட்டது. இவரது எண்பதாவது பிறந்த நாளின் போது இவரைப் பேட்டி கண்டவர்களில் ஒருவர், விதிவசமான அந்த நாள் பற்றிய இவரது மிகத் தெளிவான நினைவு என்ன என்று கேட்டார்கள். அதற்கு இவர், "அந்தப் பதினேழு பேரில் ஒருவர் கூட எனக்கு நன்றி தெரிவிக்கத் திரும்பி வரவில்லை" என்று பதில் அளித்தார்.

பிறருக்கு நாம் நன்றியடைமையை செயல்விளக்கப்படுத்த நாம் சாதாரணமாகத் தவறி விடுவதை நாம் யாவரும் ஒப்புக் கொள்வோமாக. அடிக்கடி நாம் நன்றியுடைமையை உணர்ந்து நமது பாராட்டுதலை வெளிப்படுத்த விரும்பியிருக்கலாம், ஆனால் நாம் அமைதி காத்து, உணரப்பட்ட நன்றியுடைமையை ஒருக்காலும் வெளிப்படுத்தாமல் இருந்து விடுகின்றோம்!

நன்மையை நினைவுபடுத்திக் கொள்ளவும், நம் வாழ்வில் நன்மையைக் கொண்டு வந்தவர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் நிலைத்திருக்கவும் நாம் தீர்மானம் செய்து கொள்வோம். எல்லாருக்கும் மேலாக, நாம் தேவனுக்கு முதலில் நன்றியுடைமையை வெளிப்படுத்த நினைவுகூருவோம்:

> *கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன் (சங். 13:6).*
>
> *கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால், என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன் (சங். 28:7).*

நாம் யாவரும் நம் குடும்ப உறுப்பினர்களுக்கும் (அதாவது, பெற்றோர், பிள்ளைகள், தாத்தா பாட்டிகள் ஆகியோருக்கு); சபையாகிய தேவனுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு; மற்றும் நமக்கு நற்செயல் செய்கின்ற நம் சமூக உறுப்பினர்களுக்கு நன்றியுடைமையைக் காண்பிப்போமாக.

முடிவுரை

நன்றியுடைமை என்பது வெளிப்படுத்தப்பட்டாக வேண்டிய ஒழுக்க ரீதியான கட்டுப்பாடாக உள்ளது. நன்றியுடைமையை வெளிப்படுத்தாமல் இருப்பது ஒரு பாவமாக உள்ளது. யாபேஸின் மக்களின் நன்றி யுடைமையை நீங்கள் வளர்த்துக் கொள்ளும் போது, மகிழ்வினால் நிரப்பப்

பட்ட அற்புதமான நபராவீர்கள்; நீங்கள் உங்கள் வாழ்க்கையையெல்லாம் அனுபவிப்பீர்கள்; நீங்கள் அதிகமான நண்பர்களைப் பெற்றிருப்பீர்கள்; பிறர் உங்களுக்கு அதிகமாய் (நன்மை) செய்கின்றதை நீங்கள் காண்பீர்கள்; ஊழியத்தில் நீங்கள் உங்களையே இழந்து உண்மையான மகிழ்வைக் கண்டடைவீர்கள்!

இவ்வளவு அதிகமானவர்களிடமிருந்து இவ்வளவு அதிகமானவற்றைப் பெற்றுக் கொண்டு, இவர்களின் நற்தன்மையை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! தயவு செய்து நன்றியுடைமையை வெளிப்படுத்த நினைவு கொள்ளுங்கள். இதை இவ்வாரத்திலேயே செய்யுங்கள்! (1 தெச. 5:18).

போதனை மற்றும் பிரசங்கம் ஆகியவற்றில் உதவிகள்

ஜான் கச்செல்மேன்

"அவனுடைய பெயர் எல்க்கானா"
(1 சாமுவேல் 1:1)

பழங்கால எபிரெயர்களுக்கு, ஒருவரின் பெயர் என்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. "எல்க்கானா" என்பது "தேவன் உடைமையாகக் கொண்டுள்ளார்" என்று நேரடியாக அர்த்தம் தருவதாயிருந்தது. இந்தப் பெயரானது இம்மனிதருக்கு எவ்வளவாகப் பொருந்தியுள்ளது.

1. *அவருடைய நபர்த்துவத்தைத் தேவன் உடைமையாகக் கொண்டிருந்தார். அவர் தாம் முற்றிலுமாகத் தேவனைப் பற்றிய சிந்தை கொண்டிருந்ததாகச் சுட்டிக் காண்பித்தார். எவரொருவரும் அவரை உற்று நோக்குதல் மட்டுமே அவசியமாயிருந்தது, இது மிகவும் தெளிவாகின்றது.*
2. *அவருடைய பெற்றோர்த்துவத்தைத் தேவன் உடைமையாகக் கொண்டிருந்தார். அவர் தமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கவும், தம்முடையது போன்ற விசுவாசம் மற்றும் கடமை ஆகியவற்றை அவர்களின் இருதயங்களில் பதித்து வைக்கவும் கவனமாயிருந்தார்.*
3. *அவருடைய திருமணத்தைத் தேவன் உடைமையாகக் கொண்டிருந்தார். அன்னாளுடனான அவரது உறவு இரக்க முள்ளதாக, நேர்மையுள்ளதாக, புரிந்து கொள்ளுதல் உடையதாக, அக்கறை உடையதாக மற்றும் அன்பு செலுத்துவதாக இருந்தது.*

வெளிப்படுத்தப்பட்ட ஒப்புக் கொடுத்தல்
(1 சாமுவேல் 1:3)

தேவனுக்கான எல்க்கானாவின் ஒப்புக் கொடுத்தலானது அவரது மார்க்கரீதியான செயல்முறைகளில் மட்டுமின்றி அன்றாடப் பழக்க வழக்கங்களிலும் கூட வெளிப்படுத்தப்பட்டது. இம்மனிதரின் ஒப்புக் கொடுத்தலானது பின்வருபவற்றினால் வெளிப்படுத்தப்பட்டது ...

1. *அவருடைய முறையான, சீரான, உணர்வுப்பூர்வமான மற்றும் அறிவுப்பூர்வமான மார்க்கரீதியான செயல்முறைகளினால் (1:3, 4, 21).*
2. *பிள்ளைகளைத் தேவனுடைய வழிகளில் போதித்துப் பயிற்றுவிப்பதற்கான அவரது அளவு கடந்த அக்கறையினால் (1:4, 21).*
3. *அன்னாள் மீது அவர் கொண்டிருந்த ஆழமான அன்பு மற்றும் பிரியத்தினால் (1:8).*
4. *புண்பட்டவர்களுக்காக அவர் கொண்டிருந்த நுண்ணுணர்வு, கவனிப்பு மற்றும் அக்கறை (1:8).*

இந்தப் பண்புகள் யாவும், வாரத்தின் ஏழு நாட்களிலும் தேவனுக்கு உண்மையாகத் தன்னை ஒப்புக் கொடுத்து வாழும் பண்புடைய ஒருவரைக் குறிக்கின்றன. இவ்விதமாக, "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்" (1 பேது. 3:15) என்று பரிசுத்தவான்கள் யாவரையும் வற்புறுத்த வேண்டிய அவசியமாயுள்ளது.

குடும்ப ஆராதனை
(1 சாமுவேல் 1:4)

இந்தப் பழங்காலக் குடும்பத்தில் இருந்து, குடும்பங்கள் தங்களின் ஆராதனை செயல்பாடுகளில் ஒன்றுபட்டிருக்க வேண்டியதின் அவசியத்தை உற்று நோக்க முடியும்.

1. *குடும்ப ஆராதனையின் தொடக்க இடத்தைக் கவனியுங்கள் - "எல்க்கானா பலியிட்டான்." பெற்றோர்கள் உலகக் குறிக்கோள்கள் தங்களை விட்டு அகலும்படி செய்து, தேவபக்திக் கேற்றவைகளை நாட வேண்டும்.*
2. *அவசியமான பயிற்சியைக் கவனியுங்கள் - "பங்கு போட்டுக் கொடுப்பான்." பிள்ளைகளுக்கு அறிவுறுத்துதல் அவசியமாகின்றது, இதை அளிப்பதற்குப் பெற்றோருக்குக் கடமை உண்டு.*
3. *அளவெல்லையைக் கவனியுங்கள் - "எல்லாருக்கும்." சிறுவர் முதல் வயதானவர்கள் வரை எல்லாப் பிள்ளைகளும் இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். எவரொருவரும் விலக்கி வைக்கப் படக் கூடாது, ஏனெனில் "எல்லாரும்" பங்கேற்க முடியும்.*

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்!"
(1 சாமுவேல் 1:5)

மனைவியர்கள் தங்கள் கணவர்கள் மீது அன்புகூர வேண்டும் என்று வேதாகமத்தில் எவ்விடத்திலும் கட்டளையிடப்படவில்லை, ஆனால் கணவர்கள் தங்கள் மனைவியர்கள் மீது அன்புகூர வேண்டும் என்று அது கட்டளையிடுகின்றது (எபே. 5:25, 28). ஏன்? ஏனென்றால் மனைவியின் அன்பு என்பது பதிலுக்குப் பதிலாகக் காட்டப்படுவதாக உள்ளது. அவள் தன் கணவன் தன் மீது காண்பிக்கிற விதமாக (பதிலுக்கு) அன்பு செலுத்துகின்றாள்! ஒரு கணவன் தன் மனைவியின் மீது எவ்வாறு அன்பு செலுத்த வேண்டும் என்பதை நாம் எல்க்கானா விடமிருந்து கற்றுக் கொள்ளுகின்றோம்.

1. *அவள் மீது பெருந்தன்மையுடன் அன்புகூருங்கள் (1:5).*
2. *அவள் மீது காணக்கூடிய வகையில் அன்புகூருங்கள் (1:5).*
3. *அவள் எரிச்சலாயிருக்கும் பொழுது(ம்) அன்புகூருங்கள் (1:6).*
4. *அவள் மனச்சோர்வடைந்துள்ள வேளையிலும், உணர்வெழுச்சி யடைந்துள்ள வேளையிலும் அன்புகூருங்கள் (1:7, 8).*
5. *அவள் எரிச்சல் மூட்டக் கூடியதாகக் காணப்படக் கூடிய எதையாவது செய்கின்ற வேளையிலும் அன்புகூருங்கள் (1:8).*

எல்க்கானா அன்னாளை நேசித்தார்
(1 சாமுவேல் 1:5)

1. *அவருடைய அன்பு செயல்விளக்கப்படுத்தப்பட்டது (1:5).*
2. *அவருடைய அன்பு அவளுடைய சோதனை வேளையில் பலத்திற்கான ஆதார மூலமாயிருந்தது (1:5, 6).*
3. *அவருடைய அன்பு வாய்மொழியில் உரைக்கப்பட்டது (1:8).*
4. *அவருடைய அன்பு அவரது மனைவியின் திட்டங்கள் அவரது திட்டங்களுக்குப் பொருந்தி வராத பொழுது, அவளை "கவனித்துக் கேட்க"*

அவருக்குப் பெலன் அளித்தது (1:22).

5. *அவருடைய அன்பு அவரது மனைவியுடன் ஒத்துழைப்பை ஊடுருவிற்று (1:23).*

தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார் (1 சாமுவேல் 1:5, 6)

அன்னாள் மலடியாயிருந்த ஆண்டுகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டன. அதில் நோக்கம் இருந்தது, ஆனால் அந்த நோக்கம் உணர்ந்தறியப்படவில்லை. தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார். தேவனுடைய வழிகள் நமது வழிகளாயிருப்ப தில்லை, அவற்றை நாம் பெரும்பாலும் புரிந்து கொள்வதில்லை (ஏசா. 55:9).

1. *சில வேளைகளில் தேவன் தண்டியாமல் இருக்கின்ற பொழுது, அவர் தண்டிக்கின்றவராக இருக்கிறார் என்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றார்.*
2. *சில வேளைகளில் தேவன் பட்சபாதமாயிராத நிலையில், அவர் பட்சபாதமாயிருக்கிறார் என்று தவறாகப் புரிந்து கொள்ளப் படுகின்றார்.*
3. *சில வேளைகளில் தேவன் பிரசன்னமாகியுள்ள நிலையில், அவர் பிரசன்னமாயிருப்பதில்லை என்று தவறாகப் புரிந்து கொள்ளப் படுகின்றார் (1:11).*
4. *சில வேளைகளில் மக்கள், பாவம் நிறைந்த தங்களின் செயல் முறைகளை நியாயப்படுத்துவதற்காக தேவனைப் பற்றிய தங்களின் தவறான புரிந்து கொள்ளுதல்களைப் பயன்படுத்து கின்றனர், அவர்கள் "இது என் வாழ்வுக்குத் தேவனுடைய சித்தமாய் இருக்க வேண்டும்" என்று கூறுகின்றனர்.*

சுருக்கமாய்க் கூறுவதென்றால், சில வேளைகளில் தேவன் உண்மையில் தவறாகப் புரிந்து கொள்ளப்படும் பொழுது அவர் குற்றப்படுத்தப்படுகின்றார். தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல் ஒருமுறை திருத்தப்பட்டு விட்டால், எல்லாம் தெளிவாகி விடுகின்றது. அன்னாள் ஏங்கிக் கேட்டுக் கொண்டிருந்த மகன், அவள் அவனைக் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கத் தயாராகும் வரையிலும் அவளுக்குத் தரப்படவில்லை. நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், ஏனெனில் தேவனைப் பற்றி தவறாகப் புரிந்து கொள்ளு தல் வேதனை, வருத்தம், மற்றும் விசுவாசக் குறைவு ஆகியவற்றிற்குக் காரணமாகிவிடும்! சோதனை அல்லது பரீட்சை என்பது எங்கெல் லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம், தேவனை நாம் தவறாகப் புரிந்து கொள்ளாதிருக்கக் கடவோம்! (யோபு 9:1-12; 5:8; 13:15).

மனத்துயருக்குப் பொதுவான காரணங்கள் (1 சாமுவேல் 1:7)

அன்னாள் மன உற்சாகமின்மையின் ஆழங்களில் இருந்தாள்; அவள் மனச் சோர்வுற்றிருந்தாள் (1:8அ, 15, 10). அவள் வாழ்வில் இந்த மனத்துயருக்குக் காரணமாயிருந்தது எது?

1. *எரிச்சல் மூட்டும் ஒரு நபர், பெனின்னாள் (1:7).*
2. *பிள்ளை பெற முடியாததினால் அவள் முற்றிலும் தோல்வி என்ற உணர்வுகள் (1:2, 5, 6; இ.வ. 1:16).*

3. தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்வதில் குறைபாடு (1:5ஆ, 6ஆ, 11).
4. அவள் உணவு உண்ண மறுத்த போது உடல்ரீதியாக அவளைக் கவனித்தலில் குறைபாடு (1:7ஆ).

ஆனால் அன்னாள் தன்னை உண்மையாகவே கவனித்த அன்பு நிறைந்த கணவரின் வார்த்தைகளைக் கவனித்ததால், பேரச்சமூட்டும் ஆழங்களில் இருந்து எழும்பினாள் (1:8). அவள் "எழுந்து", சுறுசுறுப்பாகி, உணவு உண்டு தன்னை போஷித்துக் கொண்டாள் (1:9). அவள் கர்த்தரிடத்தில் பலமாக ஜெபித்தாள் (1:10). அவள் தனது பிரச்சனையைக் கர்த்தரிடமாய்த் திருப்பி விட்டாள். அது அவளுக்கு மிகப் பெரிதாக இருந்தது, அவள் அதை, தானே தீர்த்துக் கொள்ள முயற்சி செய்வதை நிறுத்தி விட்டாள். ஏனெனில், தேவன் மேல் நம்பிக்கை கொண்டு, அன்றாட வாழ்வில் மனத்துயரையும் வீழ்ச்சியையும் வெற்றி கொள்ள வல்லவர்களாய் இருப்பவர்களுக்கு மகிமையுள்ள முடிவொன்று காத்திருக்கின்றது (2:20, 21).

அமைதிக்கான சாலை வரைபடம்
(1 சாமுவேல் 1:9-18)

அன்னாள் மிகவும் துக்கமுள்ளவளாயிருந்தாள். அவள் இருதயம் கவலையாயிருந்தது (1:8); அவள் மிகவும் துயரமடைந்திருந்தாள் (1:10); அவளது ஆவி ஒடுங்கிக் கிடந்தது (1:15). அவள் போராடிக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் உயிர் பிழைத்திருந்தாள்! அவள் அடர்ந்த இருளினூடாகக் கடந்து பகலின் வெளிச்சத்திலேயே சென்றாள்! இது எவ்வாறு நடந்தது?

1. அவள் ஆராதிக்கச் சென்றாள் (1:9).
2. அவள் தேவனிடத்தில் வலிவான மற்றும் ஊக்கமான வகையில் ஜெபித்தாள் (1:10, 15).
3. "தனது கவலைகளையெல்லாம் அவரிடமாய் வைக்கையில்" (1:11) தேவனுடைய ஆசீர்வாதத்தை நாடினாள்.
4. அவள் சிலவற்றைச் செய்வதற்கான தனிப்பட்ட பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டாள் (1:11).
5. அவள் தன் வருத்தங்கள், தேவைகள் பற்றி பிறரிடம் திறந்த மனத்துடன் இருந்தாள் (1:14-16).
6. அவள் தனது சுமைகளை இலவாக்கிக் கொண்டாள், "அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை" (1:18; இ.வ. எரே. 31:13ஆ).

எச்சரிக்கையூட்டும் நடைமுறை
(1 சாமுவேல் 1:12-18)

கலக்கம் கொண்டிருந்த அன்னாள், ஆசரிப்புக் கூடாரத்தின் இராஜரீகமான சூழலில் தனது இருதயத்தைத் தேவனிடம் ஊற்றினாள். அவளது வெளியரங்கமான நடத்தையைக் கவனித்த ஏலி அவள் தவறான நடக்கையுடையவள் என்று முடிவு செய்தார். அவரது (இந்தத்) தவறானது இன்றைய நாட்களில் பலரால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. எல்லா உண்மைகளையும் அறிந்து கொள்வதற்கு முன்பு ஒரு நபரைப் பற்றி முடிவெடுத்தல் என்பது எச்சரிக்கையூட்டும் ஒரு நடைமுறையாக உள்ளது.

1. எல்லாம் தவறானது என்ற முடிவுக்கு ஒருவர் விரைந்து செல்லலாம் (1:14).
2. பாரப்பட்டுக் கிடக்கின்ற இருதயத்திற்கு ஒருவர் இன்னும் சற்று

துன்பத்தைக் கூட்டிச் சேர்த்து விடலாம். அன்னாள் ஏற்கனவே தன்னைத் தோல்வியடைந்தவளாகக் கருதிக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் தன்னைத் "தகுதியற்றவள்" (1:16) என்று உணரும்படியாக்கப்பட்டாள்.

3. *ஒருவர் ஆராய்ந்து பார்க்கலாம்ஊஅன்னாளின் பண்பு குறித்து அனாவசியமாகக் கேள்வி கேட்கக் காரணமாயிற்று (1:16).*
4. *ஒருவர், இருதயத்தில் உற்றுப் பார்க்கும் முயற்சியை மேற் கொள்ளாமல் தவறி விடலாம் (1:15).*
5. *ஒருவர் உணர்வறிவற்ற, கொடுமையான, அவசரமான மற்றும் உணர்வற்ற நிலைப்பாடுகளை வெளிப்படுத்தலாம்.*

ஏலி எவ்வளவாய்த் தவறுள்ளவராயிருந்தாரோ, அவ்வளவாய் அவர் தனது தவறை உணர்ந்த பொழுது மாற்றம் அடைந்தார். அவர் அன்னாளுக்கு உதவ முன் வந்து அவளை உற்சாகப்படுத்தினார் (1:17, 18). அவர் ஒரு வலிவான பாடத்தைக் கற்றுக் கொண்டார்!

"கர்த்தர் (அவளை) நினைத்தருளினார்"
(1 சாமுவேல் 1:19)

அன்னாளின் வலிவார்ந்த கூக்குரல் (1:11) ஒரு சுருக்கமான எடுத்துரைப்பில் பதில் அளிக்கப்பட்டது. அவளைத் தேவன் நினைவு கூர்ந்தது ஏன்? அவளது விசுவாசம், ஜெபம், வருத்தம், இடர்ப் பாடுகள் ஆகியவற்றினாலேயே அவளை அவர் நினைவுகூர்ந்தார். இதில் உள்ள ஆறுதல் என்ன?

1. *போராட்டங்களின் மத்தியில், தேவன் நம்மை நினைவுகூர்ந்து நமது தேவைகளை திருப்திப்படுத்துவார் (ரோமர் 8:28; 1 கொரி. 10:13; சங். 34:15-20).*
2. *நாம் புறக்கணிக்கப்படுவதாக தோன்றுகின்ற போது, தேவன் நம்மை மீட்பார் (நீதி. 11:8).*
3. *மனிதர் பெரும்பாலும் மறந்து விடலாம், அவ்வாறே மறக்கின்றனர், ஆனால் தேவன் நம்மை மறக்க மாட்டார் (சங். 37:28).*

உபா. 4:31; ஆதி. 19:29; சங். 50:15 ஆகிய வேதவசனங்களை வாசியுங்கள். தேவனுடைய ஞாபகசக்தி எவ்வளவு பெரியதாக உள்ளதோ, அவ்வளவுக்கு "இனியும் நினைவுகூராத" திறனும் அவரிடத்தில் உள்ளது (எரே. 31:34; எபி. 8:12; 10:17).

"கர்த்தர் கொடுத்தார்!"
(1 சாமுவேல் 1:27)

இந்தச் சொற்றொடர் ஆவிக்குரிய வகையில் எவ்வளவு ஆழம் உடையதாயிருக்கிறது! இது அன்னாளின் இருதயம் பற்றிய மாபெரும் வெளிப்பாடாக உள்ளது.

1. *இது நம்மை நிலைநிறுத்துவதற்குத் தேவன் மீது நம்பிக்கையையும் அவரைச் சார்ந்திருத்தலையும் வெளிப்படுத்துகிறது. தேவன் (நமக்குத் தேவையானவற்றை) அளிப்பார்!*
2. *இது தேவைகளையும் விருப்பங்களையும் விளக்குகின்ற ஒரு இருதயத்தை வெளிப்படுத்துகின்றது. தேவன் கேட்டு பதில் அளிப்பார்!*
3. *இது மனிதத் திறனில் நம்பிக்கையில்லாமையை வெளிப் படுத்துகின்றது. மனிதரால் கூடாதது தேவனால் கூடும்!*

4. இது மாபெரும் கொடுப்பாளரான தேவனைப் புரிந்து கொள்கின்ற ஒருவரை வெளிப்படுத்துகின்றது. தேவன் கொடுக்க விரும்புகின்றார்!

ஜெபத்தில் பலத்த உறுதிப்பாடு
(1 சாமுவேல் 1:27)

நாம் தேவனிடத்தில் ஜெபிக்கையில் தைரியமாய் இருக்க முடியும்! தேவன் நமது ஜெபங்களைக் கேட்கின்றார், அவற்றிற்குப் பதில் அளிப்பார் (எபே. 3:20; எபி. 4:16). அன்னாள் தனது ஜெபங்களில் அப்படிப்பட்ட பலத்த உறுதிப்பாடு கொண்டிருந்தது ஏன்?

1. அவள் தனது கலக்கங்கள் பற்றி தேவன் அக்கறை செலுத்தினார் என்று அறிந்தாள் (1:10).
2. அவள் தனது இருதயம் பரிசுத்தப்படுத்தப்பட்டு, நேர்மையாக மற்றும் தேவனுக்குத் திறந்ததாக இருந்தது என்று அறிந்தாள் (1:15).
3. அவள் தனது உண்மையான ஜெபத்தினால் விளைந்த உள்ளான மகிழ்வையும் சமாதானத்தையும் அறிந்தாள் (1:18).
4. அவள் தேவனுடைய அளிப்புகளின் மீது நம்பிக்கை கொள்ளவும் அவற்றின்படி செயல்படவும் முடிவெடுத்தாள் (1:11, 12, 22).
5. அவள் ஜெபத்தின் வலிவின் மீது உறுதிப்பாடுகளும், நம்பிக்கையும், விசுவாசமும் தீர்மானமும் கொண்டவளா யிருந்தாள்.
6. ஜெபத்தால் அவளது உறுதிப்பாடானது, ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்ட பொழுது அவளுடைய நன்றி செலுத்துதலினால் பலப்படுத்தப்பட்டன. தேவன் கொடுத்த பொழுது அவள் மௌனமாய் இருந்து விடவில்லை!

வெற்றிகரமான பெற்றோர்த்துவம்
(1 சாமுவேல் 1:28)

தவறு செய்கின்ற ஒரு பிள்ளையை வளர்க்கின்ற பெற்றோரின் பெருந்துக்கத்தை எடுத்துரைக்க வார்த்தைகள் எதுவும் போதுமான தாக இருக்க முடியாது. பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோருக்கு உத்தரவாதம் தரக் கூடிய மிகச் சிறப்பான திட்டம் என்று எதுவும் இல்லாத நிலையில், பெற்றோர்கள் பின்வரும் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளனர்.

1. ஒவ்வொரு பிள்ளையும் தேவனிடமிருந்து வருகின்ற கொடையாக இருப்பதினால், பெற்றோர்த்துவக் கடமைகளின் மாபெரும் தன்மை குறித்து உணர்ந்தறியுங்கள்! (1:27).
2. இளைய மற்றும் மென்மையான இருதயங்களில் ஆவிக்குரிய கொள்கைகளை நிலைநாட்டுவதின் முக்கியத்துவம் யாவற்றையும் உணர்ந்தறியுங்கள் (1:24).
3. ஒவ்வொரு பிள்ளையையும் கர்த்தருக்கு "அர்ப்பணிப்பதற்கு" நேரமும் சக்தியும் எடுத்துக் கொள்ளுங்கள் (1:28).
4. நீண்ட உழைப்புக்களில் தேவனுக்கு ஊழியம் செய்யும் கடமையை இளையவர்களின் மனதில் பதியச் செய்யுங்கள் (1:28).

பெற்றோர்கள், தாங்கள் அறிந்தவற்றை மட்டுமே போதிக்க முடியும். அவர்கள் தாங்கள் கொண்டுள்ள எண்ணப்போக்குகளை மட்டுமே செயல்விளக்கப் படுத்தவும், தாங்கள் எந்த அளவுக்குத் தேவனிடம் பயபக்தியாய்

இருக்கின்றார்களோ அந்த அளவுக்கே தேவனிடத்திலான மதிப்பை (தங்கள் பிள்ளைகளிடத்தில்) பதிய வைக்கவும் முடியும். இவ்விதமாக, பெற்றோர்கள் தங்கள் வாழ்வானது வார்த்தையிலும் உதாரணத்திலும் தேவபக்தியுள்ளதாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எரோகாமின் புத்திரனான எல்க்கானா (1 சாமுவேல் 1:1-28)

1. ஒப்புக்கொடுத்தல் உள்ள பக்தியுள்ள மனிதர் (1:3-6, 21).
2. தமது பிள்ளைகளின் மதரீதியான மேம்பாட்டில் ஆர்வம் கொண்டிருந்த தந்தை (1:4, 22, 23).
3. திருமணம் குறித்த தேவனுடைய விதிகளை மீறியதால் இல்லத்தில் பிரிவினையைக் கண்டறிந்த கணவர் (1:2, 6).
4. தேவனிடம் தமது வார்த்தையைக் காத்துக் கொள்ளத் தீர்மானித்த ஒரு மனிதர் (1:21).
5. தமது மனைவியின் மீதான அன்பையும் ஒப்புக் கொடுத்தலையும், வார்த்தை மற்றும் செய்கை ஆகியவற்றில் செயல்விளக்கப்படுத்திய ஒரு மனிதர் (1:8).

ஒரு தந்தையை மதிக்கத் தக்கவராக்குவது எது (1 சாமுவேல் 1:1-28)

1. தேவன் மீதான மதிப்பு மற்றும் பயபக்தி (1:3).
2. முறையான, வழக்கமான ஆவிக்குரிய பண்பு (1:3).
3. குடும்பத்திற்குப் பயபக்தியைச் செயல்விளக்கப்படுத்துதல் (1:4, 21).
4. தமது மனைவி மீதான அன்பைக் காணக்கூடிய வகையில் செயல்விளக்கப்படுத்துதல் (1:5, 8).
5. தமது மனைவியுடன் ஒத்துழைத்தல் மற்றும் செய்தித் தொடர்பு கொள்ளுதல் (1:23).
6. தேவனுடைய வார்த்தையின் மீது வெளிப்படையான நம்பிக்கை (1:23ஆ).
7. தமது பிள்ளைகளைத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க மனப் பூர்வமான விருப்பம் (1:28).

இன்றைய நாட்களின் மனிதர்களுக்கான மூன்று முன்னு ரிமைகள் (1 சாமுவேல் 1:1-28)

1. தேவன் மீது நம்பிக்கை கொண்ட, தேவனை ஆராதிக்கின்ற, தேவனிடத்தில் (கொடுத்த) வாக்கைக் காத்துக் கொள்கின்ற மனிதராயிருங்கள்.
2. வார்த்தை மற்றும் செய்கையினால் உங்கள் மனைவியை ஊக்கப்படுத்துகின்ற ஒரு கணவராயிருங்கள் (1:5, 8).
3. பிள்ளைகளுக்குள் மார்க்கரீதியான வைராக்கியத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தந்தையாயிருங்கள் (1:4, 21, 28).

ஒரு தாயின் பல்வேறு முகங்கள்
(1 சாமுவேல் 1:1-2:19)

1. அவள் தான் கட்டுப்படுத்த வல்லமையற்றுள்ள வரையறைகள் மற்றும் எரிச்சல்களில் இருந்து வரும் வருத்தங்கள் மற்றும் போராட்டங்கள் ஆகியன செதுக்கப்பட்ட முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:2-7).
2. அவள் சபை கூடுகைகளில் ஆராதித்தல் மற்றும் துதித்தலின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:5).
3. அவள் தனது ஆத்துமாவை தேவனிடத்தில் ஊற்றி ஜெபிக்கையில், அவரிடம் உதவியை கெஞ்சிக் கேட்கையில் உண்மையான ஜெபத்தின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:9-18).
4. அவள் தனது வாழ்வின் நோக்கம் மற்றும் அர்த்தம் ஆகியவற்றை உணருகையில் மகிழ்ச்சி மற்றும் நிறைவு ஆகியவற்றின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:20).
5. அவள் சிறு பிள்ளையை கவனிக்கின்ற பொழுதும் அவனது தேவைகள் ஒவ்வொரு நாளும் சந்திக்கப்படுகின்ற பொழுதும் மென்மையான பாசத்தின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:22, 23).
6. அவள் பிள்ளையானவன் வாழ்வில் தன் வழியே போக வேண்டியிருக்கும் பொழுது, நெருங்கிய பிணைப்பு சற்றே பிரிகின்ற பொழுது பிரிதலின் துயரத்தைப் பிரதிபலிக்கின்ற முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (2:11).
7. அவள் பிள்ளையானவன் பக்குவமடைந்து உற்பத்தி செய்யும் சமூக வாழ்வில் தனது உரிமையுள்ள இடத்தை எடுத்துக் கொள்கின்ற பொழுது ஆழ்ந்த பெருமைமிக்க முகம் கொண்டிருக்கின்றாள் (2:19).

தாயின் பல்வேறு முகங்களில் மாபெரும் அழகு உள்ளது. இந்த அழகானது காலத்தினால் குறைவுபடுவதில்லை அல்லது சுருக்கங் களினால் அழிக்கப்படுவதில்லை அல்லது முதிர்வயதுப் புள்ளிகளி னால் மாசடைவதில்லை. பிள்ளையின் கலவரமான இதயத்தை அமைதிப்படுத்துகின்ற பிள்ளையின் புயல்களை அமர்த்துகின்ற, தைரியமிக்க பாதுகாப்பை அன்புடன் ஊட்டுகின்ற ஆறுதலூட்டும் சாந்தம் ஒன்று அவளிடத்தில் உண்டு. தாயின் பல்வேறு முகங்கள் நீண்ட காலத்திற்கு நினைவில் வைக்கப்படுகின்றன. மரணத்தில் அவள் கண்கள் மூடும் பொழுது அது நினைவில் கொள்ள வேண்டிய இன்னொரு முகமாகஜேஅமைதியான ஓய்வு மற்றும் பூமிக்குரிய தல்லாத சமாதானம் என்பவற்றின் முகமாகின்றது, ஏனெனில் அந்த உறக்கமானது கர்த்தரின் கவனிப்பில் உள்ளது. அவளது அன்பார்ந்த செயல்கள் அவளை ஓய்வின் படுக்கையில் கொண்டு வந்து சேர்த் துள்ளன! தாயின் பல்வேறுபட்ட முகங்களை நினைவுகூர்வதை விட மாபெரும் ஆசீர்வாதம் வேறெதுவும் இருக்க முடியாது!

எல்க்கானா, பயபக்தியுள்ள ஒரு தந்தை
(1 சாமுவேல் 1:1-2:21)

1. இவர், தமது குடும்பத்தின் முன்பாக மார்க்க ரீதியாக வாழ்ந்த ஒரு தந்தையாக இருந்தார் (1:3).
2. இவர், தமது பிள்ளைகளுக்கு தேவனிடத்தில் ஒருவர் தம் வார்த்தைகளைக் காத்துக் கொள்வதன் அவசியத்தைப் போதித்த ஒரு தந்தையாய் இருந்தார் (1:21).
3. இவர், குடும்ப பக்தியை ஊக்கப்படுத்திய ஒரு தந்தையாய் இருந்தார் (1:4, 21).

4. இவர், ஒரு மனைவி மீதான உண்மையான அன்பைத் தமது பிள்ளைகளுக்குச் செயல்விளக்கப்படுத்திய ஒரு தந்தையாய் இருந்தார் (1:8).
5. இவர், தமது பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய ஊழியத்தை நாடிய ஒரு தந்தையாக இருந்தார் (1:28).

அன்னாள்: தாய்க்குலத்தின் நினைவுச் சின்னம் (1 சாமுவேல் 1:1-2:21)

1. தேவனில் கொண்டுள்ள விசுவாசத்தின் நினைவுச் சின்னம். ஐயம் மற்றும் வருத்தம் ஆகியவற்றின் பொழுது, அவள் தேவனிடம் திரும்பினாள் (1:9-18; 2:1-10).
2. சோதனைகளில் பொறுமையின் நினைவுச் சின்னம் (1:7). அன்னாள் வெகுகாலமாக மலடியாயிருந்து போராடிக் கொண்டிருந்தாள்.
3. பிள்ளைகளுக்கான ஒப்புக்கொடுத்தலின் நினைவுச் சின்னம் (1:22; 2:19). அவள் சாமுவேலின் மீது அன்புகூர்ந்து அவனைப் போஷித்தாள்.
4. தியாகத்தின் நினைவுச் சின்னம் (1:28). அவள் மதிப்புமிக்க தனது மகனைத் தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்க மனம் ஒப்பினாள்.
5. பெற்றோர்த்துவத்தின் நினைவுச் சின்னம் (1:28). அவள் தன் மகனுக்கென்றுஊஅவன் என்றென்றும் தேவனுடைய வீட்டில் வாழ்வான் என்றஊஒரே ஒரு இலக்கைக் கொண்டிருந்தாள் (1:22).

அன்னாள்: மிகச் சிறந்த தாய்க்கான தேவனுடைய கருத்து (1 சாமுவேல் 1:1-2:21)

1. அவள் தனது பிள்ளைகளுக்காக ஊக்கத்துடனும் தேவனிடத்தில் தன் இருதயத்தை ஊற்றியும் ஜெபிக்கின்றாள் (1:10-18).
2. அவள் தனது பிள்ளைகளுடன் இருந்து அவர்களைப் போஷிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுகின்றாள் (1:21, 22).
3. அவள் தனது வாழ்வில் ஆட்சி செலுத்த ஒரே ஒரு இலக்கை - தனது பிள்ளைகள் என்றென்றும் கர்த்தருடைய வீட்டில் தங்கியிருக்கக் காணுதல் என்ற இலக்கை - கொண்டிருக்கின்றாள் (1:22ஆ, 28; 2:20).
4. அவள், தன் கருத்துக்களையும் அறிவுரைகளையும் தனது கணவர் மதிக்கும் வகையில் நடக்கின்றாள் (1:23).
5. அவள் தேவனுடைய வல்லமையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கின்றாள் (1:27; 2:1-10).
6. அவள் தனது பிள்ளைகளின் மீதான அன்பையும் ஒப்புக் கொடுத்தலையும் அறிவிப்பதற்கு சிறிய, நுட்பமான வழிகளைக் கொண்டிருக்கின்றாள் (2:19).

கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்கள் (1 சாமுவேல் 2:1)

1. இருதயமானது நிறைவடைந்ததாக, மகிழ்ச்சியுடையதாக மற்றும் சந்தோஷம் நிறையப் பெற்றதாக இருக்கின்றது.

2. பெலமும், பாதுகாவலும் பெருக்கப் படுகின்றன.
3. தேவனற்றவர்கள் (தங்கள் சுய) நம்பிக்கையின் விளைவாக கடிந்து கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆசீர்வாதங்கள் ஏன் வருகின்றன? "கர்த்தருக்குள் இரட்சிப்பு" இருக்கின்ற காரணத்தினால் இவை வருகின்றன.

ஏலி: சாத்தானின் மகன்களைக் கொண்டிருந்த தேவமனிதர் (1 சாமுவேல் 2:12-4:22)

இங்கு எல்லாப் பெற்றோர்களும் அஞ்சுகின்ற இருதயத்தை உடைக்கும் சூழ்நிலை உள்ளது. ஆசரிப்புக் கூடாரச் செயல்பாடுகளில் (1:4; 2:13, 14), உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிய கண்ணோட்டத்தில் (4:3, 4; 4:13, 18அ) பிறரைப் பற்றிய பதில்செயலில் (2:16; 2:25) மற்றும் தேவனைப் பற்றிய கருத்தில் (2:17; 2:25) ஏலிக்கும் அவரது மகன்களுக்கும் இடையில் இருந்த நேரெதிர்த்தன்மைகளைக் கண்ணோக்குங்கள்.

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை நிலவுவதற்கு இரண்டு காரணிகள் பொறுப்பு வகிப்பதாகக் காணப்படுகின்றது; அனுமதிக்கும் பெற்றோர்த்துவம் (3:13; 2:25) மற்றும் பெற்றோர்களின் வழிநடத்துதலின்றி பிள்ளைகள் தாங்களாகவே சுய முடிவுகளை மேற்கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டிருத்தல் (2:12, 17, 25; 3:13). பெற்றோர்களும் பிள்ளைகளும் தேவனுக்கு பரஸ்பரம் மதிப்பைப் பகிர்ந்து கொள்ளத் தவறுகின்ற பொழுது பயங்கரமான சேதங்கள் விளைகின்றன.

1. ஒரு குடும்பத்தின் செல்வாக்கு அழிக்கப்படுகின்றது (2:22-24).
2. போராட்டங்கள் எழும்பி வலுப்படுகின்றன (2:25).
3. தேவனுக்கான ஒரு குடும்பத்தின் ஒப்புக்கொடுத்தலானது சமரசம் செய்விக்கப்படுகின்றது (2:29). ("நீங்கள்" என்பது ஏலியையும் அவரது மகன்களையும் குறிக்கின்றது.)
4. ஒரு குடும்பத்தின் வம்சா வழி, துக்கமும் கசப்பும் நிறைந்ததாக மட்டுமே இருக்கும் (2:33; 4:13-17).

இப்படிப்பட்ட ஒரு குடும்பம் அடிக்கடி, தேவனுடைய மகிமை ஒழிந்து போகக் காரணமாகின்றது (4:19-22). தற்காலக் குடும்பங்கள் ஏலி மற்றும் அவரது மகன்களின் போராட்டத்தை எதிர்கொண்டிருப் பதைக் கவனித்தல் என்பது எவ்வளவாகக் கவலைக்குரிய விஷயமாயுள்ளது!

தெளிவான உண்மை நிலைகள் (1 சாமுவேல் 2:13-17)

1. தேவபக்தியுள்ள பெற்றோர்களால் வளர்க்கப்படுகின்ற பிள்ளைகள் (கூட) தேவபக்தியற்றவர்களாகி விடக் கூடும் (2:12).
2. மதத்தில் நடத்துனர்களாயிருப்பவர்கள் (கூட) சுயத்திற்குத் தங்களை ஒப்புவித்தவர்களாகி விடக் கூடும் (2:15).
3. ஆராதனை நடைமுறைகள் (கூட) ஆசீர்வாதமாயிருப்பதற்கு மாறாக சாபமாகி விடக் கூடும் (2:17).

வெட்கக்கேடான செயல்விளைவு
(1 சாமுவேல் 2:17)

ஏலியின் மகன்கள் கர்த்தருடைய பலியை பொதுவாக (மக்கள்) வெறுக்கும்படி செய்தார்கள். "மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள்." தேவனை ஆராதித்தலையும் அவருக்குக் காணிக்கை செலுத்துதலையும் பொல்லாத வழியான தாகப் பேசச் செய்வதற்கு ஒருவர் காரணமானார் என்ற கூற்றானது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது. இது எவ்வாறு செய்யப் பட்டது?

1. *அவர்கள் சுயத்தைப் பற்றி மட்டும் அக்கறை கொண்டவர்களாக கருணையற்ற வகையில் சுய சந்தோஷத்தைத் தேடி அலைந்தார்கள்.*
2. *அவர்கள் தேவனுடைய போதனைகளை அவமதித்தார்கள்.*
3. *அவர்கள் தங்கள் தந்தையின் போதனைகளை வெறுத்து ஒதுக்கினார்கள்.*
4. *அவர்கள் தங்கள் செல்வாக்கின் செயல்விளைவுகள் என்னவாயிருந்தன என்பது பற்றி கவலைப்படாதிருந்தார்கள்.*

வெட்கக் கேடான இதே செயல்விளைவு சாத்தியமான வகையில் நமது வாழ்விலும் காணப்படலாம். கிறிஸ்துவின் நாமமும் அவரது சபையின் நாமமும் பழி தூற்றப்படுவதற்குக் காரணமான விஷயங் களை நாம் செய்கின்றோமா அல்லது அனு மதிக்கின்றோமா? தேவனுக்குக் காணிக்கை செலுத்துதலை வெறுப்புக்குரியதாக ஆக்கியதாக நம்மீது நியாயத்தீர்ப்பின் நாளில் குற்றம் சாட்டப் பட்டால், அது எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும்!

"சாமுவேல் வளர்ந்தான்"
(1 சாமுவேல் 2:21)

சாமுவேலின் வளர்ச்சி பற்றிய மூன்று குறிப்புக்களில் (2:21, 26; 3:19), நாம் தேவனுக்கென்று அர்ப்பணித்தலையும் மேம்பாட்டையும் முதலில் காண்கின்றோம், எதனால்?

1. *அவருடைய பெற்றோரின் பயிற்றுவிப்பினால்.*
2. *அவர் ஆலயத்தில் நிலையாக இருந்ததினால்.*
3. *அவர் தம் சக மனிதர் மீது கொண்டிருந்த நேர்மையான பற்றினால்.*
4. *அவருடைய தொடக்க ஆண்டுகளில் தேவனுடைய பிரமாணங்களில் போதிக்கப்பட்டிருத்தல் குறித்து அவர் கொண்டிருந்த கண்டிப்பான அக்கறையினால்.*

ஒரு தந்தையின் ஆலோசனை இகழப்பட்டது
(1 சாமுவேல் 2:22-25)

ஏலியின் எந்தப் போதனைகள் அவரது மகன்களால் இகழப் பட்டன?

1. *நீதியைப் பற்றிய அவரது போதனைகள் (2:22).*
2. *தேவனைப் பற்றிய அவரது போதனைகள் (2:12).*
3. *தேவனை ஆராதித்தல் பற்றிய அவரது போதனைகள் (2:13-17).*

இவர்கள் தங்கள் தந்தையின் ஆலோசனைகளைப் புறக்கணித்த தினால் தண்டனை முன்வைக்கப்பட்டது (2:25ஆ).

பாவத்தை எதிர்கொள்ளுதல்
(1 சாமுவேல் 2:22-25)

1. பாவம் வெளிப்படுத்தப்படும், மற்றும் எதிர்கொள்ளுதல் நடைபெறும், ஏனெனில் பாவம் என்றென்றைக்கும் மறைந்திருக்க முடியாது (2:22, 23).
2. பாவத்தைப் பற்றிய செய்தியானது விரைவாகவும் தொலைவிலும் பரவுகின்றது (2:24).
3. ஒருவர், தேவனுக்கெகிராகப் பாவம் செய்து, மனந்திரும்ப மறுக்கின்ற பொழுது, மன்னிப்பு என்பது சாத்திய மற்றதாகின்றது! நம்பிக்கை அற்றுப் போகின்றது (2:25அ).
4. எந்த எதிர்கொள்ளுதலும் இன்றி, பாவம் தொடர அனுமதிக்கப் பட்டிருந்தாலும், அது (எதிர்கொள்ளுதல்) நடக்கும் பொழுது, அது செயல்விளைவற்றதாக உள்ளது (2:25ஆ; 3:13).

ஒரு தந்தையின் தவறுதல்கள்
(1 சாமுவேல் 2:27-36)

ஒரு தந்தை என்ற வகையில் ஏலியின் தோல்வியானது, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் எவற்றைச் செய்யக் கூடாது என்று வெளிப்படுத்துகின்றது.

1. தேவனுடைய கட்டளைகளை இலேசானதாக எடுத்துக் கொள்ளாதீர்கள் (2:27-29அ).
2. கர்த்தருக்கு மேலாக பிள்ளைகளைக் கனப்படுத்தாதீர்கள்; அவர்கள் பாவஞ் செய்தால், அவர்களை நியாயப்படுத்து வதற்காக மன்னிப்பை அனுமதித்து விடாதீர்கள் (2:29ஆ).
3. ஒரு பிள்ளையின் பொல்லாத செய்கைகளுக்கு உடனாளி யாகாதீர்கள் (2:29இ).
4. உங்கள் பெற்றோர்த்துவப் பணிப்பொறுப்பை இலேசானதாக நினையாதீர்கள்; உங்கள் பிள்ளைகளை நீங்கள் பயிற்றுவிக்கும் வழிமுறையானது பலர் மீது பெரிய அளவிலான செயல் விளைவுகளைக் கொண்டிருக்கும் (2:30-36).

தேவனுக்கு மனிதர் கணக்கொப்புவிக்க வேண்டியமை
(1 சாமுவேல் 2:29)

ஏலி தமது எண்ணப்போக்குகள் மற்றும் செயல்கள் ஆகிய வற்றுக்குக் கணக்கு ஒப்புவிக்கும்படி அழைக்கப்பட்டது "ஏன்?" என்ற தீர்க்கதரிசியின் கேள்வியினால் எதிர்கொள்ளப்பட்டார். இப்படிப் பட்ட விஷயமானது எல்லா மனிதர்களுக்கும் உண்மையானதாக உள்ளது (2 கொரி. 5:10). நாம் எவற்றைக் குறித்துக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்?

1. தேவனுடைய ஆராதனைத் திட்டங்களை ("பலி", "காணிக்கை") நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கிறோமா என்பது குறித்து.
2. தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முதன்மை இடத்தை ("கனத்தை") க் கொடுக்கிறோமா என்பது குறித்து.
3. பேராசையைக் குறித்து ("கொழுக்கச் செய்தல்").

தேவனுடைய அழைப்பிற்குப் பதில் அளித்தல்
(1 சாமுவேல் 3:10)

தேவனுடைய அழைப்பிற்குப் பின்வருவதுதான் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரே பதிலாக உள்ளது.

1. *நமக்கான தேவனுடைய உரிமை நிறைந்த கோருதலை ("சொல்லும்")* ***புரிந்துணருதல்.***
2. *நேர்மையாகக் கவனிப்பதற்கு ("கேட்கிறேன்")* ***மனவிருப்பம்.***
3. *கீழ்ப்படிதலுக்கும் ஊழியம் செய்வதற்கும் ("அடியேன்")* ***தாழ்மை.***

தேவனுக்குப் பொறுமையுடன் கீழ்ப்படிதல்
(1 சாமுவேல் 3:18)

1. *இது மிகவும் தாமதமாக வந்தது. ஏலியின் மகன்கள் வளர்ந்து விட்டிருந்தார்கள் மற்றும் அவர்களின் தெரிவுகள் செய்யப் பட்டிருந்தன. கீழ்ப்படிதல் என்பது முன்னரே வந்திருந்தால், அவர்களின் வாழ்வு வேறு விதமாயிருந்திருக்கும்.*
2. *இது துக்கம் மிகுந்த வகையில் வந்தது. இதன் சூழ்நிலை மிகவும் கவலைக்குரியதாயிருந்தது; இந்த முடிவு மாற்றப்பட இயலாததாக இருந்தது. ஏலி முன்னரே தேவனுக்குக் கீழ்ப் படிந்திருந்தால், அவர் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கண்டிருப்பார்.*
3. *இது பயனற்ற வகையில் வந்தது. தேவனின்றி ஏலி தனியே இதை முயற்சித்தார். அவர் என்ன ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விட்டார்! இப்பொழுது முற்றிலும் நம்பிக்கையற்ற நிலையில், அவர் தமது பயனற்ற தன்மையை ஒப்புக்கொண்டார். அவர் இதை முன்னரே செய்திருந்தால், ஒருவேளை அவர் நம்பிக்கை இழந்து போகாதிருந்திருக்கலாம்.*

நாம் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மற்றும் மகிழ்வை யும் காண வேண்டுமென்றால், தேவனுக்குப் பொறுமையுடன் கீழ்ப்படிதல் என்பதை வாழ்வின் முற்பகுதியிலேயே எவ்விதத் தயக்கமும் இன்றி செயல் விளக்கப்படுத்த வேண்டும்!

உண்மை அழகின் இரகசியம்
(1 சாமுவேல் 25:3)

ஒப்புக் கொள்ளக் கூடிய வகையில் அபிகாயில் அழகியா யிருந்தாள். இவள் உள்ளாகவும் அழகு மிக்கவளாயிருந்தாள்.

1. *அபிகாயில் ஏன் அழகாயிருந்தாள் என்பதை (பின்வரும்) ஒரு காரணம் விளக்குகின்றது: இவளது விசுவாசம்!*
2. *அபிகாயிலின் விசுவாசத்தினால், இவளது வெளிச்சமான நிலைப்பாட்டிலும் மகிழ்பொங்கும் பிரசன்னத்திலும், எரிச்சலும் கோபமும் கொண்டுள்ளவரை அமைதிப் படுத்துவதிலும் இவளது அழகு காணப்பட்டது.*
3. *இந்த குணங்களினால், இவள் தான் தொடர்பு கொண்டிருந்த யாவருக்கும் உண்மையான ஆசீர்வாதமாயிருந்தாள் (25:32).*

உள்ளான அழகு என்பது தேவபக்தியுள்ள பெண், தன் வாழ்வில் தேவனுடைய

நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவளாயிருக்கச் செய்யும். அவள் உண்மை அழகின் இரகசியத்தைக் கண்டறிவாள்.

கோபத்தைத் தீர்த்தல்
(1 சாமுவேல் 25:24-31)

தாவீது மிகவும் கோபமாயிருந்தார். அவர் மறுசெயல் செய்யப் போகும் நிலையில் இருந்தார். அப்படிப்பட்ட கோபத்தைத் தீர்த்து வைக்க ஒரு பெண் என்ன கூற அல்லது என்ன செய்ய இயலும்? அபிகாயில் நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றாள்,

1. *கோபமுள்ள மனிதர்களைத் தாழ்மையுடன் அணுகுங்கள் (25:24).*
2. *உங்கள் தவறுகளை ஒப்புக்கொண்டு புண்படுதலுக்கான தனிப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ளுங்கள் (25:28).*
3. *தேவனை (உங்கள்) விஷயத்திற்குள் கொண்டு வாருங்கள் (25:29-31).*
4. *மன்னிப்பை அருளுடன் ஏற்றுக் கொள்ளுங்கள் (25:32, 33).*
5. *செய்தித் தொடர்பு கொள்வதற்கு வார்த்தைகளைத் தெளிவாகப் பயன்படுத்துங்கள், மற்றும் கவனத்துடன் கேளுங்கள் (25:24, 35).*

சாமுவேல்: அர்ப்பணிப்பின் விவரிப்பு

சாமுவேலைப் பற்றிய எடுத்துரைப்பானது, தேவனுக்கென்று அர்ப்பணித்தல் மற்றும் ஒப்புக்கொடுத்தலின் முறிபடாத வரலாறாக உள்ளது. அவர் (தன் தாயின்) கர்ப்பத்தில் தோன்றிய நாள் முதல் அவருடைய பூமிக்குரிய கல்லறையில் நிரப்பப்பட்ட நாள் வரைக்கும் அவர் அர்ப்பணிப்பின் மனிதராக விளங்கினார்.

1. *அவர் தனது இளம் பருவத்தில் ஆவலுடன் இருந்தார் (2:11, 18-21; 3:1-21).*
2. *அவர் தனது வயது காலத்தில் பின்மாற்றம் இல்லாதவராக இருந்தார் (7:1-17).*
3. *அவர் தனது பொன் ஆண்டுகளில் நிறைவுற்றவராக இருந்தார் (8:1 முதல்; 9:15-10:25; 12:1-25).*
4. *அவர் தனது மரணத்தில் வெகுமதி பெற்றார் (25:1; 28:12-19).*

அவருடைய வாழ்க்கை வரலாறானது, எல்லாக் காலங்களிலும் இருக்கின்ற தேவனைப் பின்பற்றுபவர்கள் யாவரும் அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கும்படி அறைகூவல் விடுக்கின்றது.

அறிமுகம்

(1 சாமுவேல் 16)

இத்தாலியில் உள்ள ஃப்ளாரன்ஸ் என்னும் இடத்திலிருந்த கர்த்தருடைய சபையில், 1974ம் ஆண்டு மே மாதம் 12ம் தேதியன்று ஞாயிறு காலையில் நானும் என் குடும்பமும் ஆராதித்துக் கொண்டிருந்தோம். ஆராதனை முடிந்த உடனே, ஃப்ளாரன்ஸில் இருந்த ஒரு ஊழியக்காரரான ஏர்ல் எட்வர்ட்ஸ் அவர்கள், எங்களைத் தமது காருக்கு விரைவாகக் கூட்டிச் சென்றார். அவர் காரை, அதிவேகமாக ஓட்டிக் கொண்டிருக்கும் போதே, "இந்த அருங்காட்சியகம் இரண்டு மணிக்கெல்லாம் பூட்டப்பட்டு விடும், திங்கட்கிழமைகளில் இதைத் திறக்க மாட்டார்கள் - மேலும் செவ்வாய்க் கிழமையன்று நீங்கள் இங்கிருக்க மாட்டீர்கள்!" என்று விளக்கிக் கொண்டே சென்றார். தேவனுடைய கிருபையினால் எந்த அசம்பாவிதமும் இன்றி நாங்கள் கேலரியா டெல் அகாடெமியா என்ற அந்த அருகாட்சியகத்தைச் சென்றடைந்தோம்.

அந்த அருகாட்சியகத்தினுள் நாங்கள், மைக்கேல் ஆஞ்செலோவினால் அறைகுறையாக செய்து முடிக்கப்பட்டிருந்த சிலைகள் நிரம்பியிருந்த ஒரு முகப்பறை வழியே நடந்து சென்றோம் - திடமான கல்லில் இருந்த உருவங்களைச் செதுக்கிய செயல்முறையின் அதிசயம் பற்றிய உணர்வு என்னுள் நிரம்பிற்று. பின்பு நாங்கள் ஒரு பெரிய அறைக்குள் சென்றோம். எங்களுக்கு முன்னால் பதினான்கு அடி உயரமான பெரிய சிலை ஒன்று நின்றிருந்தது, இது மைக்கேல் ஆஞ்சசெலோவின் தலைசிறந்த படைப்பு என்று பலரால் கருதப்படுகிறது: இது தாவீதின் சிலையாயிருந்தது.

இந்தச் சிலை விரோதியை எதிர்த்து நின்ற இளைஞரான தாவீதாக உள்ளது. அவரது புருவம் குவிந்து வளைந்திருந்தது, அவரது கூர்நோக்குள்ள கண்கள் எதிரியின் மீது நிலைத்திருந்தன. அவரது கவண் அவர் தோளின் குறுக்கே தொங்கிற்று. அவரது உடல் விரைப்பாயிருந்தது ஆனால் அது நரம்புகளின் சிரமத்தால் அவ்வாறாகியிருக்கவில்லை, அது (அவரது உடல்) செயல்படத் தயாராயிருந்தது. வெற்றி விளையும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை. அந்தச் சிலையின் மார்பு மூச்சு விடுதலினால் விரிவதையும். அதன் உதடுகள், "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே வருகிறேன் ... யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1 சாமு. 17:45-47) என்ற விசுவாசத்தின் வார்த்தைகளைக் கூறுவதையும் ஏறக்குறைய எதிர்பார்க்குமளவுக்கு சிற்பியின் திறமை அவ்வளவாய் அந்தச்

சிலையில் வெளிப்பட்டது. தாவீதைப் பார்க்காமல் ஃப்ளாரன்ஸிற்கு மேற்கொள்கிற எந்தப் பயணமும் நிறைவடைவதில்லை என்று ஏர்ல் எட்வர்ட்ஸ் அறிந்த காரணத்தால் அவர் எங்களை அவ்வளவு அவசரமாய்க் கொண்டு சேர்த்தார்.

அந்தச் சிலை எவ்வளவோ பெரியதாக இருந்தது, ஆயினும் கீழ்வரும் பாடக்கருத்தின் முன்னால் அது மங்கித் தேய்வதாகவே உள்ளது: தாவீது - இவரது வாழ்வு பற்றிக் கூறுவதற்குப் பழைய ஏற்பாட்டில் அறுபத்தாறு அதிகாரங்கள் எடுத்துக் கொள்ளப்படுமளவுக்கும், புதிய ஏற்பாட்டில் ஐம்பத்தொன்பது முறை குறிப்பிடப்படுமளவுக்கும் முக்கியமானவரா யிருந்த இந்த மனிதர் - "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதர்" என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிற ஒரே மனிதராக உள்ளார்.

1 சாமுவேல் 13:14ல், சவுல் ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணிக்கப் பட்ட பின்பு, சாமுவேல், "இப்போதோ உம்முடைய இராஜ்யபாரம் நிலை நிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனா யிருக்கக் கட்டளையிட்டார்" என்று கூறினார். அப். 13ல், பவுல் பிசீதியா வின் அந்தியோகியாவில் இருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கித்த போது, அவர் சவுலைப் பற்றிக் கூறிவிட்டு, பின்பு "பின்பு அவர் அவனைத் தள்ளி, 'தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் அவன் செய்வான்' என்று அவனைக் குறித்து சாட்சியுங் கொடுத்தார்" (வ. 22) என்று கூறினார்.

தாவீதின் வாழ்வு பற்றிக் கூறும் (வேதாகமத்தின்) அத்தியாயங்கள் அவரது இருதயத்தை மையப்படுத்தும் அளவை விட அதிகமாய் அவரது வரலாற்றை மையப்படுத்துவதில்லை.

"தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதனாக" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? இந்தச் சொற்றொடர் பரிபூரணத்தைக் குறிக்கிறதா? இது மிகவும் அரிது. தாவீது அருங்காட்சியகத்தில் ஒரு சலவைக் கல் பரிசுத்தவானாக இருக்கவில்லை. சூடான இரத்தம் அவரது நரம்புகளின் வழியே பாய்ந்தோடிற்று, அவரது உடலில் பலத்த உணர்வு இருந்தது. பறக்கக் கூடியது எதைக் காட்டிலும் தாவீது மிக உயரமாய்ப் பறந்தார்; அவர் மிக பலமாகவும் விழுந்தார்.

இந்தச் சொற்றொடர், ஒருவரின் இருதயம் தேவனுடைய இருதயத் துடன் இசைவு பெற்றிருப்பதையே அர்த்தப்படுத்துகின்றது. பின்வரும் சொல்வழக்கை நாம் இன்றைய நாட்களில் பயன்படுத்துகிறோம்: "என் இருதயத்திற்கு ஏற்ற மனிதர் அதோ அங்கு செல்கின்றார்." இச்சொல் வழக்கின் மூலம் நாம், "அந்த நபர் நான் உணர்வது போலவே உணரு கின்றார்" என்று அர்த்தப்படுத்துகின்றோம். நாம் நமக்குள்ளாகவே பலமாய் உணரும் விஷயம் பற்றி சீரான கருத்தை நம் மனதில் கொண்டுள்ளோம்.

தாவீதின் வாழ்வை நாம் ஆராய்ந்து பார்க்கையில், நாம் அவரது நல்ல மற்றும் மோசமான நாட்கள் பற்றிப் படிப்போம்; நாம் அவரது உயர்வுகளையும் தாழ்வுகளையும் காண்போம். தாவீது தமது மிகச் சிறந்த

நிலையில் இருந்த போதிலும், அல்லது அவர் தமது மிக மோசமான நிலையில் இருந்த போதிலும், அவரது பற்றுறுதியானது எப்பொழுதும் கர்த்தரிடத் திலேயே இருந்தது. வாழ்வின் புயல்களினால் தாவீதின் ஆவிக்குரிய திசை காட்டும் கருவி, அடிக்கடி தடுமாற்றம் அடைந்தாலும், அமளி ஓய்ந்த பொழுது, தாவீதின் திசை காட்டும் கருவியானது அவரது ஆவிக்குரிய (ஆதார) துருவத்தை - அவரது தேவனை - சுட்டிக் காண்பித்தது.

நாம் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற" மனிதர்களாக அல்லது மனுஷிகளாக எவ்வாறு ஆகக் கூடும்? தாவீது முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குப் பின் ஒருநாள் காலை வேளையில் திடீரென்று "தேவனு டைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக" விழித்து எழுந்தாரா? இல்லை, அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற சிறுவனாக இருந்த காரணத்தினால் அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக ஆனார். தாவீது அரசராவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, தேவனிடமாய் அவர் தம் இருதயத்தைத் திருப்புவதைத் தொடங்கியிருந்தார்.

சாமுவேல், "கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்" (1 சாமு. 13:14) என்று கூறிய பொழுது, சவுல் அப்பொழுதுதான் அரசாளத் தொடங்கியிருந்தார். அப்பொழுது தாவீது பிறந்திருக்கக் கூட மாட்டார், அல்லது பிறந்திருந் தாலும், அவர் அப்பொழுது சிறு பிள்ளையாகவே இருந்திருப்பார்.[1] *பல ஆண்டுகளுக்குப் பின், சவுல் அரசராயிராதபடி இரண்டாம் முறையாகப் புறக்கணிக்கப்பட்ட பிறகு, சாமுவேல், "கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் இராஜ்யத்தைக் கிழித்துப் போட்டு, உம்மைப் பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்" என்றார் (1 சாமு. 15:28). "உம்முடைய தோழன்" என்பது தாவீதைக் குறித்தது (1 சாமு. 28:17), ஆனால் தாவீது இன்னமும் ஒரு (வளர்ந்த) மனிதராயிருக்கவில்லை. அவர் தமது தந்தையின் ஆடுகளை மேய்க்கும் ஒரு பையனாகவே இருந்தார். இருப்பினும் அவரை, தேவனுடைய வசனத்தில் அதிகமாய்க் குறிப்பிடத் தக்கவராக்கிய அந்த பண்புகளை அவர் ஏற்கனவே மேம்படுத்திக் கொள்ளத் தொடங்கியிருந்தார்.*

தாவீதைப் பற்றிய பாடத் தொடரை நாம் தொடங்கும் இவ்வேளை யில், இவர் எவ்வாறு "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதராக" எழும்பத் தொடங்கினார் என்பதை நாம் காண்போம்.

நடக்கக் கற்றுக் கொண்ட மகன்

தாவீது யூதா கோத்திரத்தில் இருந்து வந்தவராயிருந்தார். முற்பிதாவுக் கான யாக்கோபின் ஆசீர்வாதத்தில் (ஆதி. 49:8-12) யூதா ஒரு இராஜரீகக் கோத்திரம் என்று குறிப்பிடப்பட்டிருந்தார். இருப்பினும், வரலாற்றின் இந்தக் காலகட்டம் (தாவீதின் காலம்) வரையிலும் யூதா (கோத்திரம்) தன்னைத் தனிச் சிறந்ததாகக் காண்பிப்பதற்கு சிறிதளவே பணி செய்திருந்தது.

தாவீதின் பின்னணி பற்றி அதிகமான செய்தி ரூத் என்ற அழகிய சிறு புத்தகத்தில் காணப்படுகிறது. ரூத், தனது கணவனை இழந்த மோவாபியப் பெண்ணாயிருந்தாள்; அவள் தன் மாமியான நகோமியோடு யூதாவுக்குத் திரும்பினாள். அந்தப் புத்தகம் ரூத்துக்கும் போவாசுக்கும் ஏற்பட்ட காதலைப் பற்றிக் கூறுகிறது. ரூத்தும், போவாசும் திருமணம் முடித்துக் கொண்ட பின், அவர்கள் ஒரு மகனைப் பெற்றெடுத்தார்கள். பெண்கள் சூழ்ந்திருக்கையில் நகோமி அந்தக் குழந்தையைத் தனது மடியில் வைத்துக் கொண்டாள். “அயல் வீட்டுக்காரிகள், ‘நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது’ என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்” (ரூத் 4:17). அடுத்த ஐந்து வசனங்களில் (ரூத் 4:18-22) தாவீதின் எஞ்சிய வம்ச வரலாறு தரப் பட்டுள்ளது, இது யூதாவின் மகனான பேரேஸ் வரைக்கும் பின் செல்லு கின்றது (தாமார் பேரேசின் தாயாயிருந்தாள் ஆதி. 38).

தற்போதுள்ள எருசலேம் நகரில் இருந்து தென் மேற்கில் ஐந்து அல்லது ஆறு மைல் தொலைவில் இருந்த பெத்லெகேம் (ரூத் 1:2, 19, 22; 2:4; 4:11) என்ற மறைவான ஊரில் ரூத்தும் போவாசும் வாழ்ந்து வந்தார்கள். இங்கு அவர்களின் மகன் ஓபேதும், அவர்களின் பேரன் ஈசாயும் வாழ்ந்திருந்தார் கள் - மற்றும் அவர்களின் கொள்ளுப் பேரனான தாவீதும் இங்குதான் பிறந்தார்.[2]

பத்து பிள்ளைகளில் - எட்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் - தாவீது எல்லாருக்கும் இளையவராக இருந்தார்.[3] எல்லாருக்கும் இளையவன் பெரும்பாலும் மிகவும் செல்லம் பெறுபவனாயிருப்பான், ஆனால் தாவீதின் விஷயத்தில் இவ்வாறு இருக்கவில்லை. அவர்கள் அவருக்கு, “அன்பார்ந் தவர்” என்று அர்த்தம் தருகிற “தாவீது”[4] என்று பெயரிட்டார்கள், ஆனால் அது முதலாவது ஒரு தவறான பெயராகக் காணப்படுகின்றது. அவர் ஒரு பிள்ளையாயிருக்கையில் குடும்பத்தில் இருந்த பிறரால் மதிக்கப்படவில்லை (1 சாமு. 16:11). அவர் சிலரால் துடிப்புடன் வெறுக்கப்பட்டுமிருந்தார் (1 சாமு. 17:28).

அவரது குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தது.[5] போவாஸ் பல வேலைக்காரர்களுடன் செல்வச் செழிப்பில் இருந்தார், ஆனால் ஈசாயின் காலத்தில், குடும்பம் கஷ்டமான சூழ்நிலையில் இருந்தது என்பது உறுதி. “இனக்குழுவின் கோலில் தாழ்ந்த நிலையில் இருந்த மனிதர்” என்ற வகை யில் தாவீது, வேலைக்காரர்களால் செய்யப்படக் கூடியதான மந்தமான, கஷ்டமான, இழிவான வேலையைச் செய்யும்படி நியமிக்கப்பட்டார்.[6]

தாவீது, முக்கியமற்ற ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த மதிப்பற்ற பிள்ளையாகவும், தமது சகோதரர்களால் கடிந்து கொள்ளப் பட்டவரும், மற்ற யாவரும் விரும்பாத வேலைகளில் பிணைக்கப்பட்ட வராகவும் இருந்தார். மனக் கசப்புடன் இருத்தல் என்பது அவருக்கு எவ்வளவு சுலபமாக இருந்திருக்கும்! தாவீது ஒரு கலகக்காரராக, தமது கீழ்ப்படியாமைக்காகத் தேவனையும் தமது குடும்பத்தையும் குற்றம் சாட்டுபவராக மாறியிருப்பது என்பது அவருக்கு எவ்வளவு சுலபமானதாக இருந்திருக்கும்! ஆயினும் தாவீதின் பதில்செயல் இவ்விதமாக இருந்த

தில்லை. மாறாக, ஒரு சிறுவனாயிருக்கையிலேயே தாவீது தேவனுடன் தினசரி நடப்பதைத் தொடங்கினார்.

இரண்டு நாட்களுக்கு முன் நான், ரோமானியாவில் இருக்கும் எனது பேத்தியான இராகேல் தற்பொழுது தான் நடக்கத் தொடங்கினாள் என்று அறிந்தேன். (இராகேல் ஏற்கனவே எல்லாவற்றிலும் துறுதுறுப்பாயிருப் பதாகவும் எனது மகளை அயர்ச்சியடையச் செய்வதாகவும் ஏற்கனவே எனது மகள் தெரிவித்திருந்தாள்!) நடக்கக் கற்றுக் கொள்ளுதல் என்பது எந்த ஒரு குழந்தையின் வாழ்விலும் உணர்வெழுச்சி ஊட்டக் கூடிய ஒரு மைல் கல்லாக உள்ளது. இருப்பினும் தேவனுடைய வழிகளில் நடக்கக் கற்றுக் கொள்ளுதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. அப்போஸ்தல ரான யோவான், "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்று எழுதினார் (3 யோவா. 4).

தாவீது தமது சிறு வயதிலேயே தமது வாழ்வை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கும்படி அவர் மீது ஆதிக்கம் செலுத்திய எல்லாக் காரணிகளையும் நாம் அறிவதில்லை. நியாயப்பிரமாணத்தில் இருந்து அறிவுறுத்துதல்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது யூதப் பையன்களுக்கு வழக்கமான செயலாயிருந்தது. அத்துடன் கூடுதலாக, தாவீதின் குடும்பம் ஒன்றுகூடி வருகையில், இஸ்ரவேலை தேவன் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்குள் கொண்டு வந்து சேர்த்தது எப்படி என்பது பற்றிய அற்புதமான வரலாற்றை அவர் கேட்டிருக்கலாம். அவர் (தாவீது) தமது சொந்தக் குடும்பத்தின் முன்னோர்களான ரூத், போவாஸ், ஓபேது மற்றும் இப்பொழுது ஈசாயி மற்றும் அவரது பிள்ளைகளை ஆகியோரை தேவன் எவ்வாறு ஆசீர்வதித்திருந்தார் என்பது பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். இவற்றைத் தாவீது கவனித்துக் கேட்டபோது, தேவனுடைய வசனமானது ஏற்றுக் கொள்ளாத ஒரு நிலத்தில் (மத். 13:3-9, 18-23ஐக் காணவும்.) விழவில்லை. மாறாக, அது கர்த்தருக்குள் பலமான, நிலைத்து நிற்கிற, அசைக்கப்பட முடியாத விசுவாசமாக வளர்ந்தது.[7]

இவ்விடத்தில் எல்லாப் பெற்றோர்களும் பாடங்களைக் கண்டறிய முடியும். நாம் நமது பிள்ளைகளுக்கு ஆழமான ஆவிக்குரிய வேர்களைத் தரக் கடவோம். தேவனுடைய பரிசுத்த புத்தகத்தின் மீது அன்பு மற்றும் அதைப் பற்றிய அறிவு ஆகியவற்றைத் தருவதற்கு எந்த ஒரு வயதும், காலத்திற்கு மிகவும் முந்தியதாயிருப்பதில்லை (நீதி. 22:6; எபே. 6:4; முதலியன).

தனிநபர்கள் என்ற வகையில் நம் ஒவ்வொருவருக்கும் மற்ற (பல) பாடங்களும் இங்கு காணப்படுகின்றன. நாம் ஒவ்வொருவரும் நமது தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தவறுதலுக்கு, பிறரையோ அல்லது சூழ்நிலை களையோ நாம் குற்றம் சாட்ட இயலாது. இளைஞரோ முதியவரோ, நம்மில் ஒவ்வொருவரும் கூடியவரை விரைவில் யெகோவாவுக்கு தனிப்பட்ட ஒப்படைத்தலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. எஜமானருடன் நடக்கக் கற்றுக் கொள்வதற்கு காலம் தேவைப்படுகிறது.

வேலை செய்யக் கற்றுக் கொண்ட ஒரு மேய்ப்பன்

தாவீது ஆடுகளை கவனித்துக் கொண்டார் என்பது அவரது தொடக்க கால வாழ்வைப் பற்றி நாம் அறிகிற ஒரு உண்மையாக உள்ளது. ஈசாயி வேறு மகன் யாரையாவது கொண்டுள்ளாரா என்று சாமுவேல் கேட்ட பொழுது ஈசாயி, "எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" (1 சாமு. 16:11) என்று பதில் அளித்தார். "தாவீது ... திரும்பிப் போய் பெத்லகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்" (1 சாமு. 17:15) என்று நாம் வாசிக்கின்றோம். தாவீது சேனையில் இருந்த தம் மூன்று மூத்த சகோதரர் களுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற பொழுது, அவர்களில் ஒருவர் "வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்?" (1 சாமு. 17:28; சங். 78:70-72ஐக் காணவும்) என்று பழி கூறும் வகையில் கேட்டார்.

ஆடுகளை மேய்க்கும் பையன் என்ற வகையில் தாவீதின் வரலாறு களைப் பற்றி வேதாகமத்தில் நாம் ஒன்றையும் காண்பதில்லை. இருப் பினும், நாம் தாவீதின் சங்கீதங்களில் இருந்தும் வேதாகமத்தின் பிற குறிப்புகளில் இருந்தும், அந்த தொழில் பற்றிய பிற ஆதார மூலங்களில் இருந்தும் அவரது அந்த வாழ்வைப் பற்றிய சித்தரிப்பொன்றை மீண்டும் காண்கின்றோம்.

ஆடுகளை மேய்த்தல் என்பது மதிக்கக் கூடிய தொழிலாயிருந்தது, ஆனால் அது தாழ்வானதாயிருந்தது.

ஆடுகளை மேய்த்தல் என்பது ஆடுகளைத் தவிர வேறு எந்தத் துணையுமில்லாத தனிப்படுத்தப்பட்ட வாழ்வாக, தனிமையான வாழ்வாக இருந்தது.[8]

ஆடுகளை மேய்த்தல் என்பது பொறுப்பு வாய்ந்த வாழ்க்கையாக இருந்தது. மேய்ப்பன் தனது ஆடுகளை அறிந்திருக்கவும் அவற்றைப் பராமரிப்பது எவ்வாறு என்பதை அறிந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அவன் பலஸ்தீனத்தின் பாதைகளை, புல்வெளிகள் எங்கிருந்தன என்பதை, அமர்ந்த தண்ணீர் எங்கிருந்தது என்பதை அறிந்திருக்க வேண்டியிருந்தது. அவன் காணாமற் போன ஆடுகளைத் தேட வேண்டியிருந்தது. அவன் வியாதியும் காயமும்பட்ட ஆடுகளைப் பேண வேண்டியிருந்தது. அவன் பெண்ணாடுகள் தங்கள் குட்டிகளை ஈனும் பொழுது அவற்றுக்கு உதவவும், ஆட்டுக்குட்டிகளை பராமரிக்கவும் வேண்டியிருந்தது (சங். 23; யோவா. 10:1-18; லூக். 15:4-6; சங். 78:71).

ஆடுகளை மேய்த்தல் என்பது கடினமான வாழ்வாயிருந்தது. தாவீது தமது ஆடுகளைப் பராமரித்துக் கொண்டிருந்ததைப் பற்றி நீங்கள் நினைக்கையில், அழகிய நீல வானத்தின் கீழ் அற்புதமான பசும் புல் வெளியை நீங்கள் காட்சியில் கண்டால், உங்கள் காட்சியை எரிக்கும் சூரியனுக்குக் கீழ் பாலைவனத்தில் புழுதியைக் கிளப்புகிற கீழ்க்காற்று பலமாய் வீசிக் கொண்டிருக்கும் யூதேயாவின் கரடுமுரடு வாய்ந்த

மலைப்பகுதியை நோக்கி மாற்றிக் கொள்ளுங்கள். பலஸ்தீனத்தில் ஆடுகளை மேய்த்தல் என்பது சுட்டெரிக்கின்ற, புழுதி நிறைந்த, நாற்றமிக்க, பொதுவாக மதிக்கப்படாத வேலையாயிருந்தது.

ஆடுகளை மேய்த்தல் என்பது சில வேளைகளில் அபாயமிக்க வேலையாகவும் இருந்தது. மோட்டார் வண்டியில் எல்லா இடங்களுக்கும் சவாரி செய்கிற எனது நண்பர் ஒருவர், மோட்டார் வண்டி ஓட்டுதல் பற்றி, "மணிக்கணக்கில் அலுப்பூட்டும் - அவ்வப்போது முழுமையான பயங்கரம் வெடிக்கிற கணங்களைக் கொண்ட - வேலை" என்று விவரித்தார்.[9] இதே போல ஆடுகளை மேய்த்தல் பற்றி தாவீதும் கூறியிருக்கக்கூடும். அவர் ஆடுகளை "மரண இருளின் பள்ளதாக்கிலே" (சங். 23:4) இருந்த அபாயம் மிகுந்த கணவாய்களின் வழியே நடத்தியிருக்கக் கூடும். அவர், ஆடுகளைக் களவாட முயற்சி செய்த அருகில் இருந்த பெலிஸ்தர்கள் போன்ற திருடர்களிடமிருந்து ஆடுகளைப் பாதுகாக்க வேண்டியிருந்திருக்கும் (யோவா. 10:1). அவர், இளம் ஆடுகளையும் மந்தையில் இருந்த பலவீனமானவற்றையும் இரையாகக் கவர்ந்து செல்ல முயற்சி செய்த காட்டு மிருகங்கள் மற்றும் பெரும் பசிகொண்ட பறவைகள் ஆகியவற்றுடன் சண்டையிட வேண்டியிருந்திருக்கும். இந்த விலங்குண்ணிகளைப் பற்றித் தாவீது, அரசராயிருந்த சவுலிடம் பின்வருமாறு கூறினார்:

> உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபோது, ஒரு விசை ஒரு சிங்கமும் ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்து போய், அதை அடித்து, அதை அதன் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்று போட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன் ... (1 சாமு. 17:34-36).

இளம் வயதுப் பையனாக, ஒரு சிங்கம் அல்லது கரடியின் முன் நேருக்கு நேராக நிற்பதைக் கற்பனை செய்து பாருங்கள்! நான் என்ன செய்திருப் பேன் என்று எனக்குத் தெரியாது. நான் ஓடும் பொழுது ஓரிடத்தில் அதிக நேரம் செலவிடுகின்றேன், எனக்கு நல்ல முறையில் (மரம்) ஏறத் தெரியாது. ஆயினும் இளம் வயதுப் பையனாக இருக்கையிலேயே தாவீது, இந்தக் கொடூரமான மிருகங்களை எதிர்த்து நின்று அவற்றைக் கொன்று போட்டார்! அவர் வைத்திருந்த ஆயுதங்கள் எவை? அவர் தம்மிடம் ஒரு கோல் (ஒரு ஈட்டியாகப் பயன்படுத்தக் கூடிய கனத்த தடி), அவரது கவண் (சங். 23:4; 1 சாமு. 17:40) - மற்றும் தேவன் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம் ஆகியவைதாம் அவரிடம் இருந்தன. "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்பிவித்த கர்த்தர்" என்று அவர் கூறினார் (1 சாமு. 17:37).

தேவன் தமது மக்களை வழிநடத்திச் செல்வதற்கு யாரையாவது கண்ணோக்கும் பொழுது, ஊழியம் செய்விக்கப்படுகின்ற, சலுகை காட்டப்படும் இளந்தளிர் போன்றவர்களை கண்ணோக்குவதில்லை.

ஊழியம் செய்வதை அறிந்துள்ள, அது எவ்விதமான பொறுப்பு என்பதை அறிந்துள்ள, துன்பங்களைச் சகிக்கக் கூடிய, என்ன விலை செலுத்த வேண்டியிருந்தாலும் பணியைச் செய்யக் கூடிய ஒருவரையே தேவன் நாடுகின்றார். இவைகளே, பெத்லகேமிற்குப் புறம்பே தனித்த புல்வெளி களில் இருந்த தாவீது கற்றுக் கொண்ட பாடங்களாக இருந்தன. தாவீது, முதலில் ஆடுகளை மேய்ப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொண்ட பிறகு தான் இஸ்ரவேல் மக்களை மேய்ப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொண்டார்.

> [தேவன்] தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும், தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக் கொண்டு வந்தார். இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான் (சங். 78:70-72).

பொறுப்பு பற்றிய கருத்துணர்வு என்பது நம் நாட்களின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. பணியிடங்களில் நாம் பொறுப்பின் மையைக் கொண்டுள்ளோம். அயலகங்களில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம். அரசியலில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள் ளோம். திருமணங்களில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம். குடும்பங்களில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம். சபையில் கூட நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம்.

நாம் ஒவ்வொருவரும் (இதை நமக்கென்று) தனிப்பட்ட வகையில் நடைமுறைக்குக் கொண்டு வருவோமாக. தனிநபர்கள் என்ற வகையில் நாம் பொறுப்பற்றவர்களாய் இருந்தால், நமது பொறுப்பற்ற தன்மையிலிருந்து நாம் மனந்திரும்பி, நமது வழிகளை மாற்றிக் கொள்வோம்! ஊழியம் செய்வது எப்படி என்பதை அறிந்து, பொறுப்பை ஏற்கக் கூடிய மக்களை மட்டுமே தேவன் பயன்படுத்த முடியும்!

நாம் பெற்றோர்களாயிருந்தால், பொறுப்புள்ள ஆண்களாகவும் பெண்களாகவும் இருப்பது எப்படி என்று நமது பிள்ளைகளுக்குப் போதிப்பதைக் காட்டிலும் சில விஷயங்களே அதிக முக்கியத்துவம் உள்ளவைகளாயிருக்கின்றன. பணி செய்வது எப்படி என்று நாம் நமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்போமாக (இ.வ. 2 தெச. 3:10). அவர்களுக்கு நாம் பொறுப்புகளைக் கொடுப்போமாக! நியமிக்கப்பட்ட பணிப்பொறுப்புகளுக்கு நாம் அவர்களைப் பொறுப்பாளிகளாக்கு வோமாக! கர்த்தரால் அவர்கள் பயன்படுத்தப்படும்படி நாம் அவர்களைத் தயார் செய்வோமாக!

காத்திருக்கக் கற்றறிந்த மகாராஜா

இறுதியாக நாம் 1 சாமுவேல் 16ம் அதிகாரத்தைக் கண்ணோக்கத் தயாராகிறோம். இது வரையிலும், 1 சாமுவேல் புத்தகத்தில் தாவீதைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. சவுல் என்ற பெயர் கொண்ட பகட்டுமிக்க ஒரு அரசர் மீதே கவனம் இருந்து வந்துள்ளது. இருப்பினும், சவுலின் ஆட்சியானது வெறுப்புக்கு உரியதாகிப் போயிருந்தது. சவுல் தேவனைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக தமது சுய ஞானத்தையும் பலத்தையும் சார்ந்திருந்தார். அவரது ஆட்சியின் தொடக்கத்தில், அவர் தமது படைகளில் தோல்விக்குப் பயம் அடைந்தவராக கர்த்தர் கட்டளைப்படி சாமுவேலுக் காகக் காத்திருப்பதற்குப் பதிலாக தாமே தகன பலி ஒன்றைச் செலுத்தினார் (1 சாமு. 13:13). பிற்பாடு, தேவன் அறிவுறுத்தியிருந்தபடி அமலேக்கியரை முற்றிலுமாக அழிப்பதற்குப் பதில், அவர்களின் அரசனை உயிரோடு விட்டு வைத்து, அவர்களின் மிருகங்களில் மிகச் சிறந்தவற்றையும் விட்டு வைத்திருந்தார் (1 சாமு. 15:2, 3, 9). பின்பு சாமுவேலிடம் தேவன், "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான்" என்றார் (1 சாமு. 15:11). சவுலை ராஜாவாக அபிஷேகம் செய்தவராயிருந்த சாமுவேல் மனம் உடைந்து போனார், ஆனால் அவர் கர்த்தரின் செய்தியை சவுலுக்கு அறிவித்தார்: "கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு, உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்" (1 சாமு. 15:28). ஒன்று சாமுவேல் 16ம் அதிகாரம் அடுத்த ராஜா அபிஷேகம் செய்விக்கப்படுதலைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் கூறுகின்றது.

இராமாவில் கவலைமிக்க கண்களுடன் இருந்த சாமுவேலிடம் கர்த்தர் வந்தார் (1 சாமு. 15:34; 7:17). "இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்த மட்டும் துக்கித்துக் கொண்டிருப்பாய்; நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டுவா; பெத்லெகேமியனான ஈசாயிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்து கொண்டேன் என்றார்" (16:1). படைக்குச் சென்று ஒரு போர்வீரனைக் காணும்படி தேவன் சாமுவேலிடத்தில் கூறவில்லை. தீர்க்கதரிசிகளின் பள்ளி ஒன்றிற்குச் சென்று ஒரு மேதையைத் தெரிந்துக் கொள்ளச் சொல்லவில்லை. பெரிய நகர் ஒன்றிற்குச் சென்று மக்கள் தலைவர் ஒருவரைக் காணும்படி அவர் கூறவில்லை. மாறாக, அவர் சிதைவுற்ற பாதையில் இருந்த சின்னஞ்சிறு கிராமம் ஒன்றுக்கு - மிகவும் ஏழ்மையானவர்கள் வாழ்கின்ற அந்த கிராமத்திற்கு - செல்லுமாறு கூறினார்.[10] தேவனுடைய வழிகள் நமது வழிகளாயிருப்ப தில்லை (ஏசா. 55:8, 9).

இருப்பினும், சாமுவேல் சவுலுக்கு ஏதோ ஒரு வகையில் பயந்தார்.[11] கர்த்தரிடத்தில் அவர், "நான் எப்படிப் போவேன்? சவுல் இதைக் கேள்விப் பட்டால், என்னைக் கொன்று போடுவானே" (16:2) என்று கேட்டார். சவுல் (தாம்) ராஜாவாயிராதபடி மாற்றி வேறு நபர் அவ்விடத்தில் வைக்கப்படு

வதாகக் கேள்விப்பட்டதிலிருந்து, அரியணைக்குத் தம்மிடம் அறைகூவல் விடக் கூடியவர் யார் என்பதைக் கண்ணோக்கிக் கொண்டிருந்தார். சாமுவேலிடம் தேவன், "நீ ஒரு காளையைக் கையோடே கொண்டு போய், 'கர்த்தருக்குப் பலியிட வந்தேன்' என்று சொல்லு" (16:2ஆ) என்று கூறினார். தேவன் சாமுவேலைப் பொய் சொல்லச் சொன்னாரா? இல்லை, சாமுவேல் காளையைக் கொண்டு போய் பலியிட்டார் (16:4, 5). தனிப்பட்ட சில நிகழ்ச்சிகளில் நமது முதன்மை நோக்கத்தை மறைத்து, துணை நோக்கத்தை வெளிப்படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் உள்நாட்டு யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக மற்றும் சாமுவேலையும் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவரையும் காப்பாற்றுவதற்காக இரகசியம் அவசியமாயிருந்தது.

தேவன் தமது அறிவுறுத்துதல்களைத் தொடர்ந்தார்: "ஈசாயைப் பலிவிருந்துக்கு அழைப்பாயாக; அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்; நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம் பண்ணுவாயாக என்றார்" (16:3).

சாமுவேல் ஒரு கொம்பை தைலத்தினால் நிரப்பிக் கொண்டு, ஒரு காளையை நடத்திக் கொண்டு தெற்கு முகமாய் பெத்லெகேம் நோக்கிச் சென்றார். அவர் அந்த கிராமத்தைச் சென்றடைந்தபோது, "அவ்வூரின் மூப்பர்கள் தத்தளிப்போடே அவனுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்" (16:4அ). சாமுவேல் இன்னமும் ஒரு நியாயாதிபதியாகச் செயல்பட்டு வந்தார் (1 சாமு. 7:15). பெத்லெகேம் அவரது வட்டாரத்திற்குள் இருந்த தில்லை (1 சாமு. 7:16), எனவே புகழ்மிக்க அந்த நியாயாதிபதி இந்த அமைதியான குக்கிராமத்தினுள் திடீரென்று வருகை தந்த பொழுது, அந்த நகர அலுவலர்களின்/கிராம மூப்பர்களின் மனங்களில் முதலில், பெத்லெகேமியர் யாரேனும் மாபெரும் தவறு செய்து விட்டார்களோ என்ற கேள்விதான் கடந்து வந்தது. ஒருவேளை அந்த கிராமம் முழுவதும் தண்டிக்கப்படலாம். பயந்து நடுங்கிய அந்த கிராமத்தின் மூப்பர்கள், "நீர் வருகிறது சமாதானமா?" என்று கேட்டார்கள் (16:4ஆ). சாமுவேல், "சமாதானந்தான்; கர்த்தருக்குப் பலியிட வந்தேன்" என்று பதில் கூறினார் (16:5அ).

கிராமத்து மூப்பர்கள், தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு[12] பலிவிருந்துக்கு வருமாறு சாமுவேல் அழைத்தார் (16:5ஆ). பலியொன்று செலுத்தப்படுகையில், கொல்லப்பட்ட விலங்கின் உடலிலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்ட சில உறுப்புக்கள் மட்டுமே காணிக்கையாய்ச் செலுத்தப் பட்டு வந்தது, எஞ்சியுள்ள பகுதி உண்ணப்பட்டது (1 இரா. 19:21). பெத்லெகேமில், இஸ்ரவேலினால் மிகச் சிறந்தவர் என்றறியப்பட்ட மனிதரால் நிறைவேற்றப்படும் பண்டிகையொன்று நடைபெற வேண்டி யிருந்தது, மற்றும் இந்த முக்கியமான மனிதர்கள் அழைக்கப்பட்டிருந் தார்கள். உறக்கத்திலிருந்த இந்தச் சிறு நகரில் நடந்த இந்நிகழ்ச்சியானது அநேகமாக மிகவும் எழுச்சிக்குரியதாக இருந்திருக்கும்.

சாமுவேல் அவர்களிடத்தில், ஈசாயையும் அவரது மகன்களையும் அழைக்கும்படியும் கூறினார் (16:5இ).[13] இந்த அழைப்பினால் ஈசாய் பெற்றிருந்திருக்கக் கூடிய வியப்பையும் மகிழ்ச்சியையும் கற்பனை செய்து

பாருங்கள்! அவரது தாத்தாவான போவாஸ், அந்த சமூகத்தில் ஒரு காலத்தில் மிகவும் மதிப்புக்குரிய மனிதராய் இருந்தார். ஒருவேளை, நிறைவாக அந்த மதிப்பு இவருக்கு வந்து சேர வேண்டிய காலம் வந்திருக்கலாம்! ஈசாய் தனது பையன்களை (ஏறக்குறைய எல்லாப் பையன்களையும்) குளிக்கச் செய்து, "சபைக்குச் செல்லும் பொழுது அணிபவற்றில்" மிகச் சிறந்த உடைகளை அணிவித்து, இவ்விதமாக அவர்கள் எல்லாரும் அந்த வைபவத்திற்குச் சென்றார்கள்.

விருந்து நடந்து கொண்டிருந்த இடத்திற்கு அவர்கள் நடந்து செல்லுகையில் சாமுவேல், ஈசாயின் மூத்த மகனான எலியாபைப் பார்த்தார்.[14] அவர் உயரமாகவும் வனப்பாகவும் இருந்தார்,[15] அவர் ஒரு ராஜாவைப் போல் காணப்பட்டார். சாமுவேல், "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் இவன்தானாக்கும்" என்று நினைத்தார் (16:6).

இப்பொழுது நாம் 1 சாமுவேல் புத்தகத்தில் உள்ள மிகவும் முக்கிய மான வசனத்திற்கு வருகின்றோம்: " 'நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்' என்றார்" (16:7). "முகம்" என்ற வார்த்தை, எபிரெய மூலமொழியில் "கண்கள்" என்பதைக் குறிப்பதற்கான வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இது முகத்தைக் குறிப்பதற்கான உருவக நடையாக உள்ளது.

தோற்றத்தைக் கொண்டு மனிதர் (கள்) தீர்ப்பிடுகின்ற விஷயமானது அன்றும் இன்றும் உண்மையானதாகவே உள்ளது. நமது பிரசங்கியார்கள், பிரசங்கியார்கள் போல் காணப்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் (என் மனைவி என்னைக் குறித்து இதை இன்னமும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்). நமது பணியாளர்கள் பணியாளர்களாக இருப்பதையே நாம் விரும்புகிறோம். நமது அதிபர்கள் அதிபர்கள் போலிருப்பதையே நாம் விரும்புகின்றோம். நபரைக் காட்டிலும் அவர் பொதிந்து வைக்கப்பட்டுள்ள நிலை என்பது பல வேளைகளில் நமக்கு மிகவும் முக்கியமானதாகி விடுகின்றது.

ஆயினும் கூட, மனிதர்கள் தங்களின் (பதவித்) தகுதிக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளாததின் காரணமாக நாம் எவ்வளவு அடிக்கடி ஏமாற்றம் அடைந்து போகின்றோம்? அழகு மிகுந்த முகமானது ஒரு நல்ல மனைவியாக அவள் இருப்பாள் என்பதை உத்தரவாதப்படுத்துவதில்லை என்பதைக் கண்டறிந்து ஏமாற்றமடைகிற இளைஞர்கள் பலர் உள்ளனர். வனப்புமிக்க விவரக் குறிப்பு ஒன்றினால் ஊசலாட்டப்பட்டதின் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட இளம் பெண்கள் தங்கள் இருதயம் உடைந்து போயிருக்கின்றார்கள்.

தேவன் தமது முடிவுகளை மேலோட்டமாக, மேலெழுந்தவாரியாக அமைப்பதில்லை. மாறாக அவர் இருதயத்தை உற்றுப் பார்க்கின்றார்.[16] "நியாயம்தீர்ப்பது எப்படி என்று நியாயாதிபதி தன் நியாயாதிபதிக்குப் போதித்துக் கொண்டிருந்தார்"[17] என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். நாம் எப்படி நியாயம் தீர்க்க வேண்டும் என்பதையும் தேவன் நமக்குப்

போதிப்பார். இயேசு, "தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" என்று கூறினார் (யோவா. 7:24).[18]

ஈசாயி தமது இரண்டாவது மகன் அபினதாபை அழைத்தார், அந்த மகனும் உயரமாகவும் வனப்பாகவும் இருந்தார் என்பதில் ஐயம் இல்லை. சாமுவேல் தமது தலையை ஆட்டி, "இவனையும் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை" (16:8) என்று கூற வேண்டியதாயிற்று. அதன் பின் மூன்றாவது மகன் சம்மாவின் முறை வந்தது. பதில் அதே விதமாகவே இருந்தது: "இவனையும் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை" (16:9). தொடர்ந்து அவர்கள் வந்தார்கள்: நெதனெயேல் ... ரதாயி ... ஓத்சேம் (1 நாளா. 2:14, 15) சாமுவேலுக்கு முன்பாக ஏழு மகன்களும் கடந்து சென்றார்கள் - அந்த ஏழு பேரும் பார்வைக்கு நல்ல பையன்களாக, ராஜ களை உள்ளவர்களாக இருந்தார்கள் - ஆனால் "கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்து கொள்ளவில்லை" என்பதே முடிவாயிருந்தது (16:10).

சாமுவேல் கலக்கம் அடைந்தார். தேவன், ஈசாயின் மகன்களில் ஒருவரை ராஜாவாகத் தெரிந்து கொண்டதாகக் கூறியிருந்தார் (16:1). பலிவிருந்திற்கு ஈசாயின் மகன்கள் யாவரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். சாமுவேல் ஈசாயியைப் பார்த்து, "உன் பிள்ளைகள் இவ்வளவுதானா?" (16:11அ) என்று கேட்டார். ஈசாயி பதில் அளிக்கையில் சங்கடமுற்றவராய் இருந்திருக்க வேண்டும். "இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" (16:11ஆ). எபிரெயக் கல்வியாளர்கள், "எல்லாருக்கும் இளைய" என்ற சொற்பதத்தை கடைசியாகப் பிறந்தவருக்கு மட்டுமின்றி தகுதியில் கடைசியாயிருப்பவருக்கும் கூறுவதுண்டு.

பலிவிருந்திற்குத் தாவீது அழைக்கப்படாதிருந்தது ஏன்? ஆடுகளைக் கவனித்துக் கொள்வதற்கு யாரேனும் ஒருவரைக் கூலிக்கு அமர்த்துவதென்பது வசதிக் குறைவானதாக இருந்திருக்கலாம், ஆனால் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்காக அதுபோலச் செய்திருக்கப்படக் கூடும் (1 சாமு. 17:20ஐக் கவனிக்கவும்). எல்லா மகன்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஈசாயி தாவீதை கொண்டு வராதது ஏன்?[19]

இது ஒருவேளை, தாவீது வேறுபட்டவராய் இருந்ததால் இவ்வாறு நடந்திருக்கலாம். அவர் "சிவந்த மேனி" (16:12) கொண்டவராயிருந்தார். "சிவந்த மேனி" என்பது, "சிவப்பு" என்பதற்கான எபிரெய வார்த்தையில் இருந்து வருகிறது; இதே வார்த்தைதான் சிவந்த முடி போர்த்தப் பட்டவனாகப் பிறந்த ஏசாவுக்கும் பயன்படுத்தப்பட்டது (ஆதி. 25:25). தாவீதின் உடல் உருவாக்கத்தில், அவரது முன்னோர்களில்[20] சிலருடைய அயல் உயிர் மூலக்கூறுகள் மேலெழுந்திருக்கலாம். "சிவந்த மேனி" என்பது, தாவீது அழகிய தோற்றம் கொண்டிருந்தான் என்று மட்டும் அர்த்தப் படுத்தியிருக்கலாம் - அல்லது இது, அவர் சிவந்த தலை(முடி)யும், தவிட்டு நிறமான முகமும் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படலாம். எவ்வகையிலும், அவர் யூதர்களின் சாதாரண தர அளவையான உருவாக்கத்திற்கு பொருத்தமானவராகக் காணப்படவில்லை.

தாவீது வேறுபட்டவராகத் தோற்றம் அளித்ததுடன் கூட, அவர் வேறு

பட்டவராக செயல்பட்டுக் கொண்டும் இருந்தார். அவர் உண்மையான மனிதரில் மனிதன் போலச் செயல்படவில்லை. அவர் கவிதை எழுதிக் கொண்டும், ஒரு கம்பிக் கருவியில் இசை மீட்டிக் கொண்டும் இருந்தார்![21] வேறுபட்டவராயிருத்தல் என்பது மரணத்திற்கேதுவானதாக உள்ளது.

தாவீதைப் பற்றி நினைக்கையில் எனக்கு, "குட்டிச் சுவற்றுக் கழுதை" என்ற சொற்றொடர்தான் நினைவுக்கு வருகின்றது. ஒரு பெண் நாய் தன்னால் கவனிக்கக்கூடிய அளவுக்குமேல் குட்டிகளை ஈன்றெடுத்த நிலையில், மிகச் சிறிய குட்டி புறம்பே தள்ளப்படுகின்றது. அது பெரிய குட்டிகளின் வயிறுகள் நிறைந்த பின்பு எஞ்சியிருக்கும் பாலைக் குடித்து, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ வேண்டியதாக உள்ளது. (ஆனால்) பெரும்பாலும் இந்தக் குட்டியானது மிகப் புத்திசாலியாக - மற்றும் மிகவும் வலிவானதாக - வளருகிறது, ஆனாலும் அது, "வளர்ச்சி குன்றிய நிலையில்" இருத்தல் என்ற தழும்பை உடையதாகவே இருக்கின்றது.

தாவீதுக்கு உணவும் உடையும் தரப்பட்டது என்பதில் ஐயம் எதுவும் இல்லை, ஆனால் அவரது சொந்தக் குடும்பத்தில், அன்பு, மதிப்பு மற்றும் பாராட்டு ஆகியவைகளில் - ஒவ்வொரு பிள்ளையும் இவற்றில் பேணப்பட வேண்டியவர்களாயிருக்கின்றனர் - அவர் ஒரு புறமாய் ஒதுக்கப்பட்டார். பிற்பாடு தாவீது, "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்" (சங். 27:10) என்று எழுதினார். தாவீது ஓரளவுக்காவது தமது குடும்பத்தாரால் கைவிடப்படாது இருந்திருந்தால், இப்படிப்பட்ட வார்த்தைகளை எதற்காக எழுதியிருக்கப் போகிறார்?[22] நாம் யாவரும் பெற்றோர் என்ற முறையில் நமது பிள்ளைகளை நேசிக்கிறோம் மற்றும் மதிக்கிறோம் என்பதை அவர்கள் அறிய அனுமதிக்கவும் - பட்சபாதத்தைத் தவிர்க்கவும் தேவன் நமக்கு உதவி செய்கிறார்!

பலி விருந்துக்கு ஈசாய் தாவீதை அழைத்து வராமைக்கான உண்மைக் காரணம் நமக்குத் தெரியவில்லை,[23] ஆனால் ஒரு விஷயம் தெளிவா யிருந்தது: ஈசாயி தமது மூத்த மகன்களைப் பற்றி நினைத்த அளவுக்குத் தமது இளைய (கடைசியான) மகனைப் பற்றி நினைக்கவில்லை. தாவீது, பின்னால் இருந்த புல் வெளியில் விடப்பட்டிருந்தார்.

சாமுவேல் சந்தோஷமில்லாத நியாயாதிபதியாக இருந்தார்! அவர் ஈசாயிடம், "ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன்" (16:11இ) என்றார்.

ஒரு செய்தியாளர் ஓடி வந்து, "தாவீது, தாவீது, உன்னைப் பலி விருந்துக்கு அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்கள்" என்று கூறிய பொழுது, தாவீதுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய திகைப்பைக் கற்பனை செய்து பாருங்கள்.

தாவீதினால் தமது காதுகளை நம்ப இயலாதிருந்தது. "ஆனால், ஆடுகளை என்ன செய்வது?"

"அவற்றைப் பற்றிக் கவலைப்படாதே, அவை நன்றாகவே இருக்கும்."[24]

"சரி, நான் குளித்து விட்டு, உடைமாற்றிக் கொண்டு பிறகு உன்னுடன் வருகிறேன்."

“இல்லை, நீ இப்பொழுதே வரவேண்டும். நீ அங்கு வரும் வரைக்கும் எவரொருவரும் உணவு உண்பதற்கு உட்காரக்கூட அனுமதிக்கப்பட மாட்டார்கள்!”

தாவீது, அழுக்கும் வியர்வையுமாக, மேய்க்கும் பொழுது அவர் அணிந்திருந்த உடையிலேயே, ஆடுகளைப் போலவே நாற்றம் கொண்டவராக பலிவிருந்திற்கு வந்து சேர்ந்தார் - ஆயினும் அவரிடம் சிறந்த அம்சம் ஒன்று இருந்தது. “அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுமுள்ளவாயிருந்தான்” (16:12அ). ஆயினும் தாவீதின் நல்ல தோற்றப் பொலிவு அவர் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு காரணமாயிருந்த தில்லை. அவரின் இருதயமே அதற்குக் காரணமாயிருந்தது; தேவன் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதரைக் கண்டறிந்தார். கர்த்தர் சாமுவேலிடம், “இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு” என்றார் (16:12ஆ).

சாமுவேல் தாவீதைத் தமக்கு முன்பாக மண்டியிடும்படி கூறினார். அவர் கொம்பை தாவீதின் தலைக்கு மேலாக உயர்த்தி, அதில் இருந்த இனிய நறுமணமுள்ள தைலம் தாவீதின் கன்னங்களில் வழிந்தோடி, அவரது உடைகளின் மீது வடிந்து, தரையில் விழும் வரையிலும் அதை, காற்றினால் அலைக்கழுக்கப்பட்டிருந்த தாவீதின் தலைமுடியின் மீது ஊற்றினார் (16:13அ). பின்பு சாமுவேல் குனிந்து, தாவீதின் காதுகளில், “நீ அடுத்த ராஜாவாயிருப்பாய்” என்று சொன்னதாக யோசிப்பஸ் என்பவர் கூறினார்.[25] அது அவ்வாறு நடந்ததோ இல்லையோ, சிறப்பான ஏதோவொன்று நடந்தது என்பதைத் தாவீது அறிந்தார்.[26]

“அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்” (16:13ஆ). பழைய ஏற்பாட்டின் காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் உபதேசம் மேம்படுத்தப்பட்டிராதபடியால், இது அநேகமாக தேவத்துவத்தின் மூன்றாம் ஆளைக் குறிப்பிடுவதாயிராமல், தேவனுடைய சொந்த ஆவியையே குறிப்பிடுகின்றதாயிருக்கலாம். அந்த வேளை முதற்கொண்டு. விசேஷித்த ஒரு வகையில் தேவன் தாவீதுடன் இருப்பார்.[27] இதன் விளைவாகத் தாவீது தமது சங்கீதங்களை எழுதுகையில் கர்த்தருடைய வழிநடத்துதல் அவருடன் இருந்திருக்கும் (2 சாமு. 23:1, 2).

வசனம் 13, “... சாமுவேல், தைலக் கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்” என்று குறிப்பிடுகின்றது. அங்கு நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை அநேகமாக அவரது சகோதரர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் (ஏனெனில் இதற்கு முன் ஒருமுறை மாத்திரமே ராஜாவுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றிருந்தது, மற்றும் அது தனிப்பட்ட நடந்த நிகழ்ச்சியாக இருந்தது - இ.வ. 1 சாமு. 10:1). இருப்பினும் அவர்கள், அந்தச் “சிறுவன் தங்களுக்கு மேலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும், ஏதோ ஒரு கனத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டதையும்” அறிந்திருந்தார்கள்.[28]

சாமுவேலின் வேலை முடிவடைந்தது, அவர் தம் இல்லம் திரும்பினார் (16:13).

தாவீது என்ன செய்தார்? அவர் கிரீடங்களையோ அல்லது ராஜ

உடைகளையோ அணிய முயற்சி செய்தாரா? அவர் தமக்கென்று புதிய வர்த்தக அட்டைகளை (விசிட்டிங் கார்டுகள்) அச்சிட்டுக் கொண்டு, அதில் " 'மேய்ப்பன்' என்றிருந்ததை அடித்து விட்டு 'ராஜா' என்று எழுதிக் கொண்டாரா?" அவர் தமது குடும்ப சாரட்டு வண்டியைப் பளபளப்பாக்கி, வீதிகளின் வழியே "நானே உங்கள் புதிய ராஜா" என்று சத்தமிட்டுக் கொண்டு ஓட்டிச் சென்றாரா?[29] இல்லை, தாவீது தம் ஆடுகளிடம் திரும்பிச் சென்றார். பிற்பாடு சவுல் தாவீதை அனுப்பும்படி ஈசாயிக்கு அனுப்பிய செய்தி, "ஆட்டு மந்தையில் இருக்கிற உன் குமாரனாகிய தாவீதை என்னிடத்தில் அனுப்பு" (16:19) என்பதாகவே இருந்தது. அவர் சவுலுக்காக இசை மீட்டத் தொடங்கிய போது கூட, அவர் "(தாவீது) சவுலை விட்டுத் திரும்பிப் போய் பெத்லெகேமிலிருக்கிற தன்னுடைய தகப்பனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்." (1 சாமு. 17:15; 1 சாமு. 17:20, 28ஐயும் காணவும்.)

தாவீது ஒரு மகா ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார்; அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாவாயிருந்தார், ஆனால் அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராகவும் இருந்தார். அவர் தேவனுடைய வேளைக்காகவும், இடத்திற்காகவும் காத்திருக்கக் கூடியவராயிருந்தார். அவர் தமது ஆடுகளிடம் திரும்பிச் சென்றார்.

நாம் தேவனுக்காகக் காத்திருக்க, பொறுமையுடன் இருக்கக் கற்றுக் கொள்வது அவசியமானதாக உள்ளது. கற்றுக் கொள்ள இது எவ்வளவு முக்கியமான ஒரு பாடமாக உள்ளது! கற்றுக் கொள்ள இது எவ்வளவு கடினமான பாடமாக உள்ளது! தேவனால் பயன்படுத்தப்படும்படி நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்வோம் - பின்பு நாம் காத்திருக்கக் கற்றுக் கொள்வோம்.

ஆராதிக்கக் கற்றுக் கொண்ட ஒரு பாடகர்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மேய்ப்பனான ராஜா, புல்வெளியில் இருந்து அரியணைக்கு எவ்வாறு மாறி வந்தார்? சாதாரணமாக, ஒரு மேய்ப்பர் ஒருக்காலும் அரண்மனையில் உட்புறத்தைப் பார்த்தே இருக்க மாட்டார், ஆனால் தேவன் ஆச்சரியமான வழிகளில் இயக்குவிக்கின்றார். அதிகாரம் 16ன் முடிவுப் பகுதியானது, தேவன் இதை எவ்வாறு செய்து முடித்தார் என்று நமக்குக் கூறுகின்றது.

ஆடுகளை மேய்க்கும் பையன் என்ற வகையில், தாவீது ஒரு தனித் திறமையை வளர்த்துக் கொண்டிருந்தார், அதைப் பற்றி நாம் சுருக்கமாய்க் கூறியிருந்தோம். அவர் ஆடுகளை மேய்க்கையில் பாடவும் இசைக் கருவியை இசைக்கவும் கற்றுக் கொண்டிருந்தார்.

ஆடுகளைப் பராமரித்தல் என்பது நீண்ட நேரம் செலவிட வேண்டிய ஒரு வேலையாக இருந்தது. அவற்றில் பல மணி நேரங்கள் மந்தமான, சோர்வூட்டும் வேளைகளாயிருந்தன. ஆடுகள் புல்வெளியில் பாதுகாப்பாக மேய்ந்து கொண்டிருக்கையில், மேய்ப்பன் அவற்றை ஒரு குன்றின் ஓரமாக

அமர்ந்து கவனித்தாலே போதுமானதாயிருந்தது. மேய்ப்பர்கள் ஒரு இசைக் கருவியை இசைத்துப் பொழுதுபோக்குவதென்பது சாதாரணமான தாயிருந்தது. அவர்களில் பெரும்பாலோர் ஒரு எளிய குழலையோ அல்லது புல்லாங்குழலையோ தேர்ந்து கொள்வார்கள். தாவீது ஒரு கம்பியிசைக் கருவியைத் தேர்ந்து கொண்டார். NASBயும் பிற மொழிபெயர்ப்புகளும் இதை "சுரமண்டலம்" (16:23) என்று அழைக்கின்றன, ஆனால் இதே போன்றதும். ஒரு சில கம்பிகளைக் கொண்டதுமான "நரம்பிசைக்கருவி" என்பதே மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாயிருக்கும் (RSVயைக் காணவும்). (இது சுரமண்டலம் மற்றும் கித்தார் ஆகிய இசைக் கருவிகளுக்கிடையிலான ஒரு கலவையான இசைக் கருவியென்று அழைக்கப்பட்டுள்ளது).

தாவீது பாறைக் குன்றுகளின் மீது தனிமையிலிருந்த அந்த நாட்களில், பாடல்களை எழுதி அவற்றிற்கு இசையமைத்திருந்தார். பின்பு அவர் இசைக் கருவிகளை மீட்டிக் கொண்டே அவற்றைப் பாடுவார். தேவன் தாவீதை அழகிய குரலையும் இசைத் திறமையையும் கொடுத்து ஆசீர்வதித்திருந்தார், அந்தத் திறமையைத் தாவீது வளர்த்துக் கொண்டார். இந்த அத்தியாயத்தின் அடுத்த பகுதிக்குக் கடந்து செல்லுகையில் இதை நாம் மனதில் வைத்துக் கொள்வோம்.

வசனம் 14, "கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்" என்று தொடங்குகிறது. அத்தியாயம் 16ன் கடைசிப் பாதியானது தாவீதையும் சவுலையும் வேறுபடுத்தி ஒப்பிடுகின்றது. தாவீது தேவனால் அங்கீகரிக்கப் பட்ட அடுத்த இராஜா என்பதைக் காண்பிக்க, கர்த்தருடைய ஆவி அவர்மீது வந்தது (16:13). அதே வேளையில், சவுல் ராஜாவாயிராதபடிப் புறக்கணிக்கப்பட்டார் என்பது முடிவானது என்பதைக் காண்பிக்க அவரை விட்டு கர்த்தருடைய ஆவி நீங்கிப் போயிற்று.[30]

இருப்பினும் இதற்குப் பின்பு நாம் பின்வரும் புதிரான கூற்றை வாசிக்கின்றோம்: "தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி அவனை [அதாவது, சவுலை]க் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தது" (16:14ஆ). இங்கு "பொல்லாத" என்பது "பாவம் நிறைந்த" என்று அர்த்தப்படுவதில்லை, மாறாக "தண்டிக்கின்ற" என்று அர்த்தப்படுத்துகின்றது. பழைய ஏற்பாடானது தண்டித்தலைக் குறிப்பிட அடிக்கடி "பொல்லாத" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது.[31] NKJVயில் இது "அயர்ச்சியூட்டும் ஆவி" என்றுள்ளது. "தேவனால் விடப்பட்ட" என்பது, சவுலைத் தண்டிப் பதற்காக, இந்த ஆவியைத் தேவன் நேரடியாக அனுப்பினார் என்றோ அல்லது (யோபின் விஷயத்தில் நடந்தது போன்று) சவுலைத் துன்புறுத்து வதற்கான தமது கருவியாகத் தேவன் சாத்தானைத் தம்முடைய ஊழியக் காரர்களில் ஒருவனாக அனுப்ப அனுமதித்தார் என்றோ அர்த்தம் கொள்ளப்பட முடியும். எவ்வகையிலும், தேவனுடைய தீர்மானம்/ நோக்கம் நலமாயிருந்ததென்று நாம் உறுதி கொள்ள முடியும். சவுலைக் கர்த்தரிடத்தில் திரும்பக் கொண்டு வருவதற்காக அவர் சிட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்.[32]

பொல்லாத ஆவி சவுல் மீது வந்த பொழுது, அதன் விளைவு அவரைச் சுற்றிலும் இருந்தவர்களால் தெளிவாய்க் காணப்பட்டது (16:15). சவுல்

எப்பொழுதுமே ஓரளவு நிலையற்றவராகவே இருந்தார், ஆனால் அந்தப் பொல்லாத ஆவியானது அவரது உணர்வுகளின் ஊசலாட்டத்தை வலுப்படுத்திற்று; மேலும் மேலும் அவர் ஆழமான மனச்சோர்வின் கீழிருக்கலானார். சவுலின் ஆலோசனையாளர்கள் அவரிடத்தில் பின்வரும் பரிந்துரையை எடுத்துரைத்தார்கள்: "சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறின ஒருவனைத் தேடும்படிக்கு, எங்கள் ஆண்டவனாகிய நீர் உமக்கு முன்பாக நிற்கிற உம்முடைய அடியாருக்குக் கட்டளையிடும்; அப்பொழுது தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி உம்மேல் இறங்குகையில், அவன் தன் கையினால் அதை வாசித்தால், உமக்குச் சவுக்கியமுண்டாகும்" (16:16). "காட்டுத்தனமான இருதயத்தை மென்மைப்படுத்தும் வசீகரம் இசைக்கு உண்டு"[33] என்று கூறப்படுகிறது. அது சவுலின் நாட்களில் உண்மையாயிருந்தது, மற்றும் வியாபாரி ஒருவர் மெல்லிசையைக் கேட்டு தனது இறுக்கத்தை தளர்த்தி ஓய்ந்திருப்பதையோ அல்லது தாயானவள் தனது பிள்ளைகளுக்குத் தாலாட்டுப்பாடுவதையோ எதை நாம் நினைத்துப் பார்த்தாலும், நமது நாட்களிலும் இது உண்மையாய் உள்ளது.

சவுல், நம்பிக்கையிழந்த ஒரு மனிதராயிருந்தார்; அவர் ஏதொன்றையும் முயற்சி செய்து பார்க்க மனவிருப்பம் கொண்டவராயிருந்தார். "நன்றாய் வாசிக்கத்தக்க ஒருவனைத் தேடி, என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" என்றார் (16:17).

சவுலின் இந்த வேண்டுகோளைக் கேட்க அவரருகில் இருந்த வேலைக்காரர்களில் ஒருவர், தாவீதின் வயதையுடையவராகவும், சுரமண்டல வாசிப்பில் தாவீதின் திறமையைப் பற்றி அறிந்தவராகவும் இருந்தார். இது ஒரு வியப்புக்குரிய தற்செயல் அல்ல, ஆனால் தாழ்மையான ஒரு ஆடுமேய்க்கும் பையனை அவன் ராஜாவாயிருப்பது எப்படி என்பதைக் கற்பதற்காக அவனை அரண்மனைக்கு அழைத்து வருவதற்கு, தேவன் தமது அருளிரக்கத்தில் திட்டமிட்டுச் செயல்படுத்தியதாக இருந்தது. அந்த இளைஞர் (வேலைக்காரர்), "இதோ, பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன்; அவன் வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார்" (16:18). இது மனதில் பதியக் கூடிய விவரக் குறிப்பாக இருந்தது.[34] இந்தப் பட்டியலில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டதையே சவுல் மிகவும் முக்கியமானதாக நினைத்திருப்பார்: "அவன் வாசிப்பதில் தேறினவன்." ஆயினும், கடைசிச் சொற்றொடர்தான் மிகவும் முக்கியமானதாக இருந்தது: "கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார்." கர்த்தருடைய ஆவி சவுலை விட்டுச் சென்றிருந்தது; அவருக்கு அவரது தேவன் தேவைப்பட்டார்.

சவுல் உடனடியாகத் தாவீதுக்கு ஆளனுப்பினார் (16:19). விரைவிலேயே அந்த இளைஞர் (தாவீது) ஒரு வெள்ளாட்டுக்குட்டியை ஓட்டிக் கொண்டு, அப்பம் திராட்சரசம் ஆகியவற்றைக் கழுதையொன்றின் மீது ஏற்றிக் கொண்டு சவுலின் இல்லம் வந்து சேர்ந்தார் (16:20). உடனடியாக தாவீது சவுலுக்கு ஊழியம் செய்யத் துவங்கினார் (16:21).[35] வசனம் 23, நமக்கு இவ்வாறு கூறுகின்றது: "அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி

சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவான்."

தாவீதின் சுரமண்டலத்தினுடைய மென்மையான கம்பிகள் சவுலின் சிந்தையை இதப்படுத்தின என்பதில் ஐயமில்லை - ஆனால் பொல்லாத ஆவியைத் துரத்துவதில் தாவீது இசைக் கருவியை இசைத்தல் என்பது என்ன வகையில் செயல்பட்டது? நிதானித்து யோசியுங்கள். தாவீது என்ன வகைப்பட்ட பாடல்களை எழுதினார்? அவர், "இரவின் விண்மீன்கள் ... பெரிதாய் ஒளி வீசுவதாய் உள்ளன ... யூதாவினுடைய இருதய ஆழத்தி லிருந்து" என்றோ அல்லது, "ஆகிலா மலையில் என் சிலிர்ப்பைப் பறி கொடுத்தேன்" (1 சாமு. 23:19) என்றோ எழுதினாரா? பக்திசாராத பாடல்களைத் தாவீது எப்பொழுதாவது எழுதியிருந்தாரென்றால், அது தொடர்பான பதிவேடுகள் நமக்குக் கிடைக்கவில்லை.[36] மாறாக, அவர், தேவனைப் பற்றியும் அவருடன் தமக்குள்ள உறவைப் பற்றியும் எழுதினார்:

> *உமது விரல்களில் கிரியையாகிய உம்முடைய வானங்களையும்,*
> *நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான்*
> *பார்க்கும்போது,*
> *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர்*
> *விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்? ...*
>
> *வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய*
> *மண்டலங்கள் அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது ...*
>
> *நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்*
> *பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே*
> *கூட இருக்கிறீர் ... (சங். 8:3, 4; 19:1; 23:4).*

ஆடு மேய்க்கும் வாழ்வின் தனிமையில் தாவீது பல விஷயங்களைக் கற்றுக் கொண்டார்; தேவனை ஆராதிப்பது என்பது அவர் கற்றுக் கொண்ட மிக முக்கியமான விஷயமாயிருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. மேய்ப்பு வயல்களில் தனிமையில் தாவீது, தேவனுடைய வசனத்தைப் பற்றியும் தேவனுடைய உலகத்தைப் பற்றியும் நினைத்துப் பார்த்து, தேவனை ஆராதிப்பவரானார். கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது சுவாசித்தல் போல (அவருக்கு) இயல்பானதாயிற்று.

நாம் நம் தேவனை ஆராதிப்பது - உண்மையாய் ஆராதிப்பது - எப்படி என்பதைக் கற்றுக் கொள்வது அல்லது மறுபடி கற்பது என்பதே இன்றைய நாட்களில் நம் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. புதிய ஏற்பாட்டு சபை ஆராதனையின் சில வெளிப்பாடுகள் பழைய ஏற்பாட்டின் ஆராதனை மறைமை போலிருப்பதில்லை (எடுத்துக்காட்டாக, தாவீது பயன்படுத்தியது போல சுரமண்டலத்தையாவது அல்லது வேறு எந்த இசைக்கருவியையாவது புதிய ஏற்பாட்டு சபை தனது ஆராதனையில் பயன்படுத்தியிருந்ததில்லை), ஆனால் ஆராதனையின் மையப் பொருளானது ஒரே விதமானதாகவே

(இன்றும்) நிலைத்துள்ளது. நாம், எல்லாவற்றையும் படைத்தவர் மீது ஒரு பரிசுத்த பயபக்தி கொண்டிருக்க வேண்டும், அவரது மாட்சிமைக்கு முன்பாக தாழ்மையுடன் வீழ்ந்து வணங்க வேண்டும், மற்றும் அவரது கட்டளைகளுக்கிணங்க நமது அன்பையும் மதித்தலையும் நேர்மையுடன் அவரிடம் வெளிப்படுத்த வேண்டும். “இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின” (2 சாமு. 23:1) தாவீதின் இருதயப்பூர்வமான ஒப்புவித்தலுக்கு நாம் திரும்ப வேண்டிய அவசியம் இருக்கையில், களைத்துப்போன ஆத்துமாக்களை ஆவிக்குரிய உணர்வெழுச்சியின் வெளித்தோற்றத்திற்குத் தூண்டியெழுப்ப தந்திரம் வாய்ந்த முகாம்களைப் பலர் நடத்தித் திரிகின்றார்கள்.

தாவீதின் பாடுதலும் இசைக் கருவியை இசைத்தலும், பொல்லாத ஆவியை சவுலிடமிருந்து ஏன் புறப்பட செய்தன? ஏனெனில் சவுலின் பிரச்சனையானது சிந்தையிலுள்ள அதிகமான வியாதியாய் இல்லாமல், அது ஒரு ஆத்துமாவின் சுகவீனமாய் இருந்தது. தாவீது தேவனைக் குறித்துப் பாடும்போது, சவுலின் இருதயமானது தற்காலிகமாக கர்த்தரைப் பற்றிய சிந்தனையால் நிரப்பப்பட்டது, ஆகவே அவதிப்படுத்தும் ஆவிக்கு அங்கு இடமில்லாதிருந்தது.

அடுத்த அதிகாரத்தில், “தாவீது சவுலை விட்டுத் திரும்பிப் போய் பெத்லெகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்” என்று கூறப்படுகிறது (1 சாமு. 17:15). ஒன்று சாமுவேல் 16:21 வசனம், “சவுல் தாவீதை மிகவும் சிநேகித்தார்” என்று கூறுகிறது. தேவனுடைய அருளிரக்கத்தில், ஆடு மேய்க்கும், தாழ்மையான ஒரு பையன் ராஜாவுக்கு நெருக்கமானான், ஒரு நாட்டை ஆளுவதெப்படி என்று கற்றுக் கொண்டான், மற்றும் அதிகாரத்தில் இருந்த மக்களின் மதிப்பை ஈட்டிக் கொண்டான் - இவை எல்லாமே தாவீதுக்கான தேவனுடைய திட்டத்தில் முக்கியமான காரணிகளாக இருந்தன. தேவனுடைய வழிகள் வியப்புக் குரியவைகள் அல்லவா?

முடிவுரை

இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் நான், ஃப்ளாரன்ஸ் நகரில் தாவீதின் சிலையொன்றைக் கண்டது பற்றிக் கூறியிருந்தேன். அந்தச் சிலையைப் பற்றிப் பின்வரும் கதையொன்று கூறப்படுகிறது: சிற்பியான மைக்கேல் ஆஞ்செலோ, கரடுமுரடாய் வெட்டப்பட்ட ஒரு சலவைக் கல் பாளத்தைக் கண்டார், அது பேராலயப் பணிமனையில் ஒன்றுக்கும் பயனற்றது என்று வீசப்பட்டுக் கிடந்தது. அதன் ஒரு பக்கத்தைத் திறமையற்ற சிற்பி ஒருவர் உடைத்துப் போட்டிருந்தார். அந்த (சலவைக்) கல் சிதைக்கப்பட்டதென்று கருதிய அவர், அதைப் புறம்பே வீசியெறிந்து விட்டார். அந்தக் கல்லை எடுத்த மைக்கேல் ஆஞ்செலோ, அதன் “சிதைவுற்ற” பகுதியை தனது கருப்பொருளின் (தாவீது சிலையின்) பின்பக்கமாகத் திறமைமிக்க வகையில் செதுக்கி எடுத்தார். ஆகாததென்று ஒதுக்கப்பட்ட ஒரு கல்லில் இருந்து, மைக்கேல் ஆஞ்செலோ தனது தலை சிறந்த படைப்பான தாவீது சிலையை

உண்டாக்கினார்.

உங்கள் சொந்த வாழ்வானது சேதமுற்று, பயனற்றதாகியதென்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாம், ஆனால் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராவது" என்பதற்கு ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணுக்கு (அவர்களின் வாழ்வின் எந்த வேளையும்) மிகத் தாமதமானது அல்ல. தாவீது செய்தது போல் நீங்கள் உங்கள் இருதயங்களைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தால், தேவன் உங்களை (தமது) மென்மையான, திறன்மிக்க கைகளில் எடுத்து, உங்களைத் தமது மகிமைக்கென்று ஒரு கருவியாக வடிவமைக்க அவரால் முடியும்.

நாம் ஒவ்வொருவரும் தாவீதைப் போலிருக்க - அல்லது சவுலைப் போலிருக்க - முடியும். தேவனின் ஆவி நம்மீது தங்கியிருக்க முடியும் (அப். 2:38; கலா. 4:6) - அல்லது அது நம்மை விட்டு நீங்க முடியும். அது நமது முடிவாகவே உள்ளது.

பிரசங்க மற்றும் காட்சி - உதவிக் குறிப்புகள்

பிரசங்கக் குறிப்புகள்: தாவீதைப் பற்றிய இந்தப் பின்னணி விவரங்கள் பெற்றோர்களுக்கு "எவ்விதம்" என்பதற்கான பாடமாகப் பயன்படுத்தப்பட முடியும். பாடத் தலைப்பை "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக வளர்வது எவ்வாறு" என மாற்றிக் கொள்ள இயலும். அப்போது வலியுறுத்தப்பட வேண்டிய சில கருத்துக்கள் பின்வருமாறு: (1) உங்கள் பிள்ளைக்கு ஆவிக்குரிய வேர்களைக் கொடுங்கள், (2) உங்கள் பிள்ளைக்கு பொறுப்புணர்வைக் கொடுங்கள், (3) உங்கள் பிள்ளையை சுயமதிப்பை மேம்படுத்திக்கொள்ள உதவுங்கள், மற்றும் (4) உங்கள் பிள்ளைக்கு தேவனை நேசிக்கக் கற்றுக் கொடுங்கள்.

தாவீது பற்றிய பிரசங்கம் அல்லது போதனைக்குத் தயாரித்துக் கொண்டிருக்கையில், ஏற்புடைய சங்கீதங்களின் மீதான பாடங்களை அந்தப் பாடங்களுக்குத் துணைப்பாடமாக்க நீங்கள் விரும்பலாம். *David and His Psalms* (Living Word Series, Sweet Publishing, Ft. Worth, Tex., 1964) என்ற புத்தகத்தை உங்களால் பெற முடிந்தது என்றால், இது மிகுந்த உதவியாக இருக்கும். இதன் எழுத்தாளரான ஹாரிஸன் ஏ. மாத்யூஸ் அவர்கள், தாவீதின் வாழ்க்கைச் சுருக்கம் ஒன்றைக் கொடுத்து, அதை அவரது வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய சங்கீதங்களுடன் பிணைத்துள்ளார்.

இந்த முதல் பாடத்துடன் தொடர்புடைய வகையில் சங். 23ஐப் பயன்படுத்தலாம் என்பது மிகத் தெளிவானதாக உள்ளது. சங்கீதம் 8; 19; 29 போன்ற இயற்கை பற்றிய தாவீதின் சங்கீதங்களும் இந்த காலகட்டத்தில் இயற்றப்பட்டவைகளாயிருப்பதால் அவற்றையும் உள்ளடக்கச் சாத்தியக் கூறு உண்டு.

காட்சி-உதவிக் குறிப்புகள்: தாவீதின் காலத்தில் இருந்த பலஸ்தீன நாட்டின் வரைபடம் ஒன்று கிடைக்குமென்றால், அதைப் பெரியதாக்கி,

இந்த முதல் பாடத்தின்போது அறிமுகப்படுத்தலாம். நான்கு முக்கிய கருத்துக்களை அறிமுகப்படுத்த திறவுகோல்-வார்த்தை அட்டைகள் பயன்படுத்தபட முடியும். குழலாக்கப்பட்ட பசுவின் கொம்பு ஒன்றில் ஒலிவ எண்ணெயை நிரப்பி அதைக் காண்பித்தால், அது ஆர்வமிகுந்த பொருட்கருத்துப் பாடமாயிருக்கும்.

குறிப்புகள்

[1]தாவீது முதன் முதலாக ஆட்சி செய்யத் தொடங்கின பொழுது, அவர் முப்பது வயதுடையவராயிருந்தார் (2 சாமு. 5:4). சவுல் நாற்பது ஆண்டு காலம் ஆட்சி செய்தார் (அப். 13:21). இது, சவுலின் அரசாட்சிக் காலத்தின் பத்தாம் ஆண்டில் தாவீது பிறந்திருக்கலாம் என்று அர்த்தப்படுத்துகின்றது. ஆகையால், 1 சாமுவேல் 13:14ம் வசனம், தீர்க்கதரிசன கடந்த கால வகையில் எழுதப்பட்டிருக்க வேண்டும், இது எதிர்கால நிகழ்ச்சி ஒன்றை கடந்தகாலத்தில் உரைக்கின்றது, ஏனென்றால் தேவன் ஒன்றைக் கூறும் பொழுது அது ஏற்கனவே நடந்து விட்டதாகக் கூறுமளவிற்கு அவ்வளவு நிச்சயமானதாக உள்ளது. [2]1 சாமுவேல் 17:12. பெத்லெகேமுக்குத் தாவீது தம் இருதயத்தில் விசேஷித்த இடம் ஒன்றைக் கொடுத்திருந்தார்; பின்னாளில் அவர் அங்கிருந்த கிணற்றின் தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்று ஏங்கினார் (2 சாமு. 23:15; 1 நாளா. 11:17). [3]1 சாமுவேல் 17:12-14 வசனப்பகுதியானது, இந்த எட்டு மகன்களைப் பற்றியும், அவர்களில் தாவீது கடைசியானவராய் இருந்தது பற்றியும் குறிப்பிடுகிறது. 1 நாளா. 2:13-15ல் யூதாவைப் பற்றிய பதிவேடு ஏழு மகன்களை மட்டுமே பட்டியலிடுகிறது. ஒருவேளை, அவர்களில் ஒருவர் இளைஞராயிருந்த பொழுதே இறந்து போயிருக்கலாம் அல்லது பிள்ளையின்றி இறந்து போயிருக்கலாம். ஒன்று நாளா. 2:16, 17 வசனப்பகுதிகள் இரண்டு சகோதரிகள் பற்றிக் கூறுகின்றன. [4]"தாவீது" என்பது *dawidh* (Gk.: *dabid*) என்ற எபிரெய வார்த்தையிலிருந்து வந்துள்ளது. தாவீதின் பெயர், "அவரது அன்பார்ந்த" அல்லது "யெகோவாவிற்கு அன்பார்ந்த" என்று அர்த்தம் தரும் வார்த்தையிலிருந்து வந்ததாகச் சிலர் நினைக்கின்றனர். வேதாகமத்தில் வேறு எவருக்கும் இப்பெயர் இல்லை. [5]தாவீது ஆடுகளைக் கவனித்துக்கொள்ள (இது, நல்வசதியுள்ள குடும்பங்களில் வேலைக்காரர்களால் செய்யப்பட்ட பணிப்பொறுப்பாயிருந்தது) வேண்டிய தாயிருந்தது என்ற உண்மையுடன், அவரது குடும்பமானது ஓரளவுக்கு வறுமைப் பட்டதாயிருந்தது என்பதற்குச் சுட்டிக்காட்டுதல்கள் உள்ளன. தாவீது கவனித்துக் கொண்டிருந்த மந்தை மிகச் சிறியது என்பது உறுதி (1 சாமு. 17:28) - மற்றும் சவுலுக்கு அனுப்பப்பட்ட வெகுமதி (அது அவ்வாறானதாக இருக்குமென்றால்) ஒரு அரசனுக்குக் கொடுக்கப்படத் தகுதி மிகவும் குறைந்ததாகக் காணப்பட்டது (1 சாமு. 16:20). 1 சாமுவேல் 18:23ஐ யும் காணவும். [6]ஒரு பையனாக இருந்த வேளையில் நான் வயது சென்றவர்களுடன் வேலை செய்த பொழுது, கடினமான, அழுக்கான வேலைகள் - இவை கோதுமை அறுப்பின்போது, வைக்கோல் போர் அடுக்கும்போது, அல்லது எப்பொழுதெல்லாம் ஏற்படுகிறதோ அப்போது - நான் அடிக்கடி "இனக்குழுவின் கோலில் தாழ்ந்த மனிதனாக" வைக்கப்படுவதுண்டு. அநேகமாக உங்கள் சொந்த அனுபவத்தில் நீங்கள் இதே போன்ற விவரிப்பு ஒன்றைக் கொண்டிருக்கலாம். [7]மேய்ப்பன் என்ற வகையில் தாவீது வாழ்ந்திருந்த வெளிப்புற வாழ்வினால் அவரது விசுவாசம் வளர்ந்து பெலப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. [8]சில வேளைகளில் மேய்ப்பர்கள் ஒன்றாயிணைந்து வேலை செய்வதுண்டு (இ.வ. 1 சாமு.

25:16; லூக். 2:8 முதலியன), ஆனால் பெரும்பாலும் அதிலும் விசேஷமாக, மந்தை மிகச் சிறியதாக இருக்கையில் அவர்கள் தனிமையிலேயே வேலை செய்தார்கள். [9]*பறத்தல் பற்றி விமானிகள் இதே வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நான் கேள்விப்பட்டுள்ளேன்.* [10]Lynn Anderson, "The Heart of the Matter" (N.p., n.d.), sound cassette.

[11]*நோபில் இருந்த ஆசாரியர்கள் தாவீதை ஆதரித்தார்கள் என்று சவுல் முடிவு செய்த பொழுது, அவர்களைக் கொலை செய்ய ஆணையிட்ட நிகழ்ச்சியினால், இவரது (சாமுவேலின்) இந்தப் பயமானது நியாயப்படுத்தப்பட்டது (1 சாமு. 22:6-19).* [12]*"பரிசுத்தம் பண்ணுதல்" என்றால் "தனியே பிரித்து வைத்தல்" என்று அர்த்தப் படுகிறது. அவர்கள் தங்களைச் சடங்கு முறைமையின்படி தூய்மைப்படுத்திக் கொண்டு அந்த பலிக்கென்று தங்கள் இருதயத்தையும் வாழ்வையும் தயார் செய்து கொள்ள வேண்டியிருந்தது.* [13]*ஈசாயின் குடும்பத்தார் பலிசெலுத்துதலுக்கு வரும் வரையில் அவர்களை சாமுவேல் பார்த்திராததால், ஈசாயி மற்றும் அவரது மகன்களுக்கான சாமுவேலின் "பரிசுத்தப்படுத்துதல்" மற்றும் அழைப்பு ஆகியவை முற்றிலும் மூப்பர்கள் மூலமாகவே நடைபெற்றிருந்திருக்க வேண்டும்.* [14]*அடுத்த இரண்டு மூத்த மகன்கள் அபினதாப் மற்றும் சம்மா என்பவர்கள் ஆவார்கள் என்று கூறுகிற 1 சாமுவேல் 17:13ஐயும் கவனிக்கவும்.* [15]*1 சாமுவேல் 16:7ஐக் கவனிக்கவும்: "இவனுடைய சரீர வளர்ச்சி" மற்றும் "வெளித்தோற்றம்," ["கண்கள்/முகம்" என்ற நேரடி அர்த்தம் கொண்டது].* [16]*1 இராஜா 8:39; 1 நாளா. 28:9; லூக். 16:15 ஆகியவற்றைக் கவனிக்கவும்.* [17]Rick Atchley, "Here Comes the Judge" (N.p., n.d.), sound cassette. [18]*சிலர் மத்தேயு 7:1ஐக் குறிப்பிட்டு, கிறிஸ்தவர்கள் ஒருக்காலும் நியாயம் தீர்க்கக் கூடாது என்று முடிவு செய்கின்றார்கள். மத்தேயு 7:1-5 வசனமானது மனித ரீதியான எல்லா நியாயத்தீர்ப்புகளுக்கும் ஒரு தடைச் சட்டமாயிருப்பதில்லை (அடுத்த வசனமாகிய 6ஐக் கவனியுங்கள், இது ஒரு நியாயந்தீர்த்தலை மறைமுகமாய் குறிப்பிடுகின்றது). ஆயினும் மத்தேயு 7:1 முதல் உள்ள வசனங்கள் சாமுவேல் மேற்கொண்டது போன்ற வெடுக்கென்ற நியாயத்தீர்ப்புகளுக்கு எதிரானவை யாகவே உள்ளன. இது மிகவும் கொடுமையான நியாயத்தீர்ப்புகளுக்கு எதிரான தாவும் உள்ளது.* [19]*இது தாவீது ஒன்றுக்கும் உதவாதவர் என்று கருதப்பட்டதால் ஏற்பட்ட தென்று சிலர் நினைக்கின்றார்கள். ஈசாயிக்கு ஏற்கனவே ஏழு மகன்களும் (யூதர்கள் ஏழு என்ற எண்ணை பரிபூரணமான எண்ணாகக் கருதினார்கள்) இரண்டு மகள்களும் இருந்தார்கள், இது போதுமான நல்ல அளவாகவே இருந்தது. ஒருவேளை, தாவீது (அவர்களுக்கு) "எதிர்பாராத ஒரு ஆசீர்வாதமாய்" இருந்திருக்கலாம்.* [20]*தாவீதின் முன்னோர்களில் மோவாபியப் பெண்ணான ரூத்தும் உள்ளடங் கியிருந்தாள்.*

[21]*உணவு மேஜையைச் சுற்றி அமர்ந்து கொண்டு அந்த ஏழு மூத்த மகன்களும் தங்கள் வீரதீரச் செயல்களைப் பேசிக் கொண்டிருந்த குடும்பக் காட்சியையும், அப்பொழுது தாவீது வந்து, "இன்று நான் ஒரு கவிதை எழுதினேன்" என்று கூறும் காட்சியையும் நீங்கள் சித்தரித்துக் காண்பிக்க விரும்பலாம்.* [22]*சங்கீதம் 27:10, "என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும் ..." என்று மொழிபெயர்க்கக் கூடியதாயிருக்கலாம், ஆனால் எனது கேள்வி ஒரே மாதிரியாகவே நிலைத்துள்ளது. தந்தை, தாய் ஆகிய இரண்டு பெற்றோர்களாலும் அன்பு பொழியப்பட்ட ஒரு குடும்பத்தில் வளர்க்கப்பட்ட என்னால், அவர்கள் என்னைக் கைவிடுதல் பற்றிப் பேசுதல் என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலவில்லை.* [23]*தாவீது பிறப்பின் போது சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பு உள்ளது.* [24]*சிலவேளைகளில் ஆடுகளை தனியே விட்டு விட்டுச் செல்லும் பழக்கமும் இருந்துள்ளது (இ.வ. லூக். 2:16; 15:4).* [25]*முதல் நூற்றாண்டு வரலாற்றாளராயிருந்த*

யோசிப்பஸ் பின்வருமாறு எழுதினார்: "... அவர் [சாமுவேல்] தாவீதின் முன்னிலையில் தைலத்தை எடுத்து அவர் மீது அபிஷேகம்பண்ணி, அவரது காதில் இரகசியம் பேசி, அவரை தேவன் தங்கள் ராஜாவாயிருக்கும்படிக்குத் தேர்ந்தெடுத்துள்ளதாக அவரைப் பழக்கப் படுத்தினார்; மற்றும் அவர் நீதியுள்ளவராயிருக்க வேண்டுமென்று புத்தி கூறினார்" Josephus, *Antiquities,* 6.8.1 (61-65). [26]ஒருவேளை, ஆவி தாவீதின் மீது வந்த பொழுது, தேவனுடைய திட்டம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம். [27]இதே வகையான எடுத்துரைத்தலானது, சிம்சோன் உட்பட பல நியாயாதி பதிகள் (நியா. 14:6, 19; 15:14), சவுல் (1 சாமு. 10:6, 10; 11:6) மற்றும் பிறரைக் குறித்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. "அந்நாள் முதற்கொண்டு" என்ற சொற்றொட ரானது, கர்த்தருடைய ஆவி பிறரின் மீது இறங்கியதைக் காட்டிலும் அதிகம் நிலையான வகையில் தாவீதின் மீது இறங்கியிருந்ததை சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம். [28]அவர்களின் இருதயங்களில் வெறுப்புணர்வு பற்றியெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை (1 சாமு. 17:28). [29]இந்த விவரித்தலானது பல்வேறு ஆதாரமூலங்களில் இருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது. [30]சாமுவேலினால் சவுல் ராஜாவாக அபிஷேகம் செய்விக்கப்பட்ட பின்பு (1 சாமு. 10:1), கர்த்தருடைய ஆவி அவர் (சவுல்) மீது வந்திறங்கிற்று (1 சாமு. 10:10 முதல்).

[31]இதே எபிரெய வார்த்தையானது யோவேல் 2:13ல் பயன்படுத்தப்படுகிறது, அது பொல்லாதவர்களைத் தேவன் தண்டிப்பதைக் குறிக்கின்றது. இவ்வார்த்தை யோனா 3:10ல் கூடப் பயன்படுத்தப் படுகின்றது, இவ்விடத்தில் இது "தீங்கு" என்று NASB யில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [32]எபிரெயர் 12:5-11ஐக் காணவும். சவுல் ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணிக்கப் பட்டிருக்கலாம், ஆனால் இரட்சிக்கப்பட வேண்டிய ஆத்துமா ஒன்று அவரிடத்தில் இன்னமும் இருந்தது. [33]William Congreve, as quoted in *Bartlett's Familiar Quotations,* 14th ed. (Boston: Little, Brown, and Co., 1968), 391. [34]அதிகாரம் 16ன் முடிவு பற்றிய கால வரிசையின் பிரச்சனைகள் சில உள்ளன. அநேகமாக நாம், அதிகாரம் 16ன் முடிவை சவுல் மற்றும் தாவீது ஆகியோருக்கிடையிலான தொடக்க கால உறவின் அறிமுகம் என்று நினைக்க வேண்டும் - இதில் அடுத்த சில அதிகாரங்களுக்கான விவரங்கள் நிறைந்துள்ளன. விஷயம் இவ்வாறு இருக்குமென்றால், இந்தக் காட்சியானது அதிகாரம் 17ல் கோலியாத்துடனான யுத்தத்திற்குப் பின்பு நடைபெறுகிறது - மற்றும் "பராக்கிரமசாலி", "யுத்த வீரன்" என்ற சொற்றொடர்கள், போர்வீரன் என்ற வகையில் வளர்ந்து கொண்டிருந்த தாவீதின் புகழைக் குறிப்பிட்டன. ஆயினும், இது தாவீது கோலியாத்தை தோற்கடிக்கும் முன்னர் நடைபெற்றிருந்தால், "பராக்கிரமசாலி", "யுத்தவீரன்" என்பவை, வனவிலங்குகள் மற்றும் கள்வர்கள் ஆகியோரிடமிருந்து தமது ஆடுகளைக் காத்துக் கொள்வதில் தாவீது கொண்டிருந்த வீரம் மக்களால் அறியப்பட்டிருந்தது என்று அர்த்தமாகும். [35]ஒன்று சாமுவேல் 16:21, 22 வசனப்பகுதி, சவுல் என்றென்றைக்கும் தமது ஆயுத தாரியாக இருக்கும்படி தாவீதைக் கொண்டு வந்தது பற்றிக் கூறுகின்றது. இது 1 சாமுவேல் 18:2ஐ எதிர்பார்த்திருப்பதாகக் காணப்படுகிறது. [36]தாவீது, 2 சாமுவேல் 1ல் சவுலின் மீதும் யோனத்தான் மீதும் புலம்பல் பாடலைப் பாடியிருத்தல் என்பது, தேவனைக் குறிப்பிடாதபடியினால், ஒரு "உலகப்பிரகாரமான" பாடலாகவே உள்ளது என்று கூறுகின்றார்கள். இருப்பினும், எஸ்தரின் சரித்திரத்தில் தேவனைப் பற்றி எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை, ஆனாலும் அது "உலகப்பிரகாரமான" வகையில் இருந்து வெகுதூரத்தில் உள்ள புத்தகமாக உள்ளது.

இராட்சதர்களுடன் போரிடுதல் பற்றி நினைவில் வைக்க வேண்டிய ஏழு சத்தியங்கள்

(1 சாமுவேல் 17)

தாவீது மற்றும் இராட்சதன் பற்றிய வரலாற்றை நீங்கள் முதன் முதலாகக் கேள்விப்பட்ட நிகழ்ச்சியும் அது உங்களுக்கு எவ்வளவு உணர்வெழுச்சிமிக்கதாக இருந்தது என்பதும் உங்களுக்கு நினைவு வருகிறதா? ஒருவேளை நீங்கள் இந்த வரலாற்றைப் பலமுறை கேள்விப் பட்டிருக்கலாம், இது தனது வலிவை இழந்த நிலையில் இருக்கலாம். இந்தப் பாடத்தை மதிப்பதற்கு, நீங்கள் இப்பொழுதுதான் முதன் முறையாக இந்த வரலாற்றைக் கேட்பது போல எண்ணி நடவுங்கள். அவ்வாறு உங்களால் செய்ய முடியுமா? மிக நல்லது. நாம் வேதாகமத்தில் உள்ள எழுச்சியூட்டும் சாதனைகளில் ஒன்றைப் படிப்போம்.[1]

1 சாமுவேல் 17ம் அதிகாரத்தின் துவக்கத்தில், இஸ்ரவேலர்கள் யுத்தத்தில் இருந்தார்கள்: "பெலிஸ்தர் யுத்தம் பண்ணுகிறதற்குத் தங்கள் சேனைகளைச் சேர்த்து" (வ. 1). பெலிஸ்தர்கள், கடற்கரையோரமாக நகரப் பகுதிகளை அமைப்பதற்காக மத்திய தரைக்கடல் பகுதியின் தீவுகளில் இருந்து பலஸ்தீனத்திற்கு வந்தார்கள். அவர்கள் இஸ்ரவேலர்களின் பக்கத்தில் நிலையான முள்ளாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இஸ்ரவேலர்களுடன் யுத்தம் செய்ய வந்திருந்தார்கள்.[2]

வசனங்கள் 1 முதல் 3 வரை உள்ள பகுதி, காட்சியை அமைக்கின்றது: ராஜாவான சவுலும் அவரது சேனையும் மலையின் மீது அணிவகுத்து நிற்கையில், பெலிஸ்தர்கள் எதிர்ப்புறத்தில் இருந்த வேறொரு மலையின் மீது கூடியிருந்தார்கள். மத்தியில் ஏலா பள்ளத்தாக்கு இருந்தது.[3] *ஒவ்வொரு காலைப் பொழுதிலும், இந்தப் படைகள் ஒவ்வொன்றும் தத்தமது படையணிகளை அணிந்து கொண்டு பெரியதாக யுத்தக் கூக்குரலிடுவது வழக்கமாயிருந்தது (17:20, 21). அந்த இரு படைகளும் இழிவான சொற்களை ஒருவர் மீதொருவர் சுழற்றி வீசிக்கொண்டிருந்தார்கள், ஆனால் எவரும் முதலடி எடுத்து வைக்கவில்லை. கடைசியாக, பெலிஸ்தரின் மத்தியில் இருந்து ஒரு இராட்சதன் வந்தான், அவன் பார்ப்பதற்கு*

மகாபெரியவனாய் இருந்தான்: "அப்பொழுது காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள ஒரு வீரன் பெலிஸ்தரின் பாளையத்திலிருந்து புறப்பட்டு வந்து நடுவே நிற்பான்; அவன் உயரம் ஆறு முழமும் ஒரு ஜாணுமாம்" (17:4). அது ஏறக்குறைய ஒன்பதரை அடி உயரமாயிருந்தது![4] பல மனிதர்களின் உயரத்திற்குத் தகுந்த எடை கோலியாத்திற்கும் இருந்ததாக அனுமானம் செய்தால், அவன் சுமார் 600 முதல் 700 வரையான பவுண்டுகள் எடை கொண்டவனாக இருந்திருப்பான்![5] இது சுமார் 600+ பவுண்டுகள் சதை என்பதாக இருந்தது, இது கொழுப்பு அல்ல. அவன் தன் சிறுவயது முதலாகவே யுத்த வீரனாக இருந்தான் (17:33). அவன் யுத்தத்தில் தேறின நிபுணனாயிருந்தான்.

அவன் ஒரு தலைக்கவசம்[6] உட்பட முழு ஆயுதம் தரித்திருந்தான். அவனது "போர்க்கவசம்"[7] 125 முதல் 150 வரையான பவுண்டுகள் எடையுள்ளதாயிருந்தது![8] அவன் தனது கையில் ஒரு ஈட்டியை ஏந்தியிருந்தான், அத்துடன் கூடுதலாக ஒரு எரி ஈட்டியானது (KJVயில் இது "இலக்கு" என்றுள்ளது) அவனது தோள்களில் தொங்கியது. அந்த ஈட்டியின் தடியானது நெய்யும் தரியின் கட்டையைப் போலவும் மற்றும் அலகு மாத்திரம் 15 முதல் 20 பவுண்டு எடையுள்ளதாயிருந்தது![9] (அவன் அதை யார் மீதும் எறியத் தேவையில்லை; எதிராளியின் தலையில் கொண்டு போய்ப் போட்டாலே போதும்!) அவனது கேடகம் மிகப் பெரியதாயிருந்தது, அதை எடுத்துக் கொண்டு அவனுக்கு முன்னாக நடந்து செல்ல இன்னொரு படைவீரன் தேவையாயிருந்தது.

ஏலாவின் பள்ளதாக்கில் காலூன்றி நின்ற கோலியாத், "உங்கள் பலசாலியான வீரனைக் கீழே அனுப்புங்கள், நாம் இதைச் சண்டையிட்டு முடிவு செய்வோம்" என்று கூக்குரலிட்டான். அவன் பின்வருமாறு அறைகூவல் விடுத்தான்: "அவன் என்னோடே யுத்தம் பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம்; நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால், நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து, எங்களைச் சேவிக்க வேண்டும்" (17:9). இது "தனிநபர் சண்டைக்கான" அறைகூவல் என்று அழைக்கப்பட்டது, இது இராணுவ வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்குச் சட்டபூர்வமான வழி என்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது ஒரு மோசமான கருத்தல்ல. அடுத்த முறை இரு நாடுகளுக்கு இடையில் போர் ஒன்று தவிர்க்க முடியாதது என்ற நிலை ஏற்படும் பொழுது, அவ்விரு நாடுகளின் தலைவர்களும் சண்டையிட்டு அதைத் தீர்த்துக் கொண்டு நம்மை சும்மா விட்டு விட்டால் நல்லது தானே!

வசனம் 11, "சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயப்பட்டார்கள்" என்று கூறுகின்றது. வசனம் 16, "அந்தப் பெலிஸ்தன் காலையிலும் மாலையிலும் நாற்பது நாள் வந்துவந்து நிற்பான்" என்று குறிப்பிடுகின்றது. கோலியாத், ஏலாவின் பள்ளத்தாக்கில் ஒரு நாளுக்கு இருமுறையாக நாற்பது நாட்கள் நடந்து வந்து, தனது அறைகூவலை உரைத்துக் கொண்டிருந்தான்; அது மொத்தம் எண்பது முறையாகியிருந்தது. அவன் தனது அறைகூவலை

எண்பத்தோராவது முறையாகக் கூறவிருந்தான்.

ஒன்பதரை அடி உயரம் கொண்ட ஒரு இராட்சதனை எதிர்கொண்டு நிற்பது என்பது பயமிக்கதாக இருந்திருக்கும் ... ஆனால் நாம் யாவரும் நமது வாழ்வில் இராட்சதர்களைக் கொண்டுள்ளோம் - இவை நம் வாழ்வில் பெரிதும் ஆபத்தை விளைவிக்கும் விஷயங்களாக உள்ளன, இவற்றை நாம் எதிர்கொள்ளக் கூடியதாக உள்ளது, நாம் தொடர்ந்து வாழ வேண்டும் என்றால் இந்தப் பிரச்சனைகளை வெற்றி கொள்ள வேண்டியுள்ளது. இது ஒரு சட்டரீதியான யுத்தமாயிருக்கலாம், ஒரு வேலையாட்களுடனான போராட்டமாயிருக்கலாம், ஒரு கெட்ட பழக்கமாயிருக்கலாம், அதிகம் சக்தி வாய்ந்த ஒரு சோதனையாக இருக்கலாம். வலுக்கட்டாயமான உறவுமுறையில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமாயிருக்கலாம். இது மக்களை அல்லது மன இறுக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்; இது கவலைகள் அல்லது பயங்களை விளைவிப்பதில் முடிகின்றன. உங்கள் வாழ்வில் இதுவரை நீங்கள் இவ்விதமான இராட்சதர்களை எதிர் கொண்டிருக்கவில்லையென்றால், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் எதிர்கொள்வீர்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன்!

எனக்கு இராட்சதனாக இருப்பது உங்களுக்கு இராட்சதனாகக் காணப்படாதிருக்கலாம், ஆனால் அது இன்னமும் ஒரு இராட்சதனாகவே உள்ளது. உங்களுக்கு இராட்சதனாக உள்ளது எனக்கு இராட்சதனாகக் காணப்படாமல் இருக்கலாம், ஆனால் இன்னமும் அது உண்மையாகவே உள்ளது. நாம் ஒவ்வொருவரும் அவரவரின் அல்லது அவளவளின் சொந்த, விசேஷித்த சோதனைகளுடன் கூடப் போராடி வருகின்றோம் - இவை நாம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் இராட்சதர்களாக உள்ளன, இவை உண்மையானவைகளாகவே உள்ளன! மற்ற எவருடைய இராட்சதர் களையும் ஒருக்காலும் இலேசாக நினைத்து விடாதீர்கள்.

நாம் யாவரும் நமது இராட்சதர்களை, நமது அறிவெல்லையைப் பெரிதும் அச்சுறுத்துகின்ற அறைகூவல்களை, நமது முழங்கால்களைப் பலவீனமடையச் செய்கின்ற பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்றோம். கேள்வி என்னவென்றால், வாழ்வின் இந்த கோலியாத்துக்களை நாம் எவ்வாறு தோல்வியடையச் செய்ய இயலும்? 1 சாமுவேல் 17ல் நாம், இராட்சதர்களுடன் போராடுதல் பற்றி நினைவில் வைக்க வேண்டிய ஏழு உண்மைகளைக் கண்டறிகின்றோம், இவைகள் நாம் வெற்றியுள்ளவர் களாய் ஆவதற்கு நமக்கு உதவ முடியும்.

1. இராட்சதர்களை நீங்கள் எதிர்பாராமல் இருக்கும் பொழுது அவர்கள் தோன்றுகின்றார்கள் (17:12-15, 17-23)

தாவீது பெத்லெகேமில் தம் இல்லத்தில் இருக்கையில், அவரது மூத்த சகோதரர்கள் மூவரும் இஸ்ரவேலுடைய இராணுவத்தில் இருந்தார்கள்.

அவர்கள் பெலிஸ்தருக்கெதிராக யுத்தம் செய்வதற்காக சவுலுடன் சென்றிருந்தார்கள். மூத்த மகன்கள் யுத்தத்திற்குச் செல்லுவதும், இளையவர்கள் இல்லத்தில் இருந்து வேலை பார்ப்பதும் வழக்கமாயிருந்தது. தாவீது, குடும்பத்தின் குழந்தையாக - பத்துப் பேரில் எல்லாருக்கும் இளையவராக இருந்தார். அவர் அநேகமாக இன்னும் தம் இளம் பிராயத்தில் இருந்திருப்பார், அவருக்கு இருபது வயது கூட ஆகியிருக்காது.[10] அவரது நேரத்தில் பெரும்பகுதி ஆடுமேய்க்கும் நிலத்திலேயே செலவிடப்பட்டது. அவர் அவ்வப்போது ராஜாவுக்குச் சுரமண்டலம் வாசிப்பதற்காகச் சவுலின் அரண்மனைக்குச் சென்றார் (17:15; இ.வ. 1 சாமு. 16:23), ஆனால் ஆடுகளை மேய்த்தல் என்பதே அவரது அன்றாட வாழ்வாயிருந்தது.

ஒரு நாள், ஈசாயி தாவீதிடம், “இப்பொழுது உன் சகோதரர்கள் சென்று நாற்பது நாட்கள் ஆகிவிட்டது, அவர்களுக்கு என்னவாயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. நீ சென்று அவர்களை விசாரித்து வரவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இந்த உணவுப்பொருட்களை எடுத்துக் கொள்; அவர்களைப் பற்றிய செய்தியோடு திரும்பி வா” என்று கூறினார். பெத்லெகேம் பத்து முதல் பதினைந்து மைல்கள் தூரத்தில்தான் இருந்தது, ஆனால் ஒரு மாதத்திற்கும் மேலாக, அந்த மூன்று சகோதரர்கள் பற்றி குடும்பத்திற்கு எந்த ஒரு தகவலும் இல்லை. “அவர்களைப் பற்றிய செய்தி” (NKJV) என்பது “அவர்களிடத்தில் அடையாளம்” (17:18) என்ற தொடக்க அர்த்தம் கொண்டதாக உள்ளது (KJVயில் காணவும்; தமிழிலும் இவ்வாறு தான் உள்ளது). இது தொட்டறியக்கூடிய அல்லது தெளிவாய்த் தெரியக்கூடிய சிலவற்றைக் குறிப்பிடலாம். அவர்கள் நன்றாயிருக்கின்றார்கள் என்பதற்கான ஆதாரத்தைத் தாவீது எடுத்துக் கொண்டு திரும்ப வேண்டியதாயிருந்தது. “தாவீது அதிகாலையில் எழுந்து, ஆடுகளைக் காவலாளி வசமாய் விட்டு, ஈசாய் தனக்குக் கற்பித்தபடியே எடுத்துக் கொண்டுபோய், ...” (17:20).

தாவீது ஏலா பள்ளத்தாக்கை நோக்கி முன்சென்ற பொழுது, இராட்சதனை எதிர்த்துப் போராடுதல் என்பது அவர்தம் சிந்தைக்கு மிகவும் தூரமான விஷயமாயிருந்தது என்று நான் உறுதியாய்க் கூறமுடியும். மற்ற எந்த நாளையும் போலவே அன்றும் பொழுது விடிந்திருந்தது. தாவீது உணர்வெழுச்சியுடன் இருந்தார் என்பதில் ஐயமில்லை - அவர் தம் சகோதரர்களைக் காணச் சென்று கொண்டிருந்தார் மற்றும் அவர் யுத்தத்தைக் காண்பார் - ஆனால் அங்கு (அவருக்கு) முன்பாக என்ன இருந்தது என்பது பற்றிய முன் சிந்தனையோ, இராட்சதன் ஒருவனைச் சந்திக்கும் எண்ணமோ அவரிடம் இல்லை.

உங்கள் வாழ்வில் இராட்சதர்கள் தோன்றும் நாள், மற்ற எந்த நாளையும் போலவே தொடங்குகிறது. நீங்கள் விழித்தெழுகின்றீர்கள். உங்கள் வழக்கமான பணிகளைச் செய்கின்றீர்கள். அது ஒரு நல்ல நாளாயிருக்கலாம் அல்லது அது அவ்வளவு நல்ல நாளாயிராமற் போகலாம், ஆனால் அது உங்கள் வாழ்வின் ஆயிரக்கணக்கான நாட்களில் ஒன்றைப் போன்றதாகவே உள்ளது. பிறகு தபாலில் ஒரு கடிதம் வருகிறது ... அல்லது ஒரு தந்தி வருகிறது ... அல்லது தொலைபேசி மணியடிக்கிறது ... அல்லது

யாரேனும் ஒருவர் வந்து நிற்கிறார். ஒருவேளை நீங்கள் உங்களுக்கு வேலையளிப்பவரின் அலுவலகத்திற்குள் வரும்படி அழைக்கப்பட்டிருக் கலாம் ... அல்லது உங்களை எப்பொழுதும் தொந்தரவு செய்கிற ஆனால் அவ்வளவு முக்கியமற்ற ஒரு உடல்நலப் பிரச்சனை குறித்து சிகிச்சைக்காக மருத்துவரைக் காண நினைத்து அங்கு சென்றிருக்கலாம் ... அல்லது உங்கள் துணைவர்/துணைவி, ''நாம் சிலவற்றைப் பேச வேண்டும்'' என்று கூறுகின்றார். திடீரென்று இராட்சதன் அச்சுறுத்துகின்றான்.

தாவீது ஏலா பள்ளத்தாக்கிற்குச் சென்று சேர்ந்த பொழுது, அவர் உணவுப் பொருட்களை, இரஸ்துக்களைக் காக்கிறவரிடம் விட்டுவிட்டு, தமது சகோதர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று காணச் சென்றார். அவர்களிடத்தில் அவர் பேசிக் கொண்டிருக்கையில், "இதோ, காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள அந்தப் பெலிஸ்த வீரன் பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து எழும்பி வந்து நின்று, முன் சொன்ன வார்த்தைகளையே சொன்னான்" (17:23). இந்த வார்த்தைகள் வசனம் 10ல் காணப்படுகின்றன: "நான் இன்றைய தினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்; நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ண ஒருவனை விடுங்கள்." கோலியாத்தின் குரலில் இருந்த பழிச் சொல்லைக் கவனியுங்கள்: "நான் இந்த இடத்தில் வந்து நின்று இன்றுடன் நாற்பது நாட்கள் ஆகிவிட்டது! இது நான் அறைகூவல் விடுகிற எண்பத்தோராவது தடவையாக உள்ளது! இஸ்ரவேல் முழுவதிலும் என்னை எதிர்கொள்ளும் தைரியம் எவனுக்கும் இல்லையா?"

வசனம் 23, "அதை [கோலியாத்தின் வார்த்தைகளை] த் தாவீது கேட்டான்" என்று குறிப்பிடுகிறது. அவர் தமது வாழ்வில் ஒரு இராட்சதன் வந்திருந்ததைப் புறக்கணிக்க இயலாதவராயிருந்தார். இதைக் குறித்துக் கொள்ளுங்கள்: விரைவாகவோ அல்லது தாமதமாகவோ நீங்கள் உங்கள் இராட்சதனைச் சந்திப்பீர்கள்.

2. நீங்கள் இராட்சதனை பயத்துடனோ அல்லது விசுவாசத்துடனோ எதிர்கொள்ள முடியும் (17:24-27)

நமது வேதபாடப் பகுதி, படைவீரர்களின் பயத்தையும் தாவீதின் விசுவாசத்தையும் எதிர்மறையாக ஒப்பிடுகின்றது. வசனம் 11, "சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயமடைந்தார்கள்" என்று குறிப்பிடுகிறது. வசனம் 24, "இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப் போவார்கள்" என்று கூறுகிறது.

தாவீது தம் சகோதரர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், அந்த இராட்சதன் வெளியே வந்து, தனது அறைகூவலைச் சுழற்றி எறிந்தான். தாவீதினால் தமது காதுகளை நம்ப இயலவில்லை! ''நீங்கள் அந்தப் பெலிஸ்தன் சொன்னதைக் கேட்டீர்களா?'' எவரொருவரும் பதில்

அளிக்கவில்லை. தாவீது சுற்றிலும் பார்த்தார் - அவர் மாத்திரம் தனியே இருந்தார். மற்ற ஒவ்வொருவரும் அவருக்குப் பின்னால் ஐம்பதடி தள்ளி, பாதுகாப்பான இடத்தில் நின்றார்கள்! “இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள்.”

படையணியினர் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த இடத்திற்குத் தாவீது சென்ற பொழுது, படைவீரர்கள் அந்தச் சூழ்நிலையைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இராட்சதனை எதிர்த்துப் போரிடுவதற்கு எவரொருவரும் முன்வராதபடியினால் சவுல், “பானையை இனிப்பாக்கியிருந்தார்.” அவர், “இவனைக் கொல்லுகிறவன் எவனோ, அவனை நான் மிகவும் செல்வந்தனாக்குவேன். அவனுக்கு என் மகளை மனைவியாகத் தருவேன்[11] மற்றும் அவனது தகப்பன் வீட்டிற்குச் சர்வமானியம் கொடுப்பேன் - அதாவது அவர்கள் வரியிலிருந்தும் பொது சேவையிலிருந்தும் விலக்குப் பெறுவார்கள்” என்று கூறியிருந்தார்.

பின்வரும் கேள்வியைக் கேட்க நாம் சற்று நின்று நிதானிப்போம்: இஸ்ரவேலின் பக்கம் அணிவகுத்து நின்றிருந்த படைவீரர்கள் எல்லாரிலும், இராட்சதனை எதிர்த்துப் போரிடத் தர்க்கரீதியாகத் தெரிவு செய்யப் பட்டவர் யார்? அங்கிருந்த எல்லாருக்கும் தலைவராகவும் மற்ற ஒவ்வொருவரையும் விட உயரமானவராகவும் - ஏறக்குறைய அந்த இராட்சதனுக்குச் சமமான உயரத்துடனும் இருந்தது யார்? சவுலே தாம் (1 சாமு. 10:23) - ஆனால் சவுல் பயப்பட்டார் (1 சாமு. 17:11), எனவே அவர் தமது மனிதர்களின் முன்பாக இந்த பரிசுகளை ஊசலாட விட்டார்.

கவர்ச்சிகரமான இந்த வெகுமதிகள் தாவீதின் தலைக்கு நேராக ஒன்று குவிக்கப்பட்டன என்று நான் நம்புகின்றேன். தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டபடியினால் தாவீது கலக்கம் அடைந்தார். தாவீது அந்த வெகுமதிகளில் ஆர்வம் காண்பிக்கவில்லை; மாறாக, அவர் தமது தேவனைக் கனப் படுத்துதல் பற்றி அக்கறை கொண்டிருந்தார். வசனம் 26ன் இறுதியில் தாவீதின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: “... ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்?”

தாவீதின் இருதயம் நம் யாவருக்கும் தேவைப்படுகின்றது! ஒவ்வொரு நாளும் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதை நாம் கேட்கின்றோம் - அது நமக்குப் பழக்கமாகி விட்டது. நாம் (இருதயம்) கடினப்பட்டவர்களாகி, அதைப் பற்றி ஒன்றும் நினைக்காமல் சென்று விடுகின்றோம். தாவீது கோபமுற்றார்! அவர்கள் ஜீவனுள்ள தேவனை நிந்தித்துக் கொண்டிருந் தார்கள். “அதைக் குறித்து யாரேனும் ஒருவர் ஏதேனும் ஒன்றைச் செய்யாமல் இருக்கிறது ஏன்?!”

நமது வாழ்வில் இராட்சதர்கள் வருகையில், நாம் பயப்படக் கூடும், அல்லது அவர்களை நாம் தேவன் மீதான விசுவாசத்துடன் சந்திக்கக் கூடும். நாம் அவர்களால் மேற்கொள்ளப்படக் கூடும், அல்லது அவர்களை நாம், தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் என்ற வகையில் காண முடியும்.

3. உங்களை உற்சாகமிழக்கச் செய்வதற்கு யாரேனும் ஒருவர் எப்பொழுதும் தயாராக இருப்பார் (17:28-33)

தனிநபரின் வாழ்வில் பிரச்சனைகள் இருக்கும் பொழுது, சுற்றிலும் இருப்பவர்கள் ஆதரவாக, உதவி செய்பவர்களாக, மற்றும் பலப்படுத்து பவர்களாக இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கலாம் - ஆனால் விஷயம் அவ்வாறு இருப்பதில்லை. அதற்குப் பதிலாக, "நீங்கள் இதைச் செய்ய இயலாது. இதற்குத் தேவையானது உங்களிடம் இல்லை. இதை நீங்கள் செய்யாமல் விடுவது நன்று" என்று கூறுவதற்கு எப்பொழுதுமே யாரேனும் ஒருவர் தயாராக இருப்பார்.

இராட்சதனுக்கு எதிராகப் போரிடுதல் என்ற விஷயத்தில், தாவீதின் தந்தை ஏற்கனவே, "நீ மிகவும் இளையவன்" என்று கூறியிருந்தார். ஈசாய் தமது மூத்த மகன்களை இராணுவத்தில் சேர அனுப்பினார், ஆனால் அவர் தாவீதை அனுப்பவில்லை.

இப்பொழுது தாவீதின் சகோதரர் ஒருவர், "நீ மிகவும் பக்குவமற்றவன்" என்று கூறினார்.

> *அந்த மனுஷரோடே அவன் பேசிக்கொண்டிருக்கிறதை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: "நீ இங்கே வந்தது என்ன?[12] வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன்" என்றான் (17:28).*

எலியாப் யார் என்பதை சிந்தையில் கொள்ளுங்கள். சாமுவேல் அடுத்த ராஜாவை அபிஷேகம் செய்ய சாமுவேல் வந்திருந்த போது வீட்டிற்குள் கடந்து வந்த முதலாம் நபராக இவர் இருந்தார். சாமுவேல், "இவன் தானாக்கும்!" என்று நினைத்திருந்தார், ஆனால் தேவன் சாமுவேலின் தோள்களின் மீது தமது கரத்தை வைத்து, "இவனல்ல, மனுஷன் பார்க்கிற படி நான் பாரேன்; நான் இருதயத்தைப் பார்க்கிறேன்" (1 சாமு. 16:6, 7). என்று கூறினார். பிறகு எலியாப் அங்கேயே நின்றுகொண்டு, தமது இளைய சகோதரனான தாவீதின்மீது கொம்பிலிருந்து தைலம் வார்க்கப்பட்டதைக் கவனிக்க வேண்டியதாயிற்று. பொறாமை இந்த மனிதரைத் தின்று கொண்டிருந்தது. இவர் தாவீதின் நோக்கங்களை, தாவீதின் வேலையை, மற்றும் தாவீதின் இருதயத்தை அவமதித்தார்.

தாவீது தம் சகோதரருடன் சண்டையிடுதல் என்பதே அவரது இயல்பான பதில்செயலாக இருந்திருக்கும். உங்களுக்குச் சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றார்களா? நீங்கள் அவர்களுடன் எப்பொழுதாவது பிணக்குக் கொண்டிருக்கின்றீர்களா? தாவீது நம்மைப் போலானவராக இருந்திருந்தால், அவர் அநேகமாக எலியாபுடன் கைச் சண்டையிட்டிருப்பார். இதுவே நாம் இராட்சதர்களை எதிர்கொள்ளும்போது பெரும்பாலும் செயல்படுகின்ற வழிமுறையாக உள்ளது. இராட்சதர்

களுடன் போரிடுவதற்கு நம் சக்தியைச் செலவிடுவதற்குப் பதிலாக, நாம் மக்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் மகிழ்வு இல்லாதவர்களாக, ஒருமைப் பண்பு குறைந்தவர்களாக இருக்கின்றோம், எனவே நமது இராட்சதர்களை தோல்வி அடையச் செய்வதற்கு செலவிட்டிருக்கப்பட வேண்டிய சக்தியை நம்மைச் சுற்றியிருப்பவர்களுடன் (போரிடப்) பயன்படுத்துகின்றோம்.

ஆயினும் தாவீது, தமது சகோதரருடன் யுத்தத்தை நீட்டிக்கச் செய்வதில் இழுக்கப்பட்டுவிட மறுத்து விட்டார். அவர், “நீங்கள் ஏன் அவ்வாறு பேசுகின்றீர்கள்? நான் தவறு எதையும் செய்யவில்லையே” (1 சாமு. 17:29) என்று கூறினார். பின்பு அவர் இன்னொருவரின் பக்கமாய்த் திரும்பி பேசத் தொடங்கினார். கீழே உள்ள பள்ளத்தாக்கில் இராட்சதன் இருக்கும் வேளையில் அவர் முகாமினுள் சண்டையிடப் போவதில்லை.[13]

தாவீதின் விசாரிப்புகள் சவுலின் காதிற்கு வந்தன, சவுல் தாவீதுக்கு ஆளனுப்பினார். தாவீது அரசரிடத்தில், “இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை; உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம் பண்ணுவேன்” என்று கூறினார் (17:32).

இப்போது சவுல் தாவீதை உற்சாகமிழக்கச் செய்ய முயற்சி செய்தார். அவர், “நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்த வீரன்” என்று கூறினார் (17:33).[14] “யுத்தத்தைப் பற்றி உனக்கு என்னதான் தெரிந்திருக்க முடியும்? நீ ஆடுகளை கவனித்துக் கொண்டிருக்கிற இளைஞனாயிருக்கிறாய். இதற்கு எதிரிடையாக, இந்த இராட்சதனோ அவன் சிறு பையனாயிருந்ததிலிருந்து இந்த வேளைக்காகத் தன்னைப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறான். இல்லை, நீ கொஞ்சமும் அனுபவமில்லாதவனாயிருக்கிறாய்.”

இந்த இளைஞன் கோலியாத்துடன் போரிடுவதில் இவரது ஊக்கத்தை இழக்கச் செய்ய ஒவ்வொருவரும் முயற்சி செய்தார்கள். சற்றுப் பிறகு, அந்த இராட்சதனே, “நீ மிகவும் சிறுவன்! நீ மிகவும் பலவீனம் உள்ளவன்! நீ ஆயுதம் எதுவும் இல்லாதவன்!” என்று கூறினான் (17:42, 43ஐக் காணவும்).

உங்கள் இராட்சதனை நீங்கள் எதிர்கொள்ளும்போது, ஊக்கமிழக்கச் செய்யும் வார்த்தைகளை நீங்கள் கேட்பீர்கள். அவை (தாவீது தம் தந்தையாலும் தம் சகோதரராலும் உற்சாகம் இழக்கப்படச் செய்தது போல) உங்கள் குடும்பத்தில் இருந்து வரலாம். அவை நீங்கள் உங்கள் நண்பர் என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவரிடமிருந்து வரலாம் (தாவீது இதற்கு முன்பே அவ்வப்போது தமது சுரமண்டலத்தைச் சவுலுக்காக இசைத்திருந்தார் என்பதை நினைவில் வையுங்கள்). அவை உங்களை விரும்பாத ஒருவரி(கோலியாத் போன்றவர்களி)டமிருந்தும் வரலாம். நீங்கள் அதை எண்ணிப் பார்க்க முடியும்.; அவை வரும். அவைகளுக்காக உங்கள் சிந்தையை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள், மக்கள் உங்களிடம் “அதை நீங்கள் செய்ய இயலாது!” என்று கூறினால் ஆச்சரியப்படாதீர்கள்.

4. உங்கள் கோலியாத்தை நீங்கள் சந்திக்கும் முன்பாகவே நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும் (17:34-37)

நீங்கள், "பிரச்சனை எழும் வரையில் நான் காத்திருப்பேன், பின்பு நான் அதை எதிர்கொள்வேன்'' என்று நினைத்தால், அநேகமாக நீங்கள் கோலியாத் போன்றே உங்கள் முதுகு தரையில் விழும் விதமாக கீழே சாய்ந்து வீழ்ந்து விடுவீர்கள். நீங்கள் உங்கள் கோலியாத்தைச் சந்திப்பதற்கு முன்பாகவே ஆயத்தமாயிருக்க வேண்டும்.

கோலியாத்தை எதிர்க்கத் தாவீது தம்மைத்தாமே தயார் செய்து கொண்டிருந்தார், முதலாவது அவர் ஆடுகளை மேய்க்கையில் சிங்கம் கரடி முதலிய மிருகங்களை எதிர்த்துப்போரிட்டதன் மூலம் இதற்குத் தம்மைத் தயார் செய்திருந்தார். சவுல் தாவீதை உற்சாகமிழந்து போகும்படி செய்ய முயற்சித்த போது, தாவீது பின்வருமாறு பதில் அளித்தார்:

> *உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என் மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல் இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான் (17:34-36).*

தாவீது யுத்தகளத்தில் சென்று அங்கு கோலியாத்துக்காகத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கவில்லை, ஆனால் முன்பே மேய்ச்சல் நிலத்திலேயே அதைச் செய்தார். அவர் சிங்கத்தையும் கரடியையும் எதிர்த்து நிற்கத் தேவையின்றியிருந்தது. அவர் ஓடிப் போயிருந்தால் ஆடுகளைத் தவிர வேறு யாரும் அதனை அறிந்திருக்க மாட்டார்கள் - அவைகள் யாருக்கும் அதைச் சொல்லப் போவதில்லை. இந்தக் கொடிய மிருகங்களை எதிர்த்து நின்றதற்காக அவர், அபாயமிக்க கடமைக்கென்று ஊக்குவிப்புத் தொகை எதையும் பெறவில்லை. அவர் தமது புகைப்படத்தை பத்து மணிக்கு வெளியாகும் செய்தியில் "இன்றைய நாளின் வெற்றியாளர்'' என்ற தலைப்பில் வெளியிடப் பெறவில்லை. அவர் ஆடுகளிடமிருந்து ஒரு "நன்றி!'' என்ற வார்த்தையைக் கூடப் பெறவில்லை (ஆடுகள் தங்கள் பாராட்டுரைகளில் உலோபித்தனமாயிருந்தன)! சிங்கங்களையும் கரடிகளையும் எதிர்த்து நிற்குதல் என்பது மேய்ப்பனின் பணிவிவரணத்தில் ஒரு பாகமாயிருந்தது - மற்றும் தாவீது தமது பணியை நிறைவேற்றினார்.

வாழ்வைச் சந்திப்பதற்கான உங்கள் தயாரிப்பு உங்களுக்குள்ளாக இருந்தே வரவேண்டும். உங்கள் வாழ்வில் சிறிய இராட்சதர்களை எதிர்த்து நிற்குதல் மூலம் நீங்கள் பெரிய இராட்சதர்களை எதிர்த்து நிற்க உங்களைத்

தயாரித்துக் கொள்கின்றீர்கள். உங்கள் வாழ்வின் சிறிய பிரச்சனைகளைப் புறக்கணிக்காமல், அவற்றை முழுமையாக எதிர்த்து நின்று தேவனுடைய உதவியுடன் அவற்றைக் கையாளுவதால் பெரிய பிரச்சனைகளுக்கு உங்களைத் தயார் செய்து கொள்ளுகின்றீர்கள்.

தாவீது, தேவனுடனான தமது உறவைப் பண்படுத்திக் கொள்ளுதல் என்பதே அவர் கோலியாத்தை எதிர்த்து நிற்கத் தமக்குச் செய்து கொண்ட மிக முக்கியமான ஆயத்தமாயிருந்தது. சிங்கத்தையும் கரடியையும் தாம் கொன்று போட்டதை அவர் கூறியபொழுது, யாருக்கு அவர் கனம் கொடுத்தார் என்பதைக் கவனியுங்கள்: "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்" (17:37அ). தாவீது தேவன் மீது விசுவாசம் கொண்டிருந்தார்! "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவா. 5:4).

இந்த இளம் வயது வாலிபர், சவுலின் படையில் இருந்த மனிதர்களிடம் இல்லாத ஒரு விசுவாசத்தை எவ்வாறு வளர்த்துக் கொண்டார்? அவர் தமது சகோதரர்களும் சவுலும் தங்களுடைய விசுவாசத்தை வளர்த்துக் கொண்டிருக்கக் கூடிய அதே வழியிலேயே, நாம் ஒவ்வொருவரும் நமது விசுவாசத்தைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய அதே வழியிலேயே தமது விசுவாசத்தை வளர்த்துக் கொண்டார். அவர் தேவன் மீதும் தேவனுடைய வசனத்தின் மீதும் தியானமாயிருந்தார் (ரோமர் 10:17) - அவருக்கு எல்லா வெற்றிகளையும் தேவன் கொடுத்தார்.

நாம் மறக்க வேண்டியவற்றை நினைவில் வைத்துக் கொண்டும், நினைக்க வேண்டியவற்றை மறந்தும் விடுகின்றோம் என்பதே நம் பிரச்சனையாக உள்ளது. நாம் நமது தோல்விகளை நினைவில் வைத்துக் கொள்கின்றோம், தேவன் நமக்களித்துள்ள நமது வெற்றிகளை மறந்து போகின்றோம். C. H. ஸ்பர்ஜன் அவர்கள், "நாம் நமது பயன்களை தூசியிலும் நமது காயங்களை சலவைக்கல்லிலும் எழுதுகின்றோம் ... நாம் ... நமது துன்பங்களை பித்தளைத் தகட்டின் மீது பதிய வைக்கின்றோம், அதே வேளையில், தேவன் நம்மை விடுதலையாக்கிய பதிவுகள் தண்ணீரின் மீது எழுதப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்.[15] நாம் நமது கடந்த காலத் தோல்விகளின் மீது எண்ணங் கொண்டிருப்பதற்குப் பதிலாக, நமது பிரச்சனைகளைக் கையாள்வதற்குத் தேவன் நமக்கு எவ்வாறு தொடர்ந்து உதவுகின்றார் என்பதை எண்ணிப் பார்த்தோம் என்றால், நம் வாழ்வில் இராட்சதர்கள் அழைக்கப்படாமலேயே உள்நடந்து வரும்போது நாம் ஆயத்தமாயிருப்போம்.

5. உங்களால் இயன்ற அளவு சிறப்பாக ஆயத்தம் செய்து கொண்டு, பின்பு தேவனைச் சார்ந்திருங்கள் (17:37-47)

சவுல் பெரிதும் வருத்தம் கொண்டவராயிருந்திருக்க வேண்டும்; இராட்சதனோடு போரிடும் பொறுப்பை அவர் ஒரு இளம் வாலிபனிடம்

ஒப்படைத்தமைக்கு என்னால் வேறு எந்தக் காரணத்தையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.[16] தாவீதிடம் சவுல், "போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக" (17:37ஆ) என்று கூறினார். அரசர், விசுவாசத்தின் மொழியை அறிந்திருந்தும் (1 சாமு. 23:21ஐயும் காணவும்), விசுவாசத்தின் வாழ்வை அறிந்திராதது முரணானதாக உள்ளது அல்லவா? கர்த்தர் தாவீதுடன் இருந்து அவருக்கு வெற்றியைக் கொடுப்பார் என்று சவுல் உண்மையாகவே நம்பியிருந்தாரென்றால், சவுல் தாமே யுத்தகளத்தில் இருந்திருப்பாரே!

தாவீதைச் சுற்றியிருந்த எல்லாரும் கொண்டிருந்த நம்பிக்கைக் குறைவுக்கு நேரெதிரான வகையில் தாவீது கொண்டிருந்த நம்பிக்கை நமது மனதில் ஆழப்பதிகின்றது. குறைந்தது, பின்வரும் மூன்று காரணங் களுக்காகத் தாவீது நம்பிக்கையுடையவராயிருந்தார்: முதலாவது, அவர் தம் பயிற்சியினிமித்தமாக[17] நம்பிக்கையுடையவராயிருந்தார். இது 17:38, 39 வசனங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வசனங்கள், சவுல் தமது ஆயுதங்களையும் உடைகளையும் தாவீதுக்கு உடுத்துவிக்கும் நகைச்சுவையான காட்சியைக் கொண்டுள்ளது. சவுல் தமது சொந்த ஆயுதங்களைத் தாவீது அணிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியது ஏன் என்பதற்கு உண்மையான காரணம் எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஒருவேளை, சவுல் அந்தப் பெருமையில் பங்குபெற விரும்பியிருக்கலாம் (இது சிலர், "அவர் என் துப்பாக்கியைக் கொண்டுதான் கரடியைச் சுட்டார்" என்று கூறுவது போன்றதாகும்). காரணம் என்னவாக இருந்தாலும்,[18] தாவீதின் மீது ஆயுதம் அணிவிக்கப் பட்டது - தலைச்சீரா, பட்டயம், பிற ஆயுதங்களும் அணிவிக்கப்பட்டன. பின்பு வசனமானது, "[அவன்] நடந்து பார்த்தான்" (17:39ஆ) என்று கூறுகிறது.[19] தாவீதினுடைய அளவு இளைஞனுக்குரியதான 34 அங்குலம் என்றும், சவுலினுடைய அளவு சராசரியான வளர்ந்த மனிதனுக்குரியதான 48 அங்குலம் என்றும் கற்பனை செய்து பாருங்கள்! அவரால் (தாவீதால்) நடக்கக் கூட இயலாது, சண்டை செய்யவே இயலாது! தாவீது அந்த ஆயுத உடைகளைக் களைந்து போட்டுவிட்டு, "நான் இவைகளைப் போட்டுக் கொண்டு போகக் கூடாது, இந்த அப்பியாசம் எனக்கு இல்லை" (17:39ஆ) என்று கூறினார்.

வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் "நான் எனக்குத் தெரிந்தவற்றை மட்டும் முயற்சி செய்யப் போகிறேன்" என்று கூறினார். அவர் தம் கடந்த காலத்தில் தமக்கு அப்பியாசப்பட்டிருந்தவைகளான தாம் அறிந்திருந்தவை மற்றும் தம்மால் செய்ய முடிந்தவை மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அது என்னவாக இருந்தது? அவர் தம்மால் ஒரு கவணைச் சுழற்றி அதிலிருக்கும் கல்லை (குறிபார்த்து) எறிய முடியும் என்பதை அறிந்திருந்தார். அவர் தமது பயிற்சியின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார்.

இது இரண்டாவது கருத்தொன்றை தெரிவிக்கின்றது: தாவீது தமது ஆயுதங்களின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் தம்மிடத்தில் இருந்தவற்றிலேயே அதிகம் வலிமை வாய்ந்த ஆயுதத்தை அப்பொழுது கொண்டிருக்கவில்லை: அவரது தடி,[20] இது அவர் சிங்கங்களையும், கரடிகளையும் கொன்று போட உதவிய கனத்த கோலாக இருந்தது (17:35;

சங். 23:4ஐயும் காணவும்). இருப்பினும் அவர் தமது கவணைக் கொண்டிருந்தார் (17:40).

"கவண்" என்று அழைக்கப்படும் ஒரு கருவியை நீங்கள் அறிந்திருக் கலாம். நான் ஒரு சிறுவனாக இருந்த பொழுது, நாங்கள் இதை கவையாக உள்ள மரக்கிளையைக் கொண்டு செய்வோம். அதில், ரப்பர் குழாயில் இருந்து வெட்டிய இரு நீள் துண்டுகளுடன் இணைக்கப்பட்ட தோல்வார் ஒன்றைக் கட்டிக் கொண்டு அதை வைத்துக் கல்லெறிந்து விளையாடுவோம். அந்தக் கவணைப் பயன்படுத்துவதற்கு அந்த தோல் துண்டில் நீங்கள் ஒரு சிறு கல்லை வைக்க வேண்டும், அந்தத் துண்டின் இருமுனைகளையும் கல்லுடன் சேர்த்துப் பிடித்து இழுத்து, எய்கின்ற பொழுது சுழற்றப்பட்டு, அதன் முனைகள் விடுவிக்கப்படும், அப்போது கல் குறியை அடையும். தாவீது "தன் கையில்" பிடித்திருந்தது இது அல்ல. தாவீது வைத்திருந்த கவண் என்பது, ஒரு சிறு தோல் பையானது இதன் இரண்டு முனைகளிலும் தோல்வாரினால் இணைக்கப்பட்டதாயிருந்தது. இதை உபயோகிக்க, தோல் பையில் ஒரு கல்லை வைத்து, இரு முனைகளின் வாரையும் ஒன்றாகப் பிடித்துக் கொண்டு நன்றாகச் சுழற்றி, ஒரு முனையை மாத்திரம் விட்டுவிட வேண்டும். நான் சிறுவனாக இருந்தபொழுது, பல முறைகள் ஒரு தோல் துண்டையும் கயிறுகளையும் கொண்டு கவண் செய்ய முயற்சித்துள்ளேன். அந்தக் தோல் துண்டினுள் ஒரு சிறு கல்லை வைத்து, என் தலைக்கு மேலாக அதைச் சுற்றி, அதன் ஒரு முனையை விட்டு விடுவேன். கல்லானது வேறு திசையில் பறக்காதிருந்தால் ... தனது இலக்கை நோக்கிப் பறந்து செல்லும். (இந்த கவணைக் கொண்டு) நான் பல பொருட்களை உடைத்து விட்டேன், கடைசியில் என் அம்மா என்னை வெளியேற்றி விட்டார்கள். கண்டு பிடிக்கப்பட்ட கருவிகளிலேயே இது மிக மிக எளிதில் கையாள இயலாததாக இருந்திருக்க வேண்டும்.

இருப்பினும், சிலர் இந்தத் திடமற்ற கருவியைக் கொண்டு மாபெரும் நுணுக்கத்தை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பது மிகவும் வியப்பக் குரியதாக உள்ளது. நியாயாதிபதி 20:15, 16 வசனங்கள், பென்யமீன் கோத்திரத்தில் இடது கைப்பழக்கம் கொண்டவர்கள் எழுநூறு பேர் இருந்தார்கள் என்று கூறியபின், "அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண் கல் எறிவார்கள்!" என்று கூறுகிறது. இராய் ஆஸ்பர்ன் அவர்கள் ஒருமுறை பலஸ்தீனத்திற்குச் சென்றிருந்தார்.[21] அவர் ஒரு குன்றின் அருகே நிழலில் உட்கார்ந்திருந்த, வெள்ளாடு மேய்க்கும் ஒரு இளைஞனிடம் வந்தார். அவனுடைய வெள்ளாடுகள் நூறு அல்லது அதற்கு அதிகமான கெஜங்கள் தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. அந்தப் பையன் தன் மந்தையை ஒரு கவண் கொண்டு கவனித்துக் கொண்டிருந்தான். ஒரு வெள்ளாடு அலைந்து திரியத் தொடங்கினால், அவன் (தன் கவணைக் கொண்டு) ஒரு கல்லை அதன் முன் எறிந்து, அதைப் பயமுறுத்தி மீண்டும் மந்தையோடு சேர்ந்திருக்கச் செய்வான். அந்த மேய்ப்பனிடம் நடந்து சென்ற இராய், சற்று தூரத்தில் இருந்த அத்தி மரம் ஒன்றை அவனுக்குச் சுட்டி காண்பித்து, அதை அவனால் அடிக்க இயலுமா என்று கேட்டார். அந்தப் பையன் தன் கவணுக்குள் ஒரு கல்லைப் போட்டு, அது கண்களுக்கு

மங்கலாகத் தெரியும் வரைக்கு அதை வேக வேகமாகச் சுழற்றினான். பின்பு அவன் அக்கல்லைக் குறியிடத்திற்குப் போக அனுமதித்தான் - அந்தக் கல் அம்மரத்தின் அடிப்பகுதியில் சென்று புதைந்தது.

அந்த வகையான திறமையைத் தாவீது வளர்த்துக் கொண்டிருப்பார் என்பது உறுதி. "[அவன்] தன் தடியைக் கையிலே பிடித்துக் கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத்[22] தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப்பையிலே போட்டு" (17:40அ). தாவீது தம் கையில் ஒரு தடியைப் பிடித்துக் கொண்டு - அது ஆயுதம் அல்ல, ஆனால் நடக்கப் பயன்படும் அவரது கைத்தடி - குன்றின் அருகாமையில் நடந்து சென்றார். அவர் பள்ளத்தாக்கின் மத்தியில் இருந்த நீரோடைக்கு வந்தபோது, அவர் ஐந்து கூழாங்கல்லுகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவர் தம் கைக்கு அகப்பட்ட முதல் ஐந்து கற்களை எடுத்துக்கொள்ளாமல், அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் ஒரு கல்லை எடுத்துப் பார்த்து, "இல்லை, இது பயன்படாது" என்றார். அதை அவர் வீசியெறிந்து விட்டார். அவர் இன்னொரு கல்லைப் பொறுக்கினார். "இது ஒருவேளை பயன்படும்'' இதை அவர் தம்மிடம் வைத்துக் கொள்ளுகையில், இதைப் போன்ற மற்று கற்களுக்காகப் பார்த்தார். அவர் தமக்கு உண்மையிலேயே தேவைப்பட்ட ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து கற்களை மிகவும் கவனமாகத் தேடிப் பொறுக்கி எடுத்தார். அவர் தம்மிடத்தில் மேய்ப்பருக்குரிய சிறு பை ஒன்றை வைத்திருந்தார். அதில் வழக்கமாக அவரது மதிய உணவு இருக்கும், ஆனால் இன்று அதில் அவர் தமது ஐந்து கற்களைப் போட்டார், அவர் இராட்சதனைச் சந்திக்கத் தயாராகி விட்டார்.

இருபக்கத்துப் படைகளிலும் இருந்த எல்லாருடைய கண்களும் இந்தச் சிறுவன் மீதிருக்க, இவர் அந்த நீரோடைப் படுகையில்[23] கீழே இருந்து கொண்டு, கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார், இந்தப் போட்டியின் சாதக அம்சங்கள் யார் பக்கம் இருந்ததாக அந்த மக்கள் நினைத்தார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க இயலுமா? அவர் தமது ஐந்து கூழாங்கற்களுடன் அந்த இராட்சதனை நோக்கி நடந்து செல்லுகையில், "வெற்றி வாய்ப்பு" யார் பக்கம் இருந்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.

தாவீது தமது பயிற்சி மற்றும் தமது கருவிகள் ஆகியவை மீது கொண்டிருந்த நம்பிக்கையினால் மட்டும் முன் செல்லவில்லை. அவர் (தேவன் மீதான) தமது நம்பிக்கையின் அடிப்படையில் தன்னம்பிக்கை உடையவராயிருந்தார். அவர் தமது தேவனைச் சார்ந்திருந்தார்.

வசனம் 40 மற்றும் 41 ஆகியவை இந்த இரண்டு போட்டியாளர் களுக்கும் இடையில் இருந்த கூர்மையான ஒப்பீட்டு வேறுபாட்டை எடுத்துரைக்கின்றன. "தன் கவணைத் தன் கையிலே பிடித்துக் கொண்டு, அந்தப் பெலிஸ்தனண்டையிலே போனான். பெலிஸ்தன் நடந்து, தாவீதண்டைக்குக் கிட்டிச் சேர்ந்தான், பரிசையைப் பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடந்தான்.'' மேற்கிலிருந்து மாபெரும் ஆயுதங்கள் தரித்த ஒரு வலிமையாளன் வந்தான், அவனது பலமிக்க ஈட்டியானது இறகுகள் செருகப்பட்டதாயிருந்தது, அவனது வெண்கலத் தலைச்சீரா சூரிய

ஒளிபட்டுப் பிரகாசித்தது. கிழக்கில் இருந்து ஒரு சிறிய, கன்னம் சிவந்த இளைஞன் அங்கியும் செருப்பும் போட்டுக் கொண்டு, வெள்ளாட்டு - முடியினால் ஆன கவண் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான்.[24]

தாவீதைப் பார்த்த பொழுது கோலியாத் அவமானப்படுத்தப் பட்டான்.

> பெலிஸ்தன் சுற்றிப்பார்த்து: தாவீதைக் கண்டு, அவன் இளைஞனும், சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், அவனை அசட்டை பண்ணினான். பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து, "நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா?" என்று சொல்லி, அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்தான் (17:42, 43).

கோலியாத்து தன் தேவர்களை - தாகோன், பாகால் மற்றும் பிற தேவர்களை - க் கொண்டு தாவீதைச் சபித்தபொழுது, அவன் ஒரு பெரிய தவறைச் செய்தான். அவன் ஒரு இராணுவ எதிர்நடைக்கையை ஒரு இறையியல் போராட்டமாகத் திருப்பிவிட்டான்! அது "தேவனுக்கு எதிராக தேவர்கள்" என்ற நிலையாகச் சென்று கொண்டிருந்தது.

கோலியாத்து தாவீதைப் பயமுறுத்த முயற்சி செய்தான்: "என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்" (17:44).[25] நாம் எதிர்கொள்ளும் அறைகூவல்களினால் நாம் பயமுறுத்தப்படுகின்றோம், அல்லவா? நமது முழங்கால்கள் ஒன்றுடன் ஒன்று (பயத்தினால்) இடித்துக் கொள்ளுவதை நிறுத்தி விட்டால், நாம் நம் இராட்சதர்களை எதிர்த்து நிற்க முடியும்.

பெருக்கம் என்பது (இவ்விடத்தில் உடல் அளவின் பெருக்கம்) என்னிடத்தில் செயல்பட்டிருக்கும். ஒன்பதரை அடி உயரம் கொண்ட ஒரு அரக்கன், என் இறந்த உடலைப் பறவைகளுக்கு இரையாக்கப் போவதாகக் கூறியிருந்தால், நான் அச்சத்தினால் திகில் அடைந்திருப்பேன். இருப் பினும், கோலியாத்தின் அச்சுறுத்தல் தாவீதைப் பயமுறுத்துவதற்குப் பதிலாக, வேதாகமத்தில் காணப்படுகின்ற விசுவாசத்தின் மிக உயர்ந்த வெளிப்பாடுகளில் ஒன்றை வெளிக் கொண்டு வந்தது:

> அதற்கு தாவீது: பெலிஸ்தனை நோக்கி: "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி,[26] பெலிஸ்தருடைய பாளையத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத் தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக் கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றான் (17:45-47).

"யுத்தம் கர்த்தருடையதாக உள்ளது." இந்த வசனப்பகுதியை நீங்கள் புரிந்து கொள்ளாதிருந்தால் நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. தாவீது ஒரு எளிய கொள்கையின்படி வாழ்ந்தார். அவர் ஏதொன்றையும் நிரூபிக்க வேண்டியதோ அல்லது ஏதொன்றையும் இழக்க வேண்டியதோ இல்லை. அவர் யாரேனும் ஒருவரின் மனதில் ஆழ்ந்த கருத்துக்களைப் பதிய வைப்பதற்கு முயற்சி செய்யவில்லை. அவர் தமது தேவனின் சார்பாக மட்டும் நின்று கொண்டிருந்தார். பரலோகத்தில் தேவன் ஒருவர் இருக்கின்றார், வெற்றி அவருக்கே உரியது என்பதை எல்லாரும் அறிய வேண்டும் என்று அவர் (தாவீது) விரும்பினார்.

வாழ்வு கொண்டுவரக் கூடிய அறைகூவல்களுக்கு உங்களை நீங்கள் தயாரித்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று நான் உங்களுக்கு ஆலோசனை கூறினேன். இருப்பினும் உங்கள் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில், நீங்கள் ஒரு மூலைக்குத் திரும்பி, உங்கள் பயிற்சி யாவும் குறைவுள்ளதாகக் காணப்படும் அளவுக்கு உங்கள் தளவாடங்கள் எல்லாம் போதுமானவைகளல்லாததாகக் காணும் அளவுக்கு மிகப் பெரிய, மாபெரும் எசை கொண்ட ஒரு இராட்சதனை எதிர்கொள்வீர்கள். அப்பொழுது பின்வருவதை நினைவுகூருதல் இன்றியமையாதது ஆகும்: "யுத்தம் கர்த்தருடையதாக உள்ளது!" முடிவில் தன்னம்பிக்கையுள்ள வாழ்வை வாழ்வதற்கு நம்பிக்கையே வழியாக உள்ளது - இது தேவன் மீதான நம்பிக்கையாக உள்ளது. நாம் "விசுவாசமே ஜெயமாக இருக்கிறது"[27] என்று பாடுகின்றோம், தாவீது அதை வாழ்ந்து காண்பித்தார்.

6. நீங்கள் ஒரு கோலியாத்தைக் கொண்டிருந்தால், உடனடியாக அவனை எதிர்த்து நில்லுங்கள் (17:48-51)

தாவீது தம் ஐந்து கூழாங்கற்களைப் பொறுக்கிய பின், அவர் சற்றும் தயங்கவில்லை; அவர் கோலியாத்தைச் சந்திக்க ஓடினார்.

> *அப்பொழுது அந்தப் பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிராகக் கிட்டிவருகையில், தாவீது தீவிரமாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான்; அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான் (17:48, 49).*

தாவீது மேய்ப்பருக்குரிய தமது சிறு அடைப்பப் பையில் கை போட்டு, அதில் இருந்தவற்றில் பெரிய கல் ஒன்றைத் தேடி, அதை வெளியில் எடுத்து, அதைக் கவணில் போட்டு, அந்தக் கவணைத் தம் தலையைச் சுற்றிச் சுழற்றலானார். கவண் முதலில் மெல்லியதாக ஒலி கிளப்பிற்று, பிறகு அது உறுமத் தொடங்கியது. பிறகு - ட்வாங்! - தாவீது கல்லை விடுவித்தார். அது

காற்றில் சீழ்க்கையடித்துப் புறப்பட்டு கோலியாத்தின் நெற்றியில் புதைந்தது. கோலியாத், (துப்பாக்கியினால்) சுடப்பட்டவன் போல விழுந்தான். அந்த இராட்சதன் சத்தத்துடன் தரையை மோதிய பொழுது, பூமி குலுங்கியது.

தாவீதின் வேலை இன்னும் முடியாதிருந்தது. அந்த இராட்சதன் அதிர்வுற்று மட்டும் கிடப்பவனாக இருக்கலாம். தாவீது மீண்டும் ஓடினார் (17:51). அவர் விழுந்து கிடந்த உடலின் அருகில் ஓடினார். அவரிடம் பட்டயம் எதுவும் இல்லை[28] எனவே அவர் கோலியாத்தின் பட்டயத்தை எடுத்துக் கொண்டார். ("உன் தலையை வெட்ட உன் பட்டயத்தை இரவல் கொடுப்பாயா? உனக்கு நன்றி.") பலமான ஒரு "அடி" யுடன் அந்தப் பயங்கரமான பணி நிறைவேற்றப்பட்டது.

நிறைவான வெற்றியானது அளவு அல்லது உடல்ரீதியான பலம் ஆகியவற்றையல்ல, ஆனால் தேவனுடனான நமது உறவைச் சார்ந்ததாகவே உள்ளது என்பதை, இந்த மாபெரும் வெற்றியானது நமக்குப் போதிக்கின்றது. இதை நாம் ஒருக்காலும் மறந்து விடலாகாது! போரிடுவதற்கு ஒரு இராட்சதனை நீங்கள் பெற்றிருக்கும்பொழுது, அந்தப் போரைத் தள்ளி வைத்து விடாதீர்கள் என்றும் இந்த வெற்றி நமக்குப் போதிக்கின்றது. ஒரு அறைகூவலை நீங்கள் தள்ளி வைக்கும் ஒவ்வொரு நாளிலும் அந்த இராட்சதன் உயரத்தில் இன்னொரு மூன்றடி கூட வளர்ந்து விடுவான்! கடந்து செல்லும் நாட்கள் ஒவ்வொன்றிலும், அது கடினமானதாகி விடும், அந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது மிகவும் கடினமானதாகி விடும். தேவனுடைய உதவியுடன் உங்கள் இராட்சதர்களை எதிர்த்து நில்லுங்கள் - அவர்களை உடனடியாக எதிர்த்து நில்லுங்கள்!

7. ஒரு வெற்றி இன்னொரு வெற்றிக்கு ஆயத்தம் செய்கின்றது (17:51-54)

தாவீதின் வாழ்வு முழுவதிலும், ஒரு வெற்றியானது அவரை அடுத்த வெற்றிக்கு ஆயத்தப்படுத்திற்று. சிங்கம் மற்றும் கரடியின் மீதான அவரது வெற்றி, அவரை இந்தக் கணத்திற்கு ஆயத்தப்படுத்தியது. இப்பொழுது இந்த வெற்றியானது அவரை மற்ற வெற்றிகளுக்கு ஆயத்தப்படுத்தியது. முதலாவது, தாவீதின் வெற்றி இஸ்ரவேலின் படைகளுக்கு உதவியது. இதை லின் ஆன்டர்ஸன் அவர்கள் கூறும் விதம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது: "தாவீதின் செயல் வீரமிக்கதாக மட்டுமின்றி, தொற்றிக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது."[29]

தாவீது கோலியாத்தைக் கொன்ற பின் நடந்த காட்சியை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. அவர் பெலிஸ்தரின் படையை ஏறிட்டு நோக்கினார்; அவர்கள் அங்கு விழிபிதுங்க, வாய்பிளக்க நின்று கொண்டிருந்தார்கள். தாவீது இன்னொரு கல்லை எடுத்து, தனது கையில் போட்டு வீசிக் கொண்டே, "இன்னும் யாராவது இராட்சதர்கள் இருக்கிறீர்களா?[30] என்னிடத்தில் இன்னும் நான்கு கற்கள் எஞ்சியிருக்கின்றன" என்று உரத்துச் சத்தமிட்டார். வசனப் பகுதியானது, "அப்பொழுது தங்கள் வீரன் செத்துப்

போனான் என்று பெலிஸ்தர் கண்டு, ஓடிப்போனார்கள்" (17:51ஆ)[31] என்று கூறுகிறது. முன்பு, மிகவும் பயமடைந்திருந்த இஸ்ரவேலர்கள் இப்பொழுது, "எனக்கு ஒரு இராட்சதனைக் கொடுங்கள், எனக்கும் ஒருவன் தேவை!" என்று கூக்குரலிட்டுக் கொண்டு மலைப்பகுதியில் இருந்து வெள்ளமெனப் புறப்பட்டு இறங்கி வந்தார்கள். "அப்பொழுது இஸ்ரவேலரும் யூதா மனு ஷரும் எழும்பி, ஆர்ப்பரித்து ... பெலிஸ்தரைத் துரத்தினார்கள்" (17:52அ). தாவீதின் உதாரணம் அவரது சக இஸ்ரவேலர்களுக்கு ஊக்க மூட்டியது.

தாவீதின் வெற்றியானது (அவரது) பிற்கால யுத்தங்களில் அவரையும் ஊக்கமூட்டுவதாக இருந்தது. வசனம் 54, "தாவீது பெலிஸ்தனுடைய தலையை எடுத்து, அதை எருசலேமுக்குக் கொண்டு வந்தான்; அவன் ஆயுதங்களையோ தன் கூடாரத்திலே வைத்தான்." கோலியாத்தின் தலை எருசலேமிலேயே வைக்கப்பட்டது.[32] (அந்தத் தலையை அவர் ஏன் தம் வீட்டிற்கு எடுத்துச் செல்லவில்லை? அவரது தாய் அதை வீட்டில் வைத்திருக்கும்படி அவரை அனுமதித்திருப்பார்கள் என்று என்னால் கற்பனை செய்ய இயலவில்லை!) ஆயினும் கோலியாத்தின் ஆயுதங்களைத் தாவீது தமது வீட்டிற்கு எடுத்துச் சென்றார்.[33] ஒவ்வொரு இரவும் தாவீது தம் படுக்கைக்குச் செல்லும்பொழுது, அந்த ஆயுதங்களைப் பார்த்து, "தேவன் எனக்கு இந்த வெற்றியைத் தந்தார். யுத்தம் கர்த்தருடையது!" என்று கூறியிருக்கக் கூடும். ஒவ்வொரு காலை வேளையிலும் அவர் கண் விழித்த பொழுது, அவற்றைக் கண்டு, அவர் "தேவன் எனக்கு இந்த வெற்றியைத் தந்தார். யுத்தம் கர்த்தருடையது!" என்று கூறியிருக்கக் கூடும். காலையிலும் மாலையிலும், பகலிலும் இரவிலும் அவர், நீங்கள் தேவனிடம் தரித்திருக்கையில் உங்களுக்கு ஜெயம் உண்டு என்ற நினைவூட்டுதல் ஒன்றைக் கொண்டிருந்தார்.

தேவன் உங்களுக்கு வெற்றியைத் தரும் ஒவ்வொரு வேளையிலும், அந்த அற்புதமான நிகழ்ச்சியின் விவரங்களை உங்கள் இருதயத்தில் செதுக்கிக் கொள்ளுங்கள். ஒரு தனி வெற்றியையாகிலும் நீங்கள் தவற விடுவதைத் தேவன் விரும்புவதில்லை; அவர், "அதை மறக்காதீர்கள்!" என்றே கூறுகின்றார். இதைக் காட்டிலும் வெறெதுவும் உங்களுக்கு எதிர்கால யுத்தத்தில் பெலம் அதிகமாய்த் தராது.

முடிவுரை

"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, பலர் இன்று பிரச்சனை களுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் - அந்தப் பிரச்சனைகள் சில வேளைகளில் அவர்களை மூழ்கடித்து விடுவதாகக் காணப்படுகிறது. நீர் ஒவ்வொருவரோடும் இருந்து அவர்களைப் பெலப்படுத்த வேண்டுமாய் நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரும், வாழ்வு எங்களுக்குக் கொண்டு வருபவை எதுவாயிருந்தாலும் அவற்றிற்கு எங்களைத் தயார் செய்து கொள்ளவும், கடைசியில் உம்மைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளவும் அதன் மூலமாக வெற்றி எங்களுடையதாயிருக்கவும் எங்களுக்கு உதவும். எங்கள் பக்கம் நீர் இருந்தால் இயலாதது என்று எதுவும்

இல்லை என்பதை நாங்கள் கற்றுக்கொள்ள உதவும். ஒவ்வொருவரையும் சிறப்பான வழியில் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்."

இராட்சதர்களுடன் போராடுதல் என்பது தனித்துச் செய்ய வேண்டிய வேலையாகக் கூடும். தாவீது யுத்த களத்தினுள் அடியெடுத்து வைத்த பொழுது, சவுலும் அவரது சேனையும் அவருடன் கூட இல்லை. அவருடன் இருந்த தேவனைத் தவிர - அவர் தனியாகவே இருந்தார். இராட்சதர்களை எதிர்த்து நிற்க உங்களுக்குத் தேவன் தேவை!

குறிப்புகள்

[1]இந்தப் பிரசங்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பாடக்கருத்துக்களில் அதிகமானவை பல ஆதாரமூலங்களில் தோன்றியுள்ளன. இதை நான் தொடக்க ஆதாரமூலமாக உரிமைகோர இயலாது. [2]பெலிஸ்தருடனான யுத்தமானது தொடர்ந்து நடைபெற்ற ஒன்றாக இருந்து வந்தது (1 சாமு. 14:52ஐக் காணவும்). சவுல் பெலிஸ்தரை மிக்மாசில் தோல்வி யடையச் செய்து இருபத்தேழு அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகள் கடந்த பொழுது இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. [3]ஏலா பள்ளத்தாக்கு யூதாவிற்கு வடமேற்கில் இருந்தது. இது பெலிஸ்தரின் சமவெளியில் இருந்து யூதாவின் மலைப்பகுதி நாடுகளுக்கு மேலேறி வருவதற்கான பிரதானமான கடவு வழிகளில் ஒன்றாக இருந்தது. [4]ஒரு முழம் என்பது முழங்கை மடிப்பில் இருந்து நடுவிரலின் நுனி வரையுள்ள நீளம் ஆகும், இது சுமார் பதினெட்டு அங்குலமாகும். "ஜாண்" என்பது ஒரு கையின் அகலமாகும், இது சுமார் ஐந்து அங்குல நீளம் ஆகும். இன்றைய நாட்களின் மிக உயரமான கூடைப்பந்தாட்ட வீரர்கள் ஏழடி உயரத்திற்கும் சற்றே அதிகமானவர் களாக உள்ளனர். இன்றைய நாட்களில் உயிருடன் இருப்பவர்களில் மிக உயரமான மனிதர் எட்டடி உயரத்திற்குச் சற்றே அதிகமானவராக இருக்கின்றார். கோலியாத் மிகமிக உயரமான தனிநபராக இருந்தான்! சமீபத்தில் புதைபொருள் ஆய்வாளர்கள், இவ்வளவு பெரிய எலும்புக் கூடுகளை பெலிஸ்தர்கள் வாழ்ந்திருந்த பகுதியில் தற்செயலாகக் கண்டுபிடித்துள்ளார்கள். [5]அவன் இருநூறு பவுண்டுகளுக்கும் (தொன்னூறு கிலோவுக்கும்) அதிகமான எடையுள்ள ஆயுதங்களைத் தூக்கிச் சென்றான் என்பதை நினைவுபடுத்திக் காணும்பொழுது, இது ஒன்றும் நியாயமற்ற யூகமாயிருப்பதில்லை. [6]அவன் தனது கால்களில் வெண்கலக் கவசத்தையும் கொண்டிருந்தான் (17:6); அவைகள் முன்னங்கால்களுக்குப் பாதுகாப்பாயிருந்தன. [7]தோலினால் ஒரு சிறப்பான மேலுடை செய்யப்பட்டது. பின்பு அந்தத் தோலுடை மீது உலோகத்தகடுகள் செதில்களைப் போல் பதிக்கப்பட்டன. இந்த ஆயுத உடையானது ஏறக்குறைய முழங்கால்கள் வரையிலும் தொங்கிற்று. [8]வெவ்வேறு நாடுகளின் எடை அளவுகள் வேறுபட்டவைகளாயிருப்பதால், ஐயாயிரும் சேக்கல் வெண்கலத்தின் எடை எவ்வளவு என்று எவர் ஒருவரும் மிகச் சரியாகக் கூற முடியாது (17:5). இந்த எடை அதிகபட்சம் 200 பவுண்டுகள் (90 கிலோ) இருக்கலாம் என்று சிலர் மதிப்பிடுகின்றார்கள். [9]இது, அறுநூறு சேக்கல்கள் எடை எவ்வளவு நிறைபெறும் என்பதற்கான யூகமாக உள்ளது (17:7). சிலர், இது இருபத்தைந்து பவுண்டுகள் (சுமார் பதினோரு கிலோ) இருக்கலாம் என்று மதிப்பிட்டுள்ளனர். [10]சில எழுத்தாளர்கள் இவரது வயது முன் இருபதுகளில் இருந்திருக்கும் என்கிறார்கள்.

[11]சவுல் (ஏதோ) தமது அழகற்ற மகளைத் தள்ளி விடுவதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கவில்லை! இது ஒரு சோதனைக்குட்படுத்தும் ஊக்கப் பரிசாக

இருந்தது. அரசரின் மகளை ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவர் அரச குடும்பத்தின் அங்கமாகி விடுகிறார். [12]*The Berkeley Version in Modern English* (Grand Rapids, Mich.: Zondervan, 1960) has "Why have you *really* come?" [13]இதை நாம் சபையில் கற்றுக் கொள்ள வேண்டியதாக உள்ளது. பொல்லாங்கு என்ற அரக்கர்களின் மீது நாம் கவனம் செலுத்த வேண்டிய வேளையில், சில நேரங்களில் நாம் சபைக்குள்ளாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்! [14]இந்த அத்தியாயம் 1 சாமுவேல் 16:7ன் சத்தியத்தை விவரிக்கின்றது. [15]C.H. Spurgeon, *The Treasury of the Bible,* vol. 1 (Grand Rapids, Mich.: Zondervan, 1968), 660. [16]தாவீது அடுத்த அரசராக அபிஷேகம் செய்யப்பட்டிருந்ததை சவுல் அறிந்திருந்தார் - அதை அறிந்த நிலையில்தான் அவர் தாவீது கொல்லப்படுவார் என்று நினைத்து, அவரை இராட்சதனுடன் சண்டையிட அனுமதித்தார் - என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். என்னைப் பொறுத்தமட்டில், அடுத்துத் தொடர்ந்த சவுலின் செயல்கள் இந்த நோக்கத்துடன் சீர் பொருந்தினவைகளாகக் காணப்படுவதில்லை. தாவீது வெற்றி பெற வாய்ப்பில்லை என்று சவுல் நினைத்தாலும், "சரி, சரி சென்று முயற்சித்துப் பார்" என்று கூறுமளவுக்குத் தாவீது விடாப்பிடியுடன் இருந்தார் என்பது இன்னொரு கருத்தாகும். [17]இந்தப் பகுதியில் உள்ள மூன்று "t" க்கள் (training, tools and trust), லின் ஆண்டர்ஸன் அவர்களின் "Facing Giants" (N.p., n.d.), sound cassette - இருந்து எடுத்துக் கையாளப்பட்டுள்ளன. [18]தாவீதினால் யுத்தம் செய்வதற்கு அவசியமான பாதுகாப்பு உடைகளை அணிய முடியாது என்று காண்பித்து, அவரை ஊக்கம் இழக்கச் செய்வதற்காக சவுல் அவர் மீது ஆயுதங்களை அணிவித்தார் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. [19]The KJV says, "He assayed to go." [20]1 சாமுவேல் 17:40ல் உள்ள "தடி" என்பது அநேகமாக அவரது கைத்தடியாக, மேய்ப்பனின் கோலாக இருந்திருக்கும் (KJVயில் காண்க).

[21]இந்தக் கதை லின் ஆண்டர்ஸன் அவர்களின் "Facing Giants" (N.p., n.d.), sound cassette - இருந்து எடுத்து கையாளப்பட்டுள்ளன. [22]இவைகள், தண்ணீரின் உருண்டோடும் செயலால் உருட்டி வடிவாக்கப்பட்ட கற்களாய் இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட கற்களை மிகச் சரியாக (இலக்கை நோக்கி) வீச முடியும். [23]இப்பொழுதும் இந்தப்பள்ளத்தாக்கில் ஓடுகின்ற இந்த நீரோடையானது ஆண்டின் பெரும்பகுதியான நாட்களில் வறண்டு கிடக்கின்றது. [24]இதை, ஒரு எடைமிகுந்த குண்டுவெடிப்புக் கருவி ஒரு மிகச் சிறிய குழலைச் சந்திக்க வருதல் போன்றது என்று யாரோ ஒருவர் கருத்துத் தெரிவித்தார். [25]தாவீதின் உடலைப் புதைக்க அனு மதிக்காமல், அதைக் காட்டு மிருகங்கள் உண்ணும்படி, யுத்தகளத்திலேயே விட்டுவிடப் போவதாகக் கோலியாத் பயமுறுத்தினான். [26]இதைச் சில பிரசங்கியார்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: "நீ தும்முகின்றதை அறியாத வண்ணமாகவே, நான் மிக விரைவாக உன் தலையை வெட்டியெடுத்து விடுவேன்." [27]"கர்த்தரின் கை குறுகவில்லை" என்ற பாடலை இந்தப் பிரசங்கத்திற்கு முன்னர் பாடுதல் நன்று. (விசேஷமாக இப்பாடலில் வருகிற "விசுவாசத்தால் நீதிமான் இன்றும் என்றும் பிழைப்பான்" என்ற வரிகள் பாடப்பட வேண்டும்.) [28]இரும்பு ஆயுதங்களைச் செய்யும் தனி உரிமையை பெலிஸ்தர்கள் தங்களுக்கென்று வைத்துக் கொண்டார்கள் (1 சாமு. 13:19-22ஐக் கவனிக்கவும்). [29]Lynn Anderson, *Finding the Heart to Go On* (San Bernardino, Calif.: Here's Life Publishers, 1991), 44. [30]பெலிஸ்தியாவில் பிற இராட்சதர்களும் இருந்தார்கள் (2 சாமு. 21:15-22). பிற்காலத்தில் இவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்; இது தாவீதின் பாரம்பரிய உரிமையாயிருந்தது. (இது தொடர்பாக, இன்னொரு நபரால் கொல்லப்பட்ட இன்னொரு இராட்சதனும் கோலியாத் என்று பெயர் பெற்றிருந்தான் என்பதைக் கவனிக்க வேண்டும். 2 சாமு. 21:19ஐக் காணவும்).

[31]பிலிஸ்தியர்களின் வீரன் விழுந்தபோது, பிலிஸ்தியர்கள் சரணடைந்து இஸ்ரவேலருக்கு அடிமைகளாயிருந்திருக்க வேண்டும். பிலிஸ்தியர்களின் கௌரவம் என்னவாகிறது! [32]தாவீது அரசராகும் வரையிலும் எருசலேமைக் கைப்பற்றாதிருந்தார் என்பதால் (2 சாமு. 5:6-10), கோலியாத்தின் தலையை எருசலேமுக்குக் கொண்டு வருதல் என்ற கூற்றானது அநேகமாக, பல ஆண்டுகளுக்குப் பின் நடந்ததை முன்பே எதிர்பார்த்த வகையிலானதாக உள்ளது. [33]பட்டயமானது ஆசரிப்புக் கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்ததால் (1 சாமு. 21:8, 9), "தன் கூடாரம்" என்பது தாவீதின் சொந்தக் கூடாரம் அல்ல, அது ஆசரிப்புக் கூடாரமே என்று சிலர் யூகிக்கின்றார்கள். ஒருவேளை தாவீது தொடக்கத்தில் அந்த ஆயுதங்களைத் தமது வீட்டிற்கு எடுத்துச் சென்றிருந்து, பின்பு இஸ்ரவேல் அனைத்தையும் ஊக்கப்படுத்துவதற்காக அவற்றை நன்கொடையாகக் கொடுத்து விடும்படி இணங்க வைக்கப்பட்டிருந்திருக்கலாம். "கூடாரம்" என்ற வார்த்தை சில வேளைகளில் "இல்லம்" என்பதைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கவனிக்கவும் (1 சாமு. 13:2 முதலியன).

யோனத்தான்: தேவையில் உதவிய ஒரு நண்பர்

[1 சாமுவேல் 17–23; 2 சாமுவேல் 1]

ஆங்கில மொழியில் "friendship" என்ற வார்த்தையும், தமிழ்மொழியில் அதற்கிணையான நட்புறவு என்ற வார்த்தையும் மிகவும் விலையேறப் பெற்ற வார்த்தைகளில் ஒன்றாக உள்ளன. இராபர்ட் லூயிஸ் ஸ்டீவென்ஸன் அவர்கள், "ஒரு நண்பர் ... என்பவர் உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளக் கூடிய வெகுமதியாக இருக்கின்றார்"[1] என்று கூறினார். மேரி மிட்ஃபோர்ட் அம்மையார், "என் அன்றாட உணவைக் காட்டிலும் என் நண்பர்களுக்காக நான் தேவனுக்கு அதிக நன்றியைச் செலுத்துகின்றேன் - ஏனெனில் நட்புறவு என்பது இருதயத்திற்கு உணவாக உள்ளது" என்று கூறினார்கள். நட்புறவை எடுத்துப்போடுதல் என்பது சூரியனை உலகத்திலிருந்து களவு செய்வது போன்றதாக உள்ளது என்று சிசெரோ என்பவர் தமது கருத்தைப் பராமரித்தார். நீதிமொழிகள் என்ற நடைமுறைப் புத்தகமானது நட்புறவைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது: "சிநேகிதன் என்பவன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்" (நீதி. 17:17). "சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு" (நீதி. 18:24). "உன் சிநேகிதனையும் ... விட்டு விடாதே" (நீதி. 27:10).

"நட்புறவு" என்ற வார்த்தையை நான் கூறுகிற பொழுது, நீங்கள் யாரைப் பற்றி நினைக்கின்றீர்கள்? ஒருவேளை நீங்கள் நீண்ட காலமாக அறிந்துள்ள, நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ஒருவரைப் பற்றி நினைக்கலாம். ஒருவேளை உங்கள் வாழ்வில் திருப்புமுனையாயிருந்த இரக்கம் மற்றும் அக்கறையைக் காண்பித்த ஒருவர் உங்கள் மனதில் நினைவுக்கு வரலாம். ஒருவேளை உங்கள் குடும்பத்து உறுப்பினர்களில் ஒருவர் உங்களுக்கு இரத்த சம்பந்தமான உறவினர் என்பதைக் காட்டிலும் மேலானவராயிருத்தல் உங்களின் நினைவுக்கு வரலாம். "நண்பர்" என்ற வார்த்தையை நான் கேள்விப்படுகின்ற பொழுது, முதலாவது நான் எனது மனைவியாகிய ஜோ - வையே நினைத்து பார்க்கின்றேன் - இவர்கள் இந்த பூமியில் எனது மிகச் சிறந்த நண்பராயிருக்கின்றார்கள் (உன்னதப்பாட்டு 5:16ஐக் கவனிக்கவும்). பின்பு நான் எனது பெற்றோர்கள், எனது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் எல்லாரையும் நினைக்கின்றேன். பின்பு நான் உலகம் முழுவதிலும் நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள நண்பர்களைப் பற்றி நினைக்கின்றேன். என்னைப் பொறுத்த

மட்டில், எல்லாருக்கும் மாபெரும் நண்பருடைய அன்பினால் சூழப்பட்டு, நம் எல்லா நண்பர்களும் ஒரு இடத்தில் ஒருவேளையில் கூடியிருத்தல் என்பது பரலோகத்தின் மகிழ்வுகளில் ஒன்றாயிருக்கும்.

நான் "நட்புறவு" என்ற வார்த்தையைக் கூறும் பொழுது, துரதிர்ஷ்ட வசமாகச் சிலர், ஒருவரையும் நினைக்காதவர்களாய் இருப்பார்கள்.[2] உங்களைப் பொறுத்தமட்டில் விஷயம் அவ்வாறு இருந்தால், என் இருதயம் உங்களுக்காக இரத்தம் சிந்துகிறது. இந்தப் பாடமான இதைப் படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் உதவியாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன்; சிறப்பாக, நீங்கள் நட்புறவு இன்மையை உணர்ந்தால், உங்களுக்கு உதவுவதற்காகச் சில விஷயங்கள் கூறப்படும்.

நான் கேள்வியை மாற்றிக் கேட்கின்றேன். "நட்புறவு மற்றும் வேதாகமம்" என்று நான் கூறுகின்ற பொழுது, நீங்கள் யாரைப் பற்றி நினைக்கின்றீர்கள்? ஒருவேளை நீங்கள் தாவீதைப் பற்றியும் யோனத்தானைப் பற்றியும் நினைத்திருக்கலாம். நமது பிள்ளைகளின் வகுப்புக்களில் நட்புறவைப் பற்றி அவர்கள் படிக்கின்ற வேளையில், நட்புறவு என்ற கருத்தை விவரிப்பதற்கு, எவ்வித வேறுபாடுமின்றி, ராஜாவாயிருந்த சவுலின் மகனுக்கும் பெத்லெகேமில் ஒரு ஆடு மேய்க்கும் பையனாயிருந்த தாவீதுக்கும் இடையில் இருந்த நட்புறவு பற்றிய வரலாறு தேர்ந்து கொள்ளப்படுகிறது.

இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் நாம், தாவீது திடீரென்று கொண்டாடத் தக்கவரான வேளையில், மற்றும் அவர் திடீரென்று அழிக்கப்படத் தேடப்பட்டவராகையில், நடந்த நிகழ்வுகளில் அவரைக் காண்போம். இருப்பினும், இந்தப் பாடத்தில் நாம், இவ்வேத வசனப் பகுதியினூடே இழைகின்ற பொன் நூல் ஒன்றைக் கண்ணோக்கு வோம்: தாவீதின் மீது யோனத்தானின் அன்பு. நாம் உண்மை அன்பின் இயல்பைப் பற்றிக் கற்றுக் கொள்வோம்.

நட்புறவின் உறுதிப்பாடு
(1 சாமுவேல் 17:55-18:3)

இந்தப் பாடத்தின் பின்னணியானது, நாம் கோலியாத்தின் மீது தாவீதின் வெற்றியை நினைவு கூருகையில், 1 சாமுவேல் 17ம் அத்தியாயத் தின் கடைசி நான்கு வசனங்களில் காணப்படுகிறது. அந்த இராட்சதனை எதிர்த்து நிற்க தாவீது சவுலை விட்டுச் செல்லுகையில், ராஜா தமது சேனைகளின் தளபதியிடம், "அப்னேரே, இந்த வாலிபன் யாருடைய மகன்?" (17:55) என்று கேட்டார். தாவீதின் வெற்றிக்குப் பின்பு, அந்த இளம் (ஆட்டு) மேய்ப்பனை அப்னேர், ராஜாவுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினார். அங்கு தாவீது தமது கைகளில், கோலியாத்தின் தலையுடன் நிற்கையில், ராஜா அவரிடம் "வாலிபனே, நீ யாருடைய மகன்?" (17:58அ).[3] என்று கேட்டார். அதற்கு தாவீது, "நான் பெத்லெகேம் ஊரானாயிருக்கிற உம்முடைய அடியானாகிய ஈசாயின் மகன்" (17:58ஆ) என்று பதில் அளித்தார். சவுல் தாவீதை யார் என்று கேட்கவில்லை, ஆனால் அவருடைய

(தாவீதின்) தந்தை யார் என்றுதான் கேட்டார் என்பதைக் கவனியுங்கள்.[4] அநேகமாக சவுல், தாவீதைத் தமது வீட்டாருடன் சேர்த்துக் கொள்வதற்கு தாவீதின் தந்தையிடம் அனுமதி கேட்பதற்காக இந்தத் தகவலைப் பெற விரும்பியிருக்கலாம். "சவுல் அவனை அவன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப் போக ஒட்டாமல், அன்றுமுதல் தன்னிடத்தில் வைத்துக் கொண்டான்" (18:2).[5]

சவுல் தமது அரண்மனையில் வந்த வசிக்கும்படி தாவீதுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தபோது ராஜாவின் அருகில் நின்று அதை ஒரு இளைஞர் கேட்டுக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் பெயர் யோனத்தான் என்பதாகும் (யோனத்தான் என்றால் "யெகோவா கொடுத்தார்" என்று அர்த்தப் படுகிறது). இவர் சவுலின் மூத்த மகனாகவும் அவரின் அரியணைக்கு உரியவராகவும் இருந்தார். இவர் ராஜாவின் வலது கரம் போன்ற மனிதராக, இஸ்ரவேலின் ஒவ்வொரு திசையிலும் இருந்து வெறுப்புமிக்க இனங்களுடனான பல யுத்தங்களில் தம் திறமையை நிரூபித்திருந்த வீரமிக்க சேனைத்தலைவராக இருந்தார் (1 சாமு. 13; 14). இவர் இஸ்ரவேலர்களின் இருதயங்களில் ஒரு விசேஷித்த இடத்தைப் பெற்றிருந்தார் (1 சாமு. 14:45).

தாவீது இராட்சதனை எதிர்த்து நின்றதையும், பின்பு பள்ளத்தாக்கின் மீதான குன்றுப் பகுதியில் சவுலைச் சந்தித்ததையும் யோனத்தான் கவனிக்கையில், ஏதோ சில விஷயங்கள் - அரிதான மற்றும் அழகுமிக்கவை - நடைபெற்றன. "அவன் சவுலோடே பேசி முடித்த பின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான்" (18:1). "இசைந்திருந்தது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தையானது "முடி போடப்பட்டிருத்தல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. உடனடியாக அவர்களின் உயிர்கள் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்ட நிகழ்வு நடந்தது, ஆனால் அதற்கும் மேலாக, ஒரு பிணைப்பு நிலைநாட்டப்பட்டது. NIVயில், "யோனத்தான் தாவீதுடன் ஒரே ஆவியை உடையவரானார்" என்றுள்ளது. இவ்விதமாக, உலகம் அறிந்தவற்றிலேயே மிகவும் அழகிய நட்புறவுகளில் ஒன்று பிறந்தது.

இது நடக்க முடியாத ஒரு நட்புறவாக இருந்தது. முதலாவது, இவர்களின் வயதுகளில் குறைந்தது இருபது ஆண்டுகள் வித்தியாசம் இருந்தது. தாவீது பிறந்தபொழுது, யோனத்தான் ஏற்கனவே ஒரு பயிற்சியும் பக்குவமும் கொண்ட போர் வீரராயிருந்தார். இரண்டாவது, இவர்களின் சமூக அந்தஸ்தில் வித்தியாசம் இருந்தது. யோனத்தான் அரியணையில் அமரும் வரிசையில் அடுத்திருப்பவராக இருந்தார். ஆனால் தாவீது, பெத்லெகேமில் இருந்து வந்த ஒரு ஏழை விவசாயியின் மகனாயிருந்தார். இருப்பினும் ஒருவர், அன்பு நிறைந்த ஆவியைச் சந்திக்கும் பொழுது, இப்படிப்பட்ட மேலோட்டமான விஷயங்கள் ஒரு பொருட்டாக மதிக்கப்படுவதில்லை. இன்றைய நாட்களின் சமுதாயத்தில், நாம் மிக அதிகமான தலைமுறை இடைவெளிகளையும் சமூக இடைவெளிகளையும் உண்டாக்கிக் கொண்டுள்ளோம். நாம் நமது சொந்த வயதை ஒத்தவர்

களிடத்திலும், நம்மைப் போன்றவர்களிடத்திலும் மட்டும் நண்பர்களை நாடுவோம் என்றால், நாம் எவ்வளவு அற்புதமான நட்புறவுகளைத் தவற விட்டவர்களாவோம்!

யோனத்தானும் தாவீதும் ஒருவருக்கொருவர் ஏற்படுத்திக் கொண்ட உறுதிப்பாட்டைக் கவனியுங்கள்: "யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்" (18:3). உடன்படிக்கை என்பது, இருசாராருக்கிடையிலான ஒப்பந்தமாக உள்ளது.[6] ஏனெனில் யோனத்தான் முதலில் தாவீதுடன் நெருக்கமான நட்புறவை உணர்ந்தார் என்பதாலும், தாவீதுக்கு அவர் (யோனத்தானை விடவும்) கீழ்ப்பட்டவராயிருந்ததினால், இந்த நட்புறவு தகுதியற்றதாகக் காணப்பட்டதாலும், இந்த உடன்படிக்கை யோனத்தானால் ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தது.[7] இருப்பினும், இவ்வார்த்தையின் இயல்பானது இவர்களின் நட்புறவு ஒருதலைப் பட்சமாயிருந்ததில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது; தாவீதும் யோனத்தான் மீது அன்பு கூர்ந்தார் (1 சாமு. 20:41; 2 சாமு. 1:26; முதலியன).

இந்த உடன்படிக்கையில் அடங்கியிருந்தவை என்ன? இதில் உடைமைகள் பரிமாறிக் கொள்ளப்பட்ட விரிவான சடங்கு, ஒரு பண்டிகை மற்றும் இரத்தம் ஒன்று கலக்கப்படுதல் ஆகியவை அடங்கியிருந்ததாக சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். (ஒருவேளை, உங்களில் சிலர் உங்களையும் உங்கள் நண்பரையும் "இரத்த சம்பந்தமான சகோதரர்களாக்குவதற்காக" கட்டை விரல்களில் கீறிக் கொண்டு அவற்றை ஒன்றாக அழுத்துதல் என்ற சிறு பிள்ளைத்தனமான சடங்கில் பங்கேற்றிருக்கலாம்.) இருப்பினும், இது வாக்குறுதிகளைப் பரிமாறும் நிகழ்வாக இருந்திருக்கவே அதிக வாய்ப்பு உள்ளது (1 சாமு. 20:16ஐக் காணவும்). அதாவது, எப்பொழுதுமே நண்பர்களாய் இருப்போம் என்று (கர்த்தருடைய நாமத்தினாலே[8]) உறுதிப்படுத்துதல்.

இந்த உடன்படிக்கை எந்த வடிவைக் கொண்டிருந்தாலும், இது உறுதிப்பாட்டை உள்ளடக்கியதாக இருந்தது. உண்மையான நட்புறவு எப்பொழுதுமே உறுதிப்பாட்டை உள்ளடக்குகின்றது, அது பேசப்பட்டாலும் அல்லது பேசப்படா விட்டாலும் - வலிவு மற்றும் மெலிவினூடே நண்பர்களாயிருத்தல் என்பது இதில் உள்ளடங்கியிருக்கின்றது. மேலும், உண்மையான நட்புறவில், அந்த உறுதிப்பாடு சீராகப் புதுப்பிக்கப்படுகின்றது. தாவீது மற்றும் யோனத்தானின் வரலாற்றை நாம் தொடர்ந்து காண்கையில், அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் உடன்படிக்கையை அடிக்கடி மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதைக் காண்போம்:

> இப்படி யோனத்தான் தாவீதின் குடும்பத்தோடே உடன்படிக்கை பண்ணி, "தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்குக் கேட்பாராக" என்று சொல்லி, யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால், பின்னும் அவனுக்கு ஆணையிட்டான்; தன் உயிரைச் சிநேகித்ததுபோல அவனைச் சிநேகித்தான் (1 சாமு. 20:16, 17).

அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி, ... அவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணின பின்பு ... (1 சாமு. 23:16, 18).

சாமுவேல் ஜான்ஸன் என்பவர், "ஒரு மனிதர் தம் நட்புறவுகளை தொடர்ந்து பழுதுபார்த்து வைத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். நட்புறவை ஒருக்காலும் சலுகைக்கென்று எடுத்துக் கொள்ளாதீர்கள். நட்புறவு அவ்வப்பொழுது மறுவலிவூட்டப்பட வேண்டும். இது நாம், வியாபாரக் கூட்டாளிகள் இருவர், மீன்பிடிக்கும் இருவர், அல்லது கணவரும் அவர் தம் மனைவியும் என்று யாரைப் பற்றிப் பேசினாலும் உண்மையாக உள்ளது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, தொலைக்காட்சி விளம்பர நிகழ்ச்சியொன்றில், ஒவ்வொரு கணவரும் தம் மனைவி "மீண்டும் தன்னை அவர் திருமணம் செய்து கொள்வார் என்று அறியச் செய்வதற்காக" அவளுக்கு விலையுயர்ந்த வைர நகை ஒன்றை வாங்கும்படி வற்புறுத்திற்று. வைர அலங்கார நகை அல்ல ஆனால் உங்கள் அன்பை மீண்டும் உறுதிப் படுத்துதல் என்பதுதான் இன்றியமையாததாக உள்ளது.

நட்புறவின் சுயநலமின்மை
(1 சாமுவேல் 18:4)

யோனத்தான் தாவீதுடன் இந்த உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்ட பின்பு, "யோனத்தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும் தன் வில்லையும், தன் கச்சையையும் கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்" (18:4). இந்தச் சடங்கு இதற்கு முன் நடந்திராததாக இருந்தது. உடைகளும் ஆயுதங்களும் யோனத்தானின் இராஜரீக அலமாரிக்கு உரியவைகளாயிருந்தன. ஆயுதக் கருவிகளும் விசேஷித்த தனிச் சிறப்புடையவைகளாயிருந்தன. பட்டயமானது இஸ்ரவேலின் படை முழுவதிலும் இருந்த ஒரு சிலவற்றில் ஒன்று என்ற தகுதி பெற்றிருந்தது.[9] வில் என்பது யோனத்தானின் தனிப்பட்ட அடையாளமாயிருந்தது (1 சாமு. 20:20 முதல்; 2 சாமு. 1:17, 18, 22). இந்த வைபவமானது வெளியரங்கமான ஒன்றாக இருந்திருந்தால் (இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று காணப்படுகின்றது), அங்கிருந்த சவுலும் மற்றவர்களும் திகைப்புற்று கலக்கமடைந்திருப்பார்கள் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை.

யோனத்தான் இவற்றைத் தாவீதுக்குக் கொடுத்தது ஏன்? ஒருவேளை பல்வேறு நோக்கங்கள் உள்ளடங்கியிருந்திருக்கலாம். தாவீதுக்கு படையினர் அணியும் உடைகளும் ஆயுதங்களும் தேவை என்று யோனத்தான் உணர்ந்திருக்கலாம். தாவீது தம் தந்தையின் இல்லத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படாததால் (1 சாமு. 18:2), அவர் தாம் அணிந்திருந்த உடையை மட்டுமே தம்மிடம் வைத்திருந்தார்.[10] மீண்டுமாக, இந்த வைபவமானது யோனத்தானுக்கும் தாவீதுக்கும் இடையில் ஏற்படுத்தப்

பட்ட உடன்படிக்கையை முத்திரையிடுவதின் ஒரு பாகமாயிருக்கக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது (1 சாமு. 18:3).[11]

இருப்பினும், இந்தக் கொடைகளுக்கு இன்னும் ஆழமான தனிச் சிறப்பு உள்ளது என்று நான் நினைக்கிறேன். கோலியாத்துடனான யுத்தத்திற்கு நாம் திரும்புவோம். தர்க்கரீதியாகப் பார்த்தால், சவுல்தான் கோலியாத்துடன் யுத்தம் செய்ய வேண்டியவராயிருந்தார், ஆனால் அவர் பயந்திருந்தபடியால் அதைச் செய்யவில்லை. தர்க்கரீதியாக இவருக்கு அடுத்து அதைச் செய்திருக்க வேண்டியவர் யார்? யுத்தத்தில் தம்மைத் தனிச் சிறந்தவராக்கி, வீரத்திற்கும் தைரியத்திற்கும் பெயர் பெற்றவராயிருந்தவர் யார்? யோனத்தான் அல்லவா? யோனத்தான் ஏன் அந்த இராட்சதனை எதிர்த்து நிற்கவில்லை? அவரும் தமது தந்தை மற்றும் அங்கிருந்த எல்லாரையும் போல் பயத்தினால் செயல்பட இயலாதவராகியிருந்தாரா? இது யோனத்தானின் இயல்புக்குப் பொருத்தமானதாயிருக்கவில்லை. மாறாக, யோனத்தான் தமது தந்தை மீது கொண்டிருந்த மரியாதையை இழந்து நின்றார் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது;[12] அவர் தமது தந்தைக்குப் பதிலாகத் தாம் அரியணையில் அமரும் நம்பிக்கை கொண்டிருந்ததில்லை; உண்மையில் அவர் இஸ்ரவேல் நாட்டின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை இழந்து நின்றார்; எனவே அவர் பயத்தினால் அல்ல ஆனால் நம்பிக்கையிழந்த நிலையினாலேயே முடக்கப்பட்டார். இருப்பினும், அந்தப் பெலிஸ்தனை எதிர்த்து நிற்க தாவீது பள்ளத்தாக்கினுள் அடியெடுத்து வைத்து இறங்கியபோது யோனத்தானின் இருதயத்தில் நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டது. தாவீதைப் பற்றி இவர் இன்னும் அதிகமாக அறிந்து கொண்டபோது, நம்பிக்கை நிச்சயமானதாயிற்று. இதோ இங்கு அரியணைக்குத் தகுதியான ஒருவர், இஸ்ரவேலின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஒருவர் இருந்தார்!

இந்தப் பரிசோதனை முழுவதும் சரியானதாயிருந்தால், யோனத்தானின் கொடைகளில் அடையாளத்துவமான தனிச் சிறப்பொன்று இருந்தது. உண்மையில் தாவீதிடம் யோனத்தான், "அரியணைக்கான என் உரிமையை விட்டு விடுகின்றேன், உனக்காக என் ஆதரவை உறுதிப்படுத்துகின்றேன்!" என்றுதான் கூறினார். இந்தச் சடங்கிற்கான இவ்விளக்கமானது யோனத்தான் மற்றும் தாவீதுக்கு இடையில் இருந்த உறவில் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளுடன் சீர்பொருந்துகின்றது (1 சாமு. 23:17 முதலியன). இது யோனத்தானுக்கு என்ன விலை செலுத்த வேண்டியதாயிருந்திருக்கும் என்பதை பாராட்டாமல் இருக்க முடிவது என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது. இந்த நடவடிக்கையில் காட்சிப்படுத்தப்பட்ட சுயநலம் இல்லாமை என்பது வேதவாக்கியங்களிலோ அல்லது வாழ்விலோ மிகவும் அரிதாகவே போலச் செய்யப்படுகின்றது.

சுயநலமின்மை என்பது நட்புறவின் இயல்பான பாகமாக உள்ளது. கொடுத்தல் என்பது இல்லாமல் உண்மையான நட்புறவு இருக்க இயலாது. பின்னாளில் தாவீதிடம் யோனத்தான், "உமது மனவிருப்பம் இன்னதென்று சொல்லும், அதின்படி உமக்குச் செய்வேன்" (1 சாமு. 20:4) என்று கூறினார். உண்மை நண்பர்கள் அதைப் போலவே இருக்கின்றார்கள் - மற்றும்

உண்மை நண்பர்கள் தங்களில் யார் பிறருக்கு அதிகமானதைச் செய்துள்ளோம் என்று கணக்கிட்டுக் கொண்டிருப்பதில்லை. ஜோவையும் (இதை எழுதியவரின் மனைவி) என்னையும் (இதன் எழுத்தாளர்) கர்த்தர் இது போன்ற நூற்றுக்கணக்கான நண்பர்களைக் கொண்டு ஆசீர்வதித்து (மற்றும் தாழ்மைப்படுத்தி) இருக்கிறார். எங்கள் இல்லத்தில் உள்ள ஏறக்குறைய எல்லாப் பொருட்களுமே நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ யாரேனும் ஒரு நண்பரிடம் இருந்த வந்த வெகுமதியாகவே உள்ளன - அவை ஒவ்வொன்றின் பின்னாலும் ஒரு வரலாறு உள்ளது. நாங்கள் எங்கள் இல்லத்தினுள் நடந்து சென்று, அதிலுள்ள படங்களையும், ஓவியங்களையும் பிற அழகுமிக்க பொருட்களையும் கண்ணோக்க முடியும்; வீட்டு உபயோகப் பொருட்களைத் தொட்டுப் பார்க்க முடியும்; அப்போது விலைமதிப்பற்ற நட்புறவினை நினைத்துப் பார்க்கவும் இயலும்.

நட்புறவுக்குப் பரிசோதனை (1 சாமுவேல் 18:5-19:7)

ஒவ்வொரு நட்புறவும் விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ பரிசோதனைக்கு உள்ளாகும். புயல்களில் நிலைத்து நிற்கும் நட்புறவுகள் தாம் அதிக அர்த்தமுடையவைகளாக உள்ளன. விரைவிலேயே யோனத்தான் - தாவீது ஆகியோரின் நட்புறவு சோதனைக்குள்ளாகிற்று.

தாவீது சவுலின் இல்லத்தில் முதன்முதலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொழுது, அவர் அரண்மனையில் மிகவும் அன்புக்குரியவராயிருந்தார். சில நாட்களிலேயே, தாவீது எங்கோ கிடந்த புல்வெளியிலிருந்து நாட்டில் நன்கு அறியப்பட்ட மனிதர்களில் ஒருவராக ஆனார் (1 சாமு. 18:5, 16, 30). இருந்தாலும் அரசரிடத்தில் அவருக்கிருந்த புகழ்ச்சியானது நிலையற்ற தாயிருந்தது. ஒருநாள் சவுலும் அவரது படையும் இராணுவ வெற்றி யொன்றிலிருந்து திரும்பிய போது பெண்கள், “சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்” (18:7) என்று பாடினார்கள். உடனடியாக சவுலின் இருதயத்திலிருந்த அன்பு (1 சாமு. 16:21) வற்றிப் போயிற்று, அதற்குப் பதிலாக சாவுக்கேதுவான பொறாமை அங்கு இடம் பெற்றது.

சவுலின் பொறாமையானது விரைவிலேயே ஒரு கொலை செய்யும் ஆவியாகி நச்சுப் போலச் செயல்பட்டது. அவர் தாவீதைக் கொலை செய்ய, சூழ்ச்சிகளின் ஒரு வரிசையைப் புனைவித்து உருவாக்கினார், ஆனால் அவரது திட்டங்கள் (அவரையே) பின்னோக்கித் தாக்குவதாயின. ஒவ்வொரு திட்டமுமே தாவீதை அழிப்பதற்குப் பதிலாக, தாவீது இன்னும் நன்றாய் அறியப்படுதலையும் அதிகம் மதிக்கப்படுதலையும் விளைவித்தன (1 சாமு. 18:30). கடைசியில் சவுல், காலமானது வெகு நுணக்கமாகக் கடந்து செல்லட்டும் என்று தீர்மானித்தார். அவர் - தமது மகன் யோனத்தான் உட்பட - தமது மிகச் சிறந்த மனிதர்களைத் தம்மைச் சுற்றி ஒன்றுகூட்டி, அவர்களுக்கு “தாவீதைக் கொன்றுபோடு (ங்கள்)” (19:1) என கட்டளையிட்டார். அங்கிருந்த ஒவ்வொரு முகத்திலும் இருந்த திகைப்பையும் பெரும் பீதியையும் உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

தாவீது, நாட்டளவில் ஒரு கதாநாயகராயிருந்தார்!

உங்களை நீங்கள் ஒரு கணம் யோனத்தானின் இடத்தில் வைத்துப் பாருங்கள் - நீங்கள் உங்கள் தந்தை மீதான பற்றுறுதிக்கும் உங்கள் நண்பர் மீதான அன்பிற்குமிடையில் கிழித்துப் போடப்படுகின்றீர்கள். இது தாவீதின் மீது யோனத்தான் கொண்டிருந்த நட்புறவிற்கான பல சோதனைகளில் முதலாவதாக இருந்தது.

யோனத்தான் தாவீதை எச்சரித்து அவரை ஒளிந்து கொள்ளும்படிக் கூறினார் (19:2, 3). யோனத்தான் தமது நண்பரைத் தமது தந்தையிடம் இருந்து தற்காக்கத் தீர்மானித்தார். அவ்வாறு செய்ததில், யோனத்தான் தம் உயிரைத் தம் கையில் பிடித்துக் கொண்டவராய் இருந்திருப்பார்; இராஜாவின் மகனும் கூட இராஜாவின் கோபத்திற்கு விதிவிலக்காக இருந்ததில்லை (இ.வ. 1 சாமு. 14:44). இருப்பினும் ஒரு உண்மையான நண்பர் ஒருக்காலும் தமது தற்காப்பின்றி - தாம் தனிப்பட்ட வகையில் எவ்வளவு பெரிய விலை கொடுக்க வேண்டியிருப்பினும் - தமது நண்பரின் பெயர் கெடுக்கப் படுவதை அனுமதிப்பதில்லை.

அடுத்த நாள் காலையில், சவுலும் யோனத்தானும் ஒன்றாக நடந்து செல்லுகையில், யோனத்தான் பின்வரும் உணர்ச்சிவசமான வேண்டு கோளை விடுத்தார்:

> *ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய வில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக் கிறதே.[13] அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக் கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரவேலுக் கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன்?[14] (19:4, 5) என்றான்.*

இது கடுமையான நேரமாயிருந்தது: யோனத்தான் தம் கண்களில் கண்ணீருடன் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்; பெருமைமிக்க இராஜாவோ பகுத்தறிவுடன் ஆராய்வதற்குத் தற்காலிகமாகக் கடந்து சென்றார். "சவுல் யோனத்தானுடைய சொல்லைக் கேட்டு: 'அவன் கொலை செய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணை யிட்டான்' " (19:6). யோனத்தான் அகமகிழ்வுடன் தாவீதை திரும்பவும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார் (19:7).

நாம் ஒரு சொல் வழக்கைக் கொண்டுள்ளோம்: "தேவையில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்." நான் சிறுவனாயிருந்த பொழுது, இந்தப் பழமொழி என்னைத் திகைப்புக்குள்ளாக்கியது. என்னைப் பொறுத்தமட்டில், "தேவையில் உதவும் நண்பன்" என்ற வார்த்தைகள் "தேவையில் உள்ள நண்பன்" என்றே அர்த்தப்பட்டன. "தேவையில் உள்ள நண்பன் ஏன் உண்மையுள்ள நண்பனாயிருந்தான்" என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. கடைசியில், "தேவையில் உதவும் நண்பன்"

என்பது என் நண்பனின் தேவையல்ல ஆனால் எனது தேவை என்பது என் மனதில் உதித்தது. என் சூழ்நிலைகள் மோசமாகும்பொழுதும் கூட, என்னால் ஒன்றும் செய்ய இயலாதபோதும் கூட என் நண்பனாக நிலைத்திருப்பவனே "உண்மையான நண்பனாக" இருக்கின்றான். அந்த வகையான நண்பனே நம் யாவருக்கும் தேவை, நாம் யாவரும் அந்த வகையான நண்பனாகவே இருக்க வேண்டும், மற்றும் யோனத்தான் அந்த வகையான நண்பராகவே இருந்தார். தாவீது தம் பக்கமாக யாரேனும் நிற்க வேண்டிய அவசியத்தில் இருந்தார் - யோனத்தான் அதைச் செய்தார்.

நட்புறவின் வெளிப்படையான தன்மை
(1 சாமுவேல் 19:8-20:42)

தாவீது அரண்மனைக்குத் திரும்பி வந்த பின்பு, மிக விரைவிலேயே சவுல் தாவீதைக் கொல்ல முயற்சி செய்வதில்லை என்ற தம் வாக்குறுதியை மீறினதுமின்றி,[15] (முன்பு இருமுறை செய்தது போல்) ஒரு ஈட்டியைக் கொண்டு தாவீதைக் கொல்ல முயற்சி செய்தார். பட்டென்று பாய்ந்த அந்த ஆயுதம் சுவற்றில் மோதியதைத் தாவீது கண்டபோது, அவர் கருத்தை (நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலை)ப் புரிந்து கொண்டார். அவர் இரவு வேளையில் ஓடிப் போய்விட்டார்.

முதலில் அவர் தம் சொந்த வீட்டிற்குச் சென்றார் (அடுத்த பாடத்தில் காணவும்), பின்பு தம்மைப் பல ஆண்டுகளுக்கு முன்பு இராஜாவாக அபிஷேகம் செய்திருந்த சாமுவேலிடம் சென்றார். அந்த முதிய தீர்க்கதரிசிக்கு எதிராக எவரும் கரங்களை உயர்த்த மாட்டார்கள் என்பது உறுதி. இருப்பினும் சவுல் அவருக்கு(தாவீதிற்கு)ப் பின்னால் - மூன்று குழுக்களாக - கொலையாளிகளை அனுப்பினார், கடைசியாக அவரே (சவுலே) வந்தார். செய்தியாளர்கள் மீதும் சவுலின் மீதும் தேவன் தம் ஆவியை அனுப்பி இடைப்பட்டார். தாவீது மீண்டும் ஓடுகையில், சவுல் தரையில் விழுந்து கிடந்து இசைவுப் பொருத்தமற்ற சொற்றொடர்களை உளறிக் கொண்டு இருந்தார்.[16]

சவுல் தற்காலிகமாக செயலற்றுக் கிடந்த போது, தாவீது தமது நண்பரான யோனத்தானைக் காண்பதற்காக கிபியாவுக்குத் திரும்பிச் சென்றார். ஒருவேளை யோனத்தான், தாவீதுக்கும் சவுலுக்கும் இடையில் மத்தியஸ்தராக மீண்டும் செயல்படக் கூடும். தாவீது தமது இருதயத்தை யோனத்தானிடம் திறந்து காட்டினார். "உம்முடைய தகப்பன் என் பிராணனை வாங்கத் தேடுகிறாரே, நான் செய்தது என்ன? என் அக்கிரமம் என்ன? நான் அவருக்குச் செய்த துரோகம் என்ன?" (1 சாமு. 20:1).

சவுல் மீண்டும் தாவீதைக் கொல்லத் தேடுகிறார் என்பதை யோனத் தானால் நம்ப முடியவில்லை (20:2). அவரது தந்தை "அவன் கொலை செய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு" பரிசுத்தமாக ஆணையிட்டிருந்தாரே (19:6).

இது உண்மை என்று தாவீது வலியுறுத்தினார்: "மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது என்று கர்த்தருடைய ஜீவனை யும்

உம்முடைய ஜீவனையும் கொண்டு நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்" (20:3).

தாவீது தமது சிந்தையில் ஒரு திட்டம் கொண்டிருந்தார். அத்திட்டத்தின் முதன்மை நோக்கம், தாம் ஒரு துன்புறுத்தப்படும் எண்ணம் மட்டும் கொண்டிருந்ததில்லை என்பதை யோனத்தான் நம்பச் செய்ய வேண்டும் என்பதாகக் காணப்படுகின்றது. யோனத்தானுடனான அவரது உறவுமுறையானது அவர் தம் சிந்தையில் மிக மேன்மையானதாக இருந்தது (20:8).[17] அவர் தம் நண்பரிடத்தில், "இதோ, நாளைக்கு அமாவாசி, நான் ராஜாவோடே பந்தியிருந்து சாப்பிட வேண்டியதாயிருக்கும்" (20:5) என்று கூறினார். ஒரு மாதத்திற்கு ஒருமுறை ஒரு விசேஷித்த ஓய்வு நாளானது நியாயப்பிரமாணத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது (எண். 28:11-15). சவுல் இந்த விசேஷ நாட்களை, அரசில் வழிநடத்திச் செல்லும் மனிதர்களான யோனத்தான், அப்னேர் மற்றும் தாவீது ஆகியோருடன் தமது "அமைச்சரவைக் கூட்டங்களை" நடத்தப் பயன்படுத்தியிருப்பார் என்பது உறுதி (1 சாமு. 20:25). தாவீது தொடர்ந்து கூறலானார்:

> உம்முடைய தகப்பன் என்னைக் குறித்து விசாரித்தால், "தன் ஊராகிய பெத்லெகேமில் தன் குடும்பத்தார் யாவரும் வருஷத்துக்கு ஒரு தரம் பலியிட வருகிறபடியால் தாவீது அவ்விடத்திற்குப் போக என்னிடத்தில் வருந்திக் கேட்டான்" என்று நீர் சொல்லும்.[18] அதற்கு அவர், "நல்லது" என்றால், உம்முடைய அடியானுக்குச் சமாதானம் இருக்கும்; அவருக்கு எரிச்சலுண்டானால்,[19] அவராலே பொல்லாப்புத் தீர்மானப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்வீர் (20:6, 7).

யோனத்தான் மிகவும் கவலைப்பட்டு, தாவீதுக்குப் பின்வருமாறு உறுதியளித்தார்:

> ... இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை முன்னிட்டுத் தாவீதை நோக்கி: நான் நாளையாவது மறுநாளிலாவது என் தகப்பனுடைய மனதை அறிந்துகொண்டு, அவர் தாவீதின்மேல் தயவாயிருக்கிறார் என்று கண்டும், அதை அப்போது உமது செவிகளுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, உமக்குச் சொல்லியனுப்பாதிருந்தால், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யோனத்தானுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர், ஆனாலும் உமக்குத் தீங்கு செய்ய என் தகப்பனுக்குப் பிரியமாயிருந்தால், அதை உமது செவிகளுக்கு வெளிப்படுத்தி, நீர் சமாதானத்தோடே போகும்படிக்கு உம்மை அனுப்பிவிடுவேன்; கர்த்தர் என் தகப்பனோடு இருந்ததுபோல், உம்மோடும் இருப்பாராக (20:12, 13).[20]

தாவீதைக் கொல்வதற்கு சவுல் அரசின் எல்லா ஆதாரமூலங்களையும் எய்வார் என்றால், கர்த்தர் மட்டுமே அவரை(தாவீதை)க் காப்பாற்ற இயலும்.

யோனத்தான் (இவ்விதமாகத்) தாவீதிடம் பதிலுக்குத் தமது இருதயத்தை திறந்து காட்டி, விசுவாசத்தையும் அங்கு ஒளிந்திருந்த பயத்தையும் வெளிப்படுத்தினார். தாவீதுடன் தேவன் இருப்பார் என்பதிலும் தாவீது அடுத்த ராஜாவாவார் என்பதிலும் உறுதியான

நம்பிக்கையுடன் இருந்த யோனத்தான் பின்வருமாறு (தாவீதிடம்) கேட்டார்:

> மேலும், [நீர் ராஜாவாகும் பொழுது][21] நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு[22] நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயை செய்ய வேண்டியதும் அல்லாமல், கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் வேர் அறுக்கும்போதும், நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடமாலும் இருக்கவேண்டும் என்றான் (20:14, 15).

பதிவேட்டில் உள்ள விவரங்களின்படி, இது ஒன்றுதான் தாவீதிடம் யோனத்தான் கேட்ட வேண்டுகோளாக உள்ளது. தாவீது இதற்கு ஒப்புக் கொண்டார்[23] மற்றும் அவ்விரு நண்பர்களும் ஒருவருக்கொருவர் தாங்கள் செய்திருந்த உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள் (20:16, 17).

இதைச் செயல்படுத்துவதற்கு ஒரு விவரம் இன்னும் தாவீது அறிய வேண்டியதாயிருந்தது. அரசரின் ஒற்றர்கள் எவ்விடத்திலும் இருக்கையில், சவுலின் இருதய விருப்பத்தை யோனத்தான் தாவீதிடம் சொல்லக் கூடுவது எவ்வாறு? யோனத்தான் இதற்கு ஒரு ஆலோசனை வைத்திருந்தார்: அன்று தொடங்கி மூன்று நாட்களுக்குத் தாவீது, நன்கு அறியப்பட்ட நில அடையாளக்குறி ஒன்றின் அருகில் (ஏசேல் என்னும் கல்லண்டையில்) ஒளிந்திருக்க வேண்டும். யோனத்தான் அங்கு குறிப்பு வைத்து எய்து பார்க்கப் பழகுவது போல் வருவார். அவர் அம்புகளை எய்யும் வழிமுறையும், தமது வேலைக்காரச் சிறுவனுக்கு அவர் தரும் கட்டளைகளும் சேர்ந்து, செய்தி நல்லதா அல்லது கெட்டதா என்பதைச் சுட்டிக்காட்டும்.

யோனத்தானும் தாவீதும் பிரிகையில் யோனத்தான், "இதோ, கர்த்தர் எனக்கும் உமக்கும் என்றைக்கும் நடுநிற்கும் சாட்சி" (20:23) என்று கூறினார்.

அடுத்த நாளில், சவுல், யோனத்தான் மற்றும் அப்னேர் ஆகியோர் அரசரின் (உணவு) மேசையில் அமர்ந்தார்கள், "தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது" (20:25). முதல் நாளன்று சவுல், ஒருவேளை தாவீது சடங்காச்சாரத்தின்படி தீட்டாயிருக்கலாம்[24] என்று நினைத்தார் (சடங்காச் சாரத்தின்படி தீட்டானவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொள்வதற்கு ஒருநாள் கால அவகாசம் தேவைப்பட்டது; லேவி. 15:16-23; உபா. 23:10, 11). இருப்பினும், தாவீது இரண்டாம் நாளிலும் வராதிருந்தபோது சவுல் சந்தேகம் கொண்டார். தாவீது இருக்கும் இடம் பற்றிய தகவல் யாருக் கேனும் தெரியும் என்றால், அவர் யோனத்தானாகவே இருக்க முடியும். "அப்பொழுது சவுல்: ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனது என்ன என்று தன் குமாரனாகிய யோனத்தானைக் கேட்டான்" (20:27).

யோனத்தான் சொல்லும்படி அவரிடத்தில் தாவீது கூறியவற்றை, ஒரு சில மெருகேற்றுதல்களுடன் அவர் சொன்னார் (20:28, 29).

சவுல் கடுங்கோபத்தில் வேகமாய் நிலைமாறினார். அவர் "யோனத்தான் மேல் கோபமூண்டவரானார்" (20:30அ). அவர் தம் மகனிடம் கூச்சலிட்டு அலறினார்:

இரண்டகமும் மாறுபாடுமுள்ளவனின் மகனே,[25] நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும்,[26] ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை[27] நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள் வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை, இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா, அவன் சாகவேண்டும் என்றான் (20:30ஆ, 31).

தாவீது நம்பிக்கைத் துரோக குற்றம் செய்திருந்தார் அதனால் மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தார் என்பதே சவுலின் மறைமுகமான குறிப்பாயிருந்தது. ராஜாவின் கண்களில் கோபம் தகித்த நிலையில் மற்றும் அவர் இருதயத்தில் கொலை வெறி தாண்டவமாடிய நிலையில் அவருக்கு முன் நிற்பது என்பது யோனத்தான் செய்யக் கூடிய புத்திசாலித்தனமான செயலாக அவருக்குக் காணப்படவில்லை, ஆனால் யோனத்தான் தமது நண்பர் பழிதூற்றப்படுவதை அனுமதிக்க முடியாதவராயிருந்தார். யோனத்தான், "அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான்?" (20:32) என்று கேட்டார்.

சவுல் தம் முழுக் கட்டுப்பாட்டையும் இழந்தார். அவர் ஒரு ஈட்டியைக் கொண்டு தாவீதைக் கொல்ல மூன்று தரம் முயற்சி செய்திருந்தார். இப்பொழுது அவர் தம் ஈட்டியைத் தமது சொந்த மகனை நோக்கி வீசினார் (20:33)!

யோனத்தான் கோபத்தினால் ஏற்பட்ட படபடப்புடன் சற்று நேரம் அமர்ந்திருந்தார், பின்பு அவர் எழுந்து அந்த அறையில் இருந்து வெளியேறிச் சென்றார் (20:34). அவர் தம் தந்தையார் தம்மைக் கொல்வதற்கு இன்னொரு வாய்ப்பைப் பெறுவதை விரும்பவில்லை. மேலும், அவர் தமது தந்தைக்கு தாம் ஏதேனும் (தீமை) செய்து விடுவோமோ என்றும் பயந்திருக்கலாம்.

யோனத்தான் பெருந்துக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டார்.[28] அவரின் மனதில் இருந்த சந்தேகங்கள் யாவும் அகன்று போயிற்று. அது தாவீது கூறியபடியாகவே இருந்தது; அவரின் (யோனத்தானின்) தந்தை அவரது (யோனத்தானின்) நண்பரைக் கொல்லத் தீர்மானமாயிருந்தார்.

அடுத்த நாள் காலையில், யோனத்தான் தாவீதைச் சந்திப்பதாகத் தாம் கொடுத்திருந்த வாக்கைக் காத்துக் கொள்வதற்காகக் கனத்த இதயத்துடன் சென்றார். எல்லாம் சாதாரணமாகத் தோன்றும்படியாக அவர் தம் ஆயுதங்களை எடுத்து வரவும், அம்புகளைப் பொறுக்கித் தரவும் தம்முடன் ஒரு பிள்ளையாண்டானை அழைத்துச் சென்றார். (முன்பே) குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடன், அவர் அம்புகள் பலவற்றை எய்தார், பின்பு அந்தப் பிள்ளையாண்டானிடம் அவற்றை எடுத்து வரும்படி கூறினார். அவர் அந்தப் பிள்ளையாண்டானிடம், "அம்பு உனக்கு இன்னும் அப்பால் இருக்கிறது அல்லவா?" (20:37) என்று கூப்பிட்டுக் கேட்டார். அது, தாவீதைக் கொல்ல வேண்டும் என்று சவுல் தமது இருதயத்தில் முடிவு செய்திருந்ததை மற்றும் தப்பிச் செல்வது தவிர தாவீது தேர்ந்து கொள்ளக்கூடியது வேறெதுவும் இல்லை என்பதை அர்த்தப்படுத்த, முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சைகையாக இருந்தது.

யோனாத்தான் வில்லை மீண்டும் மீண்டும் பின் இழுக்கையில், அவரது கண்கள், அந்தப்பகுதியில் சவுலின் ஒற்றர்கள் யாரேனும் இருக்கின்றார்களா என்று ஆராய்ந்தன.[29] கடைசியில் வேறு எவரும் அங்கு இல்லை என்று திருப்தியடைந்த யோனத்தான், தமது வேலைக்காரப் பிள்ளையாண்டானிடத்தில் தாம் போதிய அளவு பயிற்சி எடுத்துக் கொண்டதாகக் கூறி, அவனை நகருக்குத் திருப்பி அனுப்பி விட்டார் (20:40).

அந்தப் பிள்ளையாண்டான், பார்வைக்கு மறைவான உடனே, தாவீது தாம் ஒளிந்து கொண்டிருந்த இடத்தை விட்டு எழும்பி வந்தார்,[30] அவரது முகம் துக்கத்தினால் திரையிடப்பட்டிருந்தது. அவரும் யோனத்தானும் அந்தச் செய்தியின் மறைமுகக் குறிப்பை பேசப்படாமலேயே அறிந்தார்கள். அவர் தங்கியிருக்க முடியாதிருந்தது மற்றும் யோனத்தான் கிளம்பிச் செல்ல முடியாதிருந்தது. யோனத்தானின் தந்தை தவறானவராயிருந்தார், ஆனால் அவர் இன்னமும் யோனத்தானின் தந்தையாகவே இருந்தார், மற்றும் அவர் அருகில் இவர் இருந்தாக வேண்டும் என்று பற்றுறுதி வற்புறுத்தியது.

இரு நண்பர்களும் பிரிவு சொல்லிக் கொண்டது இருதயத்தைப் பிளக்கும் காட்சியாக இருந்தது.[31] பின்பு அங்கு கண்ணீர் வெடித்தது. வசனம் 41, "அவர்கள் ... அழுதார்கள், தாவீது மிகவும் அழுதான்" என்று கூறுகிறது.

"எந்த நபருடன் இருக்கும் பொழுது நீங்கள் நீங்களாகவே இருக்கத் துணிகின்றீர்களோ, அவரே உங்கள் நண்பர் ஆவார்" என்று யாரோ ஒருவர் கூறினார்.[32] அத்தியாயம் 20ல், யோனத்தானிடம் தாவீது தம் இருதயத்தை ஊற்றியதை நாம் கண்டோம். யோனத்தான் தமது பயத்தை நேர்மையாக வெளிப்படுத்தி தாவீதின் வாக்குறுதியைக் கேட்டுக் கொண்டதை நாம் கண்டோம். இப்பொழுது நாம், இவர்கள் ஒன்றாய் அழுவதைக் காண்கின்றோம் - வளர்ந்த மனிதர்கள், பலம் வாய்ந்த மனிதர்கள், பல இராணுவ எதிர்ப்புகளைச் சந்தித்த நிபுணத்துவம் பெற்றவர்கள் இங்கே கண்ணீர் சிந்தினார்கள். ("உண்மையான மனிதர்கள்" அழுகின்றார்கள்.) வெளிப்படையான தன்மை என்பது உண்மை நட்புறவின் அழகுமிகுந்த விஷயங்களில் ஒன்றாக உள்ளது. நீங்கள் உண்மையான ஒரு நண்பரிடத்தில் நேர்மையுடனும் வெளிப்படையான தன்மையுடனும் இருக்க முடியும், அப்பொழுதும் அவர் உங்களை ஏற்றுக் கொள்வார். உண்மையான நண்பர் உங்கள் தவறுதல்களை அறிகின்றார், எவ்வகையிலும் அவர் உங்களை நேசிக்கின்றார்.

கடைசியில் தாவீதும் யோனத்தானும் பிரிவு சொல்லிக் கொள்ளும் வேளை வந்தது:

> அப்பொழுது யோனத்தான் தாவீதை நோக்கி: "நீர் சமாதானத்தோடே போம், 'கர்த்தர் என்றென்றைக்கும் எனக்கும், உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும், நடுநிற்கும் சாட்சி' என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக் கொண்டதை நினைத்துக் கொள்ளும்" என்றான். பின்பு அவன் எழுந்து புறப்பட்டுப் போனான்; யோனத்தானோ பட்டணத்திற்குப் போய் விட்டான் (20:42, 43).

யோனத்தான் நகரத்திற்குத் திரும்பினார், தீர்க்கப்படாத உறவுமுறைப் பிரச்சனைகளினால் அவர் தம் இருதயம் கனத்திருந்தது. தாவீது தம் உயிர் பற்றிய பயத்தினால் நிறைந்தவராக[33] வனப்பகுதியின் புறம் தம் முகத்தைத் திருப்பினார்.

நட்புறவின் நிலையான உறுதித்தன்மை (1 சாமுவேல் 21:1-23:16)

தாவீது முதலாவதாக, ஆசரிப்புக் கூடாரம் வைக்கப்பட்டிருந்த நோப் என்ற இடத்திற்குச் சென்றார். அங்கிருந்து அவர் பெலிஸ்தியாவின் காத் என்ற நகரத்திற்கு ஓடினார். பெலிஸ்தர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள், அவர் அங்கிருந்து மேற்கு யூதேயாவின் அதுல்லாம் கெபிக்குப் போனார். இங்கு அவர் மனக்குறைவு கொண்ட ஒரு கூட்ட மக்களுக்குத் தலைவரானார். அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் சவுல் சற்றும் சளைக்காமல் அவரைத் தேடிச் சென்றார் (1 சாமு. 23:14). கடைசியில் தாவீது மற்றும் அவருடன் இருந்தவர்கள் "ஒரேஸின் சீப் வனப்பகுதியில் இருந்த ஒரு காட்டில்" ஒளிந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், இது யூதேயாவின் மலைகளில் உபசரிப்புத் தன்மையற்ற பகுதியாக இருந்தது (23:15). இங்கு தாவீதும் அவரது நண்பரும் கடைசியாகச் சந்திப்பதை நாம் காண்கின்றோம்.[34]

"அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, [ஒரேஸின்] காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய்" (23:16அ). இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். சவுல் தாவீதிற்காக எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தும் அவரைக் கண்டுபிடிக்க இயலாதிருந்தார். ஆயினும் யோனத்தான் ஒரு நாள் காலையில் எழுந்து, "இனியும் இதை என்னால் பொறுக்க இயலாது. நான் தாவீதைக் காண வேண்டும்" என்று தமக்குள் கூறிக்கொண்டார். எனவே இவர் தமது இரவுப் பயணப்பையில் (தேவையான) ஒரு சில பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு, "[ஒரேஸின்] காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போனார்." அது, யோனத்தான் தமக்குச் சொந்தமாக ஒற்றர் முறைமையைக் கொண்டிருந்தார் என்றும் தாவீதுக்கு என்ன நேரிட்டுக் கொண்டிருந்தது என்று அவ்வப்போது அவர் தகவல் பெற்றார் என்றும் எனக்கு கூறுகின்றது. தாவீது எங்கிருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார், அவரிடம் இவர் சென்றார்.

நட்புறவு என்பது அதைப் போலவே உள்ளது. நீங்கள் உங்கள் நண்பரை விட்டுப் பல மைல்கள் தூரம் பிரிந்திருக்கலாம், ஆனால் அவர் உங்கள் நினைவுகளிலும் பாசப் பிணைப்புகளிலும் நிலைத்திருக்கிறார். நீங்கள் (வாழ்த்து) அட்டைகளை, கடிதங்களை, அல்லது தொலைபேசி அழைப்புக் களைப் பரிமாறிக்கொள்ளுகின்றீர்கள். நீங்கள் அவருடன் தொடர்பு கொண்டிருக்கின்றீர்கள்; அவரது வாழ்வில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் அறிகின்றீர்கள். அவர் அகம் மகிழும் போது நீங்கள் அகம் மகிழ்கின்றீர்கள் அவர் அழும்போது நீங்கள் அழுகின்றீர்கள் (ரோமர் 12:15). பின்பு, நீங்கள் இனியும் பிரிந்து இருக்க இயலாது என்ற நிலை வரும்போது,

நீங்கள் சற்று நேரமாகிலும் அவரைக் காண்பதற்கான வழி ஒன்றைக் கண்டறிகின்றீர்கள்.

இந்தப் பயணத்தில் யோனத்தான் எதிர்கொண்டிருந்த அபாயத்தை நாம் மிகையாய் வலியுறுத்திக் கூற இயலாது. சவுல், தாவீதுடன் நட்புற வாயிருக்கும் எவரையும் கொலை செய்யத் தயங்காதிருப்பதைச் செயல் விளக்கப்படுத்தியிருந்தார்,[35] *அவர் தம் சொந்த மகனைக் கூடக் கொலை செய்யத் தயங்காதிருப்பதையும் செயல்விளக்கப்படுத்தியிருந்தார். யோனத்தான் தாவீதைக் காண்பதற்குத் தமது உயிரைப் பணயம் வைத்த வராய்ச் சென்றார். அதுவே நண்பரைப் பற்றிய எல்லாமுமாக உள்ளது. "ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை" என்று இயேசு சொன்னார் (யோவா. 15:13).*

நட்புறவின் உற்சாகமூட்டுதல் (1 சாமுவேல் 23:16-18)

யோனத்தான் தாவீதிடத்திற்குச் சென்றது ஏன்? அவரது நட்புறவை மகிழ்வுடன் அனுபவிக்கத்தான் என்று நான் உறுதியாய் நம்புகின்றேன் - ஆனால் அதைக்காட்டிலும் அதிகமான சில காரணங்களும் இருந்தன. நண்பர்கள் தங்கள் நண்பர்களிடம் இருக்கையில் உணர்வுப்பூர்வமானவர் களாய் இருப்பார்கள் மற்றும் தாவீது ஒவ்வொரு நாளும் தாம் சவுலினால் கொல்லப்படுவோம் என்ற பயத்துடன் வாழ்வது அவருக்கு எவ்வளவு ஊக்கம் இழக்கச் செய்வதாய் இருந்திருக்கும் என்று யோனத்தான் அறிந்தார். அவரை உற்சாகப்படுத்துவதற்காகவே யோனத்தான் தாவீதிடம் சென்றார். "அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையை திடப்படுத்தி" (23:16). "திடப்படுத்தி" என்பது மூல மொழியில்: "அவரது கையைத் திடப்படுத்தி" (KJVயில் காணவும்) என்ற நேரடியான அர்த்தம் தருவதாக உள்ளது. [ஆங்கிலத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு சிறப்பாக உள்ளது], இது "நிலைப்படுத்துதல், பெலப் படுத்துதல், உற்சாகமூட்டுதல்" என்று அர்த்தம் தருகின்ற எபிரெயச் சொல் வழக்காக உள்ளது.

யோனத்தான் "தேவனுக்குள் அவன் தாவீதின் கையைத் திடப் படுத்தினார்." அவர் தேவனுடைய திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் குறித்துத் தாவீதைப் பெலப்படுத்தினார். தாவீதைத் தேவன் வெற்றி யடையச் செய்வார் என்ற தமது உறுதிப்பாட்டையும், தமது தந்தையின் முயற்சிகள் யாவும் தோல்வியை தழுவும் என்பதையும் யோனத்தான் தாவீதுடன் பகிர்ந்து கொண்டார். "நீர் பயப்பட வேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்க மாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் இராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்;[36] *அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்" (23:17; 1 சாமு. 24:16-20ஐக் காணவும்).*

அவ்வகையான நண்பர்கள் விசேஷித்தவர்களாய் இருக்கின்றார்கள்! வெளிச்சக் கண்ணோக்கும், மேலே தூக்கி விடும் இயல்பும், உற்சாக மூட்டுதலும் கொண்ட மக்கள் உங்களைச் சுற்றிலும் இருத்தலை நீங்கள் மகிழ்வுடன் அனுபவித்ததில்லையா?[37] நண்பர்கள் ஒருவருக்கொருவர் கட்டியெழுப்புகின்றனர். இன்று நான் இருதயம் புண்பட்டிருந்தால், என் நண்பர் என்னை மேலே தூக்குகின்றார். நாளை என் நண்பர் உற்சாகம் இழந்து நிற்கலாம். அப்பொழுது நான் அவரை இதப்படுத்துவேன். ஒருவர் பிறருக்கு உதவுதல் என்பதே நட்புறவு பற்றிய முழு விஷயமாக உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, "கர்த்தருக்குள் நமது கைகளைத் திடப் படுத்த" - கர்த்தருக்குள் நாம் விசுவாசமாயிருக்கும்படி நம்மை உற்சாகப் படுத்துபவர்களாயிருக்க, நமக்கு யோனத்தான் போன்ற நண்பர்கள் தேவை. (நாம்) கர்த்தருக்கு ஊழியம் செய்வதை சில நண்பர்கள் சுலபமாக்கு கின்றார்கள் (அப். 10:24), மற்றும் சில "நண்பர்கள்" அதைக் கடினமாக்கு கின்றார்கள் (2 சாமு. 13:3ஐக் கவனிக்கவும்). "ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்" என்று பவுல் எச்சரித்தார் (1 கொரி. 15:33). உங்கள் நண்பர்களை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுங்கள்; நீங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுகின்றீர்கள் என்பதைத் தீர்மானம் செய்ய அவர்கள் உதவக் கூடும்.

இப்பொழுது, (யோனத்தானும் தாவீதும்) பிரிவு சொல்லிக் கொண்ட தின் கவலையும் கண்ணீரும் நமது கற்பனைக்கு விடப்பட்டுள்ளது. யோனத்தானும் தாவீதும் தங்கள் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள்; பின்பு, "தாவீது காட்டில் இருந்து விட்டான்; யோனத் தானோ தன் வீட்டிற்குப் போனான்" (1 சாமு. 23:18). அவர்கள் மீண்டும் ஒருக்காலும் ஒருவர் ஒருவரைக் காணாதபடிக்குப் பிரிந்து சென்றார்கள்.

நட்புறவின் வேதனை
(2 சாமுவேல் 1)

நீங்கள் உங்களை மற்றொருவருக்கு வெளிப்படுத்துகின்ற பொழுது, உங்களை நீங்கள் எளிதில் தாக்கப்படக் கூடியவராக்கிக் கொள்ளுகின்றீர் கள். உங்கள் இருதயத்தை இடர்ப்பாட்டிற்குள்ளாக்குகையில், அது நசுக்கப்பட்டு விடக் கூடும். இருப்பினும் இதற்கு மாற்றாக இருக்கும் ஒரே செயல் என்னவென்றால், உங்களுடைய இருதயத்தை காற்றில்லாத, தூசிமிகுந்த இடத்தில் அடைத்து வைத்து அது மூச்சுத் திணறி இறக்கும்படி அனுமதித்தல் என்பதுதான். உங்கள் இருதயம் வேதனையை உணராதிருக் கலாம், ஆனால் அது மகிழ்ச்சியையும் உணராது. உங்கள் வாழ்வை ஒருவர் மற்றவருக்கு ஒப்புக்கொடுங்கள்; வாழ்வதற்கு இது ஒன்றுதான் வழி.

தாவீது, யோனத்தான் ஆகியோரின் கண்ணீரை நாம் கண்டோம்; பெருந்துயர் கொண்ட பிரிவு சொல்லிக் கொள்ளுதலை நாம் கண்டோம். யோனத்தான் தாவீது ஆகியோரின் கசப்பும் இனிப்பும் கொண்ட நட்புறவின் கடைசி அத்தியாயத்திற்கு நாம் வருகையில், இது வேதனை மிகுந்த காட்சியாக உள்ளது.

தாவீதும் அவரது குழுவில் இருந்த மனிதர்களும், இஸ்ரவேலர்களுக்கும் பெலிஸ்தர்களுக்குமிடையே பேரழிவு தரும் யுத்தம் மூண்ட செய்தியைக் கேள்விப்பட்ட பொழுது, அவர்கள் இன்னும் அமலேக்கியர்களுடன் தாங்கள் செய்திருந்த சண்டையிலிருந்து மீளாதிருந்தார்கள். செய்தி கொண்டு வந்த மனிதனிடம் தாவீது பயம் நிறைந்தவராய், "நடந்த செய்தி என்ன?" (1:4அ) என்று கேட்டார்.

அந்த இளைஞனின் வார்த்தைகள் தாவீதின் இருதயத்தில் கத்திபோல் இறங்கின: "ஜனங்கள் யுத்தத்தைவிட்டு முறிந்தோடிப் போனார்கள்; ஜனங்களில் அநேகம்பேர் விழுந்து மடிந்துபோனார்கள்; சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்தார்கள்" (1:4ஆ).

தாவீது அதை நம்புவதற்கு விரும்பவில்லை (1:5). இருப்பினும் அந்த மனிதன் கண்ணால் கண்ட சாட்சியத்தைக் கொடுத்தபோது, அவர் தமது நண்பர் இறந்துபோனதை அறிந்தார்.

> *அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, சவுலும், அவன் குமாரனாகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத் தாரும், பட்டயத்தாலே விழுந்தபடியினால் புலம்பி அழுது, சாயங்கால மட்டும் உபவாசமாயிருந்தார்கள் (1:11, 12).*

தாவீது எழுதிய அழகிய நினைவுப்பாடல் ஒன்று 1:19-27ல் காணப் படுகிறது. அந்தப் புலம்பலில் சவுல் மற்றும் யோனத்தான் ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டனர் - ஆனால் தாவீதின் அடிப்படை நோக்கம் அதன் தலைப்பில் வெளிப்படுகின்றது: "வில்லின் பாடல்" (1:18). வில் என்பது யோனத்தானுடைய சிறப்பு அடையாளமாயிருந்தது, அது சவுலின் சிறப்பு அடையாளமாயிருந்ததில்லை. பளிங்கிலும் கல்லிலும் பல நினைவுச் சின்னங்கள் நண்பர்களுக்கென்று எழுப்பப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றில் எதுவும் யோனத்தானுக்காகத் தாவீது எழுதிய இரங்கற்பாடலை விஞ்சி நிற்க இயலாது.

அந்தப் பாடலில் தாவீது, யோனத்தான் மற்றும் அவரது தந்தை (சவுல்) ஆகியோரின் இராணுவ பராக்கிரமத்தைக் கொண்டாடினார் (1:22). அவர் யோனாத்தானின் உண்மைத் தன்மையையும் இவர் (யோனத்தான்) தம் தந்தை மீது கொண்டிருந்த பற்றுறுதியையும் பாராட்டினார் (1:23). இருப்பினும் எல்லாவற்றிற்கும் மேலாக தாவீது தமது இழப்பைப் பற்றிப் பாடினார்:

> *போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே!*
> *யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே!*
> *என் சகோதரனாகிய யோனத்தானே! உனக்காக நான்*
> *வியாகுலப்படுகிறேன்;*
> *நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரிய*
> *மாயிருந்தது;*
> *ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது.[38]*
> *பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே! ... (1:25-27).*

ஆம், நீங்கள் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்தும் பொழுது, வேதனையில் உங்களை வெளிப்படுத்துகின்றீர்கள். இருப்பினும், தாவீது தமது இருதயம் உடைந்து போயிருந்ததால் யோனத்தானுடனான தமது நட்புறவைக் குறித்துப் புலம்பி அழவில்லை. மாறாக, அவர் அந்த நட்புறவைக் கொண்டாடி, அதன் விலைமதிப்பற்ற நினைவுகளைத் தமது இருதயத்தில் சேர்த்து வைத்துக் கொண்டார். இது ஒன்றுதான் வாழ்வதற்கான வழி என்று நான் மீண்டும் கூறுகின்றேன்.

முடிவுரை

இந்தப் பாடம் நட்புறவுக்கான புகழுரையாக உள்ளது, ஆனால் இது அதைக் காட்டிலும் மேலானதாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன். இது நம் யாவருக்கும் ஒரு அறைகூவலாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நகரம் ஒன்றின் வறிய பகுதிக்குப் பார்வையிடுவதற்காகக் காரோட்டிச் சென்ற பிரசங்கியார் ஒருவரின் கதையை நான் கேட்டிருக்கின்றேன்.[39] அவர் தாம் சென்றிருந்த வீட்டை விட்டு வெளியே வருகையில், கந்தலான உடையணிந்திருந்த ஒரு சிறுவன் தமது புதிய காரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்தப் பையன், “மிஸ்டர், இது ஒரு கார்!” என்றான். சற்று விளக்கம் தேவை என்று நினைத்த பிரசங்கியார், “இதைப்போன்ற ஒரு காரை என்னால் வாங்க இயலாது, ஆனால் நான் எனது வேலையை(ஊழியத்தை)ச் செய்யக் கூடுவதற்காக, கார் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள என் நண்பர் ஒருவர் இதை எனக்குப் பரிசளித்தார்” என்று கூறினார். சற்று நேரம் யோசனை செய்த பின் அந்தப் பையன், “நான், அவர் போன்ற ஒரு நண்பனாக இருக்க முடிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்றான்.

இந்தக் கதையை நான் முதன் முதலாகக் கேட்ட பொழுது, அந்தப் பையனின் பதிலானது, “எனக்கு அவர் போன்ற நண்பர் ஒருவர் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்பதாயிருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். “நான், அவர் போன்ற ஒரு நண்பனாக இருக்க முடிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்ற வார்த்தைகள் என் இருதயத்தை அசைத்தன.

“உறுதிப்பாடு”, “சுயநலமின்மை”, “வரவிருக்கும் சோதனைகளைச் சந்திக்க பெலன்”, “வெளிப்படையான தன்மை”, “உறுதியுடன் நிலைத்திருத்தல்”, மற்றும் “உற்சாகமூட்டுதல்” என்பவை போன்ற வார்த்தைகளுடன் நான் உண்மையான நட்புறவை விவரித்திருக்கையில், நாம் ஒருவேளை, “எனக்கு அவர் போன்ற நண்பர் ஒருவர் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்று நினைத்திருக்கலாம். அப்படியென்றால் நாம் நமது சிந்தனையை, “நான், அவர் போன்ற ஒரு நண்பனாக இருக்க முடிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்பதற்கு மாற்றிக் கொள்வோமாக.

இந்தப்பாடத்தின் தொடக்கத்தில், இதைப் படிக்கும் யாவருக்கும் இது

உதவியாயிருக்கும், சிறப்பாக நட்புறவின்மையுடன் இருப்பதாக நினைக்கின்ற யாவருக்கும் இது உதவியாக இருக்கும் என்ற எனது நம்பிக்கையை நான் விளக்கப்படுத்தியிருந்தேன். உங்களுக்கு நான் இரண்டு விஷயங்களைக் கூற என்னை அனுமதியுங்கள்: முதலாவது, உங்களுக்கு நண்பர்கள் இல்லையென்றால், நண்பர் தேவைப்படுகின்ற இன்னொருவரைக் கண்டறிந்து, (நீங்கள் அவருக்கு) நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருந்த வகையிலான நண்பராயிருங்கள். "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்"[40] என்பது இன்னமும் உண்மையானதாகவே உள்ளது.

இரண்டாவது (மற்றும் மிகவும் முக்கியமானது), இங்கு விவரிக்கப் பட்ட பண்புகள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவரை நாம் யாவரும் நண்பராகக் கொண்டிருக்க முடியும் என்பதை நினைவில் வையுங்கள். அவர், "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதர்" என்று அழைக்கப்பட்டார் (மத். 11:19; லூக். 7:34), அவர் தம்மைப் பின்பற்றுபவர்களைத் தமது "சிநேகிதர்கள்" என்று அழைத்தார் (லூக். 12:4; யோவா. 15:15). அவர் உங்கள் நண்பராயிருக்கின்றாரா? அவர், "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா. 15:14) என்று கூறியுள்ளார் என்பதை நினைவில் வையுங்கள். நாம் வேறு நண்பர்கள் எத்தனை பேரைக் கொண்டிருப்பினும், அல்லது கொண்டிராதிருப்பினும், இவர் நாம் கொண்டிருக்க வேண்டிய நண்பராக இருக்கின்றார்!

காட்சி - உதவிக் குறிப்புகள்

"நட்புறவு" என்ற வார்த்தையைக் கொண்ட ஒரு பெரிய பலகையானது இந்தப் பாடம் நடத்தும் நேரம் முழுவதிலும் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது செயல் விளைவுள்ளதாயிருக்கும். அதிகம் விரிவான அணுகுமுறை விரும்பப்படுகிறது என்றால், பின்வரும் பெரிய எழுத்துக்கள் கொண்ட ஒரு வரைபடத்தைத் தயாரித்துக் கொள்ளுங்கள்:

நட்புறவு

பின்பு, பாடத்தின் பிரதான கருத்துக்களை (உட் தலைப்புக்களை) மேலுள்ள வெற்றிடத்தில் செருகுவதற்கேதுவாக பின்வரும் வார்த்தைகளைக் கொண்ட அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்: "உறுதிப்பாடுள்ள"; "சுயநலமின்மையான"; "சோதனையுள்ள"; "வெளிப்படையான தன்மையுள்ள"; "உறுதியாய் நிலைத்திருத்தலான"; "உற்சாகமூட்டுதலான"; "வேதனையுள்ள."

குறிப்புகள்

[1]இந்த முதல் பத்தியில் உள்ள வேத வசனங்கள் தவிர, பிற மேற்கோள்கள் யாவையும் Frank Crane, *A Friend Like You* (Heartland Samplers, Inc., 1991), devotional calendar என்ற இதழில் இருந்து எடுக்கப்பட்டவையாகும். [2]A book currently on the market is titled *The Friendless American Male.* [3]தாவீது சவுலுக்கு முறையாக சுரமண்டலம் வாசித்துக் கொண்டிருந்தார் என்றால் (இ.வ. 1 சாமு. 16:23; 17:15), தாவீது யார் என்று சவுல் அறிந்திராதது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. சாத்தியமான பல விளக்கங்கள் உள்ளன. தாவீது சவுலுக் காகச் சுரமண்டலத்தைக் கடைசியாக வாசித்திருந்து சில நாட்கள் கடந்திருக்கலாம் - மற்றும் தாவீதின் தோற்றம் மாறியிருக்கலாம். (பின்னாளில் அவர் தாடியைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது - 1 சாமுவேல் 21:13; இதை அவர் ஏற்கனவே வளர்க்கத் தொடங்கியிருக்கலாம்.) பெரும்பாலும் சவுல் ஏறக்குறைய மனத்தெளிவு அற்றவராய் இருந்ததால், இது அவரது நினைவு சக்தி பாதிக்கப்படக் காரணமாயிருந் திருக்கலாம். இருப்பினும், இந்தப் பாடத்தின் முக்கிய பகுதியில் கொடுக்கப் பட்டுள்ள விளக்கம் அநேகமாக மிகச் சிறந்ததாக இருக்கின்றது: சவுல், தாவீதை யார் என்று கேட்கவில்லை, ஆனால் அவரது தந்தை யார் என்றே கேட்டார், இது தாவீதை அரண்மனைக்குள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்த நிகழ்வாக இருந்தது. [4]தாவீதின் தந்தை யார் என்பதை சவுல் முன்னரே கேள்விப்பட்டிருந்தார் (1 சாமு. 16:18-22). இருப்பினும், பெயர்களை (விசேஷமாக ஒவ்வொரு நாளும் நான் புழங்கியிராத பெயர்களை) நினைவில் கொள்வதில் பிரச்சனைகளைக் கொண்டுள்ளவன் என்ற வகையில் நான், சவுல் இதை எவ்வாறு மறந்திருக்கக் கூடும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. [5]இது, சவுல் "ஈசாயினிடத்தில் ஆள் அனுப்பி, தாவீது எனக்கு முன்பாக நிற்கட்டும்; என் கண்களில் அவனுக்குத் தயவு கிடைத்தது" (1 சாமு. 16:22) என்று கூறிய வேளையாக இருக்கலாம். [6]1 சாமுவேல் 18:3ஐ 1 சாமுவேல் 20:16 உடன் ஒப்பிடவும். [7]தாவீது தம்மைத் தொடர்ந்து யோனத்தானின் "அடியான்" என்று குறிப்பிட்டார் என்பதைக் கவனிக்கவும். [8]1 சாமுவேல் 20:23ஐக் காணவும். இது "கர்த்தருடைய உடன்படிக்கை" என்றும் அழைக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும் (1 சாமு. 20:8). [9]1 சாமுவேல் 13:22ஐக் கவனிக்கவும் - இருப்பினும், இஸ்ரவேலர்கள் பெலிஸ்தர்களுடனான தங்கள் அடுத்தடுத்த வெற்றிகளில் பட்டயங்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வார்கள் என்று யூகிக்கப்படுகின்றது. பின்னாட்களில் தாவீதும் அவரது மனிதர்களும் குறைந்தது நானூறு பட்டயங்கள் வைத்திருந்தனர் (1 சாமு. 25:13). [10]நாம் இன்றைய நாட்களில் பயன்படுத்தும், "தான் போட்டிருந்த சட்டையைக் கழற்றி அவனுக்குக் கொடுத்து விட்டான்" என்ற சொற்றொடர், யோனத்தானின் செயலை விவரிக்கப் பயன்படலாம்.

[11]யோனத்தான் தாவீதுக்கு உடைமைகளைக் கொடுத்தார்; கொடுப்பதற்கென்று எதுவும் கொண்டிராத தாவீது, தம்மையே கொடுத்தார். [12]James Burton Coffman, *Commentary on First Samuel* (Abilene, Tex.: ACU Press, 1992), 215. [13]தாவீது செய்த ஒவ்வொன்றும் சவுலுக்கு சாதகமாகப் பிரதிபலித்தது. [14]யோனாத்தானின் கேள்வியில், பேசப்படாத ஆனால் புரிந்து கொள்ளப்பட்ட விவாதம் ஒன்றிருந்தது. சவுல் காரணமின்றி தாவீதைக் கொலை செய்வாரென்றால், அது நாடு முழுவதிலும் அமைதியின்மையை உண்டாக்கி விடும். எவரொருவரும் தாம் பாதுகாப்பாக இருப்பதாகக் கருத மாட்டார்கள். [15]சவுல் இந்த வாக்குறுதியளித்ததில் உண்மையுடன் செயல்பட்டாரா என்று சிலர் கேள்வியெழுப்புகின்றார்கள். [16]வேத வசனமானது, [சவுலும்] "தானும் … சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லி …" (1 சாமு. 19:24) என்று கூறுகின்றது. இருப்பினும், "தீர்க்கதரிசனம்" என்ற வார்த்தையானது எதிர்மறையான கருத்திலும் பயன்படுத்தப் படக் கூடும். இதே

வார்த்தையானது மூலமொழியில், 1 சாமுவேல் 18:10ல் பயன்படுத்தப்பட்டு, NASB யில் "பைத்தியம் போல் உளறினான்" (raved) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "he raved in the midst of the house." சவுல் நாயோதியில் இருபத்து நான்கு மணி நேரம் "நிர்வாணமாய்க்" கிடந்த வேளையில் உண்மையில் என்ன செய்தார் என்பது பற்றிச் சில கேள்விகள் உள்ளன. [17]அவர் (யோனத்தான்) சவுலுடன் எந்த நிலையில் நின்றார் என்பதைத் தாவீது தமது சொந்த சிந்தையில் தெளிவு படுத்திக் கொள்ளுதல் என்பது இந்தத் திட்டத்தின் துணை நோக்கமாயிருந்தது. அவரது வாழ்வின் மீதான இந்த முயற்சிகள் சவுலின் தற்காலிகப் பைத்திய சிந்தையினால் விளைந்ததாயிருக்கலாம், இவைகள் உண்மையில் சவுலின் பகுத்தறிவுள்ள விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தாமல் இருக்கலாம். ஒருவேளை, அவர் (யோனத்தான்) இதற்கு முன் தாவீதைச் சவுல் கொல்ல முயன்ற வேளையில் அரசரிடத்தில் அவரை (தாவீதை) ஒப்புரவாக்கியது போல மீண்டும் செய்யக் கூடியவராயிருக்கலாம். (அமாவாசையன்று தாவீது வரவேண்டும் என்று சவுல் எதிர்பார்த்திருந்ததால் [1 சாமு. 20:26, 27], சவுல் "தற்காலிகப் பைத்திய நிலையின் காரணத்தினால் குற்றம் சுமராதபடி" வேண்டுகோள் விடுக்கத் திட்டமிட்டிருக்கலாம் என்று காணப்படுகின்றது. [18]தாவீதின் வாழ்க்கையைப் பற்றி நாம் படிக்கையில், பொய்கூறுதல் மற்றும் பிற நேர்மையற்ற தன்மை ஆகியவற்றைக் காண்போம். (ஆனால்) இதிலிருந்து நாம், தேவன் பொய்யுரைத்தலை அங்கீகரிக்கின்றார் என்று யூகித்து விடக் கூடாது. ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் தாங்கள் கூறிய எல்லாவற்றிற்கும் அங்கீகாரப் போர்வை அளிக்காமல், என்ன நடந்தன என்பதைப் பதிவு செய்துள்ளார்கள். [19]NIVயில், "if he loses his temper" (அவர் உணர்வுக் கட்டுப்பாட்டை இழந்தா ரென்றால்) என்றுள்ளது. சவுல் நிச்சயமாகவே அவ்வாறே ஆனார்! [20]யோனத்தான், "கர்த்தர் என் தகப்பனோடு இருந்தது போல, உம்மோடும் இருப்பாராக" என்றார். யோனத்தான், தமது தந்தையின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் - அவர் அரசராயிராதபடி புறக்கணிக்கப்படுவதற்கு முன்பு - யெகோவா அவருடன் (சவுலுடன்) இருந்த வகை முறையைக் குறிப்பிட்டார்.

[21]துரதிர்ஷ்டவசமாக யோனத்தான், தாவீது ராஜாவானபொழுது உயிருடன் இருக்கவில்லை. [22]புதிதாக முடி சூட்டப்படும் அரசர், உடனடியாக சாத்தியக் கூறுள்ள எல்லா எதிரிகளையும் கொன்று போடுதல் என்பது பொதுவான வழக்கமாக இருந்தது. [23]இந்த வேண்டுகோளில் யோனத்தான் தமது "வீட்டை [வீட்டாரை] உள்ளடக்கினார். தாவீது தாம் யோனத்தானுக்குக் கொடுத்த வாக்குறுதியை பின்னாட்களில் அவரது மகனைக் கனப்படுத்தியதன் மூலமாகவும் (2 சாமு. 9:7) அவரை மரணிக்கச் செய்யாதபடி காத்துக் கொண்டதன் மூலமாகவும் (2 சாமு. 21:7) நினைவுகூர்ந்தார். [24]சடங்காச்சாரமாக தீட்டாயிருத்தல் என்பது இஸ்ரவேலர்கள் மதரீதியான பண்டிகைகளில் கலந்து கொள்வதைத் தடை செய்தது (லேவி. 7:20, 21 முதலியன). [25]"மகனே" என்பது "இயல்பில் பங்கேற்கின்ற" என்று அர்த்தம் தருகின்ற எபிரெய மரபுச் சொல் ஆகும். இந்தச் சொல்விளக்கம் "நிலை பிறழ்வுபட்ட கலகக்காரனே" என்று நேரடி அர்த்தம் தருகின்றது. ஆயினும், அதனைக் காட்டிலும் அதிக அவமானப் படுத்துவதாகவும் இது உள்ளது. இது இன்றைய நாட்களில் "பெண் நாய்க்குப் பிறந்தவனே" என்று நேரடியாக அர்த்தம் தரும் கெட்ட வார்த்தையுடன் ஒப்பிடப்படலாம், ஆனால் இது மாபெரும் அவமானங்களில் ஒன்றாக உள்ளது (see LB paraphrase of this verse). [26]யோனத்தான் பிறந்தபோது அவரது தாயின் நிர்வாணம் வெளிப்பட்டதால், இந்தச் சொற்றொடர் "உன்னைப் பெற்றதற்கு உன் தாய் வெட்கக் கேட்டிற் குள்ளானாள்" என்று அர்த்தப்படலாம். அல்லது இந்தச் சொல் விளக்கம், பதவி நீக்கப்பட்ட அரசரின் மனைவிகள் அவருக்கு அடுத்து அரசராகுபவருக்கு மனைவி களானார்கள் என்ற உண்மையைக் குறிப்பிடுவதாகவும்

இருக்கலாம் (2 சாமு. 12:18ஐக் காணவும்). [27]செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில், "நீ நட்புறவை ஏற்படுத்திக் கொண்டாய்" என்றுள்ளது (NEB யில் காணவும்). NIV யில் "நீ (தாவீதின்) பக்கமாயிருக்கின்றாய்" என்றுள்ளது. [28]யோனத்தானால் உண்ண முடியாமல் போனதாக 1 சாமுவேல் 20:34 கூறுகின்றது. [29]யாரேனும் கவனிக்கின்றார்கள் என்று யோனத்தான் கண்டிருந்தால், தாவீது அபாயத்திற்குள்ளாகாதபடி, அவர் தம் வேலைக்காரனுடன் நகருக்குத் திரும்பிச் சென்றிருப்பார் என்பதில் ஐயம் எதுவும் இல்லை - மற்றும் இதைத் தொடர்ந்து வருகின்ற மனம் நெகிழச் செய்யும் காட்சியை நாம் பெற்றிருக்க மாட்டோம். [30]தாவீது "மூன்று முறை வணங்கியதாக" 1 சாமுவேல் 20:41 குறிப்பிடுகிறது. இது அரசரின் மகன் என்ற வகையில் யோனத்தானுக்கு அளிக்கப்பட்ட மரியாதை யாக இருக்கலாம் (1 சாமு. 24:8ஐக் காணவும்) அல்லது தேவன் மீதான மரியாதை யினிமித்தம் ஆனதாக இருக்கலாம் ("கர்த்தருடைய சித்தம் செய்யப்படுவதாக") - அல்லது இது இவ்விரு நோக்கங்களையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.

[31]இன்றைய நாட்களில் உலகத்தின் பல பகுதிகளில் இன்னமும் நடைமுறையில் இருப்பது போலவே, அந்த நாட்களில் கன்னத்தில் முத்தமிடுதல் என்பது நடைமுறை யில் காணப்பட்ட வாழ்த்தாக இருந்தது. [32]Frank Crane, *A Friend Like You* (Heartland Samplers, Inc., 1991), devotional calendar. [33]1 சாமுவேல் 23:17; 27:1 முதலியவற்றைக் கவனிக்கவும். தாவீது தம் உயிருக்குப் பயந்ததினால் ஓடினார் என்று பல வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. கொடுக்கப்பட்ட இரு வசனங்களும் மாதிரிகளாக உள்ளன. [34]தாவீதைத் துரத்திச் செல்வதில் யோனத்தான் பங்கேற்காதபடியினால், 20ம் அதிகாரத்தின் முடிவில் இருந்து 23ம் அதிகாரத்தின் இந்தக் காட்சி வரையிலும் அவரைப் பற்றிய குறிப்பு எதுவும் நமக்குக் கிடைப்பதில்லை. [35]நோபில் இருந்த ஆசாரியர்கள் தாவீதுக்கு உதவியதால் அவர்களைச் சவுல் கொலை செய்வித்திருந்தார். [36]"நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்" என்ற சொற்றொடர் ஒரு வேண்டுகோளாயிருப்பதில்லை, ஆனால் இது ஒரு வாக்குறுதியாக உள்ளது. என்னதான் வந்தாலும், யோனத்தான் இரண்டாம் இடத்தில் இருந்தாலும் அதில் தாம் திருப்தியடைவதாகவும், தொடர்ந்து அவரை ஆதரிப்பதாகவும் தாவீதிடம் வாக்குறுதியளித்தார். [37]பிரசங்கி 4:9-12ல் நாம் பிறரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுகின்ற பலம் பற்றிப் பிரசங்கியார் பேசினார். [38]தேவன் ஓரினச் சேர்க்கையை அங்கீகரிக்கின்றார் என்று நிரூபிக்க விரும்புகின்ற ஒரு சிலர், தாவீதும் யோனத்தானு ம் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்று "நிரூபிக்க" இந்த வசனப் பகுதியைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றார்கள். ஆயினும் தாவீது, யோனத்தானின் அன்பினுடைய சுயநலமற்ற இயல்பை(யே) இங்கு குறிப்பிடுகின்றார், அந்த அன்பு பாலுறவு பற்றிய இயல்பு அல்ல. [39]நான் ஏற்கனவே வேறொரு பாடத்தில் இந்தக் கதையைக் குறிப்பிட்டுள்ளேன், இருப்பினும் இவ்விடத்தில் இது பொருத்தமாக இருப்பதால், மீண்டும் இதைப் பயன்படுத்த முடிவு செய்தேன். [40]நீதிமொழி 18:24. இந்த வசனத்தைப் பொறுத்தமட்டில் பாடரீதியான சிரமங்கள் உள்ளன. நவீன மொழிபெயர்ப்பாளர்கள் பலர், இதை மிகவும் மாறுபட்ட வகையில் மொழிபெயர்க்கின்றார்கள். இதன் ஒரு பகுதியோ அல்லது பாரம்பரியமோ எதுவாயிருந்தாலும், இதை நான் ஒரு உண்மையான பழமொழி என்ற வகையில் உள்ளடக்கியிருக்கிறேன்.

மோசமான காலங்களில் உயிர்பிழைத்திருப்பது எப்படி

(1 சாமுவேல் 18-23)

அந்தக் குகை குளிராகவும் ஈரமாகவும் இருந்தது. கூரையின் மீது சேர்ந்த பனித்துளிகள், குளிர்ந்த தரையில் சொட்டின. தாவீது தமது மேலங்கியைத் தமது தோள்களைச் சுற்றி அதிக நெருக்கமாய் இழுத்து விட்டுக்கொண்டார், அவர் குளிரினால் நடுங்கினார். பசி அவரது வயிற்றைக் கிள்ளியது. இருப்பினும் அவர் உடலில் இருந்த குளிரல்ல, ஆனால் அவரது ஆத்துமாவில் இருந்த குளிர்தான் மிகப்பெரியதாயிருந்தது; உணவிற்கான பசியல்ல, ஆனால் பரிவிரக்கத்திற்கும் அக்கறைக்குமான அவரது பசிதான் மிகப் பெரியதாயிருந்தது. தாவீது தம்மால் இயன்ற அளவு மிகச் சிறப்பாகச் செய்ததும், தேவன் மீது விசுவாசம் கொண்டிருந்ததும்தான் அவர் செய்த ஒரே குற்றமாயிருந்தது, ஆனால் சவுலின் அன்பு, பித்தம்பிடித்த பொறாமையாக மாறியிருந்தது. இப்பொழுது தாவீது வேட்டைக்குத் துரத்தப்படும் ஒரு மிருகம் போல இருந்தார் - மற்றும் அவர் முற்றிலும் தனியாளாக இருந்தார்.

இருளும் ஈரக் கசிவும் நிறைந்த அந்தக் குகையில், தாவீது பாடத் தொடங்கினார். அவரது உயர்ந்த, தெளிவான குரலானது காற்றைப் போல மென்மையாகவும் உணர்வினால் சக்தியூட்டப்பட்டு அந்த குகையை நிரப்பிற்று. அவர் தமது தனிமையை, தமது ஜெபங்களை, மற்றும் தமது விசுவாசத்தைப் பாடினார். அதுல்லாம் குகையில் இருந்து காற்றில் மிதந்து வந்த பாடல் இன்று நமக்கு சங்கீதம் 142 என்று பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளது. குகையின் வெறுமையும் தாவீதின் இதய ஏக்கமும் ஆண்டுகளினூடே எதிரொலித்துக் கொண்டுள்ளது:

கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்;
கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.
அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்,
அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.
என் ஆவி என்னில் தியங்கும் போது,
நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்;
நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக் கண்ணிவைத்தார்கள்.
வலதுபுறமாய்க் கண்ணோக்கிப் பாரும்,
என்னை அறிவார் ஒருவரும் இல்லை;
எனக்கு அடைக்கலமில்லாமற்போயிற்று;
என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை (வசனங்கள் 1-4).

நம்மில் பலர் தாவீதுடன் (அவரது இந்த நிலையுடன்) நம்மை (நம் தற்போதைய நிலையை) அடையாளப்படுத்திக் கொள்ளச் சாத்தியக் கூறு உண்டு. உங்கள் வாழ்வில் மோசமான காலங்கள் வந்திருக்கலாம் - நீங்கள் உங்கள்மீது ஒருவரும் அக்கறை செலுத்துவதில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். இது மிகவும் பயமுறுத்துகின்ற சூழ்நிலை அல்லவா?

"மோசமான காலங்களில் நாம் எவ்வாறு உயிர் பிழைத்திருக்க முடியும்?" என்பதே நாம் கேட்கின்ற கேள்வியாக உள்ளது. இந்தப் பாடத்தில் நாம், ராஜாவான சவுலினால் தேடப்பட்டு அதனால் தப்பி ஓடுகிறவராயிருந்த தாவீதின் காலம் பற்றிய நமது படிப்பைத் தொடருவோம். தாவீது எவ்வாறு உயிர் பிழைத்தார் என்று காண்பதன் மூலம், நாம் எவ்வாறு (மோசமான காலங்களில்) உயிர் பிழைக்க முடியும் என்பதையும் கூட ஒருவேளை காணலாம். மோசமான காலங்களில் உயிர் பிழைத்திருப்பதற்கு "செய்ய வேண்டியவைகள்" மற்றும் "செய்யக் கூடாதவைகள்" என்ற வகையில் நாம் பத்து விஷயங்களைக் கவனிப்போம்.

1. மோசமான காலங்கள் வரும்போது அதிர்ச்சி அடையாதீர்கள் (18:1-20:42)

"செய்யக் கூடாதவைகளில்" முதலில் வருவது, "மோசமான காலங்கள் வரும்போது அதிர்ச்சி அடையாதீர்கள்" என்பதாக உள்ளது. இதை நான் சற்றே விரிவாக்குகின்றேன்: "நீங்கள் உங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்படும் பொழுது கூட - மோசமான காலங்கள் வரும்போது அதிர்ச்சி அடையாதீர்கள்." இதை நான் இன்னும் ஒருமுறை சற்றே விரிவாக்குகின்றேன்: "நீங்கள் உங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டு மற்றும் வழியின் ஒவ்வொரு அடிவைப்பிலும் தேவன் உங்களோடு இருந்துள்ளபோதும் கூட - மோசமான காலங்கள் வரும்போது அதிர்ச்சி அடையாதீர்கள்."

அந்தக் கூற்று சிலருக்கு வினோதமானதாக இருக்கும். நாம், "ஒருவர் தம்மால் இயன்ற அளவுக்கு மிகச் சிறப்பாய்ச் செயல்பட்டு, தேவனைப் பிரியப்படுத்தினால், அவருக்கு மோசமான விஷயங்கள் நடக்கப் போவதில்லை என்பது உறுதி!" என்று நினைக்கலாம். ஆனால் என் கூற்று உண்மையானது என்பதில் நான் அச்சம் கொள்கிறேன். அது உண்மையாய் இருக்கிறது என்பதை தாவீதின் வாழ்க்கை நிரூபிக்கிறது.

நமது முந்திய பாடத்தில், தாவீதின்மீது யோனத்தான் கொண்டிருந்த நட்புறவைப்பற்றி வசனப் பகுதிகளை நாம் பார்க்கக் கூடும்படிக்கு சில நிகழ்ச்சிகளை வேகமாய்த் தாண்டி வந்திருந்தோம். நாம் மீண்டும் அவற்றுக்குத் திரும்பி, தாவீதின் வழியில் ஒவ்வொரு அடிவைப்பிலும் மற்றும் மோசமான காலங்கள் வந்தபோதும் தேவன் எவ்வாறு அவருடன் இருந்தார் என்பதைக் காண, அந்த நிகழ்ச்சிகளை நாம் மீண்டும் கண்ணோக்குவோம்.

கோலியாத்தைத் தாவீது கொன்ற பின்பு, இராஜாவின் வீட்டாரோடு அங்கம் வகிக்குமாறு அவர் அழைக்கப்பட்டார். அவருக்கு சவுல், நம்பிக்கை

யான அறிவுரையாளராகவும் அவரை மிகவும் பாராட்டுபவராகவும் இருந்தார். இராஜாவின் சோர்வுமிக்க இருளான வேளைகளில் சவுலுக்காகத் தாவீது இன்னும் பாடிக் கொண்டிருந்தார். அவர் சவுலுக்கு ஆயுத தாரியாகவும் தனிப்பட்ட மெய்க்காப்பாளராகவும் இருந்தார். சவுல், "தாவீது ஒரு இராட்சதனைக் கொல்ல முடியுமென்றால், அவனால் யாரையும் கையாள முடியுமே!" என்று நினைத்திருக்கலாம். சவுலின் படையில் தாவீது ஒரு படைத் தளபதியாக ஏற்படுத்தப்பட்டார். அவர் பிரசித்தி பெற்றவராகவும் நன்கு அறியப்பட்டவராகவும் விளங்கினார்.

இருப்பினும், பின்பு பெண்கள் பாடிய பின்வரும் பாடல் சவுலின் வெறுப்பைத் தூண்டியது: "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" (18:7). இந்தப் பாடலில் சவுலுக்கு எவ்விதமான அவமரியாதையும் ஏற்படுத்தப்படவில்லை. "ஆயிரம்" மற்றும் "பதினாயிரம்" என்ற இரு சொற்களுமே "மாபெரும் எண்ணிக்கையைக்" குறிப்பிடுவதற்கான கவிதைத்துவ வழியாயிருந்தன. யூதர்களுடைய கவிதைகளின் இணை பொருள் தத்துவத்தில், இரண்டு மிக உயர்ந்த விஷயங்கள் ஒரே காரியத்தையே அர்த்தப்படுத்தின.[1] உண்மையில் சவுலின் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டதால் அவருக்கே பெருமளவில் கனம் செலுத்தப்பட்டது. சவுல் அதிகம் பக்குவப்பட்டவராகவும், உறுதிப்பட்டவராகவும் இருந்திருந்தால், அவர் இதை உணர்ந்திருப்பார். ஆயினும் சவுல் பக்குவப்பட்டவரும் அல்ல உறுதிப்பட்டவரும் அல்ல, எனவே நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, "தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது" என்று சொல்லி, அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான் (18:8, 9).

முடியரசர் பித்தரானார், அவருக்குள் காரணமற்ற பயம் நிரம்பிற்று (அதிகாரம் 18ல், சவுல் தாவீதுக்குப் பயந்தார் என்று மூன்று முறை கூறப்படுகின்றது; 1 சாமுவேல் 18:12, 15, 29). சவுலுக்காகத் தாவீது சுரமண்டலத்தை வாசிக்கையில், சவுல் அவரை ஈட்டியினால் சுவரோடே சேர்த்து உருவக்குத்திப் போடுவதற்கு இருமுறை முயற்சி செய்தார். அவர் தாவீதை படையின் உயர் பதவிக்கு உயர்த்தி, அவரைக் கனப்படுத்துவது போல் நடித்தார், ஆனால் உண்மையில் அவர் (தாவீது) யுத்தத்தில் கொல்லப்படுவார் என்று நம்பிக்கையாயிருந்தார் (1 சாமு. 18:17).

சவுல், கோலியாத்தைக் கொல்லுகிற மனிதனுக்குத் தமது மகளைக் கொடுப்பதாக ஏற்படுத்தியிருந்த தமது வாக்குறுதியைக் (1 சாமு. 17:25) குறித்து பல்வேறு சூழ்ச்சிகளை மறைவாய்ச் செய்தார். முதலில் அவர் தம் மூத்த மகள் மேராப் என்பவளைத் தாவீதுக்குக் கொடுக்க முன் வந்தார். தாவீது, தாம் அந்தக் கொடையைப் பெறத் தகுதியற்றவராயிருப்பதாகத் தன்னடக்கத்துடன் மறுத்தபோது, சவுல் மேராபை இன்னொருவருக்குக் கொடுத்து விட்டார்.[2] சவுல் தமது இளையமகளான மீகாள் தாவீதை நேசிப்பதை அறிந்தபோது, அவர் "அவள் அவனுக்குக் கண்ணியாயிருக்கவும்

... அவளை அவனுக்குக் கொடுப்பேன்" (1 சாமு. 18:21) என்று நினைத்தார். "கண்ணி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை, இரை உள்ள கூண்டொன்றின் இழுவிசைக் கருவி என்ற கருத்துக் கொண்டுள்ளது. சவுலின் எலிப்பொறியில் மீகாள் ஒரு கருவாட்டுத் துண்டைப் போலிருப்பாள்!

சவுல் தாவீதுக்கு மீகாளைக் கொடுக்க முன் வந்தபோது, தாவீது "நான் எளியவனும் அற்பமாய் எண்ணப்பட்டவனுமாயிருக்கிறேன்" (18:23) என்று பதில் அளித்தார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவரால் பெண்ணுக்குத் தரவேண்டிய விலையைக் கொடுக்க இயலாதிருந்தது (ஆதி. 34:12; யாத். 22:16 ஆகிய வசனங்களைக் காணவும்). தாவீது கோலியாத்தைக் கொன்றிருந்தபடியால், அவரைச் சவுல் பெரும் செல்வந்தராக்கி, பெண்ணுக்குத் தரவேண்டிய பரிசுப் பணத்தைப் பற்றிக் கவலைப்படாது, தமது மகளை அவருக்கு மனைவியாகத் தந்திருக்க வேண்டும் (1 சாமு. 17:25) - ஆனால் சவுல் தமது வார்த்தைகளைக் காப்பாற்றவில்லை. இப்பொழுது சவுல், "எனக்குப் பணம் எதுவும் தேவையில்லை. நீ நூறு பெலிஸ்தர்களைக் கொன்றாய் என்ற நிரூபணம் எனக்குப் போதுமானது" என்று கூறினார்.[3] அந்த முயற்சியில் தாவீது கொல்லப்படுவார் என்று சவுல் நம்பினார். இந்த அளிப்பானது தாவீதின் சாகச உணர்வறிவுக்குப் பிரியமானதாக இருந்தது. அவரும் அவரது மனிதர்களும் பெலிஸ்தர்களைத் தாக்கி, ஒரு நூறு அல்ல ஆனால் இருநூறு பேரைக் கொன்றதற்கான நிரூபணத்தைக் கொண்டு வந்தார்கள். சவுலுக்கு, மீகாளைத் தாவீதுக்குக் கொடுப்பதைத் தவிர வேறு வழி இல்லாது போயிற்று.

சவுலின் எரிச்சல் நிலையாக வளர்ந்து வந்தது. முதலாவது, யோனத்தான் தாவீதை ஆதரித்திருந்தார்; இப்பொழுது மீகாளும் அவர் (தாவீது) பக்கம் இருந்தாள்! சவுலின் சித்தப் பிரம்மை கொண்ட கண்களுக்கு, தாவீது அவரது (சவுலின்) சொந்தப் பிள்ளைகளையே தமக்கெதிராகத் திருப்பி விட்டதாகத் தோன்றிற்று. சவுலினால் இதை சகிக்க முடியவில்லை. "ஆகையால் சவுல் ... உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்" (18:29). NIVயில், "ஆகையால் சவுல் ... தனது எஞ்சியிருந்த வாழ்நாட்களில் எல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்" என்று கூறப்படுகிறது. நீங்கள் சாக வேண்டும் என்று விரும்புகின்ற ஒரு மாமனாரைக் கொண்டிருத்தலை உங்களால் கற்பனை செய்து பார்க்க இயலுமா? (உங்களில் சிலர் ஏன் உங்கள் தலையை ஆட்டுகின்றீர்கள்?)

சென்ற பாடத்தில் நாம், சவுல் தாவீதைக் கொல்லும்படி யோனத்தானுக்கும் தமது அலுவலர்களுக்கும் கட்டளையிட்டிருந்தார், ஆனால் யோனத்தான் தமது நண்பருக்காகப் பரிந்து பேசியதால் தாவீதை அழிக்க வேண்டும் என்ற சவுலின் முயற்சிகளில் ஒரு சுருக்கமான இடைவேளை ஏற்பட்டது என்று கவனித்தோம். இருப்பினும் வெகு விரைவிலேயே, தாவீதைக் கொல்வதில்லை என்று தாம் ஆணையிட்டதை மறந்துபோன சவுல், தாவீதின்மீது மீண்டும் ஈட்டியை எறிந்தார். 1 சாமுவேல் 19:10, "தாவீதோ அன்று இராத்திரி ஓடிப்போய், தன்னைத் தப்புவித்துக் கொண்டான்" என்று கூறுகின்றது. தாவீதின் வாழ்வில் அடுத்த பத்து அல்லது

அதற்கு மேற்பட்ட ஆண்டுகளை "ஓடுதல்" மற்றும் "தப்புவித்துக் கொள்ளுதல்" என்ற இரு வார்த்தைகள் தொகுத்துரைக்கின்றன; நமது வேத பாடப் பகுதியில் நீங்கள் இந்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் காண்பீர்கள்.[4] தாவீது தம்மால் இயன்ற அளவு சிறந்தவற்றைச் செய்து கொண்டிருந்தார்; அவர் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்; ஆனால் அப்பொழுதும் மோசமான காலங்கள் வந்தன.

தாவீது முதலில் தம் வீட்டிற்கு ஓடிச் சென்று, என்ன நடந்தது என்பதைத் தம் மனைவி மீகாளிடம் கூறினார்.[5] தனது தந்தையைப் பற்றித் தாவீதைக் காட்டிலும் நன்கு அறிந்திருந்த மீகாள், தனது கணவரிடத்தில், அவர் நேரத்தை வீணாக்கலாகாது என்று கூறினாள். தங்கள் வீடு கவனிக்கப்படுகின்றது என்று உணர்ந்த[6] மீகாள், ஒரு ஜன்னல் வழியாகத் தாவீதை இறக்கி விட்டாள்.[7] அந்த வீட்டிற்கோ அல்லது மீகாளை நேசிப்பதற்கோ தாவீது ஒருக்காலும் திரும்பி வரவேயில்லை. மோசமான காலங்கள் மிகவும் மோசமாகத் தொடங்கின.

தாவீது தப்பி ஓட அவருக்கு அவகாசம் கிடைப்பதற்காக, மீகாள் ஒரு பெரிய சுரூபத்தை[8] அவரது கட்டிலின் மேல் வைத்து, அதின் தலை மாட்டிலே ஒரு வெள்ளாட்டுத் தோலைப் போட்டு, துப்பட்டியினால் மூடி வைத்தாள். அவள், சவுலின் செய்தியாளர்களிடம் தாவீது வியாதியா யிருப்பதாகக் கூறினாள். அவளது ஏமாற்று வேலை கண்டுபிடிக்கப்பட்ட பொழுது, தாவீது பழைய தீர்க்கதரிசியான சாமுவேலுடன், அவர் வாழ்ந்து கொண்டிருந்த இராமா என்ற ஊரில் இருந்தார். சாமுவேல் அவரை நகரத்தில் இருந்த தீர்க்கதரிசிகளின் காலனியான நாயோதி[9] என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு தாவீது சரணாலயத்தைக் கண்டறிய முடிந்தது. அவர் அங்கிருந்ததைச் சவுல் அறிந்தபோது, கொலையாளிகளின் குழுவொன்றை அங்கு அனுப்பினார், ஆனால் தேவன் தாவீதைப் பாதுகாத்தார். சவுலின் மனிதர்கள் தீர்க்கதரிசிகள் மீது பாயத் தொடங்கிய போது, தேவன் தமது ஆவியை அவர்கள் மீது அனுப்பினார், அவர்கள் தீர்க்கதரிசனம் கூறத் தொடங்கினார்கள். மேலும் இரு குழுக்களை சவுல் அனுப்பினார் - அவர்களுக்கும் அதே விளைவுதான் ஏற்பட்டது.

இந்தக் காட்சியில் நாம் நகைச்சுவையின் தொடுதலைக் காண முடியும். இதைப் பின்வரும் (கற்பனை) நிகழ்ச்சியுடன் ஒப்பிட முடியும்: சபை ஆராதனையின் போது, பிரசங்கியாரைக் கொல்லத் திட்டமிட்டு ஒரு டஜன் முரடர்கள், தோலுடை அணிந்து, வெண்கலச் சங்கிலிகள் மற்றும் சைக்கிள் செயின்களுடன் சபை கூடும் இடத்தினுள் திடீரென்று நுழைகின்றார்கள். பின்பு - பவ்வ் - ஒரு வினோதமான பார்வை அவர்கள் முகங்களில் தோன்று கின்றது, அவர்கள் பாடல் புத்தகம் ஒன்றை எடுத்து, "கிருபையிதே, தேவ கிருபையிதே" என்று பாடல் பாடத் தொடங்கி விடுகின்றார்கள்.

என்ன நடந்தது என்று சவுலினால் கற்பனை செய்து பார்க்க இயலவில்லை, எனவே அதைக் கண்டு பிடிப்பதற்காக அவரே வந்தார். ஆயினும் அவர் தீர்க்கதரிசிகளிடம் வந்தபோது, தேவன் மீண்டும் அவர் மீது தமது ஆவியை ஊற்றி, அவரைச் செயலற்றவராக்கி விட்டார். இந்த அதிகாரமானது, சவுல் இரவும் பகலுமாக ஒரு நாள் முழுவதும் நிர்வாணமாக

விழுந்து கிடந்து, தீர்க்கதரிசனம் சொன்னார் என்ற இசைவுப் பொருத்தமற்ற மதியீனமான காட்சியுடன் முடிகின்றது (19:24)![10] இராமா என்ற அவ்வூர் பாதுகாப்பானதற்றதாகியது என்பது தெளிவு, எனவே தாவீது மீண்டும் ஒருமுறை ஓட வேண்டியதாயிருந்தது. மீண்டும் அவர் ஒருக்காலும் தமது அறிவுரையாளரான சாமுவேலைச் சந்திக்க மாட்டார். மோசமான காலங்கள் இன்னும் அதிக மோசமாயிற்று.

நமது முந்திய பாடத்தில் நாம் கவனித்தபடி, தாவீது பின்பு யோனத்தானிடம் ஓடினார். அவர் தமது நண்பரிடம், "நான் செய்தது என்ன? என் அக்கிரமம் என்ன?" (20:1) என்று கதறுகின்ற போது அவரது குரலில் இருந்த பெரும் வருத்தத்தை கற்பனை செய்து பாருங்கள். மோசமான காலங்கள் வருகின்ற போது, ஒருவேளை நீங்களும் கூட. "இது எனக்கு வரும்படிக்கு நான் என்ன செய்தேன்?" என்று கதறுகின்றீர்கள். சவுலின் வெறுப்புக்கு ஆளாகும்படிக்குத் தாவீது எதையும் செய்திருந்த தில்லை - ஆனால் அப்பொழுதும் மோசமான காலங்கள் வந்தன.

சவுல் யோனத்தானைக் கொல்ல முயற்சி செய்த போது, எல்லா சந்தேகமும் அற்றுப் போயிற்று. தாவீது உயிரோடிருக்கும் வரைக்கும் சவுல் ஓய்ந்திருக்க மாட்டார். இரண்டு நண்பர்களும் கண்ணீருடன் பிரிந்தார்கள். மோசமான காலங்கள் இன்னும் அதிக மோசமாயின.

மீண்டும் நான் பின்வரும் இரு விஷயங்களை வலியுறுத்துகின்றேன்: (1) தாவீது - சரீரரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் - தம்மால் இயன்ற அளவு சிறப்பாகச் செயல்பட்டார், மற்றும் (2) அவர் செய்த எல்லாவற்றிலும் கர்த்தர் அவருடன் இருந்தார். ஆயினும் மோசமான காலங்கள் வந்தன. தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதருக்கு இது நேரிட்டதென்றால், உங்களுக்கும் இது (போன்றது) நேரிடக் கூடும். நீங்கள் ஒரு மூப்பராக, ஒரு உதவிக்காரராக, ஒரு பிரசங்கியாராக அல்லது வேதாகம வகுப்பு ஆசிரியராக இருக்கக் கூடும் - உங்கள் பிள்ளைகள் போதைப் பொருட்களைப் பயன்படுத்தி உங்கள் இருதயத்தை உடைந்து போகச் செய்யக்கூடும். நீங்கள் ஒரு அன்பு நிறைந்த மனைவியாக அல்லது கணவராக இருந்து, உங்கள் மணவாழ்வை நன்முறையில் செயல்படுத்தியிருந்தும், உங்கள் துணைவர் அல்லது துணைவி உங்களை விட்டு யாரேனும் ஒருவருடன் சென்று விடக்கூடும். நீங்கள் ஒரு நேர்மையான கிறிஸ்தவ வியாபாரியாயிருந்து, உங்கள் வியாபாரத்தை வெற்றிகரமானதாக்கியிருக்கக் கூடும், இருப்பினும் நீங்கள் எல்லாவற்றையும் இழந்து போகக் கூடும். நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவராயிருந்து, தேவனுக்கு ஊழியம் செய்வதில் உங்கள் இருதயத்தையும் ஆத்துமாவையும் ஒப்புக்கொடுத்திருந்தும், மருத்துவர் உங்களை அழைத்து, "நீங்கள் இன்னும் மூன்று மாதங்கள் மட்டும் உயிர் வாழ்வீர்கள்" என்று கூறக்கூடும்.

என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். கிறிஸ்தவராயிருத்தல் என்பது நாம் நல்ல திருமணத்தைப் பெறவும், மகிழ்வான குடும்பத்தைக் கொண்டிருக்கவும், பொருளாதார பாதுகாப்பு மற்றும் நல்ல உடல் நலத்தையும் கூடப் பெறவுமான நமது வாய்ப்புக்களை மேம்படுத்தும். இருப்பினும், தேவனுக்கு உண்மையாய் நடக்கின்ற அவருடைய பிள்ளை

களும் கூட மோசமான காலங்கள் தங்களுக்கு வராமல் தடுக்கப் பட்டவர்களாயிருப்பதில்லை. மோசமான காலங்கள் வருகின்றபோது அதிர்ச்சியடையாதீர்கள்.

2. முதலில் நீங்கள் மதியீனமாகச் செயல்பட்டால், அது பற்றி அதிர்ச்சியடையாதீர்கள் (21:1-22:1)

பின்வரும் கேள்வியைப்பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்: தாவீது ஏன் ஓடினார்? அவர் சிங்கங்களையும் கரடிகளையும் எதிர்த்து நின்றிருந்தாரே. அவர் கோலியாத்தை எதிர்த்து நின்றிருந்தாரே. அவர் பெலிஸ்தர்களுக்கு எதிராகச் செய்திருந்த பல யுத்தங்களில் வெற்றியடைந்திருந்தாரே; உண்மையில் அவர் ஒரு இராணுவ வீரராயிருந்தார். பின்பு ஏன் அவர் சவுலை எதிர்த்து நிற்பதற்குப் பதிலாக தம் உயிருக்காக ஓடினார்? அவரது வாழ்வில் முதல் முறையாக, அவர் இந்த சூழ்நிலையை எப்படிக் கையாளுவது என்று அறியாததினால் அவ்வாறு செய்தார் என்று நான் கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். இது வரையிலும் எதிராளியைக் கொல்லுதல் என்பதே அவர் எதிர்ப்பைக் கையாண்ட வழிமுறையாயிருந்தது. அவர் சிங்கங்களையும் கரடிகளையும் கொன்றார். அவர் கோலியாத்தைக் கொன்றார். அவர் பெலிஸ்தர்களைக் கொன்றார். ஆனால், சவுல் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜாவாயிருந்தார். கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவரைக் கொலை செய்தல் என்பது தாவீதினால் கூடாததாயிருந்தது (1 சாமு. 24:6 முதலியன). தாவீது என்ன செய்வது என்று அறியாதிருந்தார், எனவே அவர் ஓடினார்.

தேடப்பட்டவர் என்ற வகையில் தாவீது தமது வாழ்வைத் தொடங்கின வேளையில், அவர் பெருத்த துயரத்துடன், அதிகமான திட்டம் அல்லது நோக்கம் எதுவுமின்றி, உண்மையில் மதியீனமான சில செயல்களைச் செய்வதாக ஓடினார் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

முதலில் அவர் தெற்கே சுமார் இரண்டு மைல்கள் தொலைவிலுள்ள நோபிற்கு ஓடினார். சீலோ அழிக்கப்பட்ட பின்பு, ஆசரிப்புக் கூடாரமானது அங்கே (நோப்) இடம் மாற்றி வைக்கப்பட்டிருந்தது (1 சாமு. 4:2, 3; எரே. 7:12); இது ஆசாரியர்களும் அவர்களின் குடும்பங்களும் வாழ்கின்ற நகரமாயிற்று. தாவீது உணவு, ஆயுதம் எதுவுமற்றவராயிருந்தார், அவர் ஒருவேளை "ஆசாரியர்கள் அன்னமிடுவதில் எப்பொழுதுமே நல்லவர்கள்" என்று நினைத்திருக்கலாம். இருப்பினும், அவர் அங்கு சென்ற பொழுது, சவுலுடன் பலத்த பிணைப்புக் கொண்டிருந்த பிரதான ஆசாரியரான அகிமெலேக்கு என்பவரையே முதலாவதாகச் சந்திக்க நேரிட்டது.[11] அகிமெலேக்கு தாவீதைக் கண்ட பொழுது சங்கடத்திற்குள்ளானார். கடந்த காலங்களில் தாவீது ஆசரிப்புக் கூடாரத்திற்கு அடிக்கடி வந்திருந்தார், ஆனால் அவர் எப்பொழுதுமே தம்முடன் இராஜரீகக் குழு அல்லது படை வீரர்களின் குழு புடைசூழவே வருவது வழக்கம். இப்பொழுதோ அவர்

தன்னந்தனியராக வந்தார். தாவீது தம்மைக் காத்துக் கொள்ளவும் உதவி பெறவும், தம்மை சவுல் ஒரு இரகசியமான ஊழியத்தினிமித்தம் அனுப்பியதாக வியப்பூட்டும் மாபெரும் பொய் ஒன்றைக் கண்டுபிடித்தார். ஆசாரியர் தாவீதிற்கு தேவ சமூகத்தில் இருந்த ஐந்து அப்பங்களை[12] எடுத்துக் கொடுத்தார். அவை மட்டுமே அங்கு இருந்தன. பிற்பாடு அவர், ஆசரிப்புக் கூடாரத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கோலியாத்தின் பட்டயத்தை எடுத்து அவருக்கு(தாவீதுக்கு)க் கொடுத்தார். தாவீது தாம் விரும்பியதைப் பெறுவதற்காகச் சூழ்ச்சி செய்து பொய்யுரைத்ததில்[13] தாவீது தேவனுடைய இருதயத்திற்கேற்ற மனிதர் என்பதைக் காட்டிலும், சவுலைப் போன்றே அதிகமாய் செயல்பட்டார்!

தாவீது அகிமெலேக்கிடம் பேசிக் கொண்டிருக்கையில், தோவேக்கு அங்கிருந்ததை சங்கடத்துடன் கவனித்தார்.[14] தோவேக்கு என்பவர் சவுலின் மேய்ப்பர்களுக்குத் தலைவராயிருந்தார். (அந்த உண்மையை தற்சமயத்திற்கு மடித்து வையுங்கள்.)

தாவீது தம்மால் முடிந்த அளவு விரைவாக மீண்டும் ஓடலானார். இம்முறை அவர் தென்மேற்கில் முப்பது மைல்கள் தொலைவில் இருந்து காத் என்ற பெலிஸ்திய நகருக்குச் சென்றார். பெலிஸ்தரிடம் தாம் கொண்டிருப்பதைக் காட்டிலும் அதிகமான பயத்தை சவுலிடத்தில் தாம் கொண்டிருக்க நேரிடும் என்பதைத் தாவீது அறிந்திருந்தார். (துரதிர்ஷ்டவசமாக, அடிக்கடி நாம் நம் "விரோதிகளிடம்" பயப்படுவதைக் காட்டிலும் நம் "சகோதரர்களிடமே" அதிகம் பயப்பட வேண்டியதாக உள்ளது!) அவர் புகலிடம் நாடி, காத் என்ற நகருக்குச் சென்றார், ஆனால் உண்மையிலேயே அது அவர் செய்த மதியீனமான செயலாய் இருந்தது! கோலியாத் எங்கிருந்து வந்தவன் என்று உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஆம் அவன் காத் என்ற இந்த நகரில் இருந்து வந்தவனாயிருந்தான்! (1 சாமு. 17:23). இங்கு தாவீது - கோலியாத்தைக் கொன்ற, மீகாளுக்குப் பரிசுக் கிரயமாக இருநூறு பெலிஸ்தர்களைக் கொன்று அவர்களின் உடல்களில் இருந்து நுனித் தோல்களை அறுத்தெடுத்த, "தாவீது கொன்றது பதினாயிரம்" என்று மக்கள் பாடும் வகையில் யுத்தங்களில் பல்லாயிரம் பெலிஸ்தர்களைக் கொன்றிருந்த தாவீது - வந்தார், அவர் பெலிஸ்தியாவின் இருதயம் போன்ற மையப் பகுதியில் பீடுநடை போட்டுச் சென்றார், கோலியாத்தின் சொந்த நகரில் (தமது இடுப்பில் கோலியாத்தின் பட்டயத்துடன்) தைரியமாய் அடியெடுத்து வைத்துச் சென்றார் மற்றும் தம்மை அரசனிடம் அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார்![15]

தாவீது ஒருவேளை தாம் அடையாளம் அறியப்படாமல் அங்கிருந்து விடலாம் என்று நினைத்திருக்கலாம், ஆனால் அவரது செம்முடி (அடையாளங் காட்டத்) தவறவில்லை! ஆகிஸ் அரசனின் பணியாளர்கள் கூட, இஸ்ரவேலரின் அணிவகுப்பில் எதிரொலித்த முதல் தர பாடலை அறிந்திருந்தார்கள்: "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்"[16] - அதாவது பதினாயிரம் பெலிஸ்தர்கள். பெலிஸ்தியாவில் "மிகவும் தேடப்பட்ட பட்டியலின்" முதலிடத்தில் தாவீது இருந்திருக்க வேண்டும்!

அவர்கள் தாவீதைப் பிடித்தார்கள் (சங்கீதம் 56ன் அறிமுகக் குறிப்பைக் கவனிக்கவும்), அவரோ கதிகலங்கிப் போனார். "அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி, அவர்களிடத்தில் பித்தங் கொண்டவன்போலக் காண்பித்து, வாசற்கதவுகளிலே கீறிக் கொண்டிருந்து, தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக் கொண்டிருந் தான்" (21:13). தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட ஒருவர், இஸ்ரவேலின் அடுத்த இராஜா, பைத்தியம் பிடித்தவர் போல் நடித்துக் கொண்டிருந்தார்!

ஆகீஸ் ஆழ்ந்த வெறுப்படைந்தான். "எனக்கு முன்பாகப் பயித்திய சேஷ்டை செய்ய, நீங்கள் இவனைக் கொண்டு வருகிறதற்கு, பயித்தியக் காரர்கள் எனக்குக் குறைவாயிருக்கிறார்களோ?" (21:15). அவர்கள் தாவீதைப் போகும்படி விட்டுவிட்டார்கள். (பழங்கால மக்களில் பலர், பைத்தியம் பிடித்த மனிதர்கள் கடவுள்களால் தொடப்பட்டிருந்தார்கள் என்றும் அவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்றும் நம்பினார்கள்.[17])

இந்த நிகழ்ச்சியை வாசிக்கையில் நான் பலவகையான உணர்வுகளின் கலவையைக் கொண்டவன் ஆகின்றேன். தாவீதின் விரைவுச் சிந்தனையை நான் பாராட்டுகின்றேன் - தாவீது தம்மை அங்கிருந்து விடுவித்தமைக்குக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்[18] - ஆனால் தாவீதின் சிந்தனைச் செயல் முறை முதலிடத்தில் ஒருச் சாய்ந்திராமற் போயிருந்தால், அவர் தம்மைக் காத்துக் கொள்வதற்காகப் பைத்தியம் பிடித்த மனிதரைப் போன்று நடிக்க வேண்டிய சூழ்நிலையில் ஒருபோதும் இருந்திருக்க மாட்டார். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர் தம் கண்களைச் சுழற்றுவதையும் .ன.. பொருளற்ற சொற்றொடர்களை வெறிகொண்டவர் போல் உரத்துக் கூவுவதையும் ... தம் விரல் நகங்களை வாசற்கதவின் மரத்தில் ஆழப்பதித்துச் சுரண்டுவதையும் தம் விரல்களை அதில் செலுத்துவதையும்[19] ... தமது தாடியில் எச்சிலை விழச் செய்வதையும் (Amplified Bible புத்தகத்தில் காணவும்) காண்பதென்பது என்னைக் கவலையில் ஆழ்த்துகிறது.

தாவீது எவ்வளவாகக் கீழ்மையாயிருக்கக் கூடும்? ஒரு மறைவிடத்தைக் கண்டு, அதில் தம்மை நுழைத்துக் கொள்வது மட்டும்தான் தாவீதுக்கு எஞ்சியிருந்தது - மிகச் சரியாக அவர் அதையே செய்தார். தாவீது காத் ஊரில் இருந்து ஓடிப் போய், நமது இந்தப் பாடம் தொடங்கிய இடமான குகைக்கு - அதுல்லாம் என்னும் கெபிக்குப் போனார்.[20]

அதுல்லாம் என்பது காத் ஊருக்கும் பெத்லெகேமுக்கும் இடை வழியில் இருந்த, யூதேயாவின் நகரம் ஆகும்.[21] இது கைவிடப்பட்ட பகுதியாக, பாறைகள் நிறைந்த தரிசு நிலப்பகுதியாக இருக்கிறது. அதற்கு அருகாமையில் கெபிகள் நிறைந்த ஒரு குன்று இருக்கிறது, அந்தக் கெபிகளுக்கு ஒன்றல்ல ஆனால் ஆயிரக்கணக்கான நுழைவாயில்கள் இருக்கின்றன, அவைகள் மைல் கணக்கிலான பாதாள வழிகளைக் கொண்டதாயிருக்கின்றன. அது நீர்ப் பாம்புகள் மற்றும் விஷப் பூச்சிகள் நிறைந்த இடமாயிருக்கிறது. இன்றைய நாட்களில் அவ்விடம் கள்வர்களும் தீவிரவாதிகளும் விரும்பி ஒளியும் இடமாயிருப்பதால், பயணிகளை வழிகாட்டிகள் அவ்விடத்திற்கு அழைத்துச் செல்வதில்லை. லின் ஆன்டர்ஸன் அவர்கள் அவ்விடத்தை, "உலகின் அக்குள் பகுதி" என்று

அழைக்கின்றார்.[22] தாவீது, "என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை" (சங். 142:4) என்று கூறிய பொழுது இந்த இடத்தில்தான் இருந்தார். இது தாவீதின் வாழ்வில் மிகவும் கீழ்மையான கணங்களில் ஒன்றாக இருந்தது.

மீண்டும் எனது கருத்து பின்வருமாறு: தாவீதுக்கு மோசமான காலங்கள் நேரிட்டது என்றால் அவை எனக்கும் உங்களுக்கும் கூட நேரிடக்கூடும். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, எனது நண்பர்களில் ஒருவரான இளம் வங்கியாளர் ஒருவர் மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, இளம்பிராயத் தினருக்கு ஏற்படும் நீரிழிவு நோய் கொண்டிருந்தார் என்று தெரிவிக் கப்பட்டார். அவர் ஒரு பிரகாசமான, மகிழ் பொங்கும், துடிப்புள்ள, விளையாட்டுத் திறமைமிக்க இளைஞராயிருந்தார் (இருக்கின்றார்) - அந்த மருத்துவ ஆய்வானது அவரை வேகமாய் ஓடிய சரக்கு இரயிலைப் போல தாக்கிற்று. பல வாரங்களாக, அவர் எரிச்சலும் சோர்வும் உடையவரா யிருந்தார். அவரது பகுத்தறியும் தன்மையற்ற நிலைக்கு ஒரு விவரிப்பு பின்வருமாறு: அவர் தொலைக்காட்சியில் சாக்கர் விளையாட்டை (அமெரிக்காவில் பரவலாக விளையாடப்படும் ஒரு விளையாட்டு) கவனிக்கையில், கதறத் தொடங்கினார். "நான் மீண்டும் ஒரு போதும் சாக்கர் விளையாட மாட்டேனே" என்று அழுதார். அதற்கு முன் அவர் ஒருக்காலும் சாக்கர் விளையாடியது இல்லை, சாக்கர் விளையாடும் நோக்கமும் அவரிடம் இருந்ததில்லை, ஆனால் அது எவ்வித மாறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை. அவர் தம்மை ஒரு ஊனமுற்றவராக, தமது விளையாடும் நாட்கள் யாவும் முடிந்து போனவராகப் பார்த்தார். கர்த்தருடைய உதவியினாலும், அன்புமிக்க குடும்பத்தின் ஆதரவினாலும், அவர் விரைவிலேயே குணம் அடைந்து, தம் பழைய நிலையை அடைந்தார். இப்பொழுது அவர் தம் தொடக்கப் பதில்செயலைப் பின்னோக்கிப் பார்த்து சிரிக்க முடிகின்றது, ஆனால் அவர் சில காலம் மதியீனமாகச் செயல் பட்டதை ஒப்புக் கொள்ளுகின்றார்.

பேரழிவு நம்மைத் தாக்கினால், நாம் ஒருக்காலும் பகுத்தறிவற்ற வர்களாக மாட்டோம் என்று நினைக்கலாம், ஆனால் அது நமக்குத் தெரியாது என்பது மட்டுமே உண்மையாக உள்ளது. நான் எவ்வாறு பதில்செயல் செய்ய விரும்புவேன், எவ்வித பதில்செயல் செய்வேன் என்று நம்புகிறேன் என்பதெல்லாம் எனக்குத் தெரியும், ஆனால் அதுவே எல்லாமும் ஆகி விடாது. மோசமான காலங்கள் வரும்பொழுது, நாம் முதலில் மதியீனமாகச் செயல்படுவதை விட்டுவிடுவோம் என்பதற்காக நான் இதைக் கூறவில்லை. இது யாருக்கு வேண்டுமானாலும் நடக்கக் கூடும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் - மற்றும் தேவனுடைய உதவியால் நாம் உயிர் பிழைக்க முடியும் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். தாவீது இதைச் செய்தார்; என் நண்பரும் இதைச் செய்தார்; நீங்களும் நானும் கூட இதைச் செய்ய முடியும்.

3. உங்கள் சொந்த செயல்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள் (22:1-23)

தாவீது அதுல்லாம் கெபிக்கு முதன் முதலாகச் சென்ற பொழுது சங்கீதம் 142 இயற்றப்பட்டது என்பது உறுதி, ஏனெனில் தாவீது அதிக நாட்களுக்குத் தனிமையாய் இருக்கவில்லை என்று 1 சாமுவேல் 22ம் அத்தியாயம் குறிப்பிடுகிறது:

> தாவீது ... அதுல்லாம் என்னும் கெபிக்குப் போனான்; அதை அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்டார் அனைவரும் கேட்டு, அங்கே அவனிடத்துக்குப் போனார்கள். ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் அவனோடே கூடிக் கொண்டார்கள்; அவன் அவர்களுக்குத் தலைவனானான். இந்தப் பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் அவனோடிருந்தார்கள் (22:1, 2).

முதலாவது, தேவன் தாவீதுக்கு உணர்வுப்பூர்வமான ஆதரவைக் கொடுத்தார். அவர் தாவீதுக்கு அவர் தம் குடும்பத்தாரைக் கொடுத்தார். "அதை அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்டார் அனைவரும் கேட்டு, அங்கே அவனிடத்துக்குப் போனார்கள்." தாவீதின் குடும்பமும் சவுலிடமிருந்து வரும் அபாயத்திற்கு ஆளாயிருந்தது என்பதில் ஐயமில்லை.[23]

பின்பு தேவன் தாவீதுக்கு நடைமுறையிலான ஆதரவைக் கொடுத்தார். அவர் தாவீது செய்வதற்கு ஒரு வேலையைக் கொடுத்தார். உட்கார்ந்து கொண்டு தம்மைக் குறித்தே வருந்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, தாவீதுக்கு கற்பனை செய்ய (க் கூட) மிகவும் ஒத்துவராத படைகளை ஒழுங்குபடுத்தும் அறைகூவலைத் தேவன் கொடுத்தார். நமது வேத பாடப் பகுதியானது, "மூன்று dக்கள்" தாவீதைச் சுற்றிலும் ஒன்றுகூடத் தொடங்கியதாகக் கூறுகின்றது: The distressed (ஒடுக்கப்பட்டவர்கள்), the debtors (கடன்பட்டவர்கள்), the discontented (முறுமுறுக்கிறவர்கள்). "ஒடுக்கப்பட்டவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை, இந்தக் குழுவினர் அடக்கு முறைக்கு உட்பட்டிருந்ததைச் சுட்டிக்காண்பிக்கின்றது. "கடன்பட்டவர்கள்" என்பது, சவுலினால் விதிக்கப்பட்டிருந்த சுமை மிகுந்த வரிகளைச் செலுத்த இயலாதவர்கள் என்று குறிப்பிடுகின்றது. அவர்கள் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக அவர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தார் விற்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக தப்பி ஓடினார்கள். "முறுமுறுக்கிறவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது இந்தக் குழு தவறு இழைக்கப்பட்டு, தவறாக நடத்தப்பட்டிருந்ததையும் மாற்றம் ஒன்றிற்காக ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததையும் சுட்டிக் காண்பிக்கின்றது. தாவீது மட்டுமே புண்பட்டவராயிருந்தது இல்லை; சவுலின் ஆட்சியின் கீழ் நாடு முழுவதும் புலம்பிக் கொண்டிருந்தது.

இவர்கள் யுத்தத்திற்குப் பயிற்றுவிக்கப்பட்டவர்களாய் இருந்தது இல்லை. இது மனக்குறைவுடைய மக்கள் குழுவாயிருந்தது, அவர்களில்

பலர் அநேகமாக எவருடனும் ஒத்துப் போக இயலாதவர்களாயிருந்தார்கள். (இவ்வரலாற்றின் பிற்பகுதியில், "தாவீதோடே நடந்து வந்த மனுஷரில் பொல்லாதவர்களும் பேலியாளின் மக்களுமான எல்லாரும்" [1 சாமு. 30:22] என்று வாசிக்கின்றோம். ஒரு சமயத்தில் மக்கள் அவரைக் கல்லெறிந்து கொல்லக் கூட விருப்பமுள்ளவர்கள் ஆனார்கள்! [1 சாமு. 30:6]). ஏதோ சிலவற்றில் தகுதிக் குறைவு கொண்டிருந்தவர்களின் இந்தக் கூட்டத்தை படையினர் போன்று வடிவமைக்கத் தொடங்கக் கூட எவராலாவது இயலுமா? எனக்குத் தெரியவில்லை, ஆனால் தேவனுடைய அறைகூவலைத் தாவீது ஏற்றுக் கொண்டார். விரைவிலேயே தாவீது மீண்டும் பணி நிறைந்தவர் ஆனார், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் துடிப்புள்ளவர் ஆனார். அவர் தமது இராஜ்யத்திற்கு வல்லமையின் பெலம் ஒன்றைக் கட்டியெழுப்பினார். அவர் தமது ஆளுகைக் காலம் முழுவதிலும் தம்முடன் நிலைத்து இருக்கும்படியான தலைமைத்துவம் ஒன்றை மேம்படுத்திக் கொண்டிருந்தார். தாவீதின் "பெலவான்களான மனிதர்கள்" பற்றி 2 சாமுவேல் 23 கூறுகின்ற பொழுது, நாம் "முப்பது தலைவருக்குள்ளே இந்த மூன்று பேரும் அறுப்பு நாளிலே அதுல்லாம் கெபியிலே தாவீதிடத்தில் போயிருந்தார்கள் ..." (23:13) என்று வாசிக்கின்றோம். தாவீது இராஜாவான பொழுது, அவரது "அமைச்சரவையில்" இருந்தவர்கள், வனாந்தரத்தில் அவர் பயிற்றுவித்திருந்தவர்களாகவும், அங்கு அருகருகே யுத்தம் செய்கையில் நம்பிக்கை கொண்டிருக்கக் கற்றுக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.

மோசமான காலங்கள் வரும் பொழுதும், (அவ்வேளையில்) நாம் மதியீனமாகச் செயல்படும் பொழுதும், தேவன் நமக்கு முன் வைத்துள்ள அறைகூவல்களின் மீது கவனம் செலுத்துதல் - பிறருக்கு உதவி செய்வதில் மும்முரமாயிருத்தல் மற்றும் நம்மைப் பற்றி வருத்தமாக உணருவதை நிறுத்துதல் - என்பது நம் தலையை நேராக்கிக் கொள்ளுவதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாக உள்ளது.

நிறைவாக, தேவன் தாவீதுக்கு ஆவிக்குரிய ஆதரவைக் கொடுத்தார். 1 சாமுவேல் 22:5 பின்வருமாறு குறிப்பிடுகிறது: "பின்பு காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்த்து: 'நீர் அரணில்[24] இராமல் யூதா தேசத்திற்குப் புறப்பட்டு வாரும்' என்றான்; அப்பொழுது தாவீது புறப்பட்டு ஆரேத் என்னும் காட்டிலே போனான்." ஏதோ ஒருவேளையில் காத் (என்ற தீர்க்கதரிசி) தாவீதின் படைகளுடன் சேர்ந்து கொண்டு, அவரது ஆலோசனையாளர்களில் ஒருவராக ஆனார். தாவீது இராஜாவான பின்பு, காத் "ஞான திருஷ்டிக்காரராக" ஆனார் (1 நாளா. 21:9). நிறைவாக, காத் என்பவர் தாவீதின் ஆட்சி பற்றிய வரலாற்று குறிப்பெழுதுபவர்களில் ஒருவராக ஆனார் (1 நாளா. 29:29, 30).

ஆயினும், தாவீதுக்குச் சூழ்நிலைகள் மேம்படத் தொடங்கிய பொழுது கூட, அவர் தமது மதியீனத்தின் விளைவுகளைக் காணத் தொடங்கினார். ஒரு நாள், சவுல் கிபியாவின் வெளிப்புறத்தில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த பொழுது, அவரது பிரதான ஊழியக்காரர்கள் அவரைச் சுற்றி அமர்ந் திருந்தார்கள், அரசர் தன்னிரக்கத்தில் புரண்டு கிடந்தார். "எனக்காகப் பரிதாபப்பட ஒருவரும் இல்லையா?" (22:8) என்று அவர் புலம்பினார்.

அங்கு ஏதோமியனான தோவேக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். (இவரை நினைவிருக்கிறதா? இவர்தான் நோபில் ஆசரிப்புக் கூடாரத்தின் அருகில் தாவீதைக் கண்டவர்) தோவேக்கு பின்வருமாறு பேசினார்: "ஈசாயின் மகனை நோபிலிருக்கிற அகிதூபின் குமாரனாகிய அகிமெலேக் கிடத்தில் வரக் கண்டேன். இவன் அவனுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரித்து,[25] அவனுக்கு வழிக்குப் போஜனத்தைக் கொடுத்து, பெலிஸ் தனாகிய கோலியாத்தின் பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்தான் என்றான்" (22:9, 10). தோவேக்கு அகிமெலேக்கின் ஆரம்ப கட்டத் தயங்கு தலையோ அல்லது தாவீதின் வஞ்சனையையோ கூறவில்லை. சவுல் மீண்டும் ஒருமுறை பித்துப் பிடித்தவராகி வன்முறையில் ஈடுபட்டார். அவர் அகிமெலேக்கையும் பிற ஆசாரியர்களையும் வரவழைத்து அவர்களைக் கொல்லுவித்தார். பின்பு அவர் நோப் என்ற (ஆசாரியர்களின்) நகர் முழுவதையும் அழித்தார்: ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், குழந்தைகள், மற்றும் விலங்குகளையும் கூட அழித்தார்![26]

ஒரு ஆசாரியர் - அகிமெலேக்கின் மகன்களில் ஒருவரான அபியத்தார் என்பவர் - தப்பித்துக் கொண்டார்.[27] அபியத்தார் தாவீதிடம் வந்து, நடந்தவைகளைக் கூறினார். இந்தத் துன்பகரமான நிகழ்வுக்கு வேறு யார் மீதாவது பழிபோடுதல் என்பது தாவீதுக்கு மிகவும் சுலபமானதாக இருந்திருக்கலாம். அவர், "இதெல்லாம் சவுலின் குற்றம் ஆகும்! அவர் என்னைக் கொல்ல முயற்சி செய்யாமல் இருந்திருந்தால், இது ஒருக்காலும் நடந்திராது!" என்று கூறியிருக்கலாம் அல்லது, "சவுல் அத்துமீறிச் செயல் பட்டிராமல் இருந்திருந்தால் உன் குடும்பம் இன்னும் உயிருடன் இருந்திருக் கும்!" என்று கூறியிருக்கலாம். மீண்டும் அவர் அகிமெலேக்கின் மீது குற்றம் சுமத்தியிருக்கலாம்: "உனது தந்தை எனக்கு அறைகூவல் விடுக்காது இருந்திருந்தால், நான் பொய் கூற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்க மாட்டேன்." தாவீது, "இது ஒரு கெட்ட நேரம். அதாவது, தோவேக்கு அங்கிருந்திரா விட்டால் இது நடைபெற்றிராது, இல்லையா?" என்று கூடக் கூறியிருக் கலாம். ஆனால், தாவீது பழியை வேறு யார் மீதும் போடவில்லை, எவ்வித சாக்குப் போக்கும் கூறவில்லை. இருதயம் உடைந்தவராக அவர், "ஏதோமிய னாகிய தோவேக்கு அங்கே இருந்தபடியினாலே, அவன் எவ்விதத்திலும் சவுலுக்கு அதை அறிவிப்பான் என்று அன்றைய தினமே அறிந்திருந்தேன்; உன் தகப்பன் வீட்டாராகிய எல்லாருடைய மரணத்துக்கும் காரணம் நானே" (வ. 22) என்று கூறினார். NIVயில், "உன் தகப்பன் குடும்பம் முழுமையும் மரணம் அடைந்ததற்கு நானே பொறுப்பாளி" என்றுள்ளது. தாவீது, "சவுல்தான் பொறுப்பாளி" அல்லது "அகிமெலேக்குதான் பொறுப் பாளி" அல்லது "தோவேக்குதான் பொறுப்பாளி" என்று கூறவில்லை, ஆனால் "நானே அதற்குப் பொறுப்பாளி" என்று கூறினார்.

நம்மில் எவரும் (நமக்கு) மோசமான காலங்கள் வரும்பொழுது மதியீனமாகச் செயல்படக் கூடும் - ஆனால் அது, நமது மதியீனத்திற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்று அர்த்தமாவதில்லை. கர்த்தரை நம் வாழ்வில் செயல்படும்படி மீண்டும் நாம் அனுமதிக்கும்படியாகவும் நமது சிந்தனையை நாம் நேராக்கிக் கொள்ளும்படியாகவும் நான் ஒரு வேளையில்

ஜெபிக்கின்றேன். அந்த வேளையை நாம் நிறைவாக அடையும் பொழுது, நமது சொந்த செயல்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அளவு நேர்மையும், பெரிய மனதும் உள்ளவர்களாக நாம் இருப்போமாக. நாம் செயல்படும் விதம் குறித்து பிறர் மீது நாம் குற்றம் சுமத்தாதிருப்போமாக; நாம் சூழ்நிலையைக் குற்றம் சுமத்தாதிருப்போமாக; நாம் தனிப்பட்ட பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வோமாக.

தாவீது அபியத்தாரை எதிர்கொண்டது போல், நாமும் நம்மால் புண்பட்டவர்களை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படச் சாத்தியக் கூறு உள்ளது (மத். 5:23, 24ஐக் கவனிக்கவும்). "நான் மிகவும் வருந்துகிறேன், ஆனால் நான் மூளையிழந்து இருந்து விட்டேன். சற்று நேரம் நான் சிறிது முட்டாள்தனமாக நடந்து கொண்டேன்; நான் கூறிய அல்லது செய்த விஷயத்திற்கு சாக்குப்போக்கு எதையும் கொண்டிருக்கவில்லை. உங்கள் இருதயத்தில் என்னை நீங்கள் மன்னிக்க முடியும் என்று நான் நம்புகின்றேன்'' என்று நாம் கூறுவது அவசியமாயிருக்கலாம்.[28] மோசமான காலங்களில், நமது சொந்த செயல்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுதல் என்பது நமது நேர்மைத் தன்மையுடன் சீர் பொருந்தியிராத நிலையில் நாம் உயிர் பிழைக்க இயலாது.

4. மக்கள் உங்களைக் கைவிட்டால் நீங்கள் ஆச்சரியம் அடையாதீர்கள் (23:1-29)

கடைசியில் தாவீது கெபியை விட்டு வெளியே வந்தார், ஆதரவாளர்களின் குழுவொன்று அவரைச் சூழ்ந்திருந்தது, ஆனால் அது, மோசமான காலங்கள் முடிந்து போயிற்று என்று அர்த்தப்படுத்தவில்லை. மோசமான காலங்கள் வருகின்ற பொழுது, மக்கள் - நீங்கள் ஒருக்காலும் துன்புறுத்தியிராத மக்கள், ஒருவேளை நீங்கள் உதவி செய்திருக்கக் கூடிய மக்களும் கூட - பெரும்பாலும் உங்களைக் கைவிடுவார்கள் என்ற கடினமான பாடத்தைத் தாவீது மீண்டும் விரைவிலேயே கற்றார்.

அடுத்த அத்தியாயம் பின்வருமாறு தொடங்குகின்றது: " 'இதோ, பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி, களஞ்சியங்களைக் கொள்ளையிடுகிறார்கள்' என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது" (23:1).[29] கேகிலா என்ற நகர், விரோதிகளின் எல்லைப் பகுதியில் இருந்த இஸ்ரவேலின் நகராயிருந்தது[30] இவ்விதமாக அது இரு மடங்கு தாக்குதலுக்கு ஆளாகக் கூடியதாக இருந்தது. பெலிஸ்தர்களைத் தாக்குதல் என்பது சவுலின் வேலையாயிருந்தது (இ.வ. 1 சாமு. 9:16), ஆனால் அவர் விரோதிகளுடன் யுத்தம் செய்வதற்குப் பதிலாகத் தாவீதைத் தேடுவதில் தம் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருந்தார். ஆகையால், மக்கள் உதவி நாடித் தாவீதிடத்தில் வந்தார்கள்.

"அப்பொழுது தாவீது: 'நான் போய், அந்தப் பெலிஸ்தரை முறிய அடிக்கலாமா?' என்று கர்த்தரிடத்தில் விசாரித்(தார்)" (23:2). தாவீதுக்கிருந்த மனிதர்கள் அறுநூறு பேராகப் பெருகியிருந்தார்கள் (1 சாமு. 23:13). ஆனால் பதிவேட்டில் உள்ளபடி அவர்கள் இன்னமும் யுத்தத்திற்குச் சென்றிராதவர்

களாய் இருந்தனர். கேகிலா என்ற நகர், விரோதிகளின் எல்லைப் பகுதிகளின் முன்பாக இருந்தபடியினால், அவர்கள் தாங்கள் உதவி பெறக் கூடிய எல்லா வழிகளில் இருந்தும் அடைபட்டு, விரோதிகளால் சூழக் கூடிய நிலை என்பது சுலபமாய் ஏற்படக் கூடியதாக இருந்தது. எனவே தாவீது யுத்தம் செய்யச் செல்லுதல் குறித்துக் "கர்த்தரிடத்தில் விசாரித்தார்."

"கர்த்தரிடத்தில் விசாரித்தல்" என்ற சொற்றொடரின் தனிச் சிறப்பை வலியுறுத்துவதற்காக நாம் சற்றே இவ்விடத்தில் தாமதிப்போம். அபியத்தார், தம்மைத்தவிர மற்ற ஆசாரியர்கள் அனைவரையும் சவுல் கொலை செய்வித்திருந்த போது, பாதுகாப்புப் பெறுவதற்காகத் தாவீதிடம் ஓடினார் என்பதை நினைவில் வையுங்கள். அபியத்தார் பிரதான ஆசாரியனின் மகனாயிருந்ததாலும், மற்ற ஆசாரியர்கள் அனைவரும் இறந்து போனபடியினாலும், இப்பொழுது அபியத்தார்தான் பிரதான ஆசாரிய ராயிருந்தார். தாவீது ஆசாரியத்துவத்தைப் பாதுகாப்பவராகியிருந்தார், இது அவர் இராஜாவாவதில் குறிப்பிடத்தக்க இன்னொரு அடிவைப்பாயிருந்தது.

மற்றும், அபியத்தார் தாவீதிடம் வந்த பொழுது ஏபோத்தைக் கொண்டு வந்திருந்தார் (23:6, 8)[31] ஏபோத்து என்பது ஆசாரியத்துவ உடையின் மீது அணியக் கூடிய கைகளற்ற ஒரு மேலாடையாயிருந்தது. எல்லா ஆசாரியர் களும் ஏபோத்தொன்றை அணிந்தார்கள் (1 சாமு. 22:18), ஆனால் ஏபோத்து என்று (சிறப்பித்துக்) கூறப்படக் கூடிய ஏபோத்து ஒன்று இருந்தது; இது பிரதான ஆசாரியரால் அணியப்பட்டதாக இருந்தது. இது ஊரீம் மற்றும் தும்மீம் என்பவற்றுடன் இணைவுடையதாயிருந்தது, அவையிரண்டும் பிரதான ஆசாரியரின் மார்ப்பதக்கத்தில் (அல்லது அதற்கு அருகே அல்லது கீழே) வைக்கப்பட்டன (யாத். 28:30). ஊரீம், தும்மீம் என்பவைகள் தேவனு டைய சித்தத்தைப் பகுத்துணரப் பயன்பட்டன. ஊரீம், தும்மீம் என்பவைகள் என்னவென்றோ அவை எவ்வாறு இருக்குமென்றோ மிகச் சரியாக நமக்கு கூறப்படவில்லை. ஒருவேளை அவைகள் யாத்திராகமம் 28ல் விவரிக்கப்பட்டுள்ள கற்களின் ஒரு பாகமாயிருக்கலாம். ஒருவேளை அவைகள் ஏபோத்தின் பக்கப் பையில் வைக்கப்பட்ட தனிப்பட்ட நிறம் கொண்ட கற்களாயிருக்கலாம். பெரும்பாலும் அவைகள் சுண்டியெறியும் நாணயம் போல் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்[32] (வாய்ப்பினால் அல்ல ஆனால் கர்த்தரால் தீர்மானிக்கப்பட்ட விளைவை எதிர்பார்க்க இவை பயன்படுத்தப்பட்டன). "ஆம்" அல்லது "இல்லை" என்று பதில் அளிக்கப் படக் கூடிய கேள்விகளுக்குப் பதில் அளிக்க இவைகள் பயன்பட்டன என்பது தெளிவு.

தேவன் தாவீதுக்கு ஆவிக்குரிய வகையில் கூடுதலான ஆதரவைக் கொடுத்திருந்தார். இப்போது தாவீது தம்முடன் ஆசாரியரையும், ஊரீம் தும்மீம் கொண்ட ஏபோத்தையும் கொண்டிருந்தார்! இவ்விதமாகத் தாவீது "கர்த்தரிடத்தில் விசாரிக்கக் கூடியவராக" இருந்தார்.

"நான் போய், அந்தப் பெலிஸ்தரை முறிய அடிக்கலாமா?" என்ற தாவீதின் கேள்விக்குக் கர்த்தர் "ஆம்" என்று பதில் அளித்தார்.[33] "அப்படியே தாவீது தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, கேகிலாவுக்குப் போய், பெலிஸ்தரோடு யுத்தம் பண்ணி, அவர்களில் அநேகம்பேரை வெட்டி, ...

இவ்விதமாய்க் கேகிலாவின் குடிகளை ரட்சித்தான்" (23:5). நகரத்தை மீட்டதும், தாவீதும் அவரது படையினரும் கேகிலாவில் முகாமிட்டிருந் தார்கள், அவர்கள் ஒருவேளை அந்நகரைத் தங்களின் தலைமையகமாக்கத் திட்டமிட்டிருக்கலாம். தங்களை அந்தக் குடிமக்கள் பாராட்டுபவர்களாக வும் பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு அவர்கள் எல்லா உரிமையும் கொண்டிருந்தார்கள். ஆயினும் விரை விலேயே, அவர்கள் அங்கிருந்ததை சவுல் அறிந்து அவர்களைத் தேடி வரத் திட்டங்களை வகுத்தார். தாவீது மீண்டும் கர்த்தரிடம் விசாரித்தார். "கேகிலாப் பட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ?" என்பது அவர் கேட்ட கேள்விகளில் ஒன்றா யிருந்தது. கர்த்தர் அதற்கு "ஒப்புக் கொடுப்பார்கள்" என்று பதில் அளித்தார் (23:12).

இது மனதைப் புண்படுத்த வேண்டும்! இதோ இங்கு தாவீதினால் விடுவிக்கப்பட்ட ஒரு நகரம் இருந்தது - அவர்களின் நகரம் குறைவற்றி ருந்தது; அவர்கள் இன்னமும் தங்கள் உற்பத்திப் பொருட்களையும் கால்நடைகளையும் கொண்டிருந்தார்கள்; அவர்களின் குடும்பங்கள் பாதுகாப்புடன் இருந்தன - ஆயினும் அவர்கள் தங்களை விடுவித்தவரைக் காட்டிக் கொடுக்கத் தயாராயிருந்தார்கள். ஒருவேளை அவர்கள், நோப் நகரைச் சவுல் அழித்தது பற்றிக் கேள்விப்பட்டு, தாங்கள் தாவீதின் பக்கமாயிருந்தால் சவுல் தங்களுடைய நகரையும் அழிக்கத் தயங்க மாட்டார் என்று அறிந்திருக்கலாம், ஆனாலும் அது தாவீதுக்கு விழுங்கு வதற்குக் கசப்பான மாத்திரையாகவே இருந்தது. ஆயினும், தாவீது, பழி வாங்கவில்லை. "ஆகையால் தாவீதும் ஏறக்குறைய அறுநூறு பேராகிய அவன் மனுஷரும் எழும்பி, கேகிலாவை விட்டுப் புறப்பட்டு, போகக்கூடிய இடத்திற்குப் போனார்கள்" (23:13).

தாவீதும் அவரது தோழர்களும் அடுத்தபடியாக, யூதேயாவில் இருந்த சீப் என்னும் வனப்பகுதிக்குப் போனார்கள். சீப்பியர்கள் யூதா கோத்திரத் திலிருந்த வந்தவர்களாயிருந்தார்கள் (யோசு. 15:55), தாவீது இதே கோத்திரத்தைச் சேர்ந்தவராயிருந்தார். இவர்கள் அவரது சுயஜனங்களா யிருந்தார்கள்! இங்கு அவர் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்ந்திருப்பார் என்பதில் ஐயம் இல்லை. ஆயினும் தாவீது மீண்டுமாகத் தாம் ஒருக்காலும் துன்புறுத்தியிராத, ஒருவேளை பாதுகாத்தும் இருந்த மக்களினால் காட்டிக் கொடுக்கப்பட்டார்.[34] சீப் ஊரார் சவுலிடம் சென்று, தாவீது எங்கிருக்கிறார் என்பதை அவருக்குக் கூறி தாவீதை இராஜாவின் கையில் ஒப்புவிப்பதாக வாக்களித்தார்கள் (1 சாமு. 23:19, 20). இதிலிருந்து தாவீது தெய்வீக இடையிடுதலினாலேயே தப்பித்தார். ஒரு சில அத்தியாயங்களுக்குப் பின்னர்[35] சீப் ஊரார் தாவீதைத் திரும்பவும் காட்டிக் கொடுத்தார்கள்.

இது தாவீது காட்டிக் கொடுக்கப்பட்ட முதன் முறையுமல்ல அல்லது இது கடைசி முறையாகவும் இருக்காது; ஆனால் இது எத்தனை முறை நடந்தது என்பது ஒரு பொருட்டாயிராமல், இன்னமும் புண்படுத்து வதாகவே உள்ளது. நான் என்ன பேசுகின்றேன் என்பதை அநேகமாக நீங்கள் அறிவீர்கள். யாராவதொருவர் மீது நீங்கள் மிகுந்த நம்பிக்கை

வைக்கின்றீர்கள். உங்கள் ஜீவனைக் கொண்டு நீங்கள் அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றீர்கள். பின்பு அவர் உங்களை (உங்கள் நம்பிக்கைக்கு விரோதமாகக்) காட்டிக் கொடுக்கின்றார். அவர் உங்களைக் கை விடுகின்றார், நீங்கள் வேதனையினால் நிறைகின்றீர்கள்.

இவை போன்ற காலங்கள், நமது நம்பிக்கை/சார்ந்திருத்தல் என்பது மனிதர்கள் மீதல்ல, ஆனால் தேவன் மீதே இருக்க வேண்டும் என்ற கருத்தை நம் சிந்தைகளில் ஆழமாகப் பதிக்கின்றன. சிலுவைக்கு யுத்தம் செய்வதில் (பல) தழும்புகளைப் பெற்றிருந்த பவுல் ஒருமுறை, "நான் முதல் விசை உத்தரவு சொல்ல நிற்கையில், ஒருவனும் என்னோடே கூட இருக்கவில்லை, ... கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, ... என்னைப் பலப்படுத்தினார் ..." (2 தீமோ. 4:16, 17) என்று கூறினார்.

5. உங்களைக் கைவிடாத நண்பர்களுக்காக நன்றி நிறைந்தவர்களாயிருங்கள் (23:15-18)

அத்தியாயம் 23ல், 15 முதல் 18 வரையிலான வசனங்கள் எஞ்சியுள்ள அந்த அத்தியாயத்துடன் நேரெதிரான வகையில் உள்ளன. சவுல் பித்துப் பிடித்தவர் போல் தாவீதின் உயிரை வாங்கத் தேடித் திரிந்த வேளையில், கேகிலாவின் மனிதர்களும் சீப் ஊராரும் தாவீதைக் காட்டிக்கொடுக்கத் தயாராயிருந்த வேளையில், தாவீதை "தேவனுக்குள் திடப்படுத்து வதற்காக" யோனத்தான் அவரிடம் வந்தது பற்றிய சுருக்கமான விவரத்தைக் காண்கின்றோம். இடையில் எண்ணிக்கையும் தொலைவும் எப்படியிருப் பினும், நண்பர்கள் உங்களிடம் தரித்திருப்பார்கள். அது போன்ற நண்பர் ஒருவர் உங்களுக்கு இருந்தால், அந்த நண்பருக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

6. தேவன் உங்களை ஒருபோதும் கைவிட மாட்டார் என்று விசுவாசியுங்கள் (23:14, 25, 26)

நாடு முழுவதிலும் உள்ள ஆதார மூலங்கள் ஒருவரை அழிப்பதற்காக இயக்குவிக்கப்படுகின்ற போது தம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள் தம்மைக் காட்டிக்கொடுக்க ஆவலாயிருக்கின்ற போது, ஒருவர் எவ்வாறு தப்பிக்கின்றார்? தாவீது எப்படித் தப்பினார் என்று நாம் 23:14ல் வாசிக்கின்றோம்: "தாவீது ... சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருந்தான்; சவுல் அநுதினமும் அவனைத் தேடியும் தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை." தேடப்பட்டவர்களாக உயிர் வாழ்ந்தவர்களிலேயே, தாவீது மிகவும் புத்திசாலியாகவும் ஆதார மூலங்கள் நிறைந்தவராகவும் இருந்ததினால் அவர் சவுலின் வலைகளில் இருந்து தப்பித்து விடவில்லை, அல்லது அவர் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட அறுநூறு பேர்களைக் கொண்டிருந்ததினால் அவ்வாறு தப்பித்து விடவில்லை. "தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை"

என்பதினாலேயே அவர் தப்பித்தார்!

தாவீதின் வாழ்வின் இந்தக் காலகட்டம் பற்றிக் கூறுகின்ற அத்தியாயங்கள் எல்லாவற்றையும் கண்ணோக்குங்கள், கர்த்தர் அவருடன் இருந்தார் என்று கூறப்படுகின்ற அல்லது மறைமுகமாய் உணர்த்தப்படுகின்ற முறைகளின் எண்ணிக்கையையும் கண்ணோக்குங்கள் (1 சாமு. 18:12, 14, 28; 23:2, 4; 25:26, 28 முதல், 34, 39; 26:12, 24; 30:6, 23 இன்னும் பிற). தாவீது திரும்புவதற்கு எவ்விடமும் இல்லாத போது, அவர் எப்பொழுதும் கர்த்தரிடமாய்த் திரும்ப முடிந்தது. தாவீதின் பல சங்கீதங்கள், அவரது வாழ்வின் கலக்கம் நிறைந்த இந்தக் காலகட்டத்தை எடுத்துரைக்கின்றன. அந்த சங்கீதங்களுக்கு முன்பாக உள்ள அறிமுகக் குறிப்புக்களைக் கவனியுங்கள்:

சங்கீதம் 59: "சவுல் தாவீதைக் கொல்லுவதற்காக ஏவலாட்களை அனுப்பினபோது ..."

சங்கீதம் 56: "பெலிஸ்தர் தாவீதைக் காத்தூரில் பிடித்தபோது ..."

சங்கீதம் 34: "தாவீது அபமெலேக்குக்கு முன்பாக வேஷமாறின போது, அவனால் துரத்தி விடப்படுகையில் ..."

சங்கீதம் 57: "தாவீது சவுலுக்குத் தப்பியோடி கெபியில் ஒதுங்குகையில் ..."

சங்கீதம் 142: "தாவீது கெபியிலிருக்கும்போது ..."

சங்கீதம் 52: "தாவீது அபிமெலேக்கின் வீட்டுக்கு வந்தானென்று ஏதோமியானாகிய தோவேக்கு வந்து சவுலுக்கு அறிவித்தபின்பு ..."

சங்கீதம் 63: "தாவீது யூதாவின் வனாந்தரத்திலிருக்கையில் ..."

சங்கீதம் 54: "தாவீது தங்களிடத்தில் ஒளிந்துக் கொண்டிருக்கிறான் என்று சீப்பூரார் வந்து சவுலுக்கு சொன்னபோது ..."

சோர்வுமிகுந்த வேளைகளில், சில மக்கள் தங்களை உற்சாகப்படுத்திக் கொள்வதற்காக, தினசரி நாட்குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்வார்கள். தாவீதோ சங்கீதங்களை எழுதியுள்ளார்![36] நம்மில் அநேகர் மனச் சோர்வினால் மூழ்கடிக்கப்பட்டிருக்கக் கூடிய வேளையில் தாவீதோ, மறக்க முடியாத கவிதைகளில், தமது பயங்களை வெளிப்படுத்தியது மட்டுமின்றி தமது விசுவாசத்தையும் வெளிப்படுத்தினார். இந்தக் காலகட்டத்தில் அவர் முதன்முதலாக எழுதியதென்று குறிப்பிடப்படும் சங்கீதத்தில், தாவீது தம் குழப்ப நிலை பற்றிக் குரலெடுத்துரைத்தார்:

> இதோ, என் பிராணனுக்குப் பதிவிருக்கிறார்கள்;
> கர்த்தாவே, என்னிடத்தில் மீறுதலும் பாவமும் இல்லாதிருந்தும்,
> பலவான்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடுகிறார்கள்.
> என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும்,
> ஓடித்திரிந்து யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள் (சங். 59:3, 4அ).

ஆயினும், பின்பு அவர் தேவன் மீதான தமது நம்பிக்கையை அறிவித்தார்: "என் பெலனே, உம்மை கீர்த்தனம்பண்ணுவேன்; தேவன்

எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள தேவனுமாயிருக்கிறார்" (59:17)!

இந்தக் காலகட்டத்தில் கடைசியாக எழுதப்பட்டதென்று குறிப்பிடப் படும் சங்கீதத்தில், தாவீது சீப்பூராரால் தாம் காட்டிக் கொடுக்கப்பட்டது குறித்துத் தேவனிடத்தில் கதறினார். தாவீது பின்வருமாறு கூறினார்:

தேவனை, உமது நாமத்தினிமித்தம் என்னை இரட்சித்து,
உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ்செய்யும்.
தேவனே, என் விண்ணப்பத்தைக் கேட்டு,
என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும்.
அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்;
கொடியர் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள் ...
(சங். 54:1-3).

அந்த ஜெபத்திற்குத் தேவன் பதில் அளித்தாரா? 1 சாமுவேல் 23ன் இறுதிப் பகுதியைக் கண்ணோக்குங்கள். சீப்பூரார் சவுலிடம் தாவீதைக் காட்டிக் கொடுப்பதாக வாக்களித்த பின்பு, இராஜா அவர்களிடம், தாவீது மீண்டும் நழுவி விடாதபடி, அவர் (தாவீது) எங்கிருக்கிறார் என்பது பற்றி நிச்சய செய்தி கொண்டுவரும்படி கேட்டுக் கொண்டார். சவுலும் அவரது படைகளும் சீப்பூராரால் வழிநடத்தப்பட்டு சரியான இடத்திற்குத் தவறாது சென்றார்கள். விரைவிலேயே சவுல் தாவீதைத் தொடர்ந்தார்; "சவுல் மலையின் இந்தப்பக்கத்திலும், தாவீதும் அவன் மனுஷரும் மலையின் அந்தப்பக்கத்திலும் நடந்தார்கள்; சவுலுக்குத் தப்பிப்போக, தாவீது தீவிரித்த போது, சவுலும் அவன் மனுஷரும் தாவீதையும் அவன் மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய் அவர்களை வளைந்துகொண்டார்கள்" (23:26). சவுலின் ஆயிரக்கணக்கான படைகள் மலையின் இரு திசைகளிலும் இருந்து வளைந்து கொண்டார்கள்; தாவீதும் அவரது அறுநூறு ஆட்களும் (சவுலின் படைகளின்) மத்தியில் நெருக்கிப் பிழியப்பட்டார்கள். தாவீது தப்பிச் செல்ல முடிவதற்கான வழியே இல்லாதது போலக் காணப்பட்டது. பின்பு தேவன் உள்ளே அடியெடுத்து வைத்தார். "அந்தச் சமயத்தில் ஒரு ஆள் சவுலிடத்தில் வந்து: 'நீர் சீக்கிரமாய் வாரும்; பெலிஸ்தர் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள்' என்றான். அதனால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டுத் திரும்பி, பெலிஸ்தரை எதிர்க்கும்படி போனான்" (23:27, 28அ).[37] அந்த வார்த்தைகளை வசனம் 14ன் வெளிச்சத்தில் வாசித்து, "அது ஏதோ தற்செயலாக நடந்தது" அல்லது "தாவீது அதிர்ஷ்டக்காரர், இல்லையா?" என்று கூறுவது இயலாததாக உள்ளது. தேவன் உதவினார் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொண்டார் கள். அந்த இடத்தில் பிற்பாடு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. "ஆதலால் அவ்விடத்திற்கு சேலா அம்மாலிகோத் (தப்புதலின் பாறை) என்று பேரிட்டார்கள்" (23:28ஆ).

இரவு எவ்வளவு இருட்டாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தேவன்மீது உங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். இந்த சத்தியத்தை வனாந்திரத்தில் களப்பரிசோதனை செய்த தாவீது பின்வருமாறு

எழுதினார்: "தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்து காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங். 46:1). "அநுகூலமான" [*ஆங்கிலத்தில் இது* "present" *என்றுள்ளது*] *என்ற வார்த்தையை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். தேவன் (நமது) துன்ப வேளையில் பிரசன்னமாகிறார்; அவர் உங்கள் பிரச்சனைகளில் உங்களுடன் கூடவே இருக்கின்றார். இப்பொழுது நீங்கள் இதைக் காணாதிருக்கலாம், ஆனால் கர்த்தருடன் நெருங்கித் தரித்திருங்கள். இப்பொழுதிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின் ... அல்லது பத்து ஆண்டுகளுக்குப் பின் ... அல்லது இருபது ஆண்டுகளுக்குப் பின் ... நீங்கள் பின்னோக்கித் திரும்பிப் பார்த்து தேவனுடைய கரத்தைத் தெளிவாய்க் காண முடியும். கர்த்தரை(யே) பற்றிக் கொள்ளுங்கள்; அவர் உங்களைக் கைவிட மாட்டார்!*

7. கசப்புணர்வுள்ளவர்களாய் இராதீர்கள்

மோசமான காலங்களில் தாவீது உயிர் பிழைத்திருந்ததில் இருந்து நாம் இன்னும் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். நமது அடுத்த பாடத்தில், நாம் அத்தியாயம் 24 முதல் 26 வரையுள்ள பகுதியில் தாவீது பழி வாங்குதலை எவ்வாறு கையாண்டார் என்று படிப்போம். மோசமான காலங்களில் நமது இருதயம் கசப்புணர்வினால் நிறைந்திருக்கும் என்பது அக்காலங்களின் மாபெரும் அபாயங்களில் ஒன்றாக உள்ளது. நமது இருதயங்களில் "கசப்பான வேர்" எதுவும் "முளைத்தெழும்பி விடாதபடி" காத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாததாக உள்ளது (எபி. 12:15).

8. மன்னிக்கின்றவர்களாயிருங்கள்

மன்னிக்கின்றவர்களாயிருக்கக் கற்றுக் கொள்ளுதல் என்பது கசப்புணர் வில் இருந்து தப்பிக்கும் வழியாக உள்ளது. "பழி வாங்குதலுக்கு இருதயம் கதறுகின்ற போது" என்ற நமது அடுத்த பாடத்தின் அறைகூவல் பின்வரும் வார்த்தைகளில் தொகுத்துரைக்கப்பட முடியும்: "சகலவிதமான கசப்பும், ... உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து ... ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4:31, 32).

9. எதுவும் என்றென்றைக்கும் அப்படியே நிலைத்திராது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்

நல்ல காலங்களோ அல்லது மோசமான காலங்களோ, எதுவும் என்றென்றைக்கும் அப்படியே நிலைத்திராது என்பதை உணர்ந்தறியவும், இது (மோசமான காலங்கள்) உதவுகிறது. இன்னும் இரண்டு பாடங் களுக்குப் பின்பு நாம், தாவீது தமது பத்தாண்டுகள் ஓட்டத்திற்குப் பின்னால் இராஜாவானதைக் காண்போம். அதிலேயே நிலைத்திருங்கள்; மோசமான காலங்கள் என்றென்றைக்குமாக அப்படியே நிலைத்திருக்க மாட்டாது.

இவற்றிலும் இன்னும் பிற கருத்துக்களிலும் நாம் தரித்திருக்க முடியும் - ஆனால் இந்தக் கணத்தில் நாம், மோசமான காலங்களில் உயிர் பிழைத் திருத்தல் பற்றி கடைசியான ஒரு ஆலோசனையுடன் (இப்பாடத்தை) முடித்துக் கொள்வோம்:

10. மோசமான காலங்களில் இருந்து நன்மை வரக்கூடும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்

ரோமர் 8:28ஐ ஒருக்காலும் மறவாதீர்கள்; அதை இறுக்கமாகப் பற்றிக் கொள்ளுங்கள்: "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.'' தாவீதின் வாழ்வில் அந்த இருளான நாட்களின் போது தேவன் என்ன செய்தார் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: தேவன் தாவீதை ஒரு இராஜாவாகத் தயார் செய்வதற்காக, தொடர்ந்து அவரை உருப்படுத்தினார்/வடிவமைத்தார். ஆடுகளை மேய்த்தலென்பது ஒரு இளநிலைப் பட்டப்படிப்பாக இருந்தது. தமது உயிருக்காக ஓடுதல் என்பது (முதுநிலை) பட்டப்படிப்பாக இருந்தது.

தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் நாம் (முற்றிலு மாக) அறிய இயலாது (ஏசா. 55:8, 9), ஆனால் தாவீது தம்மைத் தாமே சார்ந்திருக்கும்படி அவருக்குப் போதிப்பதற்காகத், தாவீது சார்ந்திருந்த எல்லாவற்றிலும் இருந்து (அவர் சாய்ந்திருந்த "கவைக்கோல்கள்" எல்லா வற்றிலும் இருந்து) அவரைத் தேவன் நீக்கிக் கொண்டிருந்தார். தாவீது தமது இல்லத்தையும் மீகாளின் நேசத்தையும் இழந்து போயிருக்கையில், அவர் சாமுவேலைக் கடைசி முறையாகக் கண்ட நிலையில், தம் நண்பர் யோனத் தானிடம் இருந்து பயத்துடன் பிரிந்து சென்ற நிலையில், தேவனுடைய ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து பிரிக்கப்பட்ட நிலையில் அவரை நாம் பின் தொடர்ந்து சென்று கண்டிருக்கின்றோம். சங்கீதம் 142ல் அவரது சோகம் மிகுந்த கதறலை நாம் கேட்டோம்: "என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை" (வ. 4).

ஆயினும், சங்கீதம் 142ல் தொடர்ந்து வரும் வசனங்களைக் கண்ணோக் குங்கள். வசனம் 5ல், தாவீது "கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; 'நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக் கிறீர்' என்றேன்" எனக் கூறினார். தாவீது பலத்திற்கான தமது பிற ஆதார மூலங்களை இழந்து போயிருக்கலாம், ஆனால் இன்னமும் அவர் தமது தேவனைக் கொண்டவராயிருந்தார். அவரிடத்தில் தமது குரலை உயர்த் தினார்: "என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப் பட்டேன்; என்னைப் பின் தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள். உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கி விடும்" (வ. 6, 7அ).

தாவீது இந்த சங்கீதத்தைப் பின்வரும் நம்பிக்கை நிறைந்த வார்த்தை களுடன் முடித்தார்: "எனக்கு நீர் தயவுசெய்யும்போது, நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்'' (வ. 7ஆ). வசனம் 4ம் (''என்

ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை"), வசனம் 7ம் ("நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்") வேத வசனப் பகுதியில் இரண்டே இரண்டு வசனங்களினால் மட்டுமே பிரிக்கப்பட்டுள்ளன, ஆனால் உணர்வுப்பூர்வமான வகையில் அவை இரண்டும் இலட்சக்கணக்கான மைல்கள் பிரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. தாவீது தமது கர்த்தர் மீதான நம்பிக்கையின் ஒரு புதிய மட்டத்திற்கு நகர்ந்து சென்று கொண்டிருந்தார்!

இந்தப் பாடங்கள் நமக்கு இன்றியமையாத பாடங்களாக உள்ளன - மற்றும் நமது வாழ்வைப் பேரழிவு தாக்குவதொன்றுதான் இவற்றைக் கற்றுக் கொள்வதற்கான ஒரே வழியாயிருப்பதால் சில வேளைகளில் நாம் மனக் கடினமடைந்து போகிறோம். ஒருவேளை, யாராவது நம்மைத் தவறாக நடத்துதல் மட்டுமே நாம் இரக்கமும் மன்னிப்பும் உள்ளவர்களாய் இருப்பதற்கான ஒரே வழியாய் இருக்கலாம். ஒருவேளை, நாம் மிகவும் பிரியமாய் பற்றிக் கொண்டுள்ள எல்லாவற்றையும் இழந்து போகுதல் மட்டுமே நாம் தேவன் மீது முழுமையான நம்பிக்கை வைக்கக் கற்றுக் கொள்வதற்கான ஒரே வழியாய் இருக்கலாம். உலகப் பிரகாரமான நபர் ஒருவர், தமக்குள்ள எல்லாவற்றையும் இழக்கின்ற பொழுது, "நான் முற்றிலும் எல்லாவற்றையும் முடித்துக் கொள்ளுவேன்" என்று கூறுகின்றார். கிறிஸ்தவர் எல்லாவற்றையும் இழக்கின்ற பொழுது, அவர் தேவனை நோக்குகின்றார், அவரிடத்தில் தேவன், "உனது கரம் வெறுமையாய் இருக்கிறதா? நல்லது! கடைசியில் நீ என் மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறாய்!" என்று கூறுகின்றார்.

மோசமான காலங்கள் வரவேண்டும் என்று நாம் விரும்பி, அவற்றை எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. மாறாக நான், அவைகள் வரும்பொழுது அவற்றைப் பற்றிய நமது எண்ணப்போக்குகள் இவ்வுலகில் எல்லா மாறுபாடுகளையும் ஏற்படுத்தக் கூடும் என்றுதான் கூறுகின்றேன். அந்தக் காலங்களிலிருந்து வெளியே வரும் பொழுது, நாம் மேன்மையானவர்களாகவோ அல்லது கசப்பானவர்களாகவோ, சிதைந்து போனவர்களாகவோ அல்லது உருவாக்கப்பட்டவர்களாகவோ வரலாம். மோசமான காலங்களில் இருந்து நன்மை வரக்கூடும் என்பதால், அவற்றைக் குறித்து நாம் ஒரு நேர்மறையான எண்ணப்போக்கைக் கொண்டிருப் போமாக.

முடிவுரை

நீங்கள் யார் என்பது எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தப் போவதில்லை; மோசமான காலங்கள் வரக்கூடும். நினைவு வெள்ளம் பெருக்கெடுக்கின்றது: ஒரு மூப்பர் தமது திருமணத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகளினால் தம் படுக்கையில் அமர்ந்து அழுது கொண்டிருக் கின்றார்; செவ்வளையமிட்ட கண்களுடன் பெற்றோர்கள், தங்களின் திருமணம் ஆகாத மகள் கர்ப்பம் அடைந்துள்ளதாகக் கூறுகின்றனர்; நீச்சல் குளத்தில் தவறி விழுந்து விட்ட ஒரு சிறுகுழந்தையின் உடல்நிலை பற்றிய செய்திக்காக அக்குழந்தையின் பெற்றோர்களும், தாத்தா பாட்டிகளும்,

நண்பர்களும் ஒரு சிறு மருத்துவமனையின் முன்பாகக் கூடியிருக்கின்றனர்; தேவபக்தியுள்ள ஒரு கிறிஸ்தவத் தாய், வேதனை மிகுந்த குரலில், தனது மகன் ஓரினச் சேர்க்கைக்காரனாகி விட்டான் என்று என்னிடம் கூறுகின்றாள். இப்பொழுதே கூட உங்களில் பலர் மோசமான காலங்களினூடே கடந்து சென்று கொண்டிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. விஷயம் அப்படியென்றால், தாவீதின் வனாந்தர அனுபவத்தில் இருந்து பாடத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்: நாம் நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டு, கர்த்தரைச் சார்ந்திருந்தால், நாம் உயிர் வாழ்வோம். தாவீது அவ்வாறே செய்தார்; நாமும் அவ்வாறு செய்ய முடியும்.

பிரசங்க குறிப்புகள்

இந்தப் பாடத்தில் "செய்யக்கூடியவைகள்" மற்றும் "செய்யக்கூடாதவைகள்" என்று பத்து விஷயங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன (அவற்றில் நான்கு விஷயங்கள் சுருக்கமாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன). நீங்கள், "மோசமான காலங்களில் உயிர் வாழ செய்யக் கூடியவைகள் மற்றும் செய்யக் கூடாதவைகள்" பற்றிய "மேலான பத்து (கருத்துக்களின்) பட்டியல்" பற்றி ஒரு "இறங்கு முக எண்ணிக்கையை" செய்ய முடியும். நீங்கள் இந்த அணுகுமுறையை பயன்படுத்தினால், இங்கு கடைசியாகக் குறிப்பிடப்பட்ட விஷயமானது, மோசமான காலங்களில் தேவன் நமக்கு உதவுவார் என்ற உண்மையானது, "முதல் எண்" கொண்ட விஷயமாக இருக்க வேண்டும்.

பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, தாவீதின் வாழ்வில் கலக்கம் நிறைந்த காலப் பகுதியில் பல சங்கீதங்கள் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அவற்றில் பல, அற்புதமான துணைப்பாடங்களை ஏற்படுத்துவதாயிருக்கும். ("கிறிஸ்து மீண்டும் வந்த நாள்" மற்றும் பிற பிரசங்கங்கள் என்ற எனது முதல் பிரசங்கப் புத்தகத்தில், "என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை" என்ற பாடம் சங்கீதம் 142ஐ செயல்முறைப்படுத்துகின்றது. இந்தப் பிரசங்கத்தின் முதல் பாகத்தில் உள்ள சொற்றொடர் அமைப்புக்களில் சில அதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.)

குறிப்புகள்

[1]உபா. 32:30; சங். 91:7; மீகா 6:7 ஆகியவற்றைக் கவனிக்கவும். ஒரு தாய், "ஆயிரந்தடவை உனக்குச் சொல்லி விட்டேன்" என்றும் "இலட்சந் தடவை உனக்குச் சொல்லி விட்டேன்" என்றும் கூறுகின்ற பொழுது, அவள் அவ்விரு வேளைகளிலும் ஒரே விஷயத்தையே கூறுகின்றாள். [2]இது சவுல் தாவீதைக் கொல்வதற்கு ஒரு சாக்குப் போக்கு காணும்படியான வகையில், தாவீதை ஒரு கலக்காரராக ஆகும்படிக்கு அவரை விரட்டுகின்ற ஒரு சூழ்ச்சியாக இருந்திருக்கச் சாத்தியமுண்டு. ஆனால் அது அப்படி நடக்கவில்லை. [3]சவுல் விருத்தசேதனமற்ற பெலிஸ்தர்களில் நூறு பேரின்

"நுனித்தோல்கள்" வேண்டும் என்று கேட்டார் (1 சாமு. 18:25). [4]*1 சாமுவேல் 19:12, 18; 20:1; 21:10; முதலியன. அடுத்த சில அத்தியாயங்களில் தாவீது ஓடினார் என்று (ஏதாவது ஒரு வடிவில்) பத்து முறைகள் கூறப்பட்டுள்ளது.* [5]*அதைப் பற்றி மீகாள் ஏதோ ஒரு வழியில் கண்டறிந்தாள் (1 சாமு. 19:11); ஒருவேளை தாவீதின் மூலமாக, ஒருவேளை வேறு சில வழிகள் மூலமாகக் கண்டறிந்திருப்பாள்.* [6]*வீடு கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தது (1 சாமு. 19:11).* [7]*இது, அவர்கள் வீடு இராகாபின் வீட்டைப் போல் நகரத்தின் மதிலில் கட்டப்பட்டிருக்கலாம் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது (யோசு. 2:15ஐக் காணவும்).* [8]*எபிரெய மொழியில்: teraphim இது வழக்கமாக ஒரு சுரூபத்தைக் குறித்தது, மற்றும் இவ்விதமாகவே NASBயில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தாவீதின் வீட்டில் சுரூபத்திற்கு என்ன வேலை? இதைப் பற்றி வேத வசனப்பகுதி எந்த விவரத்தையும் கொடுப்பதில்லையாதலால், நாம் இதைப் பற்றி உபதேச ரீதியாக ஒன்றும் கூற இயலாது, ஆனால் அநேகமாக மீகாள் இதைத் தனது தந்தையின் வீட்டிலிருந்து கொண்டு வந்திருக்கலாம் மற்றும் இது அங்கிருந்ததைத் தாவீது அறியாதிருந்திருக்கலாம். தொன்மைக் கால சுரூபங்கள், சுரூபங்கள் போலவே இருந்திருக்கும் என்ற அவசியமில்லை; இது அறையின் மூலையில் இருந்து அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறு தூணாக(வும்) இருந்திருக்கக் கூடும்.* [9]*"நாயோதி" என்றால் "குடியிருப்பு" அல்லது "வாசஸ்தலம்" என்று அர்த்தப் படுகின்றது. இங்கு இது தீர்க்கதரிசிகள் வாழ்ந்த வீடுகளின் தொகுப்பைக் குறித்தது என்பது உறுதி.* [10]*"நிர்வாணி" என்பது "உடையற்று" மற்றும் "போதிய உடையின்றி" என்ப வற்றில் ஏதொன்றையும் அர்த்தப்படுத்தக் கூடும் என்பதால், சவுலின் ஆடையற்ற நிலை எது என்பது நமக்குத் தெரியவில்லை. ஆயினும் பர்ட்டன் காஃப்மேன் அவர்கள், எப்படியிருந்தாலும் சவுல் தன்னுணர்வைப் பெற்றபோது, அவர் தாவீதிதைக் கண்டுபிடிப்பதை விடத் தமது உடைகளைக் கண்டறிவதில் அதிகம் ஆர்வம் உடையவராயிருந்தார் என்று குறிப்பிட்டார்.*

[11]*அகிமெலேக்கு ஏலியின் வம்சத்தில் வந்தவராயிருந்தார். அவர், சாமுவேல் சவுலை விட்டுச் சென்று விட்ட பிறகு, சவுலின் ஆவிக்குரிய ஆலோசகராகச் சேர்ந்திருந்த அகிசாவின் சகோதரராயிருக்கலாம் (இ.வ. 1 சாமு. 14:3; 22:9) அல்லது அவர் அகிசாவாக இருந்திருக்கலாம் (அதாவது, அகிசா என்பது அகிமெலேக்குக்கு இன்னொரு பெயராயிருந்தது). எவ்வகையிலும் தாவீது அவர் மீது நம்பிக்கை யாயிருக்கக் கூடாதிருந்தது.* [12]*புளிப்பில்லாத பன்னிரெண்டு பெரிய அப்பங்கள் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஆசரிப்புக் கூடாரத்தின் மேசையின் மீது வைக்கப்பட்டன (யாத். 25:23-30; லேவி. 24:5-9). அடுத்த ஓய்வு நாளில் புதிய அப்பங்கள் வைக்கப்படும், பழைய அப்பங்களை ஆசாரியர்கள் உண்டார்கள். ஆசாரியர், தாவீதுக்குப் பழைய அப்பங்களில் சிலவற்றைக் கொடுத்தார். நன்மை செய்வதும் உயிரைக் காப்பதும் எப்பொழுதுமே நல்லது என்று போதிப்பதற்கு இயேசு இந்த வரலாற்றைப் பயன்படுத்தினார் (மத். 12:3, 4; லூக். 6:9). இன்றைய நாட்களுக்கு, பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: ஒருவர் (எபி. 10:25ல் கட்டளையிடப்பட்டுள்ளபடி) ஆராதனைக்குச் சென்று கொண்டிருக்கையில் கார் விபத்தொன்றைக் காண்கின்றார், அப்போது அவர் ஆராதனையைத் தவறவிட நேர்ந்தாலும்கூடப் பரவாயில்லை, அங்கு காயமடைந்தவர்களுக்கு உதவி செய்வது என்பது, பிரமாணத்திற்கு உட்பட்டதாகவே உள்ளது. இருப்பினும் இது, "நன்மை வரும்படி தீமை செய்வதற்கான" உரிமம் என்பதாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.* [13]*தாவீதின் நேர்மையற்ற தன்மை மற்றும் பிற மதியீனங்கள் ஆகியவற்றைத் தற்காக்க வாதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். வேதாகமம் தான் அங்கீகரிக்காத பலவற்றைப் பற்றிய உண்மையான விவரங்களை அப்படியே*

தருகின்றது. பொய்யுரைப்பதைத் தேவன் அங்கீகரிப்ப தில்லை (1 யோவா. 2:21; யோவா. 8:44). [14]வேத வசனம், தோவேக்கு "கர்த்தருடைய சந்நிதியில் தடைப்பட்டிருந்தான்" என்று கூறுகிறது (1 சாமு. 21:7). இது ஏதேனும் சில ஒழுங்கு நடவடிக்கைக்காக ஏற்பட்டிருக்கலாம் - இது பிற்பாடு ஆசாரியர்கள் மீதான தோவேக்கின் விரோதமான போக்கிற்குக் காரணமாயிற்று என்று விளக்கப்படுத்தலாம். [15]தாவீது "காத்தின் அரசனான ஆகீசிடத்தில்" போனார் (1 சாமு. 21:10) மற்றும் "அவன் வீட்டிற்குள் வர" விரும்பினார் (1 சாமு. 21:15ஐக் கவனிக்கவும்) என்பதைக் கவனியுங்கள். 1 சாமுவேல் 27:1 வசனமானது இந்த வேளையில் அவரது காரண அறிவிற்கான சில உட்கண்ணோட்டங்களைத் தருவதாயிருக்கலாம். [16]1 சாமுவேல் 21:11. அவர்கள் தாவீதை "தேசத்து ராஜா" என்று அழைத்ததைக் கவனியுங்கள். அநேகமாக அவர்கள், "நாட்டின் இருதயங்களை ஆள்கின்றவர்" என்று அர்த்தப்படுத்தியிருக்கலாம். இன்றைய நாட்களில் மக்கள், "நடிப்புச் சக்கரவர்த்தி" முதலியவை பற்றிப் பேசுகின்றார்கள் - அதாவது, அதிக்கம் செலுத்தும் சக்திகொண்ட ஒருவர் என்று அர்த்தப்படுத்துகின்றார்கள். [17]மேற்கு அமெரிக்கப் பயணிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பித்தம் கொண்டவர்கள் போல நடிப்பதன் மூலம் (செவ்)விந்தியர்களிடம் இருந்து தப்பித்தனர். [18]சங்கீதம் 34ன் திறப்புக் குறிப்பை வாசிக்கவும், அதன் பிறகு அந்தச் சங்கீதத்தின் செய்தியை வாசிக்கவும். [19]சில மொழிபெயர்ப்புக்களில், "அவர் வாயிற் கதவைப் பிறாண்டினார்" என்றுள்ளது. மேலும், கீறல்களை உண்டாக்க தாவீது தன் பட்டயத்தையும் உபயோகித்திருக்கக் கூடும். [20]1 சாமுவேல் 22:1 "அதுல்லாம்" என்ற வார்த்தை "புகலிடம்" என்று அர்த்தப்படுகின்றது.

[21]தொடக்க கால அதுல்லாம்மின் சரியான இடம் குறித்துக் கல்வியாளர்கள் தங்கள் கருத்துக்களில் பிரிவு பட்டுள்ளார்கள். இங்கு விவரிக்கப்பட்டுள்ளது பாரம்பரியமாக குறிப்பிடப்படும் இடமாக உள்ளது. [22]Lynn Anderson, "Man On the Run" (N.p., n.d.), sound cassette. [23]தாவீது தாம் தேடப்பட்டவராயிருக்கையில் தமது தந்தையும் தாயும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களை மோவாபிய நாட்டிற்குக் கூட்டிச் சென்றார் (1 சாமு. 22:3, 4). அந்தக் குடும்பம் மோவாபிய நாட்டுடன் பிணைப்புக் கொண்டிருந்தது; தாவீதின் கொள்ளுப்பாட்டி (ரூத்) மோவாபிய நாட்டைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். மேலும் சவுல் மோவாபிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருந்தார் (1 சாமு. 4:47), இது மோவாபிய அரசனை சவுலின் "விரோதியின்" மீது ஆதரவாகக் கண்ணோக்கச் செய்திருக்கும். [24]"அரண்" என்ற வார்த்தை தாவீது தப்பியோடுதல் பற்றிய வரலாற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. இது ஏதேனும் ஒரு இடத்தைக் குறிப்பதில்லை, ஆனால் சுலபமாய்ச் சென்றடைய முடியாத அல்லது சுலபமாய்த் தற்காத்துக் கொள்ளக் கூடிய எந்த இடத்தையும் குறிப்பிடுகின்றது. இவ்வசனத்தில், இது ஒரு குகையைக் குறிப்பிடுகின்றது. [25]1 சாமுவேல் 21:1-9 வசனப்பகுதி, தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தார் என்று குறிப்பிடுவதில்லை, ஆனால் அவர் அதைச் செய்திருக்கலாம் (22:15ஐக் காணவும்). [26]1 சாமுவேல் 22:18, 19. இந்தத் துன்பங்கள் முன்னுரைக்கப்பட்டிருந்தன (இ.வ. 1 சாமு. 2:31). [27]மற்றவர்கள் யாவரும் சவுலின் ஆணைக்குப் பதில் அளிக்கச் சென்றபோது, ஒருவேளை இவர் "பொருட்களைக் கவனித்துக் கொள்வதற்காக" நோபிலேயே தங்கியிருந்திருக்கலாம். [28]அவர் நம்மை மன்னிக்கின்றாரோ இல்லையோ, நாம் நம்மால் இயன்ற வற்றைச் செய்திருப்போம் (ரோமர் 12:18). [29]பெலிஸ்தர்கள் "தூற்றுகளங்களைக் கொள்ளையிட்டார்கள்"; தானியங் களைத் திருடுவதே இந்தக் கொள்ளையின் நோக்கமாக இருந்திருக்கும் என்பது உறுதி. [30]1 சாமுவேல் 23:3ஐக் கவனிக்கவும்; அவர்கள் கேகிலாவுக்குச் செல்வதற்காக யூதாவை விட்டுப் புறப்பட்டுச் சென்றிருப்பார்கள்.

[31]தாவீது கேகிலாவுக்கு சென்று அங்கிருப்பதற்கு முன்பு வரையிலும் அபியத்தார் தாவீதிடம் வந்து சேரவில்லை என்று கூறுவதற்குச் சிலர் 1 சாமுவேல் 23:6ஐப் பயன்படுத்துகின்றார்கள், ஆனால் வசனம் 6 அநேகமாக, தாவீதின் படையானது யுத்தம் செய்து கேகிலாவைப் பிடித்துக் கொள்வதற்காகச் சென்ற பொழுது அபியத்தார் பின்னால் தங்கியிருந்து கொண்டு, அந்த யுத்தம் முடியும் வரை தாவீதுடன் மீண்டும் இணையவில்லை என்று அர்த்தப்படுத்துவதாகவே இருக்கக் கூடும். வசனம் 2ல் தாவீது "கர்த்தரிடத்தில் விசாரித்தார்" என்பதற்கான மிக இயல்பான அர்த்தமானது, அவர் வசனம் 9ல் அதைச் செய்கிற வழிமுறையாகவே இருக்கின்றது. [32]ஊரிம் தும்மீம் என்பவை நிறம் ஒன்றைத் தவிர மற்றபடி ஒரே மாதிரியான கற்களாயிருந்து - ஒரு கல் "ஆம்" என்பதற்கும் இன்னொரு கல் "இல்லை" என்பதற்கும் உரியதாயிருக்கலாம். ஒருவேளை, கேள்வி தரப்பட்ட பின்பு, பிரதான ஆசாரியர் அவற்றில் ஒரு கல்லைத் தேடி எடுப்பார், இவ்விதமாக பதில் தருவார் என்றிருக்கலாம். ஊரீம் தும்மீம் என்பவை தட்டையானவைகளாக ஒவ்வொன்றும் ஒரு பக்கத்தில் ஒரு நிறமும் மறுபக்கத்தில் வேறொரு நிறமும் கொண்டவை களாயிருந்தன, அவை காற்றில்/ஆகாயத்தில் சுண்டியெறியப்படும். அவை தரையில் விழுந்த பின்பு, இரண்டும் ஒரே நிறத்தைக் கொண்டவையாகக் காண்பித்தால், அது தகுதியற்ற "ஆம்" என்பதாகும்; இரண்டும் மறு நிறத்தைக் காண்பித்தால், அது தகுதியற்ற "இல்லை" என்பதாகும்; இரு நிறங்களும் காணப்பட்டால், விளைவு நிச்சயமற்றதாகும் என்பதாக ஒரு ஆலோசனையும் கூறப்பட்டுள்ளது. இவைகள் பிரகாசிப்பினால் தேவனுடைய சித்தத்தைச் சுட்டிக் காண்பித்தன என்று யூதப் பாரம்பரியம் கூறுகின்றது. [33]தாவீது தம் மனிதர்களுக்குப் பயந்த காரணத்தினால், அவர்களுக்கு மறுஉறுதி அளிப்பதற்காக அந்தக் கேள்வியை இருமுறை கேட்டார். இருமுறையும் தேவன் அவருக்கு போ என்றே பதில் அளித்தார். [34]தாவீதும் அவர் மனிதர்களும் பாதுகாத்திருந்த உடைமைகளின் உரிமை யாளர்கள் நன்றியுடன் கொடுத்த கொடைகளைப் பெற்றுக் கொண்டு அவற்றினால் உயிர் பிழைத்திருக்கக் கூடிய சாத்தியக் கூறு உண்டு (1 சாமு. 25:14-16ஐக் காணவும்). [35]சீப்பூரார் தாவீதை இரண்டாம் முறை காட்டிக் கொடுத்தது 1 சாமுவேல் 26ல் காணப்படுகிறது. [36]தாவீது அப்போதே தமது பாடல்களை எழுதினாரா அல்லது அவற்றைத் தமது மனதில் இயற்றி வைத்துக் கொண்டு பிற்பாடு அவற்றை எழுதி வைத்தாரா என்று நமக்குத் தெரியவில்லை. [37]பெலிஸ்தியர் நடத்திய (முந்திய) கொள்ளைகளின் மீது சவுல் அதிகமாய் ஆர்வம் காட்டாதிருந்தபடியினால் (1 சாமு. 23:1 முதல்), இது சவுலுக்குச் சொந்தமான உடைமையாக இருந்திருக்கலாம்!

பழிவாங்குதலுக்கு இருதயம் கதறுகின்றபோது

(1 சாமுவேல் 24–26; 2 சாமுவேல் 1)

இந்தப் பாடத்தை வாசிக்கப் போகின்ற ஒவ்வொருவரையும் எனக்குத் தெரியாது, ஆனால் ஒவ்வொருவரைப் பற்றியும் - நான் இதுவரைக்கும் சந்தித்தேயிராதவர்களைப் பற்றியும் கூட - சிலவற்றை நான் அறிந்திருக்கின்றேன்: நீங்கள் ஒவ்வொருவரும் யாரோ ஒருவரால் புண்படுத்தப் பட்டிருக்கிறீர்கள். பல ஆண்டுகளுக்கு முன்னதாகவோ அல்லது நேற்றைய தினம் என்று சொல்லக் கூடிய சமீப காலத்திலோ எப்பொழுதாகிலும் நீங்கள் மனம் புண்படுத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை உங்கள் நண்பர் உங்கள் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து உங்களைக் காட்டிக் கொடுத்திருக்கலாம். ஒருவேளை உங்கள் ஆசிரியர், பயிற்சியாளர் அல்லது முதலாளி உங்களை நியாயமாக நடத்தாமல் இருந்திருக்கலாம். ஒருவேளை உங்கள் குடும்ப நண்பர்கள் உங்களைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கலாம்/திட்டியிருக் கலாம். ஒருவேளை உங்களுக்கு நன்கு பழக்கமானவர் உங்கள் நட்புறவை தமக்கு அநுகூலமாக்கியிருக்கலாம். ஒருவேளை உங்கள் கணவர்/மனைவி உங்களைக் கைவிட்டிருக்கலாம். ஒருவேளை உங்கள் விரோதியொருவர் உங்கள் வாழ்வை அழிக்கக் கிளம்பியிருக்கலாம். நாம் யாவருமே ஒரே விதமாகவே புண்படுத்தப்பட்டிருப்பதில்லை, ஆனாலும் நாம் புண்படுத்தப் பட்டுள்ளோம்.

இன்னொருவரிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொண்ட மிகப் பெரிய புண்படுதலைப் பற்றி ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அந்த இதய வலியை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து பாருங்கள். இப்போது, அந்த சகிக்க இயலாத தருணத்தில் நான் உங்களிடம் வந்து, பளபளக்கும் உலோகப் பெட்டி ஒன்றைத் தருவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தப் பெட்டியின் மீது ஒரு சிகப்பு நிறத்திலான பொத்தான் உள்ளது. நான் உங்களிடத்தில், "நீங்கள் இந்தப் பொத்தானை அமுக்கினால், நீங்கள் இப்போது படுகின்ற வேதனை எல்லாவற்றையும் உங்களைத் துன்புறுத்திய வர் அப்படியே உணருவார். நீங்கள் இந்தப் பொத்தானை அமுக்குகின்றீர் களா இல்லையா என்பதை, உங்களைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள்" என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். பின்பு நான் உங்களை விட்டுச் சென்று விடுகின்றேன். இப்பொழுது நான் உங்களை ஒன்று கேட்கின்றேன்: நீங்கள் உணர்ந்த வலியை மனதில் ஆழ்ந்து சிந்தித்தவர்களாய், நீங்கள் அந்தப் பொத்தானை அமுக்குவீர்களா?

ஒரு விஷயம் உறுதியானதாக உள்ளது: நம்மைச் சுற்றிலும் உள்ள உலகம் "அந்தப் பொத்தானை அமுக்கு! அந்தப் பொத்தானை அமுக்கு!" என்று அலறிக் கொண்டுள்ளது. வண்டியின் பம்ப்பரில் ஒட்டியுள்ள ஸ்டிக்கர்கள் இதையே கூக்குரலிடுகின்றன: "எனக்குப் பைத்தியம் பிடிக்க வில்லை; நான் பழிவாங்குவேன்.'' திரைப்படங்கள் இதையே கூக்குரலிகின்றன: "செல்லுங்கள். எனக்கு ஒரு நாளை ஏற்படுத்துங்கள்!" தொலைக் காட்சி விளம்பர நிகழ்ச்சிகள் இதையே கூக்குரலிடுகின்றன: "மனம் புண்பட்டிருக்கின்றீர்களா? வழக்குரைஞர் ஐ.எம்.ஏ. ஸ்வின்ட்லரை அழையுங்கள், அவர்களுக்கு நாங்கள் கட்டணம் செலுத்திக் கொள்ளு வோம்!"[1] உலகமானது எல்லாவிடத்திலும் பழிவாங்குதலுக்காகக் கதறு கின்றது; நமது கதாநாயகர்கள் தங்களை அடக்குபவர்களைப் பழி வாங்கு பவர்களாயிருக்கின்றனர். (தன் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டிய [மத். 5:39] யாராவது ஒருவரைக் "கதாநாயகன்" என்று அழைத்த நிகழ்ச்சியை நீங்கள் எப்பொழுது கடைசி முறையாகக் கண்டீர்கள்?)

இது மிகவும் கடினமானது, இல்லையா? நாம் குற்றஞ் சாட்டப்படும் போது, வையப்படும்போது, அல்லது தவறாகப் பயன்படுத்தப்படும்போது, நமது இருதயம் இயல்பாகவே பழிவாங்குதலுக்குக் கதறுகின்றது. பழிவாங்குதலின் பொத்தானை அமுக்குவது என்பதே நமது இயல்பான சாய்வாக உள்ளது. இருப்பினும் கிறிஸ்தவர்களுக்கு, "தேவன் என்ன அந்தப் பொத்தானை அமுக்கும்படி விரும்புவாரா?" என்பது கேள்வியாக உள்ளது. "அவர் அதை அனுமதிக்க மாட்டாரென்றால், என் மீது ஆதிக்கம் செலுத்து கின்ற அந்த விருப்பத்தை நான் எவ்வாறு கையாள முடியும்?" என்பது இன்னொரு கேள்வியாக உள்ளது. தாவீதின் வாழ்க்கையிலிருந்து நாம் பெறும் இந்தப் பாடத்தில், நாம் அந்தக் கேள்விகளுக்கு குறைந்தது ஒரு பகுதியாவது பதில் அளிக்கலாம் என்று நம்புகின்றோம். 1 சாமுவேல் 24-26 அத்தியாயங்கள் நமது பிரதான வேத பாடப்பகுதியாக இருக்கும். பழி வாங்குதல் என்ற பாடக் கருத்து இந்த அத்தியாயங்களை ஒன்றாய்ப் பிணைப்பதாக உள்ளது. நம்மைப் புண்படச் செய்தவர்களைப் புண் படுத்துதல் என்ற இயல்பூக்கத்தைக் கையாள்வதற்கு நமக்கு உதவக் கூடிய நான்கு ஆலோசனைகளை இந்த வசனப்பகுதிகளில் இருந்தும், 2 சாமுவேல் 1ம் அத்தியாயத்திலிருந்தும், எடுத்துக் கொடுக்க விரும்புகின்றேன்.

ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள் (1 சாமுவேல் 24)

ஒரு சில நாட்களுக்கு முன்பு, எனது மனைவியும் நானும், என்னைப் பற்றி விமர்சித்தவர் ஒருவர் கூறிய விமர்சனத்தில், விசேஷமாக என்னை விரும்பாததாக யாரோ ஒருவர் குறிப்பிட்டபோது, இன்னொரு தம்பதியைக் காணச் சென்றிருந்தோம். இந்த விமர்சனத்தின் இயல்பு என்னைச் சற்றே சிரிக்கச் செய்தது. யாரோ ஒருவர், "ஆதார மூலத்தை மட்டும் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்" என்று கூறினார்; பின்பு நாங்கள் அதிகம் பக்திவிருத்தியூட்டுகின்ற தலைப்புக்களுக்குக் கடந்து சென்றோம்.

நீங்கள் சிறுபிள்ளையாயிருந்த போது, அநேகமாகக் குறைந்தது ஒருமுறையாகிலும் உங்கள் பெற்றோரிடத்தில் உங்களைப் பற்றி யாரேனும் கூறிய இரக்கமற்ற வார்த்தைகளைப் பற்றிச் சொல்லியிருப்பீர் கள், அவர்கள் பதிலுக்கு, "ஆதாரமூலத்தைச் சிந்தித்துப் பார் - பின்பு அதை மறந்து விடு" என்று கூறியிருப்பார்கள். அந்த இரக்கமற்ற வார்த்தைகளை யார் கூறினார் என்பதை நீங்கள் தீவிரமாக ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், அதைக் குறித்துக் கவலைப்படுவதற்கு அது தகுதியற்றது என்பதை நீங்கள் உணர்ந்து அறிவீர்கள் என்பதே இங்கு கருத்தாக உள்ளது.

இந்தக் கொள்கையைத் தாவீதின் சூழ்நிலைக்கு நடைமுறைப்படுத்துங் கள். அவரது பரிதாபமான நிலைக்குக் காரணமாயிருந்தது யார்? தனக்குத் தானே விரோதியாயிருந்த தறிகெட்ட ஒரு அரசர்தானே?[2]

முன்பு நாம் இவ்வரலாற்றை விட்ட இடத்தில், தாவீதும் அவர் மனிதர் களும் சவுலின் படையினால் பிடிபடுவதிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்கள். பெலிஸ்தரோடு யுத்தம் செய்ய இராஜா சென்று விட்ட பின்பு, "தாவீது அவ்விடத்தை [மாகோன் வனாந்தரத்தை] விட்டுப் புறப்பட்டு, என்கேதியிலுள்ள அரணிப்பான இடங்களில் தங்கினான்" (1 சாமு. 23:29).

என்கேதி என்பது எருசலேமில் இருந்து தென்கிழக்கில் சுமார் முப்பத்தைந்து மைல்கள் தொலைவில் சவக்கடலின் மேற்குக் கரையின் மத்தியில் அமைந்திருந்தது. அதைச் சென்று கண்டவர்கள் அதன் அழகைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்கள்: கடல் மட்டத்திலிருந்து சுமார் அறுநூறு அடிகள் உயரத்தில் பளபளக்கும் நீரூற்று ஒன்று எழும்பிப் பெருகி, பாலைவனத்தினூடே பெருக்கெடுத்தோடுகிறது. அங்கு ஐந்து நீர்வீழ்ச்சி களும், பளிங்கு போலத் தெளிவான நீர் நிரம்பிய குட்டைகளும், வளமான புல்வெளிகளும், வண்ணமிகு மலர்களும் உள்ளன. உறுதியாய் நடக்கக் கூடியவர்களால் மட்டும் கால்நடையாய் நடந்து சென்று அடையக் கூடிய ஒரு நடைபாதையின் மூலம் மட்டுமே இந்தப் பாலைவனப் பசுஞ் சோலைக்குச் செல்ல முடியும். இங்கு தாவீதும் அவரது மனிதர்களும் தங்கள் உடல்களையும் ஆவிகளையும் ஓரளவுக்கு பாதுகாப்புடன் புத்துயிர்ப்பு பெறச் செய்து கொள்ள முடிந்தது.

இருப்பினும், என்கேதியின் சொர்க்கத்தில் தாவீதின் "இளைப் பாறுதலும் பொழுதுபோக்கும்" குறுகிய ஆயுளில் முடிந்து போயின. அத்தியாயம் 24, பின்வருமாறு தொடங்குகின்றது: "சவுல் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்து திரும்பிவந்தபோது, 'இதோ, தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான்' என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது சவுல்: இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவன் மனுஷரையும் ... தேடப் போனான்" (24:1, 2).

இது வேதாகமத்திலுள்ள சங்கடம் தரும் எதார்த்தமான வசனப் பகுதிகள் ஒன்றுக்கு நம்மைக் கொண்டு வருகின்றது: "வழியோரத்திலிருக்கிற ஆட்டுத் தொழுவங்களிடத்தில் அவன் வந்தபோது, அங்கே ஒரு கெபி இருந்தது; அதிலே சவுல் மலஜலாதிக்குப் போனான்" (24:3அ). மூல

மொழியாகிய எபிரெய மொழியில், "சவுல் தம் கால்களை மறைத்துக் கொள்ள சென்றார்" (KJVயில் கவனிக்கவும்) என்றுள்ளது, இது இயற்கைக் கடனைக் கழிக்கச் செல்லுதலுக்கு எபிரெய மொழியில் வழங்கப்படும் மறைவுக் கூற்றாக உள்ளது. (இது தமிழ் மொழியில் நாம், "வெளியே போய் விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறுவதற்கு இணையானதாகும்.)

"தாவீதும் அவன் மனுஷரும் அந்தக் கெபியின் பக்கங்களில் உட்கார்ந் திருந்தார்கள்" (24:3ஆ)[3] என்ற விஷயத்தைச் சவுல் அறிந்திருக்கவில்லை. தாவீது, அநேகமாக சவுல் வரும் ஒலியைக் கேட்டு, அந்தப் பகுதியில் ஏராளமாயிருந்த பிரதான குகைகள் ஒன்றில் தமது மனிதர்களை ஒளித்து வைக்க முடிவு செய்திருக்கலாம். (அந்தப் பகுதியில் இருந்த குகைகள் தாவீதின் தோழர்களான அறுநூறு பேரையும் - அதை விட அதிகமான மனிதர்களையும் கூட - ஒளித்து வைக்கப் போதுமான அளவுக்குப் பெரியவைகளாய் இருந்தன.)

தாவீதின் மனிதர்கள் உணர்வெழுச்சியடைந்தார்கள்! அவர்கள் தாவீதிடம் இரகசியமாக, " 'இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக' என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே" என்றார்கள் (24:4அ). கர்த்தரிடம் இருந்து தாவீதுக்குக் கிடைத்த இந்த வாக்குத்தத்தத்தை என்னால் சரியாகக் குறிப்பிட முடியவில்லை. ஏதோ ஒரு காலத்தில் தேவன் இதை தாவீதிடம் ஏற்படுத்தியிருந்திருக்கவும், அதைப் பற்றி அவர் தமது மனிதர்களிடத்தில் கூறியிருக்கவும் சாத்தியம் உள்ளது - ஆனால் தாவீது சவுலைக் கொல்வது தேவனுடைய சித்தம் என்பது பற்றி தாவீதின் மனிதர்கள் மிகவும் நேர்மறையான போக்குடன் இருந்திருக்கவும் அதனால் அவர்களே அந்த மேற்கோளை ஏற்படுத்தியிருக்கவும் சாத்தியம் உள்ளது. அவர்கள் கர்த்தருடைய வாயில் வார்த்தைகளை இடும் முதல் மனிதர்களாகவோ அல்லது கடைசி மனிதர்களாகவோ இருக்க மாட்டார்கள்!

பழிவாங்குதல் பற்றிய ஒரு சில உண்மைகளைக் குறிப்பிட நாம் இவ்விடத்தில் சற்றுத் தாமதிப்போம்: (1) பழி வாங்கக் காத்திருக்கின்றவர் கள், தங்களைப் புண்படுத்தியவர் எதிர்த்துத் தாக்க முடியாத ஒரு தருணத் திற்காகக் காத்திருக்கின்றார்கள். அந்தக் குகையில் அப்பொழுது சவுல் இருந்த நிலையைக் காட்டிலும் அதிகமாக எதிர்த்துத் தாக்க இயலாத நிலையில் வேறு எவரும் இருப்பதாக நான் யூகிப்பதில்லை. தாவீதின் மனிதர்கள் பழிவாங்குதல் என்ற மாம்ச சிந்தனையினால் ஊக்குவிக்கப் பட்டவர்களாக, இதனைத் தேவன் கொடுத்த வாய்ப்பு என்று கண்டதில் சிறிதளவே வியப்புள்ளது. (2) யாரோ ஒருவரால் நீங்கள் புண்பட்டிருந்தால், உங்களுக்கு அண்மையில் இருப்பவர்கள், அநேகமாக, உங்களை நீங்கள் ஒரு வாய்ப்பைப் பெற்றால், "திருப்பி(உங்கள் விரோதியை)த் தாக்கும்படி" கூறுவார்கள். தாவீதின் மனிதர்களைப் போலவே இவர்கள், நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு நல்ல காரணங்கள் பலவற்றைக் கொண்டிருப்பார்கள்: "அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்"; "அவனது மருந்தை அவனே ருசி பார்க்கட்டுமே"; "உன்னை மிதித்து அப்படி

உன்மேல் ஓடும் வரை அவனை அனுமதிப்பேயானால், நீ ஒருக்காலும் உன்னையே மதிப்பவனாயிருக்க மாட்டாய்.” தாவீதின் மனிதர்களைப் போலவே, இவர்களும் தேவனை இவ்விஷயத்தினுள் கொண்டு வரவும் கூடும்: “தேவன் உனக்குச் சில உரிமைகளைக் கொடுத்துள்ளார் அல்லவா”; “நீ ஒரு கால் மிதித்துணியைப் போல் செயல்படுவதைத் தேவன் நிச்சயமாக உன்னிடம் எதிர்பார்ப்பதில்லை!”

இங்கு வரலாறு எதிர்பாராத திருப்பம் ஒன்றை மேற்கொள்ளுகின்றது. 24:4ம் வசனத்தின் முடிவுப் பகுதியானது, “தாவீது எழுந்திருந்து போய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக் கொண்டான்” என்று கூறுகின்றது. அதைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த மனிதர்கள் சவுலைக் கொலை செய்யும்படி தாவீதிடத்தில் வற்புறுத்திய பின்பு, அவர் தமது கத்தியை எடுத்துக் கொண்டு இருளில் சவுலை நோக்கி மெல்ல நழுவுவதை கற்பனைச் செய்து பாருங்கள். அந்த மனிதர்கள் ஒருவரை யொருவர் விலாவில் இடித்துக் கொண்டு, அரசர் (கத்தியால்) குத்தப் பட்டார் அல்லது அவரது குரல்வளை அறுக்கப்பட்டது என்பதை அவர் களுக்குக் கூறக்கூடிய திணறல் மிக்க கூக்குரலுக்காகக் காத்திருந்தார்கள் - ஆனால் அவர்கள் (அவ்விதமான ஒலி எதையும்) கேட்க(முடிய)வில்லை. ஒரு கணத்தில், தாவீது தமது கத்தியை இன்னும் தம் கையில் வைத்திருந்தவராய்த் திரும்பி வந்தார், ஆனால் அந்தக் கத்தியில் இரத்தம் இல்லை. “என்ன நடந்தது?”; “நீ என்ன செய்தாய்?” என்ற கேள்விகளால் தாவீது துளைக்கப்பட்டார். அவர் (தாவீது) ஒரு மென்மையான புன்முறுவலுடன், சவுலின் இராஜரீக மேலாடையிலிருந்து (தாம் கத்தரித்தெடுத்திருந்த) ஒரு துண்டுத் துணியை உயர்த்திக் காண்பித்தார்.

பல கேள்விகள் மனதில் எழுகின்றன. “தாவீது எவ்வாறு பார்க்கவோ அல்லது கேட்கவோ படாமல் சவுலுக்கு அவ்வளவு நெருக்கமாகச் சென்றார்?” என்பது ஒரு கேள்வியாக உள்ளது. சவுல் குகைக்குள் நுழைந்த போது, ஒருவேளை தமது மேலாடையைக் கழற்றி ஒரு புறமாய் வைத்திருக் கக் கூடும். (நானாக இருந்தால் இதையே செய்திருப்பேன்.) இருப்பினும், தாவீது அதைச் செய்தது என்பது மிகவும் பதட்டத்திற்குரியதாகவே இருந்தது. “தாவீது, சால்வையின் தொங்கலைக் கத்தரித்து எடுத்தது ஏன்?” என்பது மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. ஒருவேளை அவர் தம்மால் சவுலைக் கொல்லக் கூடிய சூழ்நிலையிருந்தும் தாம் அவரைக் கொல்லவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்று தமது மனதில் எண்ணங் கொண்டிருந்தார் என்பது ஒரு காரணமாயிருந்திருக்கலாம் (24:11). ஆயினும், “அவர் ஒரு வாய்ப்பைப் பெற்றிருந்தும், சவுலை ஏன் கொலை செய்யாமல் விட்டுவிட்டார்?” என்பதுதான் மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க நாம் வேத வசனப் பகுதியைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும்:

> தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டிருந்தது. அவன் தன் மனுஷரைப் பார்த்து: “கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என்

> *கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று சொல்லி (24:5, 6).*

தாவீது தாம் செய்ததை நினைத்த பொழுது, அவர் மனம் அடித்துக் கொண்டது ஏன்? அவர், உடல் ரீதியாகச் சவுலைத் துன்புறுத்தியிருந்த தில்லையே; அவர் அரசரின் சால்வையைச் சற்றே சீர்குலைத்திருந்தார், அவ்வளவுதானே. தாவீது இருளில் நழுவிச் சென்ற பொழுது, உண்மையில் சவுலின் தொண்டையை அறுக்கத் திட்டமிட்டே சென்றார், ஆனால் கடைசி நேரத்தில் மனமாற்றம் அடைந்து, அவர் சால்வைத்தொங்கலில் ஒரு சிறு துண்டை வெட்டியெடுத்துக் கொண்டார் என்ற காரணத்தினால் இது (அவர் மனம் அடித்துக் கொண்டது என்பது) ஏற்பட்டது என்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். சவுலை கொல்லும்படி தாவீது சோதிக்கப்பட்டார் என்பது மிகவும் உறுதியானதாயிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. என்னைக் கொல்வதற்கு யாரேனும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்திருந்து, நான் அவரை உதவியெதுவுமற்ற நிலையில் பிடித்திருந்து, என் கையில் பதமான ஒரு கத்தியை வைத்திருந்தால், மனிதத் தன்மைக்குக் குறைவானவனாயிருப் பேன் (அல்லது ஒருவேளை) குறைந்தபட்சம், பின்வரும் சிந்தனையாவது என் மனதில் ஓடாதிருக்கும் அளவு நான் மனிதத்தன்மைக்கு மேலானவனா யிருப்பேன்: "சதக் என்று ஒரே குத்து, எனது ஓடும் நாட்கள் யாவும் முடிந்து போகும்!"

இருப்பினும், வேத வசனப்பகுதியானது, "தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக் கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டது" என்று கூறுகிறது. தாவீது என்ன செய்யலாம் என்று நினைத்த தினிமித்தமாக அன்றி, அவர் என்ன செய்திருந்தார் என்பது பற்றியே அவர் மனது அடித்துக் கொண்டது. தாவீது மனத்துணிவுள்ளவராக இருந்தார் என்பதே அவரைப் பற்றிய என் மனப் பதிவாக உள்ளது; அவர் அபாயத்தின் மெய்சிலிர்ப்பை மகிழ்வுடன் அனுபவித்தார். தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்தெடுத்தார் என்பது, பள்ளி மாணவன் பிறர் கவனத்தைக் கவருவதற்காக ஏதாவது செய்வது போலவே, அரசரைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவதற்காக அதைச் செய்தார் என்பதே என் யூகமாக உள்ளது. இருப்பினும் அதைப் பற்றி அவர் நினைத்தபோது, அவரது மனச்சாட்சி யானது, "தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை நீ சரீரரீதியாகத் துன்புறுத்தாமல் இருப்பதோடு கூட, நீ அவருக்கு ஒவ்வொரு வழியிலும் மரியாதை அளிக்கவும் வேண்டும்" என்று கூறிற்று.

இது நம்மை, நமது பாடத்தின் இந்தப் பகுதியில் நான் கூற விரும்பும் பிரதான கருத்திடம் கொண்டு வந்து சேர்க்கின்றது: தாவீது ஏன் சவுலைக் கொல்லவில்லை? அவர் (தாவீது) தம் மனிதர்களிடம் கூறியதை மீண்டும் கவனியுங்கள்: "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாத படிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" (24:6). "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்"

என்ற சொற்றொடரை அடிக்கோடிட்டுக் கொள்ளவும். தாவீதைப் போலவே (அவருக்கு முன்னதாகவே) சவுலும் சாமுவேலினால் எண்ணெயைக் கொண்டு அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார் (இ.வ. 1 சாமு. 10:1; 16:13). "மேசியா" என்பது "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பதற்கான எபிரெய வார்த்தையாக உள்ளது (இதற்கிணையான கிரேக்க வார்த்தையாக இருப்பது "கிறிஸ்து" என்பதாகும்). சவுல் யாராக (ஒரு பெலவீனமான, பகுத்தறிவற்ற, கீழ்ப்படிதல் இல்லாத மனிதராக) இருந்தார் என்பதற்காக அல்ல, ஆனால் அவர் என்னவாக "தேவனுடைய மேசியாவாக" இருந்தார் என்பதற்காகவே அவர் மதிக்கப்பட வேண்டும் என்று தாவீது அறிந்திருந்தார்.

இது வேதாகமம் முழுவதிலும் போதிக்கப்படுகின்ற பாடமாக உள்ளது. உங்களை இழுத்துச் செல்லுகிற காவலர் - அவர் யாராயிருக்கிறார் (உங்களைப் போலவே தவறு செய்யக் கூடிய மனிதராக இருக்கிறார்) என்பதற்காக அல்ல, ஆனால் - அவர் என்னவாக இருக்கிறார்: "உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான்" (ரோமர் 13:4) என்பதாலேயே மதிக்கப்பட வேண்டியவராக இருக்கின்றார். மூப்பர்கள், யாராயிருக்கின்றனர் (அசாதாரண வேலையைச் செய்ய முயற்சி செய்கின்ற சாதாரண மனிதர்கள்) என்பதற்காக அல்ல, ஆனால் அவர்கள் என்னவாக இருக்கின்றனர்: "தேவனுடைய சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த ..." (அப். 20:28) என்பதாலேயே அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.[4]

தாவீது "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்தித்த" போது, அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராயிருந்ததையும் அவர் (சவுல்) துன்புறுத்தப் படக் கூடாது என்பதையும் உணர்ந்தார்! தாவீது தமது உறுதிப்பாட்டில் எவ்வாறு இரண்டாவது மைல் தூரமும் சென்றார் என்பதைக் கவனியுங்கள்: "தன் மனுஷரைச் சவுலின்மேல் எழும்ப ஒட்டாமல், இவ்வார்த்தை களினால் அவர்களைத் தடை பண்ணினான்" (24:7). அது, தாவீது சவுலைக் கொல்லாமலிருந்த விஷயமாக மட்டும் இருக்கவில்லை; அவர் தம் மனிதர்களிடம் இராஜாவைக் கொல்லக் கூடாது என்று பேச வேண்டி யிருந்த விஷயமாகவும் இருந்தது. "தடை பண்ணினான்" என்பதற்கான எபிரெய வார்த்தையின் நேரடி அர்த்தமானது, தாவீது தமது வார்த்தை களினால் தமது மனிதர்களின் இருதயத்தைக் "கிழித்தார்" என்று சுட்டிக்காண்பிக்கின்றது (NASB யில் உள்ள அடிக்குறிப்பைக் கவனிக்கவும்). NIVயானது, தாவீது தமது மனிதர்களைக் "கடிந்து" கொண்டார் என்று கூறுகின்றது. குகையின் பின்பகுதியில் கடுமையான கிசுகிசுப்புக்களுடன் சூடான விவாதம் நடைபெற்றது. சவுலின் அடக்குமுறைச் சட்டங்களினால் சீரழிக்கப்பட்டிருந்த வாழ்வைக் கொண்ட அம்மனிதர்களுடன் தாவீது மிக அரிதாகவே எதிர்த்து நிற்க முடிந்தது.

ஒருவர் மீது பழிவாங்காதிருப்பது என்பது நீங்கள் எதிர்த்துத் தாக்காதிருப்பது என்று மட்டும் அர்த்தப்படுத்துவதில்லை; அந்த நபருக்குப் பிறர் துன்பம் தராதிருக்கும்படி நீங்கள் இணங்கச் செய்வது என்றும் அது அர்த்தப்படுத்துகின்றது. நான் பிரசங்கித்து வந்த ஒரு சபையில், நான்

ஊழியப் பணியை விட்டு விலக வேண்டியது அவசியம் என்று நான் நம்பினேன். நான் மனம் புண்படுத்தப்பட்டு இருந்தேன், ஆனால் குறைவான சிக்கலுடன், அமைதியாக வெளியேற வேண்டும் என்பதே எனது திட்டமாயிருந்தது. ஆயினும் சபையில் இருந்த பலர், எனது வெளியேறுதலில் மேலோட்டமாக இருந்ததைப் பார்க்கிலும் (உள்ளாக) ஏதோ பிரச்சனை இருந்ததாகச் சந்தேகப்பட்டார்கள், மற்றும் நான் தனிப்பட்ட ஆர்வங்களுக்கு மேலாக, "ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்காக" (எபே. 4:3), மற்றவர்களை (அது பற்றி) பிரச்சனை எழுப்ப வேண்டாம் என்று இணங்கச் செய்ய வேண்டிய நிலையில் இருந்தேன். நீங்கள் மனம் புண்படுத்தப்பட்டுள்ள வேளையில் இதைச் செய்வது என்பது மிகக் கடினமான விஷயம் என்று நான் கண்டறிந்தேன்! ஆயினும் இது பழி வாங்காதிருத்தலின் இன்றியமையாத பாகமாயிருக்கிறது.

தாவீது தமது மனிதர்களை இணங்கச் செய்து கொண்டிருக்கையில், சவுல் குகையை விட்டு வெளியே சென்றார். தாவீது (குகையின்) நுழை வாயிலுக்கு வந்து கவனித்தார். சவுல் சற்று தூரம் சென்றிருக்கையில், தாவீது வெளியே வந்து, ''ராஜாவாகிய என் ஆண்டவனே'' (24:8) என்று அழைத்தார்.

மத்தேயு 18ல் இயேசு, பிறருடனான நம் உறவுமுறைமைகளின் நித்திய கொள்கையொன்றை முன் வைத்தார்: ''உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றஞ் செய்தால்,[5] அவனிடத்தில் போய், ... அவன் குற்றத்தை உணர்த்து;[6] அவன் உனக்குச் செவி கொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்" (வ. 15). ஆலோசனை நிகழ்வுகளில் இது "எதிர்கொண்டு நிற்குதல்" என்று அழைக்கப்படுகிறது. இது உறவுமுறையை மீளக்கட்டியெழுப்புவதில் மிகவும் இன்றியமையாத பாகமாகக் கருதப்படுகிறது. இது, பாதிக்கப்பட்டவர் தமக்குள்ளாகப் பற்றியெரிந்து கொண்டிருக்கும் உணர்வுகள் குறித்து செயலாற்ற உதவுவதற்கும் அத்தியாவசியமானதாக உள்ளது. இந்த வேளை வரையிலும், தாவீது சவுலை எதிர்கொண்டு நிற்பதற்கு ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்க வில்லை. ஆயினும் கடைசியாக, அவரும் அவரைத் துன்புறுத்துபவரும் முகமுகமாய் (எதிர்கொண்டு) நின்றார்கள்.[7]

சவுல் திரும்பிய பொழுது, தாவீது தரைமட்டும் முகங் குனிந்து வணங்கி உணர்ச்சிமிக்கதொரு உரை நிகழ்த்தினார்:

> *இதோ, கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக் கொடுத்தார் என்பதை இன்றையதினம் உம்முடைய கண்கள் கண்டதே, உம்மைக் கொன்றுபோடவேண்டும் என்று, சிலர் சொன்னார்கள்; ஆனாலும் என் கை உம்மைத் தப்பவிட்டது; என் ஆண்டவன்மேல் என் கையைப் போடேன்; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவராமே என்றேன். என் தகப்பனே பாரும்; என் கையிலிருக்கிற உம்முடைய சால்வையின் தொங்கலைப் பாரும்; உம்மைக் கொன்றுபோடாமல், உம்முடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்டேன்; என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும், உமக்கு நான் குற்றம் செய்யவில்லை*

என்றும் அறிந்துகொள்ளும்; நீரோ என் பிராணனை வாங்க, அதை வேட்டையாடுகிறீர். கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர்தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக; உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை (24:10-12).

நீங்கள் இந்த உரை முழுவதையும் வாசிக்க விரும்புவீர்கள். இதில் குறிப்பிடத்தக்க பல எடுத்துரைப்புகள் உள்ளன. உங்களை மனம் புண்படச் செய்கின்றவர்களை எதிர்கொண்டு நிற்குதல் எவ்வாறு என்பது பற்றித் தாவீது ஒரு சிறு கருத்தரங்கை நடத்திக் கொண்டிருந்தார். தாவீது அற்பமானவராகவோ அல்லது அழகற்றவராகவோ இருக்கவில்லை, ஆனால் அவர் தாம் புண்படுத்தப்பட்டிருந்த உண்மையை மறைக்கவும் இல்லை. அவரது உரையானது கட்டுப்படுத்தப்பட்டதாகவும் மரியாதை நிறைந்த தாகவும் இருந்தது; அவர் ராஜாவை "என் ஆண்டவனே", "கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்", "என் தகப்பனே"[8] என்று அழைத்தார். அவர் தம்மை ஒரு "செத்த நாய்" என்றும் "தெள்ளுப் பூச்சி" என்றும் குறிப்பிட்டார். அவர் சவுலின் செயல்களின் மீது சாத்தியமான வகையில் மிகச் சிறந்த கட்டுமானத்தை இட்டார்; சவுலின் நோக்கங்களை நியாயந் தீர்ப்பதற்குப் பதிலாக, அந்த ராஜா மோசமான ஆலோசனைகளுக்குச் செவி சாய்த்திருந்ததாக அவர் (தாவீது) கூறினார் (24:9). சவுல் நியாயமற்றவராக இருந்த போதிலும், தாவீது அவரிடம் நியாயமாக நடந்துகொண்டு, தாம் ராஜாவுக்குத் துன்பம் விளைவிக்கவில்லை என்பதற்கு ஆதாரத்தை அளித்தார்.

இருப்பினும், தாவீது "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்திக்கத்" தொடர்ந்த பொழுது, அங்கு நேரிட்ட நிறைவான ஆதார மூலம் தேவனே என்பதைக் கண்டார் என்று நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். 24:10ல் தாவீதின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்தார்." தேவன் சவுலைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்தார். எனவே தாவீது அவரைக் கொல்லலாம் என்று தாவீதின் மனிதர்கள் அவருக்கு ஆலோசனை அளித்தார்கள். இருப்பினும் தாவீது, சவுலைத் தப்புவிக்கவும், தாம் சவுலின் விரோதியல்ல என்பதை அவருக்கு நிரூபிக்கவுமே தேவன் அவரைத் தமது கையில் ஒப்புவித்தார் என்று கண்டார்.

யாரேனும் உங்களைப் புண்படுத்துகின்ற பொழுது, மற்றும் நீங்கள் "ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்திக்கின்ற" பொழுது, அந்த சூழ்நிலையில் தேவன் உங்களை மிகப் பெரிய மற்றும் மிகச் சிறந்த நபராக்குவதற்காகச் செயல்படுகின்றார் என்ற சாத்தியக் கூற்றை தள்ளி விடாதீர்கள் (மத். 5:10-12ஐக் கவனிக்கவும்).

தாவீதின் எண்ணப்போக்கு சவுலின் இதயத்தில் (உணர்வுப்பூர்வமாகப்) பதிந்தது என்பது தெளிவு.

சவுல்: "என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா" என்று சொல்லி, சத்தமிட்டு அழுது, தாவீதைப் பார்த்து: "நீ என்னைப்

> *பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்குத் தீமை செய்தேன் ... நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் இராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்" (24:16, 17, 20).*

இது, தாவீது அடுத்த ராஜாவாவார் என்று சவுல் வெளிப்படையாக ஒப்புக் கொண்ட முதல் தடவையாக இருந்தது.

இது, அவர்கள் ஒப்புரவாகியது போன்று ஒலிக்கிறது, இல்லையா? இது தாவீதிற்கு, தலைநகருக்குத் திரும்பி, ராஜாவின் அரண்மனையில் தமது இடத்தை மீண்டும் மேற்கொள்வதற்கான ஒரு குறிப்பாக இருந்திருக்க வேண்டும். ஆயினும் தாவீது, தாம் சிறிது அவகாசத்தை வாங்கியிருந் திருக்கையில், திடபுத்தியற்ற அந்த முடியரசரை நம்ப முடியாது என்று அறிந்தார். இந்த அத்தியாயம் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகின்றது: "பின்பு, சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனான்; தாவீதும் அவன் மனுஷரும் அரணிப்பான இடத்திற்கு ஏறிப் போனார்கள்" (24:22ஆ); அவர்கள் தாங்கள் பாதுகாப்பாயிருந்த இடங்களில் தங்கியிருந்தார்கள்.

விலையை எண்ணுங்கள்
(1 சாமுவேல் 25)

அத்தியாயம் 25 ஒரு புதிரைப் போன்றுள்ளது. அத்தியாயங்கள் 24 மற்றும் 26 ஆகியவை, தாவீது சவுலைக் கொன்றிருக்கக் கூடிய, ஆனால் அவ்வாறு செய்யாமல் விட்டுவிட்ட இரு நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. இந்த இரு அத்தியாயங்களுக்கிடையில் செருகப்பட்ட நிலையில் உள்ள 25ம் அத்தியாயம் ஒரு கணவன் மற்றும் அவனது மனைவி (நாபால் மற்றும் அபிகாயில், இவர்கள் தாவீதுடன் செயல்பட்ட விதம் ஆகியவை) பற்றிக் கூறுகின்றது. ஒரே விதமான நிகழ்வுகளைக் கூறுகின்ற 24, 26ம் அத்தியாயங் களுக்கிடையில் இந்த 25ம் அத்தியாயம் வைக்கப்பட்டிருக்கக் காரணம் என்ன? இது நாள் வரிசைக் கணக்கின்படி அவ்விரு நிகழ்வுகளுக்கிடையில் நடைபெற்றதால் இங்கு வைக்கப்பட்டதென்று நாம் கூற முடியும். இருப்பினும், வரலாற்றாளர்களும் மனிதர்களின் வாழ்வு பற்றி எழுதுகின்ற வர்களும் தங்கள் பாடக்கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுபவர்களா யிருந்திருக்க வேண்டும்.[9] சில நிகழ்வுகள் ஏன் அவை உள்ள இடங்களில் வைக்கப்பட்டுள்ளன என்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

அத்தியாயம் 25, அத்தியாயங்கள் 24 மற்றும் 26 ஆகியவற்றிற்கிடையே வைக்கப்பட்டதற்கு (1) பழிவாங்குதலைப் பற்றிய தாவீதின் இயல்பான சாயுந்தன்மையைக் காண்பிக்கவும், (2) ஒருவர் தம் சொந்தக் கைகளினால் பழிவாங்குதல் பற்றித் தேவன் கருதுவதென்ன என்பதை அவர் (தாவீது) கற்றுக் கொள்வதைக் காண்பிக்கவும் என்ற இரு காரணங்கள் இருந்ததாக நான் நம்புகின்றேன்.

அத்தியாயம் 25ன் முதல் வசனம், சாமுவேலின் மரணம் பற்றியும், தாவீதும் அவர் மனிதர்களும் பாரான் வனாந்தரத்திற்குச் சென்ற உண்மை

பற்றியும் கூறுகின்றது. வனாந்தரத்தில் தாவீது ஆறு மனிதர்களுக்குக் கூட உணவளிக்க முடியாது, அவர் அங்கு அறுநூறு பேர்களுக்கு மிகமிகக் குறைவாகவே உணவளித்திருக்கக் கூடும். ஆகையால் தாவீது பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளச் சென்றார். அவரும் அவரது மனிதர்களும் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த மந்தைகளைப் பாதுகாத்தார்கள் (25:7, 8, 15, 16). "தாவீது பாதுகாக்கும் *பணியை* மேற்கொள்ளச் சென்றார்" என்று நான் கூறியதைக் கவனிக்கவும் (சில விளக்கவுரையாளர்கள் கூறுவது போல) அவர் "பாதுகாக்கும் *தாதா*" வாக இருந்தார் என்று நான் கூறுவதில்லை. "பாதுகாக்கும் தாதா" என்பது, அந்தக் கும்பல் வருமுன்பு பாதுகாப்பு அவசியப்பட்டிராத மக்களுக்குப் "பாதுகாப்பு" அளிப்பதாகக் கூறிக் கொள்ளும் கும்பல் என்பதைக் குறிக்கின்றது. இதற்கு நேரெதிராக, பாரான் வனாந்தரத்தில் உண்மையாகவே பாதுகாப்பிற்கான அவசியம் ஏற்பட்டு இருந்தது. அங்கு வேலிகள் இல்லை; காட்டு விலங்குகளும் முரட்டுத் தனமான (மலை ஜாதி) இனத்தவர்களும் நிறைந்திருந்தன(ர்); மற்றும் வழிதப்பித் திரியும் ஆட்டுக்குட்டிகள் அல்லது சிறு ஆடுகள் எப்பொழுதுமே நல்ல வேட்டைப் பொருளாய் இருந்தன.

தாவீதின் மனிதர்களால் இவ்வாறு காக்கப்பட்டிருந்த மந்தைகள் ஒன்றின் உரிமையாளனாக இருந்த நாபால் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதன் மிகுந்த செல்வந்தனாக இருந்தான்: "மாகோனிலே ஒரு மனுஷன் இருந்தான்; அவனுடைய தொழில்துறை கர்மேலில்[10] இருந்தது; அந்த மனுஷன் மகாபாரிக் குடித்தனக்காரனாயிருந்தான்,[11] அவனுக்கு மூவாயிரம் ஆடும், ஆயிரம் வெள்ளாடும் இருந்தது" (25:2). இருப்பினும் அவன் அயலகத்தாராக (நீங்கள் அல்லது யாரும்) இருக்க விரும்பாத மனிதனாயிருந்தான். "அந்தப் புருஷனோ முரடனும் துராகிருதனுமாயிருந்தான்" (25:3).[12] அவனது வேலைக்காரன் அவனைப் பற்றி, "இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக் கூடாத பேலியாளின் மகனாயிருக்கிறார்"[13] (25:17) என்று கூறினான். அவன் மதுப்பழக்கம் என்ற பிரச்சனையும் கொண்டிருந்தான் (25:36).

அவன் பெயர் நாபால் என்பதாகும், இது "முட்டாள்" அல்லது "முட்டாள் தனமான" என்ற நேரடி அர்த்தம் தருகின்றது. ஒரு தாய் தனது பிள்ளைக்கு "முட்டாள்" என்று பெயரிடுதலைக் கற்பனை செய்து பார்த்தல் கடினமானதாக உள்ளது.[14] ஒருவேளை இது அவன் பிறந்தபோது இடப்பட்ட பெயரின் திரிபாக இருக்கலாம்; ஒருவேளை இது கேலிக்காக இடப்பட்ட பெயராயிருக்கலாம். இருப்பினும், அவன் இந்தப் பெயருடன் வந்தான், இது அவனுடன் ஒட்டிக் கொண்டது. ஒவ்வொருவரும், அவன் மனைவியும் கூட (25:25) அவனை இந்தப் பெயரினாலேயே அழைத்தார்கள். இது அவனது குணத்தைச் சரியாகவே தொகுத்துரைத்தது.

அத்தியாயம் 25ன் நாடகத்தில், நாபாலின் மனைவியான அபிகாயில் என்னும் பெயர் கொண்ட ஒரு பெண் இன்னொரு முக்கிய கதாபாத்திரமாக இருக்கிறாள். அவளது பெயர், "அவள் தகப்பனின் மகிழ்ச்சி" என்று அர்த்தப்படுகிறது. வசனம் 3, "அந்த ஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள்" என்று கூறுகிறது. என்ன ஒரு அற்புதமான இணைவு!

வேதாகமத்தில் நான்கு பெண்கள் "அழகானவள்" என்று அழைக்கப் படுகின்றனர்,[15] அவர்களில் ஒருத்தி இந்த அபிகாயில் ஆவாள்.

அழகும் அறிவும் கொண்ட இந்தப் பெண் எப்படி இந்த மதியீனமான மனிதனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டாள்? அபிகாயில் இதைக் குறித்து ஒன்றும் கூறமுடியாதிருந்தது என்பதே இதற்குக் காரணமாயிருந்தது, திருமணங்கள் (பெற்றோர்களால்) ஏற்பாடு செய்யப்பட்டன. அபிகாயிலின் பெற்றோர் செல்வந்தனாயிருந்த நாபாலை ஒரு சிறந்த மாப்பிள்ளையாகக் கருதியிருக்கலாம். அபிகாயில் அழகு மிக்கவளாய் இருந்தபடியால், அவளைத் திருமணம் செய்து கொள்ள நாபால் சம்மதித்தான். இவ்விதமாக, அழகும் மிருகமும் திருமணத்தில் இணைந்தன(ர்) - ஆனால் அவர்கள் "அதன் பின் என்றென்றும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருக்க" வில்லை. அபிகாயிலுக்கு நேர்த்தியான உடைகளும், பயணம் செய்ய மிகச் சிறந்த சாரட் வண்டிகளும் இருந்தன, அவர்கள் மிகவும் ஆடம்பரமான விருந்துகளைக் கொடுக்க முடிந்தது - ஆனால் அவள் ஒரு அற்பத்தனமான, வெறுக்கத்தக்க ஒரு குடிகாரனான முட்டாளை திருமணம் செய்திருந்தாள் என்ற உண்மை அப்படியே நிலைத்து நின்றது.

இந்த அத்தியாயம் தொடங்குகையில், அது ஆடுகளுக்கு மயிர் கத்தரித்தல் (25:2) என்ற பண்டிகை நிகழ்ச்சி நடக்கும் வேளையாயிருந்தது. ஆட்டு மயிரைக் கத்தரித்தல் என்ற நிகழ்ச்சி, மந்தையைப் பாதுகாத்தவர்கள் உட்பட, ஆட்டுமயிர் என்ற விளைவை சாத்தியமாக்கியவர்களுக்கு மதிப்பை வெளிப்படுத்தும் வேளையாயிருந்தது. நாபால் தனது ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் செய்தியைத் தாவீது கேள்விப்பட்ட பொழுது, அவர் பத்து இளைஞர்களை, செல்வந்தனான அந்த உரிமையாளனிடம் அனுப்பி வைத்தார். அவனிடத்தில் பின்வருமாறு கூறும்படி தாவீது அவர்களிடம் கூறியிருந்தார்:

> நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும், உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக என்று அவனை வாழ்த்தி, இப்பொழுது, ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்கள் உம்மிடத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன்; உம்முடைய மேய்ப்பர் எங்களோடேகூட இருந்தார்கள்; அவர்கள் கர்மேலில் இருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை, அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமற் போனதும் இல்லை. உம்முடைய வேலைக்காரரைக் கேளும்; அவர்கள் உமக்குச் சொல்லுவார்கள், ஆதலால் இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களிலே தயை கிடைக்க வேண்டும். நல்ல நாளில் வந்தோம், உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டு கிறேன் என்று சொல்லுங்கள் என்றான் (25:6-8).

தாவீதின் இளைஞர்கள் நாபாலிடம் சென்று, இந்த வார்த்தைகளை அப்படியே அவனிடம் கூறி, "பின்னொன்றும் பேசாதிருந்தார்கள்" (25:9). அவர்கள், உங்கள் பயணச் சுமைகளை உங்களின் அறைக்குச் சுமந்து வந்த

பின் நின்றுகொண்டு கை நீட்டிக் காத்திருக்கும் ஏவலாள் போன்று காத்திருந்தார்கள். தாவீதிற்கும் நாபாலுக்கும் எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை, அல்லது இவன் (நாபால்) அவர்களுக்கு எதையேனும் தர வேண்டும் என்று எழுதப்பட்ட ஒப்பந்தம் எதுவும் இருந்ததில்லை - நீங்கள் சிறு அன்பளிப்புத் தர வேண்டும் என்று எழுதப்பட்ட சட்டம் ஒன்றும் இல்லாதிருப்பது போலவே இதுவும் இருந்தது. இருப்பினும், இப்பொழுது போலவே அப்பொழுதும், நீங்கள் ஒரு விசேஷித்த கவனிப்பைப் பெற்றால், நீங்கள் உங்கள் மதிப்புணர்வைக் காண்பிக்க வேண்டும் என்பது புரிந்து கொள்ளப்பட்டதாக இருந்தது. தாவீதுக்கும் அவரது மனிதர்களுக்கும் நாபால் எதைக் கொடுக்கவும் அவர்கள் தகுதியானவர்களே என்பது எல்லா வகையிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டது. பிற்பாடு மேய்ப்பர்கள் அபிகாயிலிடம் பின்வருமாறு கூறினார்கள்:

> *அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினது மில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள் (25:15, 16).*

பின்பு தாவீதின் வேலைக்காரர்கள் தங்கள் வெகுமதிக்காகக் காத்திருந்தார்கள்.

இருப்பினும் நாபால் முட்டாள்தனமாக நடந்து கொண்டு (நீதி. 15:2; 18:6, 7; 29:11 முதலியன), அவர்களை அவமானப்படுத்தத் தொடங்கினான்:

> *தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான் களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணு வித்ததையும் எடுத்து, இன்ன இடத்தார் என்று நான் அறியாத மனுஷ ருக்குக் கொடுப்பேனோ என்றான் (25:10, 11).*

நாபால், தான் தாவீதைப் பற்றி ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை என்று உரிமைகோரினான், மற்றும் அவன், தாவீது (தனக்குச்) செய்திருந்த சேவை பற்றி அறிந்திருந்தது இல்லை என்று மறைமுகமாக உணர்த்தினான். ("எனக்குத் தெரிந்த மட்டும் அவன் ஓடிப்போன ஒரு அடிமையாய் இருக்கக் கூடும்.") ஆயினும் அபிகாயில், தாவீது யார் என்பதை மிகச்சரியாக அறிந்திருந்தாள் (இ.வ. 25:28, 30), அவளது கணவனும் அதைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. நாபாலின் மேய்ப்பர்கள் பருவ காலத்தில் சிலவேளைகளில் அவனிடத்தில் திரும்பி வந்து, தங்களைப் பாதுகாத்திருந்த (தாவீதின்) மனிதர்களைப் பற்றி நாபாலிடம் நிச்சயமாகக் கூறியிருப் பார்கள். இங்கு, நாபால் தாவீது யார் என்று அறியாதிருந்தான் என்பது பிரச்சனையல்ல; ஆனால் அவன் தான் கொண்டிருந்த பொருட்கள்

எல்லாவற்றின் மீதும் மரணத்திற்கேதுவான விருப்பப்பற்றுக் கொண்டவனா யிருந்து ஒரு பேராசைக்காரனாயிருந்தான் என்பதுதான் பிரச்சனையாக இருந்தது.

செய்தியாளர்கள் தாவீதிடம் திரும்பி வந்தார்கள். வாயிற்காவலன் பின்வருமாறு சத்தமிட்டிருப்பான் என்று என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "மனிதர்கள் திரும்பி வருகின்றார்கள்!" பசியுடன் இருந்த தாவீது அவர்கள் வருவதற்காக ஆவலுடன் காத்திருந்தார். அவர் ஒரு கொழுத்த ஆட்டுக்குட்டியை வறுக்கத் தயாராயிருந்த நெருப்புடன் அங்கிருந்தார். அவரது வாய் ஏற்கனவே உமிழ்நீரைச் சுரக்கத் தொடங்கியிருந்தது. ஆயினும், அவர்கள் திரும்பி வந்தபோது, வெறுங்கையர்களாய் வந்தார்கள். தாவீது ''என்ன நடந்தது?'' என்று கேட்டார். தாவீதுக்கு அவர்கள் [நடந்ததைக்] கூறியபோது, அவர் கோபமாய் இருந்தார். அவர் தமது மனிதர்களிடம், "உங்கள் பட்டயங்களை எடுத்துக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்று சத்தமிட்டார்.

> "அவனுக்கு வனாந்தரத்தில் இருக்கிறதையெல்லாம் வீணாகவே காப்பாற்றினேன்; அவனுக்கு உண்டானதிலெல்லாம் ஒன்றும் காணாமற்போனதில்லை; என்றாலும் நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமைசெய்தான். அவனுக்கு உண்டான எல்லாவற்றிலும் சுவரில் நீர்விடும் ஒரு நாயை[16] முதலாய்ப் பொழுதுவிடியுமட்டும் நான் உயிரோடே வைத்தால், தேவன் தாவீதின் சத்துருக்களுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்று சொல்லியிருந்தான்" (25:21, 22).

விரைவிலேயே தா வீதின் முகம் அவரது முடியைப் போன்றே சிவப்பானது, அவர் ஆயுதம் தரித்த நானூறு மனிதர்களுடன் நாபாலின் குடியிருப்பை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்!

நாபால் எந்த ஒரு சட்டத்தையும் மீறவில்லை அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் முறிக்கவில்லை என்பதை நினைவில் வையுங்கள். அவன் தாவீதின் உயிருக்கு அபாயம் விளைவிக்கவோ அல்லது அவரைப் பயமுறுத்தவோ கிடையாது. அவன் செய்ததெல்லாம், (1) தாவீதை அவமானப்படுத்தினான் மற்றும் (2) தாவீதின் சேவைகளுக்கு மதிப்பளிக்கா திருந்தான் என்பது மட்டுமே. ஒரு வேலையாளுக்குச் சிறு அன்பளிப்பு ஒன்றை நீங்கள் வழங்காமல் செல்வதினால் அவ்வேலையாள் தம் கையில் ஒரு துப்பாக்கியுடன் உங்களை, கார் நிறுத்துமிடத்திற்குப் பின் தொடர்ந்து வருவதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? (நான் போதிய அளவு சிறு அன்பளிப்புத் தரவில்லை என்று நினைத்த சில மக்கள் என்னை அவமானப் படுத்திய சில வேளைகளைச் சந்தித்திருக்கிறேன், ஆனால் அவர்களில் எவரும் என்னைக் கொன்று விட முயற்சி செய்ததில்லை!) நீங்கள் எந்த வகையில் பார்த்தாலும், தாவீது மிகையாகவே செயல்பட்டார். நாபாலைக் கொல்ல நானூறு மனிதர்கள் (அவர்களுடன் கூடுதலாகத் தாவீதும்) சென்றார்கள் - இது ஒரு கரப்பான் பூச்சியைக் கொல்லச் துப்பாக்கியை எடுத்துச் செல்வது போன்றதாக இருந்தது! நாபால் மரண தண்டனைக்குரிய

குற்றம் எதுவும் செய்யாதிருந்தபடியினால், தாவீது திட்டம் இட்டிருந்து ஒரு கொலை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்: இது முன்பே நன்கு சிந்திக்கப்பட்ட கொலையாக, முதல் அளவான கொலையாக இருந்தது.

இந்த இடத்தில் பல விளக்கவுரையாளர்கள் தங்கள் தலைகளை அசைக்கின்றார்கள். "இது நம்ப முடியாததாக உள்ளது! தாவீதைக் கொல்லத் தமது வாழ்வையே அர்ப்பணித்திருந்த (சவுல்) ராஜாவின் உயிரைக் காப்பாற்றியிருந்த ஒரு நபர் (தாவீது), இப்பொழுது (நன்றி!) என்று கூறத் தவறியதற்காக ஒன்றுமில்லாத ஒருவரைக் கொல்லத் திட்டமிட்டார்! தாவீதின் நபர்த்துவத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை எவ்வாறு ஒருவர் சாத்தியமான வகையில் விளக்கியுரைக்க முடியும்?" இங்கு நபர்த்தன்மையில் மாற்றம் ஏற்பட்டதாக நான் நினைக்கவில்லை. அத்தியாயம் 25ல் நாம் தாவீதின் இயல்பு நிலையான பதில்செயலைக் காண்கிறோம் என்றே நான் நினைக்கிறேன். அவர், சவுல் அபிஷேகம் செய்யப்படாதவராக இராதிருந்தால், சவுலுக்கு என்ன செய்ய விரும்பியிருப்பார்,[17] அவருக்குத் தாவீது என்ன செய்திருப்பார் என்பதையே நாம் காண்கின்றோம் என்று நான் நினைக்கின்றேன். மற்றும், அவர் தம்மால் தாங்கிக் கொள்ள முடிந்ததை யெல்லாம் தாங்கிக் கொண்டிருந்தார், நாபாலின் வார்த்தைகள் பழமொழிப் படியான கடைசி வைக்கோலாயிருந்தன என்றும் நான் நினைக்கின்றேன். அவர், "நான் சவுலிடத்தில் இருந்து மோசமாக நடப்பிக்கப்படுதலை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்து, ஆனால் அப்படிப்பட்ட காரியத்தை நான் இந்தப் 'பேலியாளின் மகனிடத்தில்' இருந்து ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை" என்று நினைத்திருக்க வாய்ப்பு உண்டு!

பழிவாங்குதல் பற்றித் தாவீது - தேவனால் அபிஷேகம் பண்ணப் பட்டவரை ஒருவர் பழிவாங்கக் கூடாது என்ற - ஒரு திட்டவட்டமான பாடத்தைக் கற்றிருந்தாலும் கூட, எந்த நபராயிருப்பினும் அவரை பழிவாங்குதல் என்பதை ஒருவர் தமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற பொதுவான பாடத்தை அவர் கற்றிருக்கவில்லை.

அந்தக் கொலைச் செயலுக்காகத் தாவீது தம் மனிதர்களைத் தயாரித்துக் கொண்டிருந்த வேளையில், நாபாலின் வேலைக்காரர்களில் ஒருவர் தாவீதின் திட்டம் பற்றி அபிகாயிலுக்கு வார்த்தை கொண்டு வந்தார். எந்தப் பெண்ணும் தேர்ந்தெடுக்க விரும்பாத ஒரு திருமண வாழ்வில் அபிகாயில் ஒட்டி நிலைத்திருந்தாள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அவள் பரிதபிக்கப்படத்தக்க ஒரு முட்டாள் கணவனுடனான வாழ்க்கை என்பதைத் தவிர வேறொன்றையும் எதிர்நோக்கக் கூடாதவளாயிருந்தாள். தாவீது நானூறு மனிதர்களுடன் புறப்பட்டு வருவதை அவள் அறிந்தபோது, கண்களைச் சிமிட்டி, ஒரு சிறு புன்முறுவலுடன், "நான் என் அறைக்குச் சென்று எனது கணவருக்காக ஜெபிப்பேன்" என்று கூறுவதென்பது அவளுக்கு சுலபமானதாக இருந்திருக்கும்.[18] முப்பது நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரங் கழிந்த பின் அவள் அங்கிருந்து திரும்பி வருகையில் எல்லாம் முடிந்து போயிருக்கும். ஒரு சில நாட்களுக்கு அவள் கருப்பு உடை அணிந்து கொண்டிருந்து விட்டு, அந்தப் பகுதியில் செல்வந்தமிக்க விதவையாக இருப்பதை மகிழ்வுடன் அனுபவித்திருக்க முடியும் -

எவரொருவரும் அவளைக் குற்றம் கூறியிருக்க மாட்டார்கள்!

இருப்பினும், அவள் அவ்வகையில் பதில்செயல் செய்யவில்லை. மாறாக, அவள் தனது கணவனின் உயிரைக் காப்பதற்கு விரைவாக ஒரு திட்டத்தைக் கண்டறிந்து செயல்படுத்தினாள். அந்தத் திட்டம் அவள் தன் சொந்த உயிரை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குவதாக இருந்தது, ஆனால் அதைச் செய்வதற்கு அவள் மனப்பூர்வமாகச் சம்மதித்தாள். ஏன்? ஏனென்றால், அவள் நாபாலைத் திருமணம் செய்து கொண்ட வேளையில், தேவனிடத்தில் ஒரு உறுதிப்பாட்டைச் செய்திருந்தாள் (இ.வ. மல்கி. 2:14; மத். 19:6). அவன் கொடூரமானவனாக, அவன் திட்டுபவனாக, அவன் எதிர்த்து நிற்பவனாக இருக்கலாம், ஆனால் அவன் அவளுக்குக் கணவனா யிருந்தான் - அவள் அவனைத் தன் வாழ்வு முழுவதற்குமாகத் திருமணம் செய்து கொண்டிருந்தாள்! திருமணத்தைத் தூக்கியெறிந்து விடுகின்ற இந்த நாட்களில், நமக்கு அபிகாயிலின் எண்ணப்போக்கு எவ்வளவாகத் தேவைப்படுகின்றது! "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" என்று தேவன் இன்னமும் கூறுகின்றார் (மல்கி. 2:16), மற்றும் இயேசு இன்னமும், "தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கட்டும்" என்று கூறுகின்றார் (மத். 19:6).

அபிகாயில் தனது திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தினாள். அவள் தனது சமையலறையையும் பொருள் வைப்பறையையும் ஊடுருவி, பசிகொண்ட நானூற்றியோரு மனிதர்கள் விரும்பக் கூடியவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டாள். அவை யாவற்றையும் அவள், கழுதைகளின் மேல் ஏற்றிக் கொண்டு, தாவீதைக் காணச் சென்றாள் - தங்கள் இருதயங்களில் கொலை வெறியுடன் இருந்த நானூறு ஆண்களை முகமுகமாய்ச் சந்திக்க தனியொரு பெண்ணாக அவள் சென்றாள்.[19]

அவள் ஒரு பள்ளத்தாக்கில் தாவீது மற்றும் அவரது மனிதர்களை இடைமறித்தாள். அவள் தன் கழுதையிலிருந்து உடனடியாக இறங்கி, தாவீதின் படையினர் வந்த பாதையில் முகங்குப்புற விழுந்தாள். திகைப்புற்ற தாவீது, தங்கள் கால்களை உதைத்துக் கொண்டு தங்கள் கொலைவெறியிலிருந்து மீள்வதற்குப் பொறுமையற்றவர்களாய்த் தம்மைச் சுற்றியிருந்த, தமது மனிதர்களைத் தம் கைகளினால் நிறுத்தியதை என்னால் கற்பனை செய்து காண முடிகின்றது. அபிகாயில், தாவீதின் முன்பாக மண்டியிட்ட நிலையில், வேத வசனங்களில் காணப்படுகின்ற சொல்லாற்றல் மிக்க வேண்டுகோள்களில் ஒன்றை உரையாற்றினாள். (இது அவள் தன் கணவனுக்காக மன்னிப்பு வேண்டுகின்ற முதல் தருணமா யிருந்திருக்காது என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன்; அநேகமாக அவள் இந்த உரையின் மாறுபட்ட வடிவங்களை [இதற்கு முன்] ஒருமுறைக்கும் அதிகமாகப் பயன்படுத்தியிருந்திருப்பாள்!)

அபிகாயிலின் உரையில், அவள் தவறான புரிந்துகொள்ளுதலுக்கான முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டாள் (25:24; 25:28ஐயும் காணவும்). இது தாவீதிற்கு குழப்பமூட்டுவதாக இருந்தது. நாபால் போன்ற முட்டாள்களைக் கொல்லுவது ஒரு விஷயமாயிருந்தால், அழகு மிகுந்த ஒரு பெண்ணை கொல்லுதல் என்பது முற்றிலும் வேறொரு விஷயமாயிருந்தது.[20]

அவள் தான் கொண்டு வந்திருந்த வெகுமதிகளை ஏற்றுக் கொள்ளும்படி தாவீதை வற்புறுத்தினாள் (25:27). இந்த உரை முழுவதிலும், அவள் மாபெரும் மரியாதையைக் காண்பித்தாள். (அவள் தாவீதைப் பன்னி ரெண்டுமுறை "என் ஆண்டவனே" என்று கூறினாள், ஆறுமுறை தன்னை "உமது அடியாள்" என்று குறிப்பிட்டாள்!) தேவன் தாவீதுடன் இருப்பார் என்ற தனது நம்பிக்கையை அவள் வெளிப்படுத்தினாள் (25:28-31).[21] இன்னொருவரின் கோபத்தைத் தணிக்க விரும்புகின்ற எவரொருவருக்கும் இந்த உரையானது ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

இந்த கசப்பான மனிதர் செய்யத் திட்டமிட்டு இருந்தவற்றின் விளைவுகளை ஆழ்ந்து சிந்திக்கும்படி செய்ததுதான், அவரை(தாவீதை)த் தாமதிக்கச் செய்ததில் அபிகாயில் நிறைவேற்றிய முக்கியமான விஷயமாக இருந்தது.

> *"இப்போதும் என் ஆண்டவனே, நீர் இரத்தம் சிந்த வரவும், உம்முடைய கை நீதியைச் சரிக்கட்டவும், கர்த்தர் உமக்கு இடங் கொடுக்கவில்லை என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டும், உம்முடைய ஜீவனைக்கொண்டும் சொல்லுகிறேன்; இப்போதும் உம்முடைய சத்துருக்களும், என் ஆண்டவனுக்கு விரோதமாகப் பொல்லாப்புத் தேடுகிறவர்களும், நாபாலைப்போல ஆகக்கடவர்கள் ... கர்த்தர் ... இஸ்ரவேலுக்கு அதிபதியாக உம்மை நேமிக்கும்போது[22] நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், என் ஆண்டவனாகிய நீர் பழிவாங்காமலும் இருந்ததுண்டானால், அப்பொழுது என் ஆண்டவனாகிய உமக்குத் துக்கமும் இராது, மன இடறலும் இராது ... (25:26, 30, 31).*

அபிகாயில், "தேவன் உம்மை ராஜாவாக்குவார், அது நடக்கும்போது நீர் காரணமின்றி சென்று மக்களைக் கொன்றீர், நீதியை உமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டீர் என்று உம்மைப் பற்றிய பதிவேடுகளில் எழுதப்படுவதையும் மற்றும் உம் மனச்சாட்சியில் இருப்பதையும் நீர் விரும்பமாட்டீர் (அல்லவா?)" என்று கூறினாள்.

தாவீது, "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதர்" என்று அழைக்கப் படுவதற்கான ஒரு காரணத்தை (இவ்விடத்தில்) அவரது பதில்செயலானது காண்பித்தது. அவர் போதிக்கப்படக் கூடிய ஒரு ஆவியைக் கொண்டிருந் தார்; அவர் அடையக் கூடிய ஒரு ஆவியைக் கொண்டிருந்தார்.[23] அவர், "உன்னை இன்றையதினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழி வாங்காதபடிக்கும், நீ இன்றைய தினம் எனக்குத் தடை பண்ணின படியினால், நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக" (25:32, 33). வெறுப்பு நிறைந்த சிந்தை கொண்டிருந்த தாவீது, தாம் ராஜாவாயிருக்க அவசியமான மதிப்புமிக்க பாடங்களைக் கற்றுக் கொண்டிருந்தார்: வன்முறை என்பது அதிகமான வன்முறையையே பிறப்பிக்கும்; அதற்கு மாறாக, கட்டுப் பாட்டுடன் இருத்தல் என்பது சமாதானம் நிறைந்த தீர்வை ஏற்படுத்தும்.

ஞானியான சாலொமோன், "மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடாதே; கொடுத்தால் நீயும் அவனைப் போலாவாய்" (நீதி. 26:4) என்று கூறினார். அது ஒருவேளை அவர் தம் தந்தை தாவீதிடமிருந்து கற்றுக் கொண்ட ஒரு பழமொழியாக இருக்கலாம் - ஏனெனில் தாவீது ஒரு மூடனுக்கு மிகவும் மதியீனமான வழியில் பதில்செயல் செய்வதற்கு அண்மையில் நெருங்கி வந்திருந்தார்.

"சரிக்குச் சரி செய்வதினால் நீங்கள் முன் சென்றுவிட முடியாது" என்று கூறப்படுகின்றது. மற்றவர்களை நாம் திருப்பித் தாக்க முயற்சிக்கும்போது, பொதுவாகவே அது நமக்குச் சாதகமில்லாதபடியே பிரதிபலிக்கும், மற்றும் அவர்களைப் புண்படுத்துவதை விட அதிகமாக நம்மையே புண்படுத்தும். ஒருமுறை நான், கார் விற்பனையாளர் ஒருவரால் நியாயமற்ற வகையில் நடத்தப்படுவதாக உணர்ந்தேன். "நான் (யார் என்பதை) அவருக்குக் காண்பிப்பேன்" என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன். "இனி இவரிடத்தில் வியாபாரத்தொடர்பு எதையும் நான் வைத்துக் கொள்ள மாட்டேன்!" கடைசியில், நாங்கள் வாழ்ந்த அந்த சிறு நகரில் எனது காரின் மீதான உத்தரவாதத்தை மதிக்கும் ஒரே வியாபார நிறுவனம் அவருடையது மட்டுமே என்பது எனக்கு உரைத்தது. அவர் என்னிடமான தமது வியாபாரத் தொடர்பை அருமையாகத் தவற விடலாம், ஆனால் நான் எனது காரை வேதனை மிக்க வகையில் தவற விட்டவனாக இருப்பேன்!

நீங்கள் அடுத்தமுறை யாரையாவது திருப்பித்தாக்கும்படி சோதிக்கப் படும்போது, பத்து (அல்லது இருபது அல்லது நூறு அல்லது நீங்கள் சாந்தமடைய எத்தனை எண்களை எண்ண வேண்டுமோ அத்தனை எண்களை) எண்ணத் தொடங்குங்கள், பின்பு "பழிவாங்குதலின் மிக உயர்வான விலையைப் பற்றி எண்ணுங்கள்" - உங்கள் நற்பெயர், உங்கள் மன சமாதானம், மற்றும் உங்கள் ஆத்துமாவிற்கும் கூட அது ஊறு விளைவிக்கலாம்.

அத்தியாயம் 25ன் வரலாறு விரைவாக முடிக்கப்படுகின்றது. அபிகாயில் வீட்டிற்குத் திரும்பிய போது, நாபால் அளவுக்கு மீறிக் குடித்திருந்தபடியால் என்ன நடந்தது என்பதை அவனிடத்தில் கூற இயலவில்லை (25:36).[24] அடுத்த நாள் காலையில் அவன் தெளிவான போது, அவள் நடந்தவற்றை அவனிடத்தில் கூறினாள் - அவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது [வேதவசனப் பகுதி, "கல்லைப் போலானான்" என்று கூறுகின்றது]. ஒரு சில நாட்களுக்குப் பின்பு அவன் இறந்து போனான்.[25] இதைப் பற்றித் தாவீது கேள்விப்பட்ட போது அவர், "என் நிந்தையின் வழக்கை நாபாலின் கையில் விசாரித்து, தம்முடைய அடியானைப் பொல்லாப்புச் செய்யாதபடிக்குத் தடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; கர்த்தர் தாமே நாபாலின் பொல்லாப்பை அவன் தலையின்மேல் திரும்பப் பண்ணினார்" (25:39) என்று கூறினார்.

தாவீது, அபிகாயில் என்ற இந்த அழகிய மற்றும் ஆதாரமூலங்கள் நிறைந்த பெண்ணின் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டார், எனவே அவர் (அவளைத்) திருமணம் செய்து கொள்வதான ஒரு முன்மொழிதலுடன்[26] வேலைக்காரர்களை அனுப்பினார், அவர்கள் கணவரும் மனைவியும் ஆனார்கள். இந்த வரலாறானது, தாவீது ஒரு நல்ல உணவை விரும்பிய

நிகழ்வுடன் தொடங்கிற்று; இது தாவீது ஒரு நல்ல மனைவியைக் கண்டறிதலுடன் முடிகின்றது.[27]

அந்த நாளில் தாவீது மதிப்புமிக்க பாடங்கள் சிலவற்றைக் கற்றார். முதலாவது, தனிப்பட்ட பழிவாங்குதல் என்பது அதற்கு விலை கொடுக்கக் கூடிய அளவுக்குத் தகுதியானதல்ல. இரண்டாவது, பழி வாங்குதலை நீங்கள் தேவன் கைகளில் விட்டுவிட்டால், அவர் எல்லாவற்றையும் நேராக்குவார். இவைகள் நாம் யாவரும் கற்றுக்கொள்ள அவசியமான பாடங்களாக உள்ளன.

அதைக் கர்த்தரின் கரங்களில் விட்டுவிடுங்கள் (1 சாமுவேல் 26)

தாவீது அபிகாயிலிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் அவருக்கு விரைவிலேயே அவசியமானவைகளாயிருந்தன. அவர் மீண்டும் ஒருமுறை சீப்பியர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டார் (26:1), மற்றும் சவுல் மீண்டுமாக அவரைத் தாக்கும் தொலைவுக்குள் வந்திருந்தார்.[28] *சீப்ஊரார் கடைசியாகத் தாவீதைப் பார்த்திருந்த இடத்தில் சவுலும் அவரது படையினரும் முகாமிட்டு இருந்தார்கள்: அது ஆகிலா மேடு என்ற இடமாயிருந்தது.*[29] *சவுல் அந்தப் பகுதியில் இருப்பதாகத் தாவீது கேள்விப் பட்ட போது, சவுல் தம் வார்த்தையின்படி வாழ மீண்டும் தவறி விட்டார் என்பதை நம்புவதற்குத் தாவீது விரும்பவில்லை. ஒற்றர்கள் அந்தச் செய்தியை உறுதிப்படுத்தினார்கள், ஆனால் தாவீது அதைக் காணத் தாமே சென்றார்.*

தாவீதும் அவரது மனிதர்களில் பலரும் அவ்விடத்தை அடைந்தபோது இராவாகியிருந்தது,[30] *ஆனால் அருகாமையில் இருந்த ஒரு மலையிலிருந்து, வந்த வெள்ளி நிலவொளியானது சவுல் எங்கு உறங்கிக் கொண்டிருந்தார் என்பதைத் தாவீது காண அனுமதித்தது. தாவீது, தாம் சவுலுக்குத் துன்பம் தர நினைக்கவில்லை என்று நிரூபிக்க இடர்ப்பாடுமிக்க கடைசி முயற்சி யொன்றை மேற்கொள்ள முடிவு செய்தார். தாவீது, "என்னோடே கூடச் சவுலிடத்திற்குப் பாளையத்தில் இறங்கி வருகிறவன் யார்?" என்றதற்கு, (அவரது உறவினரான) அபிசாய்:*[31] *"நான் உம்மோடே கூட வருகிறேன் என்றான்" (26:6).*

தாவீதும் அபிசாயியும் சவுலின் முகாமினுள் ஊர்ந்து வந்தபோது, காவலர்கள் இல்லாததைக் கண்டு அவர்கள் வியப்புற்றிருக்க வேண்டும். வசனம் 12, "கர்த்தர் அவர்களுக்கு [சவுலின் படையினருக்கு] அயர்ந்த நித்திரையை வருவித்ததினால் அவர்களெல்லாரும் தூங்கினார்கள்" என்று குறிப்பிடுகின்றது. இவ்விரு மனிதர்களும் முகாமின் மையப் பகுதியை அடையும் வரையிலும் [தூங்கிக் கொண்டிருந்த படை வீரர்களின்] உடல்கள் மீது கவனமாகத் தாண்டி வந்தார்கள், அங்கு சவுல் தூங்கிக் கொண்டிருந் தார், அவரது ஈட்டியானது அவரது தலைமாட்டின் அருகில் தரையில் குத்தி வைக்கப்பட்டிருந்தது.[32] *முன்பு குகையில் இருந்த மனிதர்களைப் போலவே, அபிசாயியும் இதனை, தாவீது சவுலைக் கொல்ல வேண்டும் என்பதே*

தேவனுடைய விருப்பமாயிருப்பதாகக் கண்டார் (26:8). சவுல் "கர்த்தருடைய மேசியாவாக" இருப்பதால் அவரை, தாம் துன்புறத்த முடியாது என்று மீண்டும் ஒருமுறை தாவீது கூறினார் (26:9; 26:11ஐயும் காணவும்).

இருப்பினும், இந்தமுறை தாவீது ஒரு சிந்தனையைக் கூட்டிக் கொண்டார் - இது நாபால் மற்றும் அபிகாயில் ஆகியோருடனான அவரது சந்திப்பின் விளைவாக எழுந்ததாக இருந்தது: பழிவாங்குதல் என்பது தேவனுடைய கரங்களில் விட்டுவிடப்பட வேண்டும்.[33] "பின்னும் தாவீது: 'கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்துக்குப் போய் மாண்டாலொழிய' (26:10) என்று கூறினார்." வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "ஒன்று சவுல், நாபால் மரித்தது போல - கர்த்தரால் அடிக்கப்பட்டு 'இயற்கையான மரணம்' எய்துவார் - அல்லது அவர் யுத்தத்தில் மரணம் அடைவார், ஆனால் ஒரு விஷயம் உறுதியானது: கடைசியில் கர்த்தர் எல்லாக் கடன்களையும் சரிக்கட்டுவார்" என்று அவர் கூறினார். (அது முடிந்தபோது, இரண்டாவது விஷயம் உண்மையாயிற்று: சவுல் யுத்தத்தில் மரித்தார்.)

தாவீது அபிசாயியிடம், "அவர் தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக் கொண்டு போவோம்" (26:11) என்று கூறினார். அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக முகாமை விட்டு வெளியேறி, மலையிலிருந்து இறங்கி வந்து, பள்ளத்தாக்கினூடே கடந்து வந்து, அருகாமையில் உள்ள (இன்னொரு) மலையின் உச்சிக்கு ஏறினார்கள். அங்கு தாவீது, ராஜாவுக்கு அருகில் அவரைப் பாதுகாக்க உறங்கிக் கொண்டிருந்த அப்னேர்[34] என்பவரை (சத்தமிட்டு) அழைத்தார்: "... இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் யார்?[35] பின்னே நீர் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் காக்காமற்போனதென்ன? ஜனத்தில் ஒருவன் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே ... இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும் என்றான்" (26:15, 16). சவுலின் படையினரைப் பார்க்கிலும் சவுலுக்குத் தாம் மேன்மையான நண்பராக இருந்தார் என்பதே தாவீதின் கருத்தாக இருந்தது, ஏனெனில் அப்னேரோ அல்லது படையினரோ அல்ல, ஆனால் தாமே, அபிசாயி இராஜாவைக் கொலை செய்வதினின்று அவரைத் தடுத்திருந்தார்.

சவுல் தாவீதின் குரலை அடையாளம் கண்டுகொண்டு, "என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்லவா?" (26:17) என்று கூவினார். தாவீது சவுலுக்கு இன்னுமொரு உணர்வெழுச்சிமிக்க வேண்டுகோளினால் பதில் அளித்தார், மீண்டுமாக தமது குற்றமறியாத் தன்மையை உறுதியாய்ச் சூளுரைத்து, தாம் சவுலின் விரோதியல்ல என்பதற்கு நிரூபணமாக (அவரது) ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் அவருக்குக் காண்பித்தார். அவர் பின்வருமாறு கூறினார்:

> *இப்பொழுது ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக; கர்த்தர் [உம்மீது தண்டிக்கும்*

ஆவியை அனுப்பியதினால்] உம்மை எனக்கு விரோதமாக எடுத்துவிட்டதுண்டானால், அதற்கு அவர் காணிக்கையை ஏற்றுக்கொள்வாராக; மனுப்புத்திரர்[36] அதைச் செய்தார்களேயாகில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்படக் கடவர்கள்; அவர்கள்: "நீ போய்; அந்நிய தேவர்களைச் சேவி" என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு, துரத்திவிட்டார்களே. இப்போதும் கர்த்தருடைய சமூகத்தில் என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக; ... (26:19, 20).[37]

தாவீது ஒரு தேடப்பட்டவராக வாழும்படிக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட விஷயம் அல்ல, ஆனால் அதற்கு மாறாக அவர் தேவனுடைய மற்ற மக்களுடன் ஆசரிப்புக் கூடாரத்திற்குச் செல்ல முடியாத விஷயமே தாவீதைக் கவலைக்குள்ளாக்கியது! நமது சகோதர சகோதரிகளுடன் ஆராதிக்கக் கூடுவதற்குச் சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டிருக்கின்ற நம்மில் சிலரைப் போலின்றி, அவரது எண்ணப்போக்கு, " 'கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்' என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்" (சங். 122:1) என்பதாகவே இருந்தது. அவ்வாறு செல்ல இயலாத போது அவர் கவலைக்கு உள்ளானார்.

இருதயத்தை அசைத்த தாவீதின் உரையில், அவர் தாம் அபிகாயிலிடம் கற்றறிந்த பாடத்தையும் குறிப்பிட்டார்: "கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக" (26:23).

சவுல் மீண்டும் தமது இருதயம் தொடப்பட்டவராகத் தோன்றினார். அவர், "நான் பாவஞ் செய்தேன்"[38] என்றும், "நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன்" என்றும் கூறினார். அவர், "என் குமாரனாகிய தாவீதே, திரும்பி வா, இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யேன்" (26:21) என்று கெஞ்சினார். அவர் தொடர்ந்து தாவீதைத் தம் "குமாரன்" என்று அழைத்துக் கொண்டிருந்தார், ஆனால் தாவீது முந்தின வேளையில் சொன்னது போல, அவரை "என் தகப்பனே" (1 சாமு. 24:11) என்று அழைக்கவில்லை. தாவீது தம் மனைவியாகிய மீகாளைச் சவுல் இன்னொருவருக்குக் கொடுத்திருந்ததை அறிந்திருந்தார் (1 சாமு. 25:44). இனியும் சவுல் அவருக்கு (தாவீதுக்கு) மாமனாராயிருந்ததில்லை; தாவீது இனி சவுலின் குடும்பத்தில் ஒரு இடத்தைக் கொண்டிருக்கவில்லை. தாவீது திரும்பி வரத் துணியவில்லை, எனவே அவர் "தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத்திற்குத் திரும்பினான்" (26:25).

பழிவாங்குதல் பற்றித் தாவீது கற்றுக் கொண்ட பாடத்தைக் காட்டிலும் முக்கியமான பாடத்தை ஒருவர் கற்றுக்கொள்ள இயலாது: "அதைக் கர்த்தருடைய கரங்களில் விட்டுவிடுங்கள்." இன்றியமையாத இந்த சத்தியமானது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் போதிக்கப்பட்டுள்ளது: உபா. 32:35, 36; எபி. 10:30 முதலியன. இந்த சத்தியத்தின் வல்லமை மிகுந்த செயல்விளக்கமானது கிறிஸ்துவின் வாழ்வில் காணப்படுகின்றது. பேதுரு பின்வருமாறு எழுதினார்:

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில்,

> *கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாய மாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேது. 2:21-23).*

கிறிஸ்து, "பழிவாங்குதலைத் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்தார்" - மற்றும் அதை நமக்கு ஒரு எடுத்துக்காட்டாகச் செய்தார் என்று பேதுரு கூறினார்.

பவுல் இந்த அறைகூவலை ரோமர் 12ல் எதிரொலித்தார். வசனம் 17ல் அப்போஸ்தலர், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்று கூறினார். அதை நான் எழுதவில்லை. அதை நான் எழுதியிருந்தால், "தீமைக்குத் தீமையை எப்போதாவது செய்யுங்கள்" என்றோ அல்லது, "அதிகமான மக்களுக்கு அரிதாக தீமைக்குத் தீமையைச் செய்யுங்கள்" என்றோ எழுதியிருப்பேன். ஆயினும் பவுல், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்றே கூறினார். பின்பு அவர் பின்வருமாறு தொடர்ந்தார்: "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, 'பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்', என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக் கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங் கொடுங்கள்" (ரோமர் 12:18, 19). இவ்வசனப் பகுதியானது, "பொல்லாங்கு தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படும்" என கூறுவதில்லை என்பதைக் கவனியுங்கள். பிறரைப் புண்படுத்துகின்றவர்கள் "தங்களுக்கு உரிய பலனைப் பெறுவார்கள்" ... ஆனால் "அவர்களுக்கு அதைக் கொடுப்பவர் கள்" நாமல்ல என்பதை இவ்வசனம் வலியுறுத்துகின்றது. அது தேவனுடைய இடமாயிருக்கிறது, நம்முடையதல்ல. அதை நாம் தேவனுடைய கரங்களில் விட்டுவிடக் கடவோம்.

மன்னித்து மறந்துவிடுங்கள்
(2 சாமுவேல் 1)

நமது பாடத்தின் முடிவை நாம் நெருங்குகையில், சவுலுடனான தாவீதின் உறவுமுறையில் ஒரு கடைசிக் கொள்கையைக் கவனிக்க, நாம் தாவீதும் அவர் மனிதர்களும் பெலிஸ்தியர்கள் மத்தியில் வாழ்ந்த காலகட்டத்தை நோக்கி சற்று நேரம் கடந்து செல்வோம்; இதைக் கூறுவது எளிது, ஆனால் செய்வது மிகவும் கடினமாகும்: "மன்னித்து மறந்து விடுங்கள்."

1 சாமுவேல் 31ல், சவுல் தமது பட்டயத்தின்மீது விழுந்து தற்கொலை செய்து கொண்டபோது அவர் இறந்து போனதைப் பற்றி நாம் வாசிக்கின்றோம் (வ. 4). 2 சாமுவேல் 1ல், ராஜாவின் மரணம் பற்றித் தாவீது அறிந்தார். இது தாவீது அகம் மகிழ மிகச் சரியான தருணமாக இருந்திருக்க வேண்டும், தம்மை அழிக்க முயற்சி செய்திருந்தவரை அவர் உடனடியாகச்

சிறுமைப்படுத்தத் தொடங்கியிருக்கலாம். அதற்குப் பதிலாகத் தாவீது, அழுது புலம்பி, அவரை(சவுலை)க் கனப்படுத்த அழகுமிக்க ஒரு இரங்கற் பாடலை எழுதினார். தாவீது தம் நண்பரான யோனத்தான் மீது கொண்டிருந்த அன்பு இந்த இரங்கற்பாடலில் அமைவு பெற்றிருந்தது என்று நாம் முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டோம். இருப்பினும், சவுலின் பெயர் எப்பொழுதுமே இந்தப் பாடலில் முதலில் உள்ளது என்ற உண்மையை நாம் தவற விடக் கூடாது. இது (சவுலின் பெயர்), ராஜாவைப் பற்றிக் கூறப்பட்ட "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்", என்று பொருத்தமானதாய், இன்னும் பல பாராட்டுரைகளினால் தகுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தாவீது சவுலின் பேரிலும், அவன் குமாரனாகிய யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடினான்.[39]

"இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று!
பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்.
பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும்,
விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும்,
அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும்
அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.[40]
கில்போவா மலைகளே,[41] *உங்கள்மேல் பனியும் மழையும்*
பெய்யாமலும்,
காணிக்கைக்கு ஏற்ற பலன் தரும் வயல்கள் இராமலும் போவதாக;
அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது;
சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர்
கேடகமும் அவமதிக்கப்பட்டதே.[42]
கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும்,
பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், ...
சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.
உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும்
பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்;
மரணத்திலும் பிரிந்து போனதில்லை;
கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும்
பலமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.
இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச்
சிறப்பாய் உடுப்பித்து,
உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த[43]
சவுலுக்காக அழுது புலம்புங்கள் ...
பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே;
யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே!"[44]
(2 சாமு. 1:17, 19-24, 27).

சில வேளைகளில், பரிபூரணத்திற்குக் குறைவான வாழ்வை வாழ்ந்த ஒருவரின் சவ அடக்கத்தின் போது[45] அவர் புகழப்படுகின்றார், மக்கள் "என்ன ஒரு மாய்மாலப் பேச்சு!" என்று முணுமுணுக்கின்றார்கள். தாவீது சவுலைப் புகழ்ந்தபோது, அவர் பொய்யுரைத்தாரா அல்லது மாய்மாலம்

செய்தாரா? இல்லை, சவுலைப் பற்றி அவர் கூறியது யாவும் உண்மை யானதாகவே இருந்தது. மோசமானவைகளுக்குப் பதிலாக நல்லவைகளை மட்டும் நினைவுகூர்வதைத் தாவீது தேர்ந்து கொண்டார். (இதைச் செய்ததில்) தாவீது உண்மையற்றவராயிருந்ததில்லை; மாறாக அவர், நாம் கொண்டுள்ள விலைமதிப்பு கூடிய ஒரு விருப்பத்தேர்வைச் செயல்படுத் தினார்: "மன்னித்து மறந்துவிடுதல்" என்ற விருப்பத் தேர்வு.

வில்லியம் பெயின்ட்டர் என்பவரின் முடிவை இந்த உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது: "பழிவாங்குதல் என்பது இனிமையானதாக உள்ளது."[46] ஆயினும், பழிவாங்குதலைக் காட்டிலும் மிகவும் இனிமையான விஷயம் ஒன்றுள்ளது; அது, புண்படுதல் வேதனை ஆகியவற்றிற்கும் மேலாக எழும்பி நின்று, மன்னித்தலாக உள்ளது ... அவர் "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக். 23:34) என்று ஜெபித்த இயேசுவைப் போல் இருத்தல் என்பதாக உள்ளது ... நாம் மன்னிக்கப்படும்படியாக மன்னித்தல் என்பதாக உள்ளது (மத். 6:14, 15).

இந்த ஆலோசனையை அளிப்பதில் நான், "மன்னித்து மறத்தல்" என்ற நன்கு பழக்கமான சொற்றொடரைப் பயன்படுத்துகின்றேன். நம்மில் எவரும் நமது உணர்வில் உள்ள ஒரு காயத்தை முற்றிலும் மறந்து விடவோ அல்லது அதை முழுவதுமாக நமது சிந்தையில் இருந்து அழித்து விடவோ முடியாது. ஆயினும் நாம், தேவன் செய்கிறது போல அவற்றை "மறந்துவிட" முடியும்.[47] மன்னிக்கப்பட்டவருக்கு எதிராகத் தீங்கிழைத்தலைப் பற்றிக் கொண்டிராதபடி நாம் தேர்ந்து கொள்ள முடியும், மற்றும் அதைத் தொடர்ந்து வெளிக் கொண்டு வராதபடி நாம் தேர்ந்து கொள்ளவும் முடியும். தாவீது சவுலுக்காகப் புலம்பிய பொழுது இதையே அவர் செய்தார்.

டென்னஸ்ஸீயின் ஹாப்கின்ஸ்வில்லில் உள்ள லிட்டில் ரிவர் கிறிஸ்துவின் சபையின் உறுப்பினர்களான ஃப்ராங்க் மற்றும் எலிசபெத் மோரிஸ் ஆகியோர், மன்னித்தலின் இனிமையை ஒரு கடினமான வழியில் கற்றார்கள். 1982ன் கிறிஸ்மஸ்க்குச் சற்று முன்னர், அவர்களின் ஒரே மகனும் டேவிட் லிப்ஸ்கோம்ப் கல்லூரி மாணவருமான டெட் என்பவர், ஒரு குடிகார ஓட்டுநரால் கொல்லப்பட்டார். இருதயம் உடைந்து போன மோரீஸ் தம்பதியர் பழிவாங்குதலை வேண்டி நின்று, தங்கள் மகனைக் கொன்ற டாமி பிக்கேஜுக்கு மரண தண்டனை தர வேண்டும் என்று நாடினார்கள். ஆயினும், குற்றச்சாட்டுகள் மனிதக் கொலை(நீதி மன்றத்து)க்கு மாற்றப்பட்ட போது, அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறைக்கப்பட்டது. மோரீஸ் தம்பதியர் கசப்பினால் பட்சிக்கப்பட்டார்கள். அவர்கள், பழிவாங்குதலுக்கான தங்கள் தாகம், வேதாகமத்தின் போதனைக்கு முரண்பட்டது என்பதை உணர்ந்தது அவர்களின் பிரச்சனை யாயிற்று. அவர்கள் கோபத்தால் மட்டுமின்றி, குற்ற உணர்வினாலும் நிறைந்தவர்களாயினர்.

அவர்களின் உணர்வுகளின் வீர காவியம் பற்றி, Revenge Redeemed என்ற தலைப்பில் ஒரு ஆழப்பதியச் செய்யும் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.[48] இந்தத் தொகுப்பு, ஃப்ராங்க்கும் எலிசபெத்தும் வெறுப்பில் இருந்து அன்பிற்குக் கடந்து சென்றது எவ்வாறு, அவர்கள் டாமி பிக்கேஜை மன்னிக்கக் கற்றுக்

கொண்டது எவ்வாறு, மற்றும் அவரை சபையின் உறுப்பினராகும்படி கூட வழிநடத்தியது எவ்வாறு என்பவை பற்றிக் கூறுகின்றது. அப்புத்தகத்தின் பின் அட்டையில் ஃப்ராங்க் மற்றும் எலிசபெத் ஆகியோர் டாமி பிக்கேஜ்ஜூடன் இருக்கும் புகைப்படம் ஒன்று அச்சிடப்பட்டுள்ளது.

தாவீது அதைச் செய்திருந்தால், மோரீஸ் தம்பதியர் அதைச் செய்திருந்தால், நாமும் அவ்வாறே செய்ய முடியும். "மன்னித்து மறக்கும் அளவுக்கு" நாம் யாவரும் பெரியவர்களாயிருக்க தேவன் நம் யாவருக்கும் உதவுவாராக.

முடிவுரை

பழிவாங்குதலின் சிந்தனைகளைக் கையாளுதல் பற்றிய எனது நான்கு ஆலோசனைகளில் நான் வழக்கத்தில் இல்லாது நைந்துபோன சொற்றொடர்களைப் பயன்படுத்தியிருப்பதைச் சிலர் கவனித்து இருப்பார்கள்: "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்", "விலையை எண்ணுங்கள்", "அதைக் கர்த்தரின் கரங்களில் விட்டுவிடுங்கள்", "மன்னித்து மறந்து விடுங்கள்." வழக்கத்தில் இல்லாது நைந்துபோன சொற்றொடர்கள் கெட்ட பெயர் கொண்டுள்ளன; எழுதத் தொடங்குபவர்கள், "வழக்கத்தில் இல்லாது நைந்துபோன சொற்றொடர்களைத் தவிர்த்து விடுங்கள்" என்று எச்சரிக்கப்படுகின்றார்கள். இவ்வித சொற்றொடர்களை அவையிருக்கும் விதமாக ஆக்குவது எது என்பதை நாம் சில வேளைகளில் மறந்து விடுகின்றோம்: இவைகள், நாம் கூற விரும்பும் விஷயத்தை வெளிப்படுத்துகின்ற மாபெரும் பணியைச் செய்கின்றபடியால் அவ்விதமானவைகளாக உள்ளன. நான் கொடுத்துள்ள நான்கு ஆலோசனைகள், பழமையான வாக்கியங்களாக இருக்கலாம், ஆனாலும் அவைகள் வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்களை, நாம் மனசமாதானம் கொண்டவர்களாய் வாழவும், மரிக்கும் பொழுது, பரலோகம் செல்லவும் விரும்பினால் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சத்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இந்தப் பிரசங்கத்தை நாம் இயன்ற அளவுக்கு நமது தனிப்பட்ட வாழ்வுக்கும் நடைமுறைக்கும் உகந்த வகையில் செயல்படுத்துவோம். நான் இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்ட பழி வாங்குதலின் பளபளக்கும் பெட்டியை நீங்கள் இன்னும் வைத்திருக்கின்றீர்களா? அப்படியென்றால், உங்கள் விரலை அதன் பொத்தானில் இருந்து எடுத்து விட நாம் முயற்சி செய்வோம்: கடந்த காலத்தில் உங்களை மனம் புண்படச் செய்தது பற்றி யார் மீதாவது உங்கள் இருதயத்தில் இன்னமும் கசப்புணர்வு உள்ளதா? அந்தக் கசப்புணர்வு உங்கள் இருதயத்தில் இருக்கும் வரையிலும், உங்கள் மனதைப் புண்படுத்திய அந்த நபர் உங்கள் வாழ்வையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார் என்பதை உணர்ந்தறியுங்கள். அந்தக் கசப்புணர்வு அவரையல்ல, உங்களையே புண்படுத்துகின்றது. "ஆதார மூலத்தை ஆழ்ந்து சிந்திப்பதன்" மூலமாகவும், பதிலுக்குப் பதில் செய்வதற்கான உயர்ந்த பட்ச விலையை எண்ணுவதன் மூலமாகவும் கூட, அதை உங்கள் இருதயத்திலிருந்து தோண்டியெடுத்து வெளியேற்றுங்கள்.

விஷயங்களைக் கர்த்தரின் கரங்களில் விட்டுவிடவும், அவற்றைத் தேவன் தமக்கே உரிய காலத்திலும் இடத்திலும் தீர்த்து வைக்க அனுமதிக்கவும் தீர்மானம் செய்யுங்கள். உங்கள் பகுதியில், கசப்புணர்வின் சுமையை எறிந்து போடுதலின் - மன்னித்து மறத்தலின் அனுபவம் எவ்வளவு இனிமையானது என்பதைக் கற்றறியுங்கள்.

பிரசங்க மற்றும் காட்சி - உதவிக் குறிப்புகள்

பிரசங்கக் குறிப்புகள்: *நம்மில் பலர் தவறாக நடத்தப்படுவதைக் கையாள்வது எப்படி என்பது நமக்குப் போதிக்கப்படாதிருப்பதாலேயே, அதைக் கையாள்வது எப்படி என்பதை அறியாமல் இருக்கின்றோம். பெற்றோர் என்ற வகையில் நாம் நமது பிள்ளைகளுக்கு, புண்படுத்தப் படுதலின் போது பதில்செயல் செய்வது எப்படி என்பதைக் கற்றுத் தருவது இன்றியமையாததாக உள்ளது. இந்தப் பிரசங்கத்தை அந்தத் திசை நோக்கிச் சாய்க்க முடியும்: "பழி வாங்குதல் பற்றி நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டியது என்ன."*

இந்த அத்தியாயங்களில், அபிகாயிலின் பண்புநலன்கள் மிக முக்கிய மான கருத்தமைவுகளில் ஒன்றாயிருக்கின்றது. அவளைப் பற்றிய பிரசங்கத்தை ஒருவர் பிரசங்கிப்பதினாலேயே பயனடைய முடியும்.

"நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன்" என்ற சவுலின் கூற்றானது (1 சாமு. 26:21) அவரது வாழ்வு பற்றிய முழுமையான தொகுப்புரை ஒன்றை வழங்குகின்றது. "தன்னையே முட்டாளாக்கிக் கொண்டவர்" என்ற தலைப்பின் கீழ் அற்புதமான பல பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

சங்கீதம் 7, தாவீதின் உரையாக அத்தியாயங்கள் 24 மற்றும் 26ல் உள்ளவற்றை எடுத்துரைக்கலாம். மற்ற பல சங்கீதங்கள் தாவீதின் விரோதி களைப் பற்றிக் கூறுகின்றன. அவற்றில் விசேஷமாக வல்லமை நிறைந்த ஒன்றாக விளங்குவது சங்கீதம் 22 ஆகும்.

காட்சி - உதவிக் குறிப்புகள்: *பொய்யான ஒரு சிகப்பு நிறப் பொத்தானுடன் கூடிய பெட்டியொன்றை இந்தப் பிரசங்கத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் பயன்படுத்தலாம்.*

குறிப்புகள்

[1]அமெரிக்கர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் ஒரு கோடியே தொன்னூறு இலட்சம் வழக்குகளைப் பதிவு செய்கின்றார்கள். சமீபத்தில், செய்தி விளக்கவுரை யாளர் ஒருவர், "வழக்குரைப்புகளின் மீது அமெரிக்காவின் நேசப்பிணைப்பு" பற்றிப் பேசியுள்ளார். [2]ஆயினும், நான் "ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்று கூறும் பொழுது - நாம் பிற்பாடு பார்க்கப்போகின்றபடி - சவுலின் மனநிலையைக் காட்டிலும் அதிகமானவற்றை என் சிந்தையில் கொண்டுள்ளேன். [3]சவுல், தாவீதையும் அவரது தோழர்களையும் காணாதது ஏன்? முதலாவது, இருளுக்குப்

பழகக் கண்களுக்குச் சற்று நேரம் தேவைப்படும். இரண்டாவது, தாவீதும் அவரது அறுநூறு மனிதர்களும் குகையின் பின்பகுதியில் ("உள்ளான இடங்களில்") இருந்தனர், அநேகமாக அவர்கள் பாறையின் இயற்கையான ஒளிவிடங்களில், பொந்துகளில் மற்றும் அது போன்ற இடங்களில் மறைந் திருக்கலாம். [4]இன்னுமொரு விவரிப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (படைப்) பணியில் உள்ள மனிதர்கள், மனிதருக்கல்ல ஆனால் அவர்களின் பதவிக்காகவே வணக்கம் செலுத்தும்படி கூறப்படுகின்றனர். [5]இவ்வசனப் பகுதியின் அடிக்குறிப்பைக் கவனிக்கவும்: "பல கைப்பிரதிகளில் இவ்விடத்தில் பின்வரும் வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன: உனக்கு விரோதமாக." தகுதிப்படுத்தும் இந்தச் சொற்றொடரைச் சேர்த்துள்ள KJV மற்றும் பிற மொழிபெயர்ப்புகளைக் காணவும். [6]இதை "தனித்திருக்கும்போது" செய்யும்படி இயேசு கூறினார், ஆனால் இது தாவீதின் சூழ்நிலைகளுக்குப் பொருந்தி வராதிருந்தபடியால் நான் இவ்வார்த்தை களை விட்டுவிட்டேன். தாவீது தமது உயிரைக் கைவிடும் சூழ்நிலையின்றி சவுலுடன் "தனித்துப்" பேச முடியாதிருந்தது. [7]இந்த இடத்தில் மற்றும் இந்தக் கணத்தில் தாவீது, சவுலை எதிர்கொண்டு நின்றதில் கணக்கிடப்பட்ட இடர்ப்பாட்டை மேற்கொண்டிருந்தார். சவுலும் அவரது படையினரும் ஒரு குறுகிய தொலைவிலேயே இருந்தார்கள். தாவீது வெற்றிகரமாயிருந்திராமற் போயிருந்தால், அவரும் அவரது மனிதர்களும் விரைவிலேயே தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள யுத்தம் செய்ய வேண்டியதாய் இருந்திருக்கும். எதிர்கொண்டு நிற்குதலில் எப்பொழுதுமே கணக்கிடப்பட்ட இடர்ப்பாடு உள்ளது. [8]இது, சவுல் வயதில் மூத்தவராக இருந்தார் என்று உண்மையினால், அரசர் என்பவர் நாட்டின் ஆவிக்குரிய தலைவராயிருந்தார் என்ற உண்மையினால், மற்றும்/அல்லது சவுல் தாவீதின் மாமனாராக இருந்தார் என்ற உண்மையினால் மரியாதையை காண்பிப்பதற்காகச் செய்யப்பட்டிருக்கலாம். [9]ஒரு நபரின் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் பதிவு செய்தல் என்பது சோர்வூட்டுவதாகவும் சலிப்பூட்டுவதாகவும் இருக்கும். [10]இந்த கர்மேல் யூதேயாவில் மாகோனுக்கு அருகில் உள்ளது. இது இந்த நாட்டின் வடபகுதியில் கடற்கரையோரமாக அமைந்திருந்த கர்மேல் மலை அல்ல.

[11]"மகாபாரி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை "கனத்த" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது; அமெரிக்காவில் நாங்கள் நாபால் "(பணம்)சுமத்தப்பட்டவனாக" இருந்தான் என்று கூறுவதுண்டு. (இது நாம் தமிழில் "கொழுத்த பணக்காரன்" என்று கூறுவதற்கு ஒப்பானது.) [12]வேத வசனம் "இவன் காலேபின் சந்ததியைச் சேர்ந்தவன்" என்றும் கூறுகின்றது. இது, அவன் யோசுவாவுடன் உண்மையாக ஊழியம் செய்த காலேபின் வழித் தோன்றலாக இருந்தான் என்ற உண்மையைக் குறிப்பிடலாம் அல்லது (பின்வரும் எஞ்சியுள்ள விவரிப்புகள் சிறுமைப்படுத்துவதாயிருப்பதால்,) அவன் நாயைப் [இது "காலேப்" என்பதன் மூல அர்த்தமாக உள்ளது.] போன்றவனா யிருந்தான் என்றும் அர்த்தப்படுத்தும் வகையில் ஒரு அவமானப்படுத்தும் சொற்றொடராகவும் இருக்கலாம். [13]நேரடியான அர்த்தத்தில் "பேலியாளின் மகன்" [தமிழில் இந்த நேரடி அர்த்தமே தரப்பட்டுள்ளது ஆங்கிலத்தில், 'such a worthless man' என்றுள்ளது.] இது, "மதிப்பே இல்லாதவனின் மகன்" என்று அர்த்தப்படுகின்றது. [14]விநோதமான செயல்கள் நடைபெற்றன. பல பெயர்கள், அவை ஒலிக்கும் விதம் பெற்றோருக்குப் பிடித்திருந்ததாலேயே வைக்கப்பட்டன, அந்தப் பெயர் எதனை அர்த்தப்படுத்திற்று என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. [15]மற்ற மூவர் சாராள், பத்சேபாள் மற்றும் வஸ்தி ஆகியோராவார்கள். [16]இந்த இடத்தில் KJVயில் மிகச் சரியான மொழிபெயர்ப்பு உள்ளது, ஆனால் "ஆண்" (நாய்) என்பது விரும்பத்தக்கதாக உள்ளது. [17]சவுலுக்கும், நியாயமற்றவனான மற்றும் சுயத்தை

மையங் கொண்டிருந்த வனான நாபாலுக்கும் இடையில் பல இணைக் கருத்துக்களைக் கொண்டு வர முடியும். "நாபால்" என்றால் "முட்டாள்" என்பதை நினைவில் வையுங்கள், அடுத்த அத்தியாயத்தில் சவுல் தம்மை இவ்வாறாகவே அழைத்துக் கொண்டார் (1சாமு. 26:21). [18]அவள் ஓரமாக நின்றுகொண்டு, தாவீதையும் அவர் மனிதர்களையும் உற்சாகப்படுத்தியிருக்கவும் முடியும். [19]வேத வசனப்பகுதி, "அவள் அதைத் தனது கணவனிடம் கூறவில்லை" (1 சாமு. 25:19) என்று குறிப்பிடுகின்றது. அவள் கீழ்ப்படிதலுடன் இருக்கத் தவறி விட்டாளா? அவள் நாபாலின் உயிரைக் காக்கச் சென்றதால், நம்மில் பலர் அவளைக் குற்றப்படுத்துவோம் என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன். சில வேளைகளில் என் மனைவி முதலில் என்னிடம் கூறாமலே என்னைத் தற்காத்திருக்கின்றார்கள், அது தெரிந்த பின்பு நான் அவர்களைப் பாராட்டுவதுண்டு. [20]இவ்விடத்தில் ஸ்வின்டால் அவர்கள், "What to Feed an Angry Man" (N.p., n.d.) என்ற தம் ஒலிநாடாவில், "அதிலும் சிறப்பாக தன் கையில், உணவுப்பானை ஒன்றை வைத்திருந்தவளிடம்" என்று கூடுதலாகக் கூறினார்.

[21]1 சாமுவேல் 25:29ல் அபிகாயிலின் விமர்சனமானது, "தேவன் உம் உயிரைக் காத்து உமது விரோதிகளின் வாழ்வை முடிப்பார்" என்று குறிப்பாகக் கூறுகின்ற உருவக நடையாக உள்ளது. [22]தாவீது அடுத்த ராஜாவாக ஆவார் என்ற அபிகாயில் எப்படி அறிந்தாள்? ஒருவேளை அவள் "தாவீது கொன்றது பதினாயிரம்" என்ற பாடலைக் கேள்விப் பட்டு, அவரே தர்க்கப் பொருத்தமாக அடுத்த அரசாள்பவராகத் தெரிந்து கொள்ளப் படுவாரென்று யூகித்திருக்கலாம். ஒருவேளை, சவுலின் வார்த்தைகள் (1 சாமு. 24:20) அந்த பகுதி முழுவதிலும் பரவியிருக்கலாம். அவளது வார்த்தைகள் ஏவுதல் பெற்றவை என்று ஒரு சிலர் நினைக்கின்றார்கள். [23]யாக்கோபு 3:17ஐக் காணவும். அபிகாயில் தனது சொந்தக் கணவனிடத்தில் பேசக் கூடாதவளாயிருந்தாள்; அவளால் தாவீதிடம் பேச முடிந்திருந்தது. [24]ரிக் ஆட்லி அவர்கள், "பாராட்டுதலைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, மதுமயக்கத்தைக் காணும்படிக்கே அவள் இல்லம் திரும்பினாள்" என்று குறிப்பிட்டார். "Beauty and the Beast" (N.p., n.d.), sound cassette. [25]இந்த நாபால் என்பவன், இயேசுவின் உவமையொன்றில் (லூக். 12:16-21) வரும் செல்வந்தனான மதியீனனுக்கு முன்னு தாரணமாக இருந்தான் என்பதில் ஒருவர் வியப்படையாமல் இருக்க முடியாது. [26]அந்த முன்மொழிதலுக்கு அவளது பதில் பின்வருமாறு இருந்தது: "இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்" (25:41). அந்தக் கருத்துக் குறித்து ஸ்விண்டால் அவர்களின் குறிப்புரை பின்வருமாறு இருந்தது: "நண்பர்களே, உங்கள் திருமண முன்மொழிதல்களில், அவள் (நீங்கள் நேசிக்கும் பெண்) இவ்விதமாக மறுமொழி உரைத்தாள், அவளைக் கவர்ந்து கொள்ளுங்கள்!" [27]1 சாமுவேல் 25:43, 44ல் உள்ள நேரெதிர்க் கருத்தைக் கவனியுங்கள். வசனம் 44, சவுல் மீகாளை இன்னொருவருக்குக் கொடுத்திருந்தார் என்று குறிப்பிடுகின்றது, வசனம் 43, அபிகாயில் தாவீதின் இரண்டாவது மனைவியானாள் என்று குறிப்பிடுகின்றது. சவுல் தாவீதிடத்திலிருந்து ஏதாவதொன்றை எடுத்துக் கொண்ட போதெல்லாம், தேவன் அதற்குப் பதிலாக வேறொன்றைத் தாவீதிற்கு அளித்தார். [28]இது, ஒரே வரலாற்றின் இன்னொரு எடுத்துரைப்பு என்று சில விமர்சகர்கள் உரிமைகோருகின்றார்கள். ஆயினும், அப்படிப்பட்ட உறுதிப்பாட்டை ஆதரிக்கும் வேத வசன ஆதாரம் எதுவும் இல்லை. இந்த இரு வரலாறுகளும் பல வேறுபாடு களைக் கொண்டுள்ளன. [29]இந்த மலை இருந்த சரியான இடம் அறியப்படாததாக உள்ளது. இது, "எஷிமோனுக்கு" எதிராக இருந்தது. எஷிமோன் என்றால் "பாலைவனம்" என்று மட்டுமே அர்த்தப்படுகின்றது. இது சீப் வனாந்தரத்திற்கு (26:2) அடுத்திருக்கும் என்பது

தெளிவு. [30]சவுல் ஏற்கனவே "ஜனங்கள் [அவரைச்] சுற்றிலுமிருக்கப் படுத்திருந்தார்" (26:5) என்ற உண்மையினால் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றது.

[31]இவர் தாவீதின் சகோதரிகளில் ஒருத்தியான செருயாவின் மகனாயிருந்தார் (26:6; இ.வ. 1 நாளா. 2:16). பத்துப் பிள்ளைகளில், தாவீது எல்லாருக்கும் இளைய வராயிருந்ததால், அவர் அநேகமாகத் தமக்கும் மூத்தவர்களான மைத்துனர்களையும் சகோதரி மகன்களையுமே கொண்டிருந்திருப்பார், அவர்கள் முதியவர்களா யிருந்திருக்க அவசியமில்லை. [32]தாக்குதல் செய்ய வேண்டியிருந்தால் கையில் எடுக்க வசதியாக ஈட்டி அவ்விடத்தில் தரையில் ஊன்றப்பட்டிருக்கலாம். ஆயினும், அநேகமாக அது முகாமின் "தலைமையிடத்தை" சுட்டிக் காண்பிப்பதாகவே இருந்திருக்கும். ஈட்டியானது சவுலினால் தமது பதவியின் அடையாளமாக, ஒரு செங்கோலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பது உறுதி. [33]அத்தியாயம் 24ல், தாவீது, தேவன் அவருக்கு நீதியைச் சரிக்கட்ட வேண்டும் என்று ஜெபித்தார் (வ. 12); இப்பொழுது, அதுவே விஷயமாயிருக்கும் என்பதில் தமக்கிருந்த நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார். [34]1 சாமுவேல் 26:14ஐக் காணவும். தாவீது அப்னேரை அழைத்தாலும், அப்னேர் அந்த அழைப்பு ராஜாவை நோக்கி விடுக்கப்பட்டதாவே எடுத்துக் கொண்டார், ஏனெனில் ஒரு நாளின் உடன்படிக்கை அழைப்பில், ராஜாவை நோக்கி நேரடியாக அழைப்பு விடப்படுவதில்லை. [35]சவுலின் படையில் அப்னேரைப்போல யாரும் இருந்தது இல்லை; சவுலின் வாழ்வில் கலக்கம் நிறைந்த வேளை முழுவதிலும் வேறு எவரும் (அப்னேரைப் போல) வீரத்துடனும் உண்மையுடனும் விளங்கியதில்லை. அப்னேர் மரித்த பொழுது, தாவீது "இன்றைய தினம் இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான்" (2 சாமு. 3:38) என்று கூறினார். [36]தாவீது, அத்தியாயம் 24ல் தமது உரையில் இந்தச் சாத்தியக்கூற்றைக் குறிப்பிட்டார். கூஷ் என்பவன் சவுலைக் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தான் என்று சங்கீதம் 7 குறிப்பிடுவதாகச் சிலர் நினைக்கின்றார்கள். (அந்த சங்கீதத்தின் அறிமுகக் குறிப்பைக் கவனிக்கவும்; கூஷ் மற்றும் சவுல் ஆகிய இருவருமே பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள்.) [37]இந்த வார்த்தைகள், தாவீது தேவனைக் குறித்து, தேவன் ஏதாவது ஒரு பகுதியில் இருக்கின்றவர் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுத்து வதில்லை; மாறாக இவைகள், தேவன் தம்முடைய மக்களுடன் ஒரு விசேஷித்த வழியில் இருக்கின்றார், தேவனுடைய பிரசன்னமானது மகாப் பரிசுத்த ஸ்தலத்தில் ஒரு விசேஷித்த வகையில் இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளுதலாக இருந்தன. [38]வேதாகமத்தில் வேறு யாரைக்காட்டிலும் சவுல் இந்த வார்த்தைகளை மிகவும் அதிகமாகக் கூறியுள்ளார் - ஆனால் அவைகள் ஒருபோதும் அவரை மாற்றியிருந்த தாகக் காணப்படவில்லை. உண்மையான மனந்திரும்புதலுக்கு முன்னதாக, பாவத்தை அறிக்கையிடுதல் என்பது நடைபெறவில்லையென்றால், அது (மனந்திரும்புதல் என்பது) தகுதியற்றதாகவே உள்ளது. [39]"யாசேரின் புத்தகம்" என்பது வசனம் 18ல் குறிப்பிடப்பட்டுள்ளது; இது யோசுவா 10:13லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆதி காலக் கவிதைகளின் தொகுப்பாயிருந்தது என்பது உறுதி. [40]காத் மற்றும் அஸ்கலோன் என்பவை பெலிஸ்தரின் நகரங்களாயிருந்தன; அவைகள் பெலிஸ்தரின் நாடு முழுவதையும் சுட்டிக்காட்ட இங்கு நிற்கின்றன.

[41]கில்போவா மலைக்கு ஒரு சாபம் விடப்பட்டது; அங்குதான் சவுலும் யோனத்தானும் மரித்தார்கள். [42]கேடகங்கள் தோலினால் செய்யப்பட்டு, அவைகள் வெடிப்பு விடாதிருப் பதற்காக, அவற்றில் எண்ணெய் தடவப்பட்டது; இப்பொழுது சவுல் மரித்துப் போயிருந்தார், அவரது ஆயுதங்கள் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தன. [43]வெற்றியில் கிடைத்த பொருட்களுடன் சவுல் யுத்தத்தில் இருந்து திரும்பும் பொழுது, அவரைக் கனப்படுத்துவதற்காக இவ்விதமான கொண்டாட்டங்கள்

நடத்தப் பெற்றிருக்கலாம். [44]அநேகமாக, இது சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோரின் ஆயுதங்களைக் குறிப்பதற்குப் பதிலாக, அவர்களையே குறிப்பிட்டிருக்கலாம். [45]நாம் யாவரும் முழுமைக்கும் குறைவான வாழ்க்கையையே வாழ்கின்றோம் (ரோமர் 3:23). [46]William Painter in *The Palace of Pleasure,* quoted in Lewis Copeland, ed., *Popular Quotations for All Uses* (Garden City, N.Y.: Doubleday & Co., 1961), 392. [47]தேவன் "இனியும் நமது அக்கிரமத்தை நினைவுகூருவதில்லை", ஆனால் எல்லாம் அறிந்த தேவன் என்ற வகையில், அவர் இன்னமும் அது நடந்தது என்பதை அறிந்திருக்கின்றார். [48]Bob Stewart, *Revenge Redeemed* (Tarrytown, N.Y.: Fleming H. Revell Co., 1991). This volume is recommended reading for anyone. To my knowledge, it is the only book written for a popular audience and published by a major publishing house that contains teaching on the church and the conditions of salvation.

போதனை மற்றும் பிரசங்கம் ஆகியவற்றில் உதவிகள்

டேவிட் ரோப்பர்

தாவீதின் வாழ்வு

1. *1 சாமு. 16* .... தாவீதின் தொடக்க கால வாழ்வு
2. *1 சாமு. 17* .... தாவீதும் கோலியாத்தும்
3. *1 சாமு. 17-23; 2 சாமு. 1* .... தாவீதும் யோனத்தானும்
4. *1 சாமு. 18-23* .... தேடப்பட்டவராகத் தாவீது
5. *1 சாமு. 24-26; 2 சாமு. 1* .... தாவீது சவுலை விட்டுவிடுதல்
6. *1 சாமு. 27- 2 சாமு. 2* .... பெலிஸ்தியாவில் தாவீதின் பதினாறு மாதங்கள்
7. *2 சாமு. 2-6:23; 1 நாளா. 11-14* .... தாவீது அரசராயிருந்த தொடக்க ஆண்டுகள்
8. *2 சாமு. 6; 7;*
   1 நாளா. 13; 15-17; 22; 28 .... தாவீதும் தேவனுடைய பெட்டியும்
9. *2 சாமு. 8-12; 21; 23;*
   1 நாளா. 11; 18-20; 23-27 .... அரசர் என்ற வகையில் தாவீதின் வெற்றி
10. *2 சாமு. 11; 12* .... தாவீதும் பத்சேபாளும்
11. *2 சாமு. 11-16; 18* .... தாவீது பத்சேபாளிடத்தில் பாவத்திற்கு உட்பட்ட பின்பு
12. *2 சாமு. 15-20* .... தாவீதும் கர்த்தருடைய சிட்சித்தலும்/ஒழுங்கு நடவடிக்கையும்
13. *2 சாமு. 21-24; 1 இரா. 1; 2;*
    1 நாளா. 20-29 .... தாவீதின் கடைசி நாட்கள்

தாவீதின் குடும்ப மரம்



தாவீதின் குடும்பம்

தாவீதின் தாய்: வேத வசனங்களில் தாவீதின் தாய் பற்றி ஒரு சில குறிப்புகளே உள்ளன, அவர்கள் பெயர் ஒரு இடத்திலும் தரப்பட வில்லை. தாவீதின் வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதற்கு அறுபத்து ஆறு அத்தியாயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்கையில், இது (தாவீதின் தாயின் பெயர் தரப்படாதது) ஆச்சரியத்திற்கு உரியதாக உள்ளது. இது அவளுடன் தொடர்புடைய களங்கம் ஏதாவது இருக்கும் என்ற யூகத்திற்கு வழிநடத்தியுள்ளது.

தாவீது தேடப்பட்டவராக இருக்கையில், தமது தந்தையையும் தாயையும் மோவாபிய அரசரிடம் ஒப்புவித்திருந்ததால் (1 சாமு. 22:3), ஈசாயி தமது தாத்தாவான போவாசு செய்தது போலவே, தாமும் மோவாபியப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்திருக்கலாம் என்று சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

சங்கீதம் 51ல் அவரது குழப்ப மூட்டும் வாக்கியத்தில் மற்றொரு யூகம் மையங் கொண்டுள்ளது: "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (வ. 5). இந்த வசனத்தைக் கால்வினியர்கள், வம்சவழியில் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையில்/பாவத்தில் பிறத்தல் என்ற தங்கள் உபதேசத்திற்குப் பயன்படுத்துகின்றார்கள், ஆனால் நாம் "பாவத்தில் பிறப்பதில்லை" - ஒவ்வொருவரும் தங்கள் பாவத்திற்கு மட்டுமே பொறுப்பாளியாகின்றனரே தவிர, ஆதாம் உட்படத் தங்கள் முன்னோர்கள் எவருடைய பாவங்களுக்கும் பொறுப்பாளியாவ தில்லை என்று வேத வசனங்கள் போதிக்கின்றன (பிர. 7:29; எசே. 18:4, 19, 20; சக. 12:1; மத். 18:3; 19:14; அப். 17:29; ரோமர் 2:6; 1 கொரி. 14:20; 2 கொரி. 5:10; கலா. 6:5; முதலியன). தாவீது தமது சொந்தப் பாவத்தினால் நிறைந்த தன்மையைக் குறிப்பிடவில்லை, மாறாக அவர் கர்ப்பந்தரிக்கப்பட்ட மற்றும் பிறந்த பாவச் சூழ்நிலையைக் குறிப்பிட்டார். இந்த வார்த்தைகள் பாவம் நிறைந்த உலகம் பற்றிய கவிதைத்துவமான குறிப்பாயிருக்கலாம் - ஆனால் "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்ற வார்த்தைகளில் இருள் மிகுந்த அர்த்தமொன்றும் இருக்கலாம். இந்த சங்கீதமானது விபசாரம் என்ற பாவத்தைப் பற்றியதாக உள்ளது; தாவீது ஒருவேளை தமது தாய் அந்தப் பாவத்தைச் செய்து குற்றம் சுமந்தாள் என்று கூறுகின் றாரோ? சிலர், தாவீது சட்ட விரோதமாகப் பிறந்த, விரும்பப்படாத ஒரு பிள்ளையாக, குடும்பத்தில் இருந்த மற்றவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகின்ற பிள்ளையாக இருந்தார் என்று நம்புகின்றார்கள்.

தாவீதின் தாய் பற்றிய சிக்கலை நாம் ஒருக்காலும் பிரிக்க இயலா மல் இருக்கலாம், ஆனால் அவர் தம் தாயிடம் மிகவும் பிரியமா யிருந்தார் மற்றும் அவளை அக்கறையுடன் பராமரித்தார் என்பதற் கான ஒவ்வொரு குறிப்பும் உள்ளது (1 சாமு. 22:3; 2 சாமு. 19:37).

தாவீதின் சகோதரிகள்: தாவீதின் இரு சகோதரிகளான செரூயாள் மற்றும் அபிகாயில் ஆகியோர் மற்றும் அவர்களின் வழித் தோன்றல் கள், 1 நாளா. 2:16, 17ல் பெயர் குறிப்பிடப்படுகின்றார்கள். செரூயாளின் மகன்களில் ஒருவருக்கு யோவாப் என்று பெயரிடப் பட்டது. அபிகாயில் (அல்லது அபிகாள்) என்பவள் 2 சாமு. 17:25ல் குறிப்பிடப்படுகையில், அவள் செரூயாளின் சகோதரி என்று அடையாளப்படுத்தப்பட்டாள் (இவளுக்கு யோவாப் என்ற பெயர் கொண்ட மகன் இருந்தான்). இவள் ஈசாயின் மகள் என்பதற்குப் பதிலாக, "நாகாசின் மகள்" என்ற கூறப்பட்டாள். இதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன: (1) "நாகாஸ்" என்பது ஈசாயின் இன்னொரு பெயராயிருந்தது. (2) "நாகாஸ்" என்பது ஈசாயினு டைய மனைவியர்களில் ஒருத்தியின் பெயராயிருந்தது. (3) ஈசாயி, இருமகள் களைக்

கொண்டிருந்த விதவை ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டார், அவள் அதற்கு முன்னதாக நாகாஸ் என்ற மனிதருக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருந்தாள். இந்தக் கருத்தின் மீது அதிக வலுவாக உபதேசிக்க மிகக் குறைவான தகவல்தான் தரப்பட்டுள்ளது.

குடும்பத்தில் இருந்த மற்றவர்களுடன் தாவீதின் உறவு: எல்லா யூகங்களையும் ஒன்றுகூட்டிக் காணும் பொழுது, அந்தக் குடும்பத்தில் இருந்த எல்லாருக்குமோ அல்லது சிலருக்கோ தாவீது ஒரு அரை சகோதரராக அல்லது ஒன்றுவிட்ட/ தத்தெடுக்கப்பட்ட சகோதரராக இருந்திருக்கச் சாத்தியம் உள்ளது. இது அவர் ஏன் ஒரு வெளியாள் போல இருந்தார் என்பதை விளக்க உதவலாம்.



இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஒன்றைக் குறிப்பிடவும்: ☐ ஆண் ☐ பெண்

பெயர்: ______________________________

முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)

____

____

____

____

புதிய முகவரி பழைய முகவரி (முகவரியில் மாற்றம் இருக்குமானால்) தெரியப்படுத்தவும்:

____

____

____

____

Email விலாசம்: ______________________________

எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்? ______________________________

அது எங்கிருக்கிறது? ______________________________

பிரசங்கிப்பவரின் பெயர்: ______________________________

நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்):

- ☐ பிரசங்கிப்பவர்
- ☐ அங்கத்தினர்
- ☐ வேதபாட வகுப்பு ஆசிரியர்
- ☐ அங்கத்தினரல்லாதவர்

இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடு களை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):

- ☐ இல்லை.
- ☐ ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.
- ☐ ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர் ______________________________

(அடுத்த பக்கம் பார்க்கவும்)